எய்ட்ஸ் ஆக்ஷன்

டாக்.பேட்ரிக் டிக்ஸன்

முன்னுரை: மிச்செல் சிடிபி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

எய்ட்ஸ் ஆக்ஷன்

38 ஆண்டுகளாக என் சிறந்த தோழியும்,
நெருங்கிய ஆலோசனைக்காரியும், எனக்கு முடிவில்லாத
உற்சாகத்திற்கான ஆதாரமுமாக இருக்கும் ஷீலாவுக்கும்,
கடந்த 22 ஆண்டுகளாக ACET குடும்பத்தில் பங்கு
வகிக்கும் அனைவருக்கும் சமர்ப்பிக்கிறேன்

எய்ட்ஸ் ஆக்ஷன்

டாக்.பேட்ரிக் டிக்ஸன்

தமிழாக்கம்
ஜெயசீலன் சாமுவேல்

Authentic SPM ACET

Aids Action
(Tamil)

AIDS ACTION
by Dr. Patrick Dixon
Copyright © 1988, 2002, 2004, 2010

First Tamil edition 2013
Reprint 2014

ISBN 978-93-82603-08-5

Any part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means—electronic, mechanical, digital, photocopy, recording, or any other—with prior permission of the publisher.

This book is published in English, Thai, Portuguese, Czech, Romanian, Hungarian, Spanish, Russian, Turkish, Estonian, Paite, German, French, Polish, Nepalese, Hausa, Igbo, Yoruba, Swahili, Luganda, Amharic and is being published in Punjabi,Telugu, Kannada, Konkani, Marathi, Hindi, Bengali, Oriya, Malayalam, Assamese, Manipuri, Mizo and Gujarati.

Jointly Published by
Authentic Books
Logos Bhavan, Suchitra Junction, Secunderabad 500 067, Andhra Pradesh.
www.authenticindia.in
and
Operation Mobilisation, Bromley, Kent, U.K.
and
ACET International Alliance, U.K

Printed and bound in India by
Authentic India, Secunderabad 500 067
Email: printing@ombooks.org

அட்டவணை

அணுகுமுறையும் மொழியும் 6

இந்த புத்தகம் யாருக்கானது 7

முன்னுரை -மிசேல் சிடிபே - UNAIDSன் செயல் இயக்குநர் 9

அறிமுகம் எய்ட்ஸ் : அவசர நடவடிக்கை தேவை 11

1. உயிர்களை காப்பாற்றுவதற்கான பந்தயம் 27

2. நாம் கொடுக்க வேண்டிய ஆரோக்கிய செய்திகள் என்ன? 35

3. முழுமையான சமுதாயங்களையும் சென்றடைதல் 48

4. மக்கள் கேட்கும் கேள்விகள் 67

5. பெண்கள், குழந்தைகள் மற்றும் நகர்ந்து செல்லும் மக்கள் 94

6. வீட்டிலே மக்களை பராமரிப்பது எப்படி 114

7. விரல் சுட்டிக்காட்டுதல்-குற்றப்படுத்துதலுக்கு எதிராக போராடுதல் 134

8. வாழ்வா சாவா பிரச்சனைகள் 153

9. காரியங்கள் நடக்கும்படி செய்தல் 164

10. மக்கள் இயக்கங்கள் எப்படி தேசங்களை தொடமுடியும் 174

11. தன்னார்வத்தொண்டர்கள் குழுவை வளர்த்தல் 184

12. இரட்டிப்பான பயனளிப்பது எப்படி 193

13. கூடுதல் செயல்திட்ட திறனை வளர்த்தல் 205

14. நிலைத்திருக்கக்கூடிய வழியில் பணிக்கு ஆதாரம் கொடுத்தல் 212

எய்ட்ஸ் ஆக்ஷனுக்கான நேரம் 244

ஏசியிடி சர்வதேச ஒருங்கிணைப்பு 249

ஆபரேஷன் மொபலைசேஷன் 250

இப்புத்தகத்தை பற்றிய கருத்துக்கள் 250

UNAIDS 251

அணுகுமுறையும், மொழியும்

ஆங்கிலத்தை முதல் மொழியாகப் பெறாதவர்கள் எளிதில் படிக்கும்படியாக இந்த புத்தகத்தை நாங்கள் உருவாக்க முயற்சித்து இருக்கிறோம் என்பதை தயவாக அறிந்துகொள்ளுங்கள். இப்புத்தகத்தின் பெரும்பாலான பகுதிகள் அடிப்படை ஆங்கிலத்தில் ஏறத்தாழ 2000 வித்தியாசமான வார்த்தைகளைக் கொண்டு எழுதப்பட்டு இருக்கிறது. நாங்கள் சுருக்கெழுத்துக்களை தவிர்ப்பதற்காக குறுகிய வார்த்தைகளையே உபயோகித்து இருக்கிறோம். எடுத்துக்காட்டாக, "ஆண்டிரிட் ரோவைரல்ஸ்" என்பதை பல இடங்களில் சுருக்கமாக "ஆண்டிவைரல்ஸ்" என்றும், MTCT (Mother to Child Transmission) போன்ற காரியங்களை பொருத்தமான வாக்கியங்களுக்கு விரிவாக்கியும் உபயோகப்படுத்தி இருக்கிறோம். "எச்ஐவி பாதிக்கப்பட்ட" போன்ற வார்த்தைகள் சில சூழ்நிலைகளில் களங்கம் ஏற்படுத்துவதாக இருக்கலாம் எனவே நாங்கள் உபயோகிக்கும் வார்த்தைகளை உணர்வுபூர்வமாக உபயோகிக்க முயற்சித்து இருக்கிறோம்.

இந்த புத்தகம் யாருக்கானது

சபைகளும் தனிப்பட்ட கிறிஸ்தவர்களும் நடைமுறையில், கரிசனை யோடு அதிக பயனளிக்கும்விதமாக நடந்துகொள்ள சவால் விடுகின்றது *எய்ட்ஸ் ஆக்ஷன்.* ஒரு உலக மக்கள் இயக்கம் நம்முடைய உலகை மாற்றுவதற்கு ஊக்கப்படுத்துவதே இதன் குறிக்கோள்.

முன்னதாகவே இப்புத்தகத்தின் *(எய்ட்ஸ"ம் நீங்களும்)* 3,50,000 பிரதிகள் 21 மொழிகளில் முக்கியமான பணியாளர்களுக்கு கொடுக்கப் பட்டுவிட்டது. உலகம் முழுவதிலும் இந்த புத்தகத்தை உபயோகித்து புதிய பணிகளையும், ஏற்கனவே இருக்கும் எச்ஐவி பணிகளை பெலப் படுத்தவும் மக்கள் உதவியுள்ளனர்.

எய்ட்ஸ் ஆக்ஷன், ஏழைநாடுகளின்மீது குறிப்பிட்ட கவனம் செலுத்துகிறது. எச்ஐவியால் கடுமையாக பாதிக்கப்பட்ட உலகத்தின் இப்பகுதிகளில் பல்வேறு சபைகளும், விசுவாச அடிப்படையிலான நிறுவனங்களும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை இது வெளிப்படுத் துகிறது. பெரும்பாலான போதகர்களும் ஆயர்களும் சபையின் பாரம்பரிய போதனைகளை மதித்து, தங்கள் போதனைகளை வேதாகமத்தின் அடிப் படையாக வைத்திருக்கும் இடங்கள் இவை.

எய்ட்ஸ் ஆக்ஷன், 20 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும் பல்வேறு பணிகளை உள்ளடக்கிய பாடங்களையும், நீங்கள் என்ன செய்யலாம் என்கிற குறியீடுகளையும் கொண்டுள்ளது.

வாழ்க்கையை குறித்து உங்களுக்கு வித்தியாசமான கண்ணோட்டம் இருக்கலாம், வேறுபட்ட விசுவாசம் இருக்கலாம், அல்லது விசுவாசமே இல்லாமல் இருக்கலாம். சபைகளும், கிறிஸ்தவ நிறுவனங்களும் எப்படி சமயசார்பற்ற நிறுவனங்களோடும், அரசாங்கத்தோடும் மற்ற விசுவாசம் சார்ந்த நிறுவனங்களோடும் இணைந்து உயிர்களை காப்பாற்றி எச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்களை ஆதரிக்க உதவுகிறார்கள் என்பதை உங்களுக்கு உணர்த்தும் இந்த ஊக்கமளிக்கும் புத்தகம் உங்களுக்கு உதவியாக இருக்கும் என்பதை கண்டுகொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

இந்த ஆதாரத்தை உருவாக்க என்னை ஊக்கப்படுத்திய ஜார்ஜ் வெர்வர், ரே மற்றும் ஜாய் தாமஸ் ஆகியோருக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இந்த புத்தகம் அதிகமாக தேவைப்படுகிறவர்களுக்கு கொண்டுசெல்வதற்கு ஜார்ஜ் வெர்வர் மிகப்பெரிய உறுதுணையாகவும் ஊக்கமளிப்பவராகவும் இருந்திருக்கிறார். பால் கபுங்கா, மாரேக் ஸ்லேன்ஸ்கி, பீட்டர் பேபியன், ஷீலா டிக்சன், காலே அல்மெடால், ரேச்சல் ஆஸ்லீ-பெய்ன் மற்றும் ஹாசெல் வின்சன் ஆகியோர் அளித்த விமர்சனங்கள், அறிவுரைகள் மற்றும் பங்கெடுப்புகளுக்காகவும் இசபெல் கார்டர் தொகுப்பதில் உதவியதற்காகவும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு பக்கங்களில் அங்கீகரித்து இருக்கிற தங்களுடைய கதைகள் அல்லது அனுபவங்களை கொடுத்தவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். இறுதியாக UNAIDS இருக்கும் சேலி ஸ்மித், இந்த கடைசி பிரதியை அறிவுறுத்தியதற்காகவும், உலகம் முழுவதிலும் பல்வேறு அதிகமான மொழிகளில் இந்த ஆதாரங்களை பார்க்கவேண்டும் என்கிற தரிசனத்திற்காகவும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

விடுபட்டவற்றிற்கும் பிழைகளுக்கும் நானே முழு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் அவற்றில் எதையாகிலும் கண்டுபிடித்தால் எனக்கு மின் அஞ்சல் செய்யுங்கள்: patrick.dixon@acet-international.org

❒ இந்த புத்தகத்தின் பின்புறத்தில் இருக்கும் பதில் படிவத்தை பூர்த்திசெய்து எங்களுக்கு உதவுங்கள். உங்கள் கருத்துக்கள் எங்களுடைய அடுத்த பிரதியை மேம்படுத்தவும், எங்களுடைய ஆதரவாளர்கள் அவர்களது ஆதரவின் மதிப்பை உணர்ந்து கொள்ளவும் உதவியாக இருக்கும்.

முன்னுரை

மிசேல் சிடிபே - UNAIDS செயல் இயக்குநர் மற்றும் ஐக்கிய நாடுகளின் கீழ் பொதுச்செயலாளர்

எய்ட்ஸுக்கு எதிராக ஒன்றுபடும் விசுவாசம்-அடிப்படையிலான நிறுவனங்களுக்கும் எய்ட்ஸ் சேவை நிறுவனங்களுக்கும் இப்புத்தகம் ஒரு மதிப்புமிக்க ஆதாரம். இப்புத்தகம் எல்லா பிரிவுகளை சார்ந்த சபை தலைவர்களையும் கரிசனையாக செயல்படவும், களங்கத்தையும் பிரிவினை களையும் நீக்கவும், வலிமையான அவசர அழைப்போடு சவால்விடுகின்றது, அதோடு எய்ட்ஸ் நோயின் வளர்ச்சியை உடைக்க விசுவாசம்-அடிப் படையிலான சமுதாயத்தினர் எடுக்கக்கூடிய நடைமுறை செயல்களையும் இது உள்ளடக்கி இருக்கிறது. இது முக்கியமாக சுவிசேஷ கிறிஸ்தவர்களால் அவர்களுக்கென்றே எழுதப்பட்டு இருக்கிறது, எனவே சிந்தனைகளும் வெளிப்பாடுகளும் சில நேரங்களில் UNAIDS-ல் இருந்து வேறுபடும். ஆனால் நாங்கள் எய்ட்ஸை தடுக்க வேண்டும் என்கிற பொதுவான நோக்கத்திலும், மனிதர்கள் சமமாக உருவாக்கப்பட்டு சமமான உரிமை களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிற நம்பிக்கையிலும் ஒன்றுபட்டு இருக்கிறோம்.

இன்று, எய்ட்ஸினால் தாய்மார்கள் மரிப்பதையும் குழந்தைகள் எச்ஐவியினால் பாதிக்கப்படுவதையும் தடுப்பது சாத்தியம். புதிய எச்ஐவி தாக்கங்களையும் நம்மால் பூஜியத்துக்கு குறைத்துவிடலாம். தேவைப்படும் அனைவருக்கும் நாம் சிகிச்சை அளிக்கலாம். எய்ட்ஸ் எதிர்செயலை தடுக்கிற எல்லா ஒழுக்க சட்டங்களையும், திட்டங்களையும், செயல்முறைகளையும், அவமானங்களையும், பிரிவினைகளையும் நீக்கிவிட முடியும். பெண் களுக்கு சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை தடுத்துவிடலாம். எச்ஐவியோடு வாழ்கின்றவர்கள் காச நோயினால் மரணமடையாமல் தடுத் துவிடலாம். ஆண்களோடு பாலுறவு வைத்துக்கொள்ளும் ஆண்கள் எச்ஐவியால் பாதிக்கப்படாமல் தடுத்துவிடலாம். எச்ஐவியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் சமுதாய பாதுகாப்பை அதிகரிக்க முடியும்.

எச்ஐவியால் பாதிகப்பட்டவர்களுக்கு எதிராக பல சமுதாயங்களில் இன்னமும் நிகழ்ந்துவருகின்ற குற்றம் சாட்டுதலையும், அவமானத்தையும்,

பிரிவினைகளையும் நீக்குவதும், சமுதாயத்தின் முன்னணியில் இருந்து அகற்றப்பட்டு அகதிகளாகவும், சிறுபான்மையினராகவும், ஆண்புணர்ச்சிக் காரராகவும், போதைக்கு அடிமையானவர்களாகவும், பாலுறவு பணியாளர் களாகவும் தள்ளப்படுவதை ஒழிப்பதும் நம்முடைய பணிகள் அனைத்திலும் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும்.

எச்ஐவி பரவுவதற்கு உதவுகின்ற அநீதிகளையும், சமத்துவமற்ற தன்மைக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கை எடுப்பதும் நம்முடைய மற்றுமொரு நோக்கமாகும். பெண்களையும் சிறுமிகளையும் ஒடுக்குவதை சமுதாயம் தொடர்ந்து சகித்துக் கொள்வதும், அதன்மூலமாக அவர்களை பாதுகாக்கவும், அதோடு தொடர்பு உடைய எச்ஐவி தாக்கத்தின் அபாயத் தையும் தடுக்கவும் வீட்டிலும் தெருவிலும் அவர்கள் சிறிதே முயற்சி செய்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளவே முடியாது.

விசுவாசம், எல்லா வகையிலும், எய்ட்ஸ் நோயை மாற்றுவதற்கு உதவ முடியும். அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் "நம்மால் முடியும்" என்னும் ஆவியோடு நாம் உலக எய்ட்ஸ் எதிர்ச்செயலில் நுழைகிறோம்.

அறிமுகம்

எய்ட்ஸ் : அவசர நடவடிக்கை தேவை

அவசர நடவடிக்கை தேவைப்படுகிற அதிகப்படியான ஆரோக்கிய பிரச்சனை எய்ட்ஸ்

. நம்முடைய உலகில் 15-49 வயதுக்குள் இருக்கும் நூறுபேரில் ஒருவர் எச்ஐவியினால் பாதிக்கப்பட்டு, எய்ட்ஸ் வைரசை சுமந்துகொண்டு இருக்கிறார்.

. 3.3 கோடிபேர் எச்ஐவியோடு வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

. ஆண்டுதோறும் 27 லட்சம்பேர் பாதிக்கப்படுகிறார்கள், குறிப்பாக உலகின் ஏழை நாடுகளில்.

. மத்திய மற்று தெற்கு ஆப்பிரிக்காவில் 5ல் 1 வயதுவந்தவர்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

. 1.5 கோடி குழந்தைகளை அனாதைகளாகப்பட்டுள்ளனர், கூடுதல் 20 லட்சம்பேர் எச்ஐவியுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

. ஆண்டுதோறும் 4,30,000 குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள்

உங்களுடைய உதவியால் எதிர்காலம் வித்தியாசமாக இருக்கலாம்.

ஒரு அதிர்ச்சியூட்டும் கதை

8 கோடிபேருக்கும் மேலாக ஏற்கனவே எச்ஐவியால் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர் - ஏற்கனவே இதனால் மரித்துப் போனவர்களையும் சேர்த்து.

எச்ஐவி பணிகளை துவங்கும் அனைவருக்குமே தங்களுடைய சொந்த கதை ஒன்று இருக்கும். இது என்னுடையது. நான் முதலாவது சந்தித்த எய்ட்ஸ் உடைய நபரை நான் மறக்கவே மாட்டேன்: லண்டனில் 1987ல் ஒரு இளம் மாணவன். நான் முதல் முறையாக எய்ட்ஸ் வார்டுக்குள் செல்கிறேன், அங்கே மிகவும் நோய்வாய்பட்டவர்களுக்கு நோயடையாளங்களில் இருந்து குணமடைய ஆலோசனை கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டேன்.

அவன் மிகவும் வியாதிப்பட்டு மருத்துவமனையின் ஓரமான அறையில்- கலக்கத்தோடு, வியர்வையோடு, ஒவ்வொரு மூச்சு விடவும் போராடிக் கொண்டு , முழுவதும் பயந்துபோய் இருந்தான். அவனுடைய முகத்தில் ஒரு சுவாசத்திற்கான முகமூடியும், உடலெங்கும் குழாய்கள் சொருகப்பட்டும் இருந்தன. அந்த கொடூரமான அறையில் அவன் சாவை நெருங்கிக் கொண்டு

இருந்தான். இப்படிப்பட்ட நிலைமையில் லண்டன் கல்லூரி மருத்துவமனையில் ஒருவர் ஆதரவற்று இருப்பது எனக்கு அதிர்ச்சியை தந்தது. ஆனால் 1987ல் காரியங்கள் அப்படித்தான் இருந்தன, பின்பு தான் புதிய சிகிச்சைகளும், மேம்படுத்தப்பட்ட பயிற்சிகளும் எச்ஐவியால் பாதிக்கப்பட்ட பலருடைய வாழ்க்கையை மாற்றியமைத்தன.

அவன் நோய்வாய்பட்டு இருப்பது அவனுடைய குடும்பத்திற்கே தெரியாது (அவர்கள் அவனை புறக்கணித்துவிடுவார்கள் என்று அவன் அஞ்சினான்), அவனுக்கு கொடுக்கப்பட்ட மருந்துகள் அவனுடைய வேதனையை பெரிதாக குறைத்துவிடவில்லை. எனக்கு 30 வருட ஆதரவு இல்லத்தின் அனுபவங்களை ஜன்னல் வழியாக தூக்கி எறிவதைப் போல் இருந்தது.

வீட்டிலே மரணத்திற்கு அருகாமையில் இருக்கிறவர்களை பார்த்துக் கொள்ளும் ஒரு புற்றுநோய்க்கான மருத்துவராக பயிற்சி பெற்றேன். பல ஆண்டுகளாக நான் எய்ட்ஸில் இருந்து விலகியே இருந்தேன் - என்னை அந்த நோய் ஈர்க்கவில்லை; சொல்லப்போனால் எனக்கு அது பிடிக்கவில்லை. ஆனால் நிஜத்தில் நோயாளிகளை மருத்துவர்களும், செவிலியர்களும் மற்ற சேவைப் பணியாளர்களும் புறக்கணிப்பதை பார்த்து நான் அதில் ஈடுபட வேண்டும் என்று உணர்ந்துகொண்டேன். புற்றுநோயால் மரித்துக் கொண்டிருப்பவர்களிடம் காட்டும் நம்மில் சிலருடைய திறமைகள் எய்ட்ஸின் முற்றிய நிலையில் இருப்பவர்களுக்கு உதவவும் அவசரமாக பயன்படுத்தப்படவேண்டும்.

இங்கே கடவுளுடைய சாயலில் உருவாக்கப்பட்ட ஒரு மனிதன், மாபெரும் தேவையோடு இருக்கிறான். அவனுடைய சொந்த உடலில் இருக்கும் உயிரணுக்களை, வைரஸ் எப்படிப்பட்ட வாழ்க்கைமுறையின் காரணமாக தாக்கியிருக்கக்கூடும் என்கிற என்னுடைய தனிப்பட்ட உணர்வுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, கவனிப்பதையும் உதவுவதையும் தவிர நான் வேறு எப்படி செயல்பட முடியும்?

ஆறு பாதிப்புகளில் ஒன்று ஒரு குழந்தையையே பாதிக்கிறது - பிறப்பின்போது பாதிக்கப்படுகிற குழந்தைகள் அதில் பல உண்டு. இந்த பாதிப்புகளில் பல தவிர்க்கப்படக் கூடியவை.

அந்த இளைஞன் அதே மருத்துவமனை வார்டில் சில நாட்களுக்கு பிறகு, சரியான சிகிச்சையோடும், அருகே தன்னுடைய அன்பான குடும்பத்தோடும் சமாதானத்தோடு மரணமடைந்தான், ஆனால் அந்த மொத்த பகுதியும் என்னை மிகவும் நெகிழ்ச்சியடையச் செய்தது. முன்புபோல என்னால் இருக்கவே முடியாது.

எங்கள் வீட்டில் நாங்கள் துவங்கினோம்

அந்த காலகட்டத்தில் இங்கிலாந்தில் இருந்த 100 புற்றுநோய் ஆதரவு இல்லங்களில் ஒன்றிலும் கூட எய்ட்ஸ் இருக்கிறவர்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆண்புணர்ச்சிக்காரர்களுக்கு இடையே மாத்திரமே பரவக் கூடிய வைரஸ் என்று (தவறாக) எச்ஐவி முத்திரையிடப்பட்டு இருந்தது.

எய்ட்ஸ் இருக்கும் மக்கள் வீட்டிற்கு செல்ல சில செவிலியர்கள் மறுப்பு தெரிவித்தனர். என்னுடைய நாட்டில் இருந்த சில மருத்துவர்கள் சரியான மருந்துகளை பரிந்துரைக்கவும் மறுத்தார்கள், தங்கள் அரசாங்க நிதியை எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீணாக செலவளிக்க விரும்பவில்லை என்று அவர்கள் பதிலளித்தனர்.

ஆனால் சேவைப்பணியாளர்கள் மாத்திரமே எச்ஐவி இருப்பவர்களை புறக்கணிக்கவில்லை. சபையும் விரல்சுட்டிக் காட்டுவதிலும் ஒழுக்கம் குறித்த விவாதங்களிலுமே முடங்கிக் கிடந்தது, நடைமுறை செயல்பாடுகள் குறைவாகவே இருந்தது. சில வழிகளில் நானும் அதேபோல தவறாகவே இருந்தேன், இந்த புதிய நோயில் தலையிடாமல் இருக்க என்னன்னமோ காரணங்களை கண்டுபிடித்தேன். பின்பு நான் எவ்வளவு இதயமில்லாதவனாக இருந்திருக்கிறேன் என்பதை உணர்ந்தேன், என்னுடைய நோக்கமும் தலைகீழாக மாற்றம்பெறவேண்டியதாக இருந்தது.

எச்ஐவி வித்தியாசமானது. அது பரவும் விதத்திலும், கொடூரமாக வியாதிப்படும் வரையில் அது மறைந்திருப்பதிலும் மாத்திரமல்ல. வேறு எந்த நோயும் இவ்வளவு வெறுப்பு, கோபம் மற்றும் பயத்தோடு, வெட்கம் மற்றும் குற்றவுணர்வையும் தூண்டிவிடாது. வேறு எந்த நோயை உடைய மக்களையும் உலகின் சில பகுதிகளில் தாக்கி, கொலையும் செய்வார்கள் என்பதாக நான் அறிந்ததில்லை.

அந்த இளைஞனின் மரணம் என்னுடைய சொந்த வீட்டிலேயே ஒரு ஆதரவுக் குழுவை உருவாக்க என்னை வழிநடத்தியது. மருத்துவமனைக்கு வெளியே இருக்க வேண்டும் என்கிற எச்ஐவியை உடையவர்களுக்கு உதவிசெய்ய உள்ளூர் சபைகளின் அங்கத்தினர்களுக்கு நாங்கள் பயிற்சி அளித்தோம். பாதுகாப்பாக வாழ்வதைப் பற்றி இளைஞர்களுக்கு போதிக்க அருகில் உள்ள பள்ளிகளுக்குச் சென்றோம். விரைவில் செவிலியர்கள், சமூக சேவகர்கள் மற்றும் தன்னார்வத்தொண்டர்கள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று லண்டன் முழுவதிலும் 24 மணிநேர வீட்டு சேவையை கொடுத்தது, அதோடு தேசம் முழுவதும் பள்ளிகளில் இப்பணியை பரவச்செய்தது. இன்று ACET நிகழ்ச்சிகளை நீங்கள் 23 நாடுகளில் பார்க்கலாம், ஒவ்வொன்றும் உள்ளூர் மக்களால் நிர்வாகிக்கப்பட்டு, பல்வேறு வழிகளில் உள்ளூர் தேவைகளை பூர்த்திசெய்து எச்ஐவி பரவாமல் தடுக்க உதவுகின்றன - இது சபைகளும் கிறிஸ்தவ நிறுவனங்களும் எச்ஐவிக்கு எதிராக செயல்படுவதன் ஒரு சிறு பகுதி மாத்திரமே.

எச்ஐவியை குறித்த உண்மை

எனக்கு மிகவும் கவலை அளிக்கும் ஒரு காரியம் 1980களில் பாடங்கள் இன்னமும் படிக்கபடாமல் இருப்பதுதான். தங்களுக்கு அது சம்பவிக்காது என்று இன்னமும் சிலர் நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். தவறான அபிப்பிராயம், களங்கம் மற்றும் பயம் பல இடங்களில் இருக்கின்றது - சபையின் உள்ளேயும் அகன்ற சமுதாயத்திலும். உலகின் பல நூறு கோடி

மக்களுக்கும் எய்ட்ஸை குறித்தும் எச்ஐவி எவ்வாறு பரவுகிறது என்பதை குறித்தும் சிறிதே தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

பல தாக்கத்தை ஏற்படுத்துகிற வியாதிகளோடு ஒப்பிட்டால் இந்த நோய் இன்னமும் புதியதாகவே இருக்கிறது. மருத்துவர்கள் இன்னும் அதிகமாக கற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. எச்ஐவியை கண்டுபிடிப்பது மிகவும் கடினம். ஏனென்றால் பாதிக்கப்பட்ட பின்பு வளர்வதற்கு எய்ட்ஸ் பல ஆண்டுகள் எடுத்துக் கொள்ளும். தடுப்பூசி அல்லது நிவாரண மருந்து ஆகியவற்றை கண்டுபிடிக்க இன்னும் பல ஆண்டுகள் ஆகும்.

அந்த வைரஸ் பரவும் விதத்தில் எச்ஐவி பலருக்கும் ஆச்சரியத்தை அளிக்கிறது. எடுத்துக்காட்டாக ஆப்பிரிக்க நாடுகளில் எச்ஐவியால் பாதிக்கப்பட்ட பத்தில் ஆறுபேர் பெண்களாக இருக்கிறார்கள். பல நாடுகளில் நீண்டகால பாலுறவில் ஈடுபடுவது ஒரு பெண்ணுக்கு அதிகப்படியான அபாயத்தை அளிக்கிறது, அவள் முழுமையாக உண் மையுள்ளவளாக இருந்தாலும் தான், ஏனென்றால் பல ஆண்கள் தங்களுடைய முந்தையை உறவுகளால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், அல்லது உண்மையற்றவர்களாக இருக்கிறார்கள். பெண்ணிடமிருந்து ஆண் பெறுவதைக் காட்டிலும், ஒரு பெண் பாதிக்கப்பட்ட ஆணிடமிருந்து எச்ஐவியை பெற்றுக்கொள்வதற்கான சாத்தியமே அதிகமாக இருக்கிறது.

இதில் நற்செய்தி என்னவென்றால் ஆரம்ப காலத்திலேயே கண் டுபிடித்துவிட்டால், அவர்களுக்கு சிறந்த சிகிச்சை கிடைக்கப் பெற்றால் எச்ஐவியோடு இருக்கும் மக்கள் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழலாம். பணக்கார நாடுகளில், தீராத நோய்களை உடைய பல மக்களை காட்டிலும் வைரஸ் எதிர்ப்பு மருந்துகளை உபயோகித்து எச்ஐவி உடைய மக்கள் நீண்டகாலம் வாழலாம். எனினும், இந்த மருந்துகள் தொடர்ச்சியான மருத்துவ மேற்பார்வையின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும், ஏனென் றால் இவற்றிற்கு அபாயகரமான பின்விளைவுகள் இருக்கலாம்.

2008ல் ஏறத்தாழ 1 கோடிபேருக்கு வைரஸ் எதிர்ப்பு மருந்துகள் தேவைப்பட்டன, ஆனால் 30 லட்சம் பேருக்கு மாத்திரமே அது கிடைத்தது. ஏழை நாடுகளில் மருந்துகளுக்கான விலைகள் அதிகமாக குறைக்கப்பட்ட போதிலும், அவை விலையுயர்ந்ததாகவே இருக்கின்றன. எச்ஐவியை உடைய பல மக்கள் இலவச வைரஸ் எதிப்பு மருந்துகள் கொடுக்கிற அரசாங்க நிலையங்களிடமிருந்து மாத்திரமே சிகிச்சை பெற்றுக் கொள் கிறார்கள்.

பலன் தரும் எச்ஐவி நிகழ்ச்சிகளை பல நாடுகளில் உருவாக்குவதற்கான வழியை கிறிஸ்தவர்கள் முன்சென்றிருக்கிறார்கள் பல நாடுகளில் 20 ஆண்டுகளுக்கு மேலாக எச்ஐவிக்கான எதிர்ச்செயலை செய்வதற்கு கிறிஸ்தவர்களே முன்னோடியான சமுதாயமாக இருந்திருக்கிறார்கள். பிரதம

பல ஆப்பிரிக்க நாடுகள் கொடூரமாக பாதிக்கப்பட்டு இருக்கின்றன, குழந்தைகளை தாத்தா பாட்டிகள் கவனித்துக் கொள்கிறார்கள், ஏனென்றால் பெற்றோர் மரித்துப்போனார்கள்.

பேராயர் டெஸ்மாண்ட் டுட்டு தென் ஆப்பிரிக்காவில் நடக்கும் எச்ஐவி சமுதாய நிகழ்ச்சிகளில் 60 சதவிகிதத்திற்கும் மேல் சபைகளும் கிறிஸ்தவ நிறுவனங்களுமே அக்கறை செலுத்துகின்றன என்று கூறியிருக்கிறார். இந்தியாவில் எச்ஐவிக்கான கிறிஸ்தவர்களின் எதிர்ச்செயலில் 25,000 பணியாளர்களுக்கு மேல், பகுதி நேரமாகவோ, முழுநேரமாகவோ, வருமுன் காத்தலிலும், கவனம் செலுத்துவதிலும் ஈடுபட்டு இருக்கின்றனர். நாடு முழுவதும் இயங்குகின்ற இந்த இயக்கமானது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை ஆகும். இதை தில்லியில் நடந்த நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ நிறுவனங்களின் கூட்டமைப்பான கிறிஸ்தவ எய்ட்ஸ் தேசிய ஒருங்கிணைப்பு CANA (Christian AIDS National Alliance) மூலமாக அறிந்துகொண்டோம்.

நாங்கள் இன்னும் நூற்றுக்கணக்கான விசுவாசத்தால் உந்தப்பட்ட வளர்ச்சி நிறுவனங்களான டியர்பண்ட், வேர்ல்டு விஷன், ஆபரேஷன் மொபைலைசேஷன், சமாரிடன்ஸ் பர்ஸ், டோர்காஸ், கிறிஸ்டியன் எய்ட், வேர்ல்ட் ரிலீப், த சேல்வேஷன் ஆர்மி, கத்தோலிக்க நிவாரண சேவைகள் மற்றும் CAFOD ஆகியவற்றில் இதைக் காண்கிறோம்.

எல்லா பாரம்பரியத்தையும் எல்லா நாடுகளையும் சேர்ந்த கிறிஸ்தவர்கள் இரண்டு எளிய நோக்கங்களுக்காக சுலபமாக ஒன்றுபடலாம்

. எச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிபந்தனையற்ற, கரிசனையான அக்கறை செலுத்துவது.

. திருச்சபையின் வரலாற்றுப் போதனைகளை மதித்து கைக்கொள்ளுவதன் மூலமாக சிறப்பான நோய்தடுப்பு.

டிசம்பர் 2008ல் உலக சூழ்நிலை

உலக கணக்கெடுப்பு	UNAIDS
2008ல் எச்ஐவியோடு வாழும் மக்களின் எண்ணிக்கை	
மொத்தம்	3.34 கோடி
பெரியோர்	3.13 கோடி
பெண்கள்	1.57 கோடி
15 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள்	21 லட்சம்
2008ல் புதிதாக எச்ஐவியால் பாதிக்கப்பட்டோர்	
மொத்தம்	27 லட்சம்
பெரியோர்	23 லட்சம்
15 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள்	4,30,000
2008ல் எய்ட்ஸினால் இறந்தவர்கள்	
மொத்தம்	20 லட்சம்
பெரியோர்	17 லட்சம்
15 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள்	2,80,000

முன்பெல்லாம் பல சமயங்களில், கிறிஸ்தவர்களாக எச்ஐவிக்கு பதிலளிக்கும் படியாக நாம் வேதாகமத்தை திறப்பதையும், திருச்சபையின் போதனைகளை படிப்பதையும், எதையாகிலும் தவறு என்று அறிக்கையிடுவதையும் தவிர வேறு எதுவுமே செய்ததில்லை. எனினும் நம்முடைய பதிலிலே நாம் கடவுளுடைய இரக்கத்தையும், அன்பையும், மன்னிப்பையும், பலர் தங்களுடைய நடத்தையினால் இல்லாமல் மற்றவர்களுடைய தவறுகளினாலேயே பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டோம். கடவுளுடைய அளவீட்டை கணிப்பதில் நாம் நுட்பமாக இருந்திருந்தாலும் நம்முடைய கண்ணோட்டத்தில் நாம் மிகவும் தவறாக இருந்திருக்கிறோம்.

அமெரிக்காவில் 15 லட்சம் பேர் ஏற்கனவே எச்ஐவியால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், ஆண்டுதோறும் 56,000 பேர் புதிதாக நோயினால் பாதிக்கப் படுகிறார்கள்.

விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணோடு இயேசுவின் எடுத்துக்காட்டை எடுத்துக்கொள்ளுங்கள். இது உண்மையில் காணாமல் போன மனிதனுடைய கதை. இங்கே ஒரு கோபம் நிறைந்த மனிதர்கள் கூட்டம், ஒரு பெண்ணைக் கொல்வதற்கு அனுமதியை எதிர்பார்த்து நிற்கிறது, எனினும் இரண்டு பேர் பாவம் செய்திருக்க அந்த மனிதனைக் காணவில்லை. ஒரே வாக்கியத்தில் இயேசு அவர்களை ஊடுருவிச் சென்றார் : "உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" (யோவான் *8:1-11*)

யாருமே நகரவில்லை. பெரியோர் முதல் சிறியோர் வரை ஒவ்வொருவராக விட்டுச் செல்லும்வரை இயேசு அவர்களை உற்றுப் பார்த்தார். ஒரே வாக்கியத்தில் மற்றவர்கள் பாவத்தின் தகுதியை வைத்து மற்றவர்களை நியாயம்தீர்க்கும் சாத்தியக்கூறுகளை முற்றிலுமாக அழித்துவிட்டார். நாம் அனைவருமே பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம்; எல்லோருமே கடவுளுடைய கிருபைக்கு வெளியே மரித்துப்போனவர்களானோம் (ரோமர் *3:23*)

நாம் மேடையில் நின்றுகொண்டு பிறரை விரல்சுட்டிக் காட்டக்கூடாது என்று இயேசு நம்மை தடுக்கிறார். இவ்வுலகத்தில் தண்டிப்பதற்கு அதிகாரம் பெற்றவர் அவர் மாத்திரமே, எனினும் அவர் அப்பெண்ணை பார்த்து, "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை" என்றதோடு "நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே" என்றும் கூறினார்.

கிறிஸ்தவர்களாக நாம் இயேசு கூறிய இரண்டு காரியங்களுக்கு இடையே குழம்பிக்கொண்டு இருக்கிறோம் : ஒன்று நாம் ஒழுக்கம் சார்ந்த குற்றச்சாட்டுகளை ஏற்படுத்துகிறோம், அதன் வழியாக நம்முடைய அதிக நீதி மனப்பான்மையை விரைந்து வெளிப்படுத்துகிறோம், அல்லது கடவுளுடைய இரக்கத்தையும் அன்பையும் வெளிப்படுத்தும்படியாக ஒரு தெளிவான ஒழுக்க கட்டமைப்பே இல்லாத ஆழமான படுகுழியில் விழுந்துவிடுகிறோம். அளவிட முடியாத அன்பையும் பரிபூரண ஒழுக்

கத்தாத்தையும் ஒரு அழுத்தத்துடனே இழுத்துப்பிடிக்கிறதாகவும் இருக்கிறது இயேசுவின் வழி - இதை செய்ய நமக்கு அவருடைய உதவி தேவைப்படும்.

திருச்சபையின் பாரம்பரிய போதனைகள், ஆதியாகம் முதல் வெளிப் படுத்தல் வரை உள்ள வேதவாக்கியங்களின் அடிப்படையிலானது என் பதை நாம் அறிவோம், அது வாழ்க்கை முழுவதையும் ஒருவருக்கொருவர் அர்ப்பணித்த ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான அன்பையும் நட்பையும் கொண்டாடக்கூடிய அற்புதமான ஈவு, பாலுறவு என்பதாகும். கடவுள் நம்மை பாலுறவு கொள்ளக் கூடியவர்களாக நம்மை வடிவமைத்து இருக்கிறார்.

எனவே நாம் எப்படி இந்த அழுத்தங்களோடு வாழ்வது? இயேசுவின் வழி தெளிவானது; தேவை உள்ளோர் அனைவருக்கும் நிபந்தனையற்ற அன்பை வெளிப்படுத்தவே நாம் அழைக்கப்பட்டு இருக்கிறோம், அவர்களுக்கு தேவை எப்படி ஏற்பட்டு இருந்தாலும் சரி.

எச்ஐவியினால் வேதனைப்படுதல்

சமீபத்தில் ஹைதரபாத்தில் ஒரு எச்ஐவி பணியில் ஈடுபட்டு இருந்தபோது, மிகவும் ஏழ்மையான, வறுமைக்கோட்டுக்கு கீழே இருந்த ஆதிவாசி மக்களுக்கு எச்ஐவி இருப்பதை பார்த்து நான் நெகிழ்ந்து கண்ணீர் சிந்தினேன். அவர்கள் ஒவ்வொரு நாளும் வந்து சமாதானத்தையும், அன்பையும், ஏற்றுக் கொள்ளுதலையும் பெற்றுக்கொண்டனர். அவர்கள் பரிசோதிக்கப்பட்ட பிறகு அவர்களை ஒருவர் தொடுவது இதுவே முதல் முறையாக இருந் திருக்கும். எச்ஐவியை உடையவர்கள் குடும்பத்தினராலும், நண் பர்களாலும், உடன்பணியாளர்களாலும்,சமுதாயத்தினராலும், மருத் துவர்களாலும் செவிலியர்களாலும் கூட புறக்கணிக்கப்படுவது பல இடங்களில் வழக்கமான ஒரு விஷயம்தான்.

UNAIDS ரஷியாவில் 10 லட்சம் பேர் எச்ஐவியோடு வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள் என்று கணக்கிட்டு உள்ளது- அதில் 60 சதவிகிதம்பேர் 30 வயதுக்கு உட்பட்டவர்கள்.

அந்த சிறு மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டதே ஒரு விபத்து தான், ஒரு தொழுநோய் மருத்துவரும் அவரது மனைவியும் எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட மக்கள் தினந்தோறும் அவருடைய வீட்டுக்கதவுகளை தட்டுவதை கவனித்தார்கள். பெரும்பாலான சமயங்களில் உள்ளூர் திருச்சபை தலைவர்களினாலும், சபையின் முக்கிய அங்கத்தினர்களாலும் அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டு இருந்தனர். விரைவில் தினந்தோறும் 60 புதிய மக்கள் வந்தனர், அக் குடும்பத்தினர் ஒரு சிறு மருத்துவமனைக்கான இடத்தை தேடுவதில் மிகவும் பரபரப்பாக இருந் தனர். மூன்று ஆண்டுகளுக்குள்ளாக அவர்கள் 3000 பேருக்கும் மேற்பட்டோருக்கு பணியாளர்களையும் தன்னார்வத்தொண்டர்களையும் கொண்ட பிரத்தியேகமான ஒரு சிறு குழுவைக்கொண்டு உதவினார்கள்.

இலவச சிகிச்சை கிடைக்கும் என்று தங்களுக்கு தெரிந்த ஒரே இடத்திற்கு வருவதற்கு 200 மைல்களுக்கு மேல் பிரயாணம் செய்து சில நோயாளிகள்

வந்தார்கள். உள்ளூர் மருத்துவமனைக்களில் இருந்து கவனிப்பை பெற்றுக்கொள்ள இந்த சிறு மருத்துவமனைக்குழு உதவுகிறது. இதற்கு செயல்திறனும், சாமர்த்தியமும், பொறுமையும், சில நேரங்களில் மக்களுடைய உரிமைகளுக்காக போராடுவதற்கு உதவும்படியான வலிமையான வார்த்தைகளும் தேவைப்படும்.

பல நாடுகளில், எச்ஐவி உடைய மக்கள் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டும், அவமதிக்கப்பட்டும், அடிக்கப்பட்டும் அதைக்காட்டிலும் மோசமாக நடத்தப்பட்டும் இருக்கிறார்கள். எச்ஐவி பொதுவாக ஏழ்மையோடும், அறியாமையோடும், பெண்களின் தாழ்வான நிலையோடும், போராயுதமாக போர்ச்சேவகர்கள் நடத்திய பாலியல் பலாத்காரத்தோடும், அடிப்படை ஆரோக்கிய சாதனங்களை பெற்றுக்கொள்ளமுடியாமையோடும் தொடர்புடையதாக இருக்கிறது. அதனால் தான் நாம் எச்ஐவியை ஒரு பெரியசிக்கலான சூழ்நிலையின் ஒரு பகுதியாகக் கொண்டு "முழுமையான" பரந்தமனதோடு அணுகவேண்டும்.

எச்ஐவியை சமாளிப்பது மற்ற ஆரோக்கிய பிரச்சனைகளை சமாளிப்பதற்கான வழி ஆகும். ஐக்கிய நாடுகளின் செயலாளர் ஜெனரல் பேன் கிமூன் 2008ல் நாம் எவ்வாறு எச்ஐவியை எவ்வாறு சமாளிக்கப் போகிறோம் என்பது 'வறுமையை நீக்குவதற்கும், ஊட்டச்சத்தை அதிகரிப்பதற்கும், குழந்தை மரணத்தை குறைப்பதற்கும், பேறுக்கால ஆரோக்கியத்தை அதிகரிப்பதற்கும் மலேரியா மற்றும் காசநோய் பரவுதை தடுப்பதற்கும் எடுக்கும் எல்லா முயற்சிகளையும் பாதிக்கும்' என்று கூறியிருக்கிறார்.

தலைவர்களின் மறுப்பு - திருச்சபையிலும், பரந்த சமுதாயத்திலும்

எச்ஐவியின் அளவு அபரிவிதமாக இருக்கும் நாடுகளிலும், மக்கள் அப்படி இல்லை என்று மறுக்கவே செய்கிறார்கள். தென் ஆப்பிரிக்க பல்கலைக் கழகத்தின் மூத்த உறுப்பினர் ஒருவரிடம் பேசியபோது நான் அதிர்ச்சியடைந்தேன். அவர்களுடைய மாணவர்கள் எத்தனைபேர் எச்ஐவியோடு வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள் என்று கேட்டேன். அவர் தைரியமாக "ஒருவரும் இல்லை" என்று பதிலளித்தார்.

அவர்கள் நாடு முழுவதும் 5ல் 1 மாணவர் பருவத்தை உடையவர்கள் எச்ஐவியோடு வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள், எனவே அவர்களுடைய கல்லூரியிலும் அதைப் போன்ற விகிதத்தில் இருக்கக்கூடும் என்று சுட்டிக்காட்டினேன். எனவே அவர்களுடைய பல்கலைக்கழகம் சந்தித்த சவால்களில் எச்ஐவியும் ஒன்று, ஒவ்வொரு மாதமும் அதிகமான மாணவர்கள் பாதிக்கப்படக்கூடும், எனினும் அவர்கள் எவ்வகையான வருமுன் காப்போம் நிகழ்ச்சிகளையும் நடத்த வேண்டும் என்று கவலைப்படவே இல்லை.

"ஒரு போதகராக எய்ட்ஸ் சமுதாயத்தில் இருக்கும் ஒரு பிரச்சனை என்னுடைய சபையில் இருப்பது அல்ல என்று நினைத்தேன். சில வாரங்களுக்கு முன்பாக என்னுடைய சபை அங்கத்தினரோடு சேர்த்து திருச்சபை தலைவர்கள் 9ல் 2 பேருக்கு எச்ஐவி இருப்பது உறுதிசெய்யப்பட்டபோது

நான் ஆதிர்ச்சியடைந்தேன். இப்போது நாங்கள் பாதிக்கப்பட்டவர்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் ஆதரிக்க எங்களால் முடிந்த உதவிகளையும் செய்கிறோம். இந்த வைரஸ் பரவாமல் இருக்கவும் எங்களால் இயன்றதை நாங்கள் செய்கிறோம்"

போதகர், சர்ச் ஆப் கிறைஸ்ட், மேற்கு ஆப்பிரிக்கா - ஜனவரி 2009

ஒரு ஆப்பிரிக்க போதகரும் அவருடைய மனைவியும் எங்கள் வீட்டிற்கு உணவு அருந்த வந்தார்கள். நாங்கள் எய்ட்ஸை பற்றி விசாரித்தோம். சூழ்நிலை அவ்வளவு மோசமாக இல்லை என்று அவர்கள் பதிலளித்தார்கள். ஆனால், பின்னர் போதகரின் மனைவியுடைய மூன்று சகோதரர்களும், அப்பா அம்மாவும், சகோதரிகளில் ஒருவரும் எய்ட்ஸினால் மரித்துப் போனதை கூறினார்கள். அவருடைய மற்றுமொரு சகோதரிக்கும் எச்ஐவி இருப்பது பரிசோதனையில் உறுதிசெய்யப்பட்டு, வியாதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார் என்றார்கள். சீக்கிரத்தில் அவர் மாத்திரமே மீதம் இருக்கப்போகிறார். போதகர் வாரத்தின் பெரும்பாலான நேரத்தில் எய்ட்ஸ் அடக்க ஆராதனைகளையே நடத்துகிறார்.

எனவே திருச்சபையில் எச்ஐவியைக் குறித்து போதனைகள் எப்படி இருக்கின்றன என்று கேட்டோம். அந்த திருச்சபை எச்ஐவி உடைய மக்களுக்கு ஊழியம் செய்வதிலும், சமுதாய பாதுகாப்பிலும், தங்களுடைய இளைஞர்களிடம் பேசுவதிலும் செயலாற்றலோடு இருப்பார்கள் என்று எதிர்பார்த்தோம்.

அவருடைய தலை கவிழ்ந்தது, 'உண்மையில், கலாச்சார ரீதியாக இதைக் குறித்து பேசுவது மிகவும் கடினமானது. ஆனால் நிச்சயமான தம்பதிகளிடத்தில் பேசுவதற்கான நிகழ்ச்சிகள் எங்களிடத்தில் இருக்கிறது. அவர்கள் சென்று பரிசோதித்துக்கொள்ளும்படியாக பரிந்துரைக்கிறோம், அவர்களில் ஒருவருக்கு பாதிப்பு இருந்தால், அவர்களுக்கு திருமணம் செய்துவைப்பதை நாங்கள் மறுக்கிறோம்'. பல சபைகள் செயலாற்றலோடு இருக்கும், எய்ட்ஸ் நிகழ்ச்சிகளில் வலிமையாக இருக்கும் நாட்டில் இருக்கும் அவருடைய திருச்சபையின் பதில் இவ்வளவுதான்.

சூழ்நிலையை எப்படி மாற்றுவது, எப்படி ஆரம்பிப்பது, என்ன செய்வது, இதனால் வித்தியாசம் ஏற்படுமா என்பனவற்றை அவர் அறியாமல் இருந்தார். நிச்சயமான தம்பதிகளை அவர் அணுகுவது அவருக்கு பிரச்சனையையே கொண்டுவரப்போகிறது (பக்கம் 70 ஐ பார்க்க)

இதே சூழ்நிலையில் மற்ற போதகர்கள் என்ன செய்துகொண்டு இருக்கிறார்கள் என்கிற கதைகளை நாங்கள் பகிர்ந்துகொள்ளத் தொடங்கினோம். எத்தனை உயிர்களை அவர்கள் காப்பாற்றி வருகிறார்கள், திருச்சபையின் ஒட்டுமொத்த ஊழியத்தையும் அது எப்படி நேர்மறையான வல்லமையான வகையில் மாற்றிக்கொண்டு இருக்கிறது என்பதைக் கூறினோம். எப்படிப்பட்ட மாற்றம் ஏற்படும் என்கிற தரிசனத்தை பார்த்து அவர்களுடைய கண்கள் ஒளிர்ந்தன. அது சாத்தியமில்லாதது இல்லை, மற்

றவர்கள் அதை செய்கிறார்கள். அவர்களுக்கு அதிக உதவி தேவைப்படும், ஆனால் ஒரு மாற்றத்தை வேண்டி அன்றிரவு அவர்கள் விசுவாசித்து ஜெபித்தார்கள்.

இயேசுவின் அன்பை பகிர்ந்துகொள்ளுதல்

ஒரு திருச்சபை தன்னார்வத் தொண்டர் ஒரு வீட்டுக்குள் செல்லும்போது - ஆப்பிரிக்க கிராம வசிப்பிடமாக இருந்தாலும், ஒரு சிறிய அடுக்குமாடி குடியிருப்பாக இருந்தாலும், பெரிய வீடாக இருந்தாலும்- அந்த நபர்க் கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் கொண்டுசெல்கிறார். இயேசுவுக்கு அவருடைய சொந்த சரீரம் இல்லை; திருச்சபையே அவருடைய சரீரம். நாமே அவருடைய கைகள், கால்கள், புன்னகை, குரல், இதயம் மற்றும் அவருடைய தொடுதல்.

உங்களிலும் என்னிலும் இருக்கும் இயேசுவின் வாழ்க்கையே மக்கள் பார்க்கக்கூடிய கடவுளின் ஒரே பகுதியாக இருக்கிறது. அந்த நபர் வாழும் இடத்திற்கு நாம் சென்று, அவரை கட்டியணைத்து, அவருக்கு தண்ணீரோ மருந்தோ அல்லது அவருடைய குழந்தைகளுக்கு உணவோ கொண்டுசென்று, அல்லது அவருடைய கரம்பிடிக்கும்போது நாமும் ஒரு வரலாற்றை உருவாக்குகிறோம்: கடவுளுடைய அன்பை குறித்த வல்லமையான அறிக்கை, திருச்சபையால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டதாக அடிக்கடி உணரும் மக்களுடைய இதயத்திற்கு தீர்க்கதரிசன வாக்கியம் இது.

இதனால் தான் உலக சுகாதார அமைப்பு இந்த வெளிப்படையான உண்மையை அறிக்கையிட்டிருக்கிறது : "பாலுறவின் மூலமாக பரவும் எச்ஐவியை தடுப்பதற்கு மிகச்சிறந்த வழி இச்சையடக்கமாக இருத்தலே, அல்லது பாதிக்கப்படாத இரண்டு தனிநபர்கள் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். இதற்கு பதிலாக ஆணுறையை சரியான முறையில் உபயோகிப்பது அபாயத்தை வெகுவாக குறைக்கலாம்"

சில நாடுகளில் மூன்றில் ஒருபங்கு எச்ஐவியால் பாதிக்கப்பட்ட பெண்கள் திருமணமாகாமலும் உண்மையுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள், எனினும் அவர்கள் நோய்வாய்பட்டும், இறக்கும் தருவாயிலும் இருக்கிறார்கள், ஏனென்றால் அவர்களுடைய கணவர்களுக்கு இருக்கும் மற்ற உறவுகளின் விளைவாக எச்ஐவி இருக்கிறது.

உதவும் நேரம் - துவங்குவது எளிது

நோய்வாய்பட்டவர்களுக்கும் மரித்துக்கொண்டு இருப்பவர்களுக்கும் கரிசனைகாட்டுவதும், வருமுன் காப்பதன் வாயிலாக உயிர்களை காப்பதும், சமூக வளர்ச்சியும் ஒன்றோடொன்று இணைந்து செல்கின்றன. கவனிப்பதில் ஈடுபடுகிறவர்கள் மிகவும் நம்பிக்கைக்குரியவர்களாகவும் தாக்கத்தை ஏற்படுத்துகிறவர்களாகவும் இருக்கிறார்கள். பின்பு மக்கள் நோயின் உண்மைநிலையை பார்த்து தங்கள் நடத்தையை மாற்றிக் கொள்கிறார்கள். தங்கள் சமுதாயத்தில் எச்ஐவி பரவாமல் தடுக்கவும், மரிப்போருக்கும் அனாதைகளாக விடப்பட்டவர்களுக்கும் உதவுவதற்கும்

எல்லாவற்றையும் செய்ய அவர்கள் உற்சாகமாக இருக்கிறார்கள். ஆனால் பசியோடும், வீடில்லாமலும் தினந்தோறும் வாழ்க்கை நடத்துவதற்காக உடலை விற்பவர்கள் தங்கள் நடத்தையை மாற்றிக்கொள்வது மிகவும் கடினமானது.

உங்கள் திருச்சபை அல்லது நிறுவனம் எச்ஐவியை எதிர்க்க தலைமை நிலையில் தயாராக இருக்கிறதா? வளரும் சபை எதுவாக இருந்தாலும் அதிலே எச்ஐவி உடையவர்கள் அங்கத்தினராக இருப்பதை கண்டுகொள்ளலாம். அவர்கள் இல்லை என்று நீங்கள் நினைத்தால், மீண்டுமாக பாருங்கள். உங்கள் திருச்சபையில் இருக்கிறவர்களுக்கு எச்ஐவி இருக்கிறதை உணராமலே கூட இருக்கலாம்.

'எச்ஐவியும் எய்ட்ஸும் இருக்கிறவர்கள் நம்முடைய திருச்சபையை விட்டுச் செல்கிறார்கள் என்று வருத்தப்பட வேண்டும் என்று என் சபையைச் சேர்ந்தவர்களை ஊக்கப்படுத்துகிறேன். இப்போது நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அன்பாக நடத்தப்படுவதை உணர்கிறார்கள். எய்ட்ஸ் கருத்தரங்கங்களுக்கு அழைக்கப்படுகிறவர்கள் கூடுகைக்கு வர வெட்கப்படுகிறார்கள், அங்கே இருக்கிறவர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டவர்கள் என்று நினைக்கிறார்கள். பயிற்சி வகுப்பில் நான் பங்குபெற்றது முதல் நல்ல சமாரியன் கதை என்னுடைய வாழ்க்கைக்கான நிரந்தர அழைப்பை நினைவுபடுத்தியது. வாலிபர்களோடு நாங்கள் ஒரு தொடர்ச்சியான கூடுகைகளை ஆரம்பித்தோம், அதிகப்படியாக இளம் பெண்களுக்கு என்னுடைய மனைவியைக் கொண்டு ஆரம்பித்தோம். அடுத்த மாதம் என்னுடைய மேற்பார்வையில் இருக்கும் சபைகள் அனைத்தையும் எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை பெற்றுக்கொள்ளும்படி நான் அழைப்பு விடுத்து இருக்கிறேன்.'

சர்ச் ஆப் காட் போதகர், மேற்கு ஆப்பிரிக்கா - 2009

ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் இருக்கும் போதகர்கள் எடுத்துக் காட்டாக நடந்துகொள்கிறார்கள், தனிப்பட்ட முறையில் அவசியமற்றது என்று நினைத்தபோதிலும் அவர்கள் தங்களையே பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்கிறார்கள். பின்பு அவர்கள் தங்கள் சபையாரை அப்படியே செய்யச் சொல்கிறார்கள்: உள்ளூர் சிறு மருத்துவமனைக்குச் சென்று ஆலோசனையும் பரிசோதனையும் பெற்றுக்கொள்கிறார்கள். அதிகமாக பாதிக்கப்பட்ட இடங்களில் இருக்கும் மிகப்பெரிய சபைகளில் எச்ஐவி அதிகமாக பரவியிருக்கிறதைக் கண்டு அதிர்ச்சியடைந்து இருக்கிறார்கள். நிச்சயமாகவே சபைகள் குற்றப்படுத்துதல் மற்றும் அவமானப்படுத்துதலை சமாளித்து, அதன் மூலமாக பரிசோதனையில் நோய் உறுதிசெய்யப்பட்டவர்கள் பயமில்லாமல் தங்களை தெரிந்து கொள்ளும்படி செய்து ஆதரவை பெற்றுக்கொள்ளலாம்.

உக்கிரெய்ன் மற்றும் ரஷியா போன்ற நாடுகளைச் சேர்ந்த பல சபைகளில் முந்தையை போதை ஊசி பயன்படுத்தும் வாழ்க்கை முறையின்

காரணமாக எச்ஐவியால் பாதிக்கப்பட்டு இருப்பதை கண்டுபிடித்து வருகிறார்கள். இந்த திருச்சபைகளும் இப்போது வருமுன் காப்பதிலும் கவனிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

ISAAC (International Substance Abuse and Addiction Coalition) என்பது கிறிஸ்தவ போதை மருந்து உட்கொள்வோருக்கான மறுவாழ்வு நிகழ்ச்சிகளுக்கான ஒரு சர்வதேச அமைப்பாகும். உலகின் பெரும்பாலான உள்நாட்டு போதை மருந்து உட்கொள்வோருக்கான மறுவாழ்வு மையங்கள் முந்தைய சோவியத் நாடுகளின் இடத்தில் இருக்கும் நாடுகளில் இருக்கின்றன. பெரும்பாலானவை உள்ளூர் திருச்சபைகளினால் நடத்தப்படுகின்றன-இந்த திருச்சபைகளில் அதிகப்படியானவற்றிற்கு தங்கள் மக்கள் சுகவீனம் அடையும்வரை எச்ஐவியை எதிர்ப்பதில் அதிக ஆர்வம் காட்டவில்லை.

ஒரு நண்பனாக இருப்பதற்கோ அல்லது எச்ஐவி குறித்து பேசுவதற்கோ ஒரு செலவும் கிடையாது.

எச்ஐவியால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும்பாலும் மற்றவர்களுடைய முகபாவங்களுக்கு மிகவும் உணர்வுள்ளவர்களாக இருப்பார்கள், அவர்கள் எப்படி உணர்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள நாம் நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதிக நிச்சயமில்லாத சூழ்நிலைகளில், கடவுளுடைய விசுவாசமும் அன்பும் சந்தேகிக்கப்படத்தக்கது அல்ல என்பதுபோலவே நம்முடைய தொடர்ச்சியான ஆதரவும் நட்பும் சந்தேகிக்கப்படத்தக்கது அல்ல என்பதை ஒவ்வொருவரும் காணும்படியாக நாம் செய்ய வேண்டும்.

எச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்கள் கலக்கத்துடனோ அல்லது துக்கமாகவோ இருக்கலாம், அல்லது பரிசோதனை நேர்மறையான பதிலைக் கொடுத்தவுடன் வாழ்க்கை வாழ்வதில் அர்த்தமில்லை எனவும் உணரலாம். தாங்கள் புறக்கணிக்கப்பட்டதாகவும், யாரும் அவர்களைப் பற்றி கவலைப்படுவதோ அல்லது புரிந்துகொள்வதோ இல்லை எனவும் நினைக்கலாம். தங்களுக்கு எப்படி எச்ஐவி வந்தது என்பதை நினைத்து சிலர் கோப்பப்படலாம், அல்லது தெரியாமல் பிறருக்கு அந்த வைரஸை பரப்பிவிட்டதற்காக குற்றவுணர்வும் அடையலாம். மரணத்தைக் காட்டிலும் மரணமடையும் முறையைக் குறித்த பயம் மிகவும் அதிகமானது.

எச்ஐவியின் தாக்கம் இந்தியாவிலும், சீனாவிலும் ஆசியாவின் மற்ற பகுதிகளிலும் வளர்ந்து வருகின்றது.

அவமானப்படுத்துதல் ஒரு மிகப்பெரும் பிரச்சனை. உலகின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த திருச்சபை தலைவர்கள் எச்ஐவி உடையவர்களை பொறுத்துக்கொள்வதே இல்லை-எச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் சூழ்நிலை பரவலாக தெரிந்துவிட்டது என்று அறிந்தவுடனே சபையை விட்டுச் சென்றுவிடவேண்டும் என்று தூண்டும் அளவிற்கு நடந்துகொள்கிறார்கள். நல்ல விதமாக

அவர்களுடைய மனப்பாங்குகள் மாற்றம் பெற்று வருகின்றன, இன்னும் அது வெகுதூரம் செல்ல வேண்டியதாக இருக்கிறது.

எச்ஐவியைக் குறித்து, குறிப்பாக நம்முடைய சபையிலும், ஆலயங்களிலும் இன்னமும் இருக்கும் பிறரை அவமானப்படுத்துதலைப்பற்றி பிரசங்கம் செய்வதினால் ஒரு போதகர் எதையும் இழக்கப்போவது இல்லை. திருச்சபையில் எச்ஐவி- இருப்பவர்களை சந்தித்து, அவமானம் குறித்தும் புறக்கணிக்கப்படுதல் குறித்தும் பிரசங்கிக்க ஆலோசனை கேட்பதற்கு தைரியம் தேவை, ஏனென்றால் அவர்களே முதலாவதாக அதை அனுபவிக்கிறார்கள்.

'எச்ஐவியாலும் எய்ட்ஸாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிராக நான் நேரடியாகவும், மறைமுகமாகவும் அவமானப்படுத்துவதும், பிரிவினை உண்டாக்குவதும் செய்துகொண்டு இருந்தேன், அவர்களை கவனிக்காமலும் உடல்ரீதியாகவோ அல்லது நிதியினாலோ எவ்வகையான ஆதரவும் கொடுக்காமல் இருந்தேன். என்னுடைய பழைய செய்கைகளுக்காகவும் நடத்தைகளுக்காகவும் நான் மோசமாக உணர்கிறேன். நான் வருந்துகிறேன். எதிர்காலத்தில் அவர்களுக்கு நான் அன்பும் கவனிப்பையும் காட்டுவேன். அவர்களுக்கு ஆவிக்குரிய மற்றும் உடல்ரீதியான உதவிகளை செய்வேன். எய்ட்ஸ் உள்ளவர்களை இனிமேல் நான் அவமானப்படுத்தவே மாட்டேன்'

பர்ஸ்ட் பேப்டிஸ்ட் சர்ச் போதகர், மேற்கு ஆப்பிரிக்கா, 2009

ஆறுதலான வார்த்தைகளையும், கவனித்து கேட்கும் காதுகளையும் விட எச்ஐவியோடு வாழ்ந்துகொண்டு இருக்கிற மக்களுக்கு எளிமையான நடைமுறை உதவிகள் அதிகமாக தேவைப்படும். எச்ஐவி உடையவர்களுக்கு பலர் ஆலோசனை கூற விரும்புகிறார்கள், ஆனால் இன்னும் சற்று அதிகமான செயலைச் செய்ய யார் தயாராக இருக்கிறார்கள்? மருத்துவ மையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கும், தங்கள் குடும்பத்திற்கு உணவு கொடுப்பதற்கும், சமையல் செய்வதற்கு உதவவும், துணிகளை இஸ்திரி செய்வதற்கும், சலவை செய்யவும் ஆடை அணியவும் உதவுவதற்கும், தங்களுடைய குழந்தைகளின் பள்ளி கட்டணம் செலுத்த உதவுவதற்கு யாரேனும் ஒருவர் அந்த மக்களுக்கு தேவைப்படுகிறார்.

வாழ்க்கை முடிந்தவுடன், குழந்தைகள் இருக்கிறார்கள். 1.5 கோடி பேர் ஏற்கனவே அனாதைகளாக்கப்பட்டுவிட்டனர். யார் அவர்களை பார்த்துக்கொள்வார்கள்? அடுத்த தலைமுறை இளம் பெற்றோர்களை பாதுகாக்க யார் வேலைசெய்கிறார்கள்? கவனிப்பில் நோக்கமாக இருந்து வருமுன் காப்பதை கோட்டை விடுவது சுலபமான காரியம்.

இப்படிப்பட்ட காரியங்களைப் பற்றியதுதான் இந்த புத்தகம்.

ஒரு மக்கள் இயக்கத்திற்காக ஜெபித்தல்

நிறுவனங்கள், பணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவை உண்மையில் எச்ஐவிக்கு பதிலாகாது. ஒரு தனிப்பட்ட பணி அல்லது

மருத்துவமனை குறைவான தாக்கத்தையே ஏற்படுத்தும். எச்ஐவிக்கான பதில் ஒரு உலகளாவிய மக்கள் இயக்கமே: கோடிக்கணக்கான ஆண்களும் பெண்களும் வித்தியாசம் ஏற்படுத்தவேண்டும் என்று ஆர்வமாக இருக்கும்போது, தேவைப்படுகிறர்வர்களின் வீட்டிற்குச் செல்வது மாத்திரமல்லாமல், அவர்கள் செல்லும் இடமெல்லாம் உயிர்காக்கும் செய்தியை கொண்டு செல்லும்போது. இது ஒட்டுமொத்த கிராமங்கள், பட்டணங்கள், நகரங்கள் மற்றும் நாடுகளை ஒன்றுதிரட்டுவது ஆகும்.

உதவிவேண்டி அரசாங்கங்கள் திருச்சபைகளை பார்க்கின்றன

பெரிய சர்வதேச வளர்ச்சி நிறுவனங்களும் அரசாங்கங்களும் திருச்சபையின் பதிலுக்காக எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றன. எச்ஐவி பயங்கரமான பிரச்சனையாக இருக்கிற இடங்களில், வலிமையான சமுதாய அமைப்புகளாக இருப்பவை திருச்சபைகளே, திருச்சபை தலைவர்களுக்கு சமுதாயத்திலே அதிகமான செல்வாக்கு இருக்கிறது என்பதை அவர்கள் அங்கீகரித்து உள்ளனர். ஆரோக்கியம் பேணும் சேவையில் கிறிஸ்தவ மருத்துவமனைகளும் சிறு மருத்துவமனைகளும் 100 ஆண்டுகளுக்கு மேலாக வைத்திருக்கும் சாதனைப்பட்டியலையும், நேர்மையையும், பற்றுதலையும் அவர்கள் பார்க்கிறார்கள். நியூ யார்க் மற்றும் கம்பாலா போன்ற இடங்களில் உள்ள கிறிஸ்தவ மருத்துவமனைகள் எய்ட்ஸ் நோயாளிகளை ஆரம்பநிலையிலேயே கண்டுபிடித்து அக்கறை செலுத்துகிறார்கள், அரசாங்க மருத்துவமனைகளைக் காட்டிலும் அதிக கரிசனையாக இருக்கிறார்கள் என்றும் அவர்கள் அறிவார்கள்.

கிறிஸ்தவ நிறுவனங்கள் ஏழை நாடுகளில் உள்ள ஆயிரக்கணக்கான மருத்துவமனைகளிலும் சிறு மருத்துவமனைகளிலும்தொழில் வல்லாண் மையையும், அருமையான கவனிப்பையும் கொடுக்கின்றன என்பதை அவர்கள் அறிவார்கள். ஆரோக்கியத்தை வளர்ப்பதிலும், கல்வி, பள்ளிக்கூடங்கள் கட்டுவது மற்றும் இளைஞர்களுக்காக பல ஆண்டுகளாக செலவிடுவது ஆகியவற்றில் திருச்சபையின் அர்ப்பணிப்பையும் அவர்கள் பார்க்கிறார்கள். ஆனால் மற்றவர்களை நியாயம்தீர்க்கும் நம்முடைய மனப்பாங்கும், தேவை உள்ளோரிடத்தில் தந்தைபோல கண்டிப்பாக நடந்துகொள்ளுவதை நினைத்து அவர்கள் கவலைப்படுகிறார்கள்.

திருச்சபைத் தலைவர்கள் எப்படி கோடிக்கணக்கான மக்களை தங்கள் நேரத்தை தன்னார்வமாகக் கொடுக்க வைக்க ஊக்கப்படுத்துகிறார்கள் என்பதைக்குறித்தும், நம்முடைய சமுதாயத்தில் குறைந்த ஆதாரங்களைக் கொண்டு எப்படி தாக்கம் ஏற்படுத்துகிறார்கள் என்றும் அரசாங்கத் தலைவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். நம்முடைய ஆரோக்கியமான செய்திகளையும் நம்முடைய எடுத்துக்காட்டையும் அவர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் எட்டிப்பிடிக்க கஷ்டப்படுகிற சமுதாயங்களில் நம்முடைய ஆழமான அர்ப்பணிப்பை அவர்கள் வியந்து பார்க்கிறார்கள்- அது போதை உபயோகிப்பவர்களானாலும், செக்ஸ் பணியாளர்

களானாலும், லாரி ஓட்டுகிறவர்கள், சிறைக்கைதிகள் மற்றும் பல. மொத்த சமுதாயத்தையும் செயல்படச் செய்து மக்கள் தங்கள் மனப்பாங்கையும் செயல்களையும் மாறச் செய்வது திருச்சபை தலைவர்களால் எப்படி முடிகிறது என்பதை பார்த்து ஈர்க்கப்படுகிறார்கள்.

ஆனால் மதசார்பற்ற மற்றும் அரசாங்க நிறுவனங்கள் இப்போது கிறிஸ்தவ சமுதாயத்திற்கு புதிய சவாலை வைத்துள்ளனர். அவர்கள் இப்படியாகச் சொல்கிறார்கள்:

"உங்கள் எச்ஐவி பணிகளின் தாக்கங்களை அளவிடுங்கள். நீங்கள் எத்தனை பேருக்கு உதவுகிறீர்கள் மற்றும் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்கிற புள்ளிவிபரங்களை பதிவு செய்யுங்கள். நீங்கள் சிக்கனமாகவும், சிறப்பாகவும் இருக்கிறீர்கள் என்பதை காட்டுங்கள். நீங்கள் பணத்தை சரியாகச் செலவுசெய்கிறீர்கள் என்பதை காட்டுங்கள். சமுதாயத்தின் பல்வேறு பகுதிகளை சென்றடையும் திருச்சபையின் பகுதிகளை எங்களுக்கு காண்பியுங்கள் அவர்களுக்கு சபையோடு எப்படிப்பட்டதொடர்பு இருந்தாலும் வாலிபர்கள், அனாதைகள், கற்பிணிப்பெண்கள், போதைப் பழக்கத்தினர், செக்ஸ் பணியாளர்கள் மற்றும் ஆண்புணர்ச்சிக்காரர்கள் யாராக இருந்தாலும் எல்லாரையும் சேர்த்து. உங்கள் பணியின் தரம் குறையாமல் நீங்கள் எப்படி அதிகப்படியான எண்ணிக்கையை எப்படி அடையப் போகிறீர்கள் என்பதை எங்களிடத்தில் கூறுங்கள். ஒரு தேசிய நிகழ்ச்சியின் பகுதியாக 10 அல்லது 20 பணிகள் ஒரு இடத்தில் ஒரு மாநிலத்திலோ அல்லது நகரத்திலோ எப்படி ஒன்றிணைந்து செயல்படும் என்பதை காண்பியுங்கள். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய உங்களால் முடியும் என்றால், நீங்கள் வளர எங்களிடத்தில் நிதி இருக்கிறது"

நீங்களும் நானும் கடவுளுடைய பதிலின் ஒரு பகுதி

நீங்களும் நானும் கடவுளுடைய பதிலின் ஒரு பகுதி. உலகத்தில் இருக்கும் மிகப்பெரிய சமுதாயம் சார்ந்த மக்கள் இயக்கங்களில் திருச்சபையும் ஒன்று. உலகின் மூன்றில் ஒருபங்கு மக்கள் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்வார்கள் -210 கோடி மக்கள். திருச்சபையானது[1] எந்த பன்நாட்டு நிறுவனத்தைக் காட்டிலும் அதிகமானோரை பணியமர்த்துகிறது, எந்த அரசாங்கத்தைக் காட்டிலும் அதிகமானோரை தாக்கம் செய்கிறது. இதிலே உலகத்தில் அதிகமான தன்னார்வத் தொண்டர்கள் இருக்கிறார்கள், அவர்கள் அதிகமான நிதியை வசூலிக்கிறார்கள். எந்த ஒரு மனித தலைவராலும், சட்டசபையாலும், குழுவாலும், அரசாங்கத்தினாலும் கட்டுப்படுத்த முடியாதது இதுவாகும். உலகின் எல்லா பகுதிகளிலும் இதற்கு கிளைகளும் கட்டிடங்களும் இருக்கின்றன, இதன் அங்கத்தினர்கள் கோடிக்கணக்கில் வீடுகளில்

1 வேர்ல்ட் கிறிஸ்டியன் என்சைக்ளோபீடியா,2001 பதிப்பு

சந்தித்துக்கொள்கிறார்கள். புதிய சிந்தனைகளை பகிர்ந்துகொள்வதற்கு இதுவே உலகின் மிகப்பெரிய அலுவலகம் சாராத தொடர்புகள் ஆகும்.

இதனால் தான் UNAIDS மற்றும் உலக சுகாதாரம் அமைப்பு போன்ற நிறுவனங்கள் எச்ஐவிக்கு எதிரான போராட்டத்தில் மற்ற விசுவாச-அடிப்படையிலான குழுக்களோடு சேர்ந்து திருச்சபைக்கும் முக்கியமான பங்கு இருக்கிறது என்கிறார்கள். எனவே இப்புத்தம் எச்ஐவியைக் குறித்தும் உயிர்களைக் காக்க கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்தும் மாத்திரம் அல்லாமல், இதை எப்படி இன்னும் மேன்மையாகச் செய்யலாம், எப்படி இணைந்து செய்யலாம், அதன்மூலமாக எப்படி சிறப்பான இயேசுவின் நாமத்திலே அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதைப்பற்றியும் இப்புத்தகம் கூறுகின்றது.

இந்த புத்தகத்தின் பின் பகுதியில் இரண்டு வெற்று பக்கங்கள் இருக்கின்றன, அதிலே எச்ஐவிக்கு எதிராக உங்களுடைய பதிலாக உங்களுக்கு கிடைத்த அழைப்புகள் என்பனவற்றை பட்டியலிடுங்கள்.

பேட்ரிக் டிக்சன், மே *2010*

அதிகாரம் 1

உயிர்களை காப்பாற்றுவதற்கான பந்தயம்

இருபது ஆண்டுகளுக்கு மேலாக எச்ஐவி பரவாமல் தடுக்கவும் எய்ட்ஸுக்கு சிகிச்சை அளிக்கவும் நடந்த உலகளாவிய பிரச்சாரங்களுக்கும், 100 ஆண்டுகளுக்கு மேலான உடல்நலம் குறித்த பிரச்சாரங்களுக்கும் பின்னர் நற்செய்தி என்னவெனில் இப்போது எது செயல்படக்கூடியது என்பதை உலகம் அறிந்துகொண்டுள்ளது.

இளைஞர்கள், பெரியோர் மற்றும் பிறக்காத குழந்தைகள் இன்னும் பலரை எவ்வாறு காப்பது என்பதை நாம் அறிவோம். எச்ஐவி உடைய மக்களுடைய ஆரோக்கியத்தை எப்படி முன்னேற்றுவது என்பது நமக்கு தெரியும். ஒருவர் எப்படி பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பது என்பதை கற்றுக்கொடுக்க அதிகமாக செலவு ஏதும் ஏற்படாது. நம்மிடத்தில் இருக்கும் மிகவும் சக்திவாய்ந்த கருவி கடவுள் நமக்கு கொடுத்திருக்கும் குரல்தான்.

பாதுகாப்பாக இருப்பதற்கான அடிப்படை கருத்துக்கள் தெளிவாக இருந்தாலும், பல்வேறுவிதமான குழுக்கள் தங்களுடைய பணிக்கு பல்வேறு முக்கியத்துவங்களை வைத்து இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் தகாதவற்றை தவிர்ப்பதையும் உண்மையாக இருப்பதையும் முக்கியப்படுத்துவார்கள், மதசார்பற்ற கல்வியாளர்கள் ஆணுறை மற்றும் அபாயத்தை குறைப்பதை குறித்து பேசுவதை முக்கியப்படுத்துவார்கள்.

அதிகமான நேரமும் முயற்சிகளும் வித்தியாசமான முறையைக் கையாளுகிறவர்களுக்கு இடையே ஏற்படும் வாக்குவாதங்களில் வீணாகிறது. உயிரைக் காப்பாற்றும் வேலையில் நாம் மும்முரமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் அதிகமான மக்கள் எச்ஐவியை பெற்றுக் கொள்கிறார்கள். நாம் வித்தியாசமான காரியங்களை முக்கியப்படுத்தினாலும், சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் செய்யப்படவேண்டிய பாத்திரம் ஒன்று இருக்கிறது. UNAIDSன் முன்னால் செயலாளர் , டாக்டர் பீட்டர் பியாட், அடிக்கடி இவ்வாறாக கூறுவார்: “ஒட்டுமொத்த தேசிய திட்டத்தின் ஒரு பகுதியாக எல்லா வகையான பாதுகாப்பு முயற்சிகளுக்கும் ஒரு மதிப்பு இருக்கிறது”

அமைதியை உடைத்தல்

மக்கள் எச்ஐவி, அது என்ன, அது எப்படி பரவுகிறது, பரிசோதனை, சிகிச்சை, மக்கள் எப்படி தங்களை பாதுகாப்பாக வைத்துக்கொள்வது

என்பதைப் பற்றி பேசும்போது நோய் பாதிப்பின் வேகம் குறைகிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளோடும், சபைத் தலைவர்கள் தங்கள் அங்கத்தினர்களோடும், ஆசிரியர்கள் மாணவர்களோடும், அலுவலகத்தில் வேலைசெய்கிறவர்கள் தங்கள் உடன் வேலையாட்களோடும், கிராமத்து மக்கள் தங்கள் அயலகத்தாரோடும் பேசும்போது நடத்தையில் மாற்றம் ஏற்படுகின்றது.

எச்ஐவியை உடைய மக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதாக உணர்ந்து தங்கள் கதைகளை சொல்ல முடிந்தால், குடும்பங்கள் இறந்துபோன தங்கள் உறவினர்களை குறித்து வெளிப்படையாக துக்கிக்க முடிந்தால்; பின்பு செய்தியானது வல்லமையாக வளர்ச்சியடையும்.

திருச்சபை வருமுன் காப்பதைத் தவிர்த்து கவனிப்பிலேயே அடிக்கடி நோக்கமாக இருக்கிறது

சபைகள் பெரும்பாலும் தங்கள் சொந்த அங்கத்தினர்களை கவனிப்பதிலேயே ஆரம்பிக்கிறார்கள். ஆனால் சவால் இங்குதான் இருக்கிறது: நீங்கள் அந்த நபர்களை கவனிப்பதற்கு செலவுசெய்யும் அதே அளவு பணத்தையும் நேரத்தையும் வருமுன் காப்பதற்கு பயன்படுத்துகிறீர்களா? எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அனைத்து நோய் தாக்குதல்களையுமே தடுக்க முடியும்போது உங்களுடைய எச்ஐவி ஆதாரங்கள் அனைத்தையும் கவனிப்பு நிகழ்ச்சிகளுக்கு செலவு செய்வது தொலைநோக்கமற்ற முட்டாள்தனமான காரியமாக இருக்கும்.

இதில் பிரச்சனை என்னவென்றால் வியாதிப்பட்டவர்களுடைய தேவைகள் பலநேரங்களில் உடனடியானதாகவும், தாங்க முடியாததாகவும், உணர்ச்சிப் பெருக்கானதாகவும் இருக்கிறது- அவர்கள் நம்முடைய வீடுகளின், சபைகளின், இதயங்களின் கதவைத் தட்டும்போது நம் முடைய ஆதாரங்களை முழுமையாக பெற்றுக் கொள்ளக்கூடும். ஆனால் புதிய நோய்தாக்குதல்களை நாம் இப்போது நிறுத்தவில்லை என்றால், நாளை நாம் இதைக் காட்டிலும் உணர்ச்சிவசப்படவேண்டியதாக இருக்கும்- இன்னும் மேன்மையான சிகிச்சை கிடைத்தாலும் கூட.

தென் ஆப்பிரிக்காவில் எச்ஐவி உடையவர்களுக்கு சிகிச்சை அளிக்கும்படியாக உருவாக்கியுள்ள சிறுவர் குழுவைக் குறித்து ஒருவர் என்னிடம் பெருமையாக பேசினார். உள்ளூர் மருத்துவமனைகளைக் காட்டிலும் அது மிக அழகாகவும் மேன்மையான கருவிகளோடும் இருந்தது. எனினும், அவர்களுடைய விலையுயர்ந்த பணி ஒரு ஆண்டிற்கு 100 குழந்தைகளுக்கு மாத்திரமே உதவ முடியும். அவர்களுடைய நிதி ஒதுக்கீட்டின் ஒரு சிறிய பகுதியை வைத்தே ஆண்டிற்கு சில ஆயிரக்கணக்கான குழந்தைகள் எச்ஐவியால் பாதிக்கப்படாமல் தவிர்க்க முடியும்.

எனவே எது முக்கியமானது? ஆண்டு தோறும் வியாதிப்பட்டு அல்லது இறந்துகொண்டு இருக்கிற 100 குழந்தைகளுக்காக இன்னுமொரு இரண்டாவது குழுவை உருவாக்குவதா, அல்லது எச்ஐவி உடைய தாயாருக்கு பிறக்கிற ஆயிரக்கணக்கான குழந்தைகளின் உயிரைக் காப்

பாற்றுவதா, அல்லது ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு எச்ஐவியைப் பற்றி கற்பிப்பதா? குழந்தைகளுக்கான கவனிப்பு பணிகளுக்காக பல கிறிஸ்தவ ஆதரவாளர்கள் கோடிக்கணக்கான பணத்தை இறைக்க தயாராக இருக்கிறார்கள், ஆனால் பரிசோதனைக்கும் வருமுன் காப்பதற்கும் எதுவுமே கொடுப்பதாக இல்லை. நிச்சயமாகவே நாம் இந்த பிரச்சனையின் வேரை சமாளிக்க வேண்டுமல்லவா?

எல்லா எச்ஐவி நிகழ்ச்சிகளுக்கும் முக்கியமான குறிக்கோள் எச்ஐவி பரவுவதை தடுப்பதாக இருக்க வேண்டும். ஒருவருடைய நோய்த் தாக்குதலை தடுப்பதற்கு உங்களுக்கு இன்று மாத்திரமே இருக்கிறது, ஆனால் அவர்களுடைய சிகிச்சையையும் கவனிப்பையும் திட்டமிட அடுத்த 10 முதல் 20 ஆண்டுகள் இருக்கின்றது. கவனிப்பு மற்றும் சிகிச்சை நிகழ்ச்சிகள் மிகவும் முக்கியமான தேவைதான், ஆனால் எச்ஐவி பரவாமல் தடுப்பதற்கு அவை சரியான விடையாக இருக்க முடியாது. உலகத்தில் இருக்கும் அனைத்து கிறிஸ்தவ பள்ளிகளும் எச்ஜவியை கவனமாக கருதி அது பரவுவதைக் குறித்து துல்லியமான தகவலைக் கொடுத்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். உலகமே மாறிவிடும் !

பொது அறிவின் அடிப்படையில் நடைமுறை பாதுகாப்பும் பல ஆண்டுகளுக்கு மேலான ஆரோக்கிய முன்னேற்ற அனுபவமும்

பல ஆண்டுகளாக நடைபெற்ற புகைப்பிடித்தலுக்கு எதிரான மற்றும் பிற ஆரோக்கிய முன்னேற்ற பிரச்சாரங்களினாலும் மக்கள் தங்கள் நடத்தையை ஒரு சிறிய நிகழ்ச்சியைக் கொண்டு மாற்றிக் கொள்ளவது மிகவும் அபூர்வமானது என்பதை நாங்கள் அறிவோம். ஒரு நாடு முழுவதும் கலாச்சாரம் மாறும்போது நடத்தை மாறுகிறது.

எங்களிடத்தில் மிகப்பெரிய அளவிலான தகவல்கள் இருக்கின்றன, பல ஆண்டுகளாக பல நாடுகளில், உலகெங்கும் பல்வேறு ஆரோக்கிய பிரச்சாரங்களின் மூலமாக கிடைக்கப்பெற்றவை அவை. இதே கருத்துக்களை நாம் சுலபமாக எச்ஜவிக்கும் எடுத்துக் கொள்ளலாம்.

நாம் :

- இந்த நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுடைய கதைகளை சொல்லலாம்.
- ஆரோக்கியமான வாழ்க்கை வாழ ஒட்டுமொத்த சமுதாயத்தையும் ஒன்றுதிரட்டலாம்: மருத்துவர்கள்,செவிலியர்கள், சபை தலைவர்கள், செல் வாக்கு மிகுந்த மக்கள், வாலிபர்களிடயே ஊழியம் செய் கிறவர் கள், அரசியல்வாதிகள், பெற்றோர்கள்.
- எல்லா வகையான தகவல் சாதனங்கள் வழியாகவும் எளிமையான ஆரோக்கிய செய்திகளை கொண்டுசெல்லலாம்தொலைக்காட்சி, வானொலி, சுவரொட்டிகள், கைப்பிரதிகள், செய்தித்தாள்கள், நாளே டுகள், புத்தகங்கள், திரைப்படங்கள்,தெரு நாடகங்கள்.
- இந்த அச்சுறுத்தல் தனிப்பட்ட முறையில் நிஜமானது என்பதை மக்கள் புரிந்துகொள்ள உதவலாம்.

- மக்கள் மனதில் தைரியமாக முடிவெடுக்கும்படியாக பல தெரிந் தெடுப்புகளைக் கொடுக்கலாம்.
- மக்கள் உடனிருப்போருடைய அழுத்தத்தை சமாளிக்க உதவலாம்- மக்கள் மாற்றம்பெறவும், ஒருவருக்கொருவர் உதவவும் ஆதரவு கொடுக் கலாம்.
- ஆரோக்கியச் செய்திகளை மறுபடி மறுபடி சொல்லிக்கொண்டே இருக்கலாம் (ஆண்டுதோறும் புதிய மக்களை சந்திக்கும்போது, மேலும் மக்கள் உங்கள் செய்தியின் எல்லா விவரங்களை நிச்சயமாகவே மறந் துவிடுவார்கள்).
- நீண்டகால நோக்கம் வைத்துகொள்ள வேண்டும்- ஒரு நாடு முழுவதையும் மாற்ற காலம் தேவைப்படும்.

நடத்தையை மாற்றுவது எப்போதுமே உண்மையான சவாலாக இருக் கும். ஆரோக்கியப் பிரச்சனைகளின் பல ஆண்டுகால அனுபவத்தின் மூலமாக விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தையை மாற்றுவதில் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதை நாங்கள் அறிவோம். நாம் இன்னும் முன்னேறிச் செல்லவேண்டும். எனவே எச்ஐவியை தடுப்பதில் "முன்னேறிச் செல்லுதல்" என்றால் என்ன?

1.சிறப்பான தாக்கத்திற்கு ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சி

அதிக அபாயத்தில் இருப்பவர்களை இலக்காக கொண்டு செயல் பட்டால் எச்ஐவி தடுப்பு மிகவும் சிறப்பானதாக இருக்கும். பெரும்பாலும் இவர்களே சமுதாயத்தின் கீழ்தளத்தை சார்ந்தவர்களாக இருக்கிறார்கள்- கிறிஸ்தவர்கள் சேவைசெய்யும்படியாக அழைக்கப்பட்ட மக்களே. ACET குடும்பத்தின் நடுவிலேயே எடுத்துக்காட்டுக்களாக மதுபானம் அருந்தும் கிளப்புகளில் இருக்கும் மனிதர்கள், உகாண்டாவில் வாகனம் ஓட்டுவோர், செக்ஸ் பணியாளர்கள் மற்றும் இந்தியாவில்லாரி ஓட்டுநர்கள், ஸ்காட்லண்டில் போதை மருந்து ஊசி குத்திக்கொள்பவர்கள், மத்திய ஆசியப்பகுதியில் ஆண் புணர்ச்சிக்காரர்கள் மற்றும் ரோமானி யாவில் ஆரோக்கியப் பணியாளர்கள்.

நீங்கள் குறிவைக்கும் குழுவின் நேரடியாக பங்கெடுக்காத அங்கத்தினர்களோடு நம்பிக்கையை உருவாக்குவதற்காக கடினமாக உழைப்பதே இதில் முக்கியம் - எடுத்துக்காட்டாக மிகவும் பாதிக்கப்பட்ட சமுதாயத்தில் உடன் இருப்போருக்கு கல்வி புகட்டுவதில் பயிற்சி அளிப் பதன் மூலமாக ஆரோக்கியம் சார்ந்த செய்திகளை பரப்புவது. நாம் இலக்காக வைக்கும் பாதுகாப்புக்கு சிறந்த பயனை பெற்றுக்கொள்ள நீண்ட காலத்தை முதலீடுசெய்யவேண்டியதாக இருக்கும்.

2.ஒவ்வொரு நேயருக்கும் பொருந்துமாறு உங்கள் செய்தியை சரிசெய்து, பொருந்தச் செய்து, மாற்றியமைக்கவும்

சூழ்நிலையை பொருத்தவாறு உங்கள் வருமுன் தடுக்கும் செய்தி அமையும். எடுத்துக்காட்டாக, கண்டிப்புமிகுந்த இஸ்லாமிய தேசத்தில், இதற்கு முன்பு பாலியல் கல்வியே பெற்றிராத 11 வயது சிறுமிகள் இருக்கும்

வகுப்பிலே நீங்கள் கொடுக்கக்கூடிய சிறந்த செய்தி என்னவாக இருக்கக்கூடும்? அல்லது நிச்சயம்செய்யப்பட்ட தம் பதிகளில் ஒவ்வொரு தம்பதியிலும் ஒருவர் எச்ஐவியால் இருப்பவராக இருந்தால்? அல்லது திருமணத்தினுள்ளும் ஆணுறை உபயோகிப்பது பாவம் என்று கருதப் படுகிற ஒரு ஆலயத்திலே? அல்லது எல்லோருக்கும் எச்ஐவி இருக்கும் ஒரு செக்ஸ் பணியாளர் குழுவுக்கும் அவர்களுடைய எச்ஐவி தாக்கப்பட்ட குழந்தைகளுக்கும், அன்றிரவு ஆணுறை அணிந்தும் அணியாமலும் பல வாடிக்கையாளர்களோடு உடலுறவு வைத்துக்கொண்டு பல்வேறு விலையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தோடு இருக்கிறவர்களிடம்? அல்லது ஒரே ஊசியையும் சிரிஞ்சையும் உபயோகப்படுத்துகிற போதை ஊசிபோட்டுக்கொள்கிறவர்களுக்கு?

உங்கள் இலக்காக இருக்கும் கூட்டத்தை கவனமாக கேட்பதன் மூலமாக ஆரம்பியுங்கள்:

❑ உங்களுக்கு ஏற்கனவே தெரிந்ததும் புரிந்ததும் என்ன? உங்களிடத்திலிருந்து அவர்களுக்கு அதிகமாக தேவைப்படுவது என்ன?

❑ அவர்களுடைய கலாச்சாரம், வயது, பாலினம் மற்றும் சூழ்நிலை என்ன?

❑ அவர்கள் எதிலே மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள் மற்றும் எதைக் குறித்து அதிகமாக அக்கறை செலுத்துகிறார்கள்?

❑ எவ்வகையான அபாயங்களுக்கு அவர்கள் தங்களை உட்படுத்திக் கொள்கிறார்கள்?

❑ எச்ஐவி பரிசோதனையும் சிகிச்சையும் சுலபமாக கிடைக்கிறதா? அவ்விடங்களில் இருந்து உதவி பெற்றுக்கொள்ள அவர்கள் சௌகரியமாக உணர்கிறார்களா?

❑ அவர்களுடைய கலாச்சாரம்/சூழ்நிலையில் நீங்கள் பேசவேண்டிய குறிப்பிடத்தக்க விஷயம் ஏதாகிலும் இருக்கிறதா?

❑ அவர்களுடைய சமுதாயம் அல்லது குழுவினால் எப்படிப்பட்ட அழுத்தங்களை அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள், மற்றும் அவர் களுடைய தன்னம்பிக்கையை அதிகரிக்க நீங்கள் செய்யக்கூடிய சிறந்த காரியம் என்ன?

❑ சிறந்த முறையில் நீங்கள் எப்படி அவர்களுடைய ஆர்வத்தை மாற்றி, நம்பிக்கையை வென்று, முக்கியமான செய்தியை அவர்களிடத்தில் சென்றடையச் செய்து, அவர்கள் சிந்திக்கும், உணரும் மற்றும் வாழும் விதத்தை மாற்றப்போகிறீர்கள்? (பள்ளி ஆசிரியர்கள், சிறைச்சாலை அதிகாரிகள், போதை ஊசி போட்டுக்கொள்கிறவர்கள் அல்லது செக்ஸ் பணியாளர்களின் தலைவர்கள், சபைத்தலைவர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் போன்ற உங்கள் இலக்காக இருக்கும் கூட்டத்திற்கு அனுமதியை பெற்றுத் தருவோர் சொல்வதை கவனியுங்கள்)

❑ அவர்கள் எதைக் குறித்து அதிகம் கவலைப்படுகிறார்கள்?

❑ உங்களிடத்தில் அவர்கள் எதை விரும்புகிறார்கள்? நீங்கள் சிறப்பாக உதவுவீர்கள் என்று அவர்கள் நினைப்பதற்கான காரணம் என்ன?

❐ நீங்கள் எதைச் செய்ய அவர்கள் அனுமதிப்பார்கள்? எப்போது? எங்கே? எவ்வளவு இடைவெளியில்? எவ்வளவு காலம்?

❐ நீங்கள் எதைச் செய்வீர்கள் அல்லது செய்யமாட்டீர்கள் என்று என்ன ஒப்பந்தம் நீங்கள் செய்யவேண்டியதாக இருக்கும்?

❐ நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிற அணுகுமுறை அவர்களுக்கு சௌகரியம்தானா?

❐ உங்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்பட்ட காரியத்தை செய்வதற்கு நீங்கள் சௌகரியமாக இருக்கிறீர்களா-உங்கள் சபை அல்லது நிறுவனத்தின் கலாச்சாரத்தோடும் மதிப்புகளோடும் அவை பொருந்தக்கூடியதாக இருக்குமா?

3.பின்னதாக பின்தொடருங்கள்

நம்முடைய நிகழ்ச்சி எவ்வாறு இயங்கிக்கொண்டு இருக்கிறது என்பதை அறிந்துகொள்வது முக்கியம். கேள்வி கேளுங்கள்

➔ நாங்கள் எப்படி செயல்பட்டோம்?

➔ நாங்கள் செய்தவை உங்களுக்கு பிடித்திருந்ததா, அதை மகிழ்ந்து அனுபவித்தீர்களா?

➔ எது மிகவும் உதவியாக இருந்தது?

➔ நீங்கள் பிற்காலத்தில் எடுக்கும் தெரிந்தெடுப்புகளை இது மாற்றும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

➔ எச்ஐவி உடைய உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பங்கள் அல்லது சமுதாயத்தினரைக் குறித்த உங்கள் மனப்பாங்கை இது மாற்றியிருக்கிறதா?

➔ நீங்கள் புதிதாக ஏதேனும் கற்றுக்கொண்டீர்களா?

➔ அடுத்த முறை இன்னும் சிறப்பாக நாங்கள் என்ன செய்யலாம்?

➔ இச்செய்தியை பரப்புவதற்கு நீங்கள் உதவ விரும்புகிறீர்களா?

(பக்கம் 168-174ல் உங்கள் பாதுகாப்புப் பணியின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு உதவும் வழிகளைப் பாருங்கள்)

ஒவ்வொரு குழுவுடனும் எவ்வளவு நேரம்?

நீங்கள் வாரக்கணக்கிலோ மாதக்கணக்கிலோ ஒரே குழுவில் பணியாற்ற முடியும்- எடுத்துக்காட்டாக, குறிப்பாக நீங்கள் அவர்களோடு ஆசிரியராகவோ அல்லது வாலிபர் ஊழியராகவோ இருந்தால் முடியும். அல்லது இரண்டு வகுப்புகளுக்கு மாத்திரமே உங்களுக்கு அனுமதியும் நேரமும் கொடுக்கப்படலாம்.

பல கல்வியாளர்களுக்கு அவர்களுடைய நேரத்தை குறித்த பல வேண்டுகோள்கள் இருக்கின்றன மற்றும் அவர்கள் சென்றடையக் கூடிய மக்களுடைய எண்ணிக்கையைக் குறித்தும் ஒவ்வொரு குழுவுக்கும் அவர்கள் செலவிடக்கூடிய நேரத்தைக் குறித்தும் கடினமான முடிவுகளை எடுக்கவேண்டியதாகிவிடுகிறது. இயேசுவின் எடுத்துக்காட்டைப் பாருங்கள். அவர் எங்கு சென்றாலும் அங்கே சீஷர்கள் அவரோடு இருப்பதை உறுதிசெய்தார். அந்த சீஷர்கள் சீக்கிரத்தில் பணிநியமனம் செய்து, இன்னும் அநேகர் சீஷராக

உதவுவார்கள். இயேசு விசுவாச மக்கள் இயக்கத்தை உருவாக்கினார், அது விரைவாக உலகம் முழுவதும் பரவியது.

எச்ஐவி தடுப்பு செய்திகளில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்கள்

நாம் அதிகப்படியான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றால் பின்வரும் இடங்களில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்

→ நம்முடைய சமுதாயத்தில் நம்மால் இயன்றவரை எச்ஐவி நோயைக் குறித்து எல்லாவற்றையும் அறிந்து புரிந்துகொள்ளுதல்.

→ எச்ஐவியைக் குறித்து நமக்கு சிறந்த புரிந்துகொள்ளுதல் இருக்கிறது என்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

→ அதிகமான அபாயத்தில் இருக்கிறவர்களை நோக்கி நம்முடைய சிறந்த முயற்சிகளை குறிவைத்தல்.

→ தனிப்பட்டமுறையில் அவர்களுக்குரிய தொடர்பை மக்கள் புரிந்துகொள்ள உதவுதல்.

→ எச்ஐவி தாக்கத்துக்கு இடம்கொடுத்திருந்தார்களானால் அவர்களுக்கு எச்ஐவி இருக்கிறதா என்று பரிசோதித்துக்கொள்ள வேண்டும்.

→ மக்களுடைய நடத்தையை மாற்றும்படியாக செய்திகளை மறுபடி மறுபடி கூறவேண்டும்.

→ முக்கியமான செய்திகளை வலியுறுத்திச் சொல்வதற்கு சமுதாயத்தின் ஆதரவு முக்கியம் என்பதை புரிந்து கொள்ளுதல்.

→ எச்ஐவி தடுப்பை கடும் அரசியல் வாக்குவாதமாக மாற்றாமல், அனுசரித்து செல்லவேண்டும்.

→ ஊக்கப்படுத்தப்பட்ட தன்னார்வத் தொண்டர்கள்/ திருச்சபை அங்கத்தினர்கள் முக்கியமான செயல்களில் ஈடுபடலாம் என்பதை புரிந்துகொள்ளுதல்.

→ புதிய ஆதாரங்களை வெளியிடும்படியாக உள்ளூர் சபைகளோடும் நிறுவனங்களோடும் இணைப்பை உருவாக்குதல்

→ விரைவாகவும் சுலபமாகவும் மறுபடியும் செய்யக்கூடிய, ஏற்றுக்கொள்ளக்கூடிய எளிய, சுருக்கமான, நன்கு விவரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளை உபயோகித்தல்

ஒருமுறை மாத்திரமே அவர் சொல்வதை கேட்கக் கூடியவர்களாக இருந்தாலும் அவர் பெரிய குழுக்களுக்கும் கல்வி புகட்ட நேரம் கொடுத்தார். இரண்டு அணுகுமுறையுமே முக்கியம் : சிறு குழுக்கள் மற்றும் பெரிய குழுக்கள்.

எனவே, சிறிய பள்ளி கூடுகைகள் ஒரே நேரத்தில் 1000 மாணவர் களுக்கு மேல் சென்றடைந்து அடிப்படை தகவல்களை கொண்டுசெல்லும், ஆனால் சிறு குழுக்களில் மாணவர்கள் கலந்துரையாடல் செய்து, பேசப்பட்டதை தனிப்பட்ட முறையில் தொடர்பு படுத்துவதைக் காட்டிலும் அது சற்று குறைவான தாக்கத்தையே ஏற்படுத்தக்கூடும்.

நடத்தை மாற்றத்திற்கான நிலைகள்.

நடத்தை மாற்றம் ஒரு இயல்முறை என்பதை அறிந்து கொள்ளுங்கள். ACETஉகாண்டா மூன்று நிலை அணுகு முறையை உருவாக்கி இருக்கிறது:

1.தகவல்

மக்கள் என்னென்ன தெரிந்தெடுப்புகள் இருக்கின்றன என்கிற உண்மைகளை அறிந்திருக்க வேண்டும். உங்கள் நேயர்களுக்கு ஏற்றவாறு செய்தியை பொருந்தச் செய்யுங்கள். அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவலில் இருக்கும் இடைவெளிகளை நிரப்புங்கள்.

2.அடையாளம் கண்டுபிடித்தல்

மக்கள் ஏற்கனவே அபாயத்தில் இருக்கிறார்களா அல்லது அவர்கள் வருங்காலத்தில் எடுக்கும் முடிவுகளின் காரணமாக அபாயத்தில் இருப்பார்களா என்பதை மக்கள் ஆராய்ந்துகொள்ள உதவுங்கள்.

3.ஒன்றிணைந்து பேசுங்கள்

மக்கள் எப்படி பதிலளிக்க வேண்டும் என்பதை யோசிக்க அவர் களுக்கு உதவிசெய்யுங்கள். அவர்கள் எச்ஐவிக்காக பரிசோதித்துக் கொள்ள வேண்டுமா? நோய்தாக்கத்தின் அபாயத்தை குறைக்கும் வாழ்க்கை திறன் பயிற்சிகளைக் கொடுங்கள். அவர்கள் எடுத்த முடிவுகளைக் கைக் கொள்வதில் தைரியமாக இருத்தல், உடனிருப்பவர்களின் அழுத்தத்திற்கு எதிராக செயல்படுதல், நீண்டகால நிறைவைத் தருகின்ற உடலுறவை அனுபவித்தல், நடத்தைக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் மற்றவர்களை மதித்தல் ஆகியவை இதில் அடங்கும். பொதுவான பாலுறவு ஆரோக்கிய கல்வி மற்றும் பரவலான பிரச்சனைகளின் ஒரு பகுதியாக எச்ஐவி விவாதிக்கப்படுவதே சிறந்தது என்று ACET உகாண்டா கண்டுபிடித்து இருக்கிறது. மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு உடனிருக்கும் குழுக்கள் மிகவும் உதவியாக இருக்கும். வாழ்க்கை திறமைகள் ஒரு தலைமுறையில் இருந்து மற்றொரு தலைமுறைக்கு எடுத்துச்செல்லப்பட வேண்டும், ஆனால் மக்கள் கிராமங்களில் இருந்து பட்டணங்களுக்கு இடம்பெயர்வதால் ஏற்படுகிற சமுதாய மாற்றத்தின் காரணமாக இது குறைவாகவே நடைபெறுகின்றது. பாரம்பரிய கலாச்சாரம் மற்றும் போதனைகளின் அடிப்படையில் இளைஞர்களிடையே வாழ்க்கை திறமைகளை வளர்க்க திருச்சபைகள் மிகவும் செல்வாக்கு மிகுந்தவைகளாக இருக்கின்றன.

ஆனால் எப்படிப்பட்ட எச்ஐவி தடுப்பு அணுகுமுறையை நீங்கள் மேற்கொண்டாலும், எப்படிபட்ட குழுவை நீங்கள் குறிவைத்தாலும், நீங்கள் எப்படிப்பட்ட செய்தியை கொடுக்கப்போகிறீர்கள் என்ற பெரிய கேள்வியை நீங்கள் கண்டிப்பாக விரைவில் சந்திப்பீர்கள். நாம் அடுத்து அதைத்தான் பார்க்கபோகிறோம், அதன் பின்பு பெரிய அளவிலான மக்களை நான் சிறப்பாக சென்றடைவது எப்படி என்பதை பார்ப்போம்.

அதிகாரம் 2

நாம் கொடுக்க வேண்டிய ஆரோக்கிய செய்திகள் என்ன?

எனவே, வருமுன் காப்பது அவசியமும் அவசரமுமானது. உயிர்களைக் காப்பாற்ற நம்மால் இயன்ற அனைத்தையும் நாம் செய்ய விரும்புகிறோம். ஆனால் நம்முடைய சபைகளிலும் பரந்த சமுதாயத்திலும் நாம் கொடுக்க வேண்டிய ஆரோக்கிய செய்திகள் என்ன? குறிப்பாக தவிர்த்தல் , உண்மையாக இருத்தல், ஆணுறை உபயோகித்தல் மற்றும் பல பிரச்சனைகளில் நாம் என்ன சொல்ல வேண்டும்? பல்வேறு வயது, கலாச்சாரம் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு நம்முடைய செய்திகளை எவ்வாறு விசேஷமாக வேறுபடுத்துவது? புதிய எச்ஐவி நோய்பாதிப்பை தடுக்கக்கூடிய மிகச் சிறந்த வழிகள் என்ன?

சமன்படுத்தப்பட்ட நோய்தடுப்புச் செய்தி என்பது என்ன?

நீங்கள் மத்திய ஆப்பிரிக்காவில் 5000 பேருக்கும் மேற்பட்ட சபை அங்கத்தினருக்கு வாரந்தோறும் வேதாகமத்தில் இருந்து பிரசங்கள் செய்பவராக இருக்கலாம். நீங்கள் எடின்பர்கில் ஆணுறை விநியோகிப்பவராக அல்லது ஊசி விற்கும் அரசாங்கப் பணியாளராக இருக்கலாம். நீங்கள் விசுவாசிப்பதும் சொல்லுவதும் அனைத்தும் வேதாகமத்தில் இயேசுவுடைய போதனைகளாக பதிவு செய்யப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டே இருக்கவேண்டும் என்றும் திருச்சபையின் பாரம்பரிய போதனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும் என்றும் விசுவாசிப்பவராக இருக்கலாம். அல்லது நீங்கள் கடவுளையே விசுவாசிக்காமல் மனித மதிப்பீடுகளை பின்பற்ற விரும்புகிறவராக இருக்கலாம்.

நீங்கள் யாராக இருந்தாலும், உங்கள் விசுவாசம் எதுவாக இருந்தாலும், உங்கள் வேலை எதுவாக இருந்தாலும், ஒருவரிடமிருந்து ஒருவர் எச்ஐவிக்கான பதிலை நாம் அனைவரும் கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

இந்த வரைபடம் அரசாங்க/ மதசார்பற்ற அணுகுமுறை திருச்சபையின் அணுகுமுறையில் இருந்து வித்தியாசப்படுகிறதை காட்டுகிறது. அரசாங்கங்கள் திருச்சபைகளில் இருந்தும், திருச்சபைகள் அரசாங்கங்களில் இருந்தும் கற்றுக்கொள்கின்றன.

அரசாங்கத்தின் அணுகுமுறை	*திருச்சபையின் அணுகுமுறை*
இயந்திரத்தனமானது (ஆணுறை)	*உறவுரீதியானது (தவிர்த்தல், திருமணம், உண்மையாக இருத்தல்)*
மருத்துவம் (எச்ஐவி பரிசோதனை)	*ஆவிக்குரிய தன்மையுடையது (போதகர்சார்ந்த, பிரசங்கம், ஜெபம்)*
நிதி தீர்ந்துபோகும்போது நிகழ்ச்சிகள் நின்றுவிடுகின்றன	*சமுதாயத்திற்கு ஊழியம் செய்யவேண்டும் என்கிற சபையுடைய அழைப்பின் ஒரு பகுதியாக - தன்னார்வத் தொண்டர்களைக் கொண்டு தொடரலாம்.*
ஒவ்வொரு அரசாங்கத்தை பொருத்தும் மக்களும் திட்டங்களும்	*பல ஆண்டுகளாக ஒரு திருச்சபை உள்ளூர் சமுதாயத்திலே உற்சாகமாக மாறுபடும் செயல்பட்டுக்கொண்டு இருக்கலாம்*

அரசாங்க மற்றும் மதசார்பற்ற பணியாளர்கள் எச்ஐவிக்கு இயந்திரத் தனமான அல்லது மருத்துவரீதியான பதிலைப் பற்றியே யோசிக்கிறார்கள். பல அரசாங்கங்கள் ஆணுறை விநியோகிப்பதிலும், பரிசோதனையிலும், சிகிச்சையிலும் அதிகமான முயற்சி எடுக்கிறார்கள். மக்கள் தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை எவ்வாறு நடத்தவேண்டும் என்று கூறுவது சமுதாயத்தில் தங்களுடைய கடமை அல்ல என்று அவர்கள் நினைக் கிறார்கள். போதகர்களும் சபை ஊழியர்களும் உறவுசார்ந்த மற்றும் ஆவிக் குரிய பதில்களை பற்றியே யோசிக்க முற்படுகிறார்கள். திருச்சபைகள் தங்கள் போதகத்தில் தவிர்த்தல், திருமணம் மற்றும் உண்மையாயிருத் தலைப் போதித்தல், கடவுள் எதிர்பார்க்கும் தரநிலைகள்; போதகரின் ஆதரவு மற்றும் நோயுற்றோருக்கான ஜெபம் ஆகியவற்றிலேயே தங்கள் முயற் சிகளை பெரும்பாலும் செலுத்துகின்றனர். ஆனால் நம் அனைவருக்குமே ஒவ்வொருவரும் தேவை.

UNAIDS இவ்வாறாக சொல்லியிருக்கிறது: "எச்ஐவியை தடுப்பதற்கும் பரவாமல் பார்த்துக்கொள்வதற்கும் ஒரே சிறப்பான கருவி ஆணுறை". எனினும், பல சபைத் தலைவர்கள் சபையின் ஆரோக்கியம் அடிப் படையிலான செய்திகளின் ஒரு பகுதியாக ஆணுறையைப் பற்றி பேசுவதை விரும்புவதில்லை. 'பரிசுத்த வாழ்க்கை' அல்லது எச்ஐவிக்கான பரி சோதனையைப் பற்றி பேசுவதையே சௌகரியமாக உணர்கிறார்கள்.

பாலுறவு நடத்தை மற்றும் உறவுகளைப் பற்றி சபைத் தலைவர்கள் பேசுவதற்கு வேதாகமம் ஊக்கப்படுத்துகிறது

முதலாவதாக, பாலுறவுக்கான ஆரோக்கியம், நடத்தை மற்றும் உறவுகளைப் பற்றி சபைத் தலைவர்கள் பேசுவதில் புதிதாக ஒன்றும் இல்லை.

அப்படிச் செய்யவேண்டும் என்று கடவுள் மோசேக்கு கட்டளையிட்டார், அவர்களுடைய தலைவர்கள் அனைவரும் ஆரோக்கிய அமைப்பின் ஒரு பகுதியாக அதையே செய்யவேண்டும் என்று போதிக்கப்பட்டனர்.

குஷ்டரோகத்தை குணப்படுத்த கடவுள் மோசேக்கு வல்லமையைக் கொடுத்தார்- அக்காலத்திலே ஒரு மிகவும் அபாயகரமான, நோய்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வியாதி- எடுத்துக்காட்டு அவருடைய சகோதரி மரியம் (எண்ணாகமம் 12:10-15). எனினும் கடவுளும் குஷ்டரோகத்தை குறித்து ஆரோக்கிய முறைமைகளைக் கொடுத்தார். நோய்தடுப்பைக் குறித்தும் (நோய்பரவுதல், நோய்பாதிக்காமல் இருத்தல்) நோய்பாதிப்பை பரிசோதிப்பதைக் குறித்தும் (புறம்பான அறிகுறிகள்) ஆசாரியர்கள் போதிக்க வேண்டும். பாலுறவினால் பரவக்கூடிய நோய்களை தடுப்பதற்கும் அவர்கள் பொறுப்புள்ளவராக இருந்தனர் (லேவியராகமம் 15)

3500 ஆண்டுகளுக்கு முன்பு, சபையிலே பாலுறவைக் குறித்து பேசுவதற்கு ஆசாரியர்கள் வெட்கப்படவில்லை, நாமும் இன்று அவர்களுடைய எடுத்துக்காட்டை பின்பற்ற வேண்டும். கடவுள் அவர்களுக்கு பூரணமான ஊழியத்தைக் கொடுத்தார். ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதைப் பற்றி போதிப்பது, பரிசுத்தத்தைக் குறித்தும் நோயாளிகளுக்காக ஜெபிப்பதைக் குறித்தும் போதிப்பதைப் போலவே அவர்களுடைய ஊழியத்தின் ஒரு பகுதியாகும்.

இயேசுவும் இந்த கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தார். இயேசு ஒரு குஷ்டரோகியை குணப்படுத்தியபோது, குணமடைந்தது ஆசாரியர்களால் உறுதிப்படுத்தப்படும் வரை வெளியரங்கமாக யாரிடமும் அந்த மனிதன் அதைக் குறித்து பேசக்கூடாது என்றார் (மத்தேயு 8:1-4). நாமும் குணமடைவதற்காக ஜெபிக்கலாம், ஆனால் தான் குணமடைந்துவிட்டதாக நினைக்கிற ஒருவர், மருத்துவ நிபுணர்களிடம் பரிசோதித்துக்கொள்ள மறக்கக்கூடாது. 3500 ஆண்டுகளுக்கு முன்னர் ஆசாரியர்கள் ஆரோக்கிய நிபுணர்களாக இருந்திருக்கலாம், ஆனால், அவர்கள் மருத்துவரீதியாக தகுதிபெற்று, சரியான கருவிகளை உடைய ஆரோக்கிய மையத்தில் பணிசெய்தாலே தவிர, இன்று குணமடைந்ததை உறுதிசெய்யும் தொழில் நுட்பம் அல்லது பயிற்சி அவர்களிடத்தில் இல்லை, (குணமடைதலைக் குறித்து மேலும் பக்கம் 117ல் பார்க்க).

பல சபைகள் இப்போது தங்கள் சொந்த விசுவாச அடிப்படையிலான பள்ளிகளில் முழுமையான பாலுறவு ஆரோக்கிய பாடங்களை சேர்த்து இருக்கிறார்கள். இளம் பெண்களிடையே தேவையற்ற கர்ப்பம் மற்றும் எச்ஐவியையும் சேர்த்து பாலுறவால் பரவக்கூடிய நோய்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையை இப்படிப்பட்ட பாடங்கள் குறைப்பதாக தெரிகிறது, மேலும் இளைஞர்கள் தங்களுடைய சொந்த ஆரோக்கியமான வாழ்க்கைமுறை தெரிந்தெடுப்புகளை எடுத்துக்கொள்ள தைரியத்தையும் கொடுத்து இருக்கிறது.

உங்கள் சபையில் உண்மையில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது?

உண்மைத்தன்மை இல்லாமையே திருச்சபையின் மிகப்பெரிய பிரச்சனை. தங்கள் சபையார் அனைவரும் திருமணத்திற்கு முன்பு கட்டுப்பாடாக இருந்து, திருமணத்திற்குப் பிறகு உண்மையுள்ளவர்களாக இருப்பார்கள் என்று போதகர்கள் நம்பிக்கை வைக்கலாம். எனினும், சில நாடுகளின் கணக்கெடுப்புகளின்படி திருச்சபைத் தலைவர்களின் பாலுறவு நடத்தை அவர்களுடைய அங்கத்தினர்களைக் காட்டிலும் வித்தியாசமாக இல்லை, சபை அங்கத்தினர்களின் நடத்தை பரவலான சமுதாயத்தின் பாலுறவு நடத்தையைக் காட்டிலும் பெரிதும் வித்தியாசமாக இல்லை என்கிறது. திருச்சபைக்கு உள்ளும் வெளியேயும் எச்ஐவி நோய் தாக்கத்தின் நிலை ஒன்றுபோலவே இருக்கிறது, அதனால் தான் பரந்த சமுதாயம் பரிசோதனை செய்வதைப் போல சபை அங்கத்தினர்களும் பரிசோதித்துக்கொள்வது முக்கியமாகிறது.

இப்படிப்பட்ட காரியங்களை பற்றி கலந்தாய்வு செய்வதற்கான கடமையை கடவுள் போதகர்களுக்கு கொடுத்து இருக்கிறார். "எங்களுடைய கலாச்சாரத்தில் நாங்கள் பாலுறவைக் குறித்து பேசுவதில்லை" என்று கூறுவது சுலபம். முற்காலத்தில் அது உண்மையாக இருந்திருக்கலாம், ஆனால் எதிர்காலத்தில் இது மாறவேண்டும். நாம் மௌனமாக இருப்பதன் விளைவாக நம்முடைய சபைகளில் மக்கள் இறந்துபோனார்களானால், இதற்கு நாமும் ஒரு பகுதி காரணமாக இருக்கிறோம் என்று கடவுள் நம்மை நியாயந்தீர்ப்பார்.

பாலுறணர்வு குறித்த பல காரியங்கள் பேசுவது சபைத் தலைவர்களுக்கு மிகவும் கடினமானதாக இருக்கலாம், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில், ஆனால் தங்களை பாதுகாத்துக்கொள்ள தங்களுடைய சொந்த உடல் எவ்வாறு இயங்குகிறது என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். சில கலாச்சாரங்களில் பலர் உடலுறவின் இயக்கத்தைக் குறித்தும், எச்ஐவி தாக்குவதை பல்வேறு விதமான உடலுறவு நடத்தைகள் எவ்வாறு குறைக்கவோ அதிகரிக்கவோ செய்கின்றன என்பதைக் குறித்தும் அறியாமையிலேயே இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட காரியங்களை குறித்து விவாதிப்பதினால் தவறான பாலுறவு செயல்களை ஊக்கப்படுத்தக்கூடும் என்று திருச்சபைத் தலைவர்கள் பலநேரங்களில் கவலைப்படுகிறார்கள். இளைஞர்களின் அப்பாவித்தனத்தை கெடுத்துவிடுவோமோ என்கிற பயம்தான் இது. ஆனால் கவலைப்படும்விதமாக, உண்மையில் அப்பாவிகள் ஏற்கனவே தங்கள் உறவினர்களாலும், நண்பர்களாலும், திரைப்படங்களாலும், டிவி நிகழ்ச்சிகளாலும், இணையதளங்களினாலும் அவர்களுடைய கபடற்ற தன்மை கெட்டுப்போய் விட்டது. என்ன நடந்துகொண்டு இருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ளாமல், இளைஞர்களுக்கும் சிறுவர்களுக்கும் உதவி

தேவைப்படுகிற முக்கியமான பிரச்சனைகளை நாம் தவிர்த்து விடக்கூடும்-நாம் சிந்திப்பதைக் காட்டிலும் இது மிகவும் சிறிய வயதாக இருக்கலாம்.

எனவே எந்த வயதில், எந்த சூழ்நிலையில், இந்த தலைப்புகளை நாம் முதலாவது விவாதிக்க வேண்டும்? இதற்கான பதில், உள்ளூர் கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் பொருத்து இது மாற்றம்பெறும் என்பதுதான்.

தீங்கை தவிர்ப்பதும் உண்மையாக இருப்பதும் மட்டும் தானா?

தீங்கை தவிர்ப்பதும் உண்மையாக இருப்பதும் பள்ளிகளிலே கற்றுத் தரப்பட வேண்டும் என்று சில கிறிஸ்தவ ஊழியர்கள் கூறுகின்றார்கள். 25000 இளைஞர்களுக்கு மேல் அமெரிக்காவில் திருமணமாகும்வரை கன்னிகளாக இருப்போம் என்று சபதமேற்று அதை காண்பிக்கும்படியாக விசேஷமான ஒரு மோதிரத்தை அணிந்துகொள்கின்றர். வெள்ளி மோதிரம் போன்ற நிகழ்ச்சிகளை அவர்கள் விரும்புகிறார்கள். இதே போன்ற "உண்மை காதல் காத்திருக்கும்" என்னும் பத்திரத்தில் 24 லட்சத்துக்கும் மேற்பட்டோர் கையெழுத்து இட்டு இருக்கிறார்கள்.

தீங்கை தவிர்ப்பதை பிரச்சாரம் செய்கிறவர்கள் வல்லமையான தீங்கை தவிர்க்கும் நிகழ்ச்சிகளின் மூலமாக இளம் கர்ப்பத்தின் அளவு வெகுவாக குறைந்துள்ளது என்னும் கணக்கெடுப்புகளை அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள், அதேபோல முதல் உடலுறவின் வயதும், திருமணத்திற்கு முன்பு இருக்கும் உடலுறவுகொள்ளும் பங்காளர்களின் எண்ணிக்கையும் குறைந்திருக்கிறது.

எனினும், இளைஞர்கள் ஆபத்துகளை எடுத்துக்கொள்ளும் போது (சிலர் அப்படிச்செய்வதை தடுக்கமுடியாது) இப்படிப்பட்ட 'குறுகலான' செய்திகள் உடலுறவின் மூலமாக பரவும் நோய்களை அதிகரிக்கக்கூடும், ஏனென் றால் அவர்கள் அதற்காக சரியாக ஆயத்தமாக இருக்கமாட்டார்கள் என்று சிலர் பதிலளிக்கிறார்கள். தீங்கை தவிர்க்கும் நிகழ்ச்சிகள் முதல் உடலுறவின் வயதை தாமதப்படுத்தினாலும், திருமணத்திற்கு முன்பாக அந்த இளைஞர்கள் குறைவான உடலுறவு பங்காளர்களை வைத் திருந்தாலும், அதே இளைஞர்கள் உறவுகளில் செயல்முறை பயிற்சிகளில் ஈடுபடும்போது காப்புறை உபயோகிப்பதன் அளவும் குறைவாகவே இருக்கும். சில அறிக்கைகள் அவர்களில் பலர் வாயினால் மற்றும் ஆசனது வாரத்தில் உடலுறவு வைத்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள், அது "உண்மையான உடலுறவு" அல்ல என்றும் அவர்களுடைய சத்தியத்தை மீறவில்லை என்றும், அதிலே ஆபத்து இல்லை என்று அவர்கள் நினைத்துக்கொள் கிறார்கள் என்று அறிவுறுத்துகிறது.

தீங்கை தவிர்ப்பது மாத்திரம் என்ற கொள்கையுடைய திட்டங்களில் மேலும் ஒரு பிரச்சனையும் இருக்கிறது. திருமணத்திற்கு முன்பாக தீங்கை தவிர்த்து உண்மையாக இருந்த பல மக்கள் தங்களுடைய துணையின் மூலமாக எச்ஐவியை பெற்றிருக்கிறார்கள். எனவே தீங்கை தவிர்ப்பதையும் உண்மையாக இருப்பதையும் காட்டிலும், உடலுறவின் மூலமாக எச்ஐவி பரவாமல் தவிப்பது அதிக சிக்கலானது.

அப்படியானால் இதற்கு விடை என்ன? கிறிஸ்தவ, வேதாகம மதிப்புகளை மதிக்கக்கூடிய சரியான வழியை நாம் கண்டுபிடிப்பது எப்படி? நம்முடைய நேயர்களுக்கு ஏற்றவாறு நம்முடைய செய்தியை நாம் எவ்வாறு சரிசெய்வது (ஞாயிறு பள்ளியில் இருக்கும் 10 வயது சிறுவர்களுக்கு தேவைப்படும் செய்தி, உள்ளூர் பல்கலைக்கழகத்தில் படிக்கும் 23 வயது மாணவர்களுக்கான செய்தியைக் காட்டிலும் வித்தியாசமாக இருக்க வேண்டும்)

'ABC' அணுகுமுறை சபைகளிலே பிரபலமாக இருக்கிறது

பல சபைத் தலைவர்களும், பெற்றோரும் ஆசிரியர்களும் உகாண்டா அரசின் அணுகுமுறையை விரும்புகிறார்கள்: ABC: தவிர்த்தல் (**A**bstinence), உண்மையாக இருத்தல் (**B**e faithful), காப்புறையை உபயோகித்தல் (Use a **C**ondom). ABC பிரபலமாகவும், உபயோகமாகவும், எளிதில் நினைவுபடுத்திக்கொள்ளவும் கூடிய பாடதிட்டமாக உலக போதனை யாளர்களுக்கு இருந்தது, மக்கள்தொடர்பு சாதனங்களில் இதை பிரச்சாரம் செய்வது எளிது. இது ஒரு உபயோகமான ஆரம்பப்புள்ளி, ஆனால் இதற்கும் சில எல்லைகள் இருக்கின்றன, குறிப்பாக நோயின் இயல்பு மாறும்போது.

நம்முடைய நேயர்களைப் பொறுத்து, வருமுன்காக்கும் செய்திகளில் மேலும் சில வகையான நோய்பரவும் முறைகளும் சேர்க்கப்பட வேண்டும், எடுத்துக்காட்டாக கழுவப்படாத ஊசிகள், அல்லது தாயிடமிருந்து குழந்தைக்குப் பரவுதல்.

பல்வேறுவிதமான கலாச்சாரங்களுக்கு பொருத்தமான மற்ற அபாயங்களை சில நேரங்களில் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும்-எடுத்துக்காட்டாக இறந்துபோனவருடைய சகோதரனுக்கு விதவைப் பெண்ணை கொடுக்கும் பாரம்பரிய முறைமை. விதவையை உரிமையாக எடுத்துக்கொள்ளும் முற்கால முறைமை ஆப்பிரிக்க நாடுகளில் பொதுவான ஒன்றாகும். இந்த பாரம்பரியம் ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் எச்ஐவி பரவுவதை அதிகப்படுத்தியுள்ளது, இதிலே கணவர்கள் எய்ட்ஸினால் இறந்துபோகிறார்கள், அவர்களுடைய விதவைகளும் எச்ஐவி பாசிடிவாக இருக்கிறார்கள்.

சில பெண்கள் தங்களுக்குள் சுரக்கும் இயற்கையான திரவத்தை குறைக்கும்படியாக உடலுறவுக்கு முன்பு தங்களுக்குள் கீரைகளை வைத்துக்கொள்ளும் "வரண்ட உடலுறவு " முறை எச்ஐவி பரவுவதை அதிகரிக்கிறது. ஆனால் பெண்ணுருப்பின் திரவம் எப்படி உருவாகிறது, அவர்கள் மீது பெண்ணின் ஆசை அதிகரிக்கும்போது அதுவும் எப்படி அதிகரிக்கிறது என்பதை ஆண்கள் புரிந்துகொண்ட பிறகு, அவர்கள் வரண்ட உடலுறவை முற்றிலுமாக நிறுத்திவிடுகிறார்கள்.

வருமுன்காக்கும் அணுகுமுறைகளில் எச்ஐவி பரவுவதை தடுக்கும்படியாக பரிசோதனைகளின் வல்லமையை சேர்த்துக் கொள்ளவேண்டும், ஏனென்றால் இது மக்கள் தங்கள் நடத்தைகளை மாற்றிக் கொள்ளவும் அதன் விளைவாக சிகிச்சையை அணுகும் முறையையும் மாற்றியமைக்கும்.

எச்ஐவியோடு பிறக்கும் குழந்தைகளின் அபாயத்தையும் குறைக்க நாம் போதிக்க வேண்டும்.

எந்த பாதுகாப்பு முறை சிறந்து வேலைசெய்கிறது?

எந்த பாதுகாப்பு முறை சிறந்தது என்பதை நிரூபித்து காட்டுவது மிகவும் கடினமானது. ஆராய்ச்சி குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்காவது நடத்தப்பட வேண்டும், அதிலே ஒரேவகையான சமுதாய, கலாச்சார, மத மற்றும் இன பின்னணியைச் சேர்ந்த அநேக எண்ணிக்கையிலான மக்கள் சேர்க்கப்படவேண்டும்.

கென்யாவில் மனைவியை சொத்துரிமையாக பெற்றுக்கொள்ளும் முறைமையை நிறுத்துதல்

டாம் ஆனியாகோ, 32, தன்னுடைய முதல் மனைவி இறந்த பிறகு இரண்டாம் மனைவியை மணந்துகொள்ளும்படியாக வற்புறுத்தப்பட்டார். எச்ஐவி பெற்றுக்கொள்ளும் அபாயத்தில் மக்களை தள்ளக்கூடிய, மனைவியை சொத்துரிமையாக பெற்றுக்கொள்ளும் முறைமையை நிறுத்தும்படியாக இப்போது அவர் பிரச்சாரம் செய்துகொண்டு இருக்கிறார்.

மனைவியை சொத்துரிமையாக பெற்றுக்கொள்வது என்னவெனில் மனைவி இறந்துவிட்டால், மனைவியின் உறவுமுறையில் இருந்து கணவன் வேறொரு மனைவியை எடுத்துக்கொள்ளும்படியாக பணம் வாங்கிக்கொள்வார். கணவன் இறந்துபோனால், மூப்பர்கள் அவர்களுடைய ஜாதியில் இருந்து வேறொரு கணவனை தெரிந்தெடுப்பார்கள். மூப்பர்கள் ஒருவரின் பார்வையில் அந்த தம்பதியினர் உடலுறவு கொள்ள வேண்டும்.

இந்த முறைமை மக்கள் எச்ஐவியை பெற்றுக்கொள்ளும் அபாயத்தை அதிகரிக்கிறது, அதனால் தான் கென்யாவில் எய்ட்ஸுக்கு எதிரான ஆண்களின் இயக்கம் (Movement of Men Against AIDS in Kenya (MMAAK)) இதைக் குறித்து ஏதாகிலும் செய்யும்படியாக செயல்பட்டு வருகிறது.

MMAAK™-ல்டாம் தன்னார்வத்தொண்டராக இருக்கிறார். அவர் கிசிமுவின் வெளிமாகாணங்களில் இருக்கும் கானோ/அங்கோலியாவில் இருந்து வருகிறார், இப்பகுதியில் மனைவியை சொத்துரிமையாக பெறுவது பொதுவான ஒரு சம்பவம். இது பெரும்பாலும் வறுமையின் காரணமாக ஏற்படுகிறது, டாம் இதற்கொன்றும் விதிவிலக்கு அல்ல. டாமுடைய முதல் மனைவி நோய்வாய்பட்டு பரிசோதனையில் எச்ஐவி பாசிடிவாக இருந்தார். அவருக்கு அந்த வைரஸ் இருக்கிறது என்பதை டாமிடம் சொல்லாமல் இறந்துவிட்டார்-சில ஆண்டுகளுக்கு பின்பு அவருடைய மனைவியின் சகோதரி அதை அவரிடம் கூறினார்.

'என்னுடைய மனைவியை அடக்கம்செய்தவுடன், மூப்பர்களும் என்னுடைய மனைவியின் உறவினர்களும், என்னுடைய மனைவியின் உறவுக்கார பெண்ணை, என்னுடைய புதிய மனைவியை திருமணம் செய்துகொள்ளும்படியாக கட்டாயப்படுத்தினார்கள். என்னுடைய கலாச்

சாரத்தின் காரணமாக நான் அதை செய்யவேண்டியதாக இருக்கிறது. ஆனால் அதில் எனக்கு விருப்பமே இல்லை" என்கிறார் டாம்.

அந்த திருமணம் சந்தோஷமானதாக இல்லை. டாமுடைய மனைவி அவரைவிட்டுச் சென்றுவிட்டார், மூன்றாவது மனைவியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று டாமிடம் கூறினார்கள். இம்முறை அவர் அதை எதிர்த்து தன்னுடைய விருப்பப்படிதான் ஒரு மனைவியை எடுத்துக்கொள்வேன் என்றார். இச்சமயத்தில், அவருக்கு எச்ஐவி பாசிடிவ் என்பதை அறிந்து கொண்டார். அவர் எங்கிருந்து அந்த வைரசை பெற்றுக்கொண்டார் என்று அறியவில்லை, ஆனால் மனைவியை சொத்துரிமையாக பெற்றுக்கொள்ளும் முறைமை அவரையும் மற்றவர்களையும் அபாயத்தில் தள்ளுகிறது என்பதை அறிந்து கொண்டார்.

'என்னுடைய வாழ்க்கையை என்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவர நான் முடிவுசெய்தேன். நான் ஒரு ஆதரவு குழுவுக்குச் சென்று என்னுடைய இப்போதைய மனைவி லிலியனை சந்தித்தேன், அவரும் ஒரு எச்ஐவி ஆலோசகர். மனைவியை சொத்துரிமையாக பெற்றுக்கொள்ளும் என்னுடைய அனுபவத்தில் இருந்து, மற்றவர்களும் இப்பாதையில் செல்வதை நான் விரும்பவில்லை-இவ்விடத்தில் இது மிகவும் சகஜமானது, இதை தவிர்க்க நான் உதவ விரும்பினேன், ஏனென்றால் இது எச்ஐவியின் தாக்கத்திற்கு மக்களை ஆட்படுத்தக்கூடியதாக இருக்கிறது. நான் இப்போது MMAAKவுக்காக பணிசெய்கிறேன், மனைவியை சொத்துரிமையாக பெற்றுக் கொள்கிறவர்களுக்கும், பழைய தவறான கலாச்சார முறைகளான மனைவியை சொத்துரிமையாக பெற்றுக்கொள்கிற முறைமையையும், இளம் திருமணங்களையும், கட்டாயத்திருமணங்களையும் எதிர்க்கிற ஒரு மூப்பர் குழுவுக்கும் பிரச்சாரம் செய்கிறேன்'

ஆதாரம் : CAFCO -www.cafod.org.uk

நீங்கள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறீர்கள் என்பதை பல அறிகுறிகளின் மூலமாக கற்றுக்கொள்ளலாம், ஆனால் ஒரு முறைமை மற்ற முறைமையை விட சிறந்தது என்பதை நிரூபிப்பது ஏறத்தாழ சாத்தியமற்றது. அலுவலக மொழி 'ஆதாரங்கள் அடிப்படையிலான' முறைகள் என்பதில் இருந்து 'ஆதாரங்கள்-அறிவிக்கும்' முறைகள் என்று மாறிவிட்டது/ ஒரு வித்தியாசம் உருவாக்கப்பட்டுள்ளது என்று நீங்கள் காண்பிக்க முடிந்தாலும், வித்தியாசங்கள் அனைத்தும் உங்களுடைய நிகழ்ச்சியின் விளைவாக மாத்திரமே ஏற்பட்டுள்ளது என்று உங்களால் நிரூபிக்க முடியாது. இப்படிப்பட்ட காரியங்களில் நாம் தாழ்மையாக இருக்க வேண்டும்.

காப்புறை நிகழ்ச்சிகள் மதிப்பிடுவதற்கு எளிமையானவை, ஏனென்றால் ஆராய்ச்சியாளர்கள் உள்ளூர் காப்புறை விற்பனையையும், எச்ஐவி பாதுகாப்பு நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் அதில் ஏற்படும் மாற்றத்தையும் பார்க்க முடியும். உடலை விற்கிறவர்கள் எத்தனைப் பேர் இப்போது தங்களுடைய ஒவ்வொரு வாடிக்கையாளர்களிடமும் காப்புறையை உபயோகப்

படுத்துகிறார்கள் என்பதையும், பள்ளிகளில் இருக்கும் இயந்திரங்களில் இருந்து எத்தனை காப்புறைகள் எடுக்கப்படுகின்றன என்பதையும் பார்க்க முடியும். ஆனாலும் கூட, எத்தனை காப்புறைகள் உண்மையில் உபயோகப் படுத்தப்பட்டு உள்ளன என்பதையும், எவ்வளவு நன்றாக உபயோகப் படுத்தப்பட்டு உள்ளன என்பதையும் நிரூபிப்பது கடினம்.

பாதுகாப்பு வேலைசெய்கிறதா என்பதை எவ்வாறு மதிப்பிடுவது

ஒரு பாதுகாப்பு நிகழ்ச்சி வேலைசெய்கிறதா என்பதை கண்டறிய மறைமுகமான முறைகளை நாம் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, மாணவர்கள் இடையே இந்த முறை தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று ஆசிரியர்கள் நினைக்கிறார்களா என்று நீங்கள் அவர்களிடம் கேட்கலாம். இப்பாடங்கள வீட்டிலே விவாதத்தை எழுப்பியிருக்கிறதா என்பதை பெற்றோரிடம் நீங்கள் கேட்கலாம். எச்ஐவி பரிசோதனைக்குப் பிறகு மீண்டுமாக பேச வரும் இளைஞர்களின் அளவை நீங்கள் எண்ணலாம். நீங்கள் பரிசோதித்த எச்ஐவியை பற்றி கல்வி புகட்டிய கர்ப்பிணிப் பெண்களையும், ஆண்டிவைரல்களால் சிகிச்சை அளித்த நோய் பாதிக்கப்பட்ட தாயார்களையும் நீங்கள் கணக்கிடலாம். இப்போது தங்கள் வாடிக்கையாளர்களிடம் ஒவ்வொரு முறையும் காப்புறையை உபயோகிக்கிறோம் என்று கூறும் செக்ஸ் பணியாளர்களையும், சுத்திகரிக்கப்படாத ஊசியை பகிர்ந்துகொள்வதில்லை என்று கூறுகிற போதைப் பொருள் உபயோகிப்பவர்களையும் நீங்கள் கணக்கிடலாம்.

மாணவர்கள் எழுதப்பட்ட கணக்கெடுப்புகளை பூர்த்திசெய்யவைக்கலாம். அவர்களுடைய மனப்பாங்கு மாறிவிட்டதா, எதிர்காலத்தில் அவர்கள் வேறுவிதமாக நடந்துக்கொள்ளக்கூடுமா என்று அவர்களிடம் நீங்கள் கேட்கலாம். சில மாதங்களுக்குப் பிறகு உங்கள் கணக்கெடுப்புகளை மீண்டுமாக நீங்கள் செய்து அவர்களில் எத்தனைப்பேர் உண்மையில் அவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பதை கண்டறியலாம். எனினும், இளைஞர்கள் தங்கள் பாலுறவு செயல்பாட்டைக் குறித்தும், சட்டவிரோதமான போதைப்பொருள் உபயோகத்தைக் குறித்தும் உண்மையை சொல்வதில்லை என்பதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

பல மக்கள் உணர்வதைக் காட்டிலும் எச்ஐவி பாதுகாப்பின் தாக்கத்தை அளவிடுவது மிகவும் கடினமானதாகும்.

எச்ஐவி பணியில் தேசிய மற்றும் உள்ளூர் மூடநம்பிக்கைகளை எப்படி சமாளிப்பது

பல நாடுகளில் இருக்கும் மூடநம்பிக்கைகள், கலாச்சாரங்கள் மற்றும் தீவிரமான நம்பிக்கைகள் எச்ஐவி பரவும் வேகத்தை அதிகரிக்கலாம். இந்தியாவிலும் ஆசியாவின் மற்ற பகுதிகளிலும் போதகர்களிடம் எச்ஐவி உள்ளவர்களைக் குறித்த எதிர்மறையான மனப்பாங்கு இருக்கிறது. நைஜீரியாவிலும் காங்கோ ஜனநாயக குடியரசிலும் எய்ட்ஸ் எச்ஐவியினால் உண்டாகும் நோய் அல்ல அது ஒரு சூனியக்கார மருத்துவரின் சாபத்தினால்

உருவானது என்று பல மக்கள் நம்புகிறார்கள். உகாண்டாவில் பல பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட வயதை உடைய எல்லா இளைஞர்களையும் ஒரே பொதுவான கத்தியைக் கொண்டு விருத்தசேதனம் (ஆணுறுப்பின் தோலை நீக்குதல்) செய்யும் பழக்கம் இருக்கிறது. கென்யாவில், (எய்ட்ஸினால்) இறந்தவர்களின் உறவினர்கள் பல நேரங்களில் விதவைகளை சொத்துரிமையாகப் பெற்றுக்கொள்கின்றனர். போதகர்கள் இதைக் கூர்ந்து கவனித்து தங்கள் சொந்த சமுதாயத்தின் சூழலை நிர்ணயித்து எச்ஐவியை பரவுவச்செய்யும் பழக்கங்களுக்கு எதிராக பேசவேண்டும்.

கலாச்சார பிரச்சனைகளை எவ்வாறு அணுகவேண்டும்:

- ❒ உண்மையான -அச்சங்களையும் கவலைகளையும் புரிந்து கொள்ள வேண்டும்
- ❒ உள்ளூர் பாரம்பரியத்துக்கும் கலாச்சாரத்துக்கும் அதிக மரியாதை கொடுக்க வேண்டும், அதே நேரத்தில் உதவாத தீய செயல்களுக்கு சவால்விடும் தைரியமும் பெற்றிருக்க வேண்டும்.
- ❒ மற்ற வழிகளில் செயல்முறை உதவிகளை கொடுப்பதன் மூலமாக நம்பிக்கையை வெல்ல வேண்டும்.
- ❒ உங்கள் விவாதத்தை பெலப்படுத்தும்படியாக மரியாதைக்கு உரிய வேறு ஒரு அதிகாரம்படைத்த நபரை உபயோகிக்கவும்.
- ❒ தெளிவான, எளிதான உண்மைகளை எடுத்துச்சொல்லுங்கள்- அவசரநிலையையும் நெருக்கடியையும் விவரியுங்கள்.
- ❒ மனப்பாங்குகளும் புரிந்துகொள்ளுதல்களும் மாறும்வரை தொடர்ந்து உரையாடல்களில் ஈடுபடுங்கள்.
- ❒ குறைந்தகால பரிசோதனை/செய்முறையைக் கொடுங்கள்.
- ❒ பணிவான முதல் அடியை ஏற்றுக்கொள்ளுங்கள்.

எச்ஐவிக்கான கிறிஸ்தவர்களின் பதிலில் காப்புறையும் பங்கு வகிக்கலாம்

கலாச்சாரங்களும் பாரம்பரியங்களும் அதிகமாக வேறுபட்டு இருக்கலாம், ஆனால் தவிர்த்தலையும் உண்மையாயிருத்தலையும் சேர்த்து, காப்புறை உபயோகிப்பதன் மூலமாக உயிர்களை காக்கும் பரந்த ஆரோக் கிய செய்தியை பரப்புவதில் திருச்சபை நேர்மறையான, மும்முரமான செயல்பாட்டில் ஈடுபடலாம்.

கிறிஸ்தவர்களுக்கு, எச்ஐவி உடைய ஒருவரது வாழ்க்கைத் துணையின் உயிரைக் காக்கும் நோக்கத்தில் காப்புறையை உபயோகிப்பதில் எவ்விதமான கட்டுப்பாடும் இருக்கக்கூடாது.

பல பரிசோதனைகளில் இருந்து நாம் அறிந்தபடி ஒருவர் எச்ஐவி பாசிடிவாக இருந்து மற்றவர் பாதிக்கப்படாமல் இருக்கும் தம்பதிகள், பல ஆண்டுகள் மற்ற துணையை பாதிக்காமல் பாதுகாப்பாக உடலுறவு

வைத்துக்கொள்ளலாம் (அவர்கள் ஒவ்வொருமுறையும் கவனமாக காப்புறையை பயன்படுத்தும்போது). ஆனால் காப்புறைகள் மற்ற சூழ்நிலைகளிலும் செயல்படுவதை பல திருச்சபைகள் அங்கீகரிக்கின்றன.

காப்புறைகள் எச்ஐவி அபாயத்தை 95 சதவிகிதம் வரை குறைக்க முடியும் சந்தேகத்துக்கு இடமில்லாமல் காப்புறை கோடிக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையை காப்பாற்றி உள்ளது. காப்புறைகள் மேலும் பல உடலுறவால் பரவும் வியாதிகள், கழுத்து புற்றுநோய் ஆகியவற்றின் அபாயத்தையும் குறைக்கின்றது, பிறப்பை கட்டுப்படுத்தும் முறையில் முக்கியமானதாகவும் செயல்படுகின்றது.

காப்புறைகள் நல்ல பாதுகாப்பை அளித்தாலும், சில நேரங்களில் அவை தோல்வியடையலாம், ஒவ்வொரு முறையும் காப்புறை உபயோகப்படுத்தப்பட்டும் வருடந்தோறும் நூற்றில் ஒருசில பெண்கள் கர்ப்பந்தரிக்கிறார்கள் என்பதை அறிவோம். பயன்பாட்டின்போது மக்கள் இருட்டிலே அதை அணிந்துகொள்வதால் அவை கிழிந்துபோகலாம். அவை மோசமான தரமுடையதாகவோ, பழைய சரக்காகவோ அல்லது உஷ்ணத்தினால் கிழிந்துபோகவோ வாய்ப்பு இருக்கிறது. காப்புறைகள் கவனமாக உபயோகிக்கப்பட்டால் எச்ஐவி தாக்கத்தையோ அல்லது கர்ப்பந்தரிப்பதையோ 95 சதவிகிதம் வரை குறைக்கலாம் என்று ஆராய்ச்சிகள் தெரியப்படுத்துகின்றன.

200 கோடிபேர் ஒரு நாளைக்கு 200 ரூபாய்க்கும் குறைவாக சம்பாதிக்கிறார்கள், 100 கோடிபேர் தினமும் பட்டினியால் வாடுகிறார்கள். இப்படிப்பட்ட தேசங்களில் காப்புறைகளின் விலை ஒரு சவாலாகவே இருக்கிறது. குறைந்த வருவாய் தேசங்கள் தேவைப்படுவோர்க்கு எல்லாம் அவற்றை கொடுக்கமுடியாத நிலையில் இருக்கின்றன. தானம் செய்கிறவர்கள் போதுமான அளவுக்கு அவற்றை கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள், கோடிக்கணக்கானோர் ஒவ்வொரு முறையும் உடலுறவு வைத்துக்கொள்ளும்போது புதிய காப்புறையை வாங்க இயலாதவர்களாக இருக்கிறார்கள்.

ஆகையால், எச்ஐவி அபாயத்தில் இருக்கும் அனைவரும் காப்புறை உபயோகிக்க வேண்டும் என்று அரசாங்க பணியாளர்கள் பதிலளிப்பது நடைமுறைக்கு சாத்தியமானதாகவும் இருக்காது, நிலையானதாகவும் இருக்காது. நாம் பார்த்தபடி, ஒவ்வொரு நபரின் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு வருமுன் காக்கும் செய்திகளோடு மற்ற காரியங்களும் சேர்க்கப்பட வேண் டும்.

காப்புறைகள் கிடைக்கக்கூடிய, வாங்கக்கூடிய, நாடுகளிலும் இருக்கும் பெரிய பிரச்சனை, பல கலாச்சாரங்களில் தன்னுடைய கணவனை ஆணுறை உபயோகிக்கும்படி அறிவுறுத்தும் பெண் கொடூரமாக அடிக்கப்படுவாள் என்பதுதான். கணவனும் இதை மனைவியினிடத்தில் கூறுவதற்கு நினைக்கவும் முடியாத சூழ்நிலையில் இருக்கிறார், ஏனென்றால் தான் உண்மையுள்ளவனாக இல்லை என்பதை ஏற்றுக் கொள்ளும் விதமாகவும் அது அமைந்துவிடும்.

புகைபிடித்தல்- ஒரு உபயோகமான ஒப்பீடு

புருண்டியில் இருக்கும் திருச்சபை தலைவர்களிடம் காப்புறை பிரச்சனையைப் பற்றி விவாதித்தபோது, அந்த தலைப்பைக் குறித்து அவர்கள் மிகவும் சங்கடமாக உணர்ந்தார்கள் என்பது தெளிவானது. ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் இருக்கும் கத்தோலிக்க தலைவர்களைப் போலவே அவர்களும் காப்புறை உபயோகிப்பதை குறித்து தங்கள் சபையாரிடமோ அல்லது இளைஞர்களிடமோ கூறுவது அவர்கள் தவறான காரியங்கள் செய்ய ஊக்கப்படுத்துவதாக அமைந்துவிடும் என்று நினைத்தார்கள். சொல்லப்போனால், மதசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரசாங்க துறையினர் பரப்பி வந்த ஆணுறை செய்திகளுக்கு எதிராகவும் அவர்களில் பலர் பேசினார்கள்.

அவர்கள் புகைபிடிப்பதை அங்கீகரித்து இருக்கிறார்களா என்று கேட்டேன். அவர்கள் இல்லை என்றார்கள். ஒருவர் வடிகட்டி (பில்டர்) வைத்தோ அல்லது வைக்காமலோ இருக்கும் சிகரெட்டுகளை புகைபிடிக்கலாம், ஆனால் பில்டர் சிகரெட்டுகள் மிகவும் பாதுகாப்பானவை. அவை குறைவானவர்களையே கொல்கின்றன. எனவே அவர்களுக்கு புகைபிடிக்கும் நண்பர் ஒருவர் இருந்தால், அவர் பில்டர் சிகரெட்டுகளை புகைக்க ஊக்கப்படுத்தப்படுவாரா? அது எவ்வளவு பாதுகாப்பானது என்பதை விவரிப்பார்களா? அல்லது மக்கள் இன்னும் அதிகமாக புகைபிடிக்க அது ஊக்கப்படுத்துகிறது என்று நினைப்பார்களா? அவர்கள் ஆரோக்கிய அமைச்சராக இருந்தால், கடைகளில் பில்டர் சிகரெட்டுகள் மாத்திரமே விற்கப்படவேண்டும் என்னும் சட்டத்தை இயற்றுவார்களா?

அவர்கள் புகைப்பிடித்தலுக்கு எதிராக இருந்தாலும் இதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள், சிகரெட்டுகள் இன்னும் அபாயகரமானதாக இருப்பதை அவர்கள் விரும்பவில்லை, புகைப்பிடிப்பவர்கள் பில்டர் சிகரெட்டுகளை பயன்படுத்துவது மேலானது என்பதை அரசாங்கம் விளம்பரம் செய்வதை ஏற்றுக்கொண்டார்கள். ஆணுறை உபயோகிக்க பரிந்துரைக்கும் சூழ்நிலையும் அதேபோன்றதுதான் என்பதை நான் சுட்டிக்காட்டினேன். ஒருவர் எப்படி இருந்தாலும் ஆபத்தை எடுத்துக் கொள்ளப்போவதாக இருந்தால், அவர்களுடைய அபாயங்களைக் குறித்து எச்சரிக்கும் கடமை நமக்கு இருக்கிறதல்லவா?

பால் கபூங்கா, ACET உகாண்டாவின் இணை இயக்குநர், ஆணுறைப் பற்றியும் கிறிஸ்தவ செய்திகளைப் பற்றியும் மிகவும் கலக்கமடைந்து இருந்த ஒரு நைஜீரிய போதகர் குழுவைக் குறித்து சமீபத்தில் பேசினார். மக்களிடத்தில் காப்புறை குறித்து பேசவே அவர்களால் முடியவில்லை, அப்படிப்பட்ட விவாதங்கள் எப்போதுமே ஒழுக்கரீதியாக தவறானது என்று நினைக்கிறார்கள்.

ஆனால் அவர்களுடைய தலைமைக்குழு மற்றும் சபையினரில் 10 சதவிகிதம் அல்லது அதற்கும் மேற்பட்டோர் ஏற்கனவே எச்ஐவியோடு

வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள், மாதந்தோறும் அதிகமானோர் பாதிக்கப் படுகிறார்கள் என்பதையும் அறிவார்கள்.

பால் இவ்வாறாக விவரித்தார் : 'நைஜீரியாவில் இருக்கும் சபை(மற்ற நாடுகளைப் போலவே) திருமணத்துக்கு முன்பாக உடலுறவு கொள்ளுதல் தவறானது என்று போதிக்கிறது. திருமணத்தில் உண்மையில்லாமல் இருப்பது பாவம் (விபச்சாரம்). காப்புறை உபயோகித்து திருமணத்திற்கு முன்பாக உடலுறவு கொள்ளுதலும், விபச்சாரம் செய்வதும் பாவம்- ஆனால் அது எச்ஐவியினால் ஏற்படும் இறப்பை விளைவிப்பதை குறைக்கும். காப்புறை பற்றி பேசுவதினால் மக்கள் பாவம் செய்ய நீங்கள் அவர்களை ஊக்கப்படுத்துவது இல்லை. தீங்கை தவிர்ப்பது மற்றும் திருமணம் குறித்த சபையின் போதனைகளை நீங்கள் மாற்றவில்லை, மாறாக நீங்கள் உயிர்களை காப்பாற்றுகிறீர்கள்.'

அந்த போதகர்களும் தங்கள் மனதை மாற்றிக்கொண்டார்கள், தினந்தோறும் ஆபத்தில் ஈடுபடும் ஒரு சமுதாயத்திற்கான சரிசமமான கிறிஸ்தவ செய்தியில் காப்புறையும் பங்கு வகிக்க வேண்டும் என்பதை அங்கீகரித்தார்கள்.

கல்லூரி போன்ற உணர்வுபூர்வமான அமைப்பில் எச்ஐவி பாதுகாப்பு எவ்வாறு செயல்படும்? கிறிஸ்தவ அணுகுமுறை என்ன? பெரும் எண் ணிக்கையிலான மக்களை சிறப்பான முறையில் சென்றடைய முடியுமா? அடுத்த அதிகாரத்தில் நாம் இதைப் பார்ப்போம்.

அதிகாரம் 3

முழுமையான சமுதாயங்களையும் சென்றடைதல்

உலகின் பல பகுதிகளில், திருச்சபைகள் உருவாக்கியுள்ள எச்ஐவி தடுப்பு நிகழ்ச்சிகள் அதிகமான ஜனத்தொகையை சென்றடைந்துள்ளது. நன்றாக செயல்பட்டுள்ளவற்றைப் பற்றி ஊக்கமூட்டும் கதைகள் இங்கே இருக்கின்றன.

பள்ளிகளில் தடுப்புப்பணி ஏன் அவசரமும் முக்கியத்துவமும் வாய்ந்தது?

பள்ளிகளில் எச்ஐவி, பாலுறவு ஆரோக்கியம், அடிமைத்தனம் மற்றும் அது தொடர்பான பிரச்சனைகளை கற்றுக்கொடுப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். இளைஞர்களே பெரும் ஆபத்தில் இருக்கிறார்கள். அதிலே அநேகர் கல்லூரி பருவம் அல்லது அதற்கு சற்று பின்னதாக எச்ஐவியை பெற்றுக்கொள்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஒட்டுமொத்த புதிய தலைமுறை இளைஞர்களை சந்திக்க இதைவிட்டால் வேறு வழியில்லை.

உகாண்டாவில், கல்லூரி துவங்கும்போது வெகு இளம் பெண்களுக்கே எச்ஐவி இருந்தது, ஆனால் சமீபத்தில், 15 வயதை அவர்கள் அடையும் முன்னதாக ஐந்து பேரில் ஒருவர் எச்ஐவியைப் பெற்றுக்கொண்டுள்ளனர். அப்படிப்பட்ட பள்ளியின் தலைமை ஆசிரியராக நீங்கள் இருந்தால் எப்படிப்பட்ட அவசரநிலையாக அது இருக்கும்! எனவே, நிச்சயமாகவே, பள்ளிக்குச் செல்வது உகாண்டாவின் எச்ஐவி-தடுப்பு நிகழ்ச்சியின் முக்கிய பங்காக இருக்கும். எச்ஐவியைக் குறித்தும் பாலுறவு ஆரோக்கியம் குறித்தும் இருக்கிற பள்ளி பாடங்களே 15 வயதுக்கு உட்பட்ட இளம் பெண்களுடைய நோய்தாக்கத்தின் அளவும் 22 சதவிகிதத்தில் இருந்து 7 சதவிகிதமாக குறையக் காரணமாகும்.

சில நிறுவனங்கள் எப்படி பள்ளிகளை ஒதுக்கி வைக்கின்றன என்பதைப் பார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன். பள்ளிகளில் எச்ஐவி பாடங்கள் தேவையற்றது அல்லது பள்ளிகளே அவற்றை நிர்வாகித்துக்கொள்வார்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

இளைஞர்களை நாம் வேறு எப்படி கண்டுபிடிக்க முடியும்? தெருவில் நடந்துசென்றா? வீட்டிலா?

'நாங்கள் பள்ளியில் இருந்தபோது அவர்கள் எச்ஐவி குறித்து ஏன் அதிகமாக எங்களிடத்தில் கூறவில்லை? அதைக் குறித்து எங்களிடத்தில் பேச அவர்கள் ஏன் நேரம் செலவிடவில்லை? மிகவும் சங்கடமாக உணர்ந்த ஒரு ஆசிரியர் எங்களுக்கு உடலுறவு குறித்த ஒரு சிறிய செய்தியை மாத்திரமே கொடுத்தார்கள். இப்போது எனக்கு தெரிந்த காரியங்களை நான் அப்போதே அறிந்திருந்தால், ஒருவேளை நான் எச்ஐவியை பெற்றுக்கொண்டே இருந்திருக்க மாட்டேன்'

இப்படிப்பட்ட வழிகளினால் அல்லது வீணான பெரும் முயற்சிகளினால் நாம் கோடிக்கணக்கானோரை தவறவிடுவோம்- நாம் அவர்களை கண்டுபிடித்தாலும், எச்ஐவி தடுப்பிலே பங்கெடுத்துக்கொள்ளும்படி நாம் அவர்களை எவ்வாறு ஊக்கப்படுத்துவோம்? ஆம், சிலர் பள்ளியில் இருந்து விடுபடுகிறார்கள், ஆனால் பல நாடுகளில் இளைஞர்கள் பலர் ஒருங்கிணைக்கப்படும் பிரதானமான இடம் ஆகும். இங்கே துவங்குங்கள்.

பள்ளிகள் பாடம்கற்பிக்க ஏற்படுத்தப்பட்டு உள்ளன, எனவே எச்ஐவியை ஒரு பாடத்திலோ அல்லது பாடதிட்டத்திலோ இணைப்பது சுலபமானதும், மலிவானதாகவும் இருக்கின்றது. வகுப்புகள் ஒழுங்குசெய்யப்பட்டால், மாணவர்கள் பங்குபெற்றாக வேண்டும். சிறப்பு கல்வியாளர்கள் பள்ளிகளுக்கு விஜயம் செய்து மாணவர்களுடன் நேரம் செலவிடலாம், அதே நேரத்தில் ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கலாம், அதன்மூலமாக எச்ஐவி கல்வி பள்ளியின் பாடதிட்டத்தில் ஒரு பகுதியாக மாறிவிடும். உரையாடல்களை பின்தொடர ஆசிரியர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது, அதன்மூலமாக எச்ஐவி தடுப்பை போதிக்க தாங்களே விரைவாக கற்றுக்கொள்ளலாம்.

நிச்சயமாகவே, ஒரே ஒரு மணிநேர பாடம் பல உயிர்களை காப்பாற்றுவது சாத்தியமற்றது. இது ஒரு பெரிய, தொடர்ச்சியான பள்ளி விழிப்புணர்வு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாகவோ, வானொலி, டிவி, கைப்பிரதிகள், சுவரொட்டிகள், சமுதாயப்பணியாளர்கள், பெற்றோர்கள், சபைத் தலைவர்கள் மற்றும் பலரை உள்ளடக்கிய ஒரு தேசிய நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால் பள்ளியில் பணிசெய்யும் வாய்ப்பை தவறவிடுவது மிகவும் குறுகிய கண்ணோட்டமாகவும், முட்டாள் தனமானதாகவும் இருக்கும். இதன் விளைவாக பல இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையை இழந்துபோகலாம். எனவே நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

எச்ஐவி தடுப்பின் மூலமாக கல்லூரி மாணவர்களை எவ்வாறு சென்றடைவது

இளைஞர்களுக்கு உடலுறவைக் குறித்தும் போதனையைக் குறித்தும் கற்பிக்கும்போது கருத்தில்கொள்ளவேண்டிய காரியங்கள் இதோ. இந்த அணுகுமுறை பெரும்பாலான சபைகளாலும், மிகவும் பிரபலமான பள்ளிகளாலும் வரவேற்கப்பட்டுள்ளது. அது ஆப்பிரிக்கா, ஆசியா,

அமெரிக்கா, மேற்கு, மத்திய மற்று கிழக்கு ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய எல்லா இடங்களிலும் வரவேற்கப்படுகின்றது. இது மற்ற எல்லா ஆரோக்கிய விளம்பரத்திலும் எவை செயல்படும் என்கிற பல ஆண்டுகளான நோய்தடுப்பிலே இருக்கிற எங்களுடைய அனுபவத்தினாலான அறிவின் அடிப்படையிலானது. இது தினசரி வாழ்க்கையின் உண்மைகளின் அடிப்படையிலும் அமைந்து இருக்கிறது. பொதுவான கருத்துக்களின் அடிப்படையிலான வகுப்புகளில் பல கோடி கல்லூரி மாணவர்கள் பங்கெடுத்து உள்ளனர், ACET போன்ற பல கிறிஸ்தவ நிறுவனங்களாலும், பல மதசார்பற்ற நிறுவனங்களாலும் இவை நடத்தப்படுகின்றன.

அதிகமான இளைஞர்கள் பங்குபெறுவதால் கல்லூரி பணிசெய்வதற்கு சிறந்த இடமாக இருக்கிறது, பெரும்பாலான பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்கள் ஆரோக்கிய வாழ்வைக் குறித்து கேட்கவேண்டும் என்று விரும்புகிறார்கள், கல்லூரிகள் இவற்றை உங்களுக்காக ஒழுங்குபடுத்துவார்கள். வேறு எந்த வழியிலும் ஆயிரக்கணக்கான இளைஞர்களை, இவ்வளவு விரைவாக, இவ்வளவு மலிவாக சென்றடவது சாத்தியமற்றது ஆகும்.

பள்ளி பணியாளர்களுக்கு பணிசெய்வது

செக்ஸ் ஆரோக்கியம் குறித்தும் எச்ஐவி தடுப்பு குறித்தும் எவ்வாறு போதிக்கப்பட வேண்டும் என்னும் வலிமையான எண்ணங்களை உடைய உணர்வுபூர்வமான இடத்திலே பள்ளிகள் பணிசெய்கின்றன. இது நாடுகள், இடங்கள், சமுதாயங்கள் மற்றும் பள்ளிகளுக்கிடையே வித்தியாசப்படும்.

பள்ளிகளுக்கு போதிப்பவர் பள்ளியின் பணியாளராகவும், வகுப்பு அறையின் விருந்தினராகவும் ஆசிரியரின் அழைப்பின் பேரிலே அங்கே இருக்கிறார். சொல்லப்படவேண்டிய தலைப்புகள், முறைகள் மற்றும் பொதுவான அணுகுமுறை ஆகியவை முன்னமே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். பெரும்பாலான நாடுகளில் இருக்கும் பெரும்பாலான பள்ளிகள் ஒரே காரியங்களையே எதிர்பார்க்கின்றனர், ஆனால் கலாச்சாரத்திற்கு ஏற்றபடி வித்தியாசமான முறையில் வெளிப்படுத்தப்படுகின்றன.

உங்களுடைய கண்ணோக்கம் எதுவாக இருந்தாலும், நீங்கள் எதை போதிக்க விரும்பினாலும், தலைமை ஆசிரியர் அனுமதிக்கும் காரியங்களை மாத்திரமே செய்ய கட்டுப்படுத்தப்படுவீர்கள். பாலுணர்வு மற்றும் போதை மருந்துகள் பற்றி பேசப்படுகின்றவை பெற்றோர்களினால் தலைமை ஆசிரியர் அதிகமாக தாக்கம் பெருகிறார்கள். எனவே அவர்களுடைய கலாச்சாரம், தேவைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு மிகவும் உணர்வுள்ளவர்களாக இருந்து அவர்களால் வழிநடத்தப்பட வேண்டும்.

உறவுகளைக் குறித்து உதவிகரமான முன்மாதிரிகள்/ போதனைகளை பெற்றோர்கள் விரும்புகிறார்கள்.

தங்கள் குழந்தைகள் சந்திக்கும் ஆபத்துக்களை குறித்து பெரும்பாலான

பெற்றோர்கள் மிகவும் கவலையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆப்பிரிக்காவிலும், ஐரோப்பாவிலும், லத்தீன் அமெரிக்காவிலும், மத்திய கிழக்கிலும் வேறு எந்த இடத்திலும் இப்படித்தான் தங்கள் குழந்தைகள் பொறுப்புள்ள தெரிந்தெடுப்புகளை தைரியமாக எடுப்பதற்கும், ஆரோக்கியமான, பாதுகாப்பான மற்றும் நீண்ட வாழ்க்கையை பெற்றுக் கொள்வதற்கும் பள்ளியிலே நல்ல முன்மாதிரிகள் இருக்கவேண்டும் என்று பெற்றோர்கள் விரும்புகிறார்கள். நீண்ட கால உறவு, குடும்ப வாழ்க்கை, சுய கட்டுப்பாடு மற்றும் சரியான நபருக்காக காத்திருப்பது ஆகிய கருத்துக்களின் அடிப்படையில் செக்ஸ் ஆரோக்கியம் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

என்னுடைய அனுபவத்திலே, பெரும்பாலான உயர் நிலைப்பள்ளி [illegible] ஆசிரியர்கள் ஆணுறைகளைப் பற்றி பேசக் கூடாது (அதை மற்றவர்கள் அழுத்தமாக கூறலாம்), மற்றபடி இந்த பரந்த கருத்தின்படியே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆணுறை பற்றி நீங்கள் பேசவில்லை என்றால் மாணவர்கள் உங்களை அசட்டை செய்யலாம், நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் அதிகமாகவே அவர்களுக்குத் தெரியும். எனவே அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் குறித்து பேசுங்கள். நோய் பாதிப்பின் அபாயத்தை ஆணுறையால் குறைக்க முடியும் என்னும் உண்மையை சொல்வதற்கு நீங்கள் அறியாமையாக இருப்பதற்காகவும், ஆர்வமில்லாமல் இருப்பதற்காகவும், வெட்கப்படுவதற்காகவும் நீங்கள் முதுக்குக்குப் பின்னால் கேலிசெய்யப்படலாம்.

இளைஞர்கள் குடித்திருக்கும்போதும், போதையின் கட்டுப்பாட்டில் இருக்கும்போதும், எல்லா ஆரோக்கியச் செய்திகளையும் மறந்து உடலுறவு ஆபத்துகளை எடுத்துக்கொள்கிறார்கள். நீங்கள் போதையில் இருந்தால், ஆணுறை உபயோகிக்க வேண்டும் என்று நீங்கள் முடிவு செய்து இருந்தாலும், அதை உபயோகிக்க அக்கறையற்றவர்களாகி விடுகிறீர்கள். எனவே மது, போதைப்பழக்கம் மற்றும் செக்ஸ் நடத்தை ஆகியவற்றைக் குறித்து பேசுவது மிகவும் அவசியம் ஆகும்-ஒருவேளை புகையிலை குறித்தும் பேசலாம். 13 வயதில் இளைஞர்கள் புகைப்பிடிக்கத் துவங்கினால், இளம் வயதிலேயே அவர்கள் மதுவுக்கு அடிமையாகக் கூடும். புகைப்பிடிக்கும் பழக்கம் இருக்கிறவர்கள் சீக்கிரத்தில் கெனாபிஸ் என்னும் போதைப் பொருளையும் புகைப்பதற்கான சாத்தியம் அதிகமாக இருக்கிறது.

'நாங்கள் இன்னும் உயிரோடுதான் இருக்கிறோம், ஆனாலும் நாங்கள் இனி வாழ்க்கை வாழ்வதில்லை'

உருசியாவில் உள்ள ACET பணியாளர்கள் இந்த இதயக் குமுறலைப் பெற்றுக்கொண்டனர்.

என்னுடைய கடிதத்தை வெளியிடும்படியாக உங்களைக் கெஞ்சுகிறேன். எனக்கு 18 வயதாகிறது. என்னுடைய பெயர் ஓல்கா. இரண்டு வருடங்களுக்கு முன்பாக நான் எய்ட்ஸினால் நோய்வாய்ப்பட்டு எடுத்துவரப்பட்டேன். இப்போது நான் மருத்துவமனையில் இருக்கிறேன்.

பெரியவர்களாகிய நீங்கள் எங்களை ஏன் ஒரு தொட்டிக்கு அடியே தூக்கி எறிந்தீர்கள்? உடலுறவு, ஆபாசப்படம் மற்றும் போதையினால் எங்களை ஏன் தகர்த்து எறிந்தீர்கள்? நாங்கள் சிறு பிள்ளைகளாக இருந்தபோது எங்கள் தகப்பனார்கள் மற்றவர்களோடு எங்களை படுக்கைக்கு அனுப்பினார்கள். பிள்ளைகளாகிய எங்களுக்காக எங்கள் தாயார்கள் பணம் வாங்கிக் கொண்டார்கள். எங்களுடைய நோய்க்கும் மரணத்திற்கும் நீங்களே காரணம் !

பெரியவர்களாகிய நீங்கள் "சுதந்திரம்", "ஓய்வு" மற்றும் "களிப்பு" ஆகியவற்றை விரும்பினீர்கள். நீங்கள் ஆபாசப்படத்தை அங்கீகரித்தீர்கள், அதிகமான பணத்தை விரும்பினீர்கள். நீங்கள் சுதந்திர உறவுகளுக்காக வாதம்செய்தீர்கள், உங்கள் இச்சையை திருப்திசெய்யும் அனைத்தையும் செய்தீர்கள். ஆனால் நாங்கள் சாகிறோம் ! உண்மை அன்பு என்றால் என்னவென்றே எங்களுக்கு தெரியாது, எங்களுக்கு குடும்பம் இருக்காது, எங்களுடைய சொந்த பிள்ளைகள் இருக்கமாட்டார்கள்.

நாங்கள் இன்னும் உயிரோடுதான் இருக்கிறோம், ஆனாலும் நாங்கள் இனி வாழ்க்கை வாழ்வதில்லை. நீங்கள் எங்கள் குழந்தைப் பருவத்தையும் எங்கள் எதிர்காலத்தையும் சூறையாடிவிட்டீர்கள். தெருவிலே நான் வயதானவர்களை சந்திக்கும்போது எனக்கு விநோதமான உணர்வுகள் ஏற்படுகின்றன; அவற்றை என்னால் விவரிக்க முடியவில்லை. கோபம், எரிச்சல், பயம், பொறாமை, உதவியற்றநிலை, எதையும் மாற்றமுடியாத இயலாமை ஆகியவை இருக்கிறது. மிகவும் தாமதம். இளமையாக இருக்கும் எங்களுக்கு உண்மை காதல் என்றால் என்ன என்றே தெரியாது. "நாணம்", "ஒழுக்கம்" ஆகிய வார்த்தைகளை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. எங்கள் பள்ளிகளில் இருந்தும் எங்கள் வாழ்க்கையில் இருந்தும் இந்த வார்த்தைகளுக்கான அர்த்தம் மறைந்துபோய்விட்டது.

இவற்றின் அர்த்தம் உங்களுக்கு போதிக்கப்பட்டு இருக்கிறது, அதனால் தான் நீங்கள் 70, 80 மற்றும் அதற்கும் அதிகமான காலம் வாழ்கிறீர்கள். ஆனால் அத்தனை ஆண்டுகள் நாங்கள் வாழமாட்டோம் ! இளமையிலேயே மரித்துவிடுவோம் ! எதற்காக? ஏன்? என்னுடைய நான்கு நண்பர்கள், என்னுடன் பயின்றவர்கள், ஏற்கனவே மரித்துவிட்டார்கள். இளைஞர்கள் சவக்கிடங்குகளில் இருக்கிறார்கள். ஏற்கனவே நாங்கள் ஒருவரை ஒருவர் அடக்கம்செய்யத் தொடங்கிவிட்டோம்.

உங்கள் "பாதுகாப்பான உடலுறவு" குறித்து எங்களை ஏன் நீங்கள் எச்சரிக்கவில்லை? நாங்கள் வாழவிரும்புகிறோம். வெளிநாட்டில் செய்யப்பட்ட கார்களை ஓட்டிக்கொண்டு எய்ட்ஸினால் சாவதைக் காட்டிலும், நாங்கள் வயலில் கடினமாக உழைத்து ட்ராக்டர் ஓட்டுவோம். எச்ஐவியும் சிபிலிஸூம் எங்களுக்கு ஜலதோஷம்போல மாறிவிட்டது.

நாங்கள் சிறுவர்கள், குழந்தைகள் எப்படி பிறக்கும் என்பது எங்களுக்குத் தெரியாது. நாரைகள் கொண்டுவருகின்றன என்று நாங்கள் நினைத்தோம்.

உங்களுடைய தவறான பயன்படுத்துதலை அறியாமல் நாங்கள் சிறுவர்களின் கபடற்ற நிலையிலேயே இருந்திருந்தால் நலமாக இருக்கும்.

எங்கள் சார்பாக யாரும் உங்களை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லமாட்டார்கள். நீங்கள் உங்கள் கைகளால் எங்களை கொன்றுவிடவில்லையே. நீங்கள் எங்கள் வாழ்க்கையை கொஞ்சம் கொஞ்சமாக நிர்மூலமாக்கிவிட்டீர்கள், உங்கள் படங்களிலும், திரைப்படங்களிலும் எங்களைக் கொண்டுவந்தீர்கள். அதை எப்படி சுரங்க அறையிலே "பாதுகாப்பாக" செய்வது என்பதைப் பற்றி எங்களுக்கு பள்ளிகளிலே கற்றுக்கொடுத்தீர்கள், பின்பு மோசமான படங்களிலும் பத்திரிக்கைகளிலும் நடிக்கும்படியாக எங்களை நிர்பந்தம் செய்தீர்கள்.

இன்னும் நீங்கள் அதை நிறுத்திக்கொள்ளவில்லை. நீங்கள் தொடர்ந்து, எங்களைக் காட்டிலும் இளம் சிறுவர்களின் வாழ்க்கையை கெடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். உங்களுக்கு இதுவும் போதாதா? போதுமான பலிகள் இன்னும் ஏற்படவில்லையா?

என்னுடைய கையில் இருந்து சிகரெட்டை ஒருவர் எடுத்து, என்னுடைய ஊசிகளை பிடுங்கிக்கொண்டு, என்னுடைய உடலை மற்றவர்களுக்கு கொடுப்பதற்காக என்னை முகத்தில் அறைந்து, இந்த ஆபத்துக்களைப் பற்றி என்னிடத்தில் கூறியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். என்னை தொட்டியில் கீழ் இருந்து காப்பாற் றுவதற்கு சாத்தியமாக இருந்தபோது இதை மிகச் சுலபமாகச் செய்திருக்க முடியும். உங்களுடைய உதவி தேவைப்படுகிறவர்களுக்கு தயவாக உதவிசெய்யுங்கள். இந்த இளைஞர்களுக்காக பணிசெய்கிறவர்களுக்கு திறந்தமனதாக இருங்கள்."

ஓல்கா, க்ராஸ்னாடார் மாகாணம், உருசியா, 2001

பள்ளிகளில் பணிசெய்கிறவர்களின் ஞாபகப் பட்டியல்

உங்களுடைய பள்ளி விஜயங்கள் வெற்றிகரமானவையாக இருப்பதற்கு நீங்கள் செய்யக்கூடிய எளிய விஷயங்கள் சில இங்கே இருக்கின்றன:

➔ உங்களிடத்தில் இருந்து பள்ளிகளுக்கு என்ன தேவை என்று ஆசிரியர்கள் சொல்வதை கவனமாகக் கேளுங்கள்.

➔ உங்கள் தன்னார்வத் தொண்டர்கள் சுலபமாக புரிந்து கொள்ளக்கூடிய, இளைஞர்கள் சுலபமாக தொடர்புபடுத்திக் கொள்ளக்கூடிய தெளிவான, எளிமையான, தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பான, துல்லியமான பாடத்திட்டத்தை உருவாக்குங்கள்.

➔ அக்கறையில் ஈடுபடுவது மதிப்பையும் நம்பகத்தன்மையையும் உருவாக்கும். என்பதை நினைவில் கொள்ளுங்கள்-அது கல்வியாளர்களுக்கு சொல்லக்கூடிய கதைகளை கொடுக்கும், மக்களுக்கு அது எச்ஐவியை உண்மையானதாகவும், உங்களுடைய கரிசனை நிஜமானதாகவும் மாற்றும்.

➔ பொதுவான பேச்சுக்களை சிறிதாக வைத்துக்கொண்டு மக்கள் சந்திக்கும் உண்மையான பிரச்சனைகளில் பணிசெய்யுங்கள்.

➔ விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் குற்றப்படுத்துவதை எதிர்ப்பதிலும் மாத்திரம் கவனம் செலுத்தாமல், நடத்தை மாற்றத்தை ஊக்கப்படுத்துங்கள்.

➔ உங்கள் நேயர்களின் கருத்துக்களுக்கு எப்போதுமே மரியாதை கொடுத்து, அவர்களோடு நேரம் செலவிட்டு உறவையும் நம்பிக்கையையும் வளருங்கள்.

➔ எளிமையான கேள்விகளை உபயோகித்து அறிவை பரிசோதித்து படிக்க உதவிசெய்யுங்கள்-பாடத்தின் போது இளைஞர்கள் அவற்றை பூர்த்திசெய்து, எடுத்துச் செல்லலாம்.

➔ வீடியோக்கள், சிலைடுகள் மற்றும் சுவரொட்டிகள் போன்ற வித்தியாசமான மக்கள் தொடர்பு சாதனங்களை உபயோகப்படுத்துங்கள். உங்களுடைய கலாச்சாரத்தில் எது சிறந்து செயல்படும் என்பதை கண்டுபிடியுங்கள்,உங்களிடத்தில் இருக்கும் குறைந்த ஆதாரங்களை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

➔ நாடகங்கள் மற்றும் ஆக்கப்பூர்வமான பயிற்சிவகுப்புகள் ஆகியவை மிகவும் களிப்பூட்டுவதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கலாம், ஆனால் அதிகமான குழு நேரத்தை அவை விரையமாக்கும். பெரிய குழுக்களை சந்திக்க அப்படிப்பட்டவை உபயோகமாக இருக்கலாம்.

➔ எச்ஐவி வருமுன் தடுப்பதை மற்ற வாழும் கலைகளோடு இணைத்துவிடுங்கள்.

➔ பள்ளி முழுவதும் செய்தியை பரப்புவதற்கும் ஆதரவை கொடுப்பதற்கும் மூத்த மாணவர்கள் சிலரை உடன் கல்வியாளர்களாக பயிற்றுவிப்பதைக் குறித்து சிந்தியுங்கள்.

➔ நீங்கள் எதைச் செய்வதாக ஏற்றுக்கொண்டீர்களோ சரியாக அதையே செய்யுங்கள்.

➔ உங்களோடு தனிமையில் தனிப்பட்ட காரியங்களை பேச விரும்பும் மாணவர்களுக்காக வகுப்பு நேரத்தின் இறுதியில் தயாராக இருங்கள். நீங்கள் எப்படிப்பட்ட உரையாடலில் ஈர்க்கப்படுவீர்கள், குறிப்பாக நீங்கள் தனிமையாக எதிர் பாலினத்தவரோடு பேசவேண்டியதாக இருந்தால் என்ன சொல்வீர்கள் என்பதை குறித்து ஞானமாக இருங்கள்.அப்படிப்பட்ட சூழ்நிலையில் வேறு யாரை நீங்கள் கொண்டு வரலாம் என்பதைக் குறித்து யோசியுங்கள்.

➔ சில மாணவர்கள் இரகசியமாக எச்ஐவிக்கு தங்களை பரிசோதித்துக்கொள்ள முன்வர எதிர்பாருங்கள்.

➔ ஆசிரியர்கள் எப்போதுமே வகுப்பறைகளில் இருக்கும்படியாக கூறுங்கள் அதன் மூலமாக

அ) வருங்காலத்தில் தாங்களே அந்த வகுப்புகளை எப்படி எடுப்பது என்பதில் பயிற்சி எடுத்துக்கொள்ள

ஆ)பாதுகாப்பு : ஆசிரியர்கள் பேசப்படுவது மற்றும் செய்யப்படுவது அனைத்தையும் பார்க்கிறதினால்,மாணவர்களால் எத்தகைய கூச்சமூட்டும் கதைகளும் திரித்துக்கூறமுடியாது;

இ)தொடர்ச்சி : பாடத்தின் போது நிகழ்ந்தவற்றை குறித்த முக்கியச் செய்திகளை ஆசிரியர் நினைவூட்டலாம்;

ஈ)மதிப்பீடும் பொறுப்பும் - பாடத்தை குறித்த கருத்துக்களையும் கண்ணோட்டங்களையும் ஆசிரியர்கள் தெரிவிக்கலாம்.

- கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முக்கியத்துவமாக எடுத்துக்கொண்டு, முற்போக்காக செயல்படும் நோக்கத்துடன் இருங்கள்.
- உங்களுடைய நிகழ்ச்சிகளைக் குறித்து மற்ற பள்ளிகளுக்கும் தெரியப்படுத்துங்கள்.

மூன்னவர்களாக நன்கு ஆயத்தமாக இருங்கள்

சிறு பிள்ளைகளும் கூட தங்கள் பெரிய அண்ணன் மற்றும் அக்காக்களிடம் இருந்தோ அல்லது மாணவர்களிடமிருந்தோ, திரைப்படங்களில் இருந்தோ அல்லது டிவியில் இருந்தோ கற்றுக்கொண்டு தங்களுக்குள்ளே பேசிக்கொள்ளும் விஷயங்களைக் கேட்டு நீங்கள் அதிர்ச்சியடையலாம்.

சில நேரங்களில் நீங்கள் திட்டமிட்டதைக் காட்டிலும் மிகவும் இளம் வயத்திலேயே பாடங்களை ஆரம்பிக்கவேண்டியதாகிவிடும், அவர்கள் உயர்நிலைப்பள்ளியை அடைவதற்கு மிகவும் முன்னதாகவே, ஏனென்றால் சிறுபிள்ளைகள் உடலுறவைக் குறித்த முற்றிலும் பொய்யான அஞ்சத்தக்க காரியங்களை மனதில் வைத்திருக்கிறார்கள், அவற்றைக் குறித்த நேரடியான கேள்விகளைக் கேட்கிறார்கள். நீங்கள் மிகவும் உணர்வுபூர்வமான அணுகுமுறையைக் கையாள வேண்டும், பெற்றோராலும், ஆசிரியர்களாலும் நெருக்கமாக வழிநடத்தப்பட வேண்டும்.

எல்லா காரியங்களிலும் பள்ளியினால் வழிநடத்தப்படுங்கள்

பள்ளியில் பணிசெய்வது ஒரு வரம், நீங்கள் விருந்தினராக செல்கிறவர்களின் அனுமதி இல்லாமல் உங்கள் சொந்த நம்பிக்கைகளை பரப்பக்கூடாது. எனினும், மதம் அல்லது வாழ்க்கைத் திறன் வகுப்புகளைப் பொறுத்தவரையில் கல்வியாளர் ஆசிரியர் அல்லது மாணவரால் சொந்த கருத்தை கூறும்படியாக கேட்டுக் கொள்ளப்படலாம்-எடுத்துக்காட்டாக மரணத்திற்குப் பின்னான வாழ்க்கை குறித்த கிறிஸ்தவ நம்பிக்கை குறித்து கேட்கலாம்- தனிப்பட்ட கண்ணோட்டமாக திறந்த மனதோடு விவாதிக்கவும், வாக்குவாதம் செய்யவும் அனுமதிக்கப்படுமளவும் அது வேறு விஷயம். எல்லாவற்றிலும் அப்பள்ளியினாலும் ஆசிரியர்களாலும் வழிநடத்தப்படுவீர்கள். நீங்கள் கற்பனை செய்ததைக் காட்டிலும் அதிகமான சுதந்திரத்தை நீங்கள் பெற்றுகொள்ளக்கூடும், குறிப்பாக அப்பள்ளி திருச்சபையினால் நடத்தப்படும்போது.

தொடர்ச்சியான வாலிபர் கூடுகைகள், எச்ஐவி விழிப்புணர்வு குழுக்கள், உடன் ஆதரவு குழுக்கள் மற்றும் பள்ளிமுடிந்தவுடன் செய்யப்படும் வேறு வேலைகள் ஆகியவை அதிகமாக பள்ளி நிகழ்ச்சிகளுக்கு தேவைப்படும். பள்ளிகளின் அனுமதியோடு பல சமயங்களில் திருச்சபைகளினால் ஆதரவும் பொருளுதவியும் பெற்று பெரியோர்களின் மேற்பார்வையில் மாணவர்கள் இவற்றை நிகழ்த்த உதவலாம்.

தேசம் முழுவதிலுமான பள்ளி நிகழ்ச்சிகள்

சிறு குழுக்கள்- உள்ளூர் திருச்சபைகளோடும் மற்ற நிறுவனங்களோடும் சேர்ந்து செயல்பட்டால் தேசம் முழுவதையும் சென்றடைந்துவிடலாம். எடுத்துக்காட்டாக, ACET உருசியா 350 தன்னார்வத்தொண்டர்களையும் நூற்றுக்கணக்கான திருச்சபைத் தலைவர்களையும் பயிற்றுவித்து உள்ளனர்.

90 பட்டணங்கள் மற்றும் நகரங்கள் பள்ளிகளிலும், மற்றும் சிறைச்சாலை, வாலிபர் பணி மற்றும் போதை மறுவாழ்வு மையங்களிலும் பணிசெய்வோரை பயிற்றுவித்து இருக்கிறார்கள். அவர்களிடம் வெறும் ஐந்து சிறிய அலுவலகங்களே இருக்கின்றன. அதில் சம்பளம் வாங்கும் பணியாளர்கள் வெறும் பத்துபேர் மாத்திரமே இருக்கிறார்கள், அவர்களில் பலர் பகுதி நேரம் பணிசெய்கிறவர்கள். ஒவ்வொரு சபையும் தங்கள் வாலிபர் பணியாளர்களைக் கொண்டு செயல்படுவதால் அது சிறந்து செயல்படுகின்றது.இப்பணி 100க்கும் மேற்பட்ட பல்வேறு திருச் சபைகளினாலும் அதன் தலைவர்களாலும் சொந்தமாக்கிக்கொள்ளப்பட்டு, அவர்கள் தங்கள் சொந்த ஊழியமாகவே இதை செய்து வருகின்றனர்.

ACET உருசியா இந்த தரிசனத்தை பெலாரஸ், கசகிஸ்தான், தஜிகிஸ்தான், கிர்கிஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் பல நாடுகளுக்கு பரவச் செய்துள்ளது, அதோடு பல பணியாளர்களை பல நிறுவனங்களில் பயிற் றுவித்துள்ளது, இதன்மூலமாக பாதுகாப்பின் தாக்கம் வளர்கின்றது.

ஒவ்வொரு ஆண்டும் தன்னார்வத்தொண்டர்கள் ஆயிரக்கணக்கான மாணவர்களை சென்றடைந்து, மதிப்புமிக்க பயிற்சிகளை கொடுத்து, மாணவர்களிடமிருந்து கருத்துக்களை பெற்றுக்கொள்கின்றனர். அவர் களுக்கு ஆதரவும் தொடர்ச்சியான கூட்டங்கள், வருடத்துக்கு ஒருமுறை, பயிற்சிக்காகவும், எச்ஐவி செய்திகள் மற்றும் ஊக்கமளிப்புக்காகவும் தேவைப்படும், மேலும் அவர்கள் உள்ளூர் திருச்சபைகளில் நெருக்கமாக பணிசெய்யவும் கல்வியாளர் குழுவுக்கு ஆதரவு அளிக்கவும் உதவுகின் றனர்.

எளிய நிகழ்ச்சிகள் வேகமாக பரவுகின்றன

உங்கள் நிகழ்ச்சி எவ்வளவு எளிதாக இருக்கின்றதோ மக்களை பயிற்றுவிப்பதில் அது அவ்வளவு சுலபமாக இருக்கும். 1988ல், ஒரு மணிநேரம் செல்லக்கூடிய ஒன்று அல்லது இரண்டு பாடதிட்டங்களைக் கொண்டு ACET UK முழுமையான செக்ஸ் ஆரோக்கிய கல்வி நிகழ்ச்சியை உருவாக்கியுள்ளனர். இவை பரவலான வயது கூட்டங்களாலும், பள்ளி கலாச்சாரங்களினாலும் எளிதாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவை, அது மேலே கொடுக்கப்பட்டுள்ள உருசிய நிகழ்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

மாணவர்கள் பதில்களை நிரப்பி எடுத்துச்செல்லக்கூடிய வினா-விடையைக் கொண்டு இந்த நிகழ்ச்சியில் உருவாக்கப்பட்டுள்ளது, இவற் றில் அடிப்படையான எச்ஐவி உண்மைகள் இடம்பெற்றுள்ளன. சுய

மரியாதையை வளர்த்து, முடிவு எடுப்பதில் இளைஞர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும்படியாக ஊக்கப்படுத்துவதற்கான தெளிவு இதிலே இருக்கின்றது.

வெளி கல்வியாளர்கள் வருவதை ஆசிரியர்கள் விரும்புகிறார்கள், ஏனென்றால் வெளியாட்களோடு முக்கியமான காரியங்களை பேசும் போதும் மிகவும் திறந்த மனதோடும் சௌகரியமாகவும் பேசுகிறார்கள்.

கல்வியாண்டின் மேற்படியான 40 வாரங்களுக்கு கூடுதல் வகுப்பு பாடபொருட்களை தங்கள் சொந்த பாடங்களுக்காக உபயோகிக்கிறார்கள். பாடதிட்டங்கள் மற்றும் பல ஆதாரங்களுக்கான எடுத்துக்காட்டுக்களை www.acet-international.org <http://www.acet-international.org> ல் பாருங்கள்).

18 மாதங்களில் ஒரு தேசத்தை சந்திப்பது எப்படி?

பாதுகாப்பிலோ அல்லது கவனிப்பிலோ அதிகமான பேரை சென்றடைவதற்கான வேகமான வழி தன்னார்வத்தொண்டர்களையோ அல்லது பணியாளர்களையோ மற்ற நிறுவனங்களின் நிதி உதவியால் பயிற்றுவிப்பதே ஆகும். அதிகமானோரை பயிற்றுவிப்பதற்கான வேகமான வழி சிறந்த பயிற்சியாளர்களை பயிற்றுவிப்பதுதான், அவர்கள் மற்ற பயிற்சியாளர்களையும், அவர்கள் இன்னும் பலரையும் பயிற்றுவிப்பார்கள்.

1989ல் ரோமானியாவில் கம்யூனிசம் முடிவுக்கு வந்தது, சில வாரங்களுக்குள் ஒரு சோகம் வெளியானது : பல்லாயிரக்கணக்கான பெரியோரும் சிறியோர்களும் (முக்கியமாக மாநிலங்களில் உள்ள அனாதை விடுதிகளில்) தினந்தோறும் தொடர்ந்துகொண்டு இருக்கின்ற ஆபத்தான மருத்துவ செயல்பாடுகளின் மூலமாக எச்ஐவியால் பாதிக்கப்பட்டு இருந்தார்கள். புதிய அரசாங்கம் விரைந்து செயல்பட்டு இந்த சிகிச்சைகளை நிறுத்தும்படியாக ஒவ்வொரு மருத்துவரையும் செவிலியரையும் கேட்டுக்கொண்டனர். அவர்கள் உதவிக்காக UNICEFவோடு சேர்ந்து ACET UKவின் உதவியை நாடினார்கள்.

18 மாதங்களுக்குள் ஒட்டுமொத்த மருத்துவ மற்றும் செவிலிய பணியும் சந்திக்கப்பட்டு, அபாயம் நீக்கப்பட்டது. ACET அணுகுமுறை மிகவும் சுலபமானது. தங்கள் முதல் எச்ஐவி-பாதுகாப்பு மாநாட்டை புச்சாரெஸ்டில், 50 மூத்த மருத்துவர்களுக்கும் செவிலியர்களுக்கும் நடத்தினார்கள். மாநாட்டில் பாதிநேரம் இந்த 50 பேரும் தங்கள் பகுதிகளில் சிறிய குழுக்களை ஒழுங்குபடுத்துவதற்கு தயார்செய்வதில் செலவிடப்பட்டது.

இந்த மாவட்ட மாநாடுகள் சில வாரங்களுக்கு பின்னால் நடத்தப்பட்டது, ACET UK அணியினர் இவற்றில் ஒவ்வொன்றிலும் பங்கெடுத்தனர். இந்த ஐந்து மாநாடுகள் ஒவ்வொன்றிலும் மீண்டுமாக ஒருமுறை ஆரோக்கியச் செய்திகளோடு மேலும் ஐந்து நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்க திட்டமும் இடப்பட்டது. மேலும் சில வாரங்களுக்குப் பிறகு தேசம் முழுவதிலும் மேலும் 20-30 மாநாடுகள் நடந்தன, அவை மீண்டும் பல மாநாடுகளுக்கு வழிவகுத்தன. இரண்டு ஆண்டுகளுக்குள், ஒவ்வொரு மருத்துவரும்

செவிலியரும் பயிற்றுவிக்கப்பட்டார்கள்-அதன் தாக்கத்தோடு ஒப்பிட்டால் மிகக் குறைந்த செலவில், ACET யிடம் இருந்து மிகக்குறைந்த விஷயங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டனர்.

எல்லா சிறந்த பயிற்சிகளுக்கான அடித்தளமும் எச்ஐவி பாதுகாப்புக்கான அடித்தளத்தைப் போன்றே இருக்கின்றன (பக்கம் 53ல் பட்டியலிடப்பட்டு உள்ளது). எடுத்துக்காட்டாக, நம்முடைய நேயர்களின் தேவைகளை கற்பதன் மூலமாக துவங்க வேண்டும், அவர்கள் ஏன் இங்கு இருக்கிறார்கள், அவர்கள் என்ன கற்றுக்கொள்ள விரும்புகிறார்கள், அவர்கள் ஏற்கனவே புரிந்துகொண்டது என்ன, இந்த நிகழ்ச்சியின் இறுதியில் அவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்கள்-எதை எடுத்துக்கொள்வார்கள்.

ஆயிரக்கணக்கான மக்களை ஒன்றுதிரட்ட போதகர்களுக்கு பயிற்சி அளித்தல்

'பயிற்சியாளருக்கு பயிற்சியளியுங்கள்' நிகழ்ச்சியின் இன்னுமொரு எடுத்துக்காட்டு, இம்முறை நைஜீரியாவில். ஜூன் 2008, தேசத்தின் நடுவே 20 போதகர்கள் வாரம் முழுவதுமான பயிற்சியில் பங்குபெற்றனர். ஒவ்வொரு போதகரும் மற்றவர்களுக்கு பயிற்சி அளிப்பதிலும் தங்கள் மொத்த வேலைக்கு ஆள்சேர்ப்பதிலும் தங்களை அர்ப்பணித்துக்கொண்டனர். ஆறு மாதங்களுக்குள் ஒரு போதகர் மாத்திரமே 16,000 பேரை சிறிய மற்றும் பெரிய குழுக்களில் சந்தித்து வெற்றியடைந்தார், ஒரு தலைவர் குழுவுக்கு பயிற்சி அளித்து பின்னர் அவர்கள் மற்றவர்களுக்கு அச்செய்தியைக் கொண்டுசென்று, செய்தியைக் கேட்டவர்களை புதிய ஆதரவு மற்றும் பாதுகாப்பு குழுக்களையும், பள்ளி அணிகளையும் மேலும் பலவற்றையும் உருவாக்குவதன் மூலமாக இது சாத்தியமானது. பயிற்சி பொருட்கள் மற்றும் வேறு ஆதாரங்களைக் கொடுப்பதன் மூலமாக அவர்களுக்கு உதவிசெய்யப்பட்டது.

எங்கிருந்து பயிற்சி மற்றும் பாதுகாப்பு ஆதாரங்களை கண்டுபிடிப்பது

பயிற்சிக்கான ஆதாரங்கள் மிகவும் முக்கியமானவை, ஆனால், தயவுசெய்து, மற்றவர்கள் ஏற்கனவே செய்தவற்றை பார்க்காமல், நீங்களாகவே உங்கள் சொந்த பயிற்சி ஆதாரங்கள், அட்டவணைகள், பாடதிட்டங்கள், பவர்பாய்ன்ட் காட்சிகள் போன்றவற்றை உருவாக்காதீர்கள். நிச்சயமாகவே, உங்கள் சொந்த சூழ்நிலைக்கு ஏற்றபடியான பொருட்களையும் முறைகளையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும், ஆனால் 'சக்கரத்தை மீண்டுமாக' கண்டுபிடிக்கும்' அளவுக்கு வாழ்க்கை நீண்டதுமல்ல, வீணாக்கக்கூடியதும் அல்ல.

புதிய ஆதாரங்களை தயாரிப்பதில் அதிகப்படியான தலைமைத்துவ நேரம் ஆண்டுதோறும் வீணடிக்கப்படுகின்றது-வீட்டில் கவனித்துக் கொள்ளும் தன்னார்வத்தொண்டர்கள், போதகர்கள், குழந்தைகளிடம்

பணிசெய்கிறவர்கள், அல்லது பள்ளிப்பணியாளர்கள் ஆகியோரை பயிற்றுவிப்பதற்காக இருக்கலாம்.

இதே போன்ற வேலையைச் செய்யும் பணிகளை தொடர்புகொள்ளுங்கள்- முடிந்தவரை உங்கள் பகுதியிலேயே பாருங்கள். அவர்கள் என்ன பொருட்களை உபயோகிக்கிறார்கள் என்பதை பார்த்து நகல் எடுங்கள் அல்லது ஏற்றுக்கொள்ளுங்கள். எங்கே உரிமையாளருக்கான உரிமைக் குறிப்பு கொடுக்கப்பட வேண்டுமோ அங்கே கொடுங்கள், அதோடு ஒவ்வொரு ஆதாரத்திற்காகவும் நன்றி செலுத்துங்கள்.

எல்லா பயிற்சி பொருட்களும் காப்புரிமை அற்றதாக இருக்க வேண்டும்

சில நேரங்களில் நான் அற்புதமான பயிற்சி புத்தகங்களை பார்த்திருக்கிறேன், அவை உலகத்தரம் வாய்ந்ததாக, உருவாக்குவதற்கு காலம் எடுத்துகொண்டு, பணிதளத்திலே பரிசோதிக்கப்பட்டவை. ஆனால் அவை மற்ற நிறுவனங்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. கடவுள் கொடுத்த நேரமும் முயற்சிகளும் எப்படி வீணாகிப்போனது.

அதனால் தான் எய்ட்ஸைக் குறித்த உண்மை புத்தகத்தின் பல கோடிக்கணக்கான அதிகாரங்கள் இலவசமாக டவுன்லோட் செய்யப்படலாம் என்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், நீங்கள் படித்துகொண்டிருக்கிற புத்தகத்தின் 3,50,000 நகல்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்டுவிட்டன, அல்லது பதிப்புக்கான விலையில் மாத்திரமே விற்கப்பட்டன. மக்களின் விருப்பத்திற்கேற்ப உபயோகிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் இலவச அனுமதி கொடுக்கப்படுகிறது என்பதை நினைத்தும் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

வித்தியாசமான நோக்கங்களுக்காக-பொதுவான முறைகளில் பயிற்சி

நீங்கள் லேப்ரட்டரி பணியாளர்கள் அல்லது பள்ளி கல்வியாளர்கள், போதகர்கள் அல்லது ஆசிரியர்கள், வேதாகம மாணவர்கள் அல்லது வீட்டு கவனிப்பு உதவியாளர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்கலாம்- ஆனால் முக்கியமான கருத்துக்கள் ஒன்றாகவே இருக்கின்றன அவற்றை சுலபமாக ஏற்றுக்கொள்ளவும் செய்யலாம்.

- *உடன் வேலைசெய்ய முக்கியமான நபர்களை தெரிவு செய்யவும்- உங்கள் மிக முக்கியமான ஆதாரம். உங்களுடைய சிறப்பான பங்கு வகிப்பவர் யார், ஏன்? அவர்களை எப்படி கண்டுபிடிப்பீர்கள்? 200 பேருக்கு மேல் இருக்கும் சபைகளின் போதகர்களாக மற்ற சபைகளில் செல்வாக்கு உடையவர்களாக இருக்கலாமா. ஏற்கனவே இருக்கும் சபைகளின் தொடர்பின் மூலமாகவோ அல்லது முந்தைய நிகழ்ச்சிகளில் பங்குபெற்றவர்களின் மூலமாகவோ அப்போதகர்கள் சுலபமாக தொடர்புகொள்ளப்படலாம்.*
- *உங்கள் நோக்கத்தில் தெளிவாக இருங்கள், பயிற்சி பெறுகிறவர்கள் பயிற்சியைப் பின்பற்றி எதை சாதிக்க விரும்புகிறார்கள் என்பதையும் கேளுங்கள்.*

❒ அவர்களுக்கு ஏற்கனவே என்ன தெரியும் என்பதை முன்னதாகவே கண்டுபிடித்துவிடுங்கள், அதன்மூலமாக காரியங்களை மீண்டுமாக சொல்லி நேரம் வீணடிக்கப்படாமல் இருக்கலாம். தேவைப்பட்டால், குழுக்களை இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட துணை குழுக்களாக பிரித்துக் கொள்வதன் மூலமாக பங்குபெருகிறவர்களின் நிலைக்கு ஏற்றவாறு பயிற்சியை சரிசெய்துகொள்ளலாம்.

❒ பயிற்சி அளிக்கப்பட்டவுடன் ஒரு செயலை செய்வதற்கான அடிப்படை திறமைகளில் கவனம் செலுத்தவும், பின்பு தகுதிபெற்றவர்கள் அனைவரும் இதை அடைய உறுதி செய்யுங்கள்.

❒ மக்கள் மிகவும் பரபரப்பான வாழ்க்கை வாழ்கிறார்கள், எனவே பயிற்சியை எவ்வளவு சுருக்கமாக வைத்துக்கொள்ள முடியுமோ வைத்துக்கொள்ளுங்கள். இது செலவையும் குறைக்கும்.

❒ சாத்தியமானால், உங்கள் பயிற்சிகள் மேல் அதிகாரிகளின் அங்கீகரிப்பைப் பெற உறுதிசெய்யுங்கள் (எடுத்துக் காட்டாக,ஒரு கல்வி மையம்), இதன் மூலமாக நம்பகத்தன்மையையும், உயர்ந்த தரத்தை பெறவும் உதவுங்கள்.

❒ பயிற்சி முடிக்கிறவர்களுக்கு தனிப்பட்ட முறையில் கையெழுத்து இடப்பட்ட சான்றிதழ்களை கொடுங்கள், இதன் மூலமாக அவர்களுடைய தனிப்பட்ட நம்பகத்தன்மை வளர்ச்சியடையும், மேலும் ஈடுபடுகிறவர்களை கௌரவிக்க ஒரு வழியும் பிறக்கும்.

❒ பங்குபெறுகிறவர்கள் வைத்துக்கொள்ளும்படியான அருமையான பாடபுத்தகங்களை உருவாக்குங்கள், இதன் மூலமாக எல்லா நிகழ்ச்சிகளிலும் இதே உயர்ந்த தரம் காத்துக்கொள்ளப்படும்.

❒ புதிதாக பயிற்சி எடுத்துக்கொள்கிறவர்கள் ஆரம்பத்தில் அனுபவம் வாய்ந்த பணியாளர்களால் மேற்பார்வை இடப்படவேண்டும்.

❒ பயிற்சியின் மூலமாகவும், ஆலோசனை மூலமாகவும், சீஷத்துவத்தின் மூலமாகவும் தனிப்பட்ட ஊக்கம் என்பது முக்கியம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

❒ பங்குபெறுகிறவர்களை விவாதங்களில் கலந்துகொள்ளச்செய்யுங்கள், இதன் மூலமாக அவர்களுடைய சொந்த சிந்தனையும் வளர வாய்ப்பு இருக்கின்றது. அவர்களுக்கு போதித்துக்கொண்டு மாத்திரம் இருக்காதீர்கள்.

❒ தகவல் தொடர்பு சாதனங்களை உபயோகியுங்கள்- சுவரொட்டிகள், வினா-விடைகள் மற்றும் பல புகைப்படங்கள் மற்றும் வீடியோ துண்டுப்படங்கள் அடங்கிய பவர்பாய்ன்ட் காட்சிகள்.

❒ பயிற்சியின் முடிவிலே, அடுத்த சில வாரங்களில் ஒவ்வொரு நபரும் என்னென்ன செயல்களைச் செய்ய திட்டமிட்டு இருக்கிறார்கள் என்கிற ஒரு பட்டியலிடுமாறு கேட்டுக் கொள்ளுங்கள், நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் அவர்களுடைய நம்பிக்கை நிஜமாகும்படிச் செய்யுங்கள்.

- *சில வாரங்களுக்குள் பயிற்சிபெற்றவர்களை பின்தொடர் செய்யுங்கள், அவர்களுடைய சொந்த குறிப்பிட்ட நோக்கங்களில் முன்னேற்றம் ஏற்படுவதை உறுதி செய்யுங்கள்.*
- *சரியான இடைவெளிகளில் அவர்களை தொடர்புகொண்டு அவர்களுடைய முன்னேற்றத்தை கண்காணியுங்கள்.*
- *ஒவ்வொரு பயிற்சிபெறுகிறவரிடமும் ஒரு மதிப்பீட்டு படிவத்தைக் கொடுங்கள், நிகழ்ச்சியின் முடிவில் அவர்களுடைய கருத்துக்களைக் கொடுக்கச் செய்யுங்கள்,இதன் மூலமாக நிகழ்ச்சி மேம்படுத்தப்படலாம்.*

(ACET நைஜீரியா, ACET உக்கிரெய்ன் மற்றும் ACET உருசியாவில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது)

நகல்களை இலவசமாக கொடுக்கமுடியாது என்று பணித் தலைவர்கள் சொல்வதை என்னால் புரிந்துகொள்ள முடிகின்றது. நிச்சயமாகவே, உங்களுக்கு வேண்டுமானால் விலை நிர்ணயித்துக்கொள்ளுங்கள், ஆனால் தயாரிப்பதற்கும், தபாலுக்கும் ஆகும் செலவுகளை மாத்திரமே விலையாக வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் பெரிய அளவில் செய்யும்போது விலை மிகவும் மலிவாகவே இருக்கும் என்பதை நீங்கள் நினைவில்கொள்ளுங்கள். அதிகமான நகல்களை விநியோகிக்கப்படும்போது, ஒவ்வொரு நகலின் விலையும் குறையும். எடுத்துக்காட்டாக, ஆயிரம் நகல்கள் ஒரே நேரத்தில் இந்தியாவில் அச்சிடப்பட்டால், மூன்று புத்தகங்களுக்கான செலவு ஒரு U.S டாலர். அருமையான எச்ஐவி ஆதாரங்களை தயாரித்து விநியோகிப்பது உங்கள் ஊழியத்தின் முக்கிய பங்கு வகிக்கும். அது சுய உரிமை பெற்ற ஒரு பணியாகவே மாறிவிடும். பல ஆதரவாளர்கள் இப்படிப்பட்ட பணிகளுக்கு நிதி உதவி கொடுக்க விரும்புவார்கள் என்பதை நீங்கள் காணலாம், ஏனென்றால் அது எவ்வளவு முக்கியம் என்பது அவர்களுக்கு தெரியும்.

சில பணிகள் தங்கள் புத்தகங்களின் மூலமாக அவற்றை உருவாக்கியவர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும் என்கிறார்கள், ஆனால் அது உண்மை அல்ல, ஏனென்றால் அவர்களுடைய புத்தகங்கள் ஏற்கனவே எழுதப்பட்டுவிட்டன, எனவே ஒரே எதிர்கால செலவு தயாரிப்பு மாத்திரமே. வேறு பணிகள் தங்கள் புத்தகங்களின் லாபத்தைக் கொண்டு தங்கள் வருங்கால வேலைகளுக்கு நிதி திரட்டுவதாக சொல்கிறார்கள்- எனவே அவர்கள் ஒரு எச்ஐவி பணியில் இருந்து மற்றொன்றிற்கு உதவுகிறார்கள். இதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

சில பணித் தலைவர்கள் தங்கள் வேலைகளையும் சிந்தனைகளையும் மக்கள் திருடிவிடுவார்கள் என்று பயப்படுகிறார்கள். ஆனால் அதுதான் முழுமையான யோசனை. ஒருவரைப் பார்த்து

செய்வதே அவரைப் போற்றுவதற்கான சிறந்த வழிமுறை. நீங்கள் உருவாக்கிய சிந்தனைகளை எடுத்து கோடிக்கணக்கானோர் எச்ஐவி உடைய மக்களின் உயிரைக் காப்பாற்றவோ அல்லது சிறப்பாக கவனிக்கவோ பயன்படுத்தி, உலகம் முழுவதும் அவற்றை புதிய மேம்படுத்தப்பட்ட பணிகளாக மாற்றுவதைக் காட்டிலும் உற்சாகமளிப்பதாக வேறு எதுவும் எனக்கு தோன்றவில்லை. இருந்தாலும்-யார் அந்த வேலைக்காக செலவு செய்தார்கள்? உங்கள் நிகழ்ச்சிக்கு நிதி உதவி செய்தவர்கள் தானே. இந்த புத்தகம் யாருக்காவது உரிமையானது என்றால் அது உங்களுக்கு நிதி உதவி செய்தவர்களுக்குத் தான்.

இந்தியாவில் உள்ள எய்ட்ஸ் கூட்டமைப்பு, பயிற்சிப் புத்தகங்கள் செய்ய உதவுகின்றது

கிறிஸ்தவ எய்ட்ஸ்/ எச்ஐவி தேசிய ஒருங்கிணைப்பு (CANA) 1997ல் எய்ட்ஸில் ஈடுபட்ட கிறிஸ்தவ நிகழ்ச்சிகளின் தொடரமைப்பை உருவாக்கியது.

CANA விசுவாசம்-அடிப்படையிலான நிறுவனங்கள் விவாதம், தொடர்பு, எச்ஐவி அபாயத்தில் இருக்கும் குழந்தைகள், மதிப்பு-சார்ந்த கல்வி, மற்றும் சமுதாயத்தையும் சபையையும் சார்ந்த எச்ஐவி-தடுப்பு மற்றும் கவனிப்பு முயற்சிகளில் ஈடுபடும்படியாக ஊக்கப்படுத்துகின்றது.

எச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சபை மற்றும் சபை சார்ந்த நிறுவனங்களின் பதில் ஆகியவற்றில் பெருவாரியான இடைவெளி இருக்கின்றது. பரவலான சமுதாயத்தோடு ஒருங்கிணைந்து செயல்படக்கூடிய அணுகுமுறைக்கான தேவை இருக்கின்றது.

CANA வின் ஊழியத்தின் ஒரு பகுதி உபயோகமான புத்தகங்களை நம்முடைய நிறுவனங்களுக்கும் பரந்த சமுதாயங்களுக்கும் விநியோகிப்பது ஆகும். இதன் ஒரு பகுதியாக நாங்கள் எய்ட்ஸும் நீங்களும் புத்தகத்தை ஆங்கிலத்திலும் (இந்திய பிரதி) இந்தியிலும் வெளியிட்டு விநியோகிப்பதில் ஈடுபட்டுள்ளோம், இவை CANA பங்காளர்கள் மற்றும், போதகர்கள், சுவிஷேசகர்கள் மற்றும் வாலிபர்களிடம் பரவலாக விநியோகிக்கப்படுகின்றது.

கிறிஸ்தவ எய்ட்ஸ் தேசிய ஒருங்கிணைப்பு(CANA): www.cana-india.org <http:/ /www.cana-india.org>

எனவே மற்றவர்கள் நீங்கள் தயாரித்த புத்தகங்களை இலவசமாக பயன்படுத்தி ஏற்றுக்கொள்ளட்டும். ஒரு இணையதளத்திலே அதை வெளியிடுங்கள். உங்களுடைய ஆதாரக் கோப்புகளின் எலக்ட்ரானிக் பிரதிகளை டவுன்லோட் செய்து மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளட்டும். ஆனால் அவர்கள் எப்போதுமே உங்களுடைய பணிக்கு

சரியான அங்கீகாரம் கொடுக்கவேண்டும், அவர்களுடைய புத்தகத்தின் ஆதாரத்தைக் கொடுக்கவும், நிஜப்பதிப்பின் நகல்களை மக்கள் எவ்வாறு பெற்றுக்கொள்வார்கள் என்பதன் விளக்கத்தையும் விவரிக்கும்படியாக சொல்லுங்கள்.

மேலும் மொழிப்பெயர்ப்புகள் உட்பட அவர்கள் செய்யும் புதிய பதிப்புகளின் எலக்ட்ரானிக் கோப்புகளை உங்களுக்கு மின்னஞ்சல் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுங்கள். பின்பு நீங்கள் உங்களுடைய இலவச டவுன்லோடுகளின் பட்டியலில் அவற்றை சேர்த்துக் கொள்ளலாம்.

உங்களுக்கு தேவைப்படும் புத்தகங்கள் இல்லை

சிலர் தங்களுக்கு தேவைப்படும் பயிற்சிப் புத்தகங்கள் இல்லை என்று கூறுகிறார்கள். இதுதான் நிலைமை என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் திட்டமிடுவதைப் போன்ற நிகழ்ச்சிகளை தேடத்துவங்குங்கள். அவர்களுடைய முறைமைகளை நீங்கள் இதுவரை எழுதிவைக்காமல் இருந்தால், அவர்களுடைய அடுத்த நிகழ்ச்சியின் நகலை (ஒலி அல்லது ஒளியாக) பதிவுசெய்து அனுப்பும்படியாகச் சொல்லுங்கள். பணிகள் பலநேரங்களில் ஆர்வப்பற்றாக்குறையில் இருக்கின்றன, எனவே அவர்களை ஊக்கப் படுத்தும்படி அவற்றிற்கு விலைக்கொடுத்து வாங்குங்கள். இதனால் உங்களிடம் பயிற்சிபெறுகிறவர்கள் மற்ற பணிகளின் அனுபவத்தில் இருந்து உடனடியாக பலனடையலாம்.

தங்களுக்கு தேவையானதைத் தேடி வெற்றிபெறவில்லை என்று மக்கள் அடிக்கடி என்னிடம் சொல்கிறார்கள். இந்த வெற்றியின் பற்றாக்குறைக்கு ஆணிவேர் பலநேரங்களில் மோசமாக தொடர்புபடுத்திக்கொள்வதே ஆகும்-அவர்களிடத்தில் போதுமான தொடர்புகள் இருப்பதே இல்லை. இது உங்கள் சூழ்நிலை என்றால், மற்ற மக்களை அறிந்தவர்களிடம் பேசுங்கள். இணையத்தில் தேடுங்கள், கூகுல் போன்ற தேடுதல் இயந்திரங்களை பயன்படுத்துங்கள். டியர்ஃப்ண்ட், சமாரிடன்ஸ் பர்ஸ் அல்லது UNAIDS போன்ற நிறுவனங்களின் இணையதளத்திற்குச் செல்லுங்கள். புத்தகங்கள் இருக்கலாம் ஆனால் அவை தேவையான மொழிக்கு மொழிபெயர்க்கவேண்டியதாக இருக்கலாம்.

இந்தியாவில் இருக்கும் ஒரு கூட்ட சபைகள் தங்கள் எச்ஐவி கவனிப்பு விளக்கப்புத்தகத்தை எழுதுவதற்கு உதவும்படியாக டியர்ஃபண்ட் கேட்டுக்கொண்டது எனக்கு நினைவு இருக்கிறது. எங்களில் பலரை அவர்கள் விமானத்தில் அந்நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பினார்கள். 1996 ஆம் ஆண்டிலேயே நான் உறுதியாக ஒன்றை சொன்னேன், அவர்கள் ஒன்று மாத்திரமல்ல, உண்மையிலேயே சிறந்த எச்ஐவி கவனிப்பு விளக்கப் புத்தகங்கள் பலவற்றை இந்தியாவில் வெளியிடுவார்கள் என்றேன். அது உண்மையாக மாறியது. புதிய புத்தகங்களை உருவாக்குவது உண்

மையான தேவை அல்ல, *130* கோடி மக்கள் வாழ்கின்ற நாட்டிலே செயல்படும் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளுடனான தொடர்பை வலுப்படுத்துவதே தேவை என்பதை உணர்ந்தோம். இதன் விளைவாக, CANA பிறந்தது (கிறிஸ்தவ எய்ட்ஸ் தேசிய ஒருங்கிணைப்பு). இதே போல PACANET ஆப்பிரிக்க தேசங்கள் முழுவதிலும் இணைப்புக்களை ஏற்படுத்த உதவுகிறது.

போதை ஊசி போட்டுக்கொள்கிறவர்கள் மத்தியில் எச்ஐவி பரவாமல் தடுக்கும் வழிகள்

பல நாடுகளில் ஊசியை பகிர்ந்துகொள்கிறவர்கள் நடுவே எச்ஐவி பரவாமல் தடுப்பது ஒரு பெரிய சவால். பரவுதல் விரைவாக நடக்கக்கூடும். என்ன செய்யலாம்? இது பல உணர்வுபூர்வமான சர்ச்சைக்குரிய பிரச்சனைகளில் தொடர்புடையது.

மிக முக்கியமாக போதை உபயோகிப்பவர்களோடு தொடர்பில் இருக்கும் சமுகப்பணியாளர்கள் தினந்தோறும் அல்லது வாரந்தோறும், அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்திற்கும் ஆரோக்கியமாக வாழ்வதற்கான ஆலோசனைகளைக் கொடுக்க வேண்டும்.

எனினும், பல போதைப்பொருள் உபயோகிப்பவர்கள் தொடர்ந்து ஊசிப்போட்டுக்கொண்டு, சிகிச்சைக்கும் மறுவாழ்வு திட்டங்களுக்கும் கொடுக்கப்படும் அழைப்பை ஏற்காமலே இருக்கிறார்கள். பின்பு என்ன? ஊசி பரிமாற்ற நிகழ்ச்சிகள் எச்ஐவி பரவுவதை குறைக்கின்றன, போதை ஊசி போட்டுக் கொள்கிறவர்களைப் பற்றிய பல வித்தியாசமான ஆராய்ச்சிகள் இதை தெரிவிக்கின்றன. போதைப்பொருள் உபயோகிப்பவர்கள் பல நேரங்களில் சொந்தமான சாதனங்களை வைத்திருக்காததினால் அல்லது உடைந்துபோவதினால் சாதனங்களை பகிர்ந்து கொள்கிறார்கள். ஊசி பரிமாற்றத்திட்டத்தினால், ஒவ்வொரு போதைப்பொருள் உபயோகிப்பவரும் அவருடைய பழைய ஊசிக்கும் சிரிஞ்சிக்கும் பதிலாக புதிய ஊசியையும் சிரிஞ்சையும் பெற்றுக்கொள்ளலாம்.

எனினும், பல திருச்சபைகள் இதைப் போன்ற 'தீமையைக் குறைக்கும்' நிகழ்ச்சிகள் அடிப்படையான பிரச்சனைகளை தவிர்ப்பதில் தோல்வி அடைவதையும் சில வாழ்க்கை முறைகளை ஊக்கப்படுத்துவதைப் போலவும் தோன்றுகிறது என்று வருத்தம் தெரிவிக்கின்றன. எடுத்துக்காட்டாக ஊசி பரிமாற்றம் அவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்காமல் இருக்கலாம், அவர்களுடைய கவலைகள் சில தேசிய அரசாங்கங்கள் பகிர்ந்துகொண்டு இருக்கின்றன.

நம்முடைய கண்ணோட்டத்தில் இருந்து வேறுபடுகிற பணிகளை நியாயம்தீர்ப்பதில் நாம் தாமதமாக செயல்பட வேண்டும். அவர்கள் நோய்பாதிப்பில் இருந்து காப்பாற்ற நினைக்கும் சேவைத் திட்டத்தின் பணியாளர்களுடைய சூழ்நிலைகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட வித்தியாசமான அணுகுமுறைகள் எவ்வாறு வேலைசெய்கின்றன என்பதன் ஆதாரங்களையும் நாம் பார்க்க வேண்டும்.

நடைமுறை கவனிப்பு: துன்புறுத்தும் குழப்பமிக்க மாற்றுவழிகள்

கிறிஸ்தவர்கள் தங்கள் தினசரி எச்ஐவி பணியில் மிகவும் கடினமான தேர்ந்தெடுப்புகளை சந்திக்கிறார்கள். நான் சில ACET பணியாளர்களுடன் UK-ல் உள்ள ஒரு பெரிய குடியிருப்பு பகுதிக்கு பெயரில்லாத ஒரு வேனில் சென்றது நினைவு இருக்கிறது (அடையாளம் இல்லாமல் இருப்பது நல்லது, அல்லது நம்முடைய வாடிக்கையாளர்கள் தாக்கப்படலாம்).

நாங்கள் வேனில் இருந்து வெளியேறியதும் ஒருவர் பின் ஒருவராக ஆண்களும், பெண்களும், எல்லா போதைப்பொருள் உபயோகிப்பவர்களும் மாடிப்படிகளில் இருந்தும், ஒற்றையடிப் பாதைகளில் இருந்தும் வெளியே வந்தார்கள். அவர்கள் பலநேரங்களில் மோசமான சூழ்நிலைகளில் தங்குகிறார்கள், சிலர் குறுகிய குடியிருப்புகளில் இடத்தை பகிர்ந்துகொள்கிறார்கள். அவர்கள் அரசாங்கப் பணியாளர்களுக்கும், உள்ளூர் மருத்துவமனைகளுக்கும் தெரியாத நிழல் உலகத்தில் வாழ்கின்றார்கள். ஆனால் என்னோடு இருந்த அந்த தன்னார்வத்தொண்டர் அவர்களை கண்டுபிடித்து, அவர்கள் நம்பிக்கையை வென்று, அவர்களை ஆதரிக்க முயற்சித்தார்.

அவர்களில் சிலருக்கு எச்ஐவி இருக்கிறது என்பதை நாங்கள் அறிந்திருந்தோம், ஆனால் பலர் இன்னும் பரிசோதிக்கப்படவில்லை. பணம் அவர்களுக்கு பெரும் பிரச்சனையாக இருந்தது. சிலருக்கு ஒரு நாளைக்கு மாத்திரம் 200 டாலர்கள் தேவைப்படும், அதன்மூலமாக அவர்கள் போதையில் பின்வாங்காமல் இருக்க உதவும், பின்வாங்குவது அவர்களை அசௌகரியமாகவும், வியாதியடைந்தவர்களைப் போலவும், ஏக்கமடைகிறவர்களாகவும் உணரவைக்கும்.

ஊசியையும் சிரிஞ்சையும் பகிர்ந்துகொள்வதால் அக்கூட்டத்தில் பெரும்பாலானோர் இன்னும் இரண்டு மணிநேரங்களில் எச்ஐவி அல்லது ஹெப்பதிடிஸ் சி வியாதியை பெற்றுக்கொள்ளக்கூடும். ஆனால் நாம் என்ன செய்ய முடியும்? நம்மிடத்தில் இருக்கும் பதில்கள் என்ன? ஒன்றும் செய்யாமல், உடனடியாக அலுவலகத்திற்குத் திரும்பி எச்ஐவியோடு வாழ்ந்துகொண்டு இருக்கும் பலரைக் காப்பாற்ற திட்டமிட வேண்டுமா? அல்லது உபயோகப்படுத்துவதற்கும் முன்பாக ஊசியையும் சிரிஞ்சையும் டைல்யூட்டட் ப்ளீச் மூலமாக எப்படி ஸ்டெரிலைஸ் செய்ய வேண்டும் என்று கற்றுக்கொடுக்க வேண்டுமா? ஒவ்வொரு நபருக்கும் ஒரு புதிய சுத்தமான ஊசியைக் கொடுத்து, ஒவ்வொரு முறையும் அவர்களுடைய மழுங்கிப்போன ஊசிக்கு பதிலாக சுத்தமான ஊசியை தொடர்ச்சியாக கொடுக்க ஏற்றுக்கொள்ள வேண்டுமா?

எச்ஐவி ஒரு வளரும் பிரச்சனை

இறுதியாக, எச்ஐவி ஒரு வளர்ந்து வரும் பிரச்சனை என்பதை நினைவில்கொள்ளுங்கள். நாம் பார்த்ததைப் போல எச்ஐவியில் மாத்திரம் கவனம் செலுத்துவது மாத்திரம் அதை நிறுத்திவிடாது. அறியாமை, ஆரோக்கியகவனிப்பு இல்லாமை, மோசமான தகவல்தொடர்பு, வறுமை, போதைக்கு அடிமையாகுதல், உடலுறவின் மூலமாக குழந்தைகள் பணம் சம்பாதிப்பது; இவை அனைத்தும் அபாயத்தை அதிகரிக்கின்றது. இந்த இழப்பின் சுழற்சி முற்றிலுமாக உடைக்கப்பட வேண்டும்.

பணத்திற்காகவும், உணவிற்காகவும், மருந்துக்காகவும், சட்ட விரோதமான போதைக்காகவும் மற்ற பல பொருட்களுக்காகவும் சரீர சுகம் கொடுக்கும் ஒரு பெண்ணை எடுத்துக்காட்டாக எடுத்துக்கொள்ளுங்கள்: அவர் ஆண்களுக்கு தன்னுடைய சேவையை நிறுத்திவிட்டால், எப்படி வாழ்வார்? யார் அவருடைய பிள்ளைகளுக்கு உணவளிப்பார்கள்? யார் அவருடைய மருந்துக்கு பணம் செலுத்துவார்கள்? பாதுகாப்பு நிகழ்ச்சிகள் மாத்திரம் போதாது. நமக்கு முழுமையான அணுகுமுறை வேண்டும்.

மேலும் ஒரு வேலை கொடுக்கப்பட்டால் அவர் பணம் சம்பாதிக்க வேறு வேலை செய்வார் என்று நினைப்பதும் தவறு. பல செக்ஸ் பணியாளர்கள் கிறிஸ்தவ "மீட்பு" ஊழியங்களின் மனநிலை மிகவும் எதிர்மறையாகவும் குற்றம்சாட்டுவதாகவும் இருப்பதாக காண்கிறார்கள்.

மிகச்சிறிய நிதிவுதவி, வருமானம் உருவாக்கும் திட்டங்கள் மற்றும் பிற சுய உதவி நிகழ்ச்சிகளுக்கு முக்கியப் பணி இருக்கின்றது, தேசத்தின் பொதுவான வருமானத்தை பெருக்குவதில் மாத்திரமல்ல, எச்ஐவியோடு இருக்கிறவர்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டுமாக கட்டுவதற்கும் அனாதைகள் உயிர்வாழ்வதற்கும் உதவியாக இருக்கும்.

பொருளாதார வளர்ச்சி அரசாங்கத்திற்கு வரியையும் கொடுக்கிறது, அதன் மூலமாக மேம்படுத்தப்பட்ட ஆரோக்கிய முன்னேற்றமும் கவனிப்பும் கிடைக்கிறது.

ஒரு விஷயம் நிச்சயம் : நீங்கள் எச்ஐவியைக் குறித்து ஒருமுறை பேசத் தொடங்கிய பின்னர், சீக்கிரத்தில் உங்களிடத்தில் பல கேள்விகளைக் கேட்பார்கள். இதோ சில பொதுவான கேள்விகளும் அவற்றிற்கான பதில்களும்.

அதிகாரம் 4

மக்கள் கேட்கும் கேள்விகள்

நான் எங்கு சென்றாலும் பெரும்பாலான கேள்விகள் ஒன்றாகவேதான் இருக்கின்றன. எய்ட்ஸ் என்றால் என்ன? எங்கிருந்து எச்ஜவி வருகின்றது? பரிசோதனையைக் குறித்து என்ன? எப்போது நிவாரணம் கிடைக்கும்? எனக்கு எச்ஜவி இருந்தால் தாய்ப்பால் கொடுப்பது பாதுகாப்பானதா? முடிந்தவரை நீண்டகாலத்திற்கு எச்ஜவியோடு நல்ல உடல்நிலையில் இருப்பது எப்படி?

எய்ட்ஸுக்கான காரணம் என்ன?

எய்ட்ஸ் எச்ஜவி என்னும் வைரசினால் உருவாகிறது. பேக்டீரியா, வைரசுகள், ஃபங்கை மற்றும் தொற்றுண்ணிகள் போன்ற கிருமிகளை அழிப்பதில் உங்களுடைய உடல் நன்றாகவே செயல்படக்கூடியது. அதற்கான இயற்கை பாதுகாப்பு உங்கள் உடலுடைய நோய்தடுப்பு சக்தி. எச்ஜவி உங்களுடைய நோய்தடுப்பு சக்தியை பெலவீனப்படுத்துகிறது, அதன்மூலமாக மற்ற கிருமிகள் உங்கள் மீது தாக்குதல் நடத்தி உங்களை கொல்கின்றது.

நோய்தடுப்பு படைகள் கடுமையாக பழுதடையும்போது, நீங்கள் உங்கள் நோய்தடுப்பு சக்தி குறைபாட்டினால் கஷ்டப்படுகிறீர்கள் என்றோ அல்லது நோய்தடுப்பு சக்தி குறைபாடு” (Immuno-Deficiency)என்றோ கூறுகின்றோம். சிலர் பிறப்பிலேயே மோசமான நோய்தடுப்பு சக்தியோடு பிறக்கிறார்கள், மற்றவர்கள் நோயின் காரணமாக குறைபாட்டை பெற்றுக்கொள்கிறார்கள். எச்ஜவி ஒரு நோய்பாதிப்பினால் பெற்றுக்கொள்ளப்படுவதால் (Aquired), இதை நாம் பெற்றுக்கொள்ளப்பட்ட நோய்தடுப்பு குறைபாட்டு நோய் (Aquired Immuno-Deficiency Syndrome) என்று கூறுகிறோம் (சுருக்கமாக AIDS).

HIV யின் விரிவாக்கம் ஹயூமன் இம்யூனோ டெ்.பிசியன்சி வைரஸ் இது எய்ட்ஸை விளைவிக்கும் வைரசின் அறிவியல் பெயர் ஆகும்.

எச்ஜவியால் பாதிக்கப்படுவதற்கும் எய்ட்ஸ் உருவாகுவதற்கான ஆரம்ப அறிகுறிக்கும், அது இன்னும் கொடுமையான நோயை உருவாக்குவதற்கும் அல்லது இறப்பிற்கும் இடையே பல ஆண்டுகள் எடுத்துக்கொள்ளும் (நபர் ஆரோக்கியமாக தோற்றமளித்தும் நோயினால் பாதுக்கப்பட்டு இருக்கும்போது). யாருக்கு எச்ஜவி இருக்கிறது என்பதை தோற்றத்தை வைத்து கூறுவது முற்றிலும் சாத்தியமற்றது. ஆண்டிவைரல் சிகிச்சை ஒவ்வொரு நிலையையும் வேகம்குறைத்து வாழ்க்கையை பல ஆண்டுகளுக்கு நீட்டிக்க முடியும்.

எச்ஐவி முதலாவது எங்கிருந்து வந்தது?

எச்ஐவி முதலாவது எங்கிருந்து வந்தது என்பது யாருக்குமே சரியாகத் தெரியாது. பல ஆண்டுகளாக இதைப்போன்ற வைரசுகள் மிருகங்கள் இடமிருந்து உருவாகி இருக்கலாம் என்று பல விஞ்ஞானிகள் நினைக்கிறார்கள். பழிசுமத்துவதற்காக வகை தேடுவதற்கு காரணம் எதுவும் இல்லை. மனிதர்களில் எச்ஐவி நோய்பாதிப்பு எங்கிருந்தோ தொடங்கி இருக்கிறது, அது யாருடைய தவறும் இல்லை.

பால் கபூங்கா, ஆப்பிரிக்க நாட்டில் ஏசியிடியை வழிநடத்துகிறவர், பலநேரங்களில் இப்படிச் சொல்வார்: "என்னுடைய நாட்டில் உங்கள் காலருகே ஒரு பாம்பை பார்க்கும்போது, நீங்கள் அது எங்கிருந்து வந்தது என்பதை குறித்து வாக்குவாதம் செய்யமாட்டீர்கள். நீங்கள் அந்த பாம்பை கொல்வீர்கள் ! பலர் தங்களுடைய நேரத்தையும் முயற்சிகளையும் உயிர்களை காப்பாற்றுவதில் செலவிடாமல் எச்ஐவி எங்கிருந்து வந்தது என்பதைப் போன்ற விவாதங்களில் வீணடிக்கிறார்கள்'.

எச்ஐவி எவ்வாறு பரவுகின்றது?

எச்ஐவி எதிர்பாலினத்தை சார்ந்தவர்களிடமும் அல்லது ஒரே பாலினத்தை சேர்ந்தவர்களிடமும் உடலுறவு கொள்ளும்போது பரவுகின்றது, எனினும் பெண்ணுடன் உடலுறவு கொள்ளும் பெண்களிடத்தில் பரவுவதைக் காட்டிலும் ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்களிடத்திலேயே சுலபமாக இந்த வைரஸ் பரவுகின்றது. (பலர் நினைப்பதைக் காட்டிலும் ஓரினச்சேர்க்கை துணை-சஹாரா ஆப்பிரிக்கா போன்ற இடங்களில் சகஜமான ஒரு செயல்). ஒருவருடைய இரத்தம் அல்லது உடலில் சுரக்கும் திரவங்கள் மற்ற நபருடைய இரத்த ஓட்டத்தோடு கலக்கும்போது,அல்லது கர்ப்பப்பையின் மூலமாக, அல்லது தாய்ப்பாலின் மூலமாக இந்த வைரஸ் பரவுகின்றது.

நான் எப்படி எச்ஐவியை தடுக்கலாம்?

உங்களிடத்தில் அந்த வைரஸ் இல்லை என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரிந்தால், நீங்கள் அப்படியே இருக்க விரும்புவீர்கள். இதுவரை நீங்கள் முடிவு எடுத்திருக்காவிட்டாலும், அடுத்து நீங்கள் உடலுறவு கொள்ளப்போகும் நபர் உங்களுடைய வாழ்நாள் முழுவதும் உங்களோடு தாம்பத்திய உறவுகொள்ளப்போகிற நபராக இருக்கவேண்டும் என்று முடிவெடுக்க விரும்பலாம். ஆனால் அந்த நபருக்கு இதற்கு முன்பே பலரோடு தொடர்பு வைத்து இருந்திருந்தால்? உங்களுடைய துணைவர் உண்மையற்றவராகவோ அல்லது போதை ஊசிபோட்டுக்கொள்பவராகவோ இருந்தால்? சிறப்பான சிகிச்சை இப்போது பரவலாக கிடைப்பதினால், நீங்கள் எச்ஐவி அபாயத்தில் இருந்திருந்தால் உங்களுடைய எச்ஐவி நிலையை அறிந்துகொள்வது மேலும் அவசியமாகிறது, உங்களுடைய துணைவரும் அவருடைய எச்ஐவி நிலையை அறிந்துகொள்ள வேண்டும்.

உங்களில் யாரேனும் ஒருவர் எச்ஐவியோடு வாழ்ந்துகொண்டு இருந்தால், உடலுறவுகொள்ளும்போது காப்புறை அணிந்துகொண்டு உங்கள் துணைவரை பாதுகாப்பது மிகவும் அவசியம்.

நீங்கள் ஒரு மருத்துவ அல்லது கவனிப்பு வேலை செய்கிறவராக இருந்தால், நீங்கள் சிறந்த கவனிப்பை கொடுக்கும்போது எப்படி உங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதைக் குறித்த தெளிவான அறிவுரைகளை பெற்றிருக்க வேண்டும். அடிப்படையான சட்டம் : மற்றவர்களுடைய இரத்தம் அல்லது உடல் திரவங்கள் உங்களுடைய தோலில் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

என்னுடைய காதலன் நான் அவரை நேசிக்கவில்லை, ஏனென்றால் அவருடன் உடலுறவுகொள்ள மறுக்கிறேன் என்று கூறுகிறார்

ஒரு காரியம் நிச்சயமாக தெரிகிறது : அவர் உங்களை காதலிக்கவில்லை, அல்லது காதலித்தால், அவர் உங்களை மதிக்கவில்லை. அவருடைய பக்கத்தில் இருந்து எவ்விதமான அர்ப்பணிப்பும் இல்லாமல், உங்களையே அவருக்கு கொடுக்கும்படியாக உங்களை நிர்பந்தித்தால், உங்களுடன் உறவை வளர்ப்பதைவிடவும் தனக்கே சுகத்தை பெற்றுக்கொள்ள அதிக ஆர்வமாக இருக்கிறார்.

என்னுடைய காதலனை எனக்கு தெரியும், அவரும் கன்னிப்பையன் தான் என்கிறார், எனவே இது பாதுகாப்பாக இருக்கும்

உங்களுடன் உடலுறவு வைத்துக்கொள்ளவேண்டும் என்று போதுமான அளவு விருப்பம் இருந்தால் ஒரு மனிதன் நீங்கள் கேட்க விரும்பும் எதை வேண்டுமானாலும் கூறுவான். உலகம் முழுவதும் கடுமையாக பாதிக்கப்பட்ட பெண்கள், இப்போது எச்ஐவியோடும் இருக்கின்றவர்களால் நிறைந்திருக்கிறது. அவர்கள் தங்கள் உறவு முறிந்துவிடும் என்கிற பயத்தினாலோ அல்லது தன்னை ஒருநாள் திருமணம் செய்துகொள்வேன் என்று வாக்குகொடுத்ததினாலோ உடலுறவு வைத்துக்கொள்ள சம்மதித்தார்கள். ஆனால் "வாழ்க்கை முழுவதும் மாட்டிக்கொள்ள" எவ்வித நோக்கமும் அந்த ஆணுக்கு இல்லாமல் இருந்திருக்கக்கூடும். நீங்கள் ஒரு வீட்டையோ அல்லது உங்களை நேசித்து, உங்களை நன்றாக பார்த்துக்கொள்ளும் ஒரு கணவனையோ, உங்கள் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல தந்தையையோ எதிர்பார்த்து இருக்கலாம்.

இருப்பினும் இப்போது அவர் ஒரு கன்னிப்பையனாகவே இருந்தாலும் அவர் தன்னுடைய வாழ்க்கை முழுவதும் வேறு ஒரு பெண்ணோடு உடலுறவு வைத்துக்கொள்ள மாட்டார் என்று நினைக்கிறீர்களா? திருமணத்திற்கு முன்பாக எவ்வித அர்ப்பணிப்பும் இல்லாமல் உங்களுடன் உடலுறவு வைத்துக்கொள்ள அவ்வளவு ஆர்வமாக இருந்தால், வேறு ஒருவருடனும் இதையே முயற்சிப்பதற்கான சாத்தியம் அதிகமாக இருக்கிறது, அல்லது உங்களை திருமணம் செய்த பிறகும் அப்படிச் செய்யலாம்.

எச்ஐவி உடலுள் புகுந்ததும் என்ன நடக்கிறது?

எச்ஐவி நம்முடைய உடலில் நோய்பாதிப்பிற்கு எதிராக போரிட்டு ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளும் வெள்ளை இரத்த அணுக்களோடு தொற்றிக்கொள்கிறது. வெள்ளை இரத்த அணுக்கள் சாதாரணமாக இரத்தத்திலே மிதந்துகொண்டு இருக்கும், அல்லது நம்முடைய உடலின் திசுக்களுக்கு இடையே கொண்டுசெல்லப்பட்டு, கிருமிகளைத் தேடி அழித்துக்கொண்டு இருக்கும். ஆயிரக்கணக்கான வித்தியாசமான கிருமிகள் இருக்கின்றன, ஒவ்வொரு வெள்ளை அணுவும் அவற்றில் ஒருவகையான கிருமியை அழிப்பதற்காக வடிவமைக்கப்பட்டு இருக்கின்றது. வெள்ளை அணுக்கள் எச்ஐவியினால் பாதிக்கப்படும்போது அவை நோய்பாதிப்புக்கு எதிராக எப்படி சண்டைபோடுவது என்பதை மறந்துவிடுகின்றன, மாறாக புதிய வைரசுகளை உருவாக்குவது எப்படி என்று கற்றுக்கொள்கின்றன.

நீங்கள் ஏன் எச்ஐவியினால் வியாதிப்படுகிறீர்கள்?

ஒருசில வெள்ளை இரத்த அணுக்கள் மாத்திரமே வைரசினால் தாக்கப்படுகின்றன, ஆனால் அவற்றின் அளவு குறையும்போது சிலவகை பேக்டீரியா மற்றும் ஃபங்கஸை கொல்வது உங்களுடைய உடலுக்கு கடினமான வேலையாகிவிடுகிறது. பொதுவான கிருமிகள் பல சுலபமாக அழிக்கப்பட்டுவிடுகின்றன, ஆனால் ஒன்றிரண்டு தொடர்ந்து வளர்ந்துகொண்டே இருக்கின்றன. இதன் விளைவு மார்பு பாதிப்பு, டிபி அல்லது வாயில் வெள்ளையான படிவம் ஏற்படுத்தும் த்ரஸ் போன்ற வியாதிகள். சில காலத்திற்குப் பிறகு உடல் பெலவீனமடைந்து மற்ற நோய்பாதிப்புகள் மேற்கொள்கின்றன.

இந்த புதிய நோய்பாதிப்புகள் சில உங்களை சோர்வடையவும், எடையை குறைக்கவுமே செய்கின்றன, ஆனால் மார்ப்பு பாதிப்புகள் உயிரைக்கொல்லலாம், சிகிச்சை அளிப்பதும் கடினம். எய்ட்ஸோடு தொடர்புடைய நோயினால் மரிக்கின்ற பலர், தங்களுடைய நோய் தடுப்பு சக்தி பழுதடையும்போது மேற்கொள்ளும் நோய் பாதிப்புகளினால் அல்லது எச்ஐவியினால் உண்டாகும் புற்றுநோயினால் தான் இறக்கிறார்கள். முற்றிய எச்ஐவியோடு இருப்பவர்களுடைய மரணத்திற்கு பெரும்பாலான காரணம் டிபி நோய்தான். டிபிக்கான மருந்துகள் தொடர்ச்சியாக பல மாதங்களுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும், ஆனால் எச்ஐவி இருப்பவர்களுக்கு டிபிக்கான சிகிச்சையின் அளவு நீண்டகாலம் எடுத்துக்கொள்ளும்.

எச்ஐவி ஒரு வைரஸ், ஆனால் வைரஸ் என்றால் என்ன?

வைரஸ் என்பது மிக மிக சிறிய நோய்பாதிப்பை ஏற்படுத்தும் கிருமி (பேக்டீரியாவின் அளவில் 1/100 உடையது). ஒரு வைரஸில் உங்கள் உடலில் இருக்கும் அணுக்கள் எவ்வாறு அதிக வைரஸுகளை உருவாக்க வேண்டும் என்று கற்பிக்கும் ஜெனிடிக் கோடின் ஒரு துண்டு இருக்கிறது. உங்களுடைய முடி கருப்பாக இருப்பதற்கும், உங்கள் காதுகள் மற்றும்

முக்கு எந்த வடிவத்தில் இருக்கவேண்டும் என்பதற்கும் இருக்கும் ஜெனிடிக் கோடைப் போன்றது இது. உங்களுக்குள் இருக்கும் அனைத்துமே இவ்வகையான ஜீன்களினால் ப்ரோகிராம் செய்யப்பட்டு இருக்கின்றன, ஆச்சரியப்படும் விதமாக உங்கள் உடலில் இருக்கும் ஒவ்வொரு அணுவிலும் உங்களை முற்றிலுமாக நகல் எடுப்பதற்கு தேவையான எல்லா தகவல்களும் இருக்கின்றன.

எச்ஐவி நோய்பாதிப்புக்கான சிகிச்சை என்ன?

இன்றைய ஆண்டிவைரல் சிகிச்சைகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கலாம். மக்களை பல ஆண்டுகளுக்கு நன்றாக வைத்துக்கொள்ள அவற்றால் முடியும், ஆனால் மக்களை சுகப்படுத்த அவற்றால் முடியாது. மருந்துகள் வாழ்நாள் முழுவதும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும், அவை சரியாகவும் தொடர்ச்சியாகவும்,மருத்துவ ஆலோசனையின்படி எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்.

தயாரிப்பாளர்கள், அரசாங்கங்கள் மற்றும் வளர்ச்சி நிறுவனங்கள் ஆகியவை உலக நிதி, UNAIDS மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றோடு இணைந்து மருந்துகளை மிகக்குறைந்த விலையில் கொடுக்க முயற்சிக்களை எடுத்திருக்கிறார்கள். ஆனால் பல ஏழை மக்களுக்கு அது இன்னமும் விலை உயர்ந்ததாகத்தான் இருக்கிறது-அவை இலவசமாக இருந்தால் பல நேரங்களில் அவை கிடைப்பதில்லை.

ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவின் சில பகுதிகளிலும் மக்கள் இலவசமான ஆண்டிவைரல்களை பெற்றுக்கொள்ள செல்கிறார்கள், ஆனால் அவர்களுடைய சிகிச்சையின் மற்ற பகுதிகளுக்கு அல்லது பரிசோதனைக்கு கட்டணம் வசூலிக்கப்படுவதால் அவர்கள் மீண்டும் செல்லமுடியாமல் இருக்கிறார்கள்.

எச்ஐவிக்கு நேர்மறையாக பரிசோதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமான சிகிச்சை அளிக்கப்படவேண்டும், ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்டிவைரல் வகைகளோடு.

கவனிப்பை **தெரிந்தெடுத்தல் முயற்சி-ஆண்டைரிட்ரோவைரல்** சிகிச்சை.

ஒவ்வொரு சிகிச்சைக்கும் ஒரு மருத்துவரும், ஒரு செவிலியரும் ஒரு திட்ட ஒருங்கிணைப்பாளரும் பணியமர்த்தப்படுவார்கள். செவிலியர்களும் மருத்துவர்களும் பயிற்றுவிக்கப்பட்டதும், வீட்டு கவனிப்பாளர்களுக்கும், மற்ற மருத்துவ பணியாளர்களுக்கும், நோயாளிகளுக்கும் மருந்து கல்வி பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். தேவையற்ற காலதாமதத்தை தவிர்ப்பதற்காகவும் சேவைகளும் மருந்துகளும் விரைந்து கொண்டுசெல்லப் படவும், ஒவ்வொரு இடத்தின் பணியாளர்களும் இதே முறைமைகளையே பின்பற்ற வேண்டும்.

→ *வீட்டு கவனிப்பாளர்கள் பல விதிமுறைகளை சந்திக்கும்*

நோயாளிகளை தெரிந்தெடுத்து அவர்கள் இரத்த பரிசோதனையை சிகிச்சை மையத்தில் பெற்றுக்கொள்ள ஒழுங்குசெய்வார்கள்.

➔ *மருத்துவரும் செவிலியரும் இரத்த சான்றுகளை ஜொஹேனஸ் பர்கில் இருக்கும் பரிசோதனை மையத்திற்கு CD4 எண்ணிக்கை, வைரஸ் எண்ணிக்கை மற்றும் முழு இரத்த எண்ணிக்கைக்காக அனுப்பப்படுகின்றது.*

➔ *மின்னஞ்சல் மூலமாக சிகிச்சை இடங்களுக்கு முடிவுகள் அனுப்பி வைக்கப்படுகின்றது.*

➔ *CD4 எண்ணிக்கை ஒரு அளவுக்கு குறைவாக இருக்கும் வயதுவந்த நோயாளிகளுக்கு ஆண்டிரிட்ரோவைரல் சிகிச்சை தொடங்கப்படுகின்றது.*

➔ *ஒவ்வொரு நோயாளிக்கும் மருந்துகள் முன்பே அடுக்கி வைக் கப்படுகின்றன.*

ஆண்டிரிட்ரோவைரல் சிகிச்சை தொடங்குவதற்கு முன்பாக, ஒவ்வொரு நோயாளியும் மருந்துகளை தொடர்ச்சியாக எடுத்துக்கொள்வதற்கும் எச்ஐவியோடு தொடர்புடைய மற்ற நோய்பாதிப்புக்கான சிகிச்சை எடுத்துக்கொள்வதற்கும் பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

தெற்கு ஆப்பிரிக்காவில் ஒரு விசுவாச அடிப்படையிலான பதில்: கவனிப்பை தெரிந்தெடுத்தல் முயற்சி, UNAIDS சிறந்த செயல்பாடுகளின் தொகுப்பு

சர்வதேச அளவில், ஐந்தில் ஒருவருக்கு குறைவானவர்கள் எச்ஐவி அபாயத்தில் இருக்கிறவர்களுக்கு அடிப்படை எச்ஐவி-பாதுகாப்பு சேவைகள். UNAIDS, WHO மற்றும் UNICEF ஆகிய அமைப்புகள் அரசாங்கங்களோடு இணைந்து பணியாற்றி எச்ஜவி பாதுகாப்பு, சிகிச்சை மற்றும் கவனிப்பை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

வேக்சினைக் குறித்து என்ன?

வைரல் நோய்களுக்கு எதிரான நம்முடைய ஒரே தற்காப்பு வேக்சின்கள் தான். போலியோ, கக்குவாய் இருமல், தட்டம்மை மற்றும் பல நோய்கள் இப்போது அபூர்வமானதற்கு வேக்சின்களுக்கே நன்றி சொல்ல வேண்டும். சின்னம்மைக்கு எதிரான உலகளாவிய நிகழ்ச்சி அதை உலகத்திலிருந்து தூக்கி எறிந்துவிட்டது. ஏன் எச்ஐவியையும் எறிந்துவிடக்கூடாது?

வேக்சின் நம்முடைய உடல்கள் ஒரு குறிப்பிட்ட நோய்பாதிப்பு எதிரான எதிர்ப்பு அணுக்களை உருவாக்கும்படியாக ஊக்கப்படுத்துகின்றன. எச்ஐவியில் உள்ள பிரச்சனை என்னவெனில் அந்த வைரஸ் தொடர்ந்து தன் னுடைய வடிவத்தை மாற்றிக்கொண்டே இருப்பதால் அதற்கான வேக்சின் தயாரிப்பது மிகவும் கடினமானது. தன்னுடைய வடிவத்தை மாற்றிக் கொள்ளும் வேறு சில வைரசுகளும் இருக்கின்றன- எடுத்துக்காட்டாக ∴ப்ளூ மற்றும் சாதாரண ஜலதோஷம். ஆனால் எச்ஐவி வைரஸ் இவற்றை காட்டிலும் விரைவாக தன்னுடைய வடிவத்தை மாற்றிக்கொள்கின்றது.

நாம் எச்ஐவிக்கு சக்திவாய்ந்த வேக்சினை தயாரிக்க பல ஆண்டுகள் ஆகும்.

தாயிடமிருந்து குழந்தைக்கு எச்ஐவி பரவாமல் நாம் எப்படி தடுக்க முடியும்?

வருத்தப்படும்விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் எச்ஐவியோடு பிறக்கின்றன.

கர்ப்பந்தரிக்கும்போதோ அல்லது பிள்ளை பேற்றின்போதோ தாயிடமிருந்து குழந்தைக்கு எச்ஐவி பரவலாம், தாய்ப்பாலின் மூலமாகவும் குழந்தைக்கு பரவலாம். இது பொதுவாக தாயிடமிருந்து குழந்தைக்கு பரவும் எச்ஐவி பரிமாற்றம் என்று அழைக்கப்படுகின்றது (MTCT). பல்வேறு அளவிலான காரியங்கள் இதை தடுக்கும்படியாக செய்யப்படலாம், எனவே எல்லா கர்பிணிப்பெண்களும் எச்ஐவி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

கர்பிணிப் பெண் எச்ஐவிக்கு நேர்மறையாக பரிசோதிக்கப்பட்டால், அதாவது மருத்துவர் அப்பெண்ணுக்கு ஆண்டிவைரல் சிகிச்சை தேவைப்படுமா என்று பார்க்க வேண்டும். அப்பெண்ணுக்கு சிகிச்சை தேவைப்பட்டால், குழந்தைக்கு எச்ஐவி வராமல் தடுக்க இது ஒரு சிறந்த வழி. அவருக்கு ஆண்டிவைரல் சிகிச்சை தேவைப்படவில்லை என்றால், கர்ப்பத்தின்போதும் பிள்ளைபேற்றின் போதும் குழந்தைக்கு எச்ஐவி வராமல் தடுக்க தாய்க்கு ஆண்டிவைரல் சிகிச்சை கொடுக்கப்பட வேண்டும்.

ஆண்டிவைரல் மருந்துகளில் பொதுவாக நெவிரபைன் அல்லது ஸிடோவுடைன் (பொதுவாக AZT என்றழைக்கப்படும்) இருக்கின்றது. நெவிரபைனை மற்றும் உபயோகிப்பது பெண்கள் கர்ப்பபராமரிப்புக்கு தாமதமாக வரும்போது மாத்திரமே கொடுக்கப்படலாம், ஆனால் அது நோய்பரவுவதை தடுக்க சிறந்தது அல்ல. பெரும்பாலான அதிக வருமானமுள்ள நாடுகளில் பல்வேறுவிதமான மருந்துகள் மற்றும் நல்ல கவனிப்பின் காரணமாக பேறுகாலத்தில் குழந்தைகளுக்கு எச்ஐவி பரவுவது[1] சதவிகிதத்திற்கும் குறைவாக குறைக்கப்பட்டு இருக்கின்றது. மருத்துவ மேற்பார்வையில் மாத்திரமே ஆண்டிவைரல் மருந்துகள் கொடுக்கப்பட வேண்டும்.

குழந்தை பிறந்தவுடன், மாற்று உணவைக் கொடுக்கலாமா என்பதை தாய் யோசிக்க வேண்டும்-எ.கா தாய்ப்பால் மாற்றுகள்- பாதுகாப்பானவை, நடைமுறைக்கு ஏற்றவை, வாங்கக் கூடியவை மற்றும் நீண்டகாலம் எடுத்துக்கொள்ளக்கூடியவை.இல்லை என்றால் மாற்று உணவு சாத்தியமாகும் வரை எவ்வித மாற்றும் இல்லாமல் தாய்ப்பால் கொடுக்கப்பட வேண்டும்.

எல்லா தாயார்களும் இந்த கடினமான முடிவுகளை எடுக்கும்போது தெளிவான தகவல், ஆதரவு மற்றும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் (மேலும் விவரங்களுக்கு, பக்கம் 75ல் இருக்கும் தாய்ப்பால் குறித்த கேள்வியைப் பார்க்கவும்)

---

1 UNAIDS சுருக்கத் தகவல்கள்

எச்ஐவி உடைய தாய்மார்கள் எவ்வளவு காலம் ஆண்டிவைரல் களால் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்?

சில நாடுகளில் மருந்துகள் குறைவாகவே இருக்கின்றன, எனவே எத்தனைபேர் எவ்வளவு காலம் சிகிச்சை பெறவேண்டும் என்கிற முடிவு மிகவும் கடினமானது. ஆண்டிவைரல்கள் பரவலாக கிடைக்கும்வரை, ஒரு பதில் என்னவென்றால் குழந்தை பிறப்பதற்கு முன்பு 14 நாட்கள் மட்டும் சிகிச்சை அளிக்க வேண்டும், குழந்தை பிறந்தவுடன் குழந்தைக்கு ஒரு டோஸ் மாத்திரம் கொடுக்கப்பட வேண்டும்.

மற்ற சிகிச்சை மையங்கள் ஆண்டிவைரல் எடுத்துக்கொள்ளத் தொடங் குகிறவர்கள் வாழ்நாள் முழுவது அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவெடுக்கலாம்-ஆனால் அதன் காரணமாக மிகக்குறைந்த கர்பிணிப் பெண்கள் மாத்திரமே குறைந்த காலத்திற்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும், விளைவாக அதிகமான குழந்தைகள் எச்ஐவியோடு பிறக்கக்கூடும். இது அச்சுறுத்தும் முடிவு.

ஆனால் எச்ஐவியை காட்டிலும் உடல்பராமரிப்பு அதிக முக்கியத்துவம் வாய்ந்தது ! சியரா லியோன் போன்ற நாட்டில் எச்ஐவியால் நோய் வாய் பட்டிருக்கும் வயது வந்தவரை யோசித்துப்பாருங்கள், அந்த குக்கிராமத் திலே ஒவ்வொரு வாரமும் கழிவுநீரால் அசுத்தமான தண்ணீரின் காரணமாக அல்லது மலேரியாவிற்கு சிகிச்சை இல்லாததினால் அல்லது வேறு ஏதாவது ஒன்றினால் இளம் குழந்தைகள் இறக்கிறார்கள், மிகக் குறைந்த தூரத்திலுள்ள மருத்துவ மையம் 20 மைல்களுக்கு அப்பால் இருக்கிறது, செடிகள் வழியாகத்தான் நடந்துசெல்ல வேண்டும். ஆரோக்கியத்தை திட் டமிடுகிறவர்கள் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஒட்டுமொத்த சமுதாயத் தின் ஆரோக்கிய தேவைகளில் கண்ணோக்கமாக இருந்து தங்களுடைய நிதியை குறித்து முடிவு எடுக்க வேண்டும்.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் உள்ளூரில் கிடைக்கக்கூடிய குறைந்த ஆதாரங்களைக் கொண்டு சிறந்த பயன்பாட்டை ஏற்படுத்த வேண்டும், ஒட்டுமொத்த சமுதாயமும் முடிவெடுப்பதில் பங்குபெற வேண்டும். எடுத்துக்காட்டாக, மிகக்குறைந்த ஆரோக்கியத்திற்கான நிதியை உடைய நாடு அதிகமான மக்களுக்கு இலவச ஆண்டிவைரல்கள் கொடுக் கப்போகிறதா அல்லது அடிப்படை காரியங்கள் அதாவது அறுவைசிகிச் சைநிபுணர்களுக்கும் செவிலியர்களுக்கும் தேவையான கைஉறைகள் போன்றவற்றை கொடுக்கப்போகின்றதா என்பதை தீர்மானிக்க வேண்டும். ஒன்றுக்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றொன்றிற்காக பயன்படுத்தப் படக்கூடாது என்பது மிகவும் முக்கியம் (பக்கம் 189-191 பார்க்க)

கருத்தில்கொள்ள வேண்டிய ஆண்டிவைரல் பிரச்சனைகள்

❐ சரக்கு -உண்மையிலேயே நீண்டகாலத்திற்கு கிடைக்கப் பெறுமா? இல்லையென்றால், எதிர்ப்பு அதிவிரைவில் வளர்ந்துவிடும்.

❐ ஏற்றுக்கொள்ளுதல் -அந்த நபர் தொடர்ச்சியாக ஆண்டி வைரலை

எடுத்துக்கொள்வாரா? அவருக்கு எதிர்ப்புசக்தியளவையம் இருந்தால் அந்த நாள் முதல் நாள்தோறும் மருந்துகளை எடுத்துக்கொள்ளுதல் அவசியம்.

7. கண்காணிப்பு நிலைநிறுத்தும் இரத்தப்பரிசோதனைக்கும் மேற் கொள்வதற்கும் வசதிகள் இருக்கின்றனவா? சரியாக கண்காணிக்கப் படவில்லை என்றால் ஆன்டிரெட்ரோவைரல்கள் உபயோகிக்கவேண்டாம்.

தாய்க்கு எச்ஐவி இருந்தால் தாய்ப்பால் கொடுப்பதினால் ஏற்படும் அபாயங்கள் என்னென்ன?

ஒரு குழந்தையின் வாழ்க்கையில் முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பாலே சிறந்த உணவு. அதில் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா ஊட்டச்சத்துக்களும் தண்ணீரும் இருக்கின்றது. பல பொதுவான நோய் பாதிப்புக்கு எதிரான நல்ல பாதுகாப்பு அதிலே இருக்கிறது. பாதுகாப்பான தண்ணீர், மற்றும் பால் வாங்குவதற்கு போதுமான வருமானம் மற்றும் அதை சுத்தமாகவும் கவனமாகவும் கலக்க முடிந்தால் மாத்திரமே மாற்று உணவை உபயோகப்படுத்த வேண்டும்.

குழந்தைக்கு இரண்டு வயதாகும் வரை தாய்ப்பால் மிகவும் முக்கியமான உணவாக இருக்கிறது. எனினும், ஆறு மாதங்களுக்குப் பிறகு எல்லா குழந்தைகளும் கூடுதல் உணவிற்கு மாறும் முன்னதாக திட உணவு என்னும் கூடுதல் உணவு அதிகரிக்கும் விகிதத்தில் தேவைப்படும். நல்ல விகிதத்தில் கொடுக்கப்படாத இந்த கூடுதல் உணவு இல்லையெனில், குழந்தைகள் சரியாக வளராது.

எச்ஐவி தாய்ப்பாலின் மூலமாக பரவலாம் என்பதால், எச்ஐவி உடைய தாய்க்கு ஒரு கடினமான தெரிந்தெடுப்பு இருக்கிறது. எனினும், ஆறுமாதங்கள் வரைக்கும் குழந்தைக்கு வேறு எந்த உணவும் திரவமும் கொடுக்கப்படாமல், தாய்ப்பால் மாத்திரம் கொடுக்கப்பட்டு, எவ்வளவு விரைவாக தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்துக்கொள்ள முடியுமோ நிறுத்திக்கொண்டால், அபாயம் மிகவும் குறைவு.

முதல் ஆறுமாதங்களில் தாய்ப்பாலோடு மற்ற உணவை கலப்பது தாய்ப்பால் மூலமாக எச்ஐவி குழந்தைக்கு பரவும் அபாயத்தை அதிகரிக்கும்.

தாய்ப்பாலினால் எச்ஐவி பரவி குழந்தைகள் இறப்பதை விடவும், தாய்ப்பால் கொடுக்கப்படாததினால் இறக்கின்ற குழந்தைகளே அதிகம். ஏழ்மையான சூழ்நிலைகளில் குழந்தைகளுக்கு புட்டிப்பால் கொடுக்கப்பட்டால், புட்டிகளும் தண்ணீரும் ஸ்டெரிலைஸ் செய்யப்படுவது கடினமாக இருக்கும்போது, குழந்தைகள் வயிற்றோட்டம், நிமோனியா மற்றும் பல காரணங்களினால் இறந்துபோகும் அபாயம் தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளைக் காட்டிலும் அதிகம்.

எவ்வளவு நீண்ட காலம் தாய்ப்பால் கொடுக்கிறார்களோ அவ்வளவு அதிக அபாயம் தாயிடமிருந்து குழந்தைக்கு தாய்ப்பால் மூலமாக எச்ஐவி பரவுவதற்கு இருக்கிறது.

- ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் கொடுத்தால் ஒவ்வொரு 20 குழந்தைகளில் ஒரு குழந்தை நோயினால் பாதிக்கப்படும்.
- ஒரு வருடம் தாய்ப்பால் கொடுத்தால் 20 குழந்தைகளில் இரண்டு நோயினால் பாதிக்கப்படும்
- இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து தாய்ப்பால் கொடுக்கப்பட்டால் 20 குழந்தைகளில் மூன்று நோயினால் பாதிக்கப்படும்.[2]

எச்ஐவிக்கான பரிசோதனைகள் என்ன?

மூன்று முக்கியமான எச்ஐவி பரிசோதனைகள் இருக்கின்றன. அறிகுறைகளை மாத்திரமே வைத்து எச்ஐவி உங்களுக்கு இருக்கிறதா இல்லையா என்று தீர்மானிக்க முடியாது.

எச்ஐவிக்கான முதல் பரிசோதனையின் பெயர் ஆண்டிபாடி பரிசோதனை. இந்த பரிசோதனையே மிகவும் சகஜமாக பயன்படுத்தப்படும் பரிசோதனை, இது ஒரு நபர் எச்ஐவியினால் பாதிக்கப்பட்டு இருக்கிறாரா என்பதை காட்டிவிடும். இதற்கு இரண்டு விதிவிலக்குகள் மாத்திரம் உண்டு. முதலாவது, நேர்மறையான தாயாருக்கு பிறக்கும் குழந்தைகள் 18 மாதங்கள் வரை தங்கள் தாயின் ஆண்டிபாடிக்களை வைத்துக்கொள்கின்றன. எனவே பாதிக்கப்படாவிட்டாலும் பரிசோதனை நேர்மறையான முடிவை கொடுக்கும். இரண்டாவதாக, எச்ஐவி வேக்சின்களை முயற்சி செய்தவர்கள் எச்ஐவியினால் பாதிக்கப்படாவிட்டாலும் எச்ஐவி ஆண்டிபாடிக்களை பெற்றிருக்கலாம்.

பெரும்பாலானோர் நோயினால் பாதிக்கப்பட்டு முதல் ஆறு முதல் 12 மாதங்களுக்கு அறியக்கூடிய எச்ஐவி ஆண்டிபாடிக்களை உருவாக்குவார்கள். நோய்பாதிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் பரிசோதிக்கப்பட்டால் தெளிவற்ற முடிவுகளைக் கொடுக்கும், ஏனென்றால் பாதிக்கப்பட்ட நபர் எச்ஐவிக்கு ஆண்டிபாடிக்களை உருவாக்கி இருக்கமாட்டார். நோய்பாதிப்புக்கும் ஆண்டிபாடிக்கள் உருவாகுவதற்கும் இடைப்பட்ட காலம் 'ஜன்னல் காலம்'என்று அழைக்கப்படுகின்றது. ஜன்னல் காலத்தின்போது எச்ஐவியினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுடைய இரத்தத்தில் எச்ஐவி பரிசோதனையில் கண்டறியக்கூடிய ஆண்டிபாடிக்களை உருவாக்கி இருக்க மாட்டார்கள். ஆண்டிபாடி பரிசோதனையில் நேர்மறையான முடிவு கிடைக்காதவர்களும் ஜன்னல் காலத்தில் மற்றவர்களுக்கு எச்ஐவியைப் பரப்பலாம்.

இரண்டாவது வகை பரிசோதனை ஒரு ஆண்டிஜென் பரிசோதனை. கிருமிகள் மீது இருந்துகொண்டு உடலில் ஆண்டிபாடிக்களை உருவாக்க தூண்டும் பொருட்களே ஆண்டிஜென்கள் ஆகும். எச்ஐவியில் பொதுவாக ஆண்டிபாடிக்களை தூண்டிவிடும் ஆண்டிஜென் புரதம் பி24 (P24). பி24

---

2. பில்லர்ஸ் கைடு ஆப் ஹெல்த்தி ஈட்டிங் எங்கிற புத்தகத்தில் இருந்து இந்த கேள்விக்கான பதில் எடுக்கப்பட்டுள்ளது. டியர்பண்ட். புள்ளிவிபரங்கள் லண்டன் ஸ்கூல் ஆப் ஹைஜீன் அண்டு ட்ராப்பிக்கள் மெடிசின்

ஆண்டிஜென் பரிசோதனை தானம்செய்யப்பட்ட இரத்தத்தை பரிசோதிக்க பயன்படுகின்றது, சாதாரண ஆண்டிபாடி பரிசோதனைக்கு முன்னதாகவே எச்ஐவியை இவற்றால் கண்டுபிடிக்க முடியும் என்பதால் மனிதர்களிடம் எச்ஐவியை பரிசோதிக்கவும் இது உதவும். சில நவீன எச்ஐவி பரிசோதனைகள் பி24 மற்றும் பிற ஆண்டிஜென் பரிசோதனைகளோடு சாதாரண ஆண்டிபாடி பரிசோதனைகளையும் இணைப்பதன் மூலமாக விரைவாகவும் துல்லியமாகவும் எச்ஐவியை கண்டுபிடிக்கிறார்கள்.

மூன்றாவது வகையான பரிசோதனை பிசிஆர் (PCR) பரிசோதனை (பாலிமிகிரேஸ் செயின் ரியாக்சன் டெஸ்ட்) பிசிஆர் பரிசோதனை எச்ஐவியின் பொதுவான ஜெனிடிக் பொருட்களையே கண்டுபிடித்துவிடும், புதிதாடு நோய்பாதிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள்ளேயே இரத்தத்தில் எச்ஐவியை கண்டுபிடித்துவிடும். பிசிஆர் பரிசோதனை தங்கள் தாயின் ஆண்டிபாடிக்களை பல மாதங்களுக்கு வைத்திருக்கக்கூடிய அவர்களுடைய குழந்தைகளிடம் பரிசோதிக்க உபயோகப்படுத்தலாம். அவை மிகவும் விலையுயர்ந்தவை என்பதாலும், சாதாரண ஆண்டிபாடி அல்லது பி24 பரிசோதனையைக் காட்டிலும் சிக்கலானவை வயது வந்த பெரியோர்களிடம் எச்ஐவி பரிசோதிக்க அபூர்வமாகவே பயன்படுத்தப்படுகின்றது.[3]

என்னுடைய குழந்தை பரிசோதனையில் எச்ஐவி பாசிடிவ் என முடிவாகியுள்ளது-அவளுக்கு நோய் பாதிக்கப்பட்டு விட்டதா?

வழக்கமான எச்ஐவி பரிசோதனைகள் புதிதாக பிறந்த குழந்தைகளிடம் வேலை செய்வதில்லை. ஏனென்றால் புதிதாக பிறந்த குழந்தைகள் ஒவ்வொன்றும் தங்கள் தாயிடமிருந்து ஆண்டிபாடிக்களை கருவில் இருந்தே தன்னுடைய இரத்தத்தில் பெற்றுக் கொள்கின்றன. எனவேதான் நோய் பாதிக்கப்பட்டாலும் இல்லை என் றாலும் இப்படிப்பட்ட குழந்தைகள் எச்ஐவி பாசிடிவாக பரிசோதனையில் தெரிகின்றன. ஒரு வருடத்திற்கு பிறகு நீங்கள் பரிசோதித்தால் சிகிச்சை இல்லாமலேயே இக்குழந்தைகளில் பல நோய்பாதிப்பு இல்லாமல் இருக்கின்றன.

எனக்கு எச்ஐவி இருந்தால் நான் எப்படி ஆரோக்கியமாக இருக்கமுடியும்?

உங்களுடைய நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக்கூடிய எதுவும் நீங்கள் ஆரோக்கியமாக வாழ உதவும், அதை பலவீனப்படுத்தும் காரியங்கள் தவிர்க்கப்பட வேண்டும். உங்களை நன்றாகப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று பொது உணர்வு கூறும். சரியான தினசரி உணவை தினமும் சாப்பிடுங்கள், உடற்பயிற்சி சற்று செய்யுங்கள், உங்களுடைய எடையை சரியான அளவில் வைத்திருங்கள், அதிகமான

---

3 இந்த பதிலுக்கான கட்டுரை அவேர்ட்டில் இருந்து எடுக்கப்பட்டது

பழங்களை சாப்பிடுங்கள், புகைப்பிடித்தலை குறைத்துக்கொள்ளுங்கள் (அதிகமான அழுத்தம் இல்லாமல் உங்களால் இருக்கக்கூடுமானால்) , மது அருந்துவதை குறைத்துக்கொள்ளுங்கள், எல்லாவிதமான கேளிக்கை மதுபானங்களையும் குறைத்துவிட்டு, போதுமான உறக்கத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். இந்த குறைந்த செலவிலான நடவடிக்கைகள் பெரும்பாலோரின் குறிப்பாக எச்ஐவி உடையவர்கள் மற்றும் எச்ஐவியினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையின் அளவையும் நலனையும் அதிகரிக்கக்கூடியவை. ஆனால் விஞ்ஞான ரீதியாக பரிசோதிக்கப்படாத நிவாரணங்களுக்காக பணத்தை வீணாக்க வேண்டாம். மேலும் உங்கள் மருத்துவர் மற்றும் செவிலியரிடம் கலந்தாலோசிக்காமல் மருத்துவமனையில் இருந்து மருந்துகளை நிறுத்திவிடவேண்டாம்.

இந்தியாவில் உள்ள ACET சிறு மருத்துவமனைகள் எச்ஐவி உடைய மக்களை கவனிப்பதில் நல்ல ஊட்டச்சத்து மற்றும் வைட்டமின் மாற்றுணவுகள், மார்பு நோய்பாதிப்பில் இருந்து பாதுகாக்க அடிப்படை ஆண்டிபயோடிக், த்ரஸ் நோயில் இருந்து பாதுகாக்க ஒரு ஆண்டிபங்கஸ் போன்ற எளிய காரியங்களின் மூலமாக குறிப்பிடத்தக்க விளைவுகளை பார்த்திருக்கிறார்கள். இந்த அணுகுமுறைகள் பரவலாக உபயோகப் படுத்தப்பட தொடங்கிவிட்டன, ஏனென்றால் அவை குறைந்த விலையில், சிறந்த மற்றும் எளிய முறையில் பாதுகாப்பு அளிப்பனவாகவும் இருக்கின்றன.

உங்களிடத்தில் அன்பாக இருங்கள். இந்த செய்தியை கிரகித்துக்கொள்ள உங்களுக்கு அதிக நேரம் எடுத்துக்கொள்ளலாம். குடும்பத்திடம் இருந்தும் நண்பர்களிடமிருந்தும் உங்களுக்கு அதிகமான ஆதரவும் ஊக்கமும் தேவைப்படும். போதுமான ஓய்வு எடுத் துக் கொள்ளுங்கள். நீங்கள் சற்று களைப்படைந்தால் சற்று நிதானித் துக் கொள்ளுங்கள்-அச்செய்தியை கிரகித்துக்கொள்வதும் சற்றும் சோர்வடையச் செய்யலாம் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

எச்ஐவிக்கோ அல்லது மற்ற உடலுறவினால் பரவக்கூடிய நோய்களுக்கோ அல்லது வேறு நோய்களுக்கோ உங்களை உட்படுத்திக் கொள்ளாமல் பார்த்துக்கொள்ள உங்களால் ஆனதை செய்யுங்கள். உள்ளூர் மருத்துவமனை அல்லது சிறு மருத்துவமனையில் நீங்கள் பதிவுசெய்துகொள்ளுங்கள், அதன் மூலமாக அவர்கள் தங்களிடத்தில் இருக்கும் சிறந்த சிகிச்சையை உங்களுக்கு கொடுக்க முடியும். அவர்கள் கூறியபடி எல்லா மருந்துகளையும் உரிய நேரத்தில் எடுத்துக்கொள்ள மறந்துவிடாதிருங்கள். நீங்கள் உடல்நலக்குறைவாக இருந்தால் உடனடியாக உதவியை நாடுங்கள், தானாக சரியாகிவிடும் என்று எதிர்பார்த்துக்கொண்டு இருக்காதீர்கள்.

உங்கள் நீண்டகால திட்டங்களைக் குறித்து யோசித்து ஜெபித்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு எது முக்கியம்? நீங்கள் எடுக்க வேண்டிய முடிவுகள் ஏதாகிலும் இருக்கிறதா? மற்றவர்களிடம் ஆலோசித்து

சிந்திருக்காமல் நீங்கள் பின்னால் வருத்தப்படக்கூடிய தீர்மானங்களை எடுத்துவிடாதீர்கள்.

INERELA+

எச்ஐவி உடைய 3500 மதத்தலைவர்களின் ஒருங்கிணைப்பு

INERELA+ என்பது ஒரு சர்வதேச, -சாதாரண மற்றும் அபிஷேகிக்கப்பட்ட, பெண்கள் மற்றும் ஆண்கள்-எச்ஐவி பாதிக்கப்பட்டோருடன் வாழ்கின்ற அல்லது தனிப்பட்ட முறையில் எச் ஐவியால் பாதிக்கப்பட்ட மதத்தலைவர்களின் சர்வ விசுவாசத்தின் ஒருங்கிணைப்பு. தங்களுடைய சமுதாயத்திற்கு ஒழுக்கம் மற்றும் நெறியில் வழிநடத்துவதில் மதத் தலைவர்கள் முக்கிய கதாபாத்திரம் வகிக்கும் பிரத்தியேக அதிகாரம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்பது அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறது. INERELA+ தன்னுடைய உறுப்பினர்கள் மௌனத்தை உடைத்து, அவமானத்திற்கு சவால் விட்டு, ஆதாரத்தின் தகவலின் அடிப்படையிலான பாதுகாப்பையும், கவனிப்பையும், சிகிச்சை சேவைகளையும் கொடுப்பதற்கு தங்களுடைய மரியாதைக்குரிய பதவியை உபயோகப்படுத்த வலிமைப்படுத்துகிறது.

இந்த யோசனை 2006ல் முதலாவது ஆப்பிரிக்க ஒருங்கிணைப்பான ANERELA+ வின் உலகளாவிய விரிவாக்கத்தில் பகிரங்கமாக கலந்தாலோசிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மெக்சிகோ நகரத்தில் உள்ள சர்வதேச எய்ட்ஸ் மாநாட்டில் துவக்கப்பட்டது. 2003ல் ANERELA+ நிறுவப்படும் முன்பு ஆப்பிரிக்காவில் மிகக்குறைந்த மதத்தலைவர்கள் மாத்திரமே பகிரங்கமாக எச்ஐவியோடு வாழ்ந்து வந்தனர், அவர்களும் தங்கள் எச்ஐவி+ குடும்பத்தைப் பற்றி வெளிப்படையாக பேசவிரும்பவில்லை. அப்படிப் பேசியவர்களில் சிலருக்கும் எவ்விதமான ஆதரவுகொடுக்கும் கட்டமைப்பும், ஒன்றிணைந்து குரல் கொடுப்போரும் இல்லை. இதை ஏற்றுக்கொள்ள முடியாத சமுதாயத்திலே, மதத்தலைவர்கள் அவமானம் மற்றும் பிரிவினைக்கு பயந்து மௌனமாகவே இருந்தார்கள். ANERELA+ இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வுகாண எதிர்பார்த்தது.

ஐந்து வருடங்களுக்குள், இந்த இரண்டு ஒருங்கிணைப்புகளும், ஐந்து கண்டங்களில் 3500 உறுப்பினர்களுக்கு மேல் வளர்ந்துவிட்டது. INERELA+ தொடங்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்குள், ஒருங்கிணைப்பானது 6000 உலகளாவிய உறுப்பினர்களுக்கு மேல் வளரும் என்று நம்பப்பட்டது. இந்த புதிய உறுப்பினர்கள் தங்களுடைய விசுவாச சமுதாயத்திற்கு துல்லியமான தகவல்களையும் மற்ற சேவைகளையும் உலக அளவில் 25 கோடி பேருக்கு கொடுப்பார்கள் என்று கணக்

கிடப்பட்டு உள்ளது. இதன் மூலமாக எச்ஐவி சம்மந்தமான மௌனத்தையும், வெட்கத்தையும், அவமானத்தையும், பிரிவினைகளையும் குறைத்து அதன் விளைவாக புதிய நோய்பாதிப்பின் எண்ணிக்கையும் குறைக்கப்படும்.

ஆதாரம் : www.inerela.org <http://www.inerela.org/>

தனக்கு எச்ஐவி இருப்பதை தற்போதுதான் கண்டுபிடித்த ஒருவருக்கு நான் எப்படி உதவலாம்?

அச்சூழ்நிலையை நிதானித்துக்கொள்ள அந்த நபர் ஒருவகையான அதிர்ச்சியில் இருப்பார். அவர்களையோ அவர்களுடைய பிள்ளைகளையோ வெறுத்துவிடுவீர்கள் என்று அவர்கள் பயப்படலாம்.

எச்ஐவியைக் குறித்தோ அல்லது அதைக் குறித்து அவர்கள் என்ன யோசிக்கிறார்கள் என்பதைக் குறித்தோ பேசவோ அல்லது யோசிக்கவோ அவர்கள் விரும்பமாட்டார்கள். எதுவுமே நடக்காதது போல அவர்கள் இருக்கலாம். வேறுவிதமாக அவர்கள் அதைக் குறித்தே எப்போதும் பேசிக் கொண்டு, அல்லது மனம் சோர்ந்து அமைதியடைந்து, விலகிச்செல்லலாம். அவர்களுக்கு எப்படி எச்ஐவி வந்தது என்பதைக் குறித்தும் எத்தனைப் பேருக்கு அவர்கள் அந்த வைரஸை எடுத்துச் சென்றிருக்கிறார்கள் என்பது குறித்தும் அவர்கள் குற்ற உணர்வு அடையலாம். அவர்களுக்கு எச்ஐவி எப்படி வந்தது என்று அவர்கள் கோபமாகவும் இருக்கலாம்.

கவனியுங்கள்; பேசுவதற்கு பொறுமையாக இருங்கள்; ஆலோசனை கூறுவதற்கு மிகவும் பொறுமையாக இருங்கள். அந்த நபர் பின்னர் வருத்தப்படக்கூடிய திடீர் முடிவுகளுக்கு ஊக்கப்படுத்தாதிருங்கள். தனிமையும், எதிர்காலத்தைக் குறித்த பயமும் ஏற்றுக் கொள்வதற்கு கடினமான காரியங்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். "உன்னுடைய உணர்வுகள் எனக்கு புரிகிறது" என்று கூறாதிருங்கள், உங்களுக்கு எப்போதுமே அது தெரியாது, ஆனால் அதை புரிந்துகொள்ள நீங்கள் முயற்சிக்கலாம். நடைமுறை உதவிசெய்ய தயாராக இருங்கள் ஆனால் மற்றவருடைய வாழ்க்கையை உங்கள் கையில் எடுத்துக்கொள்ள விரைந்து விடாதிருங்கள். அவர்களுடைய அனுமதி இல்லாமல் மற்றவர்களிடம் அவர்களுடைய சூழ்நிலையைக் குறித்து பேசாதிருங்கள்.

நாங்கள் திருமணத்திற்காக நிச்சயிக்கப்பட்டு இருக்கிறோம், எங்களில் ஒருவர் எச்ஐவி பாசிடிவ் என பரிசோதனையில் தெரியவந்துள்ளது. நாங்கள் திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்று மக்கள் கூறுகிறார்கள். நாங்கள் என்ன செய்யட்டும்?

இது மிகவும் சகஜமான மனவுழைச்சலை ஏற்படுத்தும் சூழ்நிலை. நிச்சயிக்கப்பட்ட தம்பதிகளில் ஒருவருக்கு எச்ஐவி இருந்து மற்றவருக்கு இல்லை என்கிறபோது சிறப்பான தாம்பத்திய உறவு அவர்களில் ஒருவரைக் கொன்றுவிடக்கூடும். இக்காரணத்தினால், உலகின் சில பகுதிகளில்

ஆகவும் பல திருச்சபைத் தலைவர்கள் தம்பதிகள் இருவரும் பரிசோதிக்கப்பட்டு இருவருக்குமே எச்ஜவி இருந்தால் அல்லது இருவருக்குமே இல்லாவிட்டால் மாத்திரமே திருமணம் செய்துவைக்கப்படும். எனினும், பரிசோதிப்பது நல்ல யோசனையாக இருந்தாலும், என்னுடைய கண்ணோட்டத்தில் மக்களுக்கு திருமணம் செய்துவைக்காமல் இருப்பது நியாயமாக இருக்காது.

இதற்கு துவக்கமாக, நாம் பின்பு பார்க்கப்போவதைப் போல எச்ஜவி உடைய நபர் நல்ல ஆரோக்கியத்துடன், ஒவ்வொரு முறையும் உடலுறவு கொள்ளும்போதும் காப்புறை உபயோகித்தால் மற்றவருக்கு வைரஸை கடத்திச்செல்வதற்கான சாத்தியம் மிகவும் குறைவு. சொல்லப்போனால் அவர்கள் உடலுறவுகொள்ளும் 4000 முறையில் ஒருமுறை மாத்திரமே அதற்கு சாத்தியம் இருக்கிறது.[4] அல்லது அந்த நபர் எச்ஜவி ஆண்டிவைரல் சிகிச்சியாக எடுத்துக்கொண்டால் அதற்கான சாத்தியம் இன்னமும் குறைவாகவே இருக்கும்.

மேற்கு/மத்திய ஆப்பிரிக்காவில் நிச்சயதார்த்தமும் திருமணமும்

திருமணத்திற்கு சில மாதங்களுக்கு முன்பாக நிச்சயிக்கப்பட்ட தம்பதிகள் பரிசோதித்துக்கொள்ள வேண்டும் என்று அவர்களுடைய போதகரால் அறிவுறுத்தப்பட்டனர். மாப்பிள்ளை பாதிப்பைபெற்றிருந்தார். இரண்டு குடும்பங்களும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். மாப்பிள்ளை ஏற்கனவே இறந்துபோனதைப்போல அவருடைய பெற்றோர்கள் துக்கமடைந்தனர். திருமணம் தடை செய்யப்பட்டது. நல்லவேளையாக அந்த தம்பதியினர் உடலுறவில் ஈடுபடாமல் இருந்ததினால், அப்பெண் பரிசோதனையில் எதிர்மறையாக இருந்தார். முக்கியமான உறவில் ஈடுபடும் முன்பாக தம்பதிகள் பரிசோதிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் போதகர்களிடம் எப்போதுமே கூறுவது உண்டு. அதே சமயத்தில் ஹெப்பத்திடிஸ் மற்றும் சிக்கில் செல் பரிசோதனைசெய்யவும் நாங்கள் ஊக்கப்படுத்துகிறோம்.'

'எங்கள் குடும்பத்தின் நெருங்கிய உறவினர் ஒரு இளைஞனுக்கு நிச்சயிக்கப்பட்டு இருந்தார். தங்களுடைய அனுமதியை கொடுப்பதற்கு முன்பாக மாப்பிள்ளையின் வீட்டாரிடத்தில் சில கருத்துவேறுபாடுகள் இருந்தன. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அப்பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு திருமணம் திட்டமிடப்பட்டது. திருமணத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாக அவர்களில் ஒருவருக்கு எச்ஜவி பாசிடிவ் என பரிசோதனையில் தெரியவந்தது. மாப்பிள்ளையின் குடும்பத்திற்கு இது

---

4 சாதாரண உடலுறவில் 200ல் 1 ஆபத்தானதாக இருக்கலாம், ஆனால் காப்புறையை கவனமாக உபயோகித்தால் அதை 95 சதவிகிதம் குறைக்கலாம், அல்லது 20 மடங்கு குறைவாக, 200ல் 20 மடங்கு என்றால் 4000.

ஒரு முக்கியமான பிரச்சனை- வரதட்சனை ஏற்கனவே கொடுக்கப்பட்டுவிட்டதால் இது மிகவும் சிக்கலாகிவிட்டது. மணப்பெண்ணின் வீட்டார் இதை கண்டுபிடிக்கும்போது, திருமணம் செய்யாமல் இருக்க அவர்களிடத்தில் பெரிய அழுத்தம் இருக்கும்'

'எங்களுடைய எய்ட்ஸ் நிகழ்ச்சி ஒன்றில் பயிற்சிபெற்ற ஒரு பெண் திருமணத்திற்கு முன்பு கன்னியாகவும் அதன் பின்பும் உண்மையுள்ளவராகவும் இருந்தவர். அவர் ஒரு குழந்தையைப் பெற்றார், அது வியாதிப்பட்டு இறந்தது, அது எச்ஐவி நோய்பாதிப்பினால் நடந்தது என்று மருத்துவர்கள் கண்டுபிடித்தனர். பின்பு அவருடைய கணவர் மரித்துப்போனார், ஆனால் அப்பெண் ஆண்டிவைரல்கள் மூலமாக நல்லபடியாக இருந்தார். அவர் விதவையானபோது கடவுளை குற்றம் சாட்டினார். அவர் தீங்குக்கு விலகியும், விசுவாசமாகவும் இருந்தபோதிலும் நோய்பாதிக்க அவர் ஏன் அனுமதித்தார்? அவருடைய போதகர் அவருக்கு ஆறுதல் கூறி பின்னர் அவரை திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகவும் கூறினார். அப்பெண்: "எனக்கு எச்ஐவி இருக்கிறது" என்றார். போதகர்: "அது பரவாயில்லை. உங்களை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று கடவுள் என்னிடம் தெளிவாக கூறிவிட்டார்" என்றார். அவர்கள் திருமணமாகி ஐந்து ஆண்டுகளாக மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு குழந்தை இல்லை. சபையின் பெண்கள் ஊழியத்தில் அவர் தலைமை தாங்குகிறார். அப்பெண் மிகவும் நலமாக இருப்பதால், சபையில் இருக்கும் பல பெண்கள் குழப்பமடைந்து இருக்கிறார்கள். கணவர் இன்னமும் எச்ஐவி நெகடிவாக இருக்கிறார். இப்போது அவர்கள் கர்ப்பமாக முயற்சிக்க தயாராகி வருகிறார்கள். அவர்கள் காப்புறை உபயோகித்து வந்தார்கள், மேலும் அப்பெண்ணுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் அவர்களுடைய நோய்பாதிப்பின் அபாயத்தை குறைத்து இருக்கிறது'.

சில ஆண்டுகளுக்குப் பிறகு மற்றவரும் எச்ஐவி பாசிடிவாக பரிசோதிக்கப்பட்டால் (சாத்தியமில்லை ஆனால் நம்பிக்கையின் அடிப்படையில்), நீங்கள் இருவருமே ஆண்டிவைரல் சிகிச்சை எடுத்துக் கொண்டால், நீங்கள் இருவருமே குறிப்பிடத்தக்க சகஜமான வாழ்க்கை பல ஆண்டுகளுக்கு வாழ சாத்தியங்கள் இருக்கின்றன.

நான் சொல்வதெல்லாம், இவை அனைத்தும் மிகவும் சிக்கலான, உண்மையான கேள்விகள், இவற்றை ஜெபித்து பிரதிபலித்து கவனமாக பேசவேண்டும். பல சமயங்களில் தம்பதிகள் மிகவும் தாமதமாகவே பரிசோதிக்க தீர்மானிக்கிறார்கள்-திருமணத்திற்கு ஒரு வாரத்துக்கு முன்பாக- எனவே முடிவு பாசிடிவாக இருந்தால் என்ன செய்வது என்று யோசிக்கவும் நேரம் இருப்பதில்லை.

பெற்றோராலும் மற்ற உறவினர்களாலும் மக்களுடைய வாழ்க்கை கொடூரமாக கிழித்து எறியப்படுகின்றன. திருமணங்கள் திடீரென தடைசெய்

படலாம், மற்றவர்களுக்கு அதைக் கூற அந்த நபர் தயாராகும் முன்பாக உறவினர்கள் பரிசோதனையின் முடிவை அறிந்துகொள்கிறார்கள்.

இந்த காரணங்களினால் தம்பதிகள் தங்கள் உறவின் ஆரம்ப நிலையிலேயே இருவருக்கும் எச்ஐவி இருக்கிறதற்கான அபாயம் இருக்கிறதா என்று பரிசோதித்துக்கொள்ள வேண்டும். பரிசோதனைக்கு முன்பாக தம்பதிகள் ஆலோசனை பெற்றுக்கொள்ள வேண்டும், இதன் மூலமாக பரிசோதனையில் முடிவு நேர்மறையாக இருந்தால் என்ன செய்யலாம் என்று யோசிக்க ஒரு வாய்ப்பு கிடைக்கும். நிச்சயமான தம்பதிகளையும், எச்ஐவி உடையவர்களையும், அவர்களை நேசிப்பவர்களையும், சபையாரையும் ஆதரிப்பதில் சபைத் தலைவர்களுக்கு மிகப்பெரும் பாத்திரம் இருக்கின்றது.

தம்பதிகளில் ஒருவருக்கோ அல்லது இருவருக்குமோ எச்ஐவி இருக்கும்போது குழந்தை பெறவேண்டும் என்கிறவர்களை குறித்து என்ன?

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறவர்களை நாம் ஊக்கப்படுத்தி அவர்கள் மிகவும் கவனிப்புள்ளவர்களாகவும் பொறுப்பானவர்களாகவும் இருக்கும்படியாகவும்,அவர்களுக்கு நோய்பதிப்பு ஏற்படக்கூடிய அபாயத்தைக் குறித்தும், இளம் வயதில் அனாதைகளாவதைக் குறித்தும் குழந்தை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதற்கு முன்பாக மிகவும் கவனமாக யோசிக்கவும் நாம் ஊக்கப்படுத்த வேண்டும். எனினும், தனிநபர்களுக்காக திருச்சபை இத்தகைய முடிவுகளை எடுக்கக்கூடாது; சபையானது நல்ல ஆலோசனையையும் ஆதரவையும் மாத்திரமே கொடுக்க வேண்டும்.

ஓரளவு நல்ல உடல்நிலையில் இருக்கும் ஒரு எச்ஐவி உடைய பெண், குழந்தை பெற்றுக்கொள்ள தீர்மானித்தால், பிரசவத்திற்கு குறைந்தது *14* நாட்களுக்கு முன்பாகவே ஆண்டிவைரல்கள் எடுத்துக்கொண்டால், எச்ஐவியோடு குழந்தை பிறப்பதற்கான சாத்தியம் *20*ல் *1*ஆக குறையும். சிகிச்சை இல்லாமல், அபாயம் *3*ல் *1*ஆக இருக்கும். கர்ப்பமாக இருக்கும் ஒரு தாய்க்கு கொடுக்கும் ஒரு ஆண்டிவைரல் டோஸும், பிறந்தவுடன் குழந்தைக்கு கொடுக்கப்படும் டோஸும் அபாயத்தை கணிசமாக குறைக்கும். ஆராய்ச்சியின் முடிவுகள் வித்தியாசப்படலாம், ஆனால் செய்தி தெளிவாக இருக்கிறது: எச்ஐவி பாசிடிவ் தாயாருக்கு பிறக்கும் குழந்தைகள் பெரும்பாலானோர் ஆரோக்கியமாகவும், சகஜமான வாழ்க்கையும் வாழ்வார்கள். சிறந்த சிகிச்சையினால், எச்ஐவி தாயார் எச்ஐவி குழந்தையை பெற்றெடுப்பதற்கான அபாயம் மிகவும் குறைவு.

அப்படிப்பட்ட தம்பதிகள் குழந்தை பெற முயற்சிப்பதினால் இருக்கும் அபாயம் மிகவும் அதிகம் என்று இன்னமும் சிலர் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நாம் நிலையாக இருப்போம். சபையில் உள்ள ஒரு பெண்ணுக்கு மார்பு புற்றுநோய்க்காக சிகிச்சை அளிக்கப்பட்டு, இன்னும் 10 ஆண்டுகளாவது அதிகமாக வாழ்வார் என்று மருத்துவர்களால் நம்பப்படுகிறது. அவருடைய ஜீன் அவருடைய மகள்களுக்கும் சென்றடையக்கூடும், அதன் மூலமாக அவர்கள் பருவமடையும்போது அதே புற்றுநோய் அவர்களுக்கும் வரலாம் என்று கூறப்பட்டு இருக்கலாம்.

அப்படிப்பட்ட பெண் திருமணம் செய்யக்கூடாது, குடும்பமாகக்கூடாது என்று கூறுவீர்களா? நல்ல சிகிச்சையின் காரணமாக எச்ஐவி ஒரு நீண்ட கால நிலையாக இருக்கலாம், 20 ஆண்டுகளுக்கு மேல் மக்கள் வாழக்கூடும். அவர்களுடைய பிள்ளைகளில் பெரும்பாலானோர் ஆரோக்கியமாக வாழலாம், அவர்களுக்கு எச்ஐவி இருந்தாலும் அவர்கள் பருவவயது வரை நிச்சயமாக வாழமுடியும்.

புதிய 'நிவாரணங்கள்' குறித்த வதந்திகளைப் பற்றி என்ன?

எச்ஐவி நோய்பாதிப்பு மற்றும் எய்ட்ஸுக்கான நிவாரணங்கள் குறித்து நீங்கள் கேள்விப்படும், வாசிக்கும் பல காரியங்கள் வெறும் குப்பை. குணப்படுத்துவது அவ்வளவு சுலபமாக இருந்தால், அல்லது ஒரு வேக்சின் உண்மையாகவே வேலை செய்தால், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவமனைகள் மற்றும் அரசாங்கங்கள் வருத்தப்படுவதை நிறுத்திக் கொள்ளலாம்.

எச்ஐவி உடைய மக்கள் எச்ஐவி உடலை பலவீனப்படுத்தியவுடன் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் பல்வேறு நோய் தாக்கங்களினால் இறந்துபோகிறார்கள். எனவே இந்த மற்ற நோய்பாதிப்புகளில் இருந்து விடுதலை அளிக்கக்கூடிய எதுவானாலும் ஒருவர் திடீர் உடல்நலம்பெற உதவியாக இருக்கும். அவர்கள் நலமாக மருத்துவமனையில் இருந்து சென்றுவிடலாம், சில மாதங்களுக்குப் பிறகும் நலமாகவே இருக்கலாம். அவர்களுக்கு அடுத்த நோய்பாதிப்பு ஏற்படும்வரை அவர்கள் குணமாகிவிட்டார்கள் என்றே மக்கள் நினைப்பார்கள். இது வதந்திகளுக்கு மற்ற தவறான அறிக்கைகளுக்கும் வழிவகுக்கும். அந்த நபர் நன்றாக தோற்றமளித்தாலும், சூழ்நிலை இன்னமும் கடுமையானதாகவே இருக்கக்கூடும். இதே குழப்பம் இயற்கைக்கு அப்பாற்பட்ட சுகமளிப்பிலும் ஏற்படலாம் (பக்கம் 117 பார்க்க).

எச்ஐவி எந்த அளவுக்கு பாதிக்கக்கூடியது?

ஆரோக்கியமான தோல் எச்ஐவிக்கு எதிரான ஒரு நல்ல பாதுகாப்பு. ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான சாதாரண உடலுறவு, பாதுகாப்பற்ற எச்ஐவி உடைய துணைவரோடு எடுத்துக்கொள்ளும் உடலுறவில் இருந்து 200க்கு 1 விகிதத்தில் இருக்கும். ஆனால் ஒருவருக்கு சிகிச்சை அளிக்கப்படாத உடலுறவினால் பரவக்கூடைய வியாதி, அதாவது கேன்க்ராய்டு அல்லது கொனொரியா (தேமல்களும் சரும பாதிப்பும் ஏற்படுத்தக்கூடியவை), நோய்பரவுவதற்கான அபாயம் 10 முதல் 20 மடங்கு அதிகரிக்கும். அந்த நபருக்கு எய்ட்ஸும் இருந்தாலும் இது சாத்தியமாகவே இருக்கும்.

சரியாக ஸ்டெரிலைஸ் செய்யப்படாத ஊசி கருவியைப் பயன்படுத்தினாலும் நோய்பாதிப்புக்கான அபாயம் அதிகமாகவே இருக்கும். மென்மையான தோல் பாதிக்கப்படுவதால், பாலியல் பலாத்காரத்திலும் இந்த அபாயம் அதிகமாகவே இருக்கிறது.

சில பொருட்கள் எச்ஐவியைக் கொடுக்கலாம் என்று சிலரும், அவை கொடுக்காது என சிலரும் கூறுவதால் நான் குழம்பிப்போய் இருக்கிறேன்'.

திருவிருந்து கோப்பை அல்லது ஒரு குவளையை பகிர்ந்துகொள்வதால் உங்களுக்கு எச்ஐவி வருமா? முத்தம் கொடுப்பது, நீந்துவது, கொசுக்கள், அல்லது கழிப்பிட இருக்கை, அல்லது ஈ - போன்ற ஏதாகிலும் ஒன்று? இதற்கு பதில் இல்லை என்பதுதான். எச்ஐவி உடைய ஒருவரை தொடுவதாலும் கட்டிப்பிடிப்பதாலும் உங்களுக்கு எச்ஐவி வராது.

ஒரு காயம் இருந்தாலே தவிர வைரஸினால் தோலை கடந்து வரமுடியாது என்கிறீர்கள். ஆனால் அது உண்மையாக இருந்தால், அது எப்படி ஒரு பெண்ணிடமிருந்து ஆணுக்கும், அல்லது ஆணிடமிருந்து பெண்ணுக்கும் பரவ முடியும்?'

ஆணுருப்பில் இருக்கும் தோலும், பெண்ணின் உள்ளே இருக்கும் தோலும், மென்மையாகவும், உணர்வுள்ளதாகவும் இருக்கும். முற்றிலும் வலியில்லாத, பாதிப்பில்லாத, மிகச்சிறிய பல விரிசல்கள் இரண்டு துணையானவர்களும் உடலுறவு கொள்ளும்போது ஏற்படுகின்றன. இப்படித்தான் அந்த வைரஸ்கள் உள்ளே நுழைகின்றன. நாம் பார்த்தபடி, மற்ற எந்த வகையான உடலுறவினால் பரவக்கூடிய வியாதியும் தோலில் இரத்தம் வருவதற்கான வாய்ப்பை அதிகரிக்கின்றன.

ஒரு ஆணிடமிருந்து ஆணுக்கு எச்ஐவி உடலுறவின் மூலமாக பரவுவது எப்படி?

ஆசனக்குழாய் உடலுறவைக் குறித்து பேச மக்கள் பல நேரங்களில் சங்கடப்படுகிறார்கள், ஆனால் அது பலர் எண்ணுவதைக் காட்டிலும் அதிகமாகவே நிகழ்கின்றது, அது சட்டவிரோதமாக இருக்கும் நாடுகளிலும் தான் நாங்கள் ஆண்கள் ஆண்களோடு உடலுறவுகொள்வதை குறித்து மாத்திரம் கூறவில்லை. சில ஈரினச்சேர்க்கை தம்பதிகளும் பல்வேறு காரணங்களுக்காக (கர்ப்பமாகாமல் தடுக்க) ஆசனக்குழாய் உடலுறவை செயல்படுத்துகிறார்கள், அதில் எச்ஐவி நோய் பரவுவதை தடுக்கலாம் என்கிற தவறான நம்பிக்கையும் ஒன்று. ஆண்களோடு உடலுறவுகொள்ளும் பல ஆண்கள், பெண்களுடனும் உடலுறவுகொள்கிறார்கள் எனவே எச்ஐவி பரவும் விதம் பல நேரங்களில் சிக்கலானதாக இருக்கிறது.

ஒரு ஆண் தன்னுடைய ஆணுறுப்பை ஒரு ஆண் அல்லது பெண்ணின் ஆசனக்குழாயில் செலுத்தும்போது (இதுதான் ஆசனக்குழாய் உடலுறவு), எச்ஐவி பரவுவதற்கான அபாயம் அதிகமாகவே இருக்கின்றது. பலர் இவ்வழியாக எச்ஐவி பாசிடிவாக மாறியிருகிறார்கள். உடலுறவை பெற்றுக்கொள்கிறவருக்கு அபாயம் அதிகமாக இருக்கிறது ஏனென்றால், ஆசனவாயிலில் இருக்கிற அணுக்கள் எச்ஐவியினால் பாதிக்கப்படக்கூடும். லூப்ரிக்கேஷன் (உராய்வை குறைக்கும் திரவம்) உபயோகப்படுத்த

தவறுவது தோலில் சிறிய விரிசல்கள் உருவாகுவதை அதிக சாத்தியமுள்ளதாக்கிவிடும், அது அபாயத்தையும் அதிகரிக்கும்.

சில கிறிஸ்தவர்கள் இந்த பிரச்சனைக்கு வன்மையாக பதிலளிக்கிறார்கள், ஆண்களோடு உடலுறவு கொள்ளும் ஆண்களுக்கும், உடலுறவுப் பணியாளர்களுக்கும், போதை ஊசி போட்டுக்கொள்கிறவர்களுக்கும் எந்த வகையான உதவியும் செய்ய அவர்கள் யோசிக்கவும் மறுக்கிறார்கள். கடவுளுடைய அன்பு எல்லா மக்களுக்கும் உடையது (யோவான் 3:16). நாம் அனைவரும் கடவுளுடைய மகிமையற்றவர்களானோம் (ரோமர் 3:23). ஒரு சமுதாயம் எவ்வளவு குற்றம்சாட்டுவதாகவும், சகித்துக் கொள்ளாததாகவும் இருக்கிறதோ அவ்வளவு அதிகமாக சில மக்கள் மறைத்துக்கொள்வார்கள். பின்பு எச்ஐவி பிரச்சனை பாதாளம்வழியாக அதிகரித்துக்கொண்டே போகும். மக்கள் பரிசோதித்துக்கொள்ள வெட்கப்பட்டு, சிகிச்சை பெற்றுக் கொள்ளவும் மறுப்பு தெரிவிப்பார்கள். ஆரோக்கியச் செய்திகளைக் கூறுகிறவர்கள் யாரும் அணுக முடியாத ரகசிய குழுக்களில் அவர்கள் சந்தித்துக் கொள்வார்கள். எச்ஐவி இன்னும் அதிவேகமாக பரவும். (குற்றப்படுத்துதல் மற்றும் செக்சுவாலிட்டி குறித்து அதிகாரம் 7ல் அதிகமாக பார்க்கலாம்)

'ஆண் விருத்தசேதனம் எச்ஐவிக்கு எதிராக பாதுகாப்பு அளிக்குமா?'

2007ல் தென் ஆப்பிரிக்கா, உகாண்டா மற்றும் கென்யாவில் நடந்த ஆராய்ச்சி ஆண் விருத்தசேதனம் ஆண்கள் எச்ஐவியால் பாதுக்கப்படுவதை 60 சதவிகிதம் குறைப்பதாக உறுதியாக அறிவுறுத்துகிறது.

அடுத்த 20 ஆண்டுகளில் துணை சஹாரா ஆப்பிரிக்காவில் இருக்கும் அனைத்து ஆண்களும் விருத்தசேதனம்செய்யப்பட்டால் 60 கோடி புதிய எச்ஐவி பாதிப்புகளும் 30 கோடி மரணங்களும் தடுக்கப்படலாம்.

விருத்தசேதனத்திற்கு இப்படி ஒரு சக்தி இருப்பதற்கு சில காரணங்கள் சாத்தியமாக இருக்கலாம். நுணித்தோல் ஒரு ஈரப்பதத்தை ஏற்படுத்துகிறது, இதிலே எச்ஐவி நீண்டகாலம் உயிரோடு இருக்கமுடியும். மேலும், நுனித்தோல் நீக்கப்பட்டால், ஆணுறுப்பின் தலைப்பகுதியில் இருக்கும் தோல் கடினமாகி பாதிப்புக்கு அதிக எதிர்ப்புடையதாக மாறிவிடுகிறது.

எனினும், எச்ஐவி பரவுவதை தடுப்பதில் ஆணுறையைக் காட்டிலும் விருத்தசேதனம் குறைந்த சக்தியுள்ளதாகவே இருக்கிறது. நீண்டகாலம் நிலையாக உபயோகிக்கப்பட்டால் ஆணுறைகள் குறைந்தது 80 சதவிகிதம் பயனுள்ளதாக இருக்கிறது, ஆனால் விருத்தசேதனம் வெறும் 60 சதவிகிதம் பாதிப்பை மாத்திரமே தடுக்கிறது. பாதுகாப்பான விருத்தசேதனத்திற்கு பயிற்சிபெற்ற பணியாளர்கள், சுத்தமான சிறுமருத்துவமனை மற்றும் சுகாதாரமான உபகரணங்கள் தேவைப்படும். ஆப்பிரிக்காவில் வாழும் நபருக்கு $25 முதல் $500 செலவாகலாம்.

விருத்தசேதனத்தின் விளைவாக ஏற்படும் பாதுகாப்பை குறித்து மக்கள்

ிகவும் தைரியம் அடைந்தால், அவர்கள் அதிக ஆபத்தான உடலுறவுகளில் ஈடுபடலாம். விருத்தசேதனம் செய்துகொண்ட துணைவர் ஆணுறை பயோகிக்கும்படி அறிவுறுத்துவது பெண்களுக்கு கடினமான காரியமாக றிவிடலாம்.

பல கலாச்சாரங்களில் விருத்தசேதனம் செய்யும் பாரம்பரியம் இல்லை, ல கலாச்சாரங்கள் (சீக்கியர்கள் மற்றும் இந்துக்கள் உட்பட) இதை ன்மையாக எதிர்க்கிறார்கள்.

இதோடு, பெண் பிறப்புறுப்பு சிதைப்பை (FGM) அகற்ற கடினமாக ழைத்துவருகிறார்கள், இது வளர்ந்துவரும் உலகத்தின் சில பகுதிகளில் ஜமாக இருக்கும் ஒரு முறைமை. ஆண் விருத்தசேதனத்தை ஆதரிப்பது FGMஐ தடுப்பதை மேலும் கடிமமானதாக மாற்றிவிடும்.[5]

ABC, SAVE, SLOW & STOP பாதுகாப்பு முறைகள் என்பவை என்ன?

ABC என்பது உகாண்டா அரசாங்கத்தினால் எச்ஐவி தடுப்பதற்காக ற்றுக்கொள்ளப்பட்ட முறைமை, இது பல உலக திருச்சபைகளில் மிகவும் பலமாகியுள்ளது. இது விலகியிரு, உண்மையாயிரு, ஒரு காப்புறை பயோகி என்று பொருட்படும் (Abstinance, Be Faithful, Use a Condom). ிதாகவும், தொடர்புகொள்ள சுலபமாகவும் இருப்பதால் இது மிகவும் னுள்ளதாக இருந்துவருகிறது.

SAVE கிறிஸ்தவ எய்டினால் பிரசித்தப்படுத்தப்படுகிறது. இது துகாப்பான செயல்பாடுகள், கிடைக்கக்கூடிய மருந்துகள், தன்னார்வ சோதனைகள் மற்றும் ஆலோசனைகள், கல்வியின் மூலமாக பெலப் டுத்திக்கொள்ளுதல் ஆகியவற்றை வலியுறுத்து கின்றது (Safer Practices, Available Medications, Voluntary testing and counselling, Empowermenr through education).

சேடில்பேக் திருச்சபை, யூஎஸ்ஏ வின் தலைவர் ரிக் வாரன் மற்றும் அவரது மனைவி கேய் ஆகியோர் எச்ஐவி குறித்த பிரச்சனைகளில் அமெரிக்க திருச்சபைகளை ஒன்றுதிரட்டுவதில் முக்கிய பங்குவகிக்கிறார்கள். அவர் இரண்டு அணுகுமுறைகளை முன்வைத்துள்ளார்: SLOW & STOP. திருச்சபைகள் STOP அணுகுமுறையையும், பரந்த சமுதாயம் SLOW அணுகுமுறையையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர் அறிவுறுத் துகிறார்.

SLOW என்பது காப்புறைகளை விநியோகித்தல், துணையாளர்களின் எண்ணிக்கையை குறைத்தல், ஊசி பரிமாற்றத்தை கொடுத்தல், உடலுறவுக் கான காலம் வரை காத்திருத்தல் என்று அர்த்தப்படும் (Supply Condoms, Limit numbers of partners, Offer needle exchange, Wait for onset of sex).

STOP என்பது திருமணம் வரை உடலுறவை பாதுகாத்து வைத்தல், பெண்களையும் குழந்தைகளையும் மதிக்கும்படியாக ஆண்களுக்கு போதித் தல், திருச்சபைகளின் மூலமாக சிகிச்சை கொடுத்தல், வாழ்க்கை முழுவதும்

---

5 இந்த பதில் அவேர்ட் இல் இருந்து எடுக்கப்பட்டது

ஒரு துணைவருக்காக சபதம் எடுத்துக்கொள்ளவும் என பொருட்படும் (Save sex for marriage, Teach men to respect women and children, Offer treatment through churches, Pledge yourself to one partner for life).

இவை அனைத்து எச்ஐவி பிரச்சனைகளை சமாளிப்பதற்கான சில வழிகளுக்கான உபயோகமுள்ள நினைவுபடுத்திக்கொள்ளும் காரணிகள். இதில் பல வடிவங்கள் இருக்கின்றன, ஆனால் உண்மை என்னவெனில், இப்புத்தகத்தில் பார்த்ததைப்போல எச்ஐவிக்கான எல்லா முக்கியமான பதில்களையும் ஒரே சுருக்கமான வார்த்தையில் கொண்டுவருவது சாத்தியமற்றது.

'காச நோய்க்கும் (டி.பி) எச்ஐவிக்கும் இடையே இருக்கும் தொடர்பு என்ன?'

ஜலதோஷம்போலவே பாதிக்கப்பட்ட நபர் இருமும்போதோ, தும்மும்போதோ அல்லது பாடும்போதும்கூட காற்றிலே பரவக்கூடிய பேக்டீரியல் நோய் பாதிப்பே டிபி ஆகும். டிபியினால் பாதிக்கப்பட்ட மக் களிடத்தில் பலநேரங்களில் அந்த நோய் வளருவதில்லை. டிபியினால் பாதிக்கப்பட்ட மக்கள் பலருடைய நுரையீரலில் ஆழமான பகுதியில் பேக்டீரியா உறங்கச் சென்றுவிடுகிறது. இது லேட்டண்ட் டிபி நோய்பாதிப்பு எனப்படும். இதற்கு எவ்விதமான அறிகுறிகளும் கிடையாது, இது தொற்றிக்கொள்ளக்கூடியது அல்ல. உலகில் மூன்றில் ஒருபங்கு ஜனத்தொகையினருக்கு இந்த லேட்டண்ட் டிபி இருக்கிறது.

சில மக்களிடம் டிபி நோய்பாதிப்பு டிபி நோயாக முன்னேற்றம் பெறுகின்றது, இவர்கள் பொதுவாக குறைந்த ஊட்டச்சத்துடன் பிறந்தவர்கள், எச்ஐவி அல்லது வேறு ஏதோ ஒரு நிலை இவர்களுடைய உடலின் பாதுகாப்புகளை பெலவீனப்படுத்தியிருக்கும். உலகின் பல பகுதிகளில் எச்ஐவியோடு இருக்கும் மக்கள் நோய்வாய்படுவதற்கும், இறந்துபோவதற்கும் டிபி மிக முக்கியமான காரணமாக இருக்கிறது. டிபி நோய் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு தொடர்ச்சியாக இருக்கும் இருமல், எடை குறைதல், ஜுரம், இரவுநேர வியர்வை மற்றும் இரத்தத்தோடு கூடிய இருமல் போன்ற பல அறிகுறிகளை வெளிப்படுத்துகிறது.

இது பொதுவாக நுரையீரலை பாதிக்கிறது, ஆனால் உடலில் எந்த பகுதியையும் பாதிக்கக்கூடியது. எச்ஐவியோடு வாழும் மக்கள் சரியான சிகிச்சை இல்லாமல் இருந்தால் டிபி சில வாரங்களில் அவர்களுக்கு மரணத்தை கொடுத்துவிடும். எனினும், டிபி குணப்படுத்தக்கூடியது, எச்ஐவி உடையவர்களுக்கும்தான், குறிப்பாக அந்த நபர் மிகவும் வியாதிப்படும் முன்னதாக கண்டறியப்பட்டால். டிபி நோய் ஆறு மாதங்களில் நான்கு ஆண்டிபயோடிக்குகள் கொண்ட தொடர் சிகிச்சையின் மூலமாக சிகிச்சை அளிக்கப்படுகின்றது. எச்ஐவி உடைய நபர் ஒருவருக்கு இரண்டு வாரங்களுக்கு மேல் இருமல் இருந்தால், அவருடைய உள்ளூர் மருத்துவமனைக்குச் சென்று டிபி பரிசோதனைக்கு வேண்டுகோள்விடுக்க வேண்டும்.[6]

---

6. இந்த பதிலை எழுதியவர் அலாஸ்தாய்ர் ரியட், UNAIDS

மருத்துவமனைகளிலும் சிறு மருத்துவமனைகளிலும் எடுத்துக்கொள்ளக்கூடிய முன்னெச்சரிக்கைகள் என்னென்ன?

ஊசிகளும் சிரிஞ்சுகளும் சரியாக ஸ்டெரிலைஸ் செய்யப் படாமல் ஒருவருக்கு மேல் உபயோகப்படுத்தப்படக்கூடாது. அதிஷ்டவசமாக, இன்று பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் எல்லா இரத்தங்களையும் பரிசோதிக்கக்கூடிய வசதிகள் இருக்கின்றன, ஏனென்றால் எச்ஐவி இரத்த தானத்தின் மூலமாகவும் பரவக்கூடும். ஆனால் ஊசிகளும் கூட குறைவாக கிடைக்கக்கூடும், அல்லது சூடாக்கும் மற்றும் ஸ்டெரிலைஸ் செய்யக்கூடிய உபகரணமும் உடைந்தோ அல்லது கிடைக்காமலோ இருக்கலாம்.

மருத்துவர்களும் செவிலியர்களும் தாங்கள் கவனித்துக் கொள்கிறவர்கள் மூலமாக அறியாமல் எச்ஐவி பெற்றிருக்கிறார்கள், குறிப்பாக கை உறைகள் தீர்ந்துபோன மருத்துவமனைகளிலும், விபத்தினாலும் இவ்வாறு நடக்கிறது. ஆரோக்கிய பணியாளர்களும், தன்னார்வத்தொண்டர்களும் பாதுகாப்பான மருத்துவ செயல் முறைகளில் பயிற்றுவிக்கப்படவேண்டும். ஆரோக்கிய நிலையங்கள் தங்கள் பணியாளர்களை பாதுகாப்பதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்களை வைத்திருக்க வேண்டும். எதிர்பாராத விபத்தினால் நோய்பாதிப்புக்கு தங்களை வெளிப்படுத்திக்கொள்ளும்போது குறைந்த கால ஆண்டிவைரல் சிகிச்சை கொடுப்பது நோய்பாதிப்பின் ஆபத்தை குறைக்கும். எனினும், சிகிச்சை அளிக்கப் படாவிட்டாலும், ஒரு காயத்தின் மூலமாக பெற்றுக் கொள்ளக்கூடிய எச்ஐவியின் அபாயம் 200ல் 1 தான், எடுத்துக்காட்டாக நோயாளி ஒருவரிடம் இருந்து இரத்தம் எடுக்கும்போது விழும் ஊசியினால் ஏற்படும் காயம் போன்றவை.

எச்ஐவி நோய்பாதிப்பின் கிரிமினல் காரணிகளைக் குறித்து என்ன?

எச்ஐவியோடு வாழும் பெரும்பாலான மக்களுக்கு மற்றவர்கள் தாங்கள் சுமந்துகொண்டிருக்கும் வைரஸினால் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வதே பிரதான கவலை. எச்ஐவி பாசிடிவாக இருக்கும் நபர்களுக்கே, அந்த நோயோடு வாழ்வது எவ்வளவு கடினமானது என்பது தெரியும், வெகு சிலரே அது மற்றவர்களுக்கும் இருக்கவேண்டும் என்று விரும்புவார்கள்.

எனினும், எல்லா எச்ஐவி பாசிடிவ் மக்களும் அவர்கள் எடுத்துக் கொள்ளக்கூடிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்களை எடுத்துக்கொள்வதில்லை. ஒருவர் கவனக்குறைவினாலோ அல்லது வேண்டுமென்றோ மற்றவர்களுக்கு மரணத்தை கொடுக்கும் வைரஸினால் பாதிப்பை ஏற்படுத்துவதை குற்றம்சாட்டுவது அறநெறிக்கு உட்பட்டதா? அறநெறிக்கு உட்பட்டது என்னும் யூகமும், அதன் விளைவுகளும், பல்வேறு பிரச்சனைகளைக் கொடுக்கலாம். எச்ஐவி பரப்பியதற்காக ஒருவரை குற்றம் சாட்டும் போது முன்வைக்கக்கூடிய பிரச்சனைகள் என்னென்ன? இவ்வாறாக எச்ஐவி பாசிடிவ் மக்களை கிரிமினல் குற்றம்சாட்டுவது சரியா?

முதலாவது ஏற்படக்கூடிய பல்வேறுவிதமான நோய்பாதிப்புகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

வேண்டுமென்றே: பல நாடுகள் இதை செய்யக்கூடிய மிகக்கொடூரமான குற்றமாக கருதுகிறார்கள். நோய்பரப்புவது ஊசியின் மூலமாகவோ அல்லது உடலுறவின் மூலமாகவோ செய்யப்படலாம், பிரதான நோக்கம் வேறு ஒரு நபருக்கு அந்த வைரஸை பரப்புவது ஆகும்.

அஜாக்கிரதை: இங்கேதான் எச்ஐவி வேண்டுமென்றே பரப்பப்படாமல் கவனக்குறைவினால் பரப்பப்படுகின்றது. எடுத்துக்காட்டாக எச்ஐவி இருக்கிறது என்று அறிந்த ஒரு நபர் ஒரு நெகடிவ் நபருடன் பாதுகாப்பற்ற உடலுறவு வைத்துக்கொண்டு, அதன் அபாயத்தை கூறத் தவறினால் அது நீதிமன்றத்தில் அஜாக்கிரதையான செயலாக கருதப்படும்.

எதிர்பாராத விதமாக: எச்ஐவி பரவுவதில் மிகவும் சகஜமான முறை இதுதான். அவர்கள் தங்களிடத்தில் அந்த வைரஸ் இருப்பதை அறியாமல் எச்ஐவியை பரப்பி இருந்தால் அல்லது அவர்கள் தங்கள் எச்ஐவி பாசிடிவ் நிலையை அறிந்து உடலுறவின்போது காப்புறையை உபயோகப்படுத்தியிருந்தும், ஏதோ ஒரு வகையில் காப்புறை செயலிழந்து போயிருந்தால் அந்த நபர் எதிர்பாராத விதமாக எச்ஐவியை பரப்பியதாக கூறப்படுவார்.

பரவப்பட்ட விதத்தை கண்டறிவது மிகவும் கடினமானது ஏனென் றால் இது பொதுவாக பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நபருடைய டிஎன்ஏ வையும் ஒப்பிட்டு கண்டறியப்படுகின்றது. உடலுறவின் மூலமாக ஏற்படும் எச்ஐவி பரவுதலுக்கான இயல்பே அதற்கு சாட்சிகள் எதுவும் கிடையாது என் பதுதான்: படுக்கையறையில் நடப்பது மிகவும் அந்தரங்கமானது.[7]

சிலர் எச்ஐவி எய்ட்ஸை விளைவிக்காது என்று சில மக்கள் கூற நான் கேட்டிருக்கிறேன்

600 கோடி மக்கள் வாழ்கின்ற உலகத்திலே எந்த காரியத்துக்குமே விநோதமான சிந்தனைகளை உடைய மக்களை நீங்கள் பார்க்கமுடியும், எச்ஐவி அதற்கு ஒன்றும் விதிவிலக்கு அல்ல. சில மக்கள் உலக உஷ்ணமடைதல் நடக்கவில்லை என்றும், புகைப்பிடித்தல் புற்று நோயை ஏற்படுத்தாது என்றும் பல காரியங்களை நினைக்கிறார்கள். 20 ஆண்டுகளுக்கு மேலான அதிகமான விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பிறகும் சில மருத்துவர்களும், விஞ்ஞானிகளும், செய்தியாளர்களும் இன்னமும் எச்ஐவி எய்ட்ஸை ஏற்படுத்துவதற்கான ஆதாரங்கள் இல்லை என்கிறார்கள். இது மிகவும் பயங்கரமான கண்ணோட்டம், இப்போது கிடைக்கப்பெற்றுள்ள அதிகமான விஞ்ஞான ஆதாரங்களுக்கு இது எதிரிடையானது.

இப்படிப்பட்ட பரிசோதனைகள் நடந்த எய்ட்ஸ் உடைய எல்லா மக்களிடத்திலும் எச்ஐவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எய்ட்ஸ் உடைய மக்களுக்கு பாதிக்கப்பட்டிருக்கிற அதே வெள்ளை அணுக்களைதான் எச்ஐவி

7. இந்த பதில் அவேர்ட் ல் இருந்து எடுக்கப்பட்டது

தாக்குகின்றது. எச்ஐவியின் செயல்பாட்டை குறிவைத்து செயல்படும் ஆண்டிவைரல்கள் மனித அணுக்களுக்குள் சென்று வேலைசெய்து எச்ஐவி உடைய மக்கள் நீண்டகாலம் வாழ உதவியாக இருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆண்டிவைரல்களுக்கு எச்ஐவி எதிர்ப்பு சக்தியை வளர்த்துக் கொண்டால் அந்த நபர் மிக வேகமாக வியாதிப்படுவார் என்பதை நாம் அறிவோம்.

எச்ஐவி உடைய தாய்மார்க்களுக்கு பிறக்கும் குழந்தைகள் எய்ட்ஸ் சம்மந்தமான நோய்களினால் பாதிக்கப்பட்டு இறக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். எச்ஐவி இல்லாமல் பிறக்கும் குழந்தைகள் எய்ட்ஸை வளர்த்துக் கொள்வதில்லை.

இரத்த தானத்தின்போது எச்ஐவி உடைய இரத்தத்தை பெற்றுக் கொள்கிறவர்கள் எய்ட்ஸை பெற்றுக்கொள்கிறார்கள். பாதிப்பில்லாத இரத்தத்தை பெற்றுக்கொள்கிறவர்கள் எய்ட்ஸை வளர்ப்பது இல்லை, வேறு வகையில் எய்ட்ஸை எச்ஐவியை வளர்த்துக்கொண்டாலே தவிர.

எச்ஐவி உடைய மக்களுடைய துணைவர்கள் பின்பு தாங்களே அடிக்கடி பரிசோதிக்கப்படுகிறார்கள், அவர்கள் சரியான சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் அவர்களும் எய்ட்ஸை வளர்த்துக் கொள் கிறார்கள். நோய்பாதிப்பில்லாமல் இருக்கும் துணைவர்கள் எய்ட்ஸை வளர்ப்பது கிடையாது. போதை உபயோகிப்பவர்கள் எச்ஐவி உடைய ஊசி பொருட்களை பயன்படுத்தும்போது அவர்கள் நோய்தாக்குதலைப் பெற்று எய்ட்ஸை வளர்த்துக்கொள்கிறார்கள். ஸ்டெரைல் செய்யப்படாத ஊசி பொருட்களில் எச்ஐவி இல்லாமல் வேறு பல நோய்தாக்குதல்களை பெற் றிருந்தால், அவர்கள் எச்ஐவியால் பாதிக்கப்படுவதும் இல்லை, எய்ட்ஸை வளர்த்துக்கொள்வதும் இல்லை. ஒரு உள்ளூர் சமுதாயத்தில் எச்ஐவி பாதிப்பு அதிகரித்தால், எச்ஐவி சம்மந்தமான நிலைகளினால் இறந்துபோகிறார்கள், எடுத்துக் காட்டாக டிபி போன்றவை சில ஆண்டுகளில் அதிகரித் துவிடுகின் றது.

புத்திசாலியான, பகுத்தறிவு பெற்ற எந்த ஒரு மனிதனுக்கும் எச்ஐவி எய்ட்ஸை விளைவிக்குமா என்கிற சந்தேகம் இருக்கிறது என்பது எனக்கு விநோதமாக இருக்கிறது. ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளையும் ஆரோக்கியச் செய்திகளையும் மறுப்பது பல மக்களுடைய வாழ்க்கையை அபாயத்தில் தள்ளிவிடும்.

எனவே, நாம் பாதுகாப்புகளையும் மக்கள் கேட்கும் கேள்விகளையும் பார்த்துவிட்டோம். இப்போது நாம் பெண்கள், அனாதைகள் மற்றும் நோய்தாக்கக்கூடிய குழந்தைகள், அகதிகள் மற்றும் எச்ஐவி ஆலோசனைகள் மற்றும் பரிசோதனைகள் போன்ற முக்கியமான காரியங்களுக்கு நம்முடைய கவனத்தை திசைதிருப்ப வேண்டும்.

எச்ஐவி நோய்பாதிப்பை வேண்டுமென்றே ஏற்படுத்துவதை கிரிமினல் செயலாக அறிமுகப்படுத்துவதற்கு ஆதரவாகவும் எதிரிடையாகவும் இருக்கும் கருத்துக்கள் என்னென்ன?

ஆதரவாக	**எதிரிடையாக**
நீங்கள் எச்ஐவி பாசிடிவாக இருந்தால் பாதுகாப்பை உபயோகிக்காமல் இருப்பது தவறு.	எச்ஐவி+ மக்களை கிரிமினல் குற்றம்சாட்டுவது அவமானப் படுத்துவதை அதிகரிக்கிறது, குறிப்பாக எச்ஐவி - மக்களை செய்தியாளர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளாதபோது.
ஒருவருக்கு எச்ஐவி பாசிடிவ் கொடுப்பது மரணத்துக்கு சமமானது.	எச்ஐவி வைரஸோடு வாழ்வது இனிமையாக இருக்காது, ஆனால் இனியும் அது ஒன்றும் மரணதண்டனை கிடையாது.
நீங்கள் எச்ஐவி பாசிடிவாக இருந்தால் பாதுகாப்பை உபயோகிப்பது உங்களுடைய கடமை.	இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்துக்கு அதிகமாக வந்தால், பாதுகாப்பான உடவு றவு கொள்வது எச்ஐவி பாசிடிவ் மக்களுக்கும் மாத்திரமே சொந்தமானது என்று மக்கள் நினைப்பார்கள்.
அஜாக்கிரதையாக நோய் பாதிப்பை ஏற்படுத்துகிற மக்களை கிரிமினல் குற்றம்சாட்டுவது மற்றவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும்.	படுக்கையறையில் சட்டத்திற்கு வேலை இல்லை, மக்களுடைய உடலுறவு நடத்தைகளில் அதற்கு மிகக் குறைந்த பயனே இருக்கும்.
எச்ஐவி+ நபர் இதற்கு முன்பு எச்ஐவி பரிசோதனையே எடுத்துக்கொள்ளாமல் இருந்திருந்தாலும், தங்களை அவர்கள் அபாயத்தில் முன்பு தள்ளியிருப்பதால் அவர்களை ‘அஜாக்கிரதைக்காரர்கள்’ என்று	பாசிடிவ் மக்களை குற்றப்படுத்துவது அவர்களுடைய நிலை கண்டறியப்பட்டால் அவர்கள் எல்லாவிதமான கிரிமினல் குற்றங்களுக்கும் உள்ளாவார்கள் என்கிற நம்பிக்கையில் பலர் பரிசோதித்துக்கொள்வதற்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடும்.

ழைப்பது சாத்தியமாக வேண் ம்	
க்களை சிறையில் அடைப்பது ஜவி பரவாமல் தடுத்து முதாயத்தை அழிவில் இருந்து க்கும்.	சிறையில் அடைப்பது எச்ஜவி சம்மந்தமாக சரியான கண்ணோட்டத்திற்கு வர மக்களுக்குஉதவி செய்து, உடலுறவில் பாதுகாப்பாக இருக்க உதவாது.
ரிமினல் குற்றச்சாட்டுகள் பல ச்ஜவி+ மக்கள் தங்களுடைய லையைக் கண்டுகொள்ள தவியாக இருக்கும், வேறு ந்த வகையிலும் அவர்கள் தை அறிந்திருக்க மாட் ர்கள்.	கிரிமினல் குற்றச்சாட்டுகள் காவலர்கள் தாங்கள் சந்தேகிக்கும் யாரை வேண்டுமானாலும் எச்ஜவி பாதிப்பை ஏற்படுத்தியிருப்பார் என்று விசாரிக்க அதிகாரம் கொடுத்துவிடும்.
ஜவி சம்மந்தமான பல ங்கள் மக்கள் மேலும் பல ணத்தை கொடுக்கும் வியாதி ளில் இருந்து காத்துக் கொள்ள தவும்.	வேறு எந்த வியாதியும் எச்ஜவியைப் போன்ற அதே வன்மையோடு பார்க்கப்படுவதில்லை, சிலர் ஏற்கனவே அதை பரப்பியதற்காக கிரிமினல் குற்றம்சாட்டப்பட்டு இருக்கிறார்கள்.

ஆதாரம் : அவேர்ட் ல் இருந்து எடுக்கப்பட்டது

அதிகாரம் 5

பெண்கள், குழந்தைகள் மற்றும் நகர்ந்து செல்லும் மக்கள்

பெண்கள், அனாதைகள், பாதிக்கப்படக்கூடிய குழந்தைகள் மற்றும் அகதிகள்மீது எச்ஐவிக்கு பெரும் தாக்கம் இருக்கின்றது. முக்கிய பிரச்சனைகள் என்னென்ன? திருச்சபைகள் எவ்வாறு பதிலளிக்க வேண்டும்?

பெண்களும் எச்ஐவியும் - திருச்சபைக்கு ஒரு பிரத்தியேக சவால்

ஆப்பிரிக்காவில் எச்ஐவிக்கு ஒரு பெண்ணின் முகம் இருக்கிறது, 10ல் 6 புதிய பாதிப்புகள் பெண்களிடமே இருக்கிறது. எச்ஐவி உடைய துணைவருடன் உடலுறவுகொள்வதில் மாத்திரம் பெண்களுக்கு அபாயம் இல்லை, பாதிப்பை தடுக்கவும் அவர்களுக்கு குறைந்த வாய்ப்புகளே இருக்கின்றன. அவர்கள் உடல்ரீதியாக பலாத்காரம் செய்யப்படலாம், ஒரு கொடூரமான போர் சம்மந்தப்பட்ட வன்முறையில் குறிவைக்கப்படலாம், குழந்தைகளை வளர்க்க நிராதரவாக விடப் படலாம் அல்லது அதிகாரிகளால் சேவை மறுக்கப்படலாம்.

பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையேயான சரிசமமற்ற தன்மை எச்ஐவி பரவுவதை அனல்மூட்டுகின்றது. எடுத்துக்காட்டாக, உலக வருமானத்தில் 10 சதவிகிதத்தை மாத்திரமே பெண்கள் பெற்றுக்கொள் கிறார்கள், உலகில் வாசிக்கத்தெரியாதவர்களில் 66 சதவிகிதம்பேர் பெண்கள் மற்றும் 99 சதவிகித சொத்துக்களின் உரிமையாளர்கள் ஆண்கள். பாலினம் சார்ந்த வன்முறைகள், 15 முதல் 44 வயதுடைய பெண்களின் மரணத்துக்கு புற்றுநோய், மலேரியா, சாலைவிபத்துகள் மற்றும் போரைக்காட்டிலும் அதிகமாக இருக்கின்றது. யுத்தங் களினாலும், இயற்கையின் சீற்றங்களினாலும் இடம்பெயர்ந்து செல் கின்றவர்களில் 85 சதவிகிதம்பேர் பெண்களும் குழந்தைகளும்தான்.

எச்ஐவியை தடுப்பது - இளம் பெண்களிடமும் சிறுமிகளிடமும் - UNAIDS

நாள்தோறும் ஏறத்தாழ 7000 சிறுமிகளும் பெண்களும் எச்ஐவியினால் பாதிக்கப்படுகிறார்கள். பல நாடுகளில், பெண்களும் சிறுமிகளும் எச்ஐவியோடு வாழ்கின்றவர்களின் ஜனத்தொகையை அதிகரிக்கிறார்கள், பெண்கள் நோய்பாதிப்பை அடையும் விகிதம் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது-குறிப்பாக கிழக்கு ஐரோப்பா, ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகிய இடங்களில். தென் ஆப்பிரிக்கா, சாம்பியா மற்றும் ஜிம்பாப்வே ஆகிய நாடுகளில் 15 முதல் 24 வயதை உடைய பெண்கள் அதே வயதை உடைய ஆண்களை காட்டிலும் ஆறுமடங்கு அதிக பாதிப்பை அடைவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன.

ஆப்பிரிக்காவில் பெண்களிடத்தில் ஆண்களின் சவால் நிறைந்த மனப்பாங்கு

ஆண்களுக்கு பெண்களுக்கும் இடையேயான உறவுகளை முன்னேற்றுவது, எச்ஐவி பரவுவதை தடுப்பதில் மிகவும் வலிமைவாய்ந்த மிகவும் பயனுள்ள வழிமுறைகளில் ஒன்றாகும். டியர்பண்ட் UK இரண்டு உள்ளூர் நிறுவனங்களோடு இணைந்து பணிசெய்து ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் மற்றும் தங்களுக்குள்ளே வைத்திருக்கின்ற மனப்பான்மை மாற்ற பணிசெய்து வருகின்றது, அதில் ஒரு நிறுவனம் பர்கினா ஃபாசோவிலும் மற்றொன்று சிம்பாப்வேயிலும் இருக்கின்றது.

உங்கள் திருமணத்தை மகிழ்ந்து அனுபவியுங்கள் பாடங்கள் மூலம், உள்ளூர் கூடுகைகள் மற்றும் பாலினம் மற்றும் எச்ஐவி கல்வி மற்றும் விழிப்புணர்வு குறித்த முழுமையான அணுகுமுறை ஆகியவற்றின் மூலமாக பணியானது அற்புதமான வாழ்க்கையை மாற்றக்கூடிய விளைவுகளை அளித்துள்ளது.

பாலின் மற்றும் ஆமோஸ் ஆகியோர் சிம்பாப்வேயில் உள்ள ஒரு கிராமமான நட்டீசாவில் வசித்துவருகிறார்கள். அவர்கள் எட்டு ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்த பிறகு ஜூன் 2008ல் திருமணம் செய்துகொண்டார்கள். அவர்கள் CAT நடத்திய ஒரு திருச்சபை குடும்ப உறவுகள் நிகழ்ச்சியில் பங்குபெற்ற பிறகு திருமணம் செய்துகொள்ளலாம் என்கிற தீர்மானத்திற்கு வந்தார்கள்.

பாலின், "முன்பெல்லாம் நாங்கள் அதிகமாக விவாதத்தில் ஈடுபட்டு வெவ்வேறு திசைகளுக்குச் சென்றுவிடுவோம். இப்போது அது மாறிவிட்டது. நாங்கள் ஒருவர்கூறுவதை ஒருவர் கவனித்து மென்மையாக பேசுகிறோம்" என்கிறார். ஆமோஸ் அதை ஏற்றுக் கொள்ளும் விதமாக, "ஆம், முன்பு நான் குடிகாரனாக இருந்தேன். பொறுப்பற்றவனாகவும் வீண் செலவுசெய்கிறவனாகவும் இருந்தேன். இப்போது அந்த சூழல் மாறிவிட்டது. இது நன்றாகவும் குதுரகலமாகவும் இருக்கிறது. நாங்கள் நன்றாக தொடர்பு கொள்கிறோம்"என்கிறார்.

தாம்பத்திய உறவிலும் பல காரியங்கள் மாறிவிட்டன. 'முன்பெல்லாம், உடலுறவு வெறும் கடமையாகவே இருந்தது. அது மிகவும் விரைவாக இருந்தது. நான் அவரை விரைந்து செய்யும்படி கூறுவேன் ஏனென்றால் நான் என்னுடைய வேலைகளை சீக்கிரம் செய்ய வேண்டும். உடலுறவு எனக்கு ஒரு போராட்டமாகவே இருந்தது. இப்போது நாங்கள் உடலுறவின்போது பேசுகிறோம், ஏற்றுக் கொள்கிறோம். நாங்கள் பல்வேறு நுட்பங்களை உபயோகிக்கிறோம். இப்போது இது மிகவும் சிறப்பானதாக இருக்கிறது. நான் அதை முழுமையாக அனுபவிக்கிறேன். அவர் பணிதளத்திலிருந்து திரும்பி வருவதற்காக காத்திருக்கிறேன்', என்று ஊக்கமளிக்கிறார் பாலின்.

ஆமோஸ் அதோடு, 'இந்த நிகழ்ச்சி ஆண்களும் பெண்களும் சரிசமம் என்பதை எனக்கு கற்றுக்கொடுத்துள்ளது. நான் மாறிவிட்டேன். இப்போது நான் என்னுடைய மனைவிக்கு காய்கறி நறுக்குதல் போன்ற உதவிகளை செய்கிறேன். என்னுடைய நண்பர்களும் அண்டைவீட் டாரும் என்னுடைய மனைவி எனக்கு வசியமருந்து கொடுத்துவிட்டார் என்கிறார்கள், ஆனால் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. நான் என்னுடைய மனைவியை நேசிக்கிறேன், நான் என்னுடைய மனைவியை நேசிக்கிறேன் என்று எல்லோரிடத்திலும் சொல்லவும் செய்கிறேன்' என்கிறார்.

ஆண்களையும் பெண்களையும் கட்டுப்படுத்தி, தடைசெய்து மற்றும் அடிமைப்படுத்துகின்ற கலாச்சாரத்திற்கு சவால்விடுதல் உட்பட முழுமை யான அணுகுமுறை கொண்டுவருவதில் இந்த சேவைத்திட்டம் வாழ்க் கையை மாற்றும் விளைவுகளை பார்த்துள்ளது. எச்ஐவி கொள்ளைநோய்க்கு நடுவே இது உயிரோட்டத்தையும் ஒளியையும் கொண்டுவந்துள்ளது.

விஜிலன்ஸ், பர்கினா ஃபேசோ மற்றும் கிறிஸ்டியன் எய்ட்ஸ் டேஸ்க்ஃபோர்ஸ்(CAT) சிம்பாபே உடன் டியர்ஃபண்டின் முதல் முயற்சி- நேர்காணல்கள் செய்தவர் மேண்டி மார்ஸல்.

திருமணமான பெண்கள் எச்ஐவி உடைய துணைவர்களினால் உள்ள அபாயத்தில் இருக்கலாம், இது கிட்டதட்ட அவர்களால் தடுக்க சாத் தியமில்லாமல் இருக்கலாம்- தங்களுடைய கணவர் உண்மையுள்ளவராக இல்லை என்பதினால் அவருடைய உடலுறவுக்கான முன்னேற்றங்களை மறுப்பதும், அல்லது ஆணுறை உபயோகிக்கும்படி அறிவுறுத்துவதும் கூடாமல் போகலாம்.

ஒரு கிழக்கு ஆப்பிரிக்க போதகர் இதை சமீபத்தில் என்னிடத்தில் கூறினார், ஒரு மனிதன் தன்னுடைய மனைவி எச்ஐவி பாசிடிவ் என கண்டறிந்தால், அவன் அவளை கைவிட்டுவிடுகிறான். ஒரு பெண் தன்னுடைய கணவனுக்கு எச்ஐவி என்று கண்டுபிடித்தால், அவள் இதைப் போன்ற ஒன்றைக் கூறலாம்: 'நான் எப்போதுமே அவரை பின் தொடர்ந்து இருக்கிறேன், கல்லறையிலும் நான் அவரை பின் தொடருவேன்'.

திருச்சபைகளிலே பொதுவாக நமக்கு குடும்ப வாழ்க்கை குறித்த ஒரு மகிழ்ச்சியான கண்ணோட்டம் இருந்து வருகிறது. மனிதனை குறித்த கடவுளுடைய நோக்கத்திற்கு குடும்பம் மையமாக இருக்கின்றது. பெரும் பாலான சூழ்நிலைகளில் திருச்சபை மற்றும் குடும்பங்கள் திருமணமான

தம்பதிகளிடையே உண்மைத்தன்மை நிலவுகின்ற, குழந்தைகள் அன்பு செலுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகின்ற மகிழ்ச்சியான இடங்களாக இருக்கவேண்டும் என்று விசுவாசித்து ஜெபிக்கிறோம்.

எனினும் இது பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஒரு ஆபத்தான இடமாக இருக்கக்கூடும் என்றும் எல்லா போதகர்களுக்கும் தெரியும். பெண்கள் குடிகார கணவர்களால் அடிக்கப்படலாம், தகப்பனாலும், மாற்றான் தகப்பனாலும் அல்லது வேறு ஆண் சொந்தக்காரராலும் இளம் சிறுமிகளும் சிறுவர்களும் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படலாம். இப்படிப்பட்ட கொடூரமான காரியங்களை குறித்து நாம் மௌனமாக இருக்கக் கூடாது. இது நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் மிகவும் பொதுவானதாகவே இருக்கிறது.

ஆண்கள் பெண்களை மதிக்கவேண்டும் என்று ஊக்குவிப்பதன் மூலமாக நம்முடைய திருச்சபைகளிலே நாம் இதை ஆரம்பிக்கலாம். சில பாரம்பரிய எச்ஐவி தடுப்பு திட்டங்கள் ஏபிசி யில் கண்ணோக்கமாக இருக்கின்றன (...ங்கை தவிர்ப்பது, உண்மையாக இருப்பது, காப்புறை உபயோகிப்பது). இது சந்தேகத்துக்கு இடமில்லாமல் பெருவாரியான மக்கள் நோயினால் பாதிக்கப்படாமல் தடுத்திருந்தாலும், உலகின் பல பெண்கள் உடலுறவை தவிர்க்கும் சூழ்நிலையிலும், கற்போடு வாழவும், காப்புறை உபயோகப்படுத்த பரிந்துரைக்கவும் முடிவதில்லை.

பெண்களை பெலப்படுத்தவும், தன்னம்பிக்கையை ஊக்கப்படுத்தவும், கலாச்சாரத்திற்கு ஏற்றவகையில் தங்களை தாங்களே காத்துக்கொள்ளவும் பல முயற்சிகள் எடுக்கப்படலாம். எனினும், ஆண்களின் மனப்பாங்கையும் சிந்தையையும் மாற்றுவதும் மிகவும் முக்கியமானது என்பது தெளிவாகத் தெரிகின்றது. அதனால்தான் ஆண்களை குறிவைத்து பிரத்தியேக நலத் திட்டங்களை ACET உகாண்டா போன்ற குழுக்கள் வைத்திருக்கின்றனர்.

ஆண்களும் பெண்களும் கடவுளுடைய சாயலிலே படைக்கப்பட்டவர்கள், இருவரும் கடவுளுடைய பார்வையிலே சமமானவர்கள் என்று வேதம் கற்பிக்கின்றது (ஆதியாகமம் 1:27). சபைகளும் கிறிஸ்தவ நிறுவனங்களும் இந்த பிரச்சனையை அங்கீகரித்து இதைக் குறித்து பேசத் தொடங்கலாம். நாம் பெண்களையும் இந்த உரையாடலிலே சேர்த்துக் கொண்டு அவர்களுடைய அன்றாட வாழ்வில் மறைக்கப்பட்ட உண்மை கதைகளை கேட்கலாம். நாம் இயேசு கிறிஸ்துவின் எடுத்துக்காட்டைக் கூறி அவர் எப்படி பெண்களை வரவேற்கவும், நட்புபாராட்டவும், பாதுகாக்கவும் தன்னுடைய வழியைவிட்டுச் சென்று தலைவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கினார் என்கிற வழியைக் கூறவேண்டும்- அதில் சிலருடைய வாழ்க்கை முறைகள் மிகவும் வெட்கப்படத்தக்கனவாகவும் இருந்தன.

பல திருச்சபைத் தலைவர்கள் ஆண்கள் குடும்பத்தின் தலை என்று கூறப்படும் வேத வசனங்களை குறிப்பிடுகிறார்கள். ஆனால் அப்போஸ்தலராகிய பவுல் இயேசு திருச்சபையை நேசித்ததைப் போல கணவன்மார்களும் தங்கள் மனைவிகளை நேசிக்க வேண்டும் என்று போதிக்கிறார்: ஆழமான கரிசனையோடும், மரியாதையோடும், கவனிப்போடும் (எபேசியர் 5:25-28)

கிறிஸ்தவர்கள் வேதாகமப் போதனைகளைப் படித்து, உதவாத செயல்முறைகளையும் சடங்குகளையும் உணர்வுபூர்வமாக சவால் விட்டு, தாழ்த்தப்பட்டோரையும், ஒடுக்கப்பட்டோரையும் ஆதரித்து, பெண்களோடு பணிசெய்து அவர்களுடைய தெரிந்தெடுப்புகளை அதிகரிக்கவும் வேண்டும். எனினும், நாம் கலாச்சாரங்களையும் பாரம்பரியங்களையும் மதிக்கவும் வேண்டும். பணக்கார நாடுகள் பெண்ணுரிமையை பெரிய அளவில் நிலைநாட்டுவதில் ஒரு அபாயம் என்னவெனில் அது 'எனக்கு சரியானது தெரியும்' என்கிற மனப்பான்மையாக கடுமையான கலாச்சார முதலாளித்துவமாக பார்க்கப்படும். பணக்கார நாடுகளில் கலாச்சாரத்தில் பல பல காரியங்கள் பெருமையாக பார்க்கப்படாமல் வெட்கமாக கருதப்படவேண்டியவை, பொருளாசையினால் நம்முடைய கிரகத்தின் ஆதாரங்களை அழிப்பது அதில் அடங்கும். எனவே நாம் அனைவரும் தாழ்மையோடு முன்னேறிச்சென்று, மற்றவர்கள் சொல்வதை கவனித்துக் கேட்டு புரிந்துக்கொள்ள மனதாயிருப்போம்.

அனைவருடைய உடலுறவு மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகளை முன்னேற்றுவது-UNAIDS

உலக அளவில்., இனப்பெருக்க சுகாதார சேவை தேவைப்படும் 5ல் 1 நபருக்கு மட்டுமே அது அணுகக்கூடியதாக இருக்கிறது. அருகாமையில் எந்த வசதியுமே இல்லாமல் இருக்கலாம். மக்கள் அந்த வசதிகளின் அருகே சென்றாலும், அவர்களிடம் கேட்கப்படும் கட்டணத்தை செலுத்தமுடியாமல் போகலாம்.

அவமானப்படுத்தப்படக்கூடும் என்கிற பயத்தினால் சிறுமிகளும் பெண்களும் ஆலோசனை கேட்பதில் பின்னடையலாம். அவர்கள் உதவாத இனவெறிபிடித்த பணியாளர்களால் துரத்திவிடப்படலாம்.

எச்ஐவி தடுப்பு திட்டங்கள் எச்ஐவியோடு வாழும் பெண்களுடைய தேவைகளை சந்திப்பனவாக இருக்க வேண்டும். பாசிடிவாக இருக்கும் பெண்கள் உடலுறவு மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகளை அவமானம் மற்றும் இனவேறுபாடு குறித்த பயமில்லாமல் அணுகமுடிய வேண்டும். எச்ஐவியோடு வாழ்ந்துகொண்டு இருக்கும் மக்கள் தங்களுடைய நிலையை குறித்து வெளிப்படையாக இருப்பதில் சௌகரியமாக உணர்ந்து, தங்களை நீண்டகாலம் வாழவைத்து, பாதுகாப்பான திருப்திகரமான உடலுறவு வாழ்க்கையை பெற்றுக்கொள்ள ஆலோசனையும் சிகிச்சையும் அளிக்கப்படுகின்ற இடத்திலே, மற்றவர்களுக்கு அந்த வைரஸை எடுத்துச் செல்வதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும்.

அனாதைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழந்தைகள் (OVCs)

பெண்களுக்கு ஆதரவுகொடுப்பதைக் குறித்து நாம் பேசும்போது, நாம் அவர்களுடைய குழந்தைகளை குறித்தும் யோசிக்க வேண்டும். பல எய்ட்ஸ்-

...பான மரணங்கள் தங்கள் குழந்தைகளை அனாதைகளாக விட்டுச் செல்லும் இளம் பெற்றோர்களுடையதே. ஏற்கனவே 110 கோடி பெற்றோரை ...ந்த குழந்தைகளுக்கு எய்ட்ஸ் இருக்கிறது. எச்ஐவியினால் இன்னும் பல ...டிபேருக்கு பாதிக்கப்படக்கூடிய அபாயம் இருக்கிறது. எடுத்துக் காட் ...க ஒரு சிறு குழந்தை இரண்டு வியாதிப்பட்ட பெற்றோரையும், சிறு தம்பி ...கையரையும் கவனித்துக்கொண்டு இருக்கலாம்.

எல்லா அனாதை குழந்தைகளுக்கும் ஏற்ற சிறந்த இடம் அவர்கள் பிறந்த ...தாயம், மொழி மற்றும் மதிப்புகள் மற்றும் ஒரே மாதிரியான கலாச்சாரம் ...டைய நல்ல சகோதர சகோதரிகளோடு வாழக்கூடிய அன்பான குடும்பமே. ...னும், இது எப்போதுமே சாத்தியமல்ல. சில சமயங்களில் தங்கள் ...தாயத்திலேயே குழந்தைகளை வைத்துக் கொள்ளும் தீர்மானம் உடைந்து ...கலாம். சிறந்த சூழ்நிலை இல்லாத இரண்டு தீர்மானங்களில் ஏதேனும் ...று பணியாளர்கள் தெரிந்தெடுக்கும்படி தள்ளப்படலாம், ஒவ்வொரு ...னத்திலும் அபாயம் இருக்கலாம்.

அனாதை விடுதிகளின் பதிவுகள் எப்போதுமே நலமாக இருந்துவிடாது. ...ந்தை பாலியல் துன்புறுத்தல், வெறுக்கப்படுதல், கொடூரங்கள் மற்றும் ...ர்வுபூர்வமான தேவைகள் பூர்த்திசெய்யப்படாமல் இருத்தல் போன்ற ...ச்னைகள் இருந்திருக்கின்றன. அதனால்தான் சர்வதேச தானம் கொடுக் ...வர்கள் பலர் இப்போதெல்லாம் அனாதை விடுதிகளை குறித்து எச்சரிக் ...யாக இருக்கிறார்கள்.

எனினும், ஒவ்வொரு 'குடும்ப' பகுதியிலும் சிறிய எண்ணிக்கையிலான ...ழந்தைகளை வைத்திருக்கிற, சிறிய சிக்கல்களற்ற விடுதிகள் ஒரு நல்ல ...ரிந்தெடுப்பாக இருக்கலாம். ஒவ்வொரு சமுதாயத்திலும் இருக் ...வர்களிடத்தில் கவனித்து கேட்க நேரம் எடுத்துக்கொள்ளுங்கள், பின்பு ...லும் கவனியுங்கள். அப்படிப்பட்ட குழந்தைகள் வாழ்கின்ற இடங் ...ளுக்கும், அவர்கள் இருக்கக்கூடிய வேறு இடங்களுக்கும் செல்லுங்கள்-அல்லது அப்படிப்பட்ட இடங்களுக்குச் சமீபத்தில் சென்றுவந்த ...ரிடமாவது கேளுங்கள்.

ACET குழுக்கள் சமீபத்தில், பல்வேறு நாடுகளில் உள்ள குழந்தைகள் விடுதிகளுக்கு ஆதரவு கொடுப்பதில் ஈடுபடவேண்டியதாக இருந்தார்கள். ஒரு குழந்தை அதன் சமுதாயத்திலேயே வளர வேண்டும் என்பது அவர்களுடைய விருப்பமாக இருந்தபோதிலும், பல சூழ்நிலைகளில் அது சாத்தியமல்ல என்பதை புரிந்துகொண்டார்கள். ஏதாவது ஒரு வகையில் அனாதைகள் கவனிப்பு மையங்களை மேன்மைப்படுத்த வேண்டும் என்கிற தேவை (விருப்பமில்லாமல்) ஏற்பட்டது, அது பணியாளர்களுக்கு பயிற்சியும் ஆதரவும் கொடுப்பதாக மட்டுமே இருந்தாலும் தான். தாய்லாந்து, உருசியா, உகாண்டா, சிம்பாப்வே, தென் ஆப்பிரிக்கா, இந்தியா, பெலாரஸ், செக் குடியரசு மற்றும் மத்திய ஆசிய குடியரசுகள் ஆகிய நாடுகள் இதில் அடங்கும்.

சில நாடுகளில் தூரத்து சொந்தங்கள் அனாதைக் குழந்தைகளை பார்த்துக்கொள்வார்கள். ஆனால் பல கிராமங்களிலும் பட்டணங்களிலும்

தூரத்து சொந்தங்களால் பார்த்துக்கொள்ள முடியாத அளவுக்கு அதிகமான குழந்தைகள் இருக்கிறார்கள். சிலசமயங்களில் அக்குழந்தைகள் வேலைக்காரர்களாக உபயோகப்படுத்தப்படுகிறார்கள், சில நேரங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகிறார்கள். எல்லா குழந்தைகளும் நேசிக்கப்பட்டு நன்றாக நடத்தப்படுவதை திருச்சபைகள் உறுதி செய்ய வேண்டும்.

மாற்று கவனிப்பு தேவைப்படக்கூடிய சூழ்நிலைகள்

குழந்தைகளுக்கு மாற்று கவனிப்புகள் தேவைப்படக்கூடிய சூழ் நிலைகளில் சில இதோ

★ அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்த மக்களுடைய முகாம்கள், அல்லது பல குழந்தைகள் அனாதகள் அல்லது பாதிப்படையக் கூடியவர்களாக மாற்றப்படுகிற யுத்தகளங்கள், மற்றும் சாதாரண சமுதாய ஆதரவு உடைந்துபோன இடங்கள்.

★ தொடர்ந்து குழந்தைகளை ஆதரிக்கமுடியாத குழந்தை தலைவர்களை கொண்ட வீடுகள். ஒருவேளை வீட்டிலேயேமூத்த 12 வயது குழந்தை வியாதிப்பட்டு இருக்கலாம், அல்லதுஅண்டை வீட்டாரால் போதுமான உதவிசெய்ய முடியாமல் இருக்கலாம்.

★ உள்ளூர் சமுதாயத்தில் வைக்கமுடியாத அளவுக்கு அதிகமான ஆதரவற்றஅல்லது வெறுத்து ஒதுக்கப்பட்ட குழந்தைகள்அல்லது சிறுவர்கள்.

★ பெற்றோர் மற்றும் மற்ற கவனிப்பார்களின் மறைவினால் திணறிப்போன உள்ளூர் கிராமங்கள் அல்லது நகரங்கள்.

★ சமுதாய கட்டுகள் உடைந்துபோன நகரங்களில் உள்ள குழந்தைகள், அவர்கள் கவனிப்பாரற்று தெருக்களில்இருக்கக்கூடிய, பள்ளியைவிட்டு விலகக்கூடிய,கடத்தப்படக்கூடிய, பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்படக்கூடிய அல்லது இன்னும் மோசமான நிலைக்கு தள்ளப்படக்கூடிய அபாயத்தில் இருக்கிறவர்கள்.

எச்ஐவி அனாதைகள் : கவனிப்பை தெரிந்தெடுத்தல், தெற்கு ஆப்பிரிக்கா

அனாதைகளின் கவனிப்புக்கான வெற்றிகரமான மாதிரிகள்

❒ *உணவு, மருத்துவ கவனிப்பு மற்றும் கல்வியை அனாதைகளுக்கு கொடுக்கிற பகல்நேர கவனிப்பு விடுதிகள்,இல்லையென்றால் இவர்களை தாத்தா பாட்டி அல்லது மூத்த உறவினர்களால் பார்த்துக் கொள்ளபடுகிறவர் களாய் இருப்பார்கள்.*

❒ *குழந்தைகளை அவர்களுடைய சமுதாயத்திலேயே வைத்திருப்பதுதான் சிறந்தது என்றாலும், எப்போது அது சாத்தியமாக இருப்பதில்லை. சில சூழ்நிலைகளில், அவர்கள் அண்டைவீட்டாராலும், உறவினர்களாலும் கூட ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள், அவர்களுடைய உள்ளூர் சமுதாயத்தில் அவர்களை பார்த்துக் கொள்ளும்படியான நம்பகமான யாருமே இருப்*

பதில்லை. எனவே சிறந்தது இல்லை என்றாலும் விடுதியில் கவனித்துக் கொள்வது தேவையாக மாறிவிடுகின்றது.

- *சில இடங்களில் உணவுகொடுக்கும் திட்டங்களை நிகழ்ச்சிகள் நன்கொடை செய்கிறார்கள், இதன் மூலமாக அனாதைகள் ஒருவேளையாவது ஊட்டச்சத்துள்ள உணவை பள்ளிமுடிந்ததும் பெற்றுக் கொள்கிறார்கள்.*
- *மூத்த சகோதரன் அல்லது சகோதரியின் வீட்டில் தங்கிக் கொள்ள பிரியப்படும் குழந்தை-தலைவர்களை கொண்ட வீடுகளுக்கு திருச்சபை தொடர்பான நிகழ்ச்சிகள் உதவி செய்கின்றன.*
- *தினந்தோறும் குழந்தைகளை சந்தித்து அவர்களுடைய ஆரோக் கியம், ஊட்டச்சத்து மற்றும் உடை தேவைகள் தீர்க்கப்படுவதை உறுதி செய்யும் நூற்றுக்கணக்கான கண்காணிப்பாளர்களும், கவனிப்பை கொடுக் கிறவர்களும் இருக்கிறார்கள்.*
- *குடும்ப அமைப்புகள் பலமாக இருக்கிற கிராமப்புற இடங்களில், அனாதைகள் பாரம்பரிய பண்ணைவீட்டிலே வைக்கப்படுகிறார்கள். இந்த பண்ணைவீடுகள் அதிகப்படியான குழந்தைகளை கவனித்துக்கொள்ளும் படியாக பொருளாதார ரீதியாக பெலப்படுத்தப்படுகின்றன (பலநேரங் களில் விவசாய வளர்ச்சியின் மூலமாக).*
- *நகர சூழ்நிலைகளில், நோக்கம் ஒரு குடும்ப அமைப்பை உருவாக் குவதில் இருக்கிறது. ஆறு அல்லது ஏழு அனாதைகள் ஒரு வீட்டிலே ஒரு வயதுவந்த 'தாய்' அல்லது 'தந்தை'யின் கவனிப்பிலே வைக்கப்படுகிறார்கள்.*
- *சில நிகழ்ச்சிகளின் இறுதி இலக்கு இக்குழந்தைகளை தத்து கொடுப்பதிலோ அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு தத்து கொடுப் பதிலோதான் இருக்கிறது.*
- *அனாதைகளுக்கு ஊக்கத்தொகையும் மற்ற உதவிகளும் கொடுக் கப்பட்டு பள்ளியிலேயே தங்கவைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.*

தெற்கு ஆப்பிரிக்காவில் எச்ஐவிக்கு விசுவாசம் அடிப்படையிலான பதில்: கவனிப்பை தெரிந்தெடுத்தல் முயற்சி, UNAIDS சிறந்த செயல்பாடுகளின் சேகரிப்பு

→ குறிப்பிடத்தக்க அளவுக்கு நன்றாக செயல்பட்டுக்கொண்டிருக்கிற அனாதை விடுதிகளில் ஏற்கனவே வாழ்ந்துவிட்ட குழந்தைகளுக்கும், திடீரென உண்மையான நடைமுறை தேவைகள் ஏற்படலாம்- எடுத் துக்காட்டாக, கசியும் கூரைகள், படுக்கைகளுக்கு கொசுவலைகள் இல்லாமல் இருத்தல், சுத்தமான குடிநீர் இல்லாமல் இருத்தல், சரியான கழிவுநீரமைப்பு இல்லாமல் இருத்தல், மோசமான உணவு, கல்வி அல்லது அடிப்படை மருந்துகளுக்கு பணம் இல்லாமல் இருத்தல் ஆகியவை.

கடவுளுடைய பார்வையில் ஒவ்வொரு குழந்தையும் தனித்துவம் வாய்ந்தது, வித்தியாசமானது. அவர்கள் வயதிலும், கலாச்சாரத்திலும், ஆள்தத்துவத்திலும், உணர்வின் நிலைபாட்டிலும், சமீபத்திய வரலாற் றிலும், அவர்களுடன் இருக்கவேண்டிய சகோதர சகோதரிகள் இருக்

கிறார்களா என்பதிலும் வித்தியாசப்படுவார்கள். எல்லா தனிப்பட்ட உண்மைகளையும் கருத்தில்கொண்டு ஒவ்வொரு குழந்தையைக் குறித்த தீர்மானமும் எடுக்கப்பட வேண்டும். பெரிய குழந்தைகளின் கண்ணோட்டமும் மிகவும் முக்கியமானது. மரித்துக் கொண்டிருக்கும் பெற்றோரும் தங்களுடைய சொந்த குழந்தைகளின் எதிர்காலம் குறித்து உறுதியான வேண்டுகோள்களை முன்வைப்பார்கள், எங்கெல்லாம் அதை பின்பற்றமுடியுமோ அதையும் பின்பற்ற வேண்டும்.

எய்ட்ஸ் அனாதைகளை தத்து எடுப்பதா?

வெளிநாட்டினருக்கு தத்து கொடுத்தல் என்பது கடைசிகட்ட நடவடிக்கையாகத்தான் இருக்க வேண்டும். குழந்தையின் சொந்த சமுதாயத்தின் எல்லா வாய்ப்புகளையும் முதலாவது ஆராய்வது மிக முக்கியமானது ஆகும்.

சர்வதேச தத்து என்பது குழந்தை அதை பெற்றுக்கொள்ளும் குடும்பம் ஆகிய இருவருக்குமே ஆபத்தான பாதை. கலாச்சார அதிர்ச்சி, மொழி மாற்றம், அடையாள பிரச்சனை, தட்பவெட்பத்திற்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ளுதல் மற்றும் உணர்வுபூர்வமான அதிர்ச்சி ஆகியவை விளையக் கூடும், குறிப்பாக குழந்தையை முதல் அல்லது இரண்டாம் பிறந்தநாளுக்கு பிறகு தத்து எடுக்கும்போது. சகோதர சகோதரிகளும் பிரிந்துபோகக்கூடும், ஏனென்றால் ஒரே சமயத்தில் ஒன்றுக்குமேற்பட்ட அனாதைகளை ஒரு குடும்பம் தத்து எடுப்பது அபூர்வம்.

எனினும், பல தேவையற்ற கர்ப்பங்கள் கர்ப்பச்சிதைவில் முடிவடைவதால் பல பணக்கார நாடுகளில் மலட்டுத்தன்மை வளர்ந்து வருகின்றது, அதற்கு தத்துகொடுப்பதற்கு அதிகமான குழந்தைகளின் தட்டுப்பாடு நிலவுகிறது. இதன் விளைவாக, பெரும் கூட்டமக்கள் தத்து எடுக்க ஆர்வமாக இருக்கிறார்கள், எச்ஐவி அனாதைகளை தத்து எடுக்க விரும்புகிறவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

எச்ஐவியினால் மாத்திரம் அனாதைகளானவர்களுக்கு மாத்திரம் உதவிசெய்வது நடைமுறைக்கும் ஏற்றவாறு இருக்காது, அது சரியாகவும் இருக்காது. துவக்கத்திற்கு, நீங்கள் ஒரு கிராமத்திற்குள் செல்லும்போது நூற்றுக்கணக்கான அனாதைகள் உங்களை சுற்றிக்கொள்கிறார்கள், அவர்களில் யார் தங்களுடைய பெற்றோரை இழந்தவர்கள் என்பது உங்களுக்கு தெரியும்? அதில் பலர் எச்ஐவி அனாதைகளாக இருக்கலாம், ஆனால் எல்லா காரணங்களினாலும் அனாதைகள் ஆக்கப்பட்டோரையும் சேர்த்துக்கொள்ள கருத்தில் கொள்ளுங்கள் (அல்லது எல்லா குழந்தைகளையுமே), அல்லது நீங்கள் கசப்பான உணர்வை உருவாக்கக்கூடும்.

கிருபையின் வீடு, தாய்லாந்து

தெற்கு தாய்லாந்தில், போதகர் கிடிசாக் மற்றும் அவருடைய மனைவி எச்ஐவி சூழ்நிலையை குறித்து ஜெபித்து வந்தார்கள். போதகர் ஒரு சிறிய சபையை வழிநடத்தி வந்தார்,

50,000 அனாதைகள்-ஹோப் எச்ஐவி-ஃபில் மற்றும் வெண்டி வால்

ஹோப் எச்ஐவி 50000 குழந்தைகளையும் இளைஞர்களையு,ம் 40 துணை நிறுவனங்களுடன் 400 சமுதாயங்களில் துணை-சஹாரா ஆப்பிரிக்காவில் ஆதரித்து வருகின்றார்கள். ஃபில்லும் விண்டியும் ஹிரிவில் இருந்து தென் ஆப்பிரிக்காவுக்கு வந்தபோது இது ஆரம்பமானது.

'1997ல் ஆப்பிரிக்காவுக்கு வந்தபோது நாங்கள் மிகவும் நெகிழ்ச்சி அடைந்து, எங்கள் மனதை தொட்ட சோத்வா என்னும் ஒரு இளம் அனாதை பெண்ணை தத்து எடுக்க முயற்சித்தோம். அவளுடைய பெற்றோர் எய்ட்ஸ் தொடர்பான வியாதியில் இறந்துபோனார்கள். நாங்கள் ஆறுமாதங்களாக சட்டபூர்வமான சிக்கல்களினால் தடுக்கப்பட்டு இருந்தோம். இந்த காத்திருப்பின் காலத்தில் நாங்கள் இந்த ஒட்டுமொத்த முறையையும், இதே சூழ்நிலையில் இருக்கும் மற்ற குழந்தைகளுக்கு உதவக்கூடிய மாற்று வழிகளையும் யோசித்துக்கொண்டு இருந்தோம். பின்பு அவளுடைய சொந்த தாத்தா பாட்டி கண்டுபிடிக்கப்பட்டனர், அவர்கள் அவளை பார்த்துக்கொள்ள மிகவும் பிரியமாக இருந்தார்கள். இந்த அனுபவத்தின் மூலமாக, ஆப்பிரிக்கா முழுவதிலும் இருக்கிற எச்ஐவி அனாதைகளுக்கான உள்ளூர் சமுதாயங்களுக்கு நிதி உதவி செய்வதற்காக நாங்கள் எங்களால் இயன்றதை செய்தோம்.

இவர்களில் ஒரு இளைஞர் ஜெஃப்ரி, இவர் வடக்கு உகாண்டாவில் இருக்கிற பலாபெக் ஜெம் இடம்மாற்றப்பட்ட மக்கள் முகாமில் வசித்து வருகிறார். இவர் ஹோப் எச்ஐவியினால் ஆதரிக்கப்பட்ட முயற்சியான அனாதைகள் பிரச்சனைகள் குழுவில் சேரும்போது இவருக்கு 14 வயது, இந்த அமைப்பு முகாமில் இருக்கும் 500 அனாதை மற்றும் பாதிக்கப்படக்கூடிய 500 குழந்தைகளின் உரிமைகள், தேவைகள் மற்றும் குரல்களை மேற்பார்வை இடுகின்றது. இவர் உணவும் தானம்செய்யப்பட்ட துணிமணிகளும் அதிக தேவையுள்ளவரை சென்றடைவதை உறுதிசெய்யும் வள ஒருங்கிணைப்புக்கு அமைச்சராக பணியமர்த்தப்பட்டார். ஹோப் எச்ஐவி நிதியின் மூலமாக, இப்போது ஜெஃப்ரி கட்டுமானப்பணியில் ஒரு ஆண்டுகால படிப்பை முடித்துவிட்டார், நாட்டின் எதிர்காலத்தை கட்டுவதில் இவர் முக்கியமான பங்குவகிப்பார்.'

www.hopehiv.org

அப்போது சிலர் உள்ளூர் மக்களால் முற்றிலும் நிராகரிக்கப்பட்ட குழந்தைகளை அவர்களுடைய பெற்றோர் எய்ட்ஸினால் இறந்தபிறகு கொண்டுவந்தார்கள். பின்பு கிடிசாக்கும் அவருடைய மனைவியும் இந்த குழந்தைகளை தங்களுடைய சொந்த குடும்பத்தில் சேர்த்துக்கொண்டு, தங்களுடைய வீட்டிலேயே அவர்களை பராமரிக்க தொடங்கினார்கள். இன்னும் அதிகமானபேர் வரத்தொடங்கினார்கள். இந்த குழந்தைகளில் சிலருக்கும் எச்ஐவி பாதிப்பு இருந்தது.

வெகு நாட்களுக்கு முன்பாக போதகர் கிடிசாக் முயற்சிசெய்து ஒரு சிறிய ஆளில்லாத பள்ளிக்கூட கட்டிடத்தை வாடகைக்கு வாங்கினார், அங்கே அனைவரும் தஞ்சம்புகுந்தனர். சில ஆண்டுகளுக்கு இதுவே அவர் களுடைய வீடாக இருந்தது, ஆனால் அது விரிசல் விட்டு, கூரைகள் கசியத் தொடங்கின, எனவே போதகர் கிடிசாக் ஒரு புதிய வீட்டிற்காக ஜெபிக்கத் தொடங்கினார்.

16 ஆண்டுகள் ACET தாய்லாந்தில் பணிசெய்த ஆலன் மேலின் எல்லார்டுடன் பணிசெய்து, அவர்கள் 12 குழந்தைகளை ஒவ்வொரு வீட்டிலும் வைத்திருக்கக்கூடிய, வியாதிப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் பிரிவை உடைய முற்றிலும் புதிய கட்டிடம் கட்டுவதற்கான நிதியை திரட்டினார்கள். ACET தாய்லாந்து பேங்காக்கில் உள்ள எச்ஐவி உடைய மக்களை கவனித்துக் கொள்வதிலும், மேலும் வடக்கே திருச்சபை வளத்திரட்டல் மற்றும் எச்ஐவி உடைய பெண்களுக்கான ஆதரவு குழுக்களுக்கு சமுதாய சேவை செய்வதிலும் நீண்ட சரித்திரப்பதிவுகளை உடையவர்கள்.

டிசம்பர் 2007ல் அனைவரும் கிருபையின் வீட்டிற்குள் சென்றனர். இது ஒரு நீண்ட பிரயாணம், ஆனால் குழந்தைகள் அழகான அமைதியான ஒரு வீட்டிலே இறுதியாக தங்கிவிட்டார்கள்.

போதகர் கிடிசாக்குடைய சபையில் உறவுகொள்வது எப்போதுமே சுலபமானது கிடையாது. அவர் இப்போதெல்லாம் தலைமை ஏற் பதுகிடையாது, ஆனால் மும்முரமாக செயல்பட் டுக்கொண்டு இருக்கிறார், அதோடு கிருபையின் வீட்டையும் ACET தாய்லாந்தையும் நடத்தி வருகிறார். சபையில் உள்ள சிலரால் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் அதிகமான கூட்டமாக இருக்கும் 60 உற்சாகமுள்ள எய்ட்ஸ் அனாதைகளோடு சமாளிக்க முடியாமல் இருக்கிறார்கள்.

அனாதைகளை குறித்து கருத்தில்கொள்ள வேண்டிய பிரச் சனைகள்

இங்கே நாம் யோசிக்கவேண்டிய சில பெரிய பிரச்சனைகள் இருக் கின்றன. நாம் உண்மையாகவே எய்ட்ஸ் அனாதகளைப் பற்றி மாத்திரம் கவலைப்படவேண்டுமா, அல்லது நம்முடைய அக்கறை மற்ற காரணங் களினால் அனாதைகளானவர்களுக்கு நீட்டிக்கப்பட வேண்டுமா-உங்களால் எப்படி சொல்ல முடியும்? 'அனாதை' என்றால் என்ன-பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தையா அல்லது இருவரையுமா?

அனாதை கதைகளைக் கூறி மக்களுடைய இருதயத்தை தொட்டு நிதி வசூலிப்பது நோய்தடுப்பு பணிக்காக நிதி வசூலிப்பதைக் காட்டிலும் சுலபம் என்பதை அறிந்துகொள்ளுங்கள், ஆனால் அடுத்த தலைமுறை அனாதைகளை தடுப்பதே சவாலாக இருக்க வேண்டும். எனவே ஒவ்வொரு அனாதைகள் நிகழ்ச்சியிலும் நோய்தடுப்பை உருவாக்க மறந்துவிடாதிருங்கள்.

அனாதைகளுக்கும் பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளுக்கும் மனரீதியான ஆதரவு என்பது மிகவும் முக்கியம். இப்படிப்பட்ட பணி REPSSI போன்ற நிறுவனங்களால் துவக்கப்பட்டது, இப்போது 13 ஆப்பிரிக்க தேசங்களில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. வேர்ல்ட் விஷன், தி

நெஹேமியா ப்ராஜெக்ட், UNICEF மற்றும் பலர் இப்போது எச்ஐவியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நல்ல மனநலன் மற்றும் சமுதாய ஆதரவு ஆகியவற்றிற்கு அதிக கவனம் செலுத்துகிறார்கள்.

அனாதைகளுக்கு பதிலளிப்பது பற்றி சிறுகுறிப்பு:

➔ அனாதைகள் வாழும் சூழ்நிலையை அவர்களுடைய உடன் இருப்பவர்களுடைய நிலைக்கு இணையாக உயர்த்துங்கள், கசப்புணர்ச்சி வராமல் இருக்க அவர்களுடைய நிலைக்குமேலாக உயர்த்தாதிருங்கள்.

➔ கூடுமானால் நிலத்தை அணுகக்கூடிய நிலையில் அனாதைகள் தங்களுடைய சொந்த வீட்டிலும் சமுதாயத்திலும் வாழ்வதற்கு உதவி செய்யுங்கள்.

➔ உங்களால் முடிந்தால் அனாதைகள் அவர்களுடைய தூரத்து சொந்தங்களின் வீட்டிலே வைத்துவிடுங்கள்.

➔ கூடுமானால் விடுதியல்லாத வாய்ப்புகளை ஊக்கப்படுத்துங்கள்

➔ எந்த வயதில் ஆதரவு நிறுத்தப்படும் என்பதை உடன்பாடு செய்யுங்கள்.

➔ அனாதை ஆதரவு என்பது ஒரு குழந்தைக்கான நீண்டகால அர்ப்பணிப்பு என்பதை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்.

➔ பள்ளி பருவம் முடிந்ததும் மைக்ரோ நிதி மற்றும் வணிக பயிற்சி போன்ற தீர்மானங்களை குறித்து யோசியுங்கள்

➔ மூத்த அனாதைகளை கலந்துகொள்ளச் செய்து அவர்களுடைய கருத்துக்களை கேளுங்கள்.

➔ குடும்பங்களையும் சமுதாயங்களையும் பயிற்சியின் மூலமாகவும் ஆதரவு கொடுப்பதன் மூலமாகவும் பெலப்படுத்துங்கள்.

மெட்டில்டா ட்ரஸ்ட்-ரிச்சர்ட் மற்றும் வெண்டி பிலிப்ஸின் கதை

'நாங்கள் 1998ல் சிம்பாப்வேயில் வேலைசெய்துகொண்டு இருந்தோம். நாங்கள் சமுதாய நிலப்பரப்பை கடந்துசென்றபோது பண்ணைவீட்டிற்கு பண்ணைவீடு சுற்றுச்சுவருக்குள் சமீபத்தில் செய்யப்பட்ட கல்லறைகள் காணப்பட்டன. எச்ஐவி கொடூரத்தின் அச்சுறுத்தும் பெரியதன்மையை என்னால் உணரமுடிந்தது. உங்களுடைய துணைவருக்கோ அல்லது மகனுக்கோ அல்லது மகளுக்கோ இவ்வளவு குறைந்த ஆதாரங்களை வைத்துக்கொண்டு கவனித்துக் கொள்ள முயற்சிப்பது எப்படி இருக்கும் என்று யோசிப்போம். அல்லது சிறு குழந்தைகளை விட்டுச் செல்லப் போகிறீர்கள், அவர்கள் முற்றிலும் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்கிற நிலையில் பெற்றோராக இருப்பது எப்படி. ஒருவகையான நிவாரணம் கொண்டுவரவேண்டும் என்கிற தேவை எங்களுக்குள் வளர்ந்தது.

எச்ஐவி உடைய ஒரு இளம் பெண் மெட்டில்டா ந்க்யூப், எங்கள் இதயத்தை தொட்டுவிட்டாள். அவள் எங்களுக்கு சிநேகிதியாகி 1999ல் இறந்துபோனாள், அவளுடைய 15 வயது மகனை விட்டுச் சென்றாள். அந்த

சமயத்தில் இருந்து எய்ட்ஸ் எங்களுக்கு தனிப்பட்டதாக மாறியது. நாங்கள் முதலாவது சந்திப்பதற்கு முன்பே மெட்டில்டாவுக்கு எய்ட்ஸ் இருந்தது, நீண்ட காலத்துக்கு முன்பாகவே அவள் இறந்துவிடுவாள் என்பதை அவள் அறிந்திருந்து வாழ்ந்துவந்தாள். அவளுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பல்வேறு துன்பங்களைப் போல இதையும் அவள் அமைதியான மனப் பாங்குடன் ஏற்றுக்கொண்டாள்.

எய்ட்ஸ் வெகு சிலரால் மாற்றமுடியாத அளவுக்கு மிகப் பெரியதாக இருந்தால், தங்களுடைய வாழ்க்கை முடிந்துபோகப் போகிற சிலருடைய வாழ்க்கையை இன்னும் கொஞ்சம் சௌகரியமாகவாவது வாழவைக்க நாம் முயற்சிக்கலாம். அதிகமான தேவை இருக்கிற இடம் என்னவெனில் வீட்டிலே கவனித்துக் கொள்ளும் தன்னார்வத் தொண்டர்களுக்கான பைகள்தான். அவர்கள் பலநேரங்களில் சோப்பு, கை உறை போன்றவை இல்லாமல் பணிசெய்கிறார்கள்.

இன்று, அயர்லாந்தில் இருந்தும் மற்ற நாடுகளில் இருந்தும் மெடில்டா ட்ரஸ்ட் சிம்பாப்வேயில் இருக்கிற 3000 அனாதைகளுக்கும், வீட்டிலே இருக்கும் எய்ட்ஸ் உடைய 4000 பேருக்கும் ஆதரவு கொடுக்கிறது. இது ஒரு சுலபமான காரியம் அல்ல-பணவீக்கம் வருடத்துக்கு ஏறத்தாழ 100 கோடி சதவிகிதம் இருக்கிறது. வேதாகம ஐக்கியம் மற்றும் REPSSI போன்ற நிறுவனங்கள் உருவாக்கிய மாதிரிபோன்றவற்றை சமுதாய குழுக்கள் உபயோகிக்கிறார்கள். பயிற்சிபெற்ற தன்னார்வத்தொண்டர்கள் வீட்டிற் குள் செல்கிறார்கள், குழந்தை தலைவர்களை கொண்ட வீடுகளை தேடுகிறார் கள். அனாதைகலள கவனித்துக்கொள்ளும் ஒவ்வொரு வீடும் தினசரி உணவுப்பொட்டலங்களை பெற்றுக்கொள்கிறார்கள், சிலநேரங்களில் அனாதைகளின் பள்ளிக்கட்டணம் செலுத்தப்படுகின்றது. பள்ளி நிகழ்ச் சியின் ஒரு பகுதியாக பல அனாதைகள் ஒவ்வொரு நாளும் உணவு ஊட் டப்படுகிறார்கள்.

❒ எய்ட்ஸ் தொடர்பான நோய்களினால் இறந்த பெற்றோருடைய பிள்ளைகளுக்கு மாத்திரமில்லாமல் அகன்ற ஆதரவை கொடுங்கள்.

❒ சில அனாதைகளுக்கு எச்ஐவி இருக்கும் என்பதை அறிந்து மருத்துவ பராமரிப்புக்கும் தயாராக இருங்கள்.

❒ விவசாயம் மற்றும் பல வருமானம் ஈட்டும் பயிற்சிகள் போன்ற குடும்பங்களை வாழவைக்கும் பயிற்சிகளை கொடுங்கள்.

❒ பல்வேறு காரணங்களினால் அனாதைகள் சமுதாயத்தில் வைத் துக்கொள்ள முடியாதபோது விடுதி பராமரிப்பைகொடுக்க தயாராக இருங் கள்.

❒ விடுதி பராமரிப்பு தேவைப்பட்டால், ஒவ்வொரு பகுதியும் சிறியதாக இருப்பதன் மூலமாக ஒரு குடும்ப உணர்வை பெற்றுக்கொள்ள கடினமாக முயற்சி செய்யுங்கள்.

❒ தனிநபர்களுக்கு அல்லது குடும்பங்களுக்கு தொடர்சியான உணவுப்பொட்டலங்களை கொடுங்கள்.

❒ பள்ளி கட்டணமும் ஆடைகளும் கொடுங்கள்.

- பள்ளி காலை உணவுகள் கொடுங்கள்- மிகவும் தனித்து இருக்கிற இடங்களில் இருந்து வரும் சில குழந்தைகள் வீட்டில் இருந்து மூன்று மணிநேரத்துக்கு முன்பாகவே, வீட்டில் காலை உணவு அருந்தாமல் நடந்து வருவார்கள்.
- ஒரு முக்கிய பணியாளரிடமும், ஒரு குடும்பம் அல்லது தன்னார்வத்தொண்டரை இணைப்பவரையும் சென்று பாருங்கள் அவரிடமிருந்து ஆதாவையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
- குழந்தை தலைவராக இருக்கும் குடும்பத்தில் இருக்கும் மூத்த குழந்தைக்கு பிரத்தியேகமான பயிற்சி கொடுங்கள்.

மற்ற பயனுள்ள ஆதாரங்களுக்கு: www.jlica.org

எச்ஐவிக்கான ஆலோசனை மற்றும் பரிசோதனை-தடுப்பதற்கும் பராமரிப்புக்கும்

எச்ஐவிக்கு சிகிச்சை தேவைப்படுகிறவர்கள் மற்றும் ஆண்டிவைரல்கள் மூலமாக பாதுகாக்கக்கூடிய அவர்களுடைய பிறக்காத குழந்தைகளை அடையாளம் காண்பதில் ஆலோசனையும் பரிசோதனை நிகழ்ச்சிகளும் முக்கியமானவை. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் சமுதாயம் முழுவதிலும் மனப்பாங்கை மாற்றுவதற்கு உதவியாக இருக்கின்றன.

காங்கோ ஜனநாயக குடியரசில் இருக்கும் ACET ஒரு ஆலோசனை மற்றும் பரிசோதனை நிகழ்ச்சியை நடத்தி வருகின்றது. குழுக்கள் பள் ளிகளுக்கும், சபைகளுக்கும், வாலிபர் குழுக்களுக்கும், கல்லூரிகளுக்கும் மற்ற சமுதாய அமைப்புகளுக்கும் செல்கின்றனர். தேசம் முழுவதிலும் 6 சதவிகிதம் வயதுவந்தோருக்கு எச்ஐவி இருக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள், ஆனால் எச்ஐவி தடுப்பு மிகக் குறைவாகவே இருக்கிறது, பல சபைகள் இப்போதுதான் அந்த சூழலுக்கு விழித்துக்கொள்கிறார்கள். நாங்கள் குழுக்களிடம் எச்ஐவி குறித்து பேசும்போது, பலர் அதிர்ச்சியடைந்து தங்களுடைய எச்ஐவி நிலையைக் குறித்து கவலைப்பட தொடங்குகிறார்கள். எப்படி தாங்கள் பரிசோதித்துக்கொள்ளலாம் என்று அவர்கள் கேட்கிறார்கள்.

கின்கான்சாவில் வெகு சில அரசாங்க மையங்களே இருக்கின்றன, அவை 80 கோடி மக்களுக்கு சேவைசெய்கின்றன, எனவே அந்த குழு தாங்களே மக்களை பரிசோதிக்க தொடங்கினார்கள். முதலில் ஒவ்வொரு மனிதரும் ஆலோசனை பெற்றுக்கொள்கிறார். அவர்களுக்கு பரிசோதனை தேவைப்படுவது ஏன்? அவர்கள் உண்மையாகவே அபாயத்தில் இருக்கிறார்களா? அந்த பரிசோதனை அவர்களுக்கு என்ன சொல்லும் என்பதை அவர்கள் அறிந்து இருக்கிறார்களா? அவர்கள் பாசிடிவாகவோ அல்லது நெகடிவாகவோ பரிசோதிக்கப்பட்டால் அவர்கள் எப்படி செயல்படுவார்கள்? அவர்கள் யாரிடத்தில் கூறுவார்கள்? போன்றவை.

அவர்களுக்கு ஒரு பரிசோதனை கொடுக்கப்படுகிறது. இது ஒரு பயிற்சிபெற்ற சோதனைக்கூட பணியாளரால் ஒரு உடனடி பரிசோதனை கருவி மூலமாக செய்யப்படுகின்றது. மூன்று வித்தியாசமான பரி சோதனைகள் செய்யப்படுகின்றன. முதலாவது பாசிடிவாக இருந்தால்

இரண்டாவது செய்யப்படுகிறது. இரண்டாவதும் பாசிடிவாக இருந்தால் மூன்றாவது பரிசோதனையும் நடத்தி உறுதி செய்யப்படுகிறது. மூன்றுமே பாசிடிவாக இருந்தால் அந்த நபருக்கு எச்ஐவி இருப்பது அதிக நிச்சயம் (300 இல் 1 தவறுக்கும் குறைவாக இருக்கிறது). அந்த பரிசோதனைக்கு மூன்று அமெரிக்க டாலர்கள் செலவாகும், அந்த நபர் காத்திருக்கும்போது இவை செய்யப்படலாம்.

பரிசோதனை பாசிடிவாக இருந்தால், அந்த நபரோடு வேலை செய்ய அவருக்கு தேவையான ஒரு பிரத்தியேக ஆதரவு கொடுக்கப்படுகின்றது. எச்ஐவி பாசிடிவான ஒவ்வொரு நபரும் பின் தொடரப்பட்டு, இலவச ஆண்டிவைரல்கள் பெற்றுக்கொள்ள அனுமதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அரசாங்க மருத்துவ குழுக்களுக்கு அறிமுகம் செய்யப் படுகிறார். ஆண்டிவைரல்கள் கிடைக்கவில்லை என்றால், அந்த இடை வெளியை பூர்த்திசெய்ய அந்த குழு அரசாங்க சரக்குகள் அதிகமாக வரும்வரை அந்த நபருக்கு சிகிச்சை அளிக்க தொடங்குகிறார்கள்.

டீனேஜர்கள் (13 முதல் 19 வயதுள்ளவர்கள்) பரிசோதனை குறித்து கேட்டால் அவர்களுடைய பெற்றோருடன் ஆலோசிக்கும்படி கூறப் படுகிறார்கள், எனவே பரிசோதனை ஒரு குடும்ப தீர்மானமாகிவிடுகிறது. சில நாடுகளில் ஒரு டீனேஜரின் எச்ஐவி அபாயம் குறித்த உரையாடல் முற்றிலும் தனிப்பட்டதாக கருதப்படுகின்றது, பெற்றோரின் அனுமதி இல்லாமல் அரசாங்க சிறு மருத்துவமனைகள் பரிசோதனை கொடுக்கின்றன.

யுத்தங்கள் பலசமயங்களில் எச்ஐவி வேகமாக பரவச் செய்கின்றன. இன்று பல யுத்தங்கள் தேசங்களுக்கு நடுவே நடக்கின்றனவே தவிர மக்களுக்கு நடுவே அல்ல, இவை பல கோடி மக்களை அகதிகளாக வெளியேறச் செய்கின்றன. சட்டம் ஒழுங்கு உடைந்துபோய், ஆயுதம் தாங்கிய படையினர் தெருக்களில் சுற்றித் திரியும்போது, ஒரு சுகாதார சேவை செய்வது சாத்தியமற்றது. தடுப்பு நிகழ்ச்சிகள் சீர்குலைந்து வியாதி பரவுகின்றது. ஆயுதம் தாங்கிய கூட்டத்தார் பல உடலுறவுத்துணையாளர் களை எடுத்துக் கொள்கிறார்கள், துப்பாக்கி முனையிலோ (பாலியல் பலாத்காரத்தை ஒரு போர் ஆயுதமாக எடுத்துக்கொண்டு) அல்லது ஒரு உதவிக்கு மாற்றாகவோ பெற்றுக்கொள்கிறார்கள். காங்கோ ஜனநாயக குடியரசிலும் மத்திய ஆப்பிரிக்காவின் பிற பகுதிகளிலும் இது ஒரு பெரிய பிரச்சனையாகவே இருந்து வருகின்றது, லட்சக்கணக்கான சிறுமிகளும் பெண்களும் இப்படிப்பட்ட யுத்தங்களிலே சிக்கிக் கொள்கின்றனர்.

எச்ஐவி பரிசோதனை மற்றும் ஆலோசனை செயல்கள் தொடர்பான மருத்துவ பராமரிப்பு நிகழ்ச்சிகளில் நிறுவனங்கள் ஈடுபடக்கூடிய வழிகள்:

- ❐ கிடைக்கக்கூடிய சிகிச்சை பற்றி கற்பித்தல்
- ❐ இப்போது இருக்கும் சுகாதார அமைப்புகளால் அடையாளம் கண்டுபிடிக்க தவறிய கர்ப்பிணித் தாயார்களை அடையாளம் கண்டு பிடித்தல்-இந்தியப் பெண்களில் 40 சதவிகிதம் பேர் வீட்டிலே குழந்தை பெற்றெடுக்கிறார்கள்.

- ❐ பரிசோதித்துக்கொள்வதன் பயன்பாடுகளை கர்ப்பிணிப் பெண்களுக்கு கற்பித்தல்
- ❐ பரிசோதனைக்கு முன் மற்றும் பின் கொடுக்கப்படும் ஆலோசனைகளை அணுக வகைசெய்தல்
- ❐ எச்ஐவி பரிசோதனைகளை செய்து, ரகசியமான முடிவுகளை கொடுத்தல்.
- ❐ எச்ஐவிக்கு பாசிடிவாக பரிசோதிக்கப்பட்ட பெண்கள் அனைவரும் ஆண்டிவைரல் நிகழ்ச்சிகளுக்கு பதிவுசெய்து கொள்வதை உறுதி செய்யுங்கள்.
- ❐ மக்கள் தங்களுடைய மருந்துகளை சரியாகவும் சரியான நேரத்திலும் எடுத்துக்கொள்ள பயிற்சியும் ஆதரவும் கொடுங்கள்.
- ❐ மோசமான பக்கவிளைவுகளுக்கு நீண்ட கால சிகிச்சைகளை கண்காணியுங்கள்.
- ❐ எச்ஐவி உடையவர்களிடத்தில் பொதுவாக காணப்படுகிற மற்ற நோய்பாதிப்புகளை தடுக்கவும் சிகிச்சை அளிக்கவும் உதவுங்கள். ஆண்டிவைரல்களை அணுகமுடியாத எச்ஐவி உடைய 80 சதவிகித மக்களுடைய வாழ்க்கையைநீட்டிப்பதற்கு ஒரு மிகச்சிறந்த வழி இதுதான்.
- ❐ கொனோரியா போல விரைவாக பரவி எச்ஐவி உடைய மக்கள் சீக்கிரத்தில் வியாதிப்படவைக்ககூடிய வியாதிகளுக்கு சிகிச்சை அளியுங்கள்.

மூன்று 'சி' க்கள்

UNAIDS தாங்களே பரிசோதிக்கப்படவேண்டும் என்று விரும்புகிற நபர்களை பரிசோதிப்பதை மாத்திரமே ஆதரிக்கிறது. எல்லா பரிசோதனைகளும் மூன்று 'சி' க்களின் நிபந்தனையில் மாத்திரமே நடத்தப்பட வேண்டும்

- ❐ **அனுமதி பெயரில்** (Informed Consent)
- ❐ **ரகசியமாக வைத்துக்கொள்ளுங்கள்** (Be Confidential)
- ❐ **ஆலோசனையை சேர்த்துக்கொள்ளுங்கள்** (Include Counselling)

எங்கெல்லாம் அதிகப்படியான குற்றப்படுத்துதலும், இன வேறுபாடும், மூன்று 'சி' க்களின் அடிப்படையில் ஆலோசனை மற்றும் பரிசோதனை நடத்துவதற்கான குறைந்த திறனும் இருக்கிறதோ, இந்த பிரச்சனைகள் முதலாவது சரிசெய்யப்பட வேண்டும்.

பரிசோதனைகள் பாசிடிவாக இருந்தால் ஆண்டிவைரல்களை அணுகுவதற்கான எதிர்பார்ப்பு உண்மையானதாக இருக்கவேண்டும். தடுப்பு, பராமரிப்பு மற்றும் ஆதரவும் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும்.

ஆதாரம் : UNAIDS/WHO வழிகாட்டிகள்

அகதிகளும் இடம்பெயர்ந்த மக்களும்

நீங்கள் பரிசோதனை மற்றும் ஆலோசனையோடு இருக்கிற அற்புதமான எச்ஐவி சிறு மருத்துவமனையை ஏற்படுத்தலாம், ஆனால் உலகின் பல

பகுதிகளில் சூழ்நிலை நிலையற்றதாக மாறக்கூடும், அப்போது இப்படிப்பட்ட கட்டிடங்கள் சரியான இடத்தில் இருக்காது அல்லது செயல்படாமல் போய்விடும்.

சமுதாயங்கள் உடையும்போது அல்லது நகர்ந்து செல்லும் போது, அல்லது ஒழுக்கமற்ற ராணுவம் நாட்டுக்குள் புகுந்து பாலியல் பலாத்காரம் அல்லது குழந்தைகளுக்கு பாலியல்ரீதியான துன்பங்களை சகஜமாக கொடுக்கும்போது எச்ஐவி வேகமாக பரவுகின்றது. உலகத்தில் 150 கோடி அகதிகள் இருக்கிறார்கள், அவர்கள் பெரும்பாலும் கொடூரமான சூழ்நிலைகளில், கூட்டம் நிறைந்த முகாம்களில் மோசமான சுகாதார நிலையில், குறைந்த ஆரோக்கியத்தோடு வெகு சில பள்ளிக்கூடங்கள் உள்ள இடங்களில் இருக்கிறார்கள். இதில் 75 சதவிகிதம் அகதிகள் உயர்ந்த எச்ஐவி சம்பவங்கள் இருக்கின்ற நாடுகளிலே இருக்கிறார்கள்.

அவசர சூழ்நிலையில், உணவு, இருப்பிடம், அவசர சுகாதார மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு முன்னால் எச்ஐவி குறைந்த முக்கியத்துவமுடையதாகவே தெரிகிறது. ஆனால் நீண்டகால பிரச்சனைகளும் அதே சமயத்தில் தீர்க்கப்பட வேண்டும்.

வடக்கு உகாண்டா 20 ஆண்டுகளுக்கும் மேலாக லார்ட்ஸ் ரெசிஸ்டன்ஸ் ஆர்மி என்கிற கூட்டத்தால் பாதிக்கப்பட்டது, அக்கூட்டம் மக்களை அச்சுறுத்தி, கிராமத்து மக்களை கொன்று, அவர்கள் வீட்டை கொளுத்தி, மிருகங்களை கொன்று, பயிர்களை அழித்து, குழந்தைகளை எடுத்துச் சென்றது. இந்த இளைஞர்கள் பின்பு போதை கொடுக்கப்பட்டு, அடித்து. ஆயுதம் அணிவித்து அவர்களுடைய கிராமத்துக்கே மீண்டுமாக அனுப்பி வைத்து தங்களுடைய சொந்த குடும்பத்தினரையே கொன்றுவரும்படி பலவந்தம் செய்யப்பட்டனர், அவர்கள் அதைச் செய்யமறுத்தால் அவர்களே சுட்டுக் கொல்லப்படுவார்கள் என்று மிரட்டப்பட்டனர். இப்படி தனிப்படையினரால் கொடுமைப்படுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான இந்த குழந்தைகள் செடிகளுக்கு நடுவே மறைந்துகொண்டனர்.

இதன் விளைவாக, ஆயிரகணக்கான வறுமைக்கோட்டில் இருந்த விவசாயிகள் அரசாங்க சுற்றுச்சுவர்களுக்குள் வாழத்தொடங்கினார்கள், அங்கேயே அவர்கள் தங்களுடைய களிமண் வீடுகளை கட்டிக் கொண்டு தங்களுடைய சொந்த நிலத்தைவிட்டு வெகுதூரத்தில் எப்படியோ வாழ்க்கை நடத்திக் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டனர். 60,000 ஆயிரம்பேர்வரை அந்த முகாம்களில் அடைக்கப்பட்டு இருந்தனர், தனிப்படையினர் வந்து தாக்குதல் நடத்துவதற்கு முன்பாக அவர்களை காணும்படியாக அவர்களுக்குகம்பி வேலிகளுக்கு பதிலாக பல நூறு மீட்டர்களுக்கு காடுகள் வெட்டப்பட்டு புல்தரைமாத்திரமே இருந்தது.

அந்த ஒட்டுமொத்த இடமும் சில நேரங்களில் சமூகப் பணியாளர்களுக்கு ஆபத்தானதாக இருக்கும், முகாம்களில் மக்கள் கூட்டம் அதிகரிக்கும், ஆயுதம்தாங்கியோர் சாலைகளை தடைசெய்வார்கள் மற்றும் தொலைவான இடங்களில் அடிக்கடி கண்ணிவைத்து காத்திருப்பார்கள். ACET குழுக்கள் இந்த தொல்லைகளுக்கு நடுவே தொடர்ந்து தங்கள் பிரசன்னத்தை

நிலைநாட்டி இருக்கிறார்கள். அவர்கள் பயந்துபோயிருந்த வாலிபர்கள் நடுவே பணிசெய்தார்கள், ஆயிரக்கணக்கானோருக்கு எச்ஐவி குறித்தும் மற்ற உடலுறவு மூலமாக பரவக்கூடிய வியாதிகள் குறித்தும் கற்பித்து இருக்கிறார்கள், அடிப்படை சுகாதாரம் கொடுக்க உதவியிருக்கிறார்கள், மற்ற பல நிறுவனங்களின் திரனை அதிகரிக்கவும் உதவியிருக்கிறார்கள்.

பொதுவான அகதிகளின் பாடங்கள்

★ முகாமில் ஒன்றுக்குமேற்பட்ட உடலுறவு துணையாளர்களின் பெருத்த அபாயம்.

★ சமுதாய பாரம்பரியம், ஒழுக்கம் மற்றும் கலாச்சாரம் சிதைதல். தேவைகள் மிகவும் அவசரமானதாக, சிக்கலானதாக, விரைவில் மாறக் கூடியதாக இருக்கலாம்.

★ திருச்சபை கட்டுமானங்கள் உருவாக நேரம் எடுக்கலாம்.

★ சமுதாய தலைவர்களோடு பணிசெய்யப்பட வேண்டும்.

★ எய்ட்ஸ் சார்ந்த சமூக சேவைத் திட்டங்கள் எப்படி அகன்ற திட்டத்திற்குள் பொருந்தும் என்பதை பார்த்து, சூழ்நிலை முழுமையான கண்ணோட்டத்தில் பார்க்கப்படவேண்டும்.

★ மற்ற நிறுவனங்களோடு இணைப்புகளும் தொடர்புகளும் மிகவும் முக்கியம்.

★ அதிகமான மரியாதையோடும் நம்பிக்கையோடும்சென்று விடாமல் இருக்கும் தைரியம் உடைய சேவைத்திட்டப்பணியாளர்களுக்கு சமுதாயங் கள் வெகுமதி அளிக்கின்றனர், இது பல காரியங்கள் நடப்பதற்கு பல கதவுகளை திறந்து விடும், ஒட்டுமொத்த சமுதாயம் மற்றும் தனிநபர் நடத்தைகள் இரண்டிலுமே.

★ ஒருநாள் (நம்பிக்கையோடு) இந்த இடத்தில் இருக்கும் நிலையற் றதன்மை ஒரு முடிவுக்கு வந்து, முகாம்கள் சிறியதாகி, கிராமத்தவர்கள் திரும்பிச் செல்வார்கள். சில முகாம்கள் நிரந்தர பெரிய கிராமங்களாகவும் அல்லது பெரிய பட்டணங்களாகவும் வளரக்கூடும், சூழ்நிலையும் முற்றிலும் நிலையானதாக மாறக்கூடும்.

வறுமை நீக்கப்படுதலும், வருமானம் ஈட்டும் செயல்களும்:

எச்ஐவியோடு வாழும் பெண்கள், அனாதைகள், குழந்தை-தலைவர் களைகொண்ட வீடுகள், இடம்மாறிய மக்கள்- இவர்கள் அனைவருக்கும் சாதாரண மக்களை காட்டிலும் ஒரு ஒற்றுமை இருக்கிறது: தினந்தோறும் உணவு வாங்கி உயிர்வாழ்வதற்கான வருமானத்தை கண்டுபிடிக்கும் சவால்.

குறுவங்கிகள் மற்றும் மைக்ரோ.ஃபினான்ஸ் எனப்படும் சிறுநிதித் திட்டம் குறித்தும் - கோடிக்கணக்கான மக்களுக்கு செல்வம் ஈட்டுகின்ற அதன் வல்லமையையும் குறித்தும் அதிகப்படியான விளம்பரம் இருக்கின்றது. வருமானம் உற்பத்தி செய்வது குடும்பங்களை ஆதரிப்பதற்கான நடைமுறை வழியாக இருக்கலாம், ஆனால் அவை கவனத்தோடும் நுட்பத் தோடும் செய்யப்படவேண்டும். எச்ஐவி உடைய மக்கள் வியாதிப்பட்டால் அவர்கள் வாங்கிய கடனை திரும்பசெலுத்துவது சிரமமாகிவிடும். அச்

சமயங்களில் குறைந்த வங்கிக்கடனை வைத்துக்கொண்டு உதவிசெய்ய வேண்டிய தேவை இருக்கலாம். இதற்கு ஒரு மாற்று என்னவெனில் இந்த வங்கிக்கடனுக்காக சேவை செய்வதிலும் வியாபாரத்தை நடத்துவதிலும் குடும்பம் முழுவதையும் சேர்த்துக்கொள்வது ஆகும்.

வருமானம் ஈட்டுவதில் இருக்கும் பிரச்சனைகள்:

★ இதற்கு முன்பாக இப்படிப்பட்ட சேவைத்திட்டங்களை நடத்திய அனுபவம் அவசியம்.

★ தேவைப்படும் நுட்பங்கள் மிகவும் தனித்துவம்வாய்ந்தனவாக இருக்கலாம்- பயிற்சி தேவைப்படலாம்.

★ அவர்களுடைய கலாச்சாரத்துக்கும் மதிப்பீடுகளுக்கும் பொருத் தமாக இருக்குமா என்று இந்த கடன் திட்டத்தை நடத்துகின்ற திருச்சபைகள் அல்லது ப்ராஜெக்டுகள் உறுதி செய்யவேண்டும்.

★ ஒவ்வொரு வியாபார யோசனையும் வெற்றிபெறக்கூடியதாக இருக்கவேண்டும்.

★ அங்கே ஒரு விற்பனைக்கான இடமும், அதை செய்வதற்கு அந்த நபருக்கு தேவையான திறமைகளும் இருக்க வேண்டும்.

★ இந்த பிரச்சனைகளை பரிசோதிக்க வல்லுநரின் உதவி நாடப்படவேண்டும்.

★ பெரும்பாலான திட்டங்களில் பெண்களுக்கே கடன் கிடைக்கும்- ஆனால் இது சுய சார்பைவிடவும் அதிகப்படியான சுமையையே கொடுக்கும்.

★ இதே போன்ற பணிகளை செய்யும் மற்ற நிறுவனங்களில் இருந்து பாடங்கள் கற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

எச்ஐவி ஆதரவுதிரட்டுதல்- நம் உலகிற்கு சவால்

மிகவும் பாதிக்கப்படக்கூடிய ஒடுக்கப்பட்ட மக்களுக்கு போதுமான பராமரிப்பும் ஆதரவும் கொடுக்க நீங்கள் போராடும்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? அரசாங்கம் செயலற்று இருப்பதற்கும், கலாச்சார தடைகளுக்கு எதிராக சவால்விட எந்த கருவிகளை நீங்கள் உபயோகிக்கலாம்?

ஒவ்வொரு எச்ஐவி நிகழ்ச்சியும் ஆதரவு திரட்டுவதில் ஈடுபடுவதற்கான சாத்தியங்கள் அதிகமாக இருக்கின்றன: எச்ஐவி உடையவர்களின் குரல் கேட்பதற்கு உதவுதல்; அவமானம், அநீதி மற்றும் வெறுப்புக்கு எதிராக போராடுதல். ஒரு உள்ளூர் மருத்துவமனையில் எச்ஐவி உடையவர்களை தொடர்ந்து விரட்டியடிக்கும் ஒரு மருத்துவரிடம் பேசுவதும் இதில் அடங்கும். உள்ளூர் சமுதாயத்தலைவர்களிடம் பேசி எச்ஐவி அனாதைகள் பள்ளிகளுக்குச் செல்ல அனுமதிக்குமாறு வேண்டிக்கொள்வதும் இதில் அடங்கும். அதிகமான கர்ப்பிணிப் பெண்கள் இலவச சிகிச்சையை அணுகமுடிய வேண்டும் என்று செய்தித்தாளிலும், வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பிரச்சாரம் செய்வதும் ஆதரவுதிரட்டுவதில் அடங் கும்.

ஆதரவு திரட்டுதல் உண்மையான தேவை: பாதிக்கப்பட்டவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும், பாதிக்கப்படக் கூடியவர்களுக்கும், வறுமையில் வாடுவோருக்கும் குரல் கொடுப்பது. நாம் கடவுளுடைய

சத்தமாக இருக்க அழைக்கப்பட்டவர்கள். நாம் மக்களுடைய மனதை வெல்ல வேண்டும் என்று ஜெபிக்க வேண்டும் அவர்களை கோபப்படுத்த அல்ல. நாம் பெருந்தன்மையாகவும், சாதுரியமாகவும் இருக்கவேண்டும் கொந் தளிப்புடனும் விடாபிடியாகவும் இருக்கக்கூடாது. என்னுடைய அனுபவத்தில் மக்கள் உங்களோடு ஒத்துப்போகவில்லை என்றாலும் மனரீதியான தைரியம் எப்போதுமே மதிக்கப்படும். நீங்கள் பேசுகிறவர் களுக்கு மற்ற அழுத்தங்களும் பிரச்சனைகளும் இருக்கலாம் என்பதை அங்கீகரிப்பது அவசியம். அவர்களுடைய நிலையை புரிந்துகொள்ளுங்கள்.

நீங்கள் ஒரு உறவை விட்டுவிட அனுமதிக்கக்கூடியவராக இருக்க வேண்டும் அல்லது நீங்கள் வாய்கட்டப்பட்டு அச்சுறுத்தப்படலாம். எனினும், மற்ற கிறிஸ்தவ பணிகளை பாதிக்கக்கூடிய ஒரு பெரிய சர்ச் சைக்குரிய பகிரங்கமான நிலையை எடுப்பதற்கு முன்பாக மற்றவர் களுடைய ஆலோசனையையும் கேளுங்கள். நீங்கள் ஒரு பிரச்சனைக்காக தகவல்தொழிநுட்பத்தின் கவனத்தை ஈர்ப்பது மற்ற பல திட்டங்களை முடிவுக்கு கொண்டுவரலாம்- மக்களும்கூட நாட்டைவிட்டு துரத் தப்படலாம்.

வழக்கறிஞர்களுக்கான ஆலோசனைகள்:

➔ முக்கியமான நபர்களோடும் நிறுவனங்களோடும் உறவை வளர்த்துக்கொள்ளுங்கள்.

➔ எச்ஐவி உடையவர்கள் தங்களுக்காக தாங்களே பேசும் படியாக ஊக்கப்படுத்துங்கள்

➔ எச்ஐவி உடையவர்களின் சார்பாகவும் அவர்களுடைய குடும் பங்களின் சார்பாகவும் பேச அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் அவர்களுக்காக பேசாதிருங்கள்.

➔ வல்லமை படைத்தவர்களுக்கும் வலிமை இழந்தவர்களுக்கும் இடையே கூடுகைகளை ஒழுங்கு செய்யுங்கள்.

➔ வெறுப்புகளும் அச்சங்களும் மிகவும் வலிமையானவை, அவை மாற நேரம் எடுத்துக்கொள்ளும் என்பதை அறிந்து இருங்கள்.

➔ ஆதரவு திரட்டுவது பல நிலைகளில் நடக்கும், உள்ளூரிலும், தேசிய அளவிலும் என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

எச்ஐவி எப்படி பெண்களை குறிப்பாக பாதிக்கிறது, அனாதைகள்மீது ஏற்படும் தாக்கம், பாதிக்கப்படக்கூடிய குழந்தைகள் மற்றும் இடம்மாறிய மக்கள், மற்றும் ஆதரவுதிரட்டுதலின் பங்கு ஆகியவற்றை குறித்து பார்த்தோம். ஆனால் இப்போது திருச்சபைகள் எச்ஐவி உடையவர்களை ஆதரிப்பதற்கான மிகவும் பொதுவான முறைகளை குறித்து திரும்பி பார்க்கப்போகிறோம்: வீட்டு ஆதரவு மற்றும் சமுதாயம் சார்ந்த பராமரிப்பு.

அதிகாரம் 6

வீட்டிலே மக்களை பராமரிப்பது எப்படி

இருபது நைஜீரிய போதகர்கள் ஒரு குக்கிராமத்திலே வட்டமாக அமர்ந்து இருந்தார்கள். ஒரு வாரம் முழுவதும் நடந்த பயிற்சி நிகழ்ச்சியின் அனுபவங்களைக் குறித்து அவர்கள் பகிர்ந்துகொண்டார்கள். 'என்ன செய்ய வேண்டும் என்று கடவுள் உன்னை அழைத்து இருக்கிறார்? கடவுள் உன்னுடைய உள்ளத்தில் எதை விதைத்து இருக்கிறார்'?

அடுத்த ஓரிரு மணிநேரங்களில் அவர்கள் எடுக்கப்போகும் தீர்மானங்கள் மூலமாக ஆயிரக்கணக்கான இளைஞர்களை நோய்த் தடுப்பு செய்திகள் சென்றடையும், ஆயிரக்கணக்கான சபை அங்கத்தினர்கள் பரிசோதனைக்கு ஒப்புக்கொள்வார்கள் மற்றும் எச்ஐவி உடையவர்களுக்கும் அனாதைகளுக்கும், விதவைகளுக்கும் புதிய பல ஆதரவு குழுக்கள் கிடைக்கும்.

தொடங்குவதற்கு உங்களுக்கு நிதியும் பெரிய குழுவும் தேவைப்படாது. ஒரு நண்பரையோ அல்லது அயலகத்தாரையோ பராமரிக்கவும், உங்கள் சொந்த பிள்ளைகளிடமும், உடன் வேலைசெய்கிறவர்களிடமும், சபைத் தலைவர்களிடமும் பேசுவதற்கும், உங்கள் திருச்சபை போதனை நிகழ்ச்சியில் எச்ஐவி பிரச்சனைகளை சேர்ப்பதற்கும், பயிற்சி திட்டங்களையும் பள்ளி பாடதிட்டத்தையும் செயல்படுத்துவதற்கும் விலையே கிடையாது. ஒன்றாகசேர்ந்து நாம் பெரிய மாற்றங்களை உருவாக்கமுடியும்.

எச்ஐவி உடைய எல்லோருக்கும் அல்லது எய்ட்ஸினால் அனாதை ஆனவர்களுக்கும் உங்களால் உதவமுடியாமல் இருக்கலாம், ஆனால் சிலருக்கு உங்களால் நடைமுறை உதவியும் ஊக்கமும் கொடுக்க முடியும். எச்ஐவி ஒரு முக்கியமான பிரச்சனையாக இல்லாத ஒரு இடத்தில் நீங்கள் வசித்துவந்தால், ஜெபத்தின் மூலமாகவும் நிதியுதவியின் மூலமாகவும் அதிகமாக பாதிக்கப்பட்ட இடங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு நீங்கள் உதவலாம்.

இங்கே உங்களை ஊக்கப்படுத்த ஒன்பது வித்தியாசமான கதைகள் இருக்கின்றன. அவை சிம்பாப்வே,இங்கிலாந்து, அயர்லாந்து, இந்தியா, சாம்பியா, உகாண்டா மற்றும் நைஜீரியாவில் இருந்து வருகின்றன. இவற்றில் சிலவற்றை எடுத்து உங்கள் சொந்த சூழ்நிலைக்கு மாற்றிக்கொள்ளமுடியும்.

இந்த கதைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு சிறிய ஆரம்பம் இருக்கின்றது. கடவுளுடைய அன்பினால் தொடப்பட்ட ஒரு நபர். ஏதாகிலும் செய்

யவேண்டும் என்று உணர்ந்த சில மக்கள், ஒன்றுமே இல்லாமல் தொடங்கி, படிப்படியாக, கடவுளுடைய அழைப்பை பின்பற்றி, மற்றவர்களோடு ஐக்கியப்பட்டு, அவர்கள் செல்லும்போது அவர்களை சுற்றி இருந்தவர்களிடம் இருந்து கற்றுக்கொண்டவர்கள்.

இதில் பல கதைகளில் நீண்ட பாதையாக இருந்தது, ஏனென்றால் அவர்களுக்கென்று முன்மாதிரிகள் அநேகம் அக்காலத்தில் இல்லை. ஆனால் இப்போது அவர்கள் தொடங்கிய நிகழ்ச்சிகள் நமக்கு எழுச்சியூட்டுவதாகவும், நடைமுறை ஊக்கமாகவும் இருக்கின்றன.

இந்த சமுதாய பராமரிப்பு நிகழ்ச்சிகள் பாதி கதைதான். நாம் பார்த்ததைப் போல பராமரிப்பு மாத்திரம் போதாது, புதிய நோய் பாதிப்புகளை தடுப்பதன்மூலமாகவும், எச்ஐவி உடைய மக்கள் அநேகர் விரைவாக சிகிச்சை பெற்றுக்கொள்ளும்படியாக உதவிசெய்வதன் மூலமாகவும் அதிகமான உயிர்கள் இழந்துபோவதையும் அதே சமயத்தில் நாம் தடுக்க வேண்டும்.

எல்லா பிரிவுகளையும் சேர்ந்த அல்லது அவர்களுடைய நெருங்கிய ஆதரவு பெற்ற உள்ளூர் திருச்சபைகளின் விசுவாசிகளால் நடத்தப்படுகிற பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவ எச்ஐவி முயற்சிகளுக்கும் இந்த திட்டங்கள் சில எடுத்துக்காட்டுகள் ஆகும்.

புதிய மருத்துவமனைகள் அல்லது சிறிய மருத்துவமனைகள் அல்லது அனாதைவிடுதிகள் ஆகியவற்றை கட்டுவதற்கு நிதிதிரட்ட சில மக்கள் விரைகிறார்கள், ஆனால் திட்டங்களை கட்டுவதற்கு நீண்ட காலம் எடுத்துக்கொள்ளும், அதிக செலவாகும், அவற்றை இயக்குவதற்கான அதிகப்படியான செலவு அவை நிலைத்து நிற்காமல் செய்துவிடும். முதலாவது அவை அதிகமாக தேவைப்படாதவையாக இருக்கின்றன. மறுபுறம், ஒரு தன்னார்வத்தொண்டர்கள் குழு, அவர்களுடைய உள்ளூர் சபையின் ஒரு பகுதியாக இன்று தொடங்கலாம், சபை நீண்டகாலமாக இதை நன்றாகவே செய்துகொண்டு வருகின்றது.

உண்மையில் எச்ஐவி சூழ்நிலையை மாற்றப்போவது ஒரு மக்கள் இயக்கம், சிறு கூட்டத்தை மாத்திரம் தொடக்கூடிய பிரம்மாண்டமான திட்டங்கள் அல்ல. கோடிக்கணக்கான மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக, உயிர்காக்கும் செய்தியை அவர்கள் செல்லும் இடமெல்லாம் கொண்டுசென்று, நடைமுறை, கரிசனையுள்ள அன்பை காட்டுவதே தேவையானது ஆகும்.

நம் வேலையில் ஒரு பகுதியாக எச்ஐவி பணியையும் மாற்றுவது

எச்ஐவி, வளர்ச்சிக்கான எல்லா வழிகளையும் பாதிக்கிறது, எனவே எல்லா நிகழ்ச்சிகளிலும் நடைபெறுகின்றவற்றை இதிலே சேர்க்க வேண்டும்- தெளிவாக ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தும் வகையில். எடுத்துக்காட்டாக, பாரம்பரியமாக பிரசவத்திற்கு உதவிசெய்கிறவர்களும் எச்ஐவி விழிப்புணர்வுக்கு உதவிசெய்யலாம், அதோடு கர்ப்பிணிப் பெண்கள் எச்ஐவிக்கு பரிசோதனை செய்துகொள்ளும்படி ஊக்கப்படுத்துவதன் மூலமாக குழந்தைகளும் வைரஸ் எதிர்ப்பு மருந்துகள் மூலமாக பாதுகாக்கப்படலாம்.

எச்ஐவி உடைய மக்கள் கலந்து ஆலோசிக்கப்படவேண்டும். அவர்களுடைய தேவையை அவர்கள் நமக்கு சொல்வதற்கு நாம் அவர்களை அனுமதிக்க வேண்டும். ஒரு நிகழ்ச்சியின் பணியைக் குறித்து அவர்கள் விமர்சனங்கள் கொடுக்கலாம், அதோடு அவர்களும் நிகழ்ச்சி தயாரிப்பதில் முழுமையாக ஈடுபடுத்தப்படலாம்.

நம்முடைய உதவி தேவைப்படும் அனைவரையும் பராமரித்தல்

நம்முடைய பராமரிப்பு முற்றிலும் நியாயம்தீர்க்காததாகவும், கரிசனையுள்ளதாகவும் அன்புள்ளதாகவும் இருக்க வேண்டும். எச்ஐவியால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அது வழங்கப்பட வேண்டும், அவர்களுக்கு எப்படி தேவை ஏற்பட்டிருந்தாலும். இயேசுவின் அன்பு நிபந்தனையின்றி அனைவருக்கும் வழங்கப்பட்டதால் நம்முடைய பராமரிப்பும் நிபந்தனையற்றதாக இருக்க வேண்டும். நம்முடைய பராமரிப்பு எல்லோருக்கும் பொதுவானது- ஆண்களுக்கும் பெண்களுக்கும், பெரியோருக்கும் சிறியோருக்கும், ஒவ்வொரு காட்டுவாசிக் கூட்டத்திற்கும் அல்லது மதசார்பானவர்களுக்கும்-பாலினவேறுபாடு இன்றி, உடலுறவு பழக்கங்களையோ, போதை ஊசி போடிருக்கிறார்களா போன்ற மற்ற காரியங்களையோ சாராமல் இருக்கவேண்டும்.

எச்ஐவி தொடர்பான எல்லா சுகவீனங்களுக்கும் பராமரிப்பு 'முழுமையாக' இருக்கவேண்டும் : பல்வேறு மக்களுக்கு பல்வேறு தேவைகள் இருக்கலாம், அது உடல்ரீதியாக, மனரீதியாக, சமுதாயரீதியாக மற்றும் ஆவிக்குரியவிதமாக இருக்கலாம். இந்த தேவைகளின் சமன்பாடு நேரத்துக்கு நேரம் மாறுபடலாம், அந்த நபர் என்ன விரும்புகிறார் அல்லது இன்று நம்மிடத்திலிருந்து எதை விரும்பவில்லை என்பதை அறிந்துகொள்ள மிகவும் உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

பல்வேறு வகையான பராமரிப்பு நிகழ்ச்சிகளின் எடுத்துக் காட்டுகள்

❑ **இணைக்கப்படுதல்** : பொதுவான சுகாதார சேவை அல்லது பொதுவான திருச்சபை செயல்பாட்டின் ஒரு பகுதியாக எச்ஐவி பராமரிப்பு. புதிதாக எந்த நிறுவனமும் உருவாக்கப்படவில்லை. இதில் பலன் என்னவெனில் இது மிகவும் செயல்திறன்மிக்கதாகவும், குற்றப்படுத்துதலை குறைப்பதாகவும் இருக்கும். எச்ஐவி மற்ற எல்லா வைரல் நோய் தாக்குதல்களில் இருந்தும் மருத்துவ நிலைகளில் இருந்தும் வேறுபட்டது, மற்றும் இதற்கு உடனடி பதில்கள் தேவைப்படும் என்பது இதில் இருக்கும் குறைபாடு ஆகும். எல்லாமுமே இணைக்கப்பட்டுவிட்டால், எச்ஐவி பணி மற்ற எல்லா பணிகளின் மத்தியிலும் காணாமல் போய்விடும்- நாம் என்ன தன்னுடைய இயல்பை முற்றிலுமாக இழந்துபோகிற பழரசமா செய்கிறோம்?

❑ ***சிறப்பு மையங்கள் / எச்ஐவி - சிறப்பு சிறு மருத்துவமனைகள்*** : அரசாங்க சேவையை மிஞ்சுகின்ற அற்புதமான சேவையை செய்யக்கூடியவை இவை, பல இடங்களில் தேவைப்படலாம். சிறப்பு மருத்

துவமனைகளை காட்டிலும் குறைந்த செலவு ஆகக்கூடியவை. மற்ற இடங்களில் கொடுக்கப்படும் பராமரிப்பை காட்டிலும் இந்த சிறப்பு மையங்கள் நல்ல பராமரிப்பை கொடுக்கும் பட்சத்தில் 'பாக்கியமுள்ளவர்கள் குழு' உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

❑ **தன்னார்வம் / சமுதாயம் சார்ந்த மாதிரி** : இது நண்பர்கள், உறவினர்கள், அயலகத்தார் மற்றும் சபை தன்னார்வத்தொண்டர்களை உபயோகித்துக்கொள்கின்றது. இது பல சமயங்களில் சிக்கனமாகவும் வேகமாக வளரக்கூடியதாகவும் இருக்கிறது, வீட்டு பராமரிப்பு, நோய் தடுப்பு மற்றும் ஆதரவை கொடுக்கின்றது.

❑ **தேசிய ஒருங்கிணைப்பு** : திருச்சபைகள் ஒட்டுமொத்த சமுதாயங்களையும் ஒன்றுதிரட்ட முடியும்- எடுத்துக்காட்டாக, கிராமப்புர பராமரிப்பு உதவியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலமாக அதிகமான மக்களை சீக்கிரமாக சென்றடைய முடியும். அவர்கள் எச்ஐவி நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக நோய்கண்டு பிடிப்பதிலும் மலேரியா மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற சாதாரண வியாதிகளுக்கு சிகிச்சை அளிப்பதிலும் உதவிசெய்ய முடியும்.

❑ **சிறப்பு மையங்கள்**: சிறப்பு மையங்கள் (Centres of Excellence) எல்லா வகையான எச்ஐவி பணிகளிலும் -என்ன செய்யலாம் என்று காட்டுவதிலும், தரத்தை உயர்த்துவதிலும், மற்ற நிறுவனங்களில் இருந்து மக்கள் வந்து பயிற்சி பெறுவதற்கான இடத்தை கொடுப்பதிலும் முக்கியமானவை. சிறப்பு மையங்கள் தொழில்நுட்ப ஆலோசனை கொடுக்கமுடியும், நிறுவனங்கள் வேகமாக உயிரோட்டத்தோடு வளரக்கூடிய வழிகளில் உதவமுடியும். (அடுத்த அதிகாரங்களை பார்க்கவும்)

1. கிராமப்புற ஆப்பிரிக்க அமைப்பில் சமுதாய பராமரிப்பு- ∴பேக்ட் சிம்பாபே

முதலாவது சிம்பாப்வேயில் சமுதாய பராமரிப்பு எப்படி உருவானது என்பதை நாம் பார்ப்போம். டாக்டர். ஜெ∴ப் ∴போஸ்டர் 1988ல் முட்டாரேவில் FACTஐ (குடும்ப எய்ட்ஸ் பராமரிப்பு அறக்கட்டளை) உருவாக்கினார். எச்ஐவியால் அழிந்துபோகும் குழந்தைகள் மற்றும் பெற்றோருடைய வாழ்க்கையைப் பார்த்து அவர் நெகிழ்ச்சி அடைந்தார், அவருடைய சொந்த மருத்துவமனையும் நிரம்பி வழிந்தது. அதிகமான ஜெபத்திற்கும் கலந்துரையாடலுக்கும் பின்பு, சபைகளை ஒன்றுதிரட்ட இவர் ஒரு வீட்டு பராமரிப்பு குழுவை உருவாக்கினார். அவர்கள் வீட்டிலே அடிப்படை பராமரிப்பு கொடுப்பதற்காக பயிற்றுவிக்கப்பட்ட தன்னார்வத்தொண்டர்கள், ∴பேக்ட் சுகாதாரப் பணியாளர்களும் தன்னார்வத்தலைவர்களும் இதை மேற்பார்வையிட்டனர்.

பராமரிப்பிலும் உணர்வுபூர்வமான ஆதரவு கொடுப்பதிலும் தன்னார்வத்தொண்டர்கள் பயிற்றுவிக்கப்பட்டு இருந்தார்கள். சுத்திகரித்தல் மற்றும் தனிப்பட்ட சுகாதாரம், துணி மற்றும் படுக்கை விரிப்புக்கள் துவைத்தல்,

வீடு சுத்தம் செய்தல், உணவுகொடுத்தல் மற்றும் சிறு காயங்களை கட்டுதல் ஆகிய காரியங்களில் உதவுவார்கள். அவர்கள் எச்ஐவி உடையவர்களை மாத்திரம் பார்த்துக்கொள்ள தொடங்கினார்கள், ஆனால் பின்பு டிபி, சர்க்கரைநோய், மலேரிய மற்றும் பல நிலைகளில் இருக்கிற மக்களையும் சேர்த்துக்கொண்டார்கள்.

அதிகமான பராமரிப்பை செய்கின்ற குடும்ப அங்கத்தினருக்கு இக்குழு ஆதரவுகொடுக்கும். எச்ஐவி உடையவர்களுக்கு பொதுவாக இருக்கும் சுகாதார பிரச்சனைகள் குறித்தும், மற்ற சமுதாய சேவை தகவல்களையும் குறித்த ஆலோசனைகளையும் தன்னார்வத்தொண்டர்கள் கொடுப்பார்கள்.

இந்த செலவு குறைந்த மாதிரி வேகமாக வளர்ந்து வெற்றிகரமாகவும் இருந்துவருவதற்கு காரணம் உள்ளூர் சபைத்தலைவர்கள் இதிலே முற்றிலுமாக அர்ப்பணித்து இருக்கிறார்கள். தன்னார்வத்தொண்டர்கள் சென்று பார்வையிடுதல் குறித்து கவனமாக குறிப்புகள் எடுத்துவைக்கிறார்கள், இது அரசாங்கத்துக்கும் தானம் செய்கிறவர்களுக்கும் பிரச்சனையின் அளவை புரிந்துகொள்ளவும், என்ன செய்யப்பட்டு இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளவும் உதவியாக இருக்கிறது.

சமுதாய பராமரிப்பு குறித்த சிறுகுறிப்பு

➔ சமுதாய பராமரிப்பு அதிகமான மக்களை சென்றடைய முடியும், மருத்துவ பராமரிப்பை காட்டிலும் பொதுவாக குறைந்த செலவே ஆகும்.

➔ எச்ஐவி உடைய மக்கள் பொதுவாக தங்கள் சொந்த வீடுகளிலேயே தங்கிக்கொள்ள விரும்புவார்கள்.

➔ மற்ற வியாதிகள் உடையவர்களையும் பராமரிக்க வேண்டிய அவசியமும் இருக்கலாம்.

➔ உறவினர்கள், நண்பர்கள், சமுதாயங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் அனைவருமே முக்கிய ஆதாரங்கள்-ஆனால் பயிற்சியும் ஆதரவும் தேவைப்படும்.

➔ பராமரிப்பு முழுமையாக இருக்கவேண்டும் : சரீரம், உணர்வு, சமுதாயம் மற்றும் ஆன்மீகம்.

➔ உள்ளூர் மருத்துவமனைகள் போன்ற மற்ற சேவைகளோடு இணைந்து பணிசெய்யும்போது பராமரிப்பு குழுக்கள் சிறந்து வேலைசெய்யும்.

➔ வைரல் எதிர்ப்பு சிகிச்சைகளிலும், மருந்துகள் தொடர்ச்சியாக கிடைப்பதை உறுதிசெய்வதிலும், மக்களை தொடர்ச்சியாக மருந்துகள் எடுத்துக்கொள்ளும்படி ஊக்கப்படுத்துவதிலும்,பொதுவான ஆரோக்கியத்தை கண்காணிப்பதிலும் தன்னார்வத்தொண்டர்கள் உதவிசெய்ய முடியும்.

➔ தன்னார்வத்தொண்டர்களை கவனமான தெரிந்தெடுப்பதும், பயிற்சி மற்றும் ஆதரவு அளிப்பதும் முக்கியம்.

➔ ஒவ்வொரு தன்னார்வத்தொண்டரும் அவர்கள் என்ன செய்ய வேண்டும், அவர்கள் எப்போது பணியாளர்களிடம் ஆலோசனை கேட்க வேண்டும் என்பனவற்றில் தெளிவாக இருக்க வேண்டும்.

→ முக்கியமான தன்னார்வத்தொண்டர்களுக்கு சிறிய அளவிலான நிதி உதவி கொடுக்கவேண்டிய தேவை இருக்கலாம்.

→ தன்னார்வத்தொண்டர்கள் கண்காணிக்கப்பட்டு, ஆதரிக்கப்பட்டு, தொடர்ச்சியாக பயிற்சிக்கும் ஊக்கப்படுத்துதலுக்கும் ஒன்றுகூட்டப்பட வேண்டும்.

→ தன்னார்வத்தொண்டர்கள் மற்றும் நீங்கள் உதவி செய்கின்றவர்களின் பிரதிநிதிகள் உட்பட மற்ற சமுதாய அங்கத்தினர்களும் நிகழ்ச்சி குறித்த தீர்மானங்களில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். அவர்கள் எவ்வளவு அதை 'உரிமை' பாராட்டுகிறார்களோ அவ்வளவு குறைவாக நீங்கள் பணி செய்ய வேண்டியதாக இருக்கும், நிகழ்ச்சியும் அவ்வளவு நாக்குப்பிடிக்கக்கூடியதாக இருக்கும்.

→ உள்ளூர் சமுதாயத்திற்கு சொந்தமான நிகழ்ச்சிகள் ஒருசமுதாயம் மற்ற சமுதாயத்தை ஊக்கப்படுத்துவதனால் விருத்தியடையும்.

2. போதை ஊசிபோட்டுக்கொள்கிறவர்களுக்கான சமுதாய பராமரிப்பு - ACET அயர்லாந்து

அயர்லாந்து போன்ற வளர்ந்த நாடுகளில் சமுதாய பராமரிப்பு சற்று வித்தியாசமான வடிவத்தை எடுத்துக்கொள்கின்றது. டப்லினில் ஒரு கடுமையான எச்ஐவி பிரச்சனை இருந்தது, அது பெரும்பாலும் போதை ஊசிபோட்டுக்கொள்வதோடு தொடர்புடையதாகவே இருந்தது. டெரி கோல்மென்-ப்லேக் அம்மையார் இந்த பட்டணத்தில் சந்தித்த மக்களை குறித்து கடவுளால் தொடப்படுவதை ஆழமாக உணர்ந்தார். பலர் கொடூரமான சூழ்நிலைகளில் இருந்தார்கள், தினந்தோறும் போதை ஊசி எடுத்துக்கொள்ளப்படுகிற குடும்பங்களில் பல குழந்தைகள் வாழ்ந்து வந்தார்கள், பெற்றோர்கள் எய்ட்ஸினால் வியாதிப்படுவதால் அங்கே அதிகமான குழப்பங்கள் நிலவின. அரசாங்க நிறுவனங்களில் இருந்து வருகிற சிலர் மற்றும் பராமரிப்பு பணியாளர்கள் உட்பட பல மக்கள் இரக்கமில்லாமல் இருந்தார்கள்.

1992ல் டெரி வீடுகளுக்குள் சென்று தன்னால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்தார், சீக்கிரத்தில் திருச்சபை தன்னார்வத்தொண்டர்கள் அதையே செய்யும்படி செய்தார். சில முழுநேரப் பணியாளர்கள், பகுதி நேர பணியாளர்கள், 30 முதல் 40 பேரை ஆதரிக்கும் தன்னார்வத்தொண்டர்கள் மற்றும் இறந்துபோனவர்களின் பல குழந்தைகள் என வேலை வளர்ச்சி பெற்றது. சேவையானது 'வாடிக்கையாளர்-கவனமாக' இருந்தது, அதன்படி உதவி கேட்கிறவர்கள் தங்களுடைய சொந்த நிபந்தனைகளை வைத்துக் கொள்வார்கள், அவர்களுடைய கண்ணோட்டத்தின்படி அவர்களுக்குச் செய்யப்படும் காரியங்கள் வடிவமைக்கப்படும்.

இந்த நிகழ்ச்சி ACET அயர்லாந்தின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டது. நாட்டின் எல்லைகளுக்குச் சென்று , அமைதியையும், இசைவையும், புரிந்துகொள்ளுதலையும் ஊக்கப்படுத்தி, பராமரிப்பு கொடுக்கவும் உயிர்களை காக்கவும் சபைகளையும் ஒன்றுதிரட்டிய முதன்மை நிறுவனங்களில் இவர்களும் ஒரு நிறுவனம்.

மதத்தலைவர்களிடம் இருந்து பிரச்சனைகள் வரும் என்று பலர் எதிர்பார்த்தார்கள், குறிப்பாக கல்வி செய்திகளில், ஆனால் ACET பணியாளர்கள் கத்தோலிக்க மற்றும் ப்ராடஸ்டண்ட் பள்ளிகள் இரண் டிலுமே வரவேற்கப்பட்டனர்.

டப்லினில் 120க்கு மேற்பட்ட குடும்பங்கள் ஆதரவுபெற்றுக் கொண் டனர்- நடைமுறை உதவி, உணர்வுபூர்வமான ஆதரவு, உயிரிழப்பு ஆதரவு அல்லது குடுமப சிகிச்சை அனைத்தும் கொடுக் கப்பட்டது. பள்ளிகள், கல்லூரிகள், சபைகள் மற்றும் பல இடங்களில் நோய்தடுப்புச் செய்தி கொடுப்பதிலும் பயிற்சியளிப்பதிலும் 1,50,000 எண்ணிக்கையை டப்லின் குழு கடந்துவிட்டது.

டப்லின் வீட்டு பராமரிப்பு- கற்றுக்கொண்ட பாடங்கள்

➔ எச்ஐவி உடைய போதைப்பொருள் உபயோகிப்பவர்களை பார்த் துக்கொள்வதில் பிரத்தியேக அணுகுமுறைகள் தேவை என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

➔ உங்கள் பராமரிப்பு திட்டத்தில் முழு குடும்பமும் பங்கு வகிப்பதை உறுதிசெய்யுங்கள்.

➔ திட்டத்தின் ஒவ்வொரு நிலையிலும் வாடிக்கையாளர்களை கலந் துகொள்ளுங்கள்.

➔ சமுதாயத்தில் சிலர் உங்கள் பணியை அங்கீகரிக்காமல் இருப்பார்கள் என்று எதிர்பாருங்கள்- திருச்சபையிலும்.

➔ தங்களுடைய வியாதிப்பட்ட போதைக்கு அடிமையான பெற் றோர்களை கண்காணிப்பதில் குழந்தைகள் அதிகமான சுமையை உணருவார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

➔ உங்களுடைய திட்டங்களில் வளைந்துகொடுக்கிறவர்களாக இருங் கள், முன்பே திட்டமிடுதல் நீங்கள் ஆதரிக்கிறவர்களுக்கு மிகவும் கடினமானதாக இருக்கலாம்.

➔ பெற்றோரின் மறைவினால் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு நீண்டகால உயிரிழப்பு ஆதரவு கொடுக்க தயாராக இருங்கள்- என்ன நடந்தது என்பதைப் பற்றி கூறும்படியாக உணரக் கூடிய ஒரே இடம் உங்கள் குழுவாக மாத்திரம் இருக்கலாம்.

3. சிறுமருத்துவமனை சார்ந்த பராமரிப்பு-நிரீக்ஷனா ACET, ஹைதிராபாத், இந்தியா

ஆப்பிரிக்காவில் இருந்து மிகவும் வித்தியாசமானது இந்தியா, ஆனாலும் எச்ஐவி உடையவர்களுக்கு சமுதாய பராமரிப்பு கொடுப்பதை பொருத் தவரை சில பிரச்சனைகள் ஒன்றாகவேதான் இருக்கின்றன. 2004ல் டாக்டர் சுஜய் சுனீதாவும் அவருடைய மனைவி லாவன்யாவும் உள்ளூர் போதகரால் அனுப்பபட்ட முதல் எய்ட்ஸை உடைய விருந்தாளியை வரவேற்றனர். பல ஆண்டுகளாக இருவருமே குஷ்டரோக பராமரிப்பில் இருந்து வந்தார்கள், இந்தியாவில் பெருகிவரும் எச்ஐவி உடையவர்களின் எண்ணிக்கையினால் அவர்கள் அதிகமாக பாரமடைந்தனர். அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கடவுள் அழைத்து இருக்கிறார்?

கொஞ்சம்கொஞ்சமாக உள்ளூர் போதகர்களும் மற்ற சமுதாய சுகாதார பணியாளர்களும் அதிகமான மக்களை அனுப்பத் தொடங்கினார்கள். சுஜய் மற்றும் தங்களுடைய குஷ்டரோக பராமரிப்பு பணியை விட்டுவிட்டு தங்களிடத்தில் வந்தவர்களை கவனித்தனர். ஏற்கனவே திரும்பத் திரும்ப வந்துகொண்டிருந்த தன்னுடைய நோயாளிகளோடு, மாதந்தோறும் 60 புதிய நபர்கள் வரத் தொடங்கினார்கள். அவர்களும் அவர்களுடைய உறவினர்களும் அதிகமான அழுத்தத்தில் இருந்தார்கள். உள்ளூர் கிறிஸ் தவர்களின் உதவியோடு, தங்கள் சிறு மருத்துவமனையை வீட்டில் இருந்து ஆள்நடமாட்டம் மிகுந்த ஒரு தெருவுக்கு மாற்றம் செய்தனர்.

சுஜயின் அணுகுமுறை எளிதானது: ஒவ்வொரு நபரையும் மென் மையாகவும், ஆழமான மரியாதையுடனும், உணர்வு பூர்வமாகவும் உண்மையாகவும் வரவேற்கவேண்டும். நோய் கண்டறியப்பட்டதில் இருந்து அவர்கள் கொடூரமான வெறுப்பை அனுபவித்து இருக்கக்கூடும். அவர்களை குறித்து அவர்களுடைய குடும்பத்தை குறித்தும் அவர்களால் இன்னமும் வேலை செய்ய முடிகிறதா என்றும் விசாரிப்பார். ஒவ்வொரு நபரும் ஒரு ஆலோசகருடன் பேசுவதற்கும் ஆவிக்குரிய ஆதரவை பெற்றுக் கொள்ளவும் உறுதிசெய்வார், அவர்களுடைய விருப்பத்தின்பேரில்.

பல நோயாளிகளுக்கு எளிமையான, ஆண்டிபையாடிக்ஸ், மற்றும் வைட்டமின் மற்றும் ஊட்டச்சத்து மாற்றுகள் போன்ற குறைந்த விலை மருந்துகளை கொடுப்பார். சரியாக உணவு சாப்பிடமுடியாத அளவுக்கு சுகவீனமாக உணர்வதாலும், தங்களுடைய வேலையை இழந்துபோனதால் நல்ல சாப்பாடு சாப்பிட முடியாததாலும் எச்ஐவி உடையவர்கள் மிகவும் பெலவீனம் அடைந்துவிடுகிறார்கள். நோய் தடுப்பு அமைப்பு சேதமடைந்து இருப்பதால், ஆண்டிபயாடிக்ஸ் என்னும் எதிர்ப்பு மருந்துகள் அவர்களுக்கு இருக்கின்ற நோய் பாதிப்புகளை மேற்கொள்ளவும், புதிய நோய்பாதிப்புகள் வராமல் தடுக்கவும் உதவுகின்றன. ஒரு அரசாங்க மருத்துவமனையில் இலவச ஆண்டிவைரல் சிகிச்சைக்கு ஒரு நபர் தகுதிபெற்றால், அவரோடு ஒரு பணியாளரும் உடன் செல்லலாம். சில மருத்துவர்கள் சிகிச்சை அளிப் பதற்கும் சரியான பராமரிப்பு கொடுப்பதற்கும் தயங்குவதை மேற்கொள் வது சில நேரங்களில் கடினமாகிவிடுகிறது, குறிப்பாக அந்த நபருடைய நிலைமை மோசமாகி, மருத்துமனையில் தங்கவேண்டிய சூழ்நிலை ஏற் படும்போது.

அந்த சிறுமருத்துவமனையில் எச்ஐவியையும் அது தொடர்பான மற்ற நோய்பாதிப்புகளையும் பரிசோதிக்ககூடிய உபகரணங்கள் நிறைந்த பரிசோதனைக்கூடம் இருக்கின்றது. அந்த சிறு மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உட்பட பெரும் பாலானோர் தன்னார்வத்தொண்டர்கள், அதிகமானோர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். நோயாளியின் வருகை நிலை, பிரச்சனைகள், கொடுக்கப்பட்ட சிகிச்சை மற்றும் உயிரோடு இருப்போர் ஆகியவற்றை குறித்த தகவல் வைக்கப்பட்டு இருக்கிறது. திட்டமிடுவதற்கும், கண்காணிப்பதற்கும், கணக்கீடு செய்வதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் இது அவசியமாக இருக்கும்.

மிகக்குறைந்த வருமானம் உடைய குடும்பங்களுக்கு பள்ளிகளில் இருக்கும் அவர்களுடைய பிள்ளைகளை வைத்திருப்பதற்காக கௌரவமான நிதி உதவியை இக்குழு கொடுக்கிறது, அதோடு ஒரு திருச்சபை ஒன்றுதிரட்டுதலையும், எச்ஐவி-வருமுன் காப்போம் நிகழ்ச்சியையும் உருவாக்கி இருக்கிறார்கள். பிரயாணம் செய்யமுடியாத அளவுக்கு வியாதிப்பட்டு இருக்கிற மக்களுக்காக வாரத்தில் ஒருநாள் குழுக்கள் நகரங்களில் இருக்கும் சேரிகளுக்குச் சென்று திருச்சபை வரவேற்பு அறைகளில் சிறுமருத்துவமனைகளை ஏற்படுத்துகிறார்கள்.

நிரீக்ஷினா மாதிரி ஒப்பிட்டுபார்த்தால் எளிமையானது, குறைந்த தொழில்நுட்பம் தேவைப்படுவது. ஆரம்பித்து ஐந்து ஆண்டுகளுக்குள்ளாகவே மருத்துவர்களுக்கும் மற்ற சுகாதார பணியாளர்களுக்கும் இது கற்பிக்கப்பட்டு இருக்கின்றது, நிரீக்ஷினா அண்டை மாநிலங்களில் ஆறுக்கும் மேற்பட்ட சிறுமருத்துவ மனைகளை விதைத்திருக்கிறது, மேலும் அதிகரிக்க திட்டமிட்டு வருகின்றது.

சிறுமருத்துவமனை சார்ந்த பராமரிப்பு- கற்றுகொண்ட பாடங்கள்:

➔ வருகின்ற அனைவரையும் அன்பாக வரவேற்பு செய்யுங்கள்- அவர்கள் அனைவரும் எச்ஐவி இருக்கிறது என்று அறிந்து கொண்டதில் இருந்து அதிகமான வெறுப்புகளை அனுபவித்து விட்டார்கள்.

➔ வருகிற ஒவ்வொருவரோடும் அதிகமான நேரம் செலவிடுங்கள்- எச்ஐவி உடையவர்களுக்கு இது மிகவும் பெரிய விஷயம்.

➔ ஒவ்வொரு நபருடைய சூழ்நிலைக்கும், அவர்களுடைய குடும்பத்தில் என்ன நடக்கிறது என்பதற்கும் உணர்வுள்ளவர்களாக இருங்கள்.

➔ அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய குறைந்த விலை, எளிமையான சிகிச்சைகளை நாடுங்கள். கோட்ரிம் போன்ற ஆண்டிபயாடிக்குகள் புதிய நோய்பாதிப்புகள் வராமல் தடுப்பதில் சிறந்தவை.

➔ மருத்துவருடன் குறைந்த நேரம் செலவிட்டாலும், ஒவ்வொரு நபரும் நன்றாக பராமரிக்கப்படுவதை உணரும்படியாக பெரிய குழுவை உபயோகியுங்கள்.

➔ மற்ற மருத்துவமனைகளும் நிறுவனங்களும் செய்ததை மீண்டும் செய்யாதிருங்கள். அவர்கள் செய்ய விடுபட்டகாரியங்களை மாத்திரம் பூர்த்திசெய்யுங்கள்.

➔ பயிற்றுவிக்கப்பட்ட தன்னார்வத்தொண்டர்களும்,தொழில் ரீதியாக தகுதிபெறாத பணியாளர்களையும் நெருங்கிய கண்காணிப்பில் முக்கியமான பணிகள் செய்ய பயன்படுத்துங்கள்.

➔ நீங்கள் செய்யும் அனைத்தையும் துல்லியமாக பதிவு செய்யுங்கள், என்ன நடக்கிறது என்பதை நீங்கள் பார்க்கவும், முன்னமே திட்டமிடவும், புதிய தேவைகளை கண்டறியவும், அரசாங்கத்தோடும், நிதியுதவி செய்கிறவர்களோடும் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை கூறுவதற்கும் அது உதவியாக இருக்கும்.

➔ வேலையானது ஆவியிலும் உணர்வுபூர்வமாகவும் களைப்பூட்டுவதாக இருக்கலாம், எனவே கடவுளோடு நெருங்கி இருங்கள், ஒரு

குழுவாக ஜெபியுங்கள், வருகின்ற அனைவருக்கும் அன்பான கரிசனையுள்ள சூழலை உருவாக்க முயற்சி செய்யுங்கள்.

4. மருத்துவமனைகளோடு இணைக்கப்பட்ட சமுதாய குழுக்கள்- த சேல்வேஷன் ஆர்மி, சாம்பியா

சில சமயங்களில் சிகன்கடாவில் இருக்கும் சேல்வேஷன் ஆர்மி மருத்துவமனையைப் போல, ஒரு பெரிய மருத்துவமனையின் ஊழியத்தின் ஒரு பகுதியாக சமுதாய பராமரிப்பு குழுவை வைத்திருப்பதில் பெரும் பலன் இருக்கிறது. 1985ல் அவர்கள் வார்டு மற்றும் சிறுமருத்துவமனை சார்ந்த எச்ஐவி பணியை சேல்வேஷன் ஆர்மியின் சுகாதார ஆலோசகர் டாக்டர் இயன் கேம்பெல் அவர்களின் ஊக்கத்தோடு தொடங்கினார்கள்.

சிகன்கடா சிறப்பு எய்ட்ஸ் வார்டுகள், சிறு மருத்துவமனைகள், நோய்தடுப்பு சேவைகள் ஆகியவற்றை தொடங்கினார்கள், ஆனால் விரைவில் தேவைகள் மிகவும் அதிகமானவை என்றும் அவசரமானவை என்றும் அறிந்துகொண்டார்கள். 1987ல் மருத்துவமனை நோய் கண்டறிதல், ஆலோசனை, கல்வி மற்றும் சிகிச்சை இவற்றோடு வீட்டு பராமரிப்பு குழுக்களையும் இணைத்துக்கொண்டார்கள். இந்த குழுக்களில் சமுதாய செவிலியர்கள், ஊட்டசத்துநிபுணர்கள் மற்றும் ஆலோசகர்கள் ஆகியோர் உள்ளடங்குவர். அவர்கள் விரைவாக ஆலோசனைகளிலும், பள்ளிகளில் வருமுன் காப்போம் கல்வியிலும், குழந்தை ஆதரவுகளிலும், மற்ற நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவி செய்வதிலும் விருத்தியடைந்தார்கள்.

அந்த மருத்துவமனை மிகவும் பெரியதாக இருந்ததாலும் தேவையான உபகரணங்களால் நிறைந்ததாகவும் இருந்ததால் சமுதாயங்கள் தாங்களே பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ளாமல் சிகன்கடாவை அணுகத்தொடங்கினார்கள். சமுதாயம் சார்ந்த சுகாதார பராமரிப்பில் பற்றாக்குறை ஏற்பட்டது. ஆரம்ப மாதிரியில் தொழில் ரீதியாக பயிற்றுவிக்கப்பட்ட குழுக்கள் போதுமான மக்களை சென்றடைய முடியாமல் போனது. எனவே அவர்கள் உள்ளூர் சமுதாயங்களினால் நடத்தப்பட்ட குறைந்த தொழில்நுட்ப குழுக்களை அடிப்படை பராமரிப்பு வழங்கவும், மக்களை தேவைக்கு ஏற்ப மருத்துவமனை, சிறு மருத்துவமனை அல்லது தொழில்ரீதியாக பயிற்றுவிக்கப்பட்ட பணியாளர்களிடம் கொண்டுவருவதிலும் உபயோகித்தனர்.

பராமரிப்பு மற்றும் நோய்தடுப்பு குழுக்கள்: கற்றுக் கொண்ட பாடங்கள்

- ➔ சமுதாயங்கள் தங்கள் சொந்த குழு அங்கத்தினர்களை தெரிந்து கொள்ள வேண்டும்.
- ➔ உள்ளூர் குழுக்கள் பொதுவாக வளர்கின்ற பிரச்சனைகளோடு ஆரோக்கியப் பிரச்சனைகளுக்கும் தீர்வுகாணவேண்டும்.
- ➔ தேவைப்படும் திட்ட சேவைகளுக்கும் (மருத்துவமனைகள், சிறுமருத்துவமனைகள், பள்ளிகள், போன்றவை) , எப்படி ஆதாரங்கள் உபயோகப்படுதப்படவேண்டும் (மக்கள், நிலம்,நிதி) என்பதற்கும் சமுதாய குழுக்கள் உதவமுடியும்.

➔ வணிக ஆண்கள் மற்றும் பெண்கள், ஆசிரியர்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த நிறுவனங்களின் அங்கத்தினர்களும் குழுக்களை பெலப்படுத்த உபயோகப்படுத்தப்பட வேண்டும்.

➔ ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் சேவைசெய்ய நாடும்போது உள்ளூர் திருச்சபைகள் மிகவும் சிறந்த பலனளிக்ககூடியவை.

மருத்துவமனை ஊழியர்கள் குழு அங்கத்தினர்களாக உதவி செய்யலாம்.

5.வீட்டு பராமரிப்பில் வளைந்து கொடுக்கும் தன்மையுடைய மாதிரிகள் - ACET UK

சமுதாய பராமரிப்பு குழுக்கள் பல்வேறு வளர்ச்சி நிலைகளை கடந்துசெல்கின்றன. பல நாடுகளில் இருக்கும் குழுக்களுக்கு மாதியாக மாறி பின்பு தன்னையே முடித்துக்கொண்ட ஒரு குழுவின் 15 ஆண்டுகால கதை இதோ.

எய்ட்ஸ் குறித்த முதல் படிப்பு லண்டனில் என்னுடைய சொந்த வீட்டிலேயே 1987 ஆம் ஆண்டு தொடங்கியது, 50 திருச்சபை தன்னார்வத்தொண்டர்களோடு இணைந்து பணியாற்றி எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் உடைய மக்களுக்கு அவர்களுடைய வீட்டிலேயே ஆதரவுகொடுக்கப்பட்டது. முதல் ஆண்டில் "தேவையில் உலகம்" என்னும் நிறுவனத்தின் வழிநடத்துதலும் போதுமான அளவுக்கு கிடைத்தது, அவர்கள் என்ன நடக்கிறது என்பதை பார்த்து இதை எய்ட்ஸுக்கு எதிரான தேசிய மற்றும் சர்வதேச பதிலாக மாற்ற விரும்பினார்கள். இதன் விளைவாக சில மாதங்களுக்குப் பிறகு (எய்ட்ஸ் பராமரிப்பு, கல்வி மற்றும் பயிற்சி) ACET உருவானது.

தன்னார்வத்தொண்டர்கள் குழு சீக்கிரத்தில் ஒரு பல்துறை குழுவாக மாறியது, பல செவிலியர்கள், ஒரு மருத்துவர், ஒரு சமூக சேவகர் மற்றும் ஒரு நிர்வாகி. இதன் முக்கியமான குறிக்கோள் இதை வெகு சீக்கிரத்தில் தேவையற்ற குழுவாக மாற்றவேண்டும் என்பதுதான் - அரசாங்க மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இந்த புதிய சவாலை சந்திக்க திறன் பெற்றவர்களாக மாற்றவேண்டும். இக்குழு எந்த மருந்துகளும் பரிந்துரைக்காமல், மருத்துவர்களுக்கு மருத்துவ ஆலோசனை மாத்திரம் வழங்கவேண்டும் என்று முடிவுசெய்தது - அப்போது அவர்கள் ஒவ்வொரு நோயாளியிடமிருந்தும் கற்றுக் கொள்வார்கள்.

வலிகுறைக்கும் பராமரிப்பு

வலிகுறைக்கும் பராமரிப்பு உயிரை அச்சுறுத்தும் நோய்களை சந்திக்கும் மக்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தின் வாழ்க்கை தரத்தை அதிகரிக்கின்றது, அவர்களுடைய உடல்ரீதியான, உணர்வுரீதியான, சமுதாய ரீதியான மற்றும் ஆவிக்குரிய தேவைகளுக்கு கவனம் செலுத்துகின்றது.

எய்ட்ஸ் உடைய மக்களுக்கு வலிகுறைக்கும் பராமரிப்பு ஒரு முக்கிய பங்குவகிக்கிறது ஏனென்றால், வலி, இருமல், மூச்சுத்திணறல், குமட்டல்,

பெலவீனம், சோர்வு , ஜுரம் மற்றும் குழப்பம் ஆகிய பல்வேறு அறிகுறிகள் ஏற்படுகின்றன. வலிகுறைக்கும் பராமரிப்பு அறிகுறிகளுக்கு மாத்திரம் நிவாரணம் கொடுப்பதில்லை, மருத்துவமனைக்குச் செல்லும் அலைச்சலையும் குறைக்கின்றது.

ஆதாரம் : WHO

அதே காரணத்தினால் அக்குழு முழு செவிலிய பராமரிப்பை தங்களுக்கென எடுத்துக்கொள்ளாமல், அரசாங்க சமுதாய செவிலியர்களுக்கு ஆதரவு, பயிற்சி, ஆயத்தப்படுத்துதல் மற்றும் ஊக்கமளித்தலை மாத்திரம் செய்தார்கள். ACET செவிலியர்கள் தங்களுடைய பணி ஆலோசனை அளிப்பது மாத்திரமே என்பதை தெளிவுபடுத்தும்படியாக சீருடைகள் அணிவதில்லை. அயலகத்தார் எய்ட்ஸ் நோய்கண்டறியப்படுகிறது என்பதை அறியாமல் இருப்பார்கள் என்பது மற்றுமொரு காரணம்.

வீட்டில் இருக்கும் ஒவ்வொரு நபருக்கும் ஒரு தொலைபேசி எண் கொடுக்கப்படும். எனவே அவர்கள் இரவு பகல் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வருடத்தில் 365 நாட்களும் தொடர்புகொள்ளலாம். இது சேவையின் ஒரு முக்கியமான பகுதி ஆகும். ஒவ்வொரு குழு அங்கத்தினரும் சுற்றுமுறைமையின்படி இரவிலும், வாரக் கடைசிகளிலும் தங்கள் வீட்டிற்கு தொலைபேசியை எடுத்துச் செல்வார்கள். மேலும் அவர்கள் தங்களிடத்தில் கேள்வி கேட்கிறவர்களுக்கு சரியான பதில் கூறும்படியாக தங்களோடு போதுமான தகவல்களை எடுத்துச் செல்வார்கள்

மக்கள் வியாதிப்பட்டால், தன்னார்வத்தொண்டர்கள் அவர்களுடைய வீட்டிலே தேவைப்பட்டால் தொடர்ச்சியாகவோ, எட்டு மணிநேர சுற்றுக்களாகவோ (ஷி∴ப்டுகள்) அல்லது மரணமடையும் வரையோ இருப்பார்கள். வீட்டில் இருக்கும் மற்றவர்களுக்கும் அவர்கள் உணர்வுபூர்வமாகவும் நடைமுறையாகவும் உதவி செய்வார்கள்.

ஒவ்வொரு நோயாளிக்கும் கவனமான பதிவுகள் வைக்கப்பட்டு இருந்தன. இந்த பதிவுகளும் இணைப்புகளும், முக்கியமானவைகள் ஏனென்றால், தன்னார்வத்தொண்டர்கள் 10 வித்தியாசமான நிறுவனங்கள் அல்லது தனிநபர்களை சென்று பார்ப்பது அல்லது வேறுவகையான ஆதரவு கொடுப்பது போன்ற காரியங்களை செய்வார்கள்.

சந்தேகமும் எதிர்ப்பும் உதவியும் ஏற்றுக் கொள்ளுதலுமாக மாறியது

லண்டனில் எச்ஐவி இருக்கும் பெரும்பாலானோர் ஆண்களோடு உடலுறவுகொள்ளும் ஆண்களே. 1981 முதல் இந்த சமுதாயம் ஆலோசனையும் ஆதரவு சேவைகளும் கொடுப்பதில் செயல்பாட்டில் இருந்துவருகிறது. அவர்களுடைய அனுபவம் என்னவெனில் பல திருச்சபைகள் ஆண்களால் ஈர்க்கப்படுகிற ஆண்களுக்கு பகைவர்களாக இருக்கிறார்கள் என்பதுதான் (அவர்கள் உடலுறவு ரீதியாக செயல்திறனோடு இருந்தாலும் இல்லாவிட்டாலும்). இக்காரணத்தினால், ACET தொடங்கிய பிறகு வீட்டு பராமரிப்பு சேவை பொறுத்துக் கொள்ளாதவர்களாக, குற்றப்படுத்துகிறவர்களாக, அன்பற்றவர்களாக மற்றும் ஒழுக்கம் சார்ந்தவர்களாக இருப்பார்களோ என்று கவலையோடு இருந்தார்கள். அவர்கள்

மறைவான காரணங்களுக்காக பயந்தார்கள், சில பணியாளர் அல்லது தன்னார்வத்தொண்டர் சபைக்கு புதிய அங்கத்தினரை சேர்ப்பதில் மாத்திரம் ஆர்வமாக இருப்பார்களோ என்று நினைத்தார்கள்.

இக்குழுவினால் பார்த்துக்கொள்ளப்பட மக்கள் அவர்களுடைய சிறந்த ஆதரவாளர்களாக மாறினார்கள்- தங்களுடைய நண்பர்களுக்கு தொலைப் பேசியில் அழைப்புவிடுத்து இந்த நிகழ்ச்சியைக் குறித்து கூறுவது, எச்ஐவி சிறு மருத்துவமனைகளை நடத்துகிறவர்களுக்கும் மற்ற சேவைகள் செய்கிறவர்களுக்கு பரிந்துரை செய்வது போன்றவற்றில் ஈடுபட்டார்கள். இக்குழு நகரத்திலே எச்ஐவி உடையவர்களுக்கு வீட்டு பராமரிப்பு கொடுக்கும் மிகப்பெரிய அரசாங்கம் சாராத நிறுவனமாக மாறியது.

விரைவில் அரசாங்க நிறுவனங்கள் இக்குழுவின் முக்கியமான பங்கை அங்கீகரித்தனர், அவர்களுடைய பராமரிப்பு மிகவும் உயர்ந்ததாகவும், உண்மையாகவே நிபந்தனையற்றதாகவும், எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாகவும், எது கொடுக்கப்படுகிறது என்கிற விவாதத்தில் வாடிக்கையாளர்களும் கலந்து கொள்ளப்படுகிறார்கள் என்பதையும் அங்கீகரித்தனர். பின்பு அவர்கள் அப்பணிக்கு நிதியுதவி செய்தனர். முதல் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, ACETயின் பெரும்பாலான வருவாய் அரசாங்கத்திடமிருந்தே வந்தது.

ஆப்பிரிக்காவுக்கும் ஆசியாவுக்கும் உதவிசெய்யும் படியாக லண்டன் குழு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

12 ஆண்டுகளுக்கு பிறகு, லண்டனில் சூழ்நிலை மாறியது. ஆண்டிவைரல் சிகிச்சைகள் மூலமாக மக்கள் எச்ஐவியோடு நீண்டகாலம் வாழ்ந்தனர், அரசாங்க சேவைகளும் முன்னேறியது. அதிகமான ஜெபத்திற்கும் பிரதிபலிப்பிற்கும் பிறகு, மற்ற நிறுவனங்களோடு ஆலோசித்துவிட்டு, ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் இருக்கும் மற்ற தேவையுள்ள சமுதாயங்களுக்கு ஆதாரங்களை செலுத்தும்படியாக இந்த குழு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

ஏறத்தாழ அதே சமயத்தில் பல்வேறு தேசங்களில் இருந்த ACET பராமரிப்பு மற்றும் நோய்தடுப்பு குழுக்களுக்கு அந்தந்த தேசத்தின் குழுவின் பொறுப்பில் முழு சுகந்திரமும் அளிக்கப்பட்டது. உள்ளூர் சபைகள் அதிகமாக பொறுப்பெடுத்துக்கொள்ளும் உணர்வு, குறைந்த நிர்வாக செலவுகள், விரைவான தீர்மானங்கள், அதிகமான வளைந்து கொடுக்கும், சிறந்த பணியாளர் நியமனம், தேசிய கட்டுப்பாட்டிற்கு பெரிய திறந்த கதவு, மற்றும் வேகமான, நீடித்து இருக்கக்கூடிய வளர்ச்சி ஆகியவை இவற்றின் விளைவுகள்.

லண்டனில் ஒரு சிறு தன்னார்வத்தொண்டர்கள் குழுவாக இருந்து, ACET விரைவாக வளரும், சுயமாய் நிற்கக்கூடிய மற்றும் பெருக்கிக்கொள்ளக்கூடிய, சர்வதேச கிறிஸ்தவ ஆண்கள் மற்றும் பெண்களின் பல்வேறு நாடுகளில் எச்ஐவிக்கு எதிராக பதிலளிக்கும் இயக்கமாக மாறியுள்ளது.

ACET UK கற்றுக்கொண்ட பாடங்கள்:

❒ உங்களிடத்தில் இருக்கும் சிறியதை வைத்துக்கொண்டு தொடங்குங்கள்- குறைந்த தன்னார்வத்தொண்டர்களே போதும்.

❒ நீங்கள் உதவ நினைக்கும் மக்களுடன் இயல்பாகவும் சுலபமாகவும் தொடர்பு படுத்திக்கொள்ளக்கூடிய தன்னார்வத்தொண்டர்களை பயன் படுத்துங்கள்.

❒ கடவுள் அற்புதமான காரியங்கள் செய்வார் என்பதை விசுவாசியுங்கள்.

❒ பெரிய காரியங்களை சாதிக்க சிலசமயங்களில் சிறிய நிறுவனங்கள் தங்களுடைய பெயரையும் அமைப்பையும் மாற்றவேண்டியதாக இருக்கும் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

❒ பங்காளத்துவமே முக்கியம் என்பதை புரிந்துகொள்ளுங்கள்- நிதிதிரட்டுவதற்கு மாத்திரமல்ல தலைமைத்துவத்தை பெலப்படுத்தவும்.

❒ முக்கியமான நபர்களை உருவாக்குவதில் நேரத்தை செலவிடுங்கள்.

❒ புத்தகங்கள், நாளிதழ்கள், கட்டுரைகள், இணையதளங்கள் மற்றும் இலக்கியங்கள் ஆகியவை அதிகமான நன்கொடையாளர்களை எதிர்பாராத விதத்தில் ஈர்க்கும் என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

❒ உங்களுடைய மாதிரி மற்ற இடங்களில் பிரதிசெய்யப்படும் ஆனால் எப்போதுமே தனித்துவமான வழிகளில் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை எதிர்பாருங்கள்.

❒ பல்வேறு குழுக்களை அதிகமாக கட்டுப்பாடு செய்ய முயற்சிக் காதீர்கள்- அவர்களுடைய சூழ்நிலையில் அவர்கள் வளர சுதந்திரம் கொடுங் கள்.

❒ நீங்கள் எவ்வளவு சிறந்து விளங்கமுடியுமோ சிறப்பாக இருங்கள்: மகத்துவமான ப்ராஜெக்டுகள் மிகவும் இயல்புக்கு மாறானதாகவும் நட்சத் திரங்களைப் போல மின்னுகின்றனவாகவும் இருக்கின்றன.

❒ உங்களுடைய அணுகுமுறையிலே நுட்பமாகவும், செயல் திறன் மிக்கவராகவும், நன்கு ஒருங்கிணைக்கப்பட்டவராகவும் இருங்கள், நீங்கள் அரசாங்கத்தை கவர்ந்துவிடுவீர்கள்.

❒ நீங்கள் செய்வதை எப்போதுமே அளவிடுங்கள், நன்கொடை கொடுப் பவர்களுக்கும் உங்களோடு ஒப்பந்தம் செய்கின்றவர்களுக்கும் தெளிவான அறிக்கைகளைக் கொடுங்கள்.

❒ வேறு உலக கண்ணோட்டங்களோடு இருக்கும் மற்ற நிறுவனங்கள் உங்களை தாக்கமுயற்சிக்கிறார்கள் என்பதை கண்டுபிடித்தால் தாக் குப்பிடியுங்கள், ஆனால் எப்போதுமே அவர்களுடைய கவலைகளை கவனமாக கேளுங்கள், அவர்களுடைய விமர்சனம் சரியானதாக இருந்தால் மிகவிரைவாக நீங்கள் செய்வதை மாற்றிக்கொள்ளுங்கள்.

❒ உங்களையே ஒரு பணியில் இருந்து நீக்கிக்கொள்ள முயற்சியுங்கள்- உங்கள் குழுவை தேவையற்றதாக்கி விடுங்கள், உங்களுடைய பாத்திரத்தை மாற்றிக்கொள்ளக்கூடியவராக இருங்கள்.

❒ பயனுள்ளதாக இருக்கக்கூடிய ஆனால் அத்தியாவசியம் இல்லாத உங்கள் நிகழ்ச்சிகளை முடித்துவைக்க தயாராக இருங்கள்.

❐ கடினமான தீர்மானங்கள் எடுக்க ஞானத்தையும் தைரியத்தையும் கொடுக்கும்படி ஜெபித்துக்கொள்ளுங்கள்.

6.இந்த மாதிரியை போதை ஊசி போட்டுக் கொள்கிறவர்களை ஆதரிக்கும்படியாக ஏற்றுக் கொள்ளுதல்

ஸ்காட்லாந்து, டண்டீயில் 1988ல் வேறொரு ACET குழு தொடங்கப் பட்டது, 450 மைல்கள் வடக்கே, இதே போன்ற , மாதிரி வேறொரு சூழ்நிலைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒரு திருச்சபை பணியாளரும் பயிற்சிபெற்ற செவிலியருமான ஜூன் கிரேயினால் 30 தன்னார்வத் தொண்டர்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. நகரத்துக்குள் போதை ஊசி போட்டுக்கொள்கிறவர்களின் எண்ணிக்கையை எண்ணி அந்த அம்மையார் வருத்தப்பட்டார். அவருடைய போதகரின் ஊக்கத்தோடு, தன்னுடைய சொந்த சபையில் இருந்து ஒரு சிறிய தன்னார்வதொண்டர்கள் குழுவுக்கு பயிற்சி கொடுத்தார், சீக்கிரத்தில் மற்ற சபை தன்னார்வத்தொண்டர்கள் இதில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

உதவியை கேட்போரின் எண்ணிக்கை அதிகரித்தது, போதை பயன் படுத்துவோரின் நண்பர்கள் பலசமயங்களில் மற்றவர்களை அறிமுகம் செய்தனர். அதிகாரத்தில் இருந்தவர்களுக்கு பல அறிமுகமில்லாமல் இருந்தார்கள், ACET குழு மாத்திரமே அவர்களுடைய ஒரே உதவியாக இருந்தது. பல சவால்கள் இருந்தன. எடுத்துக்காட்டாக, உங்களுக்கு வீடே இல்லை என்றால் நீங்கள் எப்படி வீட்டில் மரணமடையமுடியும்? வீடு இல்லாமல் இருப்பது ஒரு மிகப்பெரிய சவாலாக இருந்தது, விரைவாக ஒரு குழு உள்ளூர் நிறுவனங்களோடு பணிசெய்து தங்குமிடங்களை தேடியது, முன்பு வாடகைகள் சரியாக கட்டாதவர்களை வாடகைக்கு கொடுக்கும் படியாக நில உரிமையாளர்களை வேண்டிக்கொண்டார்கள்.

சிறிது காலத்துக்கு பிறகு, ப்ராஜெக்டுக்கு சில அடுக்குமாடிக் கட் டிடங்கள் நிர்வாகித்துக் கொள்ளும்படியாக கொடுக்கப்பட்டது. ப்ராஜெக்ட் இதை மிக நன்றாகச் செய்ததால் இன்னும் அதிகமான வசிப்பிடங்கள் கொடுக்கப்பட்டது. இந்த குழு ஒவ்வொரு சூழ்நிலைக்கும் தன்னை பொருத்திக்கொண்டது- வேலையின் அதிகப்படியான பகுதி மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களை ஸ்காட்டிஸ் நகரங்களில் பிரத்தியேகமான வசிப்பிடங்களில் வைத்து பார்த்துக்கொள்வதுதான்.

பள்ளிகளுக்கும் சென்று உடலுறவு ஆரோக்கியம் குறித்த சுருக்கமான கல்வியையும் போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சிகளையும் கொடுக்கத் தொடங்கினார்கள். நகரத்தில் உள்ள போதைப்பொருள் பயன்படுத் துகிறவர்களும் ஸ்டெரிலைஸ் செய்யப்படாத ஊசி உபகரணங்களை பகிர்ந்துகொள்ளாமல் தடுப்பதற்கு இக்குழு உதவியாக இருந்தது, இது புதிய இலக்காக மாறியது. இன்று இந்த குழுவின் பெயர் (நேர்மறை படிகள்) பாசிடிவ் ஸ்டெப்ஸ் என்று அழைக்கப்படுகின்றது. இது பல்வேறு நாடுகளில் பள்ளிகளிலும் டண்டீயில் பல்வேறு விதமான சமுதாய ஆதரவாகவும் இருந் துவருகின்றது.

7 UK அகதிகள் முகாம் தேடுகிறவர்களுக்காக ஏற்றுக் கொள்ளுதல்

மீண்டும் ஒரு UK குழு நியூகேஸ்டிலில் தொடங்கி, மீண்டுமாக உண்மையான ACETமாதிரியை ஏற்றுக்கொண்டது. ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து அகதிகள் முகாம்களை தேடிவந்த பல பெண்கள் அங்கு இருந்தார்கள். அதில் வெகு சிலருக்கு எச்ஐவி இருந்தது, அவர்கள் சுகவீனமாகவும் சிறிய குழந்தைகளோடும் இருந்தார்கள். அவர்கள் தாய்நாட்டில் கொலைகள், பாலியல் பலாத்காரங்கள் மற்றும் பல கொடூரமான அனுபவங்கள் போன்ற தீவிரமான தாக்குதல்களினால் கடுமையான உணர்ச்சி வடுக்களோடு இருந்தார்கள். நியூகேஸ்டில் குழு (ப்ளூ ஸ்கை ட்ரஸ்ட் என்றும் அழைப்பார்கள்) இப்பெண்களை குழுக்களாக அமைத்து, ஒருவரை ஒருவர் சந்திக்கும்படி செய்து, வீட்டிலே உதவிகள் செய்துகொடுத்து, அவர்கள் வாழ இடங்களை கண்டுபிடிக்க உதவுகிறார்கள்.

8 வீட்டு பராமரிப்புக்காக சபைகளை ஒன்றுதிரட்டுதல்- TAIP, உகாண்டா

ஆப்பிரிக்கா, ஆசியா அல்லது ஐரோப்பா எங்கிருந்தாலும்- இந்த பல்வேறு மாதிரிகள் அனைத்திலுமே பொதுவான காரியம் சபைகளை ஒன்றுதிரட்டுவதுதான். உகாண்டாவில் இருக்கும் TAIP இந்த முக்கியமான செயல்பாட்டில் குறிப்பிட்ட கவனம் வைத்திருக்கிறார்கள்.

ஜிஞ்ஜாவில் இருக்கும் டெலிவரன்ஸ் சபையைச் சார்ந்த அங்கத்தினர்கள் அவர்களுடைய போதகர் சாம் முகோடேவின் ஆதரவுடன் எச்ஐவி உடையவர்களுக்கு சரீரம் மற்றும் ஆவிக்குரிய பராமரிப்புகளை கொடுப்பதற்கான குழுவை உருவாக்கி இருக்கிறார்கள். அந்த நபர்களுடைய வாழ்க்கையிலே இருக்கிற நேர் மறையான பாதிப்புகளை மற்ற சபைகள் பார்த்து, சமுதாயம் அல்லது அந்த சபையே இவர்களோடு இணைய அல்லது இதே போன்ற நிகழ்ச்சிகளை தொடங்க விரும்பினார்கள். அத்திருச்சபை எய்ட்ஸ் தலையிட்டு நிகழ்ச்சியை அமைத்து (TAIP-The AIDS Intervention Programme) இந்த புதிய திருச்சபை ப்ராஜெக்டுகளை ஆதரித்தார்கள்.

TAIP குழு முதலாவது போதகரையும் , சபை தலைமைத்துவ அணி மற்றும் சபையில் ஆர்வமுள்ள அங்கத்தினர்களையும் சந்திக்கும் ஒரு ஆரம்பகட்ட சந்திப்போடு தொடங்குகின்றது. தலைமைத்துவம் இந்த நிகழ்ச்சியை ஏற்றுக்கொள்வது மட்டுமில்லாமல் அதிலே இணைந்து செயல்படவும் வேண்டும் என்பது மிகவும் முக்கியம். இது அவர்களுடைய சொந்த சேவைப்பணி, அவர்களுடைய சபை ஊழியத்தின் ஒரு பகுதி. TAIP ஆதரவும் ஒழுங்குசெய்தலையும் மட்டுமே செய்யும்.

தன்னார்வத்தொண்டர்கள் சார்ந்த பணிகள் கிராமப்புற இடங்களில் வேகமாக பரவும், அங்கே மக்களுக்கு அதிகமான நேரம் இருக்கும், அவர்களை சந்திக்கக்கூடிய நேரத்தை அநுசரித்துக் கொள்கிறவர்களாகவும் இருப்பார்கள். நகரப்புர இடங்களில், குடும்ப அமைப்புகள் பெரும்பாலும் பெலவீனமாகவும், அதிகமான வேலைப் பளுவும் இருக்கும். அதனால் சம்பளத்துக்கு வேலை செய்கிறவர்கள் அதிகமாக இருப்பார்கள்.

பின்வரும் வேத பகுதிகள் TAIP னால் பயன்படுத்தப்படுகின்றன

பராமரிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்: 2 கொரிந்தியர் *1:3-4*: 'தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத் திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு **நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள் ளவர் களாகும்படி**' இயேசுவின் எடுத்துக்காட்டு: மாற்கு *1:40-45*:'இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு' **ஆதரிக்க அழைப்பு** ஏசாயா *1:17*: 'நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்றப் பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்' **நியாயம் தீர்க்காமல் இருக்க அழைப்பு** யோவான் *8:2-11*: 'உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்' **செயல் பாட்டுடனும் தியாகத்துடனும் சேவைசெய்ய அழைப்பு** லூக்கா *10:25-37* நல்ல சமாரியன் கதை **ஜெபிக்க அழைப்பு**: எபேசியர் *3:14-21* பவுல் ஜெபிக்கிறார் 'நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்...தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள் ளுகிறேன்'.

சபைகளை ஒன்றுதிரட்டுதலின் சிறு குறிப்பு:

❐ திருச்சபைகள் பலநேரங்களில் தட்டப்படாத கதவுகளான அதிகமான ஆதாரங்களை குறிக்கின்றன.

❐ தற்போது இருக்கும் திருச்சபை பதவிகளால் முழுவதுமாக பயன்படுத்தப்படாத திறமைகள், சக்தி மற்றும் தலைமைத்துவ நுட்பங்கள் உடைய பல அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்.

❐ எச்ஐவி குறித்த புரிந்துகொள்ளுதல், அர்ப்பணிப்பு மற்றும் பக்தியில் சில திருச்சபை அங்கத்தினர்கள் தங்கள்தலைவர்களை மிஞ்சுகிறவர்களாக இருக்கிறார்கள், ஆனால் தெளிவான, பகிரங்கமான தலைமைத்துவ ஆதரவும், பொறுப்பும் வேகமான வளர்ச்சிக்கும் நிலைத்துநிற்கக்கூடிய வேலைக்கும் அவசியமாக இருக்கின்றது.

❐ குழு அங்கத்தினர்கள் கிறிஸ்துவுக்கு எடுத்துக்காட்டுகளாக இருக்க வேண்டும்-வீடுகளுக்குள்ளும் பள்ளிகளுக்குள்ளும் செல்லும் போது அவரைப்போன்ற கரிசனையோடு வாழவேண்டும்-அவர்கள் இந்த நிகழ்ச்சியின் பிரதிநிதிகள்.

❐ நகர்புறங்களில் தன்னார்வத்தொண்டர்களுக்கு கிடைக்கும் நேரங்கள் குறைவாக இருக்கலாம்.

9. திருச்சபை அங்கத்தினர்களை பரிசோதித்தல் - ஜாஸ், நைஜீரியா

சபை ஒன்று திரட்டலோடு இணைந்து செல்வது சபை அங்கத் தினர்களையும் எச்ஐவிக்கு பரிசோதித்துக்கொள்ளும்படி ஊக்கப்படுத்துவது ஆகும், குறிப்பாக நைஜீரியா போன்ற நாடுகளில்.

நைஜீரியா, ப்லேட்யூ மாநிலத்தில் ஸ்டேட்டில் ஜனத்தொகை முழுவதையும் (40 கோடிக்கு மேல்) எச்ஐவிக்கு பரிசோதிக்கவேண்டும் என்று அரசாங்கம் இலக்கு வைத்திருக்கிறது. மக்கள் தங்களை நிலைமையை

குறித்து படிவங்களை பூர்த்திசெய்வதன் மூலமாக இலவச சிகிச்சையை பெற்றுக்கொள்ளும்படியாக ஊக்கப்படுத்துகிறது.

பல சபை சார்ந்த நிறுவனங்கள் சபைத் தலைவர்களோடு பேசி அவர்களும் பரிசோதித்துக்கொள்ளுமாறு ஊக்கப்படுத்தி, பின்னர் அவர்களுடைய தலைமையில் இருக்கும் குழுக்களையும், சபையாரையும் அப்படியே செய்யும்படி ஊக்கப்படுத்தும்படியாகவும் பேசிவருகிறார்கள்.

சபையில் எப்படி எச்ஐவி பரிசோதனை செய்யக்கூடாது

'ஒரு குழு என்னிடம் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் எங்கள் திருச்சபைக்கு வந்து எய்ட்ஸை குறித்து பேசி சபை அங்கத்தினர்களை பரிசோதித்துக்கொள்ள ஊக்கப்படுத்த என்னிடம் கேட்டுக் கொண்டார்கள்.

அவர்களுடைய செய்தியின் இறுதியில், பரிசோதித்துகொள்ளவிரும்புகிறவர்கள் அனைவரும் தங்களுடைய இருக்கையில் இருந்து எழுந்து திருச்சபைக்கு பின்னே செல்லும்படி கேட்டுக்கொண்டார்கள். சில நூறு பேர் அப்படியே செய்தார்கள். அவர்கள் உடனடியாக பரிசோதிக்கப்படுவார்கள், ஒரு மணிநேரத்துக்குப் பிறகு வந்து அவர்களுடைய பரிசோதனை முடிவை பார்த்துக்கொள்ளலாம் என்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் அவர்களுடைய பரிசோதனை பகிரங்கமாக இருக்கவேண்டுமா அல்லது ரகசியமாக இருக்கவேண்டுமா என்று கேட்டார்கள். அதனால் என்ன விளைவு என்பதை பல மக்கள் உண்மையாகவே புரிந்துகொள்ள விரும்பவில்லை-பலர் சரியான படிப்பறிவு இல்லாதவர்களும், அறியாதவர்களுமாய் இருந்தார்கள். முடிவுகள் பகிரங்கமாக தெரியப்படுத்தலாம் என்று கூறிவிட்டார்கள்.

பரிசோதனை முடிந்தவுடன், சபையிலே ஒரு மனிதர் ஒரு பெரிய பட்டியலை வைத்துக்கொண்டு சத்தமாக பரிசோதிக்கப்பட்ட அனைவருடைய பெயரையும் வாசிக்கத் தொடங்கினார், அதோடு அவர்கள் எச்ஐவியினால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்களா இல்லையா என்பதையும் வாசித்தார். ஒரு பெண் அவர் பாசிடிவ் என்பதை ஒட்டுமொத்த சபைக்கும் முன்பாக கேட்டவுடன் மயங்கி விழுந்துவிட்டார். ஒரு பெண்ணுக்கு எச்ஐவி இருப்பதால் அவர் ஒரு விலைமாது என்று கூறி அவரை மற்ற பெண்கள் விரட்டி அடித்தார்கள். அங்கே நடந்த சம்பவம் மிகவும் கொடூரமானது. பரிசோதனை முக்கியம் என்பது எனக்கு தெரியும், ஆனால் பரிசோதனைக்கு முன்பாக தனிப்பட்ட ஆலோசனை வழங்க வேண்டும் என்றும் பரிசோதனைக்கு பிறகு முடிவுகளை ரகசியமாகவே வைத்துக் கொள்ளவேண்டும் என்றும் நான் எச்சரிக்கிறேன். எச்ஐவி உடைய மக்கள் அவர்கள் நம்புகிறவர்களிடத்தில் அதை சொல்லட்டும், அவர்கள் அதற்கு தயாராக இருந்தால் மட்டும்.'

போதகர், மத்திய நைஜீரியா, 2008

ACET நைஜீரியா இதிலே ஈடுபட்டு உள்ளது. இதன் தாக்கம் பெரியதாகவும் உடனடியானதாகவும் இருக்கும். பராமரிப்புக்கும் ஆதரவுக்

கும் தலைமைத்துவ அமைப்புகளை முன்கூட்டிய திருச்சபைகள் அயத் தப்படுத்திவிட்டன. இப்படிப்பட்ட சபைகள் ஆரோக்கியச் செய்திகளை பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும், அலுவலகங்களுக்கும், வயலில் வேலைசெய்கிறவர்களுக்கும் எல்லா சமுதாயத்தின் பகுதிகளுக்கும் கொண்டு சென்று, எச்ஐவி பரவுவதன் வேகத்தை குறைக்க மிகவும் ஊக் கத்துடன் இருக்கிறார்கள்.

எச்ஐவி பரிசோதனை எவ்வளவு பெரிய அளவில் செய்யப்பட்டாலும் அதிகமான கவனம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். பரிசோதனைக்கு முன்னும் பின்னும் ஒவ்வொரு நபருக்கும் தனிப்பட்ட ஆலோசனை தேவைப் படும், ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டியதும் அவசியம்.

சபையை எச்ஐவிக்கு பரிசோதிப்பது- கற்றுக்கொண்ட பாடங்கள்

- எச்ஐவி பராமரிப்பு மற்றும் தடுப்பு ஆகியவற்றில் பரிசோதனை அத்தியாவசியமான பகுதி.
- ஆலோசனைக்கு பின்பு மாத்திரமே பரிசோதனை நடத்தப்பட வேண்டும்.
- பரிசோதனை முடிவுகளை பெற்றுக்கொண்ட அனைவருமே ஆலோசனை பெற்றுக்கொள்ள வேண்டும், அந்த முடிவின்அர்த்தம் என்ன என்பதை அவர்கள் முழுவதுமாக புரிந்துகொள்ள வேண்டும், தனிப்பட்ட முறையில் அதன் பாதிப்புகளை குறித்து அவர்கள் யோசிக்க வேண்டும்.
- நம்பிக்கையை வெல்வதற்கு ரகசியத்தை காத்துக்கொள்ள வேண்டும், ஒவ்வொரு நபரும் யாரிடத்தில் அவர்கள் சொல்லப் போகிறார்கள் எப்போது சொல்லப்போகிறார்கள்என்பதும் மதிக்கப்பட வேண்டும்.
- பரிசோதனை முடிவுகள் சபை தலைவர்களுக்கு அதிகப் படியான போதகப் பிரச்சனைகளை கொண்டுவரும்-எடுத்துக்காட்டாக, கணவனுக்கு பாசிடிவாகவும் மனைவிக்கு நெகடிவாகவும் இருக்கும் போது வரும் பிரச்சனை.
- பாசிடிவ் பரிசோதனை முடிவுகள் மக்கள் சீக்கிரமாக சிகிச்சையை அணுகும்படியாகச் செய்யும், அது வாழ்க்கையின் அளவை குறிப் பிடத்தக்க அளவுக்கு அதிகரிக்கும்.
- நெகடிவ் பரிசோதனை முடிவுகளும் அதிகமான நிவாரணத்தை கொடுக்கும், அவர்கள் நெகடிவாகவே இருப்பதற்கான செயல்களை செய்வதற்கு மக்களை ஊக்கப்படுத்தும்.
- கர்ப்பிணிப்பெண்களுக்கு பாசிடிவ் முடிவு அவர்களுடைய

கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையை காப்பதற்கு ஒரு சிறிதுகால ஆண்டிவைரஸ் சிகிச்சை கொடுக்க அனுமதிக்கும்.

❐ சபையில் இருக்கும் அநேகர் ஒரு குறிப்பிட்ட கால அளவில் பரிசோதிக்கப்பட்டால், சமீபத்தில் பாசிடிவாக பரிசோதிக்கப்பட்டவர்கள் தனிமையாக இல்லை என்பது அர்த்தமாகும்:அவர்கள் விருப்பப்பட்டால் பாசிடிவாக இருக்கும் மற்ற சிலரோடு இணைந்துகொள்ள உதவலாம்.

❐ மருத்துவமனைக்கு செல்ல விருப்பமில்லாமலோ அல்லது முடியாமலோ இருக்கலாம், சமுதாயத்தில் பரிசோதனை செய்வது இனிமேல் முக்கியமானதாக இருக்கும்.

❐ மருத்துவமனைகளை காட்டிலும் சமுதாய குழுக்கள் அவர்களுடைய பரிசோதனை முடிவுகளை ரகசியமாக வைத்துக் கொள்வார்கள் என்று நம்ப வாய்ப்பு இருக்கிறது. எச்ஐவியினால் ஆழமாக தொடப்பட்டு, சமுதாயத்தில் ஒரு வித்தியாசம் ஏற்படுத்துவதற்காக அழைக்கப்பட்டதை உணர்ந்த தனிப்பட்ட கிறிஸ்தவர்களின் பல்வேறு வகையான வழிகளின் வெகுசில எடுத்துக்காட்டுகளே இவை. அவர்கள் தங்கள் கையில் இருக்கும் ஆதாரங்களை மட்டுமே வைத்துக்கொண்டு தொடங்கினார்கள், பின்பு அதே தரிசனத்தை உடைய மற்றவர்கள் அவர்களோடு இணைந்துகொண்டார்கள், அவர்களுடைய பராமரிப்பு பணி வளர்ந்துள்ளது.

எச்ஐவி உடையவர்களை குற்றப்படுத்துவதற்கும் வெறுப்பதற்கும் எதிராக போராடுவது பராமரிப்பின் ஒரு முக்கிய பகுதி ஆகும்- இது திருச்சபையின் உள்ளே தொடங்கப்பட வேண்டும்.

அதிகாரம் 7

விரல் சுட்டிக்காட்டுதல்-குற்றப்படுத்துதலுக்கு எதிராக போராடுதல்

கிறிஸ்தவர்களாக எய்ட்ஸ், எச்ஐவி மற்றும் அது தொடர்பான பிரச்சனைகளை அனைத்தையும் குறித்து நாம் என்ன யோசிக்க வேண்டும்? நைஜீரியாவின் திருச்சபை சமூக சேவைத் திட்டங்களில் வேலை செய்யும் போது நான் இந்த வார்த்தைகளை எழுதுகின்றேன், இந்த அழகான, வெப்பமான தூசிநிறைந்த நாட்டுப்பகுதியில் ஜனத்தொகையில் 25 சதவிகிதம் பேர் எச்ஐவியினால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், இருந்தாலும் இதற்கு எப்படி பதிலளிப்பது என்று பல சபைத் தலைவர்கள் உறுதியில்லாமல் இருக்கிறார்கள். தேசம் முழுவதிலும் 10 கோடிப்பேருக்கு எச்ஐவி குறித்து குறைவான அறிவே இருக்கின்றது.

நைஜீரியாவில் இருக்கும் திருச்சபை வளர்ந்து வருகின்றது. உடலுறவு நடத்தைகளை குறித்த நம்பிக்கைகளில் இது ஆழமான பாரம்பரியங்களை உடையது, அவசர தேவைகளை இப்போது சந்தித்து வருகின்றது. பல நாடுகளைப் போல, இங்கும் சபை தலைவர்கள் ஞாயிறு செய்தியில் மறைக்கப்பட்ட உண்மைகளை கூறுவதில் போராடிவருகிறார்கள் : உறவுகள் சிதைவது, உடலுறவு ரீதியாக செயல்பாட்டில் இருக்கும் இளைஞர்கள் மற்றும் அவர்களுடைய சொந்த சபையில் எச்ஐவியோடு இருப்பவர்கள். நாம் எப்படி பதில்சொல்ல வேண்டும்? நாம் எப்படிப்பட்ட வார்த்தைகளை உபயோகிக்க வேண்டும்? கலாச்சார தடைகளை நாம் எப்படி மேற்கொள்ள வேண்டும்? அறியாமை, அச்சம், குற்றம்சாட்டுதல் மற்றும் நிராகரித்தலுக்கு எதிராக எப்படி போராடுவது?

இயேசுவின் வழியை கண்டுபிடித்தல்

எச்ஐவி பணி மிகவும் மனம் சோர்ந்துபோகச் செய்கின்ற, அழுத்தம் நிறைந்த, கலங்கவைக்கின்றதாக இருக்கலாம். உடைந்துபோன, சிக்கலான உலகத்தை நீங்கள் நேருக்கு நேர் சந்திக்கும்படியாகச் செய்யலாம், எந்த விதமான தெரிந்தெடுப்பும் சௌகரியமானதாகவும் சரியாகவும் இருப்பதாக தெரியாது. கண்டும் காணாமல் செல்வது சுலபமாக இருக்கலாம், ஆனால் நல்ல சமாரியன் நின்று அதிலே ஈடுபட்டார்.

நாற்காலியில் அமர்ந்துகொண்டு விமர்சனம் செய்துகொண்டு, ஒரு வேதவசனத்தின் பின் ஒன்றாக சொல்வது மிகவும் சுலபம். நாடு எதை சரியாகச் செய்ய வேண்டும், எச்ஐவி பணியாளர்கள் என்ன செய்ய வேண்

டும் என்று பின்னாக நின்றுகொண்டு எல்லாரிடமும் சொல்வதும், சபை மேடையில் நின்றுகொண்டு நல்ல போதனைகள் பிரசங்கிப்பதும், நெறியமான இறையியல் கோட்பாடுகளை கூறுவதும் எளிது. சுத்தமான மருத்துவமனை படுக்கைகளில் இருக்கும் மக்களை பார்ப்பது மிகவும் சுலபம். அவை சுலபமாக எண்ணிக்கைகளாகவும், சம்பவங்களாகவும், புள்ளிவிபரங்களாகவும் மாறிவிடும்.

திருச்சபையில் போதிப்பது

'நான் பயிற்சி வாரத்தில் கலந்துகொண்டது முதல், என்னுடைய சபையில் இருக்கும் மக்கள் எச்ஐவி குறித்தும் எய்ட்ஸ் குறித்தும் கேட்க தயாராக இருக்கிறார்கள், ஏனென்றால் நான் வேதாகமத்தை என்னுடைய குறிப்பேடாக வைத்து இருக்கிறேன். இயேசு தேவையுள்ளோரை பராமரித்தல் மற்றும் எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலமாக கடவுளுடைய எச்சரிக்கை. நான் அவர்களுக்கு அன்பையும் காட்டுகிறேன்.

எய்ட்ஸ் உண்மையானது அல்ல என்று சிலபேர் கூறுகின்றார்கள். அல்லது அவர்கள் உடலில் இருக்கும் எய்ட்ஸ் உண்மையாக செயல் படவில்லை என்கிறார்கள். சிலர் மருத்துவமனைக்குச் சென்றபின்பு அவர்களுடைய பரிசோதனை பாசிடிவாக இருந்தால், அவர்களுடைய எச்ஐவி பரிசோதனை குறித்து வாக்குவாதம் செய்கிறார்கள். அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களை சொல்கிறார்கள், "இயேசுவின் நாமத்தினாலே அந்த பரிசோதனையை நிராகரிக்கிறேன் என்கிறார்கள்!" அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒருவேளை அவர்கள் உடனடியாக குணமடைவதை எதிர்பார்க்கலாம்.

அவர்களுடைய நிலையை அறிந்துகொள்வதன் அவசியம் என்ன என்று நான் அவர்களுக்கு சொன்னவுடன் என்னுடைய சபையில் அநேகர் பரிசோதனை செய்தார்கள். நோய்பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிரான குற்றம்சாட்டாமல் இருப்பது குறித்தும், வேறுபாடுகள் இல்லாமல் இருப்பது குறித்தும் எனக்கு கொடுக்கப்பட்ட போதனையே என்னுடைய சபையில் எய்ட்ஸ் நிகழ்ச்சிகளை நான் தொடங்க காரணமாக இருந்தன. கடவுளுடைய கிருபையினால், நான் என்னுடைய வட்டார திருச்சபைக் குழுக்களில் 1000 மக்களுக்கு எய்ட்ஸ் குறித்த விரிவுரையை கொடுத்து, அவர்கள் எச்ஐவி ஆலோசனையும் பரிசோதனையும் பெற்றுக்கொள்ளவும், தங்களுடைய சொந்த நிகழ்ச்சிகளை தொடங்கவும் ஊக்கப்படுத்துவேன்.'

பேப்டிஸ்ட் போதகர், மத்திய நைஜீரியா, ஜனவரி 2009

இயேசு என்ன செய்திருப்பார்?. "இயேசு கட்டாயம் இதை செய்திருக்கமாட்டார்" என்று எய்ட்ஸ் நோய்தடுப்பு குறித்து மக்கள் சில நேரங்களில் இப்படிச் சொல்வார்கள்.

"இயேசு என்ன செய்திருப்பார்?" என்பது ஒரு அருமையான வாக்கியம், நாம் அவருடைய சீஷர்கள், நாம் செய்கின்ற அனைத்திலும் அவருடைய அழைப்புக்கு ஏற்றவாறு நடந்துகொள்ள வேண்டும் என்று நமக்கு நினைவூட்டும். எனினும், கிறிஸ்தவர்கள் செய்யும் பல காரியங்கள் நல்லது என்று

அங்கீகரித்தாலும், இயேசுவே அதைச் செய்வாரா என்று கற்பனை செய்வது கடினமாக இருக்கும். எடுத்துக்காட்டாக, உங்கள் கணவன் அல்லது மனைவியுடன் காதல்கொள்வது (இயேசு தாம்பத்திய உறவுகளில் ஈடுபடாதவர்) ; ஒரு ராணுவத்தில் சண்டைபோடுவது (சில கிறிஸ்தவர்கள் போர்செய்யக்கூடாது என்கிறனர்); வங்கியில் ஒவ்வொரு மணிநேரமும் கோடிக்கணக்கான பணத்தை பங்குகளை வணிகம்செய்கிறோம் (இது இயேசுவின் சாயலைப் போல இருக்கிறதா? இருந்தாலும் பல கிறிஸ்தவர்கள் வங்கிகளில் வேலை செய்கிறார்கள்) ; ஒரு நாட்டின் பிரதம மந்திரியாக இருப்பது (இயேசு அரசியலில் ஈடுபடவும், அரசியல் கட்சிகளை ஆதரிப்பதையும் மறுத்தார்).

நாம் நிலைத்தன்மையாக இருக்க கவனமாக இருப்போம். எல்லா காரியங்களிலும் இயேசுவே நம்முடைய வழிகாட்டி. அவர் சொன்ன வார்த்தைகள் வாழ்வையும், சமாதானத்தையும், ஆரோக்கியத்தையும், முழுமையையும் நமக்கு கொண்டுவந்தது. நேசிக்கப்படாதவர்களுக்கு அவருடைய ஆவி கரிசனையையும் அன்பையும் கொடுத்தது. ஆனால், உங்களுடைய சொந்த கலாச்சாரம் அல்லது குறைவான புரிந்துகொள்ளுதலுக்கு இயேசுவை குறைத்து மதிப்பீடு செய்துவிடாதீர்கள். நம்முடைய அடுத்த வாழ்வில் அவரை நேருக்கு நேர் சந்திக்கும்போது பலர் ஆச்சரியமடைவீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நம்முடைய தயவை காட்டிலும் அவருடைய தயவு பெரியது. அவருடைய அன்பு முழுமையானது; நம்முடையது அளவானது.

அதிகமான தேவை உடையவர்களுக்கும், அவர்கள் வாழும் படியாக நிர்பந்திக்கப்பட்ட வாழ்க்கைக்கும் அருகிலே செல்லாமல் இருக்கும்போது வாழ்க்கை மிகவும் எளிமையாக இருக்கின்றது. உண்மையில் நீங்கள் கவனிக்காமல் இருக்கும்போது தீர்மானம் செய்வது மிகவும் சுலபம்.

தீர்மானம்செய்ய மிகவும் தாமதமாக இருங்கள்

நீங்கள் அளிக்கும் தீர்ப்பையே நீங்களும் பெறுவீர்கள் (மத்தேயு 7:1-2 (பொதுவான திருவிவிலியம்)). "உண்மையான வாழ்க்கை" சூழ்நிலைகளை நீங்கள் தொடும்போது, நீங்கள் அப்படியே இருந்துவிடமாட்டீர்கள். உண்மையை சந்திக்கும்போது பல்வேறு வேதவல்லுநர்களும் கிறிஸ்தவ சிந்தனையாளர்களும் தங்கள் தீர்மானத்தை மாற்றிக்கொள்ளவேண்டியதாக இருக்கிறார்கள் : அவர்கள் உண்மையில் அக்கறைப்படுகின்ற ஒருவர், இதற்கு முன்பு அவர்கள் சந்திக்க வேண்டிய அவசியமில்லாத சூழ்நிலையில் இருக்கும்போது. கடந்த 20 ஆண்டுகளில், சில முக்கியமான பிரச்சனைகள் குறித்து நானும் என்னுடைய மனதை மாற்ற வேண்டியதாக இருந்திருக்கிறேன். தங்களுடைய சொந்த சபையிலே புதிய சூழ்நிலைகளை சந்திக்கும்போது தங்களை நிலையை முற்றிலுமாக மாற்றிக்கொண்ட சில சபைத் தலைவர்களை நான் சந்தித்து இருக்கிறேன்.

ஒரு மருத்துவமனை வார்டிலோ, சிறு மருத்துவமனையிலோ அல்லது நாள் பராமரிப்பு மையத்திலோ ஒருவரை குறித்து 10 ஆண்டுகளில் நீங்கள்

அறிந்துகொள்ளும் காரியத்தை, அவர்களுடைய வீட்டிலே சந்திக்கும்போது 2 நிமிடங்களிலேயே அறிந்துகொள்வீர்கள்.

நீங்கள் உடனடியாக அவர்களுடைய உலகத்தினால் தொடப்படுவீர்கள். அவர்களுடைய சிறு குழந்தைகள் உங்களிடத்தில் ஓடி வருவார்கள். விரிசல்விட்ட தண்ணீர் குவளை, தூசுநிறைந்த தரை, அழுக்குத்துணிகளின் குவியல், நிரம்பி வழியும் கழிவு நீர்க்கோப்பை மற்றும் காலியாக இருக்கும் உணவுப் பெட்டகம் ஆகியவை, அப்பெண் இன்று சுகவீனமாகவும், சோர் வாகவும் இருக்கிறார், உங்களுடைய உதவி அவருக்கு தேவை என்பதையும் அடையாளம் காட்டும்.

நீங்கள் ஆணையிட்டபடி வந்திருப்பதால் அவர் நிவாரணம் அடைந்து இருக்கிறார். அப்பெண்ணுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாகவும், ஒரு நம்பிக்கையுள்ள நண்பராகவும், ரகசியம் காத்துக் கொள்கிற உண்மையுள்ள வேலைக்காரராகவும் நீங்கள் மாறியிருக்கிறீர்கள். அவர் சென்றபிறகு யார் அவருடைய குழந்தைகளை பார்த்துக்கொள்ளப்போகிறார்கள் என்று பேச இன்று அப்பெண் விருப்பமாக இருக்கிறார்.

தன்னார்வத்தொண்டர்கள் அவர்களுடைய வீடுகளுக்குச் சென்றவுடன் அவர்களுடைய முகத்தில் இருந்து கண்ணீர் வடிவதை நான் பார்த்து இருக்கிறேன். மேலும் ஒரு அன்பான வாடிக்கையாளர், அல்லது உறவினர் அல்லது நண்பர் அல்லது பணியாளர் இறந்துபோனதால் சற்றுநேரம் ஓய்வு தேவைப்படும் பணியாளர்கள் இருக்கிறார்கள்.

முன்னணியில் இருக்கிறவர்களை நாம் கவனித்துக்கொள்ள வேண்டும், குற்றப்படுத்தக்கூடாது. எளியோரில், வியாதிப்பட்டவர்களில், ஒடுக்கப் பட்டவர்களில், சமுதாயத்தினால் நிராகரிக்கப்பட்டவர்களில், வாழ்க்கை உடைந்துபோனவர்களில் அல்லது உண்மையான பிரச்சனையில் இருக் கிறவர்களில், பாலியல் பலாத்காரத்தினால் மாத்திரமே 'காதல்' அனுபவம் பெற்றவர்களில் மோசமானவர்களுக்கு அருகே நாம் செல்லும்போது அது நம்மை ஆழமாக பாதிக்கக்கூடும்.

அவர்கள் சென்றபிறகு, அவர்கள் அடக்கத்திற்கு செல்லும் போது, அல்லது சில வாரங்களுக்குப் பிறகு அவர்களுடைய குடும்பத்தோடு, அவர்களுடைய சோகத்தை பகிர்ந்துகொள்ளும்போது, நீங்கள் பெரிய மாற்றத்தை உருவாக்கி இருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்வது மாத்திரமல்ல, நீங்களும் தனிப்பட்டமுறையில் விலை செலுத்தி இருப்பீர்கள்.

எச்ஐவி உடைய போதகராக வாழ்வது

கேனன் கிதியோன் பையமுகிஷா எச்ஐவியோடு இருக்கும் ஒரு 50 வயது உகாண்டா ஆங்கிலிக்கன் போதகர். இவருடைய முதல் மனைவி எச்ஐவியினால் இறந்துபோன பிறகு எச்ஐவி உடைய வேறொரு பெண்ணை திருமணம் செய்துகொண்டார். இவர் INERLA+ன் துணை நிருவனர் ஆவார், எச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்களோடு வாழ்கின்ற அல்லது தனிப் பட்டமுறையில் பாதிக்கப்பட்ட சாதாரண மற்றும் அபிஷேகம்பெற்ற ஆண்

மற்றும் பெண் மதத்தலைவர்களின் சர்வதேச ஒருங்கிணைப்பு இது. INERLA+ ஆப்பிரிக்க ஒருங்கிணைப்பான ANERELA+ல் இருந்து பிறந்தது.

உடலுறவு மற்றும் உடலுறவியலினால் பலியான கோடிக்கணக்கானவர்களில் நானும் ஒருவன். எனக்கு பாசிடிவ் முடிவு வந்தபோதுதான் முதல் முறையாக நான் ஆணுறை பற்றி அறிந்துகொண்டேன். என்னுடைய மனைவி 1991ல் இறந்தபிறகுதான் இது நடந்தது, இருப்பினும் 1987ல் எனக்கு திருமணம் நடப்பதற்கு முன்பே நான் பரிசோதித்து இருந்திருக்க வேண்டும்.

இரண்டு காரணங்களுக்காக நான் என்னுடைய மௌனத்தை உடைத்து என்னுடைய நிலையை வெளியரங்கப்படுத்த முடிவு செய்தேன். ஒன்று, தனிப்பட்ட முறையில் என்னுடைய நிலையை நான் சொன்னால், சுயபாதுகாப்பு மற்றும் சுயபராமரிப்பு போன்ற துல்லியமான தகவல்கள் மூலமாக என்னை ஆதரிக்க மக்கள் ஒரு நல்ல நிலையில் இருப்பார்கள். மற்றும் ஒன்று மதத்தலைவருக்கான பொறுப்பாக இருந்தது. நான் இரட்டை வேடம் அணிந்துகொண்டால், நான் வழிநடத்துகிற மக்களுக்கு நான் ஒரு முன்மாதியாக இருக்க மாட்டேன், வெளியே நான் ஒருமாதிரியாகவும், தனிப்பட்ட முறையில் ஒருமாதிரியாகவும் இருந்திருப்பேன்.

ஒரு திருச்சபையின் தினசரி வாழ்க்கையில் எச்ஐவியை ஒன்றிணைப்பது என்றால் உங்களுடைய திருச்சபையின் சேவை மற்றும் ஊழியத்தின்போதும், எச்ஐவி குறித்து மக்களுக்கு துல்லியமான தகவலைக் கொடுப்பதுதான். நோயைக் குறித்தும் அதோடு வாழ்கின்ற மக்களை குறித்தும் அவர்களுக்கு இருக்கின்ற மனப்போக்கை மாற்ற நீங்கள் முயற்சிப்பீர்கள், சுயபாதுகாப்பிலும் சுயபராமரிப்பிலும் அவர்களுடைய திறமைகளை வளர்க்க நீங்கள் முயற்சிப்பீர்கள்; அவர்களையும் அவர்களை நேசிக்கிறவர்களையும் பாதுகாக்க தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை, பரிசோதனைக்குப் பின் அவர்கள் தகவல்களை பரிமாறிக்கொண்டு நேர்மறையாக வாழக்கூடிய பரிசோதனைக்குப் பின்-குழுக்கள் போன்ற சிறந்த சேவைகளை பெற்றிருக்க உறுதிசெய்வீர்கள், அதோடு எச்ஐவிக்கு எதிராக திடமான தன்மையை பெற்றுக்கொள்வதற்கான ஆதரவான சூழ்நிலையையும் நாங்கள் உருவாக்குகிறோம்.

ஆதாரம் : ABC வானொலியின் நேர்காணல்கள், 26 ஜூலை 2006, மற்றும் இன்டிபெண்டன்ட், 11 ஜூலை 2000

வியாதியும் அவதியும் புரிந்துகொள்ள கடினமாக இருக்கலாம்

வாழ்க்கை நியாயமற்றதாக காணப்படலாம். நடக்கின்ற சம்பவங்கள் இவ்வாறாக நடக்க கடவுள் ஏன் அனுமதிக்கிறான் என்பதை புரிந்துகொள்வது கடினமாக இருக்கலாம்.

அவரை நேசிக்கிறவர்களுக்கு துன்பங்களும் வியாதியும் வருவதற்கு கடவுள் அனுமதிக்கிறார் (யோபு 1), ஆனால் அச்சமயங்களில் நமக்கு பெலனளிக்க அவர் வருகிறார் என்று யோபுவின் கதை கூறுகின்றது. பல்வேறு விதமான துன்பங்களை புரிந்துகொள்வது நமக்கு பொறுமையையும்,

நம்முடைய குணத்தை வளர்க்கவும், நம்பிக்கையை பெற்றுக்கொள்ளவும் உதவும் என்று பவுல் நம்மை ஊக்கப்படுத்துகிறார் (ரோமர் 5:3).

துன்பத்திலே நம்முடைய சொந்த அனுபவத்தின் மூலம் அதே போன்ற சூழ்நிலையில் இருக்கும் மற்றவர்களுக்கு நாம் ஆறுதல் அளிக்க முடியும் என்றும் பவுல் கூறுகிறார். நாம் கடவுள் இடத்தில் இருந்து பெற்றுக்கொண்ட நம்பிக்கையை நாமே பகிர்ந்துகொள்ள முடியும் (2 கொரிந்தியர் 1:3-7). பல்வேறு கடினமான சூழ்நிலைகளில் இருப்பது என்னவென்றே நாம் அறியாமல் இருந்தால், நாம் மற்றவர்களுக்கு உதவுவது எப்படி?

ஜெபத்தின் மூலமாக சரீர சுகம் பெறுவதைக் குறித்து என்ன?

கடவுளுக்கு குணப்படுத்தும் வல்லமை இருக்கிறது என்று பல கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள்-அவரே உலகம் முழுவதையும் உருவாக்கினார், இயேசு பலரை சுகப்படுத்தினார் என்பதை வேதம் நமக்கு நினைவுபடுத்துகிறது. வியாதியோடு இருப்பது கடவுளுடைய விருப்பம் இல்லை என்றும் சிலர் போதிக்கவும் செய்கிறார்கள்.

ஆனால் பல ஜெபங்களுக்குப் பிறகும் திருச்சபைக்கு உள்ளும் சமுதாயத்திலும் அதிகமான வியாதிகள் இருக்கிறது என்கிற உண்மையை நாம் சந்தித்துதான் ஆகவேண்டும். நாம் ஒவ்வொருவரும் அனுதினமும் முதிர்ச்சியும் சுகவீனமும் அடைந்துகொண்டுதான் இருக்கிறோம்.

நிச்சயமாகவே கடவுள் எப்போது வேண்டுமானாலும் தம் விருப்பப்படி பல்வேறு விதமான மருத்துவ பிரச்சனை உடையவர்களை குணப்படுத்த முடியும். அற்புதமான காரியங்கள் நிகழ்ந்து மருத்துவர்களை ஆச்சரியப்படுத்தலாம். எனினும், விசுவாசிகளும் போதகர்களும் மரணத்தை கொடுக்கும் தவறுகளையும் செய்யலாம். அவர்கள் மருத்துவர்கள் இல்லை, அந்த நபர் நிச்சயமாக குணமடைந்துவிட்டார் என்பதில் அவர்கள் எப்படி 100 சதவிகிதம் உறுதியாக இருக்க முடியும்? கடவுள் அவர்களிடம் பேசியதை உணர்ந்து இருக்கலாம், ஆனால் நாம் திரையின் வழியாகத் தான் பார்க்கிறோம் என்று அப்போஸ்தலராகிய பவுல் நம்மை எச்சரிக்கிறார். அவரும் ஞானத்தில் குறைவுள்ளவராகத்தான் இருந்தார். நம்முடைய அறிவும் குறைவுள்ளது, நம்முடைய தீர்க்கதரிசனமும் குறைவுள்ளது (1 கொரிந்தியர் 13:9-12)

திருச்சபை தலைவர்கள் துன்பத்தை கொண்டுவரலாம்

இப்படிப்பட்ட தவறுகளின் மூலமாக எச்ஐவி வேகமாக பரவலாம். அவர்கள் ஏற்கனவே குணமடைந்துவிட்டார்கள் என்கிற நம்பிக்கையில் வைரஸ் எதிர்ப்பு மருந்துகளை எடுத்துக்கொள்வதை நிறுத்திக்கொள்ளும்படி சபையிலே சிலர் மற்றவர்களை ஊக்கப்படுத்துகிறார்கள். இது முற்றிலும் ஆபத்தானது. தினமும் மக்கள் குணமடைந்துவிட்டார்களா இல்லையா என்கிற அறியாமையினாலே கடுமையான தவறுகள் அதிகமான உண்மையும் விசுவாசமும் உள்ள மதிப்பிற்குரிய மூத்த சபைத்தலைவர்களால் செய்யப்படுகின்றன. குணமடைவதற்காக நாம் நிச்சயமாக ஜெபிக்கலாம், குணமடைதலை பெற்றுக்கொண்டதாக விசுவாசிக்கிற எவரும் முதலாவது

மீண்டுமாக எச்ஐவி பரிசோதனையை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் உண்மையாகவே குணமடைந்து இருந்தால், அவர்கள் இப்போது நெகடிவ் பரிசோதனை முடிவை பெற்றுக்கொள்ள வேண்டும். என்ன நடந்திருக்கிறது என்பதை மருத்துவர்கள் முடிவுசெய்யட்டும்.

தயவுசெய்து, தயவுசெய்து கவனமாக இருங்கள். ஒருவர் எச்ஐவியில் இருந்து குணமடைந்துவிட்டீர்கள் என்று சொன்னால் அவர்கள் தங்கள் கணவன் அல்லது மனைவியிடம் காப்புறை உபயோகிப்பதை நிறுத்திவிடக்கூடும். நீங்கள் அவருடைய துணைவர் மற்றும் குழந்தயின் மரணத்திற்கும் காரணமாகிவிடக்கூடும். தன்னுடைய கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையை பாதுகாத்து வந்த வைரஸ் எதிர்ப்பு மருந்துகளை ஒரு கர்ப்பிணிப்பெண் தூக்கி எறிந்துவிட்டால் என்னாகும்? பெரியோர்கள் சிகிச்சையை நிறுத்திவிட்டு, இளம் அனாதைகளை தவிக்கவிட்டு சீக்கிரத்தில் மரணமடையலாம்.

இவை வாழ்வா மரணமா என்னும் அவசரமான காரியங்கள். நாம் வியாதியுள்ளோருக்காக ஜெபிக்கவும்-ஜெபத்திலே உறுதியாக இருக்கவும் இயேசுவினால் கட்டளை பெற்று இருக்கிறோம் (மத்தேயு *10:8*; லூக்கா *18:1*). ஆனால் போதகர்கள் இயேசு செய்ததை செய்ய வேண்டும். அவர் குஷ்டரோகத்தில் இருந்து குணமடைந்தவர்கள் ஆசாரியரிடத்தில் (அக்காலத்தில் இருந்த மருத்துவ நிபுணர்கள்) சென்று தாங்கள் குணமடைந்ததை உறுதிசெய்யும்படி கூறினார்.

எச்ஐவி குழப்பத்தை ஏற்படுத்தலாம்

எச்ஐவியுடன் தொடர்புடைய வியாதி குழப்பத்தை ஏற்படுத்தலாம். மக்கள் மீண்டுமாக வியாதியடையும் முன்பாக எவ்விதமான மருத்துவ உதவியும் இல்லாமல் நலமாக மாறலாம். என்னுடைய தாயகம் லண்டனிலே ஏசியிடி துவங்கி சில நாட்களிலே நடந்த ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகின்றது. படுக்கையிலே வியாதியோடு இருந்த ஒருவருக்கு நடைமுறை உதவி செய்ய சென்றிருந்த எங்களுடைய தன்னார்வத்தொண்டரில் ஒருவர் திரும்பி வந்திருந்தார். அவர் மிகவும் அதிர்ச்சியாக இருந்தார். "என்ன நடந்தது?" என்று நான் கேட்டேன். அவர் அங்கு சென்றபோது, அவருடைய வாடிக்கையாளர், படுக்கையில் இருந்து எழுந்து, ஒரு உயரமான ஏணியில் ஏறி, முழு சக்தியுடன், கூரையை சரிசெய்து கொண்டு இருந்தார் என்று கூறினார். சில வாரங்களுக்கு வாடிக்கையாளர் மிகவும் செயல்பாட்டுடன் இருந்தார், பின்பு மீண்டும் ஒரு மார்பக நோய்பாதிப்பு ஏற்பட்டு அவர்கள் நேசித்தவர்கள் சூழ்ந்து இருக்கிற வீட்டிலே இறந்துபோனார்.

எய்ட்ஸ் உடைய மக்கள் சிறிது காலம் திடீரென நலமாக இருந்தால் அவர்கள் பலசமயங்களில் கடவுளுடைய அற்புதமோ அல்லது முந்தைய நாள் அவர்கள் எடுத்துக்கொண்ட ஒரு மூலிகை மருத்துவமோ அவர்களை சரிசெய்துவிட்டது என்று நினைக்கிறார்கள். இப்படித்தான் பல தவறான 'குணமடைதல்' கதைகள் உருவாகின்றன.

போதக ஆதரவு பெற்றுக்கொள்வதையும் தவறுகள் தடுத்துவிடுகின்றன. அவர்கள் சீக்கிரத்தில் மரிக்கப்போகிறார்கள் என்பது அவர்களுடைய

மருத்துவர்களுக்கு தெரிந்தும்கூட கடவுளுடைய அற்புத வல்லமையின் வாழும் எடுத்துக்காட்டு என்று சபைத் தலைவர்கள் பெருமைப் பாராட்டிக் கொள்ளும், பல்வேறு வியாதிகளினால் சில நாட்களில் மரணத்தை சந்திக்க இருக்கும் சிலரை நான் சந்தித்து இருக்கிறேன்.

வியாதியுள்ளவர்களுக்கு ஆறுதலும் ஆதரவும் கொடுங்கள்-குற்றப்படுத் தாதிருங்கள்

அவர்கள் குணமடைந்துவிட்டார்கள் அல்லது குணமடைந்து விடுவார்கள் (எல்லா ஆதாரங்களுக்கும் எதிராக) என்று நம்பி ஜெபிக்கிற சிலரை சில எச்ஐவி உடைய மக்கள் வருத்தப்படசெய்ய விரும்புவதில்லை. போதகர்களுக்காக தைரியமான முகமூடியை அணிந்துகொள்வார்கள், தன்னுடைய நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்களைத் தவிர அனைவரிடமும் உண்மையை மறைத்து விடுவார்கள். சபையில் இருக்கிறவர்கள் வியாதியுள்ள நபர் குணமடையாததற்கு அவர்களுடைய விசுவாச குறைபாடு அல்லது பரிசுத்த குறைபாடுதான் காரணம் என்று கூறினால் நான் மிகவும் மனச்சோர்வு அடைகிறேன். ஆறுதலும் ஆதரவு தேவைப்படுகிற ஒருவருடைய தோளிலே எவ்வளவு கொடுமையான சுமையை வைக்கிறார்கள் ! பின்பு ஒரு அற்புதத்தை பெற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு தங்களையே குற்றப்படுத்திக்கொள்கிறார்கள். கடவுள் மேல் இருக்கும் விசுவாசம் ஆறுதலாக இருக்க வேண்டும், கொடுமையாக இருக்கக்கூடாது.

பல ஜெபங்களுக்குப் பிறகும் தீமோத்தேயு சுகவீனமாக இருந்தார், பவுல் அவரை பார்த்துக்கொள்ளும்படி கூறினார்-அவருடைய விசுவாச குறைவிற்காக மனம்திரும்பவேண்டும் என்று கூறவில்லை (1 தீமோத்தேயு 5:23). பல ஜெபங்களுக்கு பிறகும் பவுல் 'சரீரத்திலே ஒரு முள்' உடன் வாழ்ந்துகொண்டு இருந்தார் (2 கொரிந்தியர் 12:7). வியாதியுள்ளோரை பராமரிப்பது எப்போதுமே கிறிஸ்தவ பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வருகின்றது. உலகம் முழுவது மிஷனரிகள் மருத்துவமனைகளையும் சிறு மருத்துவமனைகளையும் உருவாக்கி வந்திருக்கின்றனர். நோயாளிகளை குணமாக்க கடவுள் மருந்துகளை உபயோகிக்கும்படி அழைத்திருக்கிறார் என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்; ஜெபம் நம்முடைய அழைப்பின் ஒரு பகுதிதான் அதுவே முழு பதிலாகாது என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

சில நேரங்களில் பரிசோதனை முடிவுகள் குழப்பம் அளிக்கலாம். எச்ஐவியை உறுதிசெய்ய இரண்டு வித்தியாசமான பரிசோதனைகள் செய்யப்பட வேண்டும். பொதுவாக இரண்டுமே ஒன்றாக செய்யப்படும், ஆனால் சில நேரங்களில் முதல் பரிசோதனையின் முடிவு மாத்திரமே மக்களுக்கு கொடுக்கப்படும் (மற்ற நோய்பாதிப்புகளினால் குழப்பமளிக்கக்கூடும்) , இரண்டாவது பரிசோதனையின் முடிவுகள் இரண்டு வாரங்களுக்கு பின்னரே கொடுக்கப்படும். முதலாவது மக்களுக்கு நெகடிவ் முடிவு கொடுக்கப்பட்டால் அது குணமடைந்ததாக தவறாக எடுத்துக்கொள்ளப்படும், பின்பு இரண்டாவது பரிசோதனையின் முடிவு பாசிடிவாக வரும். ஏதாகிலும் சந்தேகம் இருந்தால் பரிசோதனை திரும்பவும் செய்யப்பட

வேண்டும். "உடனடி" பரிசோதனைகள் எச்ஐவி நோய்பாதிப்பை கண்டறிய மூன்று முறைகளை உபயோகிக்கின்றன- சில நேரங்களில் (அபூர்வமாக) அவையும் தவறான பரிசோதனை முடிவுகளை கொடுக்கலாம். (பரிசோதனை துல்லியம் குறித்து **பக்கம் 75 பார்க்கவும்)**

மென்மையான இருதயத்தோடு நடைமுறை பராமரிப்பு

எச்ஐவி உடைய மக்களிடம் கிறிஸ்தவர்கள் கரிசனையோடு, நிபந்தனையற்ற பராமரிப்பு கொடுப்பதில் ஈடுபட்டுள்ளனர் என்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்து இருப்பதாக என்னிடம் கூறினார் ஒரு பெண் , ஏனென்றால் அவருடைய புரிந்துகொள்ளுதலின்படி நாம் பல்வேறு வாழ்க்கை முறைகளை அங்கீகரிக்காமல் இருந்ததினால் மக்கள் நோய் பாதிப்பு பெற்றிருக்கிறார்கள்

அவர் பராமரிப்பை ஏற்றுக்கொள்ளாமல் குழப்பிக்கொண்டார். மருத்துவத்தை பொறுத்தவரை அவர்கள் அப்படியாக இருந்ததில்லை. ஒரு மருத்துவர் ஒரே கட்சிக்கு ஓட்டு போட்டவரை, ஒரே விசுவாசத்தை உடையவரை அல்லது ஒரே வகையான சபையில் ஆராதனை செய்கிறவரை மாத்திரம் கவனித்துக்கொண்டால் அவர்கள் உடனடியாக மருத்துவ பதிவேட்டில் இருந்து நீக்கப்படுவார்.

மருத்துவர்களும் செவிலியர்களும் தேவைப்படுகிறவர்கள் அனைவருக்கும், எல்லா வியாதியை உடையவர்களுக்கும் நல்ல கரிசனையுள்ள பராமரிப்பை கொடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள், மக்கள் எதன் காரணமாக வியாதியை பெற்று இருந்தாலும். பராமரிப்பு பணிகளில் ஈடுபடுகிற அனைவருக்குமே இப்படித்தான்.

எச்ஐவி உடைய மக்களுடைய குரல்கள்

'நீங்கள் என்னை பார்க்கிறீர்கள், நான் ஒரு ஆரோக்கியமான பெண் என்பதை பார்க்கிறீர்கள். நீங்கள் எனக்கு கை குலுக்கலாம், என்னுடைய பாத்திரத்தில் குடிக்கலாம், என்னை தழுவிக் கொள்ளலாம்....இவை எதுவும் உங்களுக்கு எச்ஐவியை கொடுக்காது. என்னுடைய நெருங்கிய நண்பர் களும் உறவினர்களும் என்னிடத்திலிருந்து திரும்பிச் சென்ற காலம் ஒன்று உண்டு. அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களை புரிந்துகொள்ளவில்லை'

ஆதாரம் : www.globalaidsalliance.org

'கிராமத்தில் இருக்கும் ஒருவருக்கு கஷ்டகாலம் வந்தால், அவருடைய அயலகத்தார் அவர்களுக்கு உதவி செய்வார்கள். ஆனால் அவர்களுக்கு எச்ஐவி இருந்தால் அப்படியல்ல. சமுதாய அங்கத்தினர் ஒருவருக்கு எச்ஐவி இருந்தால் அப்பெண் எல்லோராலும் துரத்திவிடப் படுவார். இப்பிரச்சனைக்கு எதிராக போராட ஒரே வழி கல்வி. இந்த நோயைகுறித்து மக்கள் அறிந்துகொண்டு, அவர்கள் அவர்களுடைய நோய்வாய்பட்ட உறவினர்களுக்கும் அயலகத்தாருக்கும் பாதுகாப்பாக உதவிசெய்யலாம் என்பதை அவர்கள் அறிந்துகொண்டால், அவர்கள் சரியானதை செய்யத் தொடங்குவார்கள்.'

ஆதாரம் : www.globalaidsalliance.org

'நான் எச்ஐவியினால் பலவற்றை இழந்து இருக்கிறேன், ஆனால் இன்றும் அதிகமாக பெற்று இருக்கிறேன். நாம் இந்த நோயை சுற்றி இருக்கும் அறியாமைக்கும், குற்றப்படுத்துதலுக்கும் எதிராக போராட வேண்டும், ஆனால் அதைவிட முக்கியமாக, ஒருவருக்கொருவர் உதவிசெய்யவும் நம்முடைய உதவியும் ஆதரவு தேவைப்படும் மற்ற பெண்களுக்கும் தாய்மார்களுக்கும் புறமுதுகுகாட்டிச் செல்லாமல் இருக்கவும் வேண்டும்'

-தாமா அமாடோவ், நைகரில் உள்ள எச்ஐவி பாசிடிவ் பெண்

ஆதாரம்: 'ஒரு பிரகாசான மாதிரி: நைஜரில் எச்ஐவியுடன் வாழுதல்', கேர் இண்டர்நேஷனல், ஆகஸ்டு 2006

'நான் என்னுடைய குடும்பத்துக்கு வருமானம் கொண்டுவந்தேன். என்னுடைய தங்கைகளும், தம்பிகளும் பள்ளிக்குச் செல்லவும், பட்டம் பெறவும், மற்றவர்களைப் போல வாழவும் நான் சம்பாதித்தேன். இப்போது என்னுடைய குடும்பத்திற்கு அவமானம் கொண்டுவருகிறவளாகவும், என்னுடைய தங்கைகளை இழிவு படுத்துகிறவளாகவும் இருக்கிறேன். எனக்கு ஏன் இது வந்தது? இது என்னுடைய தவறா? அது எதுவாக இருந்தாலும், அவர்கள் என்னை "எய்ட்ஸ் பெண்" என்று அழைக்கிறார்கள். அதை ஒரு கெட்டவார்த்தையைப் போல அவர்கள் சொல்கிறார்கள்'

-பெயர்குறிப்பிடாதவர்

ஆதாரம் : 'தி எய்ட்ஸ் உமன்', ACRE இண்டர்நேஷனல், நவம்பர் 2006

அதேபோல, சில எச்ஐவி உடைய மக்கள் குழுக்களை மாத்திரம் பார்த்துக்கொள்ள தயாராக இருக்கிற கிறிஸ்தவர்கள் எச்ஐவி பராமரிப்பு சமூக சேவைத் திட்டங்களில் இருந்து வெளியேறும்படியாக சொல்லவேண்டும் அல்லது காலப்போக்கில் அவர்களுடைய கண்ணோட்டத்தை மாற்றிக் கொள்ள உதவ வேண்டும் (ஆரம்பத்தில் அவர்கள் நேரடியான பராமரிப்பு பாத்திரங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்). நாங்கள் லண்டனில் ஏசியிடி வீட்டு பராமரிப்பை தொடங்கிய போது ஒவ்வொரு தன்னார்வத்தொண்டரிடமும் இந்த கேள்வியை கேட்டோம்: யாரிடத்தில் நீங்கள் அதிக கருணையோடு இருப்பீர்கள்- ஒரு விலைமாதுவாக எச்ஐவி உடைய ஒரு பெண்ணிடமா, ஆண்களோடு உடலுறவு கொள்ளும் ஒரு ஆணிடமா, இரத்த பரிமாற்றத்தின் மூலமாக பெற்றுக்கொண்ட ஒருவரிடமா, போதைப் பொருள் உபயோகிப்பவரிடமா அல்லது கர்ப்பத்தில் நோய்பாதிப்பை பெற்ற ஒரு குழந்தையிடமா?

சில வகையான மக்களிடத்தில் கடுமையான மனப்போக்கு இருக்கிறவர்கள் தங்கள் மனப்பாங்கை மாற்றிக்கொள்ளும்வரை நிகழ்ச்சிக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் உண்மையாகவே தங்கள் இருதயத்தில் ஆழமான மாற்றத்தை அனுபவித்து இருக்கிறார்கள் என்பதை நாங்கள் நிச்சயிக்க வேண்டும். உள்ளுக்குள் புகைந்துகொண்டு இருக்கிறவர்களால் அருமையான பராமரிப்பை கொடுக்க முடியாது. நம்முடைய பராமரிப்பு நிபந்தனையில்லாமல், அவர்களுக்கு எப்படி எச்ஐவி வந்தது என்கிற பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டும். ஒரு தன்னார்வத்தொண்டர் ஒரு வீட்டிற்குள் செல்லும்போது அவர்கள் ஒட்

டுமொத்த நிறுவனத்தையும் பிரதிபலிக்கிறார்கள், அவர்கள் சபை மற்றும் எச்ஐவி சமூக சேவைத் திட்டங்களின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். அவர்கள் நாம் அக்கறை செலுத்தும் அனைவருக்கும் குடும்ப உணர்வை கொண்டு செல்கின்ற நம்முடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாவார்கள்.

விரல்சுட்டிக்காட்டுவது சுலபமானது

எச்ஐவி உடைய மக்களிடத்தில் எதிர்மறையான மனப்பாங்கை வைத்திருப்பது வைரஸ் வேகமாக பரவ உதவும். மக்கள் அதைக்குறித்து பேச அச்சப்பட்டால், தடுப்பது மிகவும் கடினமானதாக மாறிவிடும். நிராகரிக்கப்படுவோம் என்று அஞ்சுகிறவர்களை பரிசோதிக்கும் அபாயத்திற்கு ஊக்கப்படுத்துவதும் மிகவும் கடினமானது. ஆனால் அதனால் அவர்கள் சிகிச்சை பெற்றுக்கொள்ளாமல் இருப்பார்கள், அவர்கள் மற்றவர்களுக்கும் எச்ஐவியை பரப்புகிறார்கள் என்று உணராமல் தொடர்வார்கள். எதிர்காலத்தில் எச்ஐவி பரவுவதை தடுக்கும்படியாக உண்மையான நம்பிக்கை வைத்திருந்தால் நாம் ஆதரவான பராமரிக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

பல நோய்கள் நாம் கேள்வி எழுப்பக்கூடிய வாழ்க்கை முறைகளினால் உருவாக்கப்பட்டவை: கடந்த 40 ஆண்டுகளாக தினமும் 50 சிகரெட்டுகள் புகைத்துவிட்டு நுரையீரல் புற்றுநோய் பெற்றிருக்கும் ஒரு மனிதனுக்காக நாம் கரிசனையோடு இருக்க வேண்டுமா? அதிகமாக குடித்ததினால் பார்ட்டியில் தன்னுடைய காலை உடைத்துக்கொண்ட ஒரு இளம் பெண்ணுக்காக? அதிக எடையுள்ள ஒரு மனிதனுக்கு மாரடைப்பு அல்லது வலிப்பு நோய் ஏற்பட்டால்?

கடைசியில் மக்களை குற்றப்படுத்திவிட்டு அவர்களுக்காக ஒன்றும் செய்யாமல் இருப்பது எளிது. இதை மற்றவர்களுடைய பிரச்சனையாக மாற்றுவதில் இது ஒரு சுத்தமான நேர்த்தியான வழி ஆகும். உங்களுடைய மனதில் வேறு ஒருவரை குற்றவாளியாக மாற்றிவிட்டதால் நீங்கள் ஈடுபடாததினால் குற்றவுணர்வு அடைய வேண்டிய அவசியம் இல்லை. பட்டினியாக இருக்கிறவர்களுக்கு நான் உதவ விரும்பவில்லை ஏனென்றால் அடுத்த பஞ்சத்தில் அவர்களுக்கு இன்னும் அதிகமாக உணவு தேவைப்படும் என்று என்னிடம் கூறிய ஒரு பணக்காரரின் அதே மனநிலைதான் இது.

காரணமும் விளைவும்

எய்ட்ஸ் கடவுளுடைய நியாயத்தீர்ப்பு இல்லை, அப்படி இருந்ததும் இல்லை. உலகத்தை தண்டிப்பதற்கான ஒரு கருவியாக எச்ஐவியை அவர் உருவாக்கவில்லை. இது கடவுளுடைய தீர்ப்பாக இருந்தால் இது குறிப்பிடத்தக்கதாக இருந்திருக்க வேண்டும். கருவில் நோய்தாக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் மருத்துவ சிகிச்சைகளின் மூலமாக எச்ஐவியைப் பெற்றுக்கொண்டவர்களைப் பற்றி என்ன கூறிவீர்கள்?

உடலுறவினால் பரவக்கூடிய நீண்ட தொடர் நோய்களில் எய்ட்ஸும் ஒன்று. உடலுறவு சுலபமான, இன்னும் சொல்லப்போனால் நோய் பரவுவதற்கான வழி, இந்த வழியில்தான் எச்ஐவி பொதுவாக பரவுகிறது.

மக்கள் வித்தியாசமாக வாழ்ந்தால் பெரும்பாலான நோய்களை மக்களை தவிர்க்கலாம் அல்லது குறைக்கலாம் என்று எந்த மருத்துவரும் அறிவார்- உணவு உண்பதற்கு முன்பாக கைகளை கழுவுவதைப் போன்ற எளிமையான காரியங்களும் கூட இதில் அடங்கும். சுகாதாரக் கல்வி முழுவதும் மக்களுக்கு காரணங்களையும் விளைவுகளையும் கற்றுத்தருகின்றது. நீங்கள் புகை பிடித்தால் உங்கள் நுரையீரலை நீங்கள் பழுதாக்குவீர்கள். நீங்கள் குடிபோதையில் வாகனம் ஓட்டினால், நீங்கள் ரோட்டுக்கு வெளியே சென்று யாரையாகிலும் கொல்வது அதிக நிச்சயம், நீங்கள் அசுத்தமான ஊசியை உபயோகித்தால் ஹெப்படிடிஸ் அல்லது எச்ஐவியை பெற்றுக்கொள்வீர்கள். நீங்கள் அதிகமாக சாப்பிட்டால் இருதய நோயை பெற்றுக்கொள்ளக்கூடும். 2 கொரிந்தியர் 9:6ல் வாசிப்பதைப் போல நீங்கள் விதைப்பதை அறுப்பீர்கள்.

சிறுவர்களாக நாம் படிக்கும்போது காரணமும் தாக்கமும் மிக முக்கியமான பாடமாக இருந்தது. உங்கள் இளம் பிராயத்தில் உங்கள் பெற்றோர்கள் எதிலிருந்தாவது உங்களை வெளியேறும்படியாகவும், எதையாகிலும் கீழே வைக்கும்படியாகவும், உங்கள் சொந்த நலனுக்காக ஒருநாளைக்கு நூறுமுறை கூறியிருப்பார்கள். பின்பு உங்கள் தாயார் உங்களுக்கு விவரிப்பார், எடுத்துக்காட்டாக, கொதிக்கும் தண்ணீர் இருக்கும் பாத்திரம் மிகவும் சூடாக இருக்கும் அதை உங்கள் விரல்களினால் தொட்டால் நீங்கள் உங்களுக்கே சூடுபோட்டுக்கொள்வீர்கள் என்பார்கள்.

முதல்முறையிலேயே கவனிப்பதில் நாம் யாருமே சிறந்தவர்கள் அல்ல. பொதுவாக ஒன்று அல்லது இரண்டு அழிவுகளுக்கு அருகாமையில் செல்லும் அனுபவத்தை தொடர்ந்து : "நான் அப்போதே உன்னிடம் சொன்னேன். அடுத்த முறை நான் உன்னிடம் சொல்லும்போது அதே மாதிரி செய்" என்று வசனம் வரும், பின்பு நாம் கற்றுக்கொள்வோம்.

நம் அன்பு தகப்பன்

கடவுள் நமக்கு அன்பான தகப்பன் என்று வேதம் கூறுகின்றது. அவர் நம்மை நேசிப்பதினால், நம்மை குழந்தைகளைப்போலப் பார்க்கிறார். அவர் ஒவ்வொரு நபரையும் உலகத்தில் இருக்கும் ஒரே நபரைப்போல பார்க்கிறார். அவர் நம்மீது அக்கறையாக இருப்பதால் நம்முடைய சொந்த தவறுகளில் இருந்து நம்மை காப்பதற்கு அவர் விருப்பமாக இருக்கிறார். அனால் அவர் உங்களை ஒரு நபராக மதிப்பதினால் உங்கள் வாழ்க்கையில் அவர் ஆதிக்கம் செலுத்த மாட்டார். அவர் எப்போதுமே உங்களுக்கு உதவிசெய்ய தயாராக இருக்கிறார் ஆனால், நீங்கள் கேட்க வேண்டும். அவர் தானாக தலையிடவே மாட்டார். அவர் விட்டுவிட்டு சென்றுவிடவும் மாட்டார். பல ஆண்டுகள் நீங்கள் புறமுதுகு காட்டிச் செல்லலாம், ஆனால் அவர் கைகளை விரித்து உங்களுக்காக காத்திருப்பார். உங்கள் மீது அவருடைய அன்பை விலக்கி வைப்பதற்கு நீங்கள் எதுவுமே செய்யமுடியாது, இவ்வுலகிலும் மறுவாழ்விலும் விளைவுகளை சந்திக்கும்படியாக அவரிடம் இருந்து தூரத்தில் உங்களை வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம்.

மனம்திரும்பிய மகனைப்பற்றி இயேசு கூறியதை நான் அடிக்கடி யோசித்து பார்ப்பேன் (லூக்கா 15). ஒரு மகன் தன் தந்தையோடு மனம்

வேறுபட்டு, ஒரு பட்டணத்திற்குச் சென்று தன்னுடைய வேலையை செய்ய விரும்பினான். சுயமாக வாழ்வது கொடூரமானது என்று அவன் கண்டுபிடித்துவிட்டான். அவன் மிகவும் கஷ்டகாலத்தை அனுபவித்தான். நன்றாக வாழ்வதற்காக அவன் தன்னுடைய பணத்தை எல்லாம் செலவுசெய்தான், பின்பு அவன் பன்றிகளோடு ஒரு வயலிலே உணவு அருந்தினான். அவனுடைய தந்தை மீண்டுமாக அவனை ஏற்றுக்கொள்வாரா என்று யோசித்துக்கொண்டே இருந்தான். அவன் சோர்வாகவும், மனம் உடைந்தும், பசியோடும் தனிமையாகவும் இருந்தான்.

அவனுடைய தந்தை அவனை குடும்ப அங்கத்தினராக சேர்த்துக்கொள்ளாவிட்டாலும் வேலைக்காரனாகவாவது வீட்டிற்கு சென்றுவிட வேண்டும் என்று நினைத்தான். அவன் வீட்டை நெருங்கியபோது அவன் கலக்கமடைந்தான், ஆனால் அவனுடைய தந்தை தூரத்திலே அவன் வருவதை பார்த்து, தன்னுடைய மகனை சந்திக்க விரைந்து ஓடினார். மகன் வெட்கப்பட்டு தலைகுனிந்தான், ஆனால் தகப்பனோ அவனைச் சுற்றி தன்னுடைய கரங்களை வைத்துக்கொண்டு வீட்டிற்குள் அழைத்துச் சென்றார், தன்னுடைய வேலைகள் அனைத்தையும் நிறுத்திவிட்டு இளைய மகன் வீடுதிரும்பியதற்காக ஒரு பெரிய விருந்தை ஏற்பாடு செய்தார், அதனால் மூத்த மகன் மிகவும் வெறுப்படைந்தான்.

நாம் கடவுளைவிட்டுச் செல்வதால் மாத்திரம் கடவுளுடைய அன்பு குறைந்துபோகாது என்பதை உணர்த்துவதற்காக இயேசு இக்கதையை கூறினார். உங்கள் தவறுகளினால் ஏற்படும் வலிகளை தவிர்த்து, எப்படி மகிழ்ச்சியான, முழுமையான, திருப்தியான வாழ்க்கை வாழவேண்டும் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள கடவுள் விரும்புகிறார். வேதாகமம் முழுவதும் காரணங்கள் மற்றும் விளைவுகளினால் நிறைந்து இருக்கின்றன. உண்மையில் வேதாகமத்தின் முக்கியமான போதனைகளில் இது ஒன்று என்றும் கூறலாம்.

உடலுறவு நடத்தைகள், தொடர்புகள் மற்றும் திருச்சபையின் பாரம்பரிய போதனைகள்

உலகின் மூன்றில் ஒருபங்கு பெரியவர்கள் இன்று தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்வார்கள்-உலகின் மிகப்பெரிய மதம் [1]. ஆப்பிரிக்காவிலும், லத்தீன் அமெரிக்காவிலும், முன்னால் சோவியத் நாடுகளிலும், தென் கிழக்கு ஆசியாவிலும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இன்று வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் விசுவாசத்தை குறித்து மிகவும் பக்திவைராக்கியமாக இருப்பார்கள், ஒவ்வொரு வாரமும் புதிய அங்கத்தினர்களை சேர்த்துக்கொள்வதற்காக தங்கள் சமுதாயத்திற்குள் செல்கிறார்கள்.

வடக்கு அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் போன்ற இடங்களில் இதற்கு நேர் எதிர்மறையான சூழ்நிலை அதிகமாக இருப்பதை காணலாம், குறிப்பாக கண்ணோட்டங்கள் குறைந்த அளவில் பாரம்பரியமாகவும், அதிகப்படியாக சுதந்திரமாகவும் இருக்கும் இடங்களில் இவ்

1.வேர்ல்ட் கிறிஸ்டியன் என்சைக்ளோபீடியா,2001 பதிப்பு

வாறு இருக்கிறது. எடுத்துக்காட்டாக, இயேசு உண்மையாகவே அற்புதங்கள் செய்தாரா, உண்மையாகவே அவர் மரித்தோரை உயிர்த்தெழ செய்தாரா, வேதாகமம் சொல்வது உண்மைதானா, உடலுறவு நடத்தைகள் குறித்து 2000 வருடங்களுக்கு முன்பு கூறப்பட்ட பழங்கால போதனைகளை இன்னும் பின்பற்ற வேண்டுமா என்று சுதந்திர திருச்சபைகள் கேள்வி எழுப் புகின்றன.

உலகில் வளர்ந்துவரும் திருச்சபைகளை உடைய நாடுகள் (குறிப்பாக எச்ஐவியால் அதிகமாக பாதிக்கப்பட்ட நாடுகள்) அனைத்திலுமே இயேசு, வாழ்க்கை முறைகளை மற்றும் உடலுறவில் ஒழுக்கம் போன்ற முக்கியமான நம்பிக்கைகளில் பாரம்பரியமாக இருக்கிறார்கள். திருமணத்திற்கு வெளியே தீங்கை தவிர்ப்பதிலும் திருமணத்திற்குள் உண்மையாக இருப்பதிலும் வாழ்க்கையை மாற்றக்கூடிய தெளிவான செய்திகளை கூறுகிறார்கள்- எச்ஐவியால் அதிகமாக பாதிக்கப்பட உலகத்திலே அதிக முக்கியத்துவமாக காணப்படுகிற மதிப்புகள்.

கடந்த 2000 ஆண்டுகளாக எல்லா திருச்சபை பிரிவுகளிலும் போதிக்கப்பட்ட அதே மதிப்புகள், வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டவை- குறிப்பாக இயேசுவுடைய வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டவை.

இங்கும் அங்கும் ஒன்று அல்லது இரண்டு வசனங்களை எடுத்துக் கொள்ளாமல் வாழ்க்கையைக் குறித்து வேதாகமம் முழுமையாக சொல்கிறது என்பதை அறிந்துகொள்ள வேதாகமத்தை கவனமாக வாசிக்கவேண்டியது தேவைதான். இங்கும் அங்கும் நீங்கள் வசனங்களின் பகுதிகளை எடுத்துக் கொண்டு உங்களுக்கு தேவையான அர்த்தத்தை கோர்த்துக்கொள்வது நிச்சயம்தான். ஒட்டுமொத்த அர்த்தம் மிகவும் அவசியம். அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் யார், யாருக்காக எழுதப்பட்டது, அவர்களுடைய உள்ளூர் சூழ்நிலை மற்றும் கலாச்சாரம், வேதத்தின் மற்ற பகுதிகளோடு அந்த பகுதி எப்படி பொருந்தும் ஆகியவற்றையும் நாம் யோசிக்க வேண்டும். அப்போது நாம் இன்றைக்கு நமக்கு தேவையான பாடங்களை கற்றுக்கொள்ள சிறந்த நிலையில் இருப்போம்.

2000 ஆண்டுகளாக தலைமுறை தலைமுறையாக கொண்டுவரப்பட்ட காரியங்களே உறவுகளை குறித்து வேதம் சொல்வதாக பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட புரிந்துகொள்ளுதல்கள் ஆகும். கடவுள் ஆணையும் பெண்ணையும் தன்னுடைய உருவத்திலே படைத்தார் என்று தொடக்கத்தில் இருந்தே வேதம் போதித்து வருகின்றது (ஆதியாகமம் 1:24). ஒரு ஆண் ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ள வேண்டும், உடலுறவு ஒரு அற்புதமான பரிசாக இருக்க வேண்டும், இப்படிப்பட்ட வாழ்க்கையின் வழியிலே ஒருவருக்கொருவர் அர்ப்பணித்துக்கொண்ட ஆணையும் பெண்ணையும் இணைக்கின்ற ரகசியமாக இருக்கவேண்டும் என்பதே அவருடைய நோக்கம். திருமணத்திற்கு வெளியே இருக்கிற உடலுறவு தவறானது என்கிற ஏற்றுக்கொள்ளப்பட்ட போதனையை முற்றிலுமாக ஏற்றுக் கொள்வதில் இயேசு தெளிவாக இருந்தார். சொல்லப்போனால், திருமணத்திற்கு வெளியே உடலுறவு குறித்து கற்பனை செய்வதும் தவறு என்று அவர் கூறினார் (மத்தேயு 5:28).

செழிப்பான சரீர அன்பின் கலப்பினால் (கெலிடியோஸ் கோப்பினால்) வரக்கூடிய குழந்தைகள் தாத்தா, பாட்டி, அத்தை மாமா, அவர்களின் பிள்ளைகள் மற்றும் தேவைப்பட்டால் திருமணமாகாத மக்கள் ஆகியோர் அடங்கிய பாதுகாப்பான குடும்பம்பத்தில் வளருவார்கள்.

திருமணத்திற்கு வெளியே தீங்கை தவிர்ப்பதும், திருமணத்திற்குள் உண்மையாக இருப்பதும், ஒரு பிரிவினர் மட்டும் ஏற்றுக் கொண்ட பாரம்பரியம் அல்ல கத்தோலிக்கர்கள், கிழக்கு ஆர்த்தடாக்ஸ், ஆங்கிலிக்கன், மெதடிஸ்ட் மற்றும் பல பிரிவுகளை அடக்கிய அத்தனை கிறிஸ்தவ பிரிவுகளும் ஏற்றுக்கொண்ட போதனை. உண்மையில் நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்கள் ஒன்றுசேர்ந்துள்ள ஒரு சில காரியங்களில் இதுவும் ஒன்று.

திருமணத்திற்கு வெளியே தீங்கை தவிர்ப்பதும், திருமணத்திற்குள் உண்மையாக இருப்பதும் இஸ்லாம், யூதமதம், இந்துமதம் மற்றும் பல மதங்களின் போதனையும் ஆகும். இதனால் தான் பல்வேறுபட்ட விசுவாச அடிப்படையிலான குழுக்கள் எச்ஐவி நோய் தடுப்பில் ஒரே மாதிரியான அணுகுமுறையை கையாளுகிறார்கள், குறிப்பாக இளைஞர்களுக்கு போதிக்கும்போதும்.

இன்று சமுதாயத்தில் பல பிரச்சனைகள் இருக்கின்றன. இவற்றில் பல குடும்பங்கள் மற்றும் சமுதாயங்கள் சிதைந்துபோவதோடு தொடர்புபடுத்தக்கூடியவை.முரட்டுத்தனம், மது பிரச்சனைகள், போதை பிரச்சனைகள், இளம் வயது மனநிலை பிரச்சனைகள் மற்றும் பல சூழ்நிலைகள் ஆகியவை பாதிக்கப்பட்ட இளைஞர்களின் மகிழ்ச்சியற்ற குடும்பங்களுடன் தொடர்புபடுத்தக்கூடியவை.

எல்லா மதங்களும் திருமணத்தை சமுதாயத்தின் அடிப்படை அஸ்திபாரக்கல்லாக பார்க்கின்றன. வீட்டில் வன்முறையும், துணைவர்கள் ஒருவரை ஒருவர் ஏமாற்றிக்கொண்டு ஒருவருக்காக ஒருவர் அக்கறை செலுத்துவதை நிறுத்துவதும் நிகழும்போது திருமணம் உடைகிறது, குழந்தைகள் ஆழமான வடுக்களோடு, பாதுகாப்பு இல்லாமல், தங்களைப் பற்றி உறுதியற்றவர்களாக வளர்கிறார்கள்.

நல்ல நிலையான திருமணத்தை ஆதரிக்கும் எல்லாவற்றையும் ஊக்கப்படுத்துவதன் மூலமாக, வேதாகமம் சமுதாயம் கட்டப்படுகிற பாறையான திருமணத்தை நிராகரிக்கிற அனைத்திற்கு எதிராக பேசுகின்றது.

எல்லைகளை விரிவாக்குதல்

பல்வேறுபட்ட அதிகமான சூழ்நிலைகளில் மக்கள் பாலியல் ரீதியாக தூண்டப்படலாம் என்று வேதாகமம் போதிக்கிறது. இது வெளிப்படையானது. ஆண்கள் ஆண்களோடு உடலுறவு கொள்ளுதல், பெரியோர் குழந்தைகளுடைய உடலுறவுகொள்ளுதல், தன் தாயாரோடு உடலுறவு கொள்ளும் ஆண்கள், மிருகங்களோடு உடலுறவுகொள்ளும் மனிதர்கள், பெண்கள் மற்றும் ஆண்களை பாலியல் பலாத்காரம் செய்தல், குடிபோதையில் உடலுறவு கொள்ளுதல், பணத்திற்காகவும் உணவிற்காகவும் உடலுறவில் ஈடுபடுதல், மற்றும் பல காரியங்களை குறித்து வேதம் கூறுகின்றது. திருமணத்திற்கு வெளியே ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும்

இடையே நடக்கிற பாலியல் செயல்கள் அனைத்தையும் குறித்து வேதாகமம் பேசுகின்றது. ஆனால் கடவுள் நமக்காக வைத்திருக்கின்ற சிறந்தவற்றிற்கு வெளியே இருப்பதாகவே பேசப்படுகின்றது.

ஒரே பாலினத்தை சேர்ந்தவர்களின் நெருக்கமான, ஊக்கமான, அன்பான, அர்ப்பணிப்பான உறவுகளைக் குறித்தும் வேதம் கூறுகின்றது: ரூத் நவோமி, தாவீது யோனத்தான். எடுத்துக்காட்டாக தாவீதும் யோனத்தானும் அவர்கள் விருப்பம்போல தங்கள் வாழ்க்கையை அவர்கள் பகிர்ந்துகொள்ளலாம் ஆனால் அவர்கள் கடவுளுடைய கட்டளையை உடைக்காமல் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட முடியாது. மீண்டுமாக, பாலியல் நடத்தைகளுக்கான அடிப்படை சட்டங்கள் உலகின் பெரும்பாலான மதங்களிடையே பொதுவாகவே இருக்கின்றன.

எனினும், நம்முடைய தனிப்பட்ட கண்ணோட்டம் எதுவாக இருந்தாலும், எல்லா சூழ்நிலைகளிலும் நாம் எல்லோரிடத்திலும் ஆழமான அன்பு செலுத்தவேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது-அவர்களுடைய பாலியல் விருப்பங்கள், சோதனைகள், வாழ்க்கைமுறைகள், மற்றும் கிறிஸ்தவ போதனைகள் குறித்த கருத்துவேறுபாடுகள் (மத்தேயு 5:44; யோவான் 3:16)ஆகிய காரணங்கள் எதையும் பொருட்படுத்தக்கூடாது இதற்கு கடவுளுடைய உதவியும் கிருபையும் நமக்கு தேவை.

நண்பர்கள், உறவினர்கள், அறியாதோர் மற்றும் எதிரிகளையும் நேசிக்க அழைக்கப்பட்டு இருக்கிறோம்

இயேசுவின் போதனையில் மையமாக இருப்பது அன்பின் போதனையே, இருந்தாலும் சில கிறிஸ்தவர்கள் சில காரியங்கள் குறிப்பாக எச்ஐவி மற்றும் ஓரினச்சேர்க்கை உறவுகள் குறித்த பிரச்சனைகளில் எவ்வளவு பொறுத்துக்கொள்ளாதவர்களாக, கொடூரமானவர்களாக, உணர்வற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை பார்த்து அதிர்ச்சியடைகிறேன். இரண்டு முகத்தோடு, கடவுளுடைய பார்வையில் மாயமாலம் செய்து, இயேசுவின் போதனைகளையே மறுப்பது சுலபமான காரியம்.

எடுத்துக்காட்டாக, பாரம்பரிய போதனைகளை உடைய ஒரு திருச்சபை ஒரு மாதத்தில் பலமுறை குடித்துவிட்டு தன்னுடைய மனைவிகளை அடிக்கிற ஆண்களை வரவேற்கிறது. அல்லது ஒரு திருச்சபை திருமணம் ஆகாமல் உடலுறவில் ஈடுபடுகிற ஒரு ஆணையும் பெண்ணையும், அல்லது தன்னுடைய வருமானத்தை சூதாட்டத்தில் இழந்துவிட்டு குடும்பத்தை கவனிக்காத மனிதனை வரவேற்கிறது. ஆனால் அதே சபை உடலுறவில் ஈடுபடும் இரண்டு ஆண்கள் அல்லது இரண்டு பெண்களுக்கு எதிரியாக செயல்படுகின்றது.

நண்பரிடத்தில் அன்பாக இருப்பது மாத்திரம் போதாது என்று இயேசு கூறியிருக்கிறார். நம்முடைய அயலகத்தாரை நேசிப்பது மாத்திரம் போதாது. நம்முடைய கலாச்சாரம் மற்றும் நம்பிக்கையில் வேறுபாடு உடையவர்களிடம் மாத்திரம் அன்புசெய்தால் போதாது. நம்முடன் கடுமையான கருத்து வேறுபாடுகொண்டு இருக்கிறவர்களிடம் அன்பு செய்தால் மாத்திரம் போதாது. நம்முடைய எதிரிகளையும் நேசிப்பதில்தான் நம்முடைய

அன்புக்கான உண்மையான சோதனை இருக்கிறது என்று இயேசு கூறியிருக்கிறார்: நம்மை வெறுப்பவர்கள், நம்மை எதிர்ப்பவர்கள், நம்மை துன்பப்படுத்துகிறவர்கள், மனிதத்தன்மையோடு நேசிக்க முடியாது என்று நாம் நினைக்கிறவர்கள். அவர்களே நாம் அன்புசெலுத்தும்படி அழைக்கப் பட்டவர்கள். அப்படிப்பட்ட அன்பு கடவுளுடைய ஆவி நம்மிடத்தில் பணிசெய்கிறார் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது.

நாம் ஆழமான, உருக்கமான, அக்கறையுள்ள அன்பை செலுத்தினால் மாத்திரம் போதாது, மாறாக அத்தகைய மக்கள் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள நாம் கடவுளிடம் ஜெபிக்கவும் வேண்டும். "நான் உங்களுக்குச் சொல் லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக் கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" (மத்தேயு 5:44)[2]

அன்பும் அக்கறையும் செலுத்துவது - அது ஏற்றுக் கொள்வது என்றும் அர்த்தமாகுமா?

அன்புசெலுத்துவதையும் ஏற்றுக்கொள்வதையும் மக்கள் குழப்பிக் கொள்கிறார்கள். இயேசு எல்லா மக்களிடமும் அன்பு செலுத்தியதைப் போல நாமும் எல்லாரிடத்திலும் அன்புசெலுத்த அழைக்கப்பட்டு இருக்கிறோம். அவர் பூமியில் வாழ்ந்தபோது, வாழ்க்கை, நம்பிக்கை, நோக்கங்கள் மற்றும் பல காரியங்களில் இயேசு அதிகமான கருத்துவேறுபாடுகள் மக்களோடு கொண்டு இருந்தார், ஆனாலும் அவர் அவர்களை நேசித்தார். அதேபோல, மக்கள் யோசிக்கும் அனைத்தையும் எப்படியோ ஏற்றுக்கொள்வதற்காகவோ அல்லது செய்வதற்காகவோ நம்மை கட்டாயப்படுத்திக்கொள்ள நாம் அழைக்கப்படவில்லை.

சிலர் இப்படி கூறுவார்கள் : "என்னுடைய தீர்மானங்களை மற்றும் நான் தெரிந்துகொண்ட வாழ்க்கை அனைத்தையும் அங்கீகரிக்காமல் நீங்கள் எப்படி என்னை நேசிக்கவும் ஒரு நபராக ஏற்றுக்கொள்ளவும் முடியும்?" ஆனால் இது அன்பை குறித்து அவர்களுக்கு குறுகிய கண்ணோட்டம் இருக்கிறது என்பதை காட்டுகிறது. வேறு ஒரு அரசியல் கட்சிக்கு ஓட்டுப்போடுகிறவரை அல்லது வேறு மதத்தை பின்பற்றுகிறவரை, அல்லது வேறு வாழ்க்கைமுறை உடையவரை நேசிக்க முடியாது என்று அது அர்த்தமாகிவிடும்.

பெரியவர்களாக அவர்கள் செய்யக்கூடாது அல்லது புத்திசாலித்தனமது அல்ல என்று நான் நினைப்பதையும் என்று நான் நினைக்கும் காரியங்களை அவர்கள் செய்தாலும் நான் என்னுடைய பிள்ளைகளை நேசிக்கிறேன் (இது அபூர்வமாகவே நிகழ்கிறது என்பதில் மகிழ்ச்சி). அவர்கள் ஒரு தவறு செய்கிறார்கள் என்று நான் நினைத்தாலும் நான் அவர்களை தொடர்ந்து நேசித்துக்கொண்டே இருப்பேன். நான் பல வழிகளில் பரிபூரணமில்லாமல் இருந்தாலும் அவர்களும் என்னை நேசிப்பார்கள் என்று நம்புகிறேன்.

எல்லாவிதமான தனிப்பட்ட சவால்களையும் எதிர்கொள்கிற மக்

2.அமெரிக்கன் கிங் ஜேம்ஸ் வெர்ஷன்

களையும், அவர்களுடைய ஏக்கங்களிலும், சவால்களிலும், அழுத்தங்களிலும், சோதனைகளிலும், பதட்டங்களிலும், வலிகளிலும் எல்லாரிடமும் அன்பாக இருக்கவும், ஆதரிக்கவும் நம்மை கடவுள் அழைத்திருக்கிறார். நம்முடைய சொந்த கடுமை, எரிச்சல், குற்றாம் சாட்டும் மனப்பான்மை மற்றும் குறைகூறுவதில் பெருமை ஆகிய காரியங்களில் இருந்து மனம் திரும்பவும் நம்மை அழைத்து இருக்கிறார். நம்முடைய அக்கறை குறைச்சல் மற்றும் வித்தியாசமாக உணர்கிறவர்களை நிராகரித்தல் ஆகிய காரியங்களில் இருந்தும் மனம்திரும்பவும், கிறிஸ்தவர்களாக நாம் எச்ஐவி உடையவர்களை அடிக்கடி குற்றம்சாட்டுகிற வழியில் இருந்தும் மனம் திரும்ப நம்மை அழைக்கிறார்.

துறவியாக இருப்பது எப்போதுமே உயர்ந்த அழைப்பாக பார்க்கப்படுகின்றது

உடலுறவின் ஆதிக்கம் நிறைந்த காலத்தில் ஒரு மனிதன் (ஒரு சில கலாச்சாரங்களில் பெண்) வேறு ஒரு நபரோடு உடலுறவுகொள்வதன் மூலமாக தன்னுடைய பாலுணர்வை வெளிப்படுத்தாமல் இருப்பது இயற்கைக்கு மாறானதாகவும், தவறானதாகவும் நாங்கள் நினைக்கிறோம்.

துறவியாக இருப்பவர்களுக்கு கிறிஸ்தவ பாரம்பரியம் எப்போதுமே அதிகமான கனத்தை கொடுத்து இருக்கிறது. அப்போஸ்தலராகிய பவுல் திருமணம் செய்யவில்லை, இயேசு நமக்கு பிரதான எடுத்துக்காட்டாகவும் இருக்கிறார். துறவறம் திருச்சபையில் தலைவர்களுக்கு உயர்ந்த அழைப்பாக இருந்துவருகிறது, துறவற சமுதாயங்களிலும்- சாமியார்கள், பெண் துறவிகள், சமயத்தொண்டில் ஈடுபடும் துறவிகள், அதோடு கத்தோலிக்க போதகர்கள் மற்றும் கிழக்கத்திய பாரம்பரிய பேராயர்கள் இடையேயும் அப்படியே தொடர்ந்து இருந்து வருகிறது. மற்ற மதங்களிலும் துறவறம் உயர்ந்த அழைப்பாக இருந்துவருகின்றது-எடுத்துக்காட்டாக, புத்த துறவிகள்.

திருச்சபையின் பல பகுதிகளில் கிறிஸ்துவுக்கு முற்றிலும் அர்ப்பணித்தலும் துறவறம் மேற்கொள்ளுதலும் இசைந்து செல்கின்றன. துறவற பொருத்தனைகளை சோதனைகள் உடைக்கக்கூடும் என்றாலும், உண்மை என்னவெனில் கிறிஸ்தவ தலைமைத்துவ பாரம்பரியத்தில் உடலுறவுக்கு விலகி இருப்பது மையப்பகுதியாக இருந்து வருகின்றது.

ஆதிதிருச்சபையின் காலத்திலும் பாலியல் நிறைவு மற்றும் ஒழுக்கக் கேட்டினால் நிறைந்திருந்த ஒரு சமுதாயம் இருந்தது, இயேசு மற்றும் பவுல் இருவருமே வைராக்கியம், ஒழுக்கம், கட்டுப்பாடு, துறவறம் மற்றும் கற்பு ஆகியற்றை எல்லோருக்கும் கடவுள் கொண்டிருக்கும் நோக்கத்தில் ஒரு பகுதியாக தெளிவாக ஆதரிக்கிறார்கள். அடுத்த நூற்றாண்டில் மக்கள் முதல் மற்றும் இரண்டாம் தலைமுறைகளில் மாத்திரைகளோடு வளர்ந்தவர்களையும், உடலுறவில் கிறங்கிப்போய் இருக்கிறவர்களையும், உடலுறவினால் பரவக்கூடிய நோய்களின் ஆதிக்கத்தையும் பார்த்து ஆச்சரியப் படக்கூடும். வருத்தப்படும்விதமாக பல கோடி குழந்தைகளின் குடும்பங்கள் அழிவதையும் பதிவுசெய்வார்கள்.

நம்முடைய ஊழியமும் அழைப்பும்

எச்ஐவி பராமரிப்பு மற்றும் நோய்த் தடுப்பில் திருச்சபைகள் முன்னிற்பதை பல நாடுகளில் நீங்கள் காணலாம். ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் கடந்த 100 ஆண்டுகளாக பல ஆயிரக்கணக்கான மருத்துவமனைகள், சிறு மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை உருவாக்கிய அதே கரிசனை, தொழில்நுட்ப சுகாதாரம் மற்றும் கல்வி பாரம்பரியத்தோடும் திருச்சபை இதை செய்து வருகின்றது.

பல நாடுகளுக்கு பல ஆண்டுகளாக ஆரோக்கிய தேவைகளை பூர்த்திசெய்வதற்கான முதுகெலும்பாக திருச்சபை சார்ந்த நிறுவனங்கள் இருந்து வருகின்றன. அவை முக்கியமான, நம்பிக்கையான, நம்பகமான சக்தியாக இருந்து வருகின்றன. பல இடங்களில் இருந்துவரும் திருச்சபை நிகழ்ச்சிகள் மற்றும் கிறிஸ்தவ சுகாதார நிகழ்ச்சிகள் எச்ஐவியை சேர்த்துக்கொள்ள விரிவாக்கப்படுள்ளன அல்லது மாற்றம்பெற்றுள்ளன.

எச்ஐவி உடையவர்களுக்கு அன்பான ஆதரவு கொடுப்பது மற்றும் உயிர்களை காப்பதில் மாத்திரமல்ல, ஒடுக்குதலுக்கு சவால் விடுவதிலும், அநியாயத்துக்கும், மக்களை பாதிப்பதற்கும், குற்றப்படுத்துவதற்கும், நிராகரிப்புக்கும் எதிராக போராடுவதிலும் திருச்சபைகள் ஈடுபட்டு வருகின்றன.

எச்ஐவி உடைய அனைவரும் சிகிச்சைகளை சமமாக அணுக போராடுகிறார்கள், எச்ஐவி உடையவர்களும் அவர்களுடைய குடும்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட தங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்கிறார்கள். திருச்சபை சமுதாயத்திற்குள் எச்ஐவி உடையவர்களை வரவேற்று, அவர்களுக்கு நட்பையும் அன்பையும் கொடுத்து ஆதரித்து, அதே சமயத்தில் பல போதக மற்றும் ஆவிக்குரிய சிக்கலான பிரச்சனைகள் பலநேரங்களில் இருப்பதையும் அங்கீகரிக்கிறார்கள்.

இந்த காரியங்களே நம்முடைய ஊழியம், கடவுள் நமக்கு கொடுத்த அழைப்பு, நாம் வேறு எதுவும் செய்ய முடியாது.

எச்ஐவியைத் தடுப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்களை ஆதரிக்கவும், குற்றப்படுத்துதலுக்கு எதிராக போராடவும், அக்கறை காட்டவும் பல வழிகளை நாம் பார்த்துவிட்டோம். நாம் வாழ்வு மற்றும் மரணம் குறித்த பிரச்சனைகளை -எச்ஐவியோடு வாழ்கின்றவர்கள் மற்றும் அவர்களை ஆதரிக்கிறவர்களுடைய வாழ்க்கைகளை அதிக கடினமானதாக்குகின்ற வியாதியுடையவர்கள் மற்றும் இறந்து கொண்டிருக்கிறவர்களிடத்தில் நம்முடைய குறிப்பிடத்தக்க நோக்கங்களை நாம் பார்க்க வேண்டும்.

அதிகாரம் 8

வாழ்வா சாவா பிரச்சனைகள்

புற்றுநோயைவிடவும் கொடூரமானது

உங்களுடைய 23 ஆம் வயதில் உங்களுக்கு குணப்படுத்த முடியாத புற்றுநோய் இருக்கிறது என்று கூறப்பட்டால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். உங்களுடைய உலகமே ஒரு கணப்பொழுதில் சிதறிப்போய்விட்டது; உங்களுடைய எதிர்காலத்தை குறித்த உங்கள் கனவுகளும் நம்பிக்கைகளும் உடைந்துவிடும். அது உண்மை என்பதை ஏற்றுக்கொள்வது கடினமாக இருக்கும்: பயிற்சி, வேலை, உங்களுக்கென ஒரு சொந்த வீடு, திருமணம் செய்து பிள்ளைகளை பெற்றுக்கொண்டு, முதிர்வயதுவரை வாழவேண்டும் என்கிற உங்களுடைய திட்டம் அனைத்தும் நொறுங்கிப்போய்விடும்.

ஆனால் எச்ஐவி தொடர்பான ஒரு நோய்பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டால் அது இன்னும் மோசமானதாக காணப்படலாம். ஒருமுறை நீங்கள் இரத்தம் கொடுத்துவிட்டு வந்த சில நாட்களில் மீண்டும் வருமாறு உங்களுக்கு ஒரு கடிதம் வந்தால், நீங்கள் திரும்பி செல்லும்போது நீங்கள் பரிசோதனையில் எச்ஐவி பாசிடிவ் என்று கூறினால் எப்படி இருக்கும் என்று பள்ளிகளில் சில நேரம் கேட்பேன். எச்ஐவியோடு வாழவேண்டும் என்கிற எண்ணத்தைவிட நான் தற்கொலை செய்துகொள்வேன் என்று பலர் என்னிடம் கூறினார்கள். இதனால் தான் ஒருவரிடத்தில் இவ்வாறு சொல்லப்பட்ட பிறகு அதிகமான கவனிப்பும் ஆதரவும் தேவைப்படுகின்றது.

ஒரு நாள் காலை என்னுடைய மருத்துவ நண்பர் வீட்டின் பின்னே ஒருவர் தன்னுடைய காரை நிறுத்திவிட்டு அதின் புகைப்போக்கி மூலமாக தன்னை மூச்சுத்திணரவைத்துக்கொண்டதை அறிந்து அதிர்ச்சியடைந்தார். சில மணிநேரங்களுக்கு முன்பாகதான் அவர் மருத்துவமனையில் இருந்து ஆலோசனை பெற்று விடைபெற்றிருந்தார். எச்ஐவியோடு வாழ்கின்ற வாழ்க்கையை அவரால் எதிர்கொள்ள முடியவில்லை.

நிராகரிப்பையும், எதிர்ப்பையும், குற்றம் சாட்டுதலையும், பயத்தையும் சந்திக்காத எச்ஐவி உடையவர்கள் உலகின் எந்த பகுதியிலும் இல்லை.

திருச்சபை தலைவர்கள் குறிப்பாக ஆப்பிரிக்காவை சார்ந்தவர்கள் எச்ஐவியினால் வியாதிப்படும் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது (பக்கம் 81). எச்ஐவி உடைய ஒரு சபைத் தலைவரை சந்திக்கும் பலர் கேட்கவிரும்பும் முதல் கேள்வி அவர்கள் எப்படி அதை

பெற்றுக்கொண்டார்கள் என்பதுதான். அவர்கள் காரணத்தை கண்டுகொண்ட உடன் அந்த நபரை குறித்த கருத்துக்களை மாற்றிக் கொள்கிறார்கள்.

கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு முன்பே பல சபை தலைவர்கள் எச்ஐவியால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். மற்றவர்கள் மருத்துவ சிகிச்சையின் போது அல்லது எச்ஐவி உடைய ஒரு துணைவரோடு பலநேரங்களில் வாழ்க்கை துணைவரோடு உடலுறவுகொள்ளும் போது நோய்பாதிப்பை பெற்றிருக்கிறார்கள்.

உயிர்வாழ போராட்டம்

அவர்கள் வியாதிப்பட்டு இருக்கிறார்கள் என்று கண்டு கொள்ளப்பட்டவுடன் பலநேரங்களில் அவர்களுடைய முதலாளிகள் அவர்களை பணிநீக்கம் செய்கிறார்கள். உங்கள் குடும்பத்திற்கு உணவூட்டும் அளவுக்கு உங்களால் சம்பாதிக்க முடியவில்லை என்றால் உலகின் பல பகுதிகளில் வாழ்க்கை கடினமானதாக இருக்கும்.

தன்னுடைய தகப்பனின் மறைவிற்கு பிறகு தன்னுடைய இறக்கும் தருவாயில் இருக்கும் தாயாரையும், இரண்டு அல்லது மூன்று தம்பி தங்கைகளையும் ஒரு சிறு குழந்தை பார்த்துக்கொள்ள வேண்டியதாக இருக்கும். மருந்துகள் அடங்கிய பெட்டியையும், புதிய போர்வையையும் எடுத்துக்கொண்டு சமுதாய பராமரிப்பு குழு சென்று வருவது போதுமானதாக இருக்காது. எய்ட்ஸ் விதவைகள், அனாதைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளை பராமரிப்பது ஒரு பெரிய சவாலாக மாறிவிட்டது: அவர்களுடைய வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பி, நீண்ட நாட்கள் அவர்கள் உயிர்வாழ வழியை கண்டுபிடிப்பது கடினம். மைக்ரோ:.பைனான்ஸ் (சிறிய கடன்) - உள்ளூர் சபையின் ஆதரவோடும், பயிற்சியோடும், ஊக்கத்தோடும் ஒரு வருமானம் ஈட்டும் தொழிலை தொடங்குவதற்கு உதவியாக இருக்கும். குழந்தை தலைவர்கள் இருக்கும் குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஒரு ஒழுகும் கூரை வீட்டை எப்படி சரிசெய்வது அல்லது ஆட்டை எப்படி பராமரிப்பது போன்ற நுட்பங்கள் கற்றுத்தரவேண்டியது அவசியமாக இருக்கிறது. இவை அனைத்தும் நடைமுறை கிறிஸ்தவ அன்பின் முக்கியமான அனுபவங்கள் ஆகும்.

சிறந்த ஆதரவு பொதுவாக சமுதாயத்திலேயே கிடைக்கும்: அக்கம்பக்கத்தினர், நண்பர்கள், மற்ற உறவினர்கள், சபை அங்கத்தினர்கள். குழந்தைகளுக்கான சமைத்துக்கொடுக்கிற ஒரு அன்பான அண்டைவீட்டார், அல்லது தினந்தோறும் உணவு கொண்டுவரும் ஒரு மாமா; அவர்களுடைய சொந்த மண்ணிலேயே, சொந்த கிராமத்திலேயே அவர்களுடைய மக்கள் நடுவிலேயே அவர்களை வைத்திருக்க உதவுவார்கள்.

இப்போது அதிகமான மக்கள் வாழ்கின்ற பட்டணங்களிலே சமுதாய ஆதரவு உடைந்துபோகக்கூடும். சமுதாய ஆதரவு சிறந்ததாக இருக்கும் ஆனால் எப்போதுமே சாத்தியமானதாக இருக்காது. ஒவ்வொரு குழந்தையின் சூழ்நிலையும் முற்றிலும் தனிப்பட்டதாக இருக்கிறது. ஒவ்வொரு குடும்ப

அமைப்பும் சமுதாயமும் வித்தியாசமானது. பெற்றோரை இழந்த குழந்தைகளை பராமரிக்க ஒரு சரியான அல்லது தவறான வழியும் கிடையாது.

எச்ஐவியினால் பொருளாதார கஷ்டங்களை சந்திக்கும் மக்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. வாடகைக்கு இருக்கும் ஒருவருக்கு எச்ஐவி இருக்கிறது என்று அறிந்தால் ஒரு வீட்டு முதலாளி அவரை எதிர்க்கலாம். மற்றவர்கள் இதை கேள்விப்பட்டால் அவர்கள் வீட்டை காலிசெய்துவிடுவார்கள் என்று பயப்படலாம், அல்லது நாம் பார்த்த மற்றவர்களைப் போல அவரும் கொடுமையான உணர்வுள்ளவராக இருக்கலாம். இரண்டிலுமே, மருத்துவமனையில் இருந்து வெளியே வரும் ஒருவருடைய உடமைகள் வெளியே எறியப்பட்டு, பூட்டுகள் மாற்றப்பட்டு இருப்பதை காண்பது சகஜம்.

யாரை நம்பலாம்?

எச்ஐவி இருக்கிறது என்று சற்றுமுன் அறிந்துகொண்ட ஒருவர் சமாளிக்கவேண்டிய கடினமான காரியம் அவர்களை சுற்றி இருக்கும் மக்கள் தான். அவர்கள் சந்திக்கும் அடுத்த நபர் அவர்களுக்காக பரிதாபப் படுவார்களா (அவர்கள் பரிதாபப்படுவதை வெறுப்பார்கள்) அல்லது அவர்கள் இறந்துபோன பின்பு இது அவர்களுடைய தவறு என்று பேச விரும்புவார்களா? யார் அவர்களுடைய நண்பர், யார் அவர்களுடைய எதிரி? அவர்களுடைய நோயைப் பற்றி அவர்களுடைய நண்பர்களிடம் கூறினால், அது ரகசியமாக வைத்துக்கொள்ளப்படுமா, அல்லது அவர்கள் வேறு ஒருவரிடம் கூறி அது சமுதாயம் முழுவதும் பரவுவதற்கு எத்தனை நாட்கள் ஆகும்? எய்ட்ஸினால் பல உறவினர்களையும் நண்பர்களையும் இழந்ததினால் வரும் ஒட்டுமொத்த அதிர்ச்சி, கவலை மற்றும் மனச்சோர்வு ஆகியவை மக்கள் சக்தியையும் உள்ளான ஆதாரங்களையும் இழக்கச் செய்யும். தற்கொலை ஒரு சிறந்த முடிவாக காணப்படுவதில் ஆச்சரியமே இல்லை.

ஆனால் இன்னும் ஒரு வழி இருக்கிறது. எச்ஐவி உடைய மக்கள் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்புசெலுத்தப்பட்டு, பராமரிக்கப்படுகிற மிகவும் கவனிப்பும் ஆதரவும் நிறைந்த இடமாக திருச்சபைகள் இருக்கலாம். எச்ஐவி உடைய மக்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து ஊக்கப்படுத்தி, செய்திகளை பரிமாறிக்கொண்டு ஜெபிக்கிற சிறப்பு ஆதரவு குழுக்கள் பல சபைகளில் இருக்கின்றன. எனினும், சபை தலைவர்களுக்கும் மருத்துவர்களுக்கும் மிகவும் வித்தியாசமான பாத்திரங்கள் இருக்கின்றன என்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும், சபைத் தலைவர்கள் சிறப்பான போதக மற்றும் உணர்வுபூர்வமான ஆதரவு கொடுக்கும்போது, மருத்துவ உதவியையும் நாடவேண்டும்.

உலகம் முழுவதிலும் மனநிலைகள் நேர்மறையாக மாறிவருகின்றன, எச்ஐவி உடையவர்களும் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். அறியாமையும் பயமும் வேகமாக மறைந்துவருகின்றது-மக்கள் ஆபத்தை எடுத்துக்கொள்வது மாறாத இடங்களிலும். பரவலான எச்ஐவி பரிசோதனைகள் எச்ஐவி வாழ்க்கையின் சாதாரண பகுதியாக மாற்றியுள்ளது, கோடிக்

கணக்கானோர் எச்ஐவி பாசிடிவ் எப்பதை கண்டுபிடித்து இருக்கிறார்கள், இன்னும் கோடிக்கணக்கானோர் தாங்கள் பாதிக்கப்படவில்லை என்பதை அறிந்து(அவர்களுக்கும் நோய்தாக்கம் ஏற்பட்டிருக்ககூடும் என்று உணர்ந்திருந்தாலும்) நிம்மதி அடைந்து இருக்கிறார்கள்.

எச்ஐவி உடைய கோடிக்கணக்கான மக்களின் பார்க்கப்படும் விதத்தை புதிய சிகிச்சைகள் புரட்சிகரமாக மாற்றியுள்ளன. 10 ஆண்டுகளுக்கு முன்பு எச்ஐவி பாசிடிவாக பரிசோதிக்கப்பட்ட பின்பு ஒருவர் சராசரியாக 5 ஆண்டுகள் மட்டுமே வாழ்வார். ஆனால் இன்று, ஆரம்ப பரி சோதனைகளினாலும், மேன்மையான சிகிச்சையினாலும், பல மக்கள் இப் போது முதலில் தங்களுடைய பாசிடிவ் நிலைமையை அறிந்துகொண்டதில் இருந்து 20 அல்லது அதற்கும் மேற்பட்ட ஆண்டுகள் அதிகமாக ஆரோக் கியமான வாழ்வை வாழ்கிறார்கள்.

எனவே எச்ஐவி என்பது மரணத்திற்கான எச்சரிக்கையில் இருந்து சாதாரணமான செயல்பாடுள்ள வாழ்க்கை வாழும்படியாக சமாளித் துக்கொள்ளக்கூடிய நீண்டகால நோயாக மாறியுள்ளது.

வைரஸ் எதிர்ப்பு சிகிச்சைகளின் மூலமாக எச்ஐவி உடைய தாயார்களின் 100ல் 99 குழந்தைகள் முற்றிலும் வைரஸ் இல்லாமல் வளர்ந்து, முழுவதும் ஆரோக்கியமான வாழக்கூடிய நம்பிக்கையை பெற்று இருக்கிறார்கள்.

வாழ்க்கைக்கு பிறகு வாழ்க்கை

புதிய சிகிச்சைகள் வாழ்க்கையை நீண்டகாலம் நீட்டிக்க முடிந் தபோதிலும், எச்ஐவி உடைய மக்கள் வேறு எந்த சூழ்நிலையும் முதலாவது வளரவில்லை என்றால், எய்ட்ஸினால் சீக்கிரத்தில் வியாதிப்படுகிறார்கள்.

மோசமான உடல்நிலையில் இருக்கிற மக்களை பார்த்துக் கொள் ளப்போகிறோம் என்றால், மரணம் குறித்து நாம் என்ன நினைக்கிறோம் என்பதில் தெளிவாக இருக்கவேண்டும். நம்மில் பலர் மரணத்தை குறித்து பேச விரும்பமாட்டோம். மரணம் என்பது இல்லை என்று நாம் நிராகரிக்கிறோம். சில நாடுகளில் அடக்க ஆராதனைகளில் இருந்து தூரத்தில் வைக்கப்பட்டு இருக்கிறார்கள், ஒருவேளை பெரியோர் அவர்கள் முன்பாக அழுவதற்கு வெட்கப்படுவதினால் இருக்கலாம்.

மரணத்தை குறித்த பயம், அறியப்படாததை குறித்த பயம் இதுவே எச்ஐவி அச்சுறுத்தலாக பார்க்கப்படுவதற்கான காரணம். மரித்துக்கொண்டு இருக்கிற மக்களோடு நான் எப்படி இவ்வளவு நேரம் செலவுசெய்ய முடிகிறது என்று மக்கள் என்னிடம் கேட்கிறார்கள்- முன்பு இது புற்றுநோய்க்காக, இப்போது இது எச்ஐவிக்காக இருக்கிறது. அது ஏனென்றால் நான் எங்கு செல்கிறேன் என்பது எனக்கு தெரியும்.

நான் ஒரு மருத்துவராக தகுதிபெற்றபோது, நான் சந்தித்த முதல் நோயாளிகளில் ஒருவர் புற்றுநோயினால் மரித்துக்கொண்டு இருக்கிற ஒரு மூதாட்டி. நான் அவருடைய மருத்துவமனை படுக்கையில் அமர்ந்து இருந்தபோது ஒருநாள் அவர் என்னுடைய கரத்தை பிடித்துக்கொண்டு "நான் இறந்த பிறகு நீ என்னை ஞாபகம் வைத்துக்கொள்வாய், இல்லையா?" என்றார் என்று நினைவிருக்கிறது. நான் தலையசைத்தேன் அப்போது அவர்

தொடர்ந்து "நீ எங்கு செல்கிறாய் என்று உனக்கு தெரியும், இல்லையா? நீ விசுவாசிக்கிறாயா?" என்றார்.

அவரிடம் விசுவாசம் குறித்து நான் எதுவுமே பேசியதில்லை. நான் எந்த ஒரு பெயர் பட்டியல், அடையாளம் அல்லது வேதாகமத்தையும் சுமப்பதில்லை, ஆனால் அவர் எதையோ கண்டுபிடித்துவிட்டார். அவருடைய மரணத்திலே நான் சமாதானமாக இருக்கிறேன் என்பதை அறிந்துகொண்டார். நான் பயப்படவில்லை, அவரை குணப்படுத்துவதற்கான நம்பிக்கை இல்லாமல் போனதால் அவரை கைவிடப்போவதில்லை என்பதை அவர் பார்த்தார்.

சரியாக நிர்வாகித்தால், பலநேரங்களில் மரணம் சமாதானமான மரியாதைக்குரிய ஒன்றாகவே இருக்கிறது. பல நேரங்களில் அறையில் இருக்கும் உறவினர் அந்த நபர் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்றே தெரியாமல் இருப்பார்; அவர் உறங்கிக்கொண்டு இருக்கிறதைப் போலதான் தெரிவார்.

மரணம் ஒரு மர்மம்

ஒருவர் மரணம் அடையும்போது அவர் அருகே அமர்ந்திருக்கும் பாக்கியத்தை நீங்கள் பெற்று இருந்தால் நீங்கள் ஒரு மர்மத்தை அனுபவித்து இருக்கிறீர்கள். இடத்தினாலும் காலத்தினாலும் கட்டப்பட்ட ஒரு பெண் இருக்கிறார். அவருடைய கரத்தை பிடித்துக்கொண்டு நீங்கள் அமர்ந்து இருக்கிறீர்கள். அவர் அமைதியாக சுவாசித்துக் கொண்டு இருந்தார். பலசமயங்களில் அவர் உறங்கிக்கொண்டு இருந்தார், ஆனால் சிலசமயங்களில் அவர் கண்களை திறந்து ஒரு வார்த்தை கூறுவார். அவருக்கு எந்த வலியும் இல்லை, அவருக்கு பயமுமில்லை, என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை சரியாக அறிந்து இருந்தார். அவர் பயப்படவில்லை, சமாதானமாக இருந்தார்.

நீங்கள் அமர்ந்து இருக்கும்போது அவர் மூச்சுவிட சிரமப்படுகிறார் என்பதையும் தூக்கக் கலக்கத்தில் இருக்கிறார் என்பதையும் கவனிக்கிறீர்கள். பல மணிநேரங்களாக தோன்றிய போதிலும் அது சில நிமிடங்களே, மீண்டுமாக மூச்சு மாற்றமடைகிறது. செவிலியர் வந்து அவருடைய நாடித்துடிப்பு பெலவீனமாகவும் வேகமாகவும் இருக்கிறது என்கிறார். அவருடைய புருவத்தின்மேல் சிறிய வியர்வை துளிகள் இருக்கின்றன.

மெதுவாக அவருடைய மூச்சு மங்கிப்போய், மறைந்து போகிறது. அவர் மரித்துப்போனாரா என்று நீங்கள் யோசிக்கிறீர்கள். இந்த மர்மத்தை அல்லது ஒரு குழந்தையின் பிறப்பை பார்த்துவிட்டு வாழ்க்கையில் ஆன்மீகப் பகுதி என்று ஒன்று இல்லை என்று நடந்து செல்கிறவர் ஒரு தைரியசாலியாகத் தான் இருக்க வேண்டும்.

மரணத்திற்கு நான்கு உணர்வுகள்

நீங்கள் மரித்துக்கொண்டு இருக்கிறீர்கள் என்கிறபோது, நான்கு காரியங்கள் நிகழத் தொடங்குகின்றன. முதலாவது உங்களுடைய முக்கியத்துவங்கள் மாறுகின்றன. கிறிஸ்துமஸ் வருவதற்குள் நீங்கள்

மரித்துவிடுவீர்கள் என்று மருத்துவர்கள் கூறிய பிறகு கல்லூரி படிப்பை தொடர்வதில் என்ன பயன் இருக்கிறது?

இரண்டாவது உங்கள் உறவுகள் மாற்றமடைகின்றன. உங்கள் நெருங்கிய நண்பரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை என்றும் உங்களை ஒருமுறைகூட மருத்துவமனையில் சந்திக்கவில்லை என்றும், வேறு யாரோ உங்களுக்கு உண்மையான ஆதரவாக இருந்திருக்கிறார் அதில் அவருக்கு பிரச்சனை எதுவும் இல்லை என்றும் அறிந்துகொள் கிறீர்கள். சில சமயங்களில் வாழ்க்கையை அச்சுறுத்தும் பிரச்சனையில்தான் மக்கள் அவைகள் உண்மையில் யார் என்று அறிந்துகொள்ளவும், அவர்களுக்கு யார் முக்கியம் என்பதையும் அறிந்துகொள்ளவும் உதவுகின் றது.

மூன்றாவது, அதிகமான வருத்தப்படுவதற்கான காலமாகவும் இருக் கலாம். மக்கள் தங்கள் வாழ்க்கையை பின்னோக்கி பார்த்து, சில காரியங் களை சரியாகச் செய்திருந்தால் அவர்களுடைய வாழ்க்கை இவ்வளவு குறுகியதாக இருந்திருக்காது என்று யோசிப்பார்கள்.

இறுதியாக, மக்கள் முன்னோக்கி பார்ப்பதை கண்டு கொள்வார்கள். நான் பேசுகிற பல மக்கள் மரணத்தை குறித்தோ அல்லது மரணத்தின் செயல் முறை குறித்தோ அதிகம் பயப்படாதவர்கள்: தாங்கள் அமைதியை இழக்கவும், கட்டுப்பாட்டை இழக்கவும், வலியில் இருப்பதற்கும், மற்றவர்களுக்கு சுமையாக இருப்பதற்கும், முழுவதுமாக மற்றவர்களை சார்ந்து இருக்கவும் பயப்படுகிறார்கள். மூச்சுத்திணறி மரணமடைதல், உயிரோடே புதைக்கப்படுதல் (பொதுவான கவலை), யோசிப்பதற்கான நகர்வதற்கான அல்லது நினைவுபடுத்துவதற்கான திறனை இழத்தல் போன்ற பயங்கள். தங்களுடைய சிறு பிள்ளைகளை யார் பார்த்துக்கொள்வார்கள், அன்பு செலுத்துவார்கள், பாதுகாப்பார்கள் என்கிற பயம். தங்களுடைய வயதான பெலவீனமான பெற்றோர் அல்லது கணவன் அல்லது மனைவியை குறித்து அவர்கள் கவலைப்படலாம்.

மரணப்படுக்கை மனமாற்றம்

தாங்கள் மரித்துக்கொண்டு இருக்கிறோம் என்று அறிந்த மக்கள் எல்லா வகையான ஆவிக்குரிய அனுபவங்களுக்கும் மிகவும் உணர்வுள் ளவர்களாக, கடவுளை நெருக்கமாக அறிந்துகொள்ளும் உணர்வில் வளர்வார்கள். அவர்களுடைய இறுதிநாட்களில் அடுத்த வாழ்க்கை குறித்த தெளிவான கனவுகளை பெறலாம், தேவதூதர்கள் அல்லது மற்ற காரியங்கள் பற்றிய தரிசனங்களை உங்களிடத்தில் கூறலாம்.

மரணப்படுக்கை மனமாற்றங்கள் மிகவும் சகஜமானவை உண் மையானவை. சிலுவையில் இருந்த குற்றவாளி மரித்துக் கொண்டு இருக் கும்போது கிறிஸ்துவிடம் திரும்பினார். உங்களுக்கு கடவுள்மீது விசுவாசம் இருக்கிறது என்று அறிந்துகொண்டால் தங்களுக்காக ஜெபித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்வார்கள். கடவுள் இருக்கிறாரா என்றோ அவர் யார் என்றோ குழம்பி இருந்தாலும் உங்களுடைய ஜெபம் வேலை செய்யும் என்று அவர்கள் விசுவாசிக்கிறார்கள். கைவைப்பதும் ஜெபிப்பதும் வியாதி

யுற்றோருக்கு மிகவும் நெகிழ்ச்சியானதாகவும் ஆறுதல் அளிப்பதாகவும் இருக்கும்.

உள்ளான சமாதானத்தை கண்டுபிடித்தல்

சிலநேரம் மக்கள் தாங்கள் கடவுளால் மன்னிக்கப்பட்டதையும், தங்களையே தாங்கள் மன்னித்துக்கொள்ளும் உணர்வை தங்களுடைய இருதயத்திலும் பெற்றுக்கொள்ள வேண்டும். தங்களுடைய நெருக்கமான உறவினர்களுக்கு சில இறுதி வார்த்தைகளும், ஒப்படைக்க வேண்டிய கடமைகளும், கொடுக்க வேண்டிய அறிவுரைகளும் இருக்கலாம். அவர்களுடைய 'நிறைவுபெறாத வேலைகள்' அனைத்தையும் முடித்தபிறகுதான் அவர்கள் முழுவதும் நிம்மதியாக, விட்டுவிட்டு, சமாதானமாக மரணத்தை சந்திக்க தயாராகலாம்.

இதனால்தான் அந்த நபர் எதை விரும்புகிறார் என்பதில் உணர்வுள்ளவராக இருப்பதற்கு இது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. உள்ளத்தின் ஆழத்தில் அவர்கள் மறைந்துகொண்டு இருக்கிறார்கள் என்று தங்களுக்கே தெரியும்போது, அவர்களை உற்சாகப்படுத்தவும், அவர்கள் நலமடைவதைப்போல நடிக்கவும் வேண்டாம். தாங்கள் நேசிக்கிறவர்கள் எவ்வளவு சுகவீனமாக இருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறியவில்லை என்று உறவினர்கள் நினைப்பதால், அப்படிப்பட்ட உரையாடல்களை தவிர்க்கிறார்கள் ('தயவுசெய்து அவரிடம் சொல்லாதீர்கள், டாக்டர்)'. எனினும் அவர்கள் அறையை விட்டுச் சென்றதும் அந்த நபர் மருத்துவரிடம்: 'தயவுசெய்து என்னுடைய மனைவியிடம் நான் மரணமடையப்போகிறேன் என்று சொல்லவேண்டாம்- அவள் வருத்தப்படுவாள்' என்பார்கள். மரணமடையும் மக்கள் திறந்த மனதோடும் நேர்மையாகவும் பேசவேண்டிய தேவை இருக்கிறது. உங்களுக்கு வாரங்களோ, நாட்களோ அல்லது மணிநேரங்களோ மாத்திரமே இருக்கிறது என்று அறிந்தவுடன் ஒவ்வொரு கணப்பொழுதும் முக்கியத்துவம் வாய்ந்தது. மரணம் மிகவும் தனிமையான அனுபவமாக இருக்கலாம்.

நெருக்கமான உறவினர்களோடு, அவர் சௌகரியமாகவும் சமாதானமாகவும் இருக்கிற அந்த நபருடைய சொந்த வீட்டில், அடுத்த வாழ்க்கைக்கு செல்ல தயாராக இருக்கும்போது மரணம் ஒரு அழகான அனுபவமாகவும் இருக்கலாம். ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு விநாடியும் புதிய அர்த்தத்தை கொண்டுவரலாம், அப்படிபட்ட விநாடிகள் பல ஆண்டுகளுக்கு அந்த நபரை நேசிக்கிறவர்களால் பொக்கிஷமாக பார்த்துக்கொள்ளப்படும்.

என்னுடைய தந்தை புற்றுநோயினால் இறந்தபோது நாங்கள் அவரை வீட்டிலே பராமரித்தோம். ஆறுவாரங்களில் ஒவ்வொரு நாளும் நெருங்கிய நண்பர்கள் வீட்டிற்கு வந்து மதிய நேரத்தில் தேனீர் அருந்தி அவருடைய படுக்கையை சுற்றி கூடுவார்கள். அந்த அறையில் அதிகமான சிரிப்பும் கண்ணீரும் இருக்கும். நல்ல நினைவுகளை கொண்டாடுவதற்கான, கவலைகளையும், முக்கியமான காரியங்களை, அன்பை வெளிப்படுத்துவதற்கான, பிரியாவிடைகொடுப்பதற்கான காலம் அது. ஒவ்வொருவரும்

புறப்பட தயாராகும்போது, இறுதியாக கட்டியணைத்துச் செல்லும்போது இதுவே அவர்கள் உலகில் பார்த்துக்கொள்ளப்போகிற கடைசி முறையாக இருக்கலாம் என்கிற எண்ணம் இருக்கும்.

பலசமயங்களில் வார்த்தைகள் தேவைப்படாது; ஒரு நபருடைய கடைசி பிரயாணத்தில் அவர்களோடு இருந்தாலே போதும்.

வாழ்க்கைக்கு மேல் வாழ்க்கை

ஒரு கிறிஸ்தவனாக இந்த வாழ்க்கைக்குப் பிறகு வாழ்க்கை இருக்கிறது, மரணம் என்பது இடத்தினாலும் நேரத்தினாலும் கட்டப்பட்ட இந்த இயல் உலகத்தில் இருந்து வேறு ஒரு பரிமாணத்தை உடைய உலகத்திற்கு செல்லும் கதவு மாத்திரமே என்று நம்புகிறேன். இவை அனைத்தும் முடிவடைந்த பிறகு, நம்முடைய வாழ்க்கை அனைத்திலும் செய்த எல்லா காரியங்களையும் பற்றி கணக்கு கொடுக்க வேண்டும் என்று இயேசு தெளிவாக போதித்து இருக்கிறார்.

நாம் யாரும் நமக்குள்ளும் நமக்கு இடையேயும் பரிபூரணமானவர்கள் அல்ல என்றும் இயேசு காண்பித்து இருக்கிறார்: நாம் யாருமே கடவுளை பிரியப்படுத்த முடியாது (ரோமர் 3:23). அவருடைய பிரசன்னத்திற்குள் செல்லவும் வாழவும் நம்மில் யாருமே பரிபூரணமானவர்கள் அல்ல. ஆனால் நற்செய்தி என்னவெனில் கடவுள் அவருக்கும் நமக்கும் இடையே இருக்கும் பெருங்கடலை இயேசுவை அனுப்புவதன் மூலமாக இணைத்து இருக்கிறார். நீங்களும் நானும் தவறாக செய்த காரியங்களுக்கு நித்தியமான விளைவுகள் இருக்கின்றன. நாமே அதற்கு பொறுப்பு, நாம் செய்த காரியங்களுக்கு தண்டனை மரணமும் நீக்கப்படுதலும் ஆகும் (ரோமர் 6:23).

நம்முடையதாக இருக்கவேண்டிய தண்டனையை ஏற்றுக் கொள்ள இயேசுவை கடவுள் அனுப்பினார். நமக்காக மரணமடைந்ததால், இயேசு நம்முடைய தவறுகளின் விளைவுகளில் இருந்து நம்மை விடுதலையாக்கி இருக்கிறார். இயேசுவின் மூலமாக அவரை ஏற்றுக்கொண்டு வரவேற் கிறவர்களை, கடவுள் முழுவதுமாக மன்னிக்கவும் அவர்களுடைய கணக்குகளை சுத்தப்படுத்தவும் தெரிந்தெடுத்து இருக்கிறார். எட்டமுடியாத, அறியக்கூடாத, புரிந்துகொள்ளமுடியாத கடவுளை நாம் இயேசுவின் மூலமாக நம்முடைய பிதா என்று என்று அழைக்கிறோம் (யோவான் 1:12)

விசுவாசிக்கிறவர்களுக்கு, கடவுளையும் அவருடைய அன்பையும் பகுதியாகவே அறிகிறதில் இருந்து, முழுவதுமாகவும், முற்றிலுமாகவும் அவருடைய பிரசன்னத்திற்குள் சென்று, பரலோகத்தையே அனுபவிப்பதே மரணத்தின் தருணம் ஆகும்.

சரியான நேரமும் இடமும்

மரணத்திற்கு பிறகு என்ன சம்பவிக்கும் என்று போதிப்பதே சபையின் போதனையின் மையமாக இருந்துவருகிறது, ஆனால் எச்ஐவி உடையவர் களுக்கு நடைமுறை பராமரிப்பு செய்வதில் சபைகள் ஈடுபடுவதை கேள்விப்படும்போது மக்களுடைய மனதில் கேள்வி எழுகின்றது. மரணமடையும் அனைவருக்கும் கிறிஸ்தவர்கள் நற்செய்தியை போதிக்க முயற்சிக்க விரும்புவார்களா?

ஒரு புகழ்பெற்ற எய்ட்ஸ் நிறுவனத்தின் அங்கத்தினராக தனக்கே எய்ட்ஸ் இருந்த ஒருவர் புத்தமதத்திற்கு மனமாற்றம் அடைந்தார். ஒரு புன்னகையோடு அவர் ஏற்றுக்கொண்ட விஷயம், எச்ஐவியோடு இருந்த மக்களோடு இருந்தபோது, தன்னுடைய நம்பிக்கையை குறித்து சொல்ல விரும்பினார், ஆனால் அது கூடாது என்று அறிந்து இருந்தார். அவர் அப்படிச் செய்தால், பல்வேறு விசுவாசங்களை உடைய பல்வேறு மக்கள் தங்களுடைய நம்பிக்கைகளை அந்த நபரிடம் கூறுவார்கள். அந்த நபருடைய கடைசி நாட்கள் பல்வேறு கவனிப்பாளர்களினால் பல்வேறு திசைகளில் இழுத்தப்படும்.

அந்த நபருக்கு உண்மையில் என்ன தேவை? எச்ஐவி உடைய ஒருவர் போதகரை பார்க்கவேண்டும் என்று கூறினால் அவர் ஆவிக்குரிய உதவியை நாடுகிறார். அவரை வீட்டிற்கு சென்று சந்திப்பதும், சமையல் செய்வது, துணிகளை துவைப்பதும், குழந்தைகளுக்கு உதவி செய்வதும், தண்ணீர் கொண்டுவருவதுமே போதகருடைய விருப்பமாக இருந்தால் அந்த நபர் மனமாற்றமடைவார். தன்னுடைய வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தை அணுகுகிறவரோடு இருக்க அனுமதிக்கப்படுவது உண்மையிலேயே ஒரு பாக்கியம். 'இல்லை' 'தயவுசெய்து சென்றுவிடுங்கள்' என்று கூறமுடியாமல் பலவீனமாக இருக்கிறவர்களை சந்திக்க வருகிறவர்களை குறித்து மக்கள் உணர்வுள்ளவர்களாக இருப்பது சரியானதுதான். பலசமயங்களில் வியாதியுள்ள நபர் ஒரு குறிப்பிட்ட நபர் இனிமேல் வரவே கூடாது என்று கெஞ்சுவார். நீங்கள் பாதிக்கப்படக்கூடியவராக இருந்தால், உங்களுடைய வாழ்க்கை யாரை சார்ந்திருக்கிறதோ அவர் பாதிக்கப்படையும்படி செய்ய இரண்டுமுறையாவது யோசிப்பீர்கள்.

ஒரு அரசாங்க மருத்துவமனையில் இருக்கும் ஒரு மருத்துவர் சமுதாயத்தில் இருந்து வருகிறவரை தன்னார்வத்தொண்டு நிறுவனத்திடமிருந்து கேட்டால், அவர் நடைமுறை உதவியை நாடுகிறார், போதகரை அல்ல. அந்த குறிப்பிட்ட நபர் தங்களுடைய நோயாளியை மனமாற்ற செய்ய முயற்சிக்கிறார் என்று மருத்துவருக்கு தெரியவந்தால் அவர் நிச்சயமாக கோபமடைவார். அவரைப் பொறுத்தவரை, அந்த சமுதாய சேவை முற்றிலும் பயனற்றது.

ஒரு மருத்துவராக அவருக்கு அது ஒரு சேவை கிடையாது, ஏனென்றால் அந்த சூழலில் இருந்து வேறு ஒருவரை மீண்டும் அனுப்புவதற்கு அவர் மிகவும் வருத்தமடைவார். அது அந்த நோயாளிக்கும் ஒரு சேவை கிடையாது, ஏனென்றால் அவர் எதிர்பார்த்தது ஒரு நல்ல துணையை, உதவும் கரத்தை, போதகரை அல்ல !

இந்த எய்ட்ஸ் நிகழ்ச்சி மக்களை மதமாற்றுவதில் மாத்திரமே ஆர்வமாக இருக்கிறது என்று மருத்துவர் முடிவுக்கு வருவார். மருத்துவராக, இந்த மத செயல்களை குறித்து அனைவரும் உறுதியாக அறிந்திருக்க அவர் பிரச்சாரம் செய்வார்.

விருந்தாளியும் வேலைக்காரரும்

எல்லாவற்றிற்கும் சரியான நேரமும் சரியான இடமும் இருக்கிறது. உள்ளூர்

கலாச்சாரம் மற்றும் சடங்குகளின் அடிப்படையில் எல்லாம் இருக்கிறது. எடுத்துக்காட்டாக, நைஜீரியா, புருண்டி, ருவாண்டா மற்றும் உகாண்டாவின் பல இடங்களில் திருச்சபையின் அர்ப்பணிப்பு அதிகமாக இருக்கும், அங்கே சென்றுவிட்டு ஜெபிக்காமல் ஒரு சபை சார்ந்த எய்ட்ஸ் நிகழ்ச்சியை சார்ந்தவர் திரும்பி வருவது முடியாத காரியமாக இருக்கும். நீங்களாக ஜெபிக்கவில்லை என்றால், ஜெபிக்கும்படியாக நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுவீர்கள். வீட்டிலே ஜெபிப்பது வழக்கமானது, சமுதாய ஊழியத்தின் ஒரு அங்கமாக எதிர்பார்க்கப்படுவது. ஜெபம் ஒரு வாழ்க்கை முறை. ஆனால் தாய்லாந்தில் அல்லது இந்தியாவின் சில பகுதிகளில் எதிர்பார்ப்புகள் மிகவும் வித்தியாசமாக இருக்கலாம். ஆன்மீகம் பல்வேறு விதங்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. இங்கிலாந்து, உக்ரைன் அல்லது உருசியா போன்ற நாடுகளில் அது வெளிப்படுத்தப்படுவதே அபூர்வம். இப்படிப்பட்ட காரியங்களுக்கு நாம் மிகவும் உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

நீங்கள் நல்ல பராமரிக்கிற ஆதரவுகொடுக்கிற உறவை ஒருவரிடத்தில் காலப்போக்கில் வளர்த்து இருந்தீர்களானால், அவர்கள் உங்களுடைய நம்பிக்கைகளை உணர்ந்திருக்கக்கூடும், அதை உங்களிடம் பகிர்ந்துகொள்ளாமல் இருந்திருக்கலாம். உங்களுடைய நம்பிக்கை மற்றும் விசுவாசம் குறித்து அவர்கள் கேட்டால், உங்களுடைய நம்பிக்கையை சற்று அவர்களிடம் பகிர்ந்து கொள்வதற்கு அது ஒரு அற்புதமான வாய்ப்பு, ஆவிக்குரிய ஆறுதலையும் அமைதியையும் கொண்டுவருவதற்கும் தான். அவர்கள் உரையாடலை தொடங்குகிறார்கள், அவர்களுடைய கேள்விக்கு பதில் சொல்லாமல் இருப்பது நட்புறவாக இருக்காது. அவர்களுடைய தேடலின் நோக்கத்தை நீங்கள் அறிந்துகொள்ளலாம், விசுவாசம் உடைய ஒருவர் அவர்கள் அருகே இருப்பது அவர்களுடைய குழப்பத்தை தீர்க்கலாம். அவர்களுக்காக ஜெபித்துக்கொள்ளவும் அவர்கள் கேட்டுக்கொள்ளலாம். ஒரு முழுமையான நாத்திகர் தனக்காக ஜெபித்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்வது மிகவும் ஆச்சரியமானது ஆனால் எல்லாவற்றிலும் உங்களுடைய மனப்பாங்கு ஒரு வேலைக்காரனுடையதாக இருக்கவேண்டும்: இன்று நான் எப்படி அதிகமாக சேவை செய்யலாம்?. மேலும் நீங்கள் அங்கே விருந்தாளியாகத் தான் இருக்கிறீர்கள், கேள்விகளுக்கு பதில் மாத்திரமே கொடுக்கலாம், நீங்கள் உரையாடலை தொடங்கக்கூடாது.

உங்களுக்கு எது முக்கியம்?

நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம் உங்கள் வாழ்க்கையை நிர்ணயிப்பதுதான். பலர் தங்களுடைய வாழ்க்கை முடியும்போதுதான் அதன் அர்த்தத்தை கண்டுபிடிக்கிறார்கள் என்பதை அறிந்து நான் மிகவும் மன்சோர்வு அடைகிறேன். உங்கள் வீட்டை ஒழுங்குபடுத்த உங்களுக்கு ஒரு கடுமையான மருத்துவ கண்டுபிடிப்பு தேவைப் படுமா? உங்களுடைய பாலியல் வாழ்க்கையை, அல்லது போதை ஊசி போட்டுக்கொள்ளும் பழக்கத்தை மாற்றிக்கொள்ள அல்லது உங்களுக்கு எது முக்கியம் என்பதை கண்டறிய அவசர தீர்மானங்கள் இன்று நீங்கள் எடுக்க வேண்டிய தேவை இருக்கலாம்.

நீண்ட காலத்திற்கு உங்களை எது மகிழ்ச்சியாக வைத்திருக்கும்? உங்களுக்கு மிகவும் முக்கியமான உறவுகள் என்ன? இந்த ஆண்டு

மாத்திரமல்ல, உங்களுடைய எதிர்காலத்தில் இன்னும் சில ஆண்டுகளுக்கு எது முக்கியமாக இருக்கும். உங்களுடைய உண்மையான நண்பர்கள் யார், நீங்கள் யாரை சார்ந்தவர்கள்?

இவை முக்கியமான கேள்விகள். பலர் கிறிஸ்தவர்களாக மாறிய பிறகு: "இப்போது எனக்கு தெரிந்ததை நான் அப்போதே அறிந்திருந்தால், என்னுடைய வாழ்க்கை இவ்வளவு மோசமாக இருந்திருக்காது" வருந்துகிறார்கள். இதில் சோகம் என்னவென்றால் ஒருவர் நின்று நீண்டநேரம் நேராக யோசிக்கவைக்க கடுமையான மருத்துவ நிகழ்வு அல்லது மரணத்தை நெருங்கும் விபத்துகள் தேவைப்படுகின்றது.

வாழ்க்கையை முழுவதுமாக வாழ்வது

நீங்கள் முக்கியமானவர். நீங்கள் ஒரு நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டு இருக்கிறீர்கள், அந்த நோக்கத்தை நீங்களே அறிந்துகொள்வது உங்களுக்கு அதிகமான மகிழ்ச்சியை கொடுக்கும். மற்றவர்களுக்காக வாழ்வது அதில் ஒரு பகுதி. உங்களுடைய உண்மையான சுயத்தை கண்டுபிடிப்பது-அதாவது உண்மையான மனிதனாவது-உங்களையே இழப்பதில்தான் இருக்கிறது என்று இயேசு கூறினார்; எல்லோரும் மிதித்துசெல்லக்கூடிய மிதியடியாக மாறுவதன் மூலமாக அல்ல, உங்களுடைய சொந்த வழியிலே உங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கான உரிமையை விட்டுவிட்டு, வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்று காண்பிக்க இயேசுவை அழைப்பதன் மூலமாக. அவர் உங்களை நேசிப்பதினால் உங்களுக்காக கடவுள் ஒரு திட்டம் வைத்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன், அவருடைய திட்டமே உங்களை உண்மையாக மகிழ்ச்சி அடையச்செய்யும்.

அந்த திட்டத்தில் முக்கியமான பங்கு நீங்கள் அவரை தனிப்பட்ட முறையில், உங்கள் சிநேகிதராக அறிந்துகொள்வதே ஆகும், நீங்கள் வாழ்க்கையை முழுவதுமாக வாழ உங்களுக்கு புதிய சக்தியும், பெலனும் உள்ளான ஆதாரங்களும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இது முழுமையையும் சில நேரங்களில் சரீர சுகமும் கொடுக்கலாம்.

எனவே, நாம் எச்ஐவி தடுப்பு மற்றும் பராமரிப்பையும், வேலைசெய்யக்கூடிய பல மாதிரிகள், திருச்சபை எப்படி பதிலளிக்க சவால் விடப்படுகிறது என்பனவற்றை குறித்து பார்த்துவிட்டோம்.

அடுத்த சில அதிகாரங்கள் எப்படி வித்தியாசத்தை உருவாக்குவது என்பதை குறித்தவை. நம்முடைய சபையிலும், பரந்த சமுதாயத்திலும் நடைமுறையில் காரியங்கள் செயல்படும்படி செய்வது எப்படி என்பதை குறித்தும், ஒரு முழு சமுதாயம் அல்லது நாட்டை சென்றடைய ஒரு மக்கள் இயக்கத்தை எப்படி தொடங்குவது, புதிய எச்ஐவி திட்டங்களுக்கு எப்படி ஆதாரங்களை கண்டுபிடிப்பது மற்றும் இவை அனைத்து சபை வாழ்க்கையில் எப்படி நிலைத்து வேரூன்றி இருப்பதை உறுதிசெய்வது என்பனவற்றையும் பார்ப்போம்.

அதிகாரம் 9

காரியங்கள் நடக்கும்படி செய்தல்

ஊக்கம் மிகுந்த சிறுகூட்டம் ஆண்களும் பெண்களும் தங்களுடைய சமுதாயத்தை எப்படி மாற்றவும், முழு தேசத்தையும் எப்படி தொட்டுவிடவும் முடியும் என்பதை இந்த அதிகாரம் விவரிக்கிறது.

நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கடவுள் அழைக்கிறார்?

எச்ஐவி உடையவர்களுக்கு நடைமுறை உதவியாக இருக்கக் கூடிய எல்லாவகையான செயல்களையும் நீங்கள் செய்யலாம். வியாதியோடு இருக்கிற ஒருவரை சந்திக்கவும், அல்லது அவரது குடும்பத்தினரை ஆதரிக்கவும் நீங்கள் தன்னார்வத்தொண்டராக மாற விரும்பலாம். தாங்கள் எப்படி எச்ஐவியிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ளலாம் என்பதை பற்றி மக்களிடம் பேசுவதன் மூலமாக அவர்களுடைய உயிர்களை காப்பதற்கு நீங்கள் விரும்பலாம். உங்கள் சபையில் இருப்பவர்களிடமோ அல்லது ஏற்கனவே எச்ஐவிக்கு எதிராக பதிலளித்துக்கொண்டு இருக்கிறவர்களிடமோ பேசுவதற்கு நீங்கள் ஏன் நேரம் ஒதுக்கீடு செய்யக்கூடாது?

நீங்கள் ஒருவேளை சபைத் தலைவராக இருக்கலாம். கரிசனை, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு போன்றவற்றை குறித்து உங்களுடைய தலைமைத்துவ குழுவில் நீங்கள் பிரசங்கித்து, உங்கள் சபையிலும், பரந்த சமுதாயத்திலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட ஒரு குழுவை நீங்கள் உருவாக்கலாம்.

ஆனால் தயவுசெய்து அதோடு நிறுத்திவிடாதீர்கள். இன்னும் பல்லாயிரம் உயிர்களை நீங்கள் தொடமுடியும். இதோ இப்படி நீங்கள் அதை நிறைவேற்றலாம்.

எப்போதும் உங்களிடத்தில் இருப்பதை வைத்து தொடங்குங்கள்

ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு இயேசு 5000 பேருக்கு எப்படி உணவு கொடுத்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். சமீபத்தில் உகாண்டாவில் மிகவும் ஏழ்மையான கிராமத்தை சார்ந்த ஆறு பாட்டிகளினால் உருவாக்கப்பட்ட வருமானம் ஈட்டும் திட்டத்தால் நிதியுதவி செய்யப்பட்ட ஒரு எய்ட்ஸ் அனாதைகள் பள்ளிக்கு நான் சென்று இருந்தேன். அவர்கள் தங்கள் சூழ்நிலையை குறித்து ஜெபித்தார்கள்-பள்ளிக்கு செல்லமுடியாத ஏழ்மையில் இருந்த அதிக எண்ணிக்கையிலான

போக்குழந்தைகளை அவர்கள் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அவர்களிடத்தில் என்ன இருக்கிறதோ அதை வைத்து தொடங்க வேண்டும், பின்பு தாங்களே அதில் ஈடுபட்டு கிராமத்தில் இருக்கும் மற்றவர்களையும் ஒன்றுதிரட்ட வேண்டும் என்று கடவுள் கூறியதாக உணர்ந்தார்கள். சிறிது சிறிதாக அந்த வேலை நிலைத்தன்மைபெற்றது.

அவர்கள் சேமித்து கொஞ்சம் நிலம் வாங்கினார்கள். அவர்கள் சேமித்து ஒரு பசுவை வாங்கினார்கள். பசுவில் இருந்து கிடைக்கும் பால் பள்ளியை நடத்த உதவுகின்றது. படிப்படியாக அவர்கள் செங்கல் கட்டிகளை உருவாக்கி, கம்புகளின்மேல் வைக்கோலினால் ஆன வீட்டை சிறு கட்டிடமாக மாற்றினார்கள். பின்பு இன்னுமொரு கட்டிடம் கட்டினார்கள். தங்களுடைய ஓய்வுநேரத்தில் தங்களால் இயன்றவரை சிறுவர்களுக்கு பாடம்கற்பித்தார்கள். எல்லோரும் உதவினார்கள். சிலர் உணவு கொண்டுவந்தார்கள், மற்றவர்கள் சமைத்தார்கள், ஒரு வயதானவர் ஆற்றிலிருந்து தினமும் தண்ணீரை தன்னுடைய தலையிலே சுமந்து வந்து தாகமாக இருந்த சிறுவர்களுக்கு கொடுத்தார்.

பாட்டிகள் தங்களுக்கு கொஞ்சம் பயிற்சி தேவை என்று உணர்ந்து அடிப்படை தகுதியை பெற்றுக்கொள்ள அரசாங்க நிகழ்ச்சிகளுக்குச் சென்றனர். ஒரு பார்வையாளர் வந்து அவர்கள் மின்சாரம் பெற்றுக் கொள்வதற்கு பணம் கொடுத்தார். இன்னொருவர் பெரிய பெண்கள் பயிற்சி பெற தையல் இயந்திரத்தை கொடுத்தார். மற்றொருவர் தண்ணீர் குழாயை கொடுத்தார்.

"தண்ணீர் கொண்டு வரும் அந்த வயதானவருக்கு என்ன நடக்கும்?" என்று கேட்டேன், ஏனென்றால் பள்ளிக்கு தண்ணீர் கொடுப்பதே அவருக்கு வருமானம் ஈட்டியது.

"அந்த மரத்தடியில் அமர்ந்து அவர் குழாயை திறந்துவிடுவார், மீதமிருக்கும் கிராமத்தாருக்கும் கொடுப்பார். உள்ளூர் மக்கள் தண்ணீர் வாங்கிக் கொள்வார்கள், அது அவருக்கும் பள்ளிக்கும் உதவியாக இருக்கிறது.

படிப்படியாக அப்பணி வளர்ந்துவிட்டது.

திருச்சபையும் அங்கத்தினர்கள் உதவிசெய்ய ஏதாகிலும் செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளது. டியர்ஃபண்டின் நிருவனர் ஜார்ஜ் ஹாப்மென் ஒருமுறை கூறியதைப்போல : "உங்களால் உலகம் முழுவதையும் மாற்ற முடியாது, ஆனால் எங்காவது யாருடைய உலகத்தையாவது மாற்றமுடியும்".

சென்று யாருடைய வாழ்க்கையையாவது இன்று மாற்றுங்கள். எச்ஐவியினால் தாக்கப்பட்ட ஒரு குடும்பத்திற்கு இன்று உணவு கொண்டு செல்லுங்கள். இன்று ஒரு விதவை அல்லது அனாதையிடம் சென்று உதவி செய்யுங்கள். உதவி தேவைப்படும் எச்ஐவியோடு வாழ்கின்ற மக்களை சென்று கண்டுபிடியுங்கள். இன்று தங்களுடைய வாழ்க்கையை எச்ஐவி

ஊழியத்திற்காக கொடுக்கிற யாரையாகிலும் ஊக்கப்படுத்துங்கள். அவர்கள் மீது கடவுளுடைய பாதுகாப்பும், கடவுள் அவர்கள் தேவைகளை சந்திக்கவும் பிரார்த்தனை செய்யுங்கள்.

அந்த பிரார்த்தனைகளின் பதிலின் ஒரு பகுதியாக நீங்கள் இருக்கக்கூடும்! மக்களுடைய வாழ்க்கையை மாற்றுகின்ற ப்ராஜெக்டுகளுக்கு எப்படி பொறுப்பை கொடுப்பது மற்றும் எச்ஐவியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்ய தங்கள் நேரத்தையும் சக்தியையும் கொடுக்கிறவர்களை எப்படி ஆதரிக்கலாம் என்பதை கண்டுபிடியுங்கள். உங்களுடைய செல்வாக்குகள் அனைத்தையும் பயன்படுத்தி மக்கள் நடவடிக்கை எடுக்க இன்று ஊக்கப் படுத்துங்கள்.

அனுபவத்தில் இருந்து கற்றுக்கொள்ளுங்கள்

எப்போதுமே மற்றவர்களுடைய அனுபவத்தில் இருந்து கற்றுக் கொள்ளுங்கள். ஒரே முறைகளையும் பொருட்களையும் மீண்டும் கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு வாழ்க்கை குறுகியது. ஜனவரி 2008ல், 35 நாடுகளில் இருந்து 170 பேர் எச்ஐவி பணியில் 20 ஆண்டுகளை பின்நோக்கி பார்க்க உகாண்டாவில் சந்தித்துக் கொண்டனர், ஏசியிடி குடும்பத்தின் விரிவாக்கமாக. டியர்ஃபண்ட், சமாரிடன்ஸ் பர்ஸ், ஆபரேஷன் மொபிலை சேஷன், த சேல்வேஷன் ஆர்மி, PACANET மற்றும் வேதாகம ஐக்கியம் போன்ற சர்வதேச நிறுவனங்களின் தலைவர்கள் எங்களோடு இணைந்து கொண்டார்கள், அதோடு பல்வேறு திட்டங்களின் தலைவர்களும் இணைந்து கொண்டார்கள்.

நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? புதிய பணியை துவங்குவதற்கான சிறந்த வழிகள் என்ன? எதிகாலத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துமாறு சிறந்த முறையில் நாம் எப்படி திட்டங்களை இயக்கலாம்? நிதியுதவி கொடுப்பதை நாம் எப்படி சுலபமாக்கலாம்? இன்று உங்களுடைய சூழ்நிலையிலே நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய, சில யோசனைகள் இங்கே இருக்கின்றன, உங்களிடத்தில் சிறிய திட்டம் இருந்தாலும் சரி, அல்லது தொடக்கநிலையில் அல்லது பெரிய அளவிலான நிகழ்ச்சி உங்களிடத்தில் இருக்கலாம்.

நம்முடைய விசுவாசத்தின் முக்கியத்துவம் என்பது வெளிவந்த ஒரு முக் கியமான செய்தியாகும். குழுக்களாக நாம் அதிக நேரம் ஜெபத்திலே ஒன்றாக செலவிட வேண்டும், இயேசுவோடு நெருங்கி வாழவேண்டும், அவரே நமக்கு தேவைப்படும் ஞானத்தையும் பெலத்தையும் கொடுப்பார். நாம் பணியில் மிகவும் பரபரப்பாக இருப்பதால் கவனத்தை இழப்பது மிகவும் சுலபம். கடவுள் நமக்கு வைத்திருக்காத திட்டமாகிய ஒரு கனவையோ, தரிசனத்தையோ அல்லது லட்சியத்தையோ விரட்டிச்செல்லும்போது நாம் வழிதவறிச் செல்லலாம். பல காரியங்கள் செய்வதற்கு நலமானதாக இருக் கலாம், ஆனால் அது நம்முடைய அழைப்பாக இல்லாமலும் இருக்கலாம்.

நாம் கடவுளோடு அடிவைத்துச் செல்லவேண்டும், அவருக்கு முன்னோ பின்னோ செல்லக்கூடாது. அதனால் தான் நம்மை வழிநடத்தவும், நாம் தோல்வியை உணரும்போது தூக்கிவிடவும், நாம் அசட்டுதைரியமாக இருக்கும்போது இழுத்துக்கொள்ளவும் மற்ற மக்கள் நமக்கு தேவை.

அது அவருடைய பணி, நம்முடையதல்ல. நாம் அதை எப்போதுமே நினைவில்கொள்ள வேண்டும்.

பெரிய தீர்மானங்கள் எடுப்பதற்கு முன்பாக ஆராய்ந்து பாருங்கள்

எந்த புதிய திட்டத்தை தொடங்குவதற்கு முன்பும் கவனியுங்கள், கவனியுங்கள், கவனியுங்கள். தேவைகள் என்ன, மற்றவர்கள் ஏற்கனவே என்ன செய்துகொண்டு இருக்கிறார்கள் என்பதை சரியாக ஆராய்ந்து பாருங்கள். அதில் இடைவெளி இருக்கிறது என்பதை உணர்ந்தால், அதை சந்திக்கும் முன்னதாக சமுதாயத்தில் இருக்கும் மற்றவர்களிடம் இன்னும் கொஞ்சம் பேசுங்கள். மேலும், முதலாவது உங்கள் திருச்சபை தலைவர்களிடம் முதலில் பேசுங்கள். புதிய திட்டத்தை உருவாக்க விரைந்து செல்லாதீர்கள்.

நீங்களே ஒரு சபைத் தலைவராக இருந்தால், தனியாக ஒரு பெரிய திட்டத்தை தொடங்கும் முன்பு நீங்கள் பணிசெய்யும் மற்ற தலைவர்களுடன் முதலாவது பேசுங்கள். ஏசியிடி உகாண்டாவின் இயக்குநர் டேவிட் கபிஸ் வா, இந்த பாரம்பரிய வழக்குச் சொல்லை எனக்கு நினைவுபடுத்தினார்: "தனியாக நடந்து செல்லும் ஒருவர் வேகமாக செல்லலாம், ஆனால் இணைந்து செல்லும் இருவர் வெகுதூரம் செல்லலாம்". உங்களால் முடிந்தால் ஏற்கனவே அதே காரியத்தை செய்கிறவர்களோடு இணைந்துகொள்ளுங்கள். தங்களுடைய சொந்த நிகழ்ச்சியை உருவாக்க விரும்புவது திருச்சபையின் இயல்பு ஆனால், இது அதிகமான நேரத்தை வீணடிக்கும், செலவை அதிகரிக்கும், நிதியுதவியை கட்டுப்படுத்தும் மேலும் 'ஒளி' பிரகாசிக்கவிடாமல் தடுக்கும். உங்களால் முடிந்தவரை அதிகமான அக்கினித்தளல்களை சேகரித்து நெருப்பு பிரகாசமான ஒளியை கொடுக்கும்படி செய்யுங்கள்.

பரந்த தேசிய அல்லது சர்வதேச இயக்கத்தில் அங்கம்வகித்துக் கொண்டே தங்கள் சொந்த பணியை அனுபவிப்பதற்கு சபைகளுக்கு ஒரு சிறந்த வழி, தனிமையம் வைத்திருப்பதே. ஒரு உள்ளூர் திருச்சபையிலே ஒரு மாநில மையம் அமைந்திருக்கலாம், அவர்களுக்கு 'சொந்தமாக'வும் அது இருக் கலாம், அவர்கள் ஒரே தேசிய பெயரை வைத்திருக்கலாம், ஒரு தேசிய குழுவுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும், தேசிய நிறுவனமாக பதிவுசெய் யப்படவேண்டும். மற்ற நாடுகளில் இருக்கும் அதே பெயரை அவர்கள் பகிர்ந்துகொள்வதால், அவர்கள் உலகளாவிய இயக்கத்தின் ஒரு பகுதியாக உணரலாம், அரசாங்கத்தின், சர்வதேச நிறுவனங்கள் போன்றவற்றின் பெரிய உரையாடல்களில் பங்கெடுக்கலாம். இப்படித்தான் தனிப்பட்ட ஏசியிடி திட்டங்கள் வேலைசெய்கின்றன, அவை ஏசியிடி சர்வதேச ஒருங்கிணைப்பின் பகுதியாக இணைக்கப்பட்டு இருக்கின்றன.

சிறிய குழுவை உருவாக்குங்கள்

நீங்கள் ஒரு சபைத் தலைவராக இருந்தால், காரியங்களை முன்னேற்றிச் செல்ல மிக முக்கியமாக ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும். திருச்சபையில் எச்ஐவி செயல்பாடுகளை பொறுப்பெடுக்க தகுதி வாய்ந்த ஒரு தலைவரை நியமனம் செய்ய வேண்டும். அவர்களுடைய முக்கியமான வேலைகளில் ஒன்று சில அடிப்படை ஆராய்ச்சிகளை செய்யவும், சில காரியங்கள் விரைவாக தொடங்கவும் ஒரு சிறு குழுவை உருவாக்குவது ஆகும்.

நீங்கள் தேடுகிற மக்களை உங்களுடைய திட்டத்திலே உதவ சேர்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் பரிந்துரைக்கும் திட்டத்தை ஒத்து இருக்கும் திட்டங்களையும் மற்ற இடங்களில் இருக்கும் சபைகளையும் சந்தியுங்கள். உங்களால் அப்படிப்பட்ட வேறு ஒரு திட்டத்தை கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், வருத்தப்படுங்கள். செயல்படக் கூடிய வெகு சில யோசனைகளே முயற்சிக்கப்படாமல் இருக்கின்றன, நீங்கள் எச்ஐவி நோய் தடுப்புக்காக நோபல் பரிசுக்காக போட்டியிடவில்லை என்றால் மீண்டுமாக யோசியுங்கள். அதே போன்ற பணியை மற்றவர்கள் செய்யாமல் இருக்க உண்மையிலேயே நல்ல காரணங்கள் இருக்கலாம்.

சிறிதாக தொடங்குங்கள் ஆனால் தெளிவான தரிசனமும், சீக்கிரம் முன்னேறக்கூடிய திட்டங்களையும் வைத்திருங்கள். சபைத் தலைவர்கள் உங்களுடைய செயலுக்கு ஆதரவு கொடுப்பதை உறுதிசெய்யுங்கள் அல்லது பின்பு அது பிரச்சனையை ஏற்படுத்தலாம், உங்களுடைய தரிசனம் சரியானதாக இல்லை என்று சபைத் தலைவர்கள் நினைத்தால், கவனமாக இருங்கள். அதை வழிநடத்த நீங்கள் சரியான நபர் இல்லை என்று அவர்கள் நினைக்கிறார்களா, அல்லது திட்டமே மீண்டும் யோசிக்கவேண்டிய ஒன்றா? அதைக் காட்டிலும் மேன்மையான வழி இருக்கலாம். அல்லது உங்கள் தலைவர்கள் எச்ஐவியில் ஆர்வம் இல்லாமலும் இருக்கலாம்.

காரியங்கள் சிக்கலாக இருந்தால் நீங்கள் ஏற்கனவே இருக்கும் ஒரு நிறுவனத்தோடு இணைந்துகொள்ளலாம். ஒரு புதிய நிறுவனத்திற்கு தேவையே இல்லை என்பதைக்கூட நீங்கள் கண்டுபிடிக்கக்கூடும்.

பணியாளர்களுக்கு சம்பளம் கொடுக்க நிதி இருக்கும்போது, முதலாவது உங்களுடைய சிறந்த தன்னார்வத்தொண்டர்களிடம் செல்லுங்கள். அவர்களுடைய அர்ப்பணிப்பும் பண்புகளும் உங்களுக்கு தெரியும், அவர்கள் சோதனையான காலங்களில் நிலைத்துநின்றார்கள், பணத்திற்காக மாத்திரம் அவர்கள் வேலை செய்யப்போவதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஒருங்கிணைத்துக்கொள்ளுங்கள்

நிறுவனத்தின் கட்டமைப்பிலும் கொள்ளளவிலும் முதலீடு செய்வதை நினைவில்கொள்ளுங்கள். தனி அலுவலகத்தை காட்டிலும் முக்கியமானது ஒரு தொலைபேசி இணைப்பு மற்றும் பதில்சொல்லும் இயந்திரம், நல்ல

பரப்பளவை உடைய நம்பகமான இணையத்தின் குறுஞ்செய்தி வசதி (SMS) உடைய ஒரு கைப்பேசி, ஒரு மின்னஞ்சல் முகவரி (பிரச்சனைகள் ஏற்படும்பட்சத்தில் இரண்டு இருப்பது சிறந்தது) மற்றும் மின்னஞ்சலினை அனுகுவதற்கு இரண்டு வித்தியாசமான இடங்கள். என்ன செலவுசெய் யப்பட்டன என்பதை துல்லியமாக கணக்கு ஒப்புவிக்கவும் நிதிநிலையை கட்டுப்பாட்டுடன் வைக்கவும் பதிவுகளை பராமரிப்பது மிகவும் முக் கியமானது என்பதை நினைவில்கொள்ளுங்கள். பெரும்பாலான புதிய திட்டங்கள் தங்களுடைய பதிவேடுகளை பராமரிக்க தேவைப்படும் நேரத்தை என்பதில் குறைத்து மதிப்பிடுகிறார்கள். உள்ளூர் சேவைத்திட்டம் உள்ளூர் சபையின் அலுவலகத்தில் அவர்களுடைய குடையின் கீழ் வளரும் போது இவற்றில் பெரும்பாலானவை சுலபமாக கொடுக்கப்படுகின்றன. பணி வளரும்போது, வெளியே செல்லவேண்டிய ஒரு சிறந்த நேரம் வரலாம். ஒருவேளை சபையை பொங்கிவழியச்செய்யும் அளவுக்கு சேவைத்திட்டம் பெரியதாகிவிடலாம், அல்லது உள்ளூர் சபையில் இருந்து தூரமாக இருக்கும் இன்னும் மையமான ஒரு இடத்திற்கு செல்லவேண்டிய தேவை இருக்கலாம்.

நீங்கள் தொடங்கும்போது, வளைவுத்தன்மையோடு சூழ் நிலைகளை வருமாறு ஏற்றுக்கொள்ளுங்கள். முதல் மூன்று முதல் ஆறு மாதங்களில் நீங்கள் அதிகமான காரியங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்களை ஊக்கப்படுத்தி ஆலோசனை கூறி, நீங்கள் தவறுகளை விரைந்து செய்யாமல் தடுக்கக்கூடிய உங்களுக்கு நம்பகமான ஆதரவான நண்பர்களின் தனிப்பட்ட குழுவுக்கு நீங்கள் ஆரம்பம் முதலே கணக்கு ஒப்புவிக்கிறவர் களாக இருங்கள். உங்களுடைய தவறுகளை ஏற்றுக்கொண்டு அவற்றை சரிசெய்ய விரைந்திடுங்கள். மேலும் தொடர்ந்து ஜெபியுங்கள். நீங்கள் தினந்தோறும் கடவுளுடைய பிரசன்னத்தை உணர்ந்து, அவருடைய வல் லமையினால் நிரப்பப் படவேண்டும்.

காரியங்களை நடக்கச்செய்கின்ற மக்கள்

'சமுதாய தொழிலதிபர்கள்' என்று அழைப்பவர்களால் பெரும்பாலான புதிய சேவைத்திட்டங்கள் தொடங்கப்படுகின்றன, இப்படிப்பட்ட மக்களை டியர்ஃபண்ட் போன்ற நிறுவனங்கள் 'ஆர்வமுள்ள தனிநபர்கள்' என்கிற சொற்களைக்கொண்டு அழைக்கிறார்கள். தொழிலதிபர்கள் காரியங்களை தொடங்க விரும்புகிறவர்கள், அவர்கள் முன்னோடிகள், பொதுவாக வியாபாரத்தில் இருப்பார்கள். ஒருவேளை நீங்களும் அவர்களுள் ஒருவராக இருக்கலாம்.

அவர்கள் முழுவதும் யோசனைகளோடும், முழுவதும் தரிசனத்தோடும், விசுவாசத்தோடும், சக்தியோடும், பக்தியோடும் இருப்பதால் அவர்கள் உற்சாகமூட்டுகிற மக்கள். அவர்கள் சிறந்த நேர்மறையான சிந்தனையாளர் கள், ஒவ்வொரு மூலையிலும் பெரிய வாய்ப்புகளை காண்பவர்கள்.அவர்கள்

ஆபத்துக்களை எடுத்துக் கொள்வதில் சந்தோஷமடைகிறவர்கள், முற்றிலும் பாதுகாப்பாக இருப்பதை சோர்வடையச்செய்வதாக காண்பவர்கள். அவர்கள் வழக்கம்போல செயல்படுவதையும் ஒரே காரியங்களை திரும்பத்திரும்ப செய்வதையும் வெறுப்பவர்கள், புதிய சூழ்நிலைகளில் சந்தோஷப்படுகிறவர்கள். அவர்கள் மாற்றத்தை விரும்புகிறவர்கள்.

சமுதாயத்தில் மாற்றத்தை உருவாக்குகிறவர்கள், தங்கள் வைராக்கியத்தை உபயோகித்து உலகை மாற்றுகிறவர்கள். சமுதாய பிரச்சாரங்களை சேர்த்தோ அல்லது ஏற்கனவே இருக்கும் சேவைத் திட்டங்களுக்கு வருமானத்தை ஏற்படுத்த உதவியோ சிலநேரங்களில் அவர்கள் இதைச் செய்ய வியாபாரத்தை உபயோகிப்பார்கள்,ஆனால் பல சமயங்களில் தேவைகளை சந்திக்க அவர்கள் புதிய சேவைத்திட்டங்களை அல்லது நிகழ்ச்சிகளை உருவாக்குவார்கள்.

தனிப்பட்ட திருச்சபைகளின் பெலன் மற்றும் பெண்களின் பங்கு

உலகின் சில பகுதிகளில் உள்ளூரிலே உருவாக்கப்பட்ட சபைகளில் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட சபைகளை காட்டிலும் அதிகமான சமுதாய தொழிலதிபர்களை நீங்கள் காண்பீர்கள். பலசமயங்களில் இந்த தனியார் திருச்சபைகள் கவர்ச்சியான கட்டிடங்கள் மற்றும் அதிகமான குழுக்களையும் ஆதாரங்களையும் கொண்ட பழங்கால பிரிவுகளைவிடவும் அதிகமான அங்கத்தினர்களை கொண்டிருக்கின்றன.

பழங்கால பிரிவினர் அதிகம் காணப்படுகின்றனவாகவும், அதிகமாக ஒருங்கிணைக்கப்பட்டனவாகவும் காணப்படலாம். எனினும், சில நேரங்களில் அவை சிந்தனையிலே குறைந்த வளைவுத்தன்மை உடையனவாகவும், புதிய சேவைத்திட்டங்களை இயக்க குறைந்த திறன் உடையனதாகவும் இருக்கின்றன. மாறாக, உள்ளூரில் உருவாக்கப்பட்ட சபைகள் சில மாதங்களுக்குள் புதிய சபைகளை தோற்றுவிக்கலாம், எச்ஐவியை பொறுத்தவரையில் பெரிய தரிசனம் உடையவர்களாகவும் இருக்கலாம்.

பழங்கால பிரிவினர் ஐரோப்பிய சபைகளைப் போன்ற இறையியலை கொண்டு இருக்கலாம். உள்ளூர் சபைகள் சுகமாக்கும் ஊழியத்தில் அதிகமான முக்கியத்துவம் செலுத்தலாம், அவர்களுடைய ஆராதனை மற்றும் பிரசங்கத்தின் முறைமை பெந்தேகோஸ்தே முறையின்படியும் உயிரோட்டமுள்ளதாகவும் இருக்கலாம்.

பெரிய சர்வதேச நிதியுதவியாளர்கள் முதலாவது பழைய, மிகவும் பழக்கமான பிரிவுகளோடு இணைந்துகொள்ள யோசிப்பார்கள், புதிய முறைசாரா சபை குழுக்களோடு சேர்ந்து கொள்வதை கடினமாக எண்ணுவார்கள். ஆனால் அவர்கள் நாட்டின் மிகவும் சக்திவாய்ந்த சபை ஒருங்கிணைப்பை இழக்கும் அபாயத்தில் இருக்கிறார்கள்.

எச்ஐவி பணியில் அதிகமான சமுதாய தொழிலதிபர்கள் பெண்களே-எடுத்துக்காட்டாக, மூத்த போதகர்களின் மனைவிகள்-குறிப்பாக பெண்கள்

தலைமைத்துவம் எடுத்துக்கொள்ள குறைந்த வாய்ப்புகளே இருக்கின்ற பெரிய இடங்களில். அவர்கள் பெரும்பாலும் உள்ளூர் சபைகளில் மதிக்கப்படுகிறார்கள், சமுதாய பராமரிப்பு, பள்ளி நோய்தடுப்பு நிகழ்ச்சிகள் மற்றும் பல காரியங்களுக்கு அதிக எண்ணிக்கையிலான பெண்களை ஒருங்கிணைக்க திறமைபெற்று இருக்கிறார்கள். பல நாடுகளில் தேவையுள்ளோர்மீது அதிகமான கரிசனையினாலும், நிறுவனத்திற்கு தேவையான அதிகமான திறமையினாலும் உந்தப்பட்டு பெண்கள் பெரிய எண்ணிக்கையில் எய்ட்ஸ் நிகழ்ச்சிகளை தொடங்குகிறார்கள்.

உலகை மாற்ற அழைக்கப்பட்டு இருக்கிறோம்

சமுதாய தொழிலதிபர்கள் அருகிலே வைத்துக்கொள்ள முடியாத அளவுக்கு தொல்லை மிகுந்தவர்களாகவும், சில நேரங்களில் பிரச்சனையை உருவாக்குகிறவர்களாகவும் இருக்கலாம்-எடுத்துக் காட்டாக, திருச்சபை தலைமைத்துவ குழுக்களில்- குறிப்பாக மூத்த தலைவர்கள் மாற்றத்தை விரும்பாதபோதும், அதிகமான புதுமையான யோசனைகளை உடைய உற்சாகமான மக்களோடு இசைந்து செல்ல கஷ்டப்படும்போதும். சமுதாய தொழிலதிபர்கள் தங்கள் சக்தியை சரியான பாதையில் செலுத்த உதவுவதற்கான ஒரு சிறந்த வழி சபைத்தலைவர்கள் புதிய சேவைத்திட்டங்களை தொடங்க அவர்களை ஊக்கப்படுத்துவதுதான்.

எச்ஐவி சேவைத்திட்டங்கள் பெரும்பாலும் சமுதாய தொழிலதிபர்களால் தான் துவங்கப்படுகின்றன. சில தாளாளர்களாலும் நிர்வாகிகளாலும் தொடங்கப்படுகின்றன, இந்த திறமைகள் பணியை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன, ஆனால் ஒரு சமுதாய தொழிலதிபர் தரிசனத்தோடும் சக்தியோடும் அனுதினமும் நெருக்கமாக ஈடுபடாமல் இருக்கும்போது அவர்கள் வெற்றிபெறுவது அரிது.

எனினும், தொழிலதிபர்களுக்கு பல்வேறு பெலவீனங்கள் இருக்கும். காரியங்களை வேகத்தை குறைக்கின்ற மக்களோடு பொறுமையற்றவர்களாக மாறலாம்; அவர்கள் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளாமல், பலநேரங்களில் அதிக தைரியத்தோடு, பரந்த கண்ணோட்டம் இல்லாமல் போகலாம். அவர்கள் வலிமையான, விரைவான தலைமைத்துவ தீர்மானங்கள் எடுப்பதில் சிறந்தவர்களாக இருக்கலாம், ஆனால் குழுக்களை வழிநடத்துதலிலும், பொறுப்புகளை பகிர்ந்தளிப்பதிலும் மோசமானவர்களாக இருக்கலாம். தொழிலதிபர்கள் சீக்கிரத்தில் சோர்வடைகிறவர்களாகவும், சிக்கலானவேலைகளை நிறைவேற்றுவதில் பிரச்சனை உடையவர்களாகவும் இருக்கலாம். அவர்கள் சேவைத்திட்டங்களை வெகுவிரைவில் விட்டுவிட சோதிக்கப்படுகிறார்கள், நிர்வகிப்பதை சுமையாகவும் நினைப்பார்கள். சேவைத்திட்டங்களை எடுத்து அதை நீண்ட காலத்திற்கு செயல்படுத்தக் கூடிய வலிமையான நிர்வாகத்திறமை உடையவர்கள் அருகே இருக்கும்போது தொழிலதிபர்கள் சிறந்து வேலைசெய்கிறார்கள்.

வியாபார தொழிலதிபர்கள் சமுதாய தொழிலதிபர்களை நிதியினாலும் நடைமுறை ஆலோசனையினாலும் தாங்கும்போது அற்புதமான காரியங்கள் நடக்கும் : 'மனிதநேயத்துடனான வணிகம்' என்கிற வாக்கியம் நிதியும் ஒரு நிறுவனத்தின் குழுவுக்கு தலைமைத் துவமும் கொடுக்கிற வியாபார மக்களை குறிப்பிட உதவுகின்றது, இவர்கள் பொதுவாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கே கொடுப்பார்கள்- எடுத்துக்காட்டாக, மூன்று முதல் பத்து ஆண்டுகள். இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக ஏசியிடி UK "தேவையுடனான உலகம்" எனும் சேவைத்திட்டம் தாங்கப்பட்ட கதை. அவர்கள் மூன்று ஆண்டுகள் தொடக்க நிதியை மாத்திரமல்ல, அதிகமான அனுபவமுள்ள குழு அங்கத்தினர் களையும் கொடுத்தார்கள் **(பக்கம் 220-223ஐ பார்க்கவும்)**.

சமுதாய தொழிலதிபர்களுக்கு உதவிகரமான குறிப்புகள்

➔ நீங்கள் ஒரு சமுதாய தொழிலதிபரா என்பதை தீர்மானித்துக் கொள்ளுங்கள், நீங்கள் அப்படி இருந்தால் உங்கள் திறமைகளை உப யோகியுங்கள்.

➔ ஒரு முக்கிய நிதியுதவியாளரை/ஆலோசனைக்காரரையும் தனிப்பட்ட ஆலோசகரையும் அணுகுங்கள்.

➔ சரியான விவரங்கள் கிடைப்பதில் நோக்கமாக இருங்கள். புதிய சேவைத்திட்டங்களுக்குள் விரைவில் அலைந்து செல்லாதீர்கள். ஏற்கனவே இருக்கும் செயல் வலிமையாக இருப்பதை உறுதி செய்யுங்கள்.

➔ சோர்வடையக்கூடிய எண்ணத்தையும், புதிய காரியங்களுக்கு ஈர்க் கப்படுவதற்கும் தவிர்த்து, பொறுமையிலும் சுய ஒழுங்கிலும் நோக்கமாக இருங்கள்.

➔ உள்ளூர் திருச்சபை வாழ்விலே வேரூன்றி இருங்கள்-உங்களுடைய பாதுகாப்புக்காகவும், உங்கள் குடும்பம் மற்றும் ஊழியத்தின் பாதுகாப் புக்காகவும்.

➔ உங்களுக்கு வலிமையான பொறுப்பும்/ நிர்வாகத்திறமையும் சரியான இடத்தில் இருப்பதை உறுதிசெய்யுங்கள் (பக்கம்220-223ஐ பார்க்க).

➔ தொடர்ச்சியாக ஜெபத்திலும், பிரதிபலிப்பிலும், சரியான பாதையில் நிலைத்திருக்கவும் நேரம் எடுத்துக்கொள்ளுங்கள்.

சமுதாய தொழிலதிபர்களை ஊக்கப்படுத்துவதற்கான குறிப்புகள்

➔ அடுத்த தலைமுறை சமுதாய தொழிலதிபர்களை கண்டுபிடியுங்கள். இளைஞர்களின் தரிசனங்களை கவனித்து அவர்களுக்கு பயிற்சியும் ஆதரவும் கொடுப்பதன் மூலமாக ஊக்கப்படுத்துங்கள்.

➔ நீங்கள் ஒரு ஆதரவாளராக அல்லது நிதியுதவியாளராக இருந்தால், விரைவாக வளரும், தொடக்கநிலை நிகழ்ச்சிகளில்(சிறிய) தோல்வி அபாயங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்.

➔ ஒருவருக்கொருவர் உதவும் சமுதாய தொழிலதிபர்களை ஒன்று

சேருங்கள், பலர் இயல்பாகவே போட்டிமனப்பான்மை உடையவர்களாக இருப்பதால், பகிர்ந்து கொள்ளுதல் மிகவும் கடினமாகலாம்.

→ சிலநேரங்களில் பிரச்சனைகள் உண்டுபண்ணுகிறவர்கள் என்று நினைக்கப்படக்கூடிய சமுதாய தொழிலதிபர்களோடு பொறுமையாக இருக்க சபைத்தலைவர்களுக்கு உதவி செய்யுங்கள். அவர்கள் வைராக்கியமற்றவர்களாக, சபைக்கு மிகவும் எதிரானவர்களாக, நிர்வாகிக்க கடினமானவர்களாக, ஆணவம்கொண்டவர்களாக, சுயநலமிக்க தீர்மானம் உடையவர்களாக மற்றும் தாழ்மை இல்லாதவர்களாக பார்க்கப்படலாம்-மேலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த சேவைத்திட்டங்களின் ஆதாரங்களை உரிஞ்சுகின்ற, சபையின் முக்கியமான ஊழியத்திற்கு அச்சுறுத்தல்களாகவும் பார்க்கப்படலாம்.

→ சமுதாய தொழிலதிபர்கள் வளர இடம்கொடுங்கள்- திருச்சபையின் சில கட்டமைப்புகளில் இருந்து அவர்களை விடுதலைசெய்யுங்கள். அவர்களை மேற்பார்வையிட ஒரு தனியார் குழுவை கொடுங்கள், ஆனால் அவர்கள் புதிய ஆக்கப்பூர்வமான வழிகளில் பணியை வளர்க்க அனுமதியுங்கள்.

→ அதிகமான கட்டுப்பாடுகள் மற்றும் குழு கூட்டங்களினால் சமுதாய தொழிலதிபர்களை திணரடிக்காதீர்கள், மாறாக திட்டத்திற்கும் நிதி நிர்வாகத்திற்கும் அதிகமான கவனம் செலுத்துங்கள்.

→ ஒரு சபைத்தலைவராக நீங்கள் நிச்சயமற்று இருந்தால் சீஷர்களிடத்தில் கமாலியேலின் மனப்பாங்கை பெற்றுக்கொள்ளுங்கள் (அப்போஸ்தலர் 5:38-39). கடவுள் வேலையில் ஈடுபட்டு இருந்தால், ஜாக்கிரதையாக இருங்கள் ! இல்லை என்றால், தானாகவே அது மங்கிப் போய்விடும். (எனினும், மக்கள் எச்ஐவி சேவைத் திட்டங்களில் உணர்வுள்ளவர்களாக இருந்து இந்த அதிகாரத்திலும் அடுத்த அதிகாரத் திலும் கொடுக்கப்பட்டுள்ள சட்டங்களை பின்பற்றுகிறார்கள் என்று யூகிக்கப்படுகிறது)

→ கடவுள் கிருபையும் ஞானமும் கொடுக்கவேண்டும் என்று பிரார்த்தனை செய்யுங்கள். சமுதாய தொழிலதிபரோடு வாழ்வது சுலபமல்ல! இப்போது நாம் வித்தியாசம் ஏற்படுத்துவது எப்படி என்றும் காரியங்களை செயல்படச் செய்வது எப்படி என்றும் பார்த்தோம், இப்போது நாம் மக்கள் இயக்கங்களுக்கு திரும்புவோம். நாடு முழுவதையும் அதற்கு மேலும் தொடுவதற்கு நாம் எப்படி மக்கள் இயக்கத்தை உருவாக்குவது?

அதிகாரம் 10

மக்கள் இயக்கங்கள் எப்படி தேசங்களை தொடமுடியும்?

தேசங்களை தொடக்கூடிய மக்கள் இயக்கங்களோடு ஒப்பிட்டால் நிறுவனங்கள், சேவைத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் குறைந்த தாக்கம் உடையனவே. இதை நாம் சரித்திரத்திலே பார்க்கிறோம், ஒரு வலிமையான தரிசனத்தினால் ஊக்கமடைகிற ஆண்களும் பெண்களும் அவர்கள் செல்கிற இடங்களுக்கெல்லாம் அவற்றை எடுத்துச் சென்று, மேலும் பல மக்கள் அதையே செய்யும்படி ஆர்வமூட்டப்படுகிறார்கள்.

ஆதித்திருச்சபை ஒரு மக்கள் இயக்கம். இன்று நாம் கொடுக்கும் முக்கியத் துவத்தை காட்டிலும் குறைந்த முக்கியத்துவத்தையே அமைப்புகளுக்கும் நிறுவனங்களுக்கும், முறைசார்ந்த பயிற்சி நிகழ்ச்சிகளுக்கும், வேதபாடசாலைகளுக்கும், குழு கூடுகைகளுக்கும் கொடுத்தார்கள். அதன் முக்கியத்துவம் விசுவாசம், இழந்துபோன உலகத்திற்கான வைராக்கியம், தைரியம், மனவுறுதி மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையிலேயே இருந்தது.

திருச்சபைகளாக நாம் புதிய நிறுவனங்களை உருவாக்கி அவை சீக்கிரத்தில் வளர்ந்து வலிமையான சட்ட திட்டங்களையும், தலைமைக் குழுக்களையும் உடைய நிறுவனங்களாக மாற்றுவதிலும் சிறந்து விளங் குகிறோம். நிச்சயமாகவே நமக்கு வலிமையான அமைப்புகள் தேவைதான், அவற்றில் சில நிறுவனங்களாகவும் மாறவேண்டும், ஆனால் இன்னும் ஒரு வழியும் இருக்கிறது. நீங்கள் அச்செயல்முறையை இடதுபக்கத்திற்கு கீழே அழுத்தலாம் (இயல்பாக) அல்லது வலதுபுறம் அழுத்தலாம்.

நிறுவனம்-› அமைப்பு-› கூட்டுறவு-› மக்கள் இயக்கம்

சிலசமயங்களில் எல்லாவற்றையும் கட்டுப்படுத்த முயற்சி செய்து மக்கள் இயக்கத்தை சேதப்படுத்துகிறோம் அல்லது அழித்துவிடுகிறோம். நாம் ஒரு நிறுவனமாக நிலைத்து இருக்கலாம், ஆனால் வலதுபுறம் செல்வது அதிகமான மக்களை ஒருங்கிணைக்கலாம். ஏசியிடி இயக்கம் ஒவ்வொரு நிகழ்ச்சியும் சுகந்திரமாக, சுயமாக நிர்வாகம் செய்து, உள்ளூர் குழுக்களுக்கு பொறுப்பாக, உள்ளூர் மக்களால் (ஏறத்தாழ எல்லா காரியங்களிலும்) நடத்தப்பட்டபோதுதான் விரைவாக வளர்ந்தது.

சமீபத்து மக்கள் இயக்கங்களின் எடுத்துக்காட்டுகள்

நிச்சயமாக உங்கள் நாட்டில் இருந்து மக்கள் இயக்கத்தை உங்களால்

நினைக்கமுடியும் என்று நான் உறுதியாக இருக்கிறேன், ஆனால் இங்கே UKவில் மாத்திரம் இருந்த தனிப்பட்ட முறையில் எனக்கு தெரிந்த சில மக்கள் இயக்கங்களை குறிப்பிடுகிறேன்.

மார்ச்ஃபார் ஜீசஸ்

1987ல் லண்டனில், 2500 பேருக்கு மேற்பட்டோர் ஊர்வலமாக பாடி துதித்து, நகரத்துக்காக ஜெபித்துச் சென்றனர். அது " இயேசுவுக்காக ஊர்வலம் (மார்ச் ஃபார் ஜீசஸ்)" என்று அழைக்கப்பட்டது. 1994ல் ஊர்வலமாக செல்லும் யோசனை உலகம் முழுவதும் பரவியது. ஒரே நாளில் 170 நாடுகளில் 1 கோடி மக்கள் நகரங்களில் ஊர்வலமாக சென்றார்கள். 2000ல் 6 கோடி மக்கள் ஊர்வலங்களில் பங்கெடுத்தனர். இவை அனைத்தும் ஒரு சிறிய அலுவலக குழுவினால் நகர்த்தப்பட்டது, அவர்கள் ஆதாரங்களை அஞ்சல் செய்தார்கள், ஒரு பத்திரிக்கையை உருவாக்கினார்கள், செல்வாக்கு மிகுந்த சபைத் தலைவர்களை ஊக்கப்படுத்தி மாநாடுகளில் பேசவைத்தார்கள், இன்னும் பல நிகழ்வுகள் நடந்தன.

ஆல்ஃபா

ஆல்ஃபா பயிற்சிவகுப்புகளில் இப்போது உலக அளவில் 163 நாடுகளில் 33,500 பயிற்சிவகுப்புகளில் 1.1 கோடி மக்கள் பங்கெடுக்கிறார்கள். ஆனால் அது ப்ராம்ப்டன், லண்டனில், 1970ல் ஹோலி ட்ரினிட்டி சர்ச்சில் ஒரு சிறிய வேதபாடமாக தொடங்கப்பட்டது, பின்பு நிக்கி கம்பெல்லினால் 1990ல் மறுவடிவமைக்கப்பட்டது. இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஒவ்வொரு சபைப் பிரிவிலும் வேகமாக பரவியது, பயிற்சி மாநாடுகள், செய்தித் தாள்கள், புத்தகங்கள் மற்றும் பல ஆதாரங்கள் இவற்றுக்கு உணவூட்டின. ஹோலி ட்ரினிட்டி சர்ச்சில் ஒரு சிறிய குழு இதை நிர்வாகிக்கிறது, ஆனால் பெரும் பாலான வேலைகள் உலகம் முழுவது இருக்கிற தன்னார்வத்தொண்டர் களினால் செய்யப்படுகின்றது, அவர்கள் பயிற்சியையும் ஆதாரங்களையும் உபயோகிக்கிறார்கள்.

24/7

செப்டம்பர் 1999ல், இங்கிலாந்தில் ஒரு இளைஞர்கள் குழு நிறுத்தாமல் ஒரு மாதம் முழுவதும் சங்கிலித்தொடராக ஜெபிக்க முடிவுசெய்தார்கள், பல்வேறு மக்கள் ஒவ்வொரு மணிநேரமும் ஜெப அறைக்குள் வருவார்கள். கிறிஸ்துமஸ் வரை அவர்கள் தொடர்ந்து செயல்பட்டார்கள். விரைவில் நாடுமுழுவதிலும், மற்ற நாடுகளிலும் தற்காலிக ஜெப அறைகள் தோன்றின, வழக்கமாக ஒரு வாரத்திற்கு மாத்திரம் செயல்படுவதாக. சில அறைகள் நிறுத்தப்பட்ட போது சில அறைகள் தொடங்கப்பட்டன. இந்த மக்கள் இயக்கம் '24/7' என்று அழைக்கப்பட்டது-ஒரு நாளுக்கு 24 மணிநேரம், வாரத்தில் 7 நாட்கள். மின்னஞ்சல் மூலமாகவும் அவர்களுடைய இணையதளம் மூலமாகவும் ஒருவரிடமிருந்து ஒருவருக்கு வார்த்தை பரவியது... 24/7ம் ஒரு சிறிய குழுவினால் ஆதரிக்கப்பட்டதுதான்.

உங்களுக்கு புரிகிறதா. மக்கள் தரிசனத்தை பெற்று செயல்கள் நடக்கச் செய்யும்போது, தங்களுடைய் சூழ்நிலைக்கு அவற்றை ஏற்றதாக எடுத்

துக்கொள்ளும்போது, சுடரை எடுத்துச்செல்லும்போது நீங்கள் எதிர்பார்ப்பதைவிட பரவலாகவும், வேகமாகவும் இந்த மக்கள் இயக்கங்கள் பரவுகின்றன. அவர்கள் பயிற்சிகள், நிகழ்வுகள் மற்றும் நன்கு தயாரிக்கப்பட்ட ஆதாரங்களை உபயோகித்து கோடிக்கணக்கானோருடைய கற்பனைகளைக் கைப்பற்றுகிறார்கள்.

மத்திய ஐரோப்பாவில் ஏசியிடி மக்கள் இயக்கம்

இதோ ஸ்டுவார்ட் ஆங்கஸ் என்பவரால் துவங்கப்பட்ட மக்கள் இயக்கத்திற்கான மேலும் ஒரு எடுத்துக்காட்டு, அவர் செக் குடியரசுக்கு செல்லவேண்டும் என்று 1994ல் அழைக்கப்பட்டதாக உணர்ந்தார். ஒரு பள்ளி கல்வியாளராக அவர் ஏசியிடி UKவினால் பயிற்றுவிக்கப்பட்டார், செக் குடியரசில் அதேபோன்ற பணியை உருவாக்க தரிசனம் பெற்றார். அவர் வந்தபோது இளைஞர்களுக்கு எச்ஐவி குறித்தும் பாலுறவு சுகாதாரம் குறித்தும் ஒரு புத்தகத்தை எழுதினார், மேலும் சில பள்ளிகளிலும் பாடங்களை நடத்தினார், ஆனால் அழைப்புகளை பெற்றுக்கொள்வது கடினமாகியது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தன் தாய்நாடான நியூசிலாந்துக்குச் செல்ல தீர்மானித்தார்.

அவரை வழியனுப்பி வைக்கவும் ஜெபிக்கவும் ஏறத்தாழ 40 பேர் வந்திருந்தார்கள். பலர் கண்ணீர் சிந்தினார்கள். டோமஸ் ரெஹாக், ஒரு அனுபவம் வாய்ந்த போதை மீட்புப் பணியாளர், கடவுளால் ஆழமாக தொடப்பட்டார். UKவில் இருந்த ஒருவர் ஸ்டுவார்ட்டின் இருதயத்தில் மெழுகுவர்த்தியை கொளுத்தியதைப்போலவும், அவர் இப்போது டோமஸிடம் ஒரு மெழுகுவர்த்தியை கொளுத்துவதைப் போலவும் இருக்கிறது. அவர் அந்த பணியை தொடரவேண்டும் என்று டோமஸுக்குத் தெரியும்.

சில வாரங்களுக்குள், பல பள்ளிகள் அவரை அழைப்பதை டோமஸ் கண்டுகொண்டார். விரைவில் அவர் 30 சபை தன்னார்வத்தொண்டர்களுக்கு பயிற்சியளித்தார், ஒரு தேசிய நிகழ்ச்சி உருவானது, ஆண்டுதோறும் 60,000 இளைஞர்களை அது சென்றடைந்தது. இப்போது செக் குடியரசில் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் வெளியேறும் முன்னதாக ஏசியிடி அங்கத்தினர் யாரையாகிலும் சந்தித்துவிடுகிறார்கள். செக் அரசாங்கத்தோடும், ஐரோப்பிய ஐக்கியத்தோடும் இணைந்து நிகழ்ச்சி தொடர்ந்து விரைவாக வளர்ந்துகொண்டு இருக்கிறது.

டோமாஸைப் பற்றி கேள்விப்பட்டபோது மிலன் ப்ரஸ்பர்கர் என்ற ஸ்லோவாக்கியாவில் உள்ள ஒரு வாலிபர் பணியாளர் பயிற்சிக்குச் சென்று ஸ்லோவாக்கியாவில் ஒரு புதிய ஏசியிடி நிகழ்ச்சியை உருவாக்கினார். 2000 தலைமை ஆசிரியர்களுக்கும் 3000 வாழ்க்கை திறன் ஆசிரியர்களுக்கும் பயிற்சியளிக்கும்படி அரசாங்கத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்டார். ஸ்லோவாக்கிய குழு உயர் நிலைப்பள்ளி மாணவர்களில் 60 சதவிகிதம் பேரை சென்றடைந்தது.

பின்பு டோமஸ், மாரெக் ஸ்லேன்ஸ்கியின் மெழுகுவர்த்தியை பற்றவைத்தார்- அவர் செக் மாணவர், சைபீரியாவில் பணியாளராக தன்னுடைய சொந்த சபையினால் ஆதரிக்கப்பட்டார். உடலுறவின் மூலமாகவும்,

போதை ஊசியினாலும் எச்ஐவி பரவுவதை தடுக்க 11 கால இடங்களை உடைய, 90 நகரங்களில் இருக்கும் நூற்றுக்கணக்கான உருசிய கல்வியாளர்களுக்கு பயிற்சி அளித்தார். அது முதல், டோமஸ்ஸும் மற்ற தலைவர்களும் அந்த இடத்தில் இருக்கும் எட்டு நாடுகளில் இருக்கும் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தார்கள்.

எவ்வித நிதியுதவியும் இல்லாமல் அத்தனை ஆண்டுகளுக்கு முன்பாக ஸ்டுவார்ட் ஒரு மக்கள் இயக்கத்தை 'தற்செயலாக' உருவாக்கினார். எதிர்காலத்தில் கடவுள் உங்களை வைத்து என்ன செய்யமுடியும்?

ஒரு மக்கள் இயக்கத்தை எப்படி தொடங்குவது- ஏழு படிகள்

மக்கள் இயக்கங்கள் உலகம் முழுவதையும் தொடமுடியும். எங்கிருந்து ஒன்று தொடங்கும் என்பதை உங்களால் யூகிக்கமுடியாது. பரிசுத்த ஆவியானவர் அவர் விரும்புகிற இடத்திற்கு செல்வார் என்று இயேசு கூறியதை நினைவில்கொள்ளுங்கள். ஆனால் புதிய மக்கள் இயக்கங்கள் தொடங்குவதற்கு முன்பாக சில பொதுவான அறிகுறிகளை நாம் காணமுடியும். நீங்கள் செய்வது அனைத்திலும் பரிசுத்த ஆவியானவர் செய்கின்ற அனைத்திற்கும் உணர்வுள்ளவர்களாக இருங்கள், இயேசுவை எல்லாவற்றிற்கும் மையமாக வைத்திருங்கள். எல்லாம் உங்களை சார்ந்து இருப்பதைப்போல நடந்துகொள்ளுங்கள், எல்லாம் கடவுளை சார்ந்து இருப்பதைப்போல பிரார்த்தனை செய்யுங்கள்.

1. உங்கள் கதையைச் சொல்லுங்கள்

தனிப்பட்டதாக மாற்றுங்கள்-மேசேயையும் எரிகிற முட்செடியையும் நினைவுபடுத்துங்கள். ஏதாகிலும் நடப்பதற்கு முன்பாக மோசே தன்னுடைய கதையைச் சொல்லவேண்டியதாக இருந்தது. உங்கள் கதை உண்மையில் முக்கியமானது. பக்தி பரவக்கூடியது, வலிமையானது, மாற்றத்தை விரும்பாதவர்களுக்கு ஆபத்தானது ! கடவுள் உங்களை என்ன செய்யச் சொன்னார் என்பதையும் ஏன் என்பதையும் குறித்த உங்கள் உணர்வையும் அழைப்பையும் விவரியுங்கள்.

2. உங்கள் ஊழியத்தை விவரியுங்கள்-வித்தியாசத்தை ஏற்படுத்துதல்

தேவை என்ன என்பதையும், அது எவ்வளவு முக்கியம் அவசரமானது என்பதையும் மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். மோசே தெளிவான விளக்கத்தை கொடுத்தார். நீங்கள் எப்படி குறிவைக்கிறீர்கள், கடவுளுடைய உதவியோடு, உலகத்தை மாற்ற. மக்களுக்கு கொடுக்க ஒரு சிறிய விளக்கத்தை அச்சிடப்பட்ட தாள்களில் ஏற்படுத்துங்கள். நீங்கள் ஒரு பெரிய குழுவிற்கு பேசினால், பின்பு பவர்பாய்ன்ட்டும் மற்ற தகவல்தொடர்பு கருவிகளும் மிகவும் உதவியாக இருக்கும்- ஒரு சித்திரம் 1000 வார்த்தைகளுக்குச் சமம், மற்றும் 15 விநாடி இணைக்கப்பட்ட துண்டுகாட்சி படங்கள் 10,000 வார்த்தைகளுக்குச் சமம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒரு காட்சியில் சில வார்த்தைகளுக்குமேல் வைக்காதீர்கள், நீங்கள் கதை சொல்லச்சொல்ல காட்சிகளை வேகமாக நகர்த்துங்கள். ஒரு டிவி விளம்பரத்தில் எத்தனை படங்கள் நகர்கின்றன என்பதை கவனியுங்கள்.

3.முக்கியமான மக்களுக்கு உங்களுடைய திட்டத்தை வெளிப் படுத்துங்கள்

இயேசு யாரிடத்தில் 'எல்லாவற்றையும்' கூறுகிறார் என்பதில் கவனமாக இருந்தார், அதிகமான காரியங்களை சீஷர்களிடத்தில் மாத்திரமே கூறினார். உங்களுடைய முழுமையான திட்டம் உங்களுடைய ஆரம்பகால ஆதரவாளர்கள் சிலரை அச்சுறுத்தலாம், எனவே கவனமாக இருங்கள். அவர்கள் ஈடுபடும்போது அதிகமாக புரிந்துகொள்வார்கள்.ஆரம் பகாலத் திலேயே உங்கள் சபைத்தலைவர்களை ஈடுபடுத்த முயற்சி செய்யுங்கள். அவர்களுடைய ஆதரவும் முக்கியம். அவர்கள் தரிசனத்தை பகிர்ந்துகொள் ளவில்லை என்றால், நீங்கள் தொடர்ந்து செய்துதான் ஆகவேண்டும், ஆனால் தொடர்ந்து ஜெபித்து அதற்காக வேலைசெய்யுங்கள்.

4.நீங்கள் ஏற்கனவே எடுத்துக்கொண்ட முயற்சிகளை காண்பியுங்கள்-கண்காணிப்பும்/மதிப்பீடும்

தேவைப்படுகிறவர்களின் நம்பிக்கையை வெல்வதற்கு, நீங்கள் ஏற்கனவே எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறீர்கள் என்பதை காண்பியுங்கள். தகவல்கள், எண்ணிக்கைகள், நன்றிமடல்கள், விளைவுகள் அனைத்தையும் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அற்புதமான காரியங் களை பார்த்தீர்கள் என்று கூறினால் மாத்திரம் போதாது.

5.நம்பகத்தன்மையை உருவாக்குங்கள்-ஆதரவு அடிப்படையில், பங்காளத்துவம்

தங்கள் பெயரை உங்களுக்கு தானமாக கொடுத்து உங்களை ஆதரிக்கக் கூடிய முக்கிய தலைவர்கள் அல்லது அமைப்புகளை தேடுங்கள். அவர்கள் ஆலோசனை சங்கத்தின் உறுப்பினர்களாக இருக்கவிரும்பலாம், அல்லது உங்கள் பணி அவர்களால் ஆதரிக்கப்படுகிறது என்று சொல்லிக்கொள்ள ஒரு சிறிய நன்கொடையை கொடுக்கலாம். உங்கள் சபைத்தலைவர்கள் இதை நிகழ்த்த உதவலாம். வெற்றி வெற்றியைக் கொண்டுவரும். இயேசு கூறியதைப்போல "உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்" (மத்தேயு 25:29)

6. உங்களுடைய பயணத்தில் இணைந்துகொள்வதை மக்களுக்கு சுலபமாக்குங்கள்

சபையில் இருக்கும் அனைவரும் உங்களுடைய வைராக்கியத்தையும் அழைப்பையும் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். கிறிஸ்துவின் ஒரே உடலில் நாம் அனைவரும் பல்வேறு பகுதிகளாக இருக்கிறோம்-ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு முக்கியமான அழைப்பின் பகுதிகள் இருக்கின்றன. ஆனால், எவ்வளவு குறைவாக இருந்தாலும் மக்கள் சில பதில்களை கொடுக்க வழியை சுலபமாக்குங்கள். எடுத்துக்காட்டாக, இந்த புத்தகத்தின் இலவச பிரதியை எடுத்துக்கொள்ளுமாறு மக்களை நான் அடிக்கடி ஊக்கப்படுத்துவேன் - அவர்கள் அதை அதிகமான சம்பவங்கள் நடக்கிற ஒரு நாட்டின் சேவைத்திட்டப் பணியாளரிடம் கொடுத் துவிடவேண்டும் என்கிற நிபந்தனையின்பேரில். இது எல்லோருமே செய் யக்கூடிய, தாங்கள் ஈடுபடுவதை உணரவைக்கின்ற ஒரு சிறிய காரியம்.

மற்ற தலைவர்களை தயார்படுத்தி, விடுவித்து, பொறுப்பு கொடுங்கள். பக்குவமான நிதி தலைமைத்துவத்திற்கான கடைசி பரிசோதனை இதோ: செய்ததை சொல்வது; கொடுத்துவிடுதல்; எல்லாவற்றையும் கட்டுப்படுத்த முயற்சிக்காதீர்கள். மற்றவர்களிடம் தலைமைத்துவத்தை கொடுக்கும்போது, உடன்பாட்டோடு ஆதரவாக இருங்கள், அல்லது உங்களுடைய ஆரோக்கியம் போய்விட்டது என்று மக்கள் நினைக்கலாம், அவர்களுடைய ஆரோக்கியமும் போய்விடலாம். 'நிறுவனர் நோய்'யினை நினைவுபடுத்துங்கள். ஒரு சக்திவாய்ந்த, தரிசனமுள்ள நிறுவனர் காரியங்களை புதிய நிலைக்கு எடுத்துச்செல்லக்கூடிய மற்றொருவரிடம் ஒப்படைக்க முடியாததினால் பல அமைப்புகள் வேகம் குறைந்துவிடுகின்றன, சில நிலைத்திருக்காமல் தோல்வியடைகின்றன. எனவே புதிய தலைமை உங்களைவிட காரியங்களை வித்தியாசமாக செய்ய எதிர்பாருங்கள். அது கடவுளுடைய வேலை என்பதில் நம்பிக்கை வையுங்கள், அவர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார். ஆதரவாகவும் ஊக்கமளிப்பவராகவும் இருங்கள்.

சிறிய குழுக்களை வைத்து எப்படி பெரிய நிகழ்ச்சிகளை வளர்ப்பது

பெரிய தேசிய நிகழ்ச்சிகள் சிறிய தேசிய அலுவலகங்களை வைத்துக் கொண்டு சுலபமாக வேகமாக வளரலாம், தலைமைத்துவம் மையப்படுத்தப்படவில்லை என்றால் - ஏசியிடி உருசியாவிலும், உக்கிரேனிலும், ஸ்லோவாக்கியாவிலும் காணப்படுவதைப்போல. அதிகமான மத்திய கட்டுப்பாட்டோடு ஒரு மக்கள் இயக்கத்தை உருவாக்குவது சாத்தியமற்றது- நீங்கள் ஒரு வலிமையான பாரம்பரிய அமைப்பைதான் உருவாக்குவீர்கள்.

மையப்படுத்தப்படாமை என்றால் தேசிய தலைவரிடமும் ஒவ்வொரு மாநில குழுத்தலைவரிடமும் ஒரு 'ஒப்பந்தம்' உருவாக்குவது ஆகும்- ஒரு பெரிய நிதியுதவியாளரிடம் நீங்கள் செய்வதைப்போன்ற வழியிலேயே. இந்த ஒப்பந்தத்தில் இருக்க வேண்டியவை:

→ பொறுப்பாக கொடுக்கப்படும் தெளிவான இடங்கள்/மாநிலங்கள்

→ அடுத்த 12 மாதங்களுக்கு உள்ளூர் செயல்பாட்டுத் திட்டங்கள்

→ பணி முறைமையின் வரைபடம்

→ தீர்மானம் எடுப்பதற்கான கட்டுப்பாடுகள்

→ முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும், ஆதரவு மற்றும் வழிநடத்துதல் கொடுப்பதற்கு எவ்வளவு கால இடை வெளியில் கூடுகைகள் நடத்தப்படும்.

→ அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை எப்படி அளவிடுவார்கள்/ கண்காணிப்பார்கள் என்கிற விவரங்கள் ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது காலாண்டிற்கும்செலவாகும் நிதி

→ தேசிய குழுவில் இருந்து மாநில குழுக்களுக்கு நிதி எப்படி பரிமாறப்படும் என்கிற விபரங்கள்

→ மாதாந்திர பதிவேட்டை பராமரிக்கும் விபரங்கள்

→ நிதி ஒதுக்கீட்டை காட்டிலும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ செலவுசெய்தால் என்ன நடக்கும் என்கிற விவரங்கள்

- ➔ அறிக்கைகள் எப்படி, எந்த தேதியில் யாரால் உருவாக்கப்படும்
- ➔ கருத்துவேறுபாடு ஏற்பட்டால் என்ன நடக்கும்-வேறு யார் இதில் ஈடுபடுவார்கள்
- ➔ அவர்கள் செய்வது தேசிய நிகழ்ச்சியில் எப்படி பொருந்தும் என்கிற வரைபடம்
- ➔ தேசிய மற்றும் மாநில பிரச்சனைகள் குறித்த தீர்மானங்களில் அவர்களுடைய கருத்துக்களை எப்படி கொடுப்பது.

தேசிய தலைவர் பின்பு ஒப்பீடுகளின்படி சுய-திருப்தியடைந்த சில குழுக்களுக்கு தலைவராக மாறுகிறார்கள். தரிசனத்திற்கும், ஒட்டுமொத்த நிர்வாகத்திற்கும், தரக்கட்டுப்பாட்டிற்கும் அவர் பொறுப்பாக இருக்கிறார்; ஒட்டுமொத்த திட்டம்; (இதுவரை) மாநில அமைப்பின்கீழ் இல்லாத புதிய நிகழ்ச்சிகள்; மாநிலத் தலைவர்களுக்கான பயிற்சியும் ஆதரவும்; தேசிய குழுவை இயக்குதல் (மாநில தலைவர்களை சேர்த்து-மதிப்புகள், ஒழுக்கங்கள், பொதுவான பிரச்சனைகள், திட்டம் அமைத்தல்); சர்வதேச மற்றும் தேசிய நிதியுதவியாளர்களுக்கு அறிக்கைகொடுத்தல்; நிதி வசூலித்தல்-விண்ணப்பங்கள்/அறிக்கைகள் தயாரிப்பதில் மாநிலத் தலைவர்களின் உதவியோடு.

உள்ளூர் திருச்சபையின் மூலமாக பணிசெய்தல்

நடைமுறையில், காரியங்கள் மையப்படுத்தப்படாமல் இருக் கும்போது, ஒவ்வொரு மாநில குழுவும் ஒரு குறிப்பிட்ட சபையோடு நெருங்கிய உறவில் இருக்கிறதை நீங்கள் காண்பீர்கள்-மாநிலத் தலைவர் செல்லக்கூடிய சபையாக இருக்கலாம்.

நிலைத்தன்மை, மேற்பார்வை, ஆதரவு, பயிற்சி, ஊக்கம் மற்றும் மாநில குழுவுக்கு சில நிதி கட்டுப்பாடு ஆகியவற்றை அந்த சபையின் தலைவர் கொடுத்து உதவ முடியும். உருசியாவில், எடுத்துக்காட்டாக, 30 நகரங்களில், 30 சபைகளை மையமாக வைத்து 300 ஏசியிடி கல்வியாளர்கள் பணிசெய் கிறார்கள். எதிர்கால திட்டங்கள் மற்றும் தரிசனக்களை உருவாக்குவதில், சபையின் ஊழியத்தின் ஒரு பகுதியாக சபைத்தலைவர்கள் முக்கியப் பங்குவகிக்கலாம்.

ஒரு உள்ளூர் சபையில் இருந்து ஒரு குழு உருவானால் மற்ற சபைகளும், பிரிவுகளும் ஈடுபட விரும்பமாட்டார்கள் என்று சிலர் கவலைப்படுகிறார்கள். ஆனால் இவை அனைத்தும் ஆரம்பகட்டத்தில் ஈடுபடக்கூடிய உள்ளூர் தலைவர்களின் உள்ளூர் உறவுகளின் அடிப்படையில் இருக்கின்றன. பயிற்சி நிகழ்ச்சிகள் வெவ்வேறு சபைகளினால் நடத்தப்படும்படியாக நீங்களும் காரியங்களை மாற்றலாம். குழு அங்கத்தினர்கள் வெவ்வேறு சபைகளில் இருந்து வருகிறவர்களாக இருப்பதை உறுதிசெய்யலாம், அல்லது வெவ்வேறு சபைகளின் அங்கத்தினர்களை சங்க உறுப்பினர் களாகவும் நியமிக்கலாம்.

நீங்கள் ஒரு தேசிய அமைப்பாக இருந்தால், நீங்கள் உங்களுடைய உள்ளூர் அலுவலகங்களை, பேப்டிஸ்ட் சபையிலும், மற்றொன்றை

பெந்தகோஸ்தே சபையிலும், மற்றொன்றை ஆப்பிரிக்கன் - இன்ஸ்டிடியூட் சபையிலும் மற்றொன்றை ஆங்கிலிக்கன் சபையிலும், வித்தியாசமான சபைகளில் வைத்திருக்கலாம்.

உண்மை என்னவெனில் என்னுடைய புதிய பணியை ஒரு பட்டணத்தில் சிறிய அலுவலகத்தில் வைத்துக்கொண்டு, எந்த சபைத்தலைவருடைய அர்ப்பணிப்பும் இல்லாமல் இருப்பதைவிட, நான் ஒரு வலிமையான தரிசனமுடைய, தலைவர்களின் முழு ஆதரவு உடைய பெரிய சபையில் வைத்துக்கொள்வேன்,

சில நாடுகளில் ஒரு கிறிஸ்தவ சுகாதார அமைப்பை பதிவுசெய்வதே சாத்தியமற்றது. மேலும் சபையின் இணைப்புகள் மிகவும் வலிமையானதாக தெரிந்தால், என்ஜிஓ சேவைத்திட்டம் உடனடியாக நிறுத்தப்படலாம்- பணியாளர்களும் சிறைக்குச் செல்ல நேரிடலாம். நீங்கள் மிகவும் ஞானமாக செயல்பட்டு, நிபுணரின் ஆலோசனையின் படி சட்டத்தின்படி எல்லாவற்றையும் செய்கிறீர்களா என்கிறதை அச்சூழ்நிலையில் உறுதிசெய்துகொள்ளுங்கள். சில இடங்களில் செயல்படுவதற்கான ஒரே வழி என்ஜிஓ பராமரிப்பு மற்றும் நோய்தடுப்புக்கான மதம்சாரா அமைப்பாக பதிவுசெய்வதுதான்.

சரியான மக்களை பணியமர்த்துங்கள்

பணியமர்த்துவதில் விசேஷ கவனம் செலுத்துங்கள். நீங்கள் வேலையை கொடுப்பதற்கு முன்பு, உண்மையான தேவை என்ன நுட்பம் என்ன என்பதில் தெளிவாக இருங்கள். விளக்கமான பணிவிவரத்தை எழுதுங்கள். எப்படிப்பட்ட நபருக்காக நீங்கள் ஜெபிக்கிறீர்கள்? ஒரு நேர்காணலில் அவர்களை எப்படி நீங்கள் மதிப்பீடு செய்யப்போகிறீர்கள், என்னென்ன கேள்விகள் கேட்கவேண்டும், அவர்களுடைய நோக்கங்களை குறித்து எந்த பகுதிகளை ஆராயப்போகிறீர்கள். நேர்காணலின் ஒரு பகுதியாக ஒரு பணி அல்லது பேச்சுரை நிகழ்த்த வைப்பது அவர்களுடைய குணத்தை வெளிப்படுத்தலாம்.

பணியமர்த்தும்போது, குறைந்தபட்சம் மேலும் இரண்டுபேராவது அந்த தீர்மானத்தில் ஈடுபடுவதை உறுதிசெய்யுங்கள். தவறுகள் செய்வது சுலபம், மேலும் இந்த நபர் ஏற்கனவே இருக்கும் குழுவில் பொருந்தவேண்டும். அவர்களுடைய பழைய உடன் வேலையாட்களோடு அல்லது சபைத் தலைவரோடு பேசுங்கள். அது முக்கியமான பதவியாக இருந்தால், முதலில் அவர்களை தற்காலிகமாக பணியமர்த்தி, முயற்சியின் அடிப்படையில் காரியங்கள் எப்படி வேலைசெய்கின்றன என்று பாருங்கள்.

உங்களுடைய சிறந்த தன்னார்வத்தொண்டர்களே பலநேரங்களில் நீங்கள் பணியமர்த்தக்கூடிய சிறந்த மக்களாக இருப்பார்கள்: அவர்கள் உங்களிடத்தில் அர்ப்பணிப்போடு இருக்கிறார்கள் என்பதையும், இந்த சேவையை குறித்து வைராக்கியமாக இருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அவர்கள் பணியை புரிந்துகொண்டவர்கள். அவர்களுடைய செயல்பாட்டை நீங்கள் பார்த்து இருக்கிறீர்கள். அவர்கள் ஏற்கனவே பயிற்றுவிக்கப்பட்டுவிட்டார்கள். அவர்கள் குழுவின் ஒரு பகுதி. அவர்கள் பணத்திற்கு மட்டும் ஆசைப்படுவதற்கான சாத்தியங்கள் குறைவு. நிதி

வசூலிப்பது ஒரு பிரச்சனையாக இருந்தால் அவர்கள் அமைப்பை விட்டு வெளியேறுவதைவிடவும், மீண்டுமாக தன்னார்வத்தொண்டர்களாக பணிசெய்வதற்கான சாத்தியங்கள் அதிகம்.

உங்களுடைய மதிப்புகளுக்கு உண்மையாக இருங்கள்

நீங்கள் ஒரு வலிமையான நிகழ்ச்சியை உருவாக்க விரும்பினால், உங்களுடைய முக்கியமான மதிப்புகளில் தெளிவாக இருங்கள்: எல்லாவற்றிற்கும் அடிப்படையில் சில கருத்துக்கள் இருக்கின்றன. அவை என்ன செய்கிறீர்கள் என்பதைக் காட்டிலும் நீங்கள் எப்படிச் செய்கிறீர்கள் என்பதை பாதிக்கின்றனவாக இருக்கின்றன. அவை உங்களுடைய மரபணுவின் தகவல் போல இருக்கின்றன. நீங்கள் செய்யும் வேலையிலும், கலாச்சாரத்திலும், உங்கள் குடும்பத்தின் இயல்பிலும் இருக்கும் கிறிஸ்தவ ஆவியை விவரிக்கின்றனவாக இருக்கின்றன.

உங்களுடைய மதிப்புகள் என்ன?

சில ஏசியிடி தலைவர்கள் சமீபத்தில் சந்தித்து, தங்களுடைய நிகழ்ச்சிகளில் மற்ற விசுவாசம் சார்ந்த அமைப்புகளுடன் பொதுவாக இருக்கிற தங்களுடைய மதிப்புகளின் பட்டியலை பகிர்ந்து கொண்டார்கள். அவை இலக்குகள்; அந்த காரியங்களுக்கு ஏற்றபடி அவர்கள் வாழநினைக்கிறார்கள்

➔ கடவுளுடைய அன்பை உலகிற்கு காண்பித்தல்-குறிப்பாக தங்கள் சமுதாயத்தில் குறைந்த மதிப்பை உடையவர்களாக உணர்கின்றவர்களிடம்.

➔ மக்கள் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவிசெய்து கொள்ள முயற்சி எடுக்க அவர்களை பெலப்படுத்துதல்.

➔ வித்தியாசம் ஏற்படுத்தும்படி ஆண்களையும் பெண்களையும் ஊக்கப்படுத்துதல்

➔ உறவுகள், குழுவாக வேலைசெய்தல், ஒருங்கிணைப்பு, பங்காளர்களாக இருத்தல், நிகழ்ச்சியில் இணைக்கப்பட்டிருக்கிற அனைவரும் ஒரு குடும்பம் என்று உணரும் படியாகச் செய்தல் ஆகியவற்றிற்கு அதிகமான மதிப்புகளை வைப்பது- அவர்கள் பணியாளர்களாக இருந்தாலும், தன்னார்வத்தொண்டர்களாக இருந்தாலும், உதவிபெறுகிறவர்களாக இருந்தாலும்.

➔ சபை ஒருங்கிணைப்பு : எல்லா நிலைகளிலும் சபைகளோடு நெருக்கமாக பணிசெய்வது.

➔ சிறப்பாகவும் சக்திவாய்ந்தும் இருப்பது: எல்லாவற்றிலும் உயர்ந்த தொழில் திறனோடு வேலைசெய்தல்

➔ ஆதாரங்கள்-தகவலளித்தல்: ஆராய்ச்சிகள்/மதிப்பீடுகளின் முடிவுகளை வைத்து நிகழ்ச்சிகளை வடிவமைத்து, முன்னேற்றுவது.

➔ சமுதாயம் சார்ந்து: பெரிய விலையுயர்ந்த கட்டிடங்களைக் கட்டி, தனியாக காரியங்களை இயக்காமல்-ஏற்கனவேஇருக்கும் கட்டமைப்புகள், நிறுவனங்கள், செயல்பாடுகள்,வீடுகள், சபைகளுடன் இணைந்து, அவற்றிற்குள் பணிசெய்வதை முக்கியப்படுத்துதல்.

➔ தீர்க்கதரிசனம் : சமுதாயத்திற்கு சவால்விடும்படியாக கரிசனையும் நம்பிக்கையும் அளிக்கின்ற செய்தியாக வாழமுயற்சிப்பது.

➔ வாலிபர்களை குறிவைத்து - அவர்கள் அதிகமான அபாயத்தில் இருப்பதால் மாத்திரமல்ல, அவர்களால் அதிக நேரம் கொடுக்கமுடியும் என்பதால்.

➔ வலிமையான நிர்வாக அமைப்புகள்-அதிகமான தாக்கத்தை ஏற்படுத்த சில சவால்களை எடுத்துக்கொள்ளுதல்

➔ சமுதாய இணைப்புகளையும் அமைப்புகளையும் உபயோகப்படுத்துதல்

➔ திட்டத்திலும், தீர்மானம் எடுப்பதிலும் சமுதாயத்தை ஈடுபடுத்துவது.

➔ செலவை குறைக்கவும், தகவல்தொடர்பை மேன்மைப்படுத்தவும், வேகமாக வேலைசெய்யவும், தாக்கத்தை அதிகரிக்கவும் தொழில்நுட்பத்தை உபயோகித்தல்.

➔ உள்ளூர் கலாச்சாரத்திற்கு உணர்வுள்ளவர்களாக இருந்து, கவனமாக கவனித்து தேவைக்கேற்றபடி மாறிக்கொள்ளுதல்.

➔ வளைவுத்தன்மை: சூழ்நிலைகள் மாறலாம், புதிய தேவைகளும் வாய்ப்புகளும் வெளிவரலாம்.

➔ ஆக்கப்பூர்வமாகவும் புதுமையாகவும் இருத்தல்-காரியங்கள் செய்வதிலும், கற்பதிலும் புதிய வழிகளை யோசிப்பது.

➔ மற்ற அமைப்புகளோடு இணைந்து காரியங்களை சுலபமாக செய்தல்.

➔ விசுவாசம் சார்ந்த மற்றும் சாராத குழுக்களோடு இணைப்பை உருவாக்குதல்- நாமே எல்லாவற்றையும் செய்ய(அதிகசெலவு மிகவும் தாமதம்) முயற்சிக்காமல் இருத்தல்.

➔ முடிந்தவரை எத்தனை பிரிவுகளுடன் பணிசெய்யமுடியுமோ பணிசெய்வது - கிறிஸ்துவின் உடலை ஒரு காரணத்திற்காக ஐக்கியப்படுத்துதல்.

➔ 2000 ஆண்டுகளாக திருச்சபை வாழ்வின் அஸ்திபாரமாக இருந்துவரும், வேதாகம மதிப்பீடுகளுக்கு உண்மையாக இருத்தல்.

➔ உள்ளூர் சபைகளை, அமைப்புகளை மற்றும் சமுதாயங்களை பெலப்படுத்துதல், அவர்களோடு போட்டியிடாமல் இருத்தல்.

➔ நாம் சென்றடைய நினைக்கிறவர்களின் அதே நாட்டில் அதே கலாச்சாரத்தில் இருக்கும் நிகழ்ச்சி தலைவர்களை தெரிந்தெடுத்தல்-எல்லா சூழ்நிலைகளில் சாத்தியமானது.

நம்முடைய பணியின் அல்லது ஊழியத்தின் தாக்கத்தை எப்படி இரட்டிப்பாக்குவது என்பதை நாம் பார்த்துவிட்டோம், வித்தியாசத்தை ஏற்படுத்த, உயிர்களை காக்க, எச்ஐவி பரவாமல் தடுக்க, பாதிக்கப்பட்டவர்களை பராமரிக்க ஆண்களையும் பெண்களையும் உடைய மக்கள் இயக்கத்தை எப்படி ஊக்கப்படுத்துவது என்பதையும் பார்த்தோம்.

அதிகாரம் 11

தன்னார்வத்தொண்டர்கள் குழுவை வளர்த்தல்

இயேசுவின் அழைப்பை ஏற்று மற்றவர்களுடைய தேவைகளுக்காக தங்களுடைய வாழ்வை கொடுக்கும் தன்னார்வத்தொண்டு கிறிஸ்தவ பாரம்பரியத்தின் மையப்பகுதியாக விளங்குகின்றது. தன்னார்வத் தொண்டர்கள் இல்லாமல், பெரும்பாலான சபைகள் இயங்குவது நின் றுவிடும்.

பெரும்பாலான ஏசியிடி நிகழ்ச்சிகள் தன்னார்வத்தொண்டர்கள் கொடுக் கும் நேரத்தில் இருந்து பயனடைகின்றன-இலவசமாகவோ அல்லது வியாபார விலையில் இருந்து மிகக்குறைந்தவிலையிலோ பணிசெய் கிறார்கள். ஆனால் தன்னார்வத்தொண்டர்கள் என்று நாம் சரியாக அர்த் தப்படுத்துவது என்ன? நீங்கள் உலகம் முழுவதிலும் பார்க்கும்போது

❐ மற்ற நிறுவனங்களிடம் சம்பளம் பெறுகிறவர்கள்- எ.கா.சபை களினால் ஆதரிக்கப்படுகிற அவர்களுடைய பள்ளி கல்வியாளர்கள்.

❐ எந்தவிதமான நிதி உதவியையும் எதிர்பார்க்காமல் தங்கள் நேரத்தை கொடுப்பவர்கள், ஒருவேளை பயணச் செலவை மாத்திரம் கேட்கலாம்.

❐ அதிகமான நேரம் கொடுக்க விரும்புகிறவர்கள், ஆனால் தங் களுடைய அடிப்படை வாழ்விற்கு மாத்திரம் சிறிது ஊக்கத் தொகையை எதிர்பார்க்கிறவர்கள் ஆகியோரை காணலாம்.

தன்னார்வத்தொண்டர்கள் மாதிரி ஆய்வு : ஏசியிடி உக்ரைன்

நான்கு ஆண்டுகளில் 400 தன்னார்வத்தொண்டர்களான பள்ளி பணியாளர்களை ஈர்த்து, பயிற்றுவித்து தக்கவைத்திருப்பதில் மிகவும் வெற்றியுள்ளவர்களாக ஏசியிடி உக்ரைன் விளங்குகிறார்கள். எந்த சேவைத் திட்டமும் பின்பற்றக்கூடிய நடைமுறைகள் பின்வருமாறு

❐ தரிசனம், தேவை மற்றும் வாய்ப்பு ஆகியவற்றை தெளிவாக விளக்கவும்.

❐ ஒவ்வொரு தன்னார்வத்தொண்டரும் உண்மையான வித்தியாசத்தை ஏற்படுத்துவது எப்படி என்று காண்பியுங்கள்.

❐ பணியை விளம்பரப்படுத்த கவர்ச்சிகரமான பொருட்களை உபயோகியுங்கள்.

❒ தற்போது இருக்கும் தன்னார்வத்தொண்டர்களை வைத்து அவர்களுடைய நண்பர்களை சேருங்கள்.

❒ அவர்களுடைய சபையில் அந்த நிகழ்ச்சியை விளம்பரப்படுத்த போதகர்களிடம் பேசுங்கள்.

❒ பங்காளர்களாக இருக்கும் அமைப்புகள், சபை வாலிபர் பணியாளர்கள் போன்ற இடங்களில் இருந்து அனுப்பப்படும் மக்களுக்கு பயிற்சி கொடுங்கள்.

❒ நிகழ்ச்சிகளில் சுலபமாக இணைந்துகொள்ளுமாறும், உயர்ந்த தரத்திலும் செய்யுங்கள், அதன் மூலமாக நற்பெயர் பெறலாம். தன்னார்வத்தொண்டர்கள் சுலபமாகவும் தைரியமாகவும் செய்யக்கூடிய பணிகளை கொடுங்கள்.

❒ அவர்களுக்கு அதிகமான ஆதரவும் ஊக்கமும் கொடுங்கள். பயிற்சியை எவ்வளவு சிறியதாக வைத்துக்கொள்ளமுடியுமோ வைத்துக் கொள்ளுங்கள்- அவர்களுடைய நேரத்தை மதித்திடுங்கள்.

❒ முறையான தகவல்பரிமாற்றங்களை வைத்திருங்கள், பயிற்சியின் இறுதியில் சான்றிதழ்களை கொடுங்கள்.

❒ பயிற்சிக்கு இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஒவ்வொரு புதிய தன்னார்வத்தொண்டர்களையும் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு இவற்றை கேளுங்கள்:

- உங்களுக்கு அது பிடித்திருந்ததா?
- எங்களுக்கு உதவ நீங்கள் ஆர்வமாக இருக்கிறீர்களா?
- நீங்கள் சீக்கிரம் எங்களோடு இணைந்து செயல்படுவீர்களா?
- இப்போதே நாங்கள் சில நாட்களை பதிவு செய்து கொள்ளலாமா?

❒ ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தன்னார்வத்தொண்டர்களையும் மறக்காமல் தொலைப்பேசியில் தொடர்புகொண்டு,இவற்றை கேளுங்கள்:

- நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?
- நீங்கள் எப்படி தொடர்ந்து செயல்படுகிறீர்கள்/
- எதிர்காலத்தில் எந்த வகையில் நீங்கள் பதிவுசெய்துகொள்ள விரும்புகிறீர்கள்?

❒ ஒவ்வொரு தன்னார்வத்தொண்டரும் ஒவ்வொரு மாதமும் அறிக்கைகளையும் மதிப்பீட்டு படிவங்களையும் உங்களிடம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுங்கள். (தங்கள் அறிக்கைகளை அனுப்புகிறவர்களுக்கு சில தேசிய குழுக்கள் சிறிய பரிசுகளை கொடுப்பார்கள்.) தொடர்ச்சியாக ஒவ்வொரு தன்னார்வத்தொண்டர்களுக்கும் ஊக்கமளிக்கும் செய்தியை கொடுத்து அவர்களை குடும்பத்தின் ஒரு அங்கமாக உணரச் செய்யுங்கள்.

❒ ஒவ்வொரு ஆண்டும் தன்னார்வத்தொண்டர்களை ஒருங்கிணைத்து

- செய்தியை பகிர்ந்து, வெற்றியைக் கொண்டாடுங்கள்
- புதிய பாடபுத்தகங்கள்/யோசனைகள்/ பாடதிட்டங்கள் ஆகியவற்றை காண்பியுங்கள்.

-பணியாளர் குழுவில் சேர்ந்துகொண்ட தன்னார்வத்தொண்டர் களை அறிமுகம் செய்யுங்கள்

-பல்வேறு மாநிலங்களில் இருந்து ஊக்கமூட்டும் கதைகளைக் கேளுங்கள்

ஊக்கத்தொகையா? விசுவாசத்தில் வாழ்வதா?

தன்னார்வத்தொண்டர்களை உபயோகிப்பது நிதி, குறைந்தபட்ச சம்பளம் போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்தும். தென் ஆப்பிரிக்காவிலும் மற்ற சில நாடுகளிலும் (அரசாங்கத்திலும் கூட) தன்னார்வத்தொண்டர்கள் ஒரு சிறிய ஊக்கத்தொகையை பெறவேண்டும் என்று எதிர்பார்க் கப்படுகின்றது. அது ஒரு சிறிய பணப்பரிசாக அல்லது உணவுப் பொட் டலமாக அல்லது மற்ற ஆதரவாக இருக்கலாம், அதோடு பயணச் செலவையும் கொடுக்கவேண்டும்.

இன்னொரு பிரச்சனை என்னவெனில் அடிப்படை சேவைக்காக ஒரு சேவைத்திட்டத்துக்கு அரசாங்கம் நிதி கொடுக்கலாம்- எடுத்துக்காட்டாக, ஆலோசனை மற்றும் எச்ஐவி பரிசோதனை. ஒருவேளை அவர்கள் பணத்தை மிச்சப்படுத்த அப்படிச் செய்யலாம். அவர்களுடைய சுகாதார சேவையை விடவும் உங்களுடைய சேவை சிக்கனமாக இருப்பதற்கு காரணம் சபை அங்கத்தினர்கள் தங்கள் நேரத்தை (ஏறத்தாழ) செலவின்றி கொடுப்பதால் இருக்கலாம். அவர்களுக்காக செய்கின்ற பணிக்கு அரசாங்கங்கள் உங் களுடைய குழுவுக்கு சரியாக நிதிகொடுக்கக் கூடாதா? ஆனால் 'சரியான' சம்பளத்திற்கு மிகவும் குறைவான சம்பளம் உடைய மக்களைக் கொண்டு மாநில சுகாதார அமைப்புக்கு உதவி மாத்திரம் செய்கிறீர்களா?

மேலும், 'விசுவாசத்தில் வாழ்ந்து' முறையான வருமானம் இல்லாமல், அன்றாடம் கடவுளை நம்பியே வாழ்கின்ற ஒருவர் தன்னார்வத்தொண்டரா இல்லையா? அப்படிப்பட்ட 'விசுவாசத்தில் வாழ்கின்ற' 'தன்னார்வத் தொண்டர்' முழுநேரப்பணியாளர்களை விடவும் அதிகமான வருமானத்தை நண்பர்களிடமிருந்தும், சபையில் இருக்கும் மக்களிடமிருந்தும் பெற் றுக்கொண்டால் என்ன நடக்கும்?

இப்படிப்பட்ட காரியங்களை குறித்து நிர்வாகக்குழுவில் பேசவேண் டும்.

தன்னார்வத்தொண்டர்களுடைய உண்மையான விலை

நாம் தன்னார்வத்தொண்டர்களை சார்ந்து இருக்கும்போது அது ஒரு நிகழ்ச்சியை நடத்துவதற்கான உண்மையான விலையை மறைத்துவிடக் கூடும். மக்கள் தங்களுடைய நேரத்தை கொடுப்பதால் மாத்திரம், சம்பளம் கொடுப்பவர்களை காட்டிலும் அவர்களை குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. அவர்களுடைய திறமையையும் அனுபவத்தையும் மனதில் வைத்துக்கொண்டு,அவர்களுடைய நேரத்தை சரியாக பயன்படுத்திக் கொள்வதை உறுதிசெய்யவேண்டும். நல்ல தகுதி பெற்ற தன்னார்வத் தொண்டர்கள் அடிப்படை வேலைகளில் உதவுவதை நான் பார்த்திருக் கிறேன், அதை குறைந்த திறமை உடையவர்களே செய்துவிடலாம்.

தன்னார்வத்தொண்டர்கள் எல்லாவற்றையும் சந்தோஷமாக நமக்கு செய்யலாம், ஆனால் அது நம்முடைய ஆதாரங்களை சரியாக உபயோகிப்பதாக இருக்காது. ஒரு சிறிய அமைப்பில் நேரத்திற்கேற்றபடி அனைவருமே எல்லாவகையான அடிப்படை வேலைகளையும் செய்யவேண்டும், நாம் வேலைக்காரரைப்போல தாழ்மையோடு அதைச் செய்வோம். ஆனால் ஆர்வமுள்ள தன்னார்வத்தொண்டர்கள் அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்ய விருப்பப்படுவதால் மாத்திரம் தவறாக உபயோகித்துவிடாதீர்கள். அவர்களை எப்படி சரியாக உபயோகிப்பது என்பதை திட்டமிட தினமும் யோசியுங்கள்.

இதை கூறுகிற சமயத்தில், திறமைகளையும் வேலைகளையும் சரியாக பொருத்தக்கூடிய நபர் கிடைப்பது கடினம். லண்டனில் ஒரு ஏசியிடி வீட்டு பராமரிப்புக்கு தன்னை அர்ப்பணித்த ஒரு ஓய்வுபெற்ற மருத்துவர் என் நினைவுக்கு வருகிறார். அதில் பிரச்சனை என்னவெனில் அவருக்கு கிடைத்த எல்லா நேரத்திலும் அவருக்கு கொடுக்க போதுமான மருத்துவ பணி எங்களிடத்தில் இல்லை. எனவே நாங்கள் அவர் எங்களுக்கு உதவக்கூடிய கூடுதல் ஆராய்ச்சி பணிகளையும் மற்ற செயல்பாடுகளையும் உருவாக்கினோம்.

'நேரப்பரிசு'களின் மதிப்பு கணக்கிலே காண்பிக்கப்படலாம்: " சென்ற ஆண்டு எங்களுடைய நிகழ்ச்சியின் செலவு *10,000* பவுண்டுகள், அதில் தன்னார்வத்தொண்டர்களுடைய *15,000* பவுண்டுகள் மதிப்பிலான நேரம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை-அவர்களுக்கு அவர்களுடைய வேலைநேரத்தின்படி சம்பளம் கணக்கிடப்பட்டிருந்தால்" அல்லது: "சென்ற ஆண்டு நம்முடைய நிகழ்ச்சியின் வருமானம் *10,000* பவுண்டுகள், அதில் *15,000*பவுண்டுகள் சேர்க்கப்படவில்லை- தன்னார்வத்தொண்டர்களுடைய நேரத்தின் மதிப்பு"

தன்னார்வத்தொண்டர்களை நிர்வாகிப்பது கடினமானதாக இருக்கலாம். அவர்கள் அர்ப்பணிப்பு இல்லாமல் வந்துபோய்க் கொண்டு இருக்கலாம். அவர்கள் தங்கள் நேரத்தை கொடுப்பதால் அவர்களிடம் வலியுறுத்தல் செய்வது கடினம். நீங்கள் உண்மையில் சார்ந்து இருக்கிற முக்கியமான தன்னார்வத்தொண்டர்களிடம் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதை முறையான ஒப்பந்தம் செய்துகொள்ளுதல் முக்கியம். தெளிவு இல்லாமல் உண்மையான பொறுப்பில் தன்னார்வத்தொண்டர்களை உபயோகிப்பது கடினம்.

மற்ற நாடுகளின் தன்னார்வத்தொண்டர்களா- அல்லது உள்ளூர் தலைமைத்துவமா?

இது ஒரு உணர்வுபூர்வமான பிரச்சனை. அமெரிக்கா, UK, ஆஸ்திரேலியாவில் இருந்து உலகின் ஏழ்மையான பகுதிகளில் பணிசெய்ய வந்த தன்னார்வத்தொண்டர்களின் நிலைமை என்ன? இந்த வேற்றுநாட்டவர்கள் திறமைகள், தரிசனங்கள் மற்றும் அனுபவங்களை கொண்டுவரலாம்.

அவர்கள் இல்லாமல் கடந்தகாலத்தில் பல சேவைத்திட்டங்கள் தொடங்கப்பட்டு இருக்காது அல்லது மிகவும் மெதுவாக வளர்ந்திருக்கும். ஆனால் நாம் கேட்க வேண்டிய கேள்விகள் இருக்கின்றன.

முதல் பார்வையில் இந்த தன்னார்வத்தொண்டர்கள் செலவு வைக்காதவர்களாக தோன்றலாம், ஆனால் அவர்கள் அப்படியல்ல. உண்மை என்னவெனில் அவர்களுடைய சபையிலோ அல்லது தாய்நாட்டில் இருக்கும் நண்பர்களிடமோ விமானச் செலவுக்காகவும் ஆதரவு செலவுக்காகவும் அதிகமான பணத்தை அவர்களுக்கு கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு இருப்பார்கள், அது அவர்கள் பணிசெய்த இடங்களின் உள்ளூர் வருமானத்தோடு தொடர்புடையதாக இருக்கும். ஆனால் அதே பணம் அவர்கள் உதவிசெய்கின்ற சேவைத்திட்டங்களுக்கு தானமாக கொடுக்கப்பட்டால், சேவைத் திட்டத்தலைவர்கள் அதிர்ச்சி அடைவார்கள். ஒரு குடும்பம் திரும்பிச் செல்வதற்கான விமானச் செலவுமாத்திரம் 16,000 டாலர்கள். பின்பு அவர்களுக்கு தேவைப்படும் அனைத்தையும் நீங்கள் சேர்த்துக்கொள்ள வேண்டும்- வீட்டு வாடகை, கல்வி, உணவு, வாகனம், எரிபொருள், தொலைப்பேசி, வரி, காப்பீடு போன்றவற்றின் செலவுகள்.

உலகின் ஏழ்மையான பகுதிகளில், மாதம் 300 டாலர்கள் ஒரு நல்ல வருமானம், மாதம் 150 டாலர்கள் கொடுத்தால் ஒரு சேவைத் திட்டப் பணியாளரை பகுதிநேரமாக ஆதரிக்கலாம். உள்ளூர் விலைவாசி அதிகமாக மாறுபடலாம், ஆனால் ஒரு விஷயம் தெளிவானது. பணக்கார நாடுகளில் இருந்து மக்களை வாங்குவதை விட சேவைத்திட்டம் இருக்கும் இடத்திலேயே அந்நாட்டின் மக்களை பணியமர்த்துவது சமுதாயத்திற்கு மிகவும் சிக்கனமானதாகவும் மேன்மையானதாகவும் பலநேரங்களில் இருக்கும்.

இங்கு ஒரு பரிசோதனை : சாம்பியா போன்ற ஒரு இடத்தில் ஒரு சபை ஒரு உள்ளூர் சேவைத்திட்டத்தைக் கொடுக்க தீர்மானிக்கிறது, 10 முதல் 20 உள்ளூர் மக்களை பணியமர்த்தலாம் அல்லது ஒரு 'தன்னார்வத்தொண்டர்' இங்கிலாந்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம், நீங்கள் யாரை தெரித்தெடுப்பீர்கள்? நீங்கள் சேவைத்திட்ட வங்கி கணக்குக்கு பணத்தை அனுப்பி, அவர்களுடைய நிதிநிலைமை மற்றும் தேவைகளின் அடிப்படையில் சுகந்திரமாக அவர்கள் முடிவெடுக்க அனுமதித்தால் அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை கண்டுகொள்வீர்கள். அவர்கள் விமானச் செலவுகளையும், பள்ளி கட்டணங்களையும், வாடகையையும், வாகனச் செலவுகளையும் செலுத்தலாம்- அல்லது ஒருவேளை அதிகமான உள்ளூர் மக்களை வேலைக்கு அமர்த்தலாம்.

குறைந்த கால சர்வதேச பயணங்கள்- ஆம் அல்லது இல்லை?

குறைந்த கால பயணங்களும் அப்படித்தான், இதில் மக்கள் 2000 டாலர்கள் ஒவ்வொருவருக்கும் (விமானச்செலவு, போன்றவை) செலவுசெய்து இரண்டு வாரங்கள் ஒரு அனாதை விடுதி கட்ட உதவுகிறார்கள். செல்வதற்கும் மிகவும் முக்கியமான காரணம் இல்லை

என்றால் இது ஆதாரங்களை மிகவும் மோசமாக பயன்படுத்துவது ஆகும். இதிலிருந்து தொடங்குவோம், ஒரு உள்ளூர் பணியாளர் ஒரு நாளைக்கு 3 டாலர்கள் சம்பாதிக்கும் வேலையை இவர்கள் பரித்துக் கொள்கிறார்கள்.

மற்ற நாடுகளுக்கு குறைந்தகால பயணங்கள் மிகவும் முக்கியம்: பொதுவாக நேரத்தை கொடுப்பதற்கு அல்ல, கற்றுக்கொள்வதற்கு. மக்கள் ஆழமாக தொடப்பட்டு, பிரதிநிதிகளாக ஊக்கமடைந்து தங்கள் வாழ்க்கை முழுவதும் சேவைத்திட்டத்துக்கு நிதி வசூலிப்பவர்களாவார்கள். அல்லது அவர்கள் ஏற்கனவே போதுமான ஆதரவுபெறும் சேவைத்திட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணிக்கச் செல்லக் கூடும்.

சேவைத்திட்டம் கேட்டுக்கொள்ளும் குறிப்பிட்ட காரியத்தில் உள்ளூர் மக்களால் கொடுக்கமுடியாத பயிற்சியையும் நுட்பத்தையும் கொடுப்பதுபோன்ற விசேஷமான தேவைகள் இல்லை என்றால், தயவுசெய்து உங்களுடைய குறைந்தகால பயணம் ஒரு விலைமதிக்கமுடியாத நேரப்பரிசு என்பதுபோல நடிக்காதீர்கள். சேவைத்திட்டத்தலைவர்கள் உங்களிடம் உண்மையை சொல்லமுடியாத அளவுக்கு பணிவாக இருக்கலாம்; உங்களுடைய அன்பான அர்ப்பணிப்பை தட்டிக்கழிக்க முடியாத அளவுக்கு பணிவாக இருக்கலாம். நீங்கள் திரும்பிச் சென்றதும் அநேக நிதிவுதவிகள் வரும் என்கிற நம்பிக்கையில் நீங்கள் வருவது நல்லது என்று அவர்கள் நினைக்கலாம்.

கவலைப்படும்விதமாக ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இருக்கும் சபைகளில் உள்ள மக்கள் 'கடவுளுக்காக பணிசெய்ய போகும்' நண்பருக்காகவோ அல்லது உறவினருக்காகவோ , அல்லது இரண்டு வாரங்களில் ஒரு அனாதைவிடுதியை கட்டச்செல்லும் மாணவருக்கோ தாராளமாக கொடுப்பார்கள். ஆனால் அதே மக்கள் அதே சேவைத்திட்டத்தில் பணிசெய்யும் உள்ளூர் விசுவாசிகளின் சம்பளத்திற்காக நிதியுதவி செய்வதில் குறைவு-அவர்கள் மிகவும் குறைந்த விலைகேட்டாலும், மொழி, கலாச்சாரம், திறமைகள் மற்றும் உள்ளூரில் ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகியவற்றில் மேன்மையான தகுதிபெற்று இருந்தாலும் நிதியுதவி கொடுப்பதில்லை.

உலகின் ஏழ்மையான பகுதிகளில் உள்ள எச்ஐவி நிகழ்ச்சிகளில் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க பணியாளர்கள் மொய்த்துக் கொண்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அதே சேவைத்திட்டங்கள் உள்ளூர் வருமானங்களுக்கு நிதி பெற்றுக்கொள்ள தடுமாறுகிறார்கள் ! என்ன கொடுமை-சொல்லப்போனால் இது ஒரு துஷ்பிரயோகம். நிலைக்கக் கூடிய வளர்ச்சிகளைப்பற்றி சரியான வார்த்தைகளை பேசுவது மிகவும் சுலபம். திறனை அதிகரிப்பதையும் உள்ளூர் மக்களை பெலப்படுத்துவதையும் குறித்து பேசுவது மிகவும் சுலபம். அதே சமயத்தில் உள்ளூர் மக்களுடைய வேலைகளையும் தலைமைத்துவத்தையும் திருடிக்கொள்வதும் மிகவும் சுலபம்.

மற்ற நாடுகளில் இருக்கும் மக்களுக்கும் முக்கியமான பங்கு இருக்கலாம், ஆனால் பயணம் செய்து , சேவைத்திட்டத் தலைமைத்துவத்திற்கு

குறைவான நெருக்கடியை மாத்திரம் கொடுத்து, சில பயிற்சிகளை கொடுத்துவிட்டு திரும்பிச்செல்வதே சரியான சமன்பாட்டைக் கொடுக்கும். வேற்று நாட்டவர் தேசத்தின் குடிமக்களிடம் பொறுப்பை ஒப்படைத்துச் செல்வதற்கான வாய்ப்புகளை தேடுவது மிகவும் அவசியம். சில நேரங்களில் அரசாங்கத்தினால் வேற்றுநாட்டவர்கள் பலவந்தமாக வெளியேற்றப் படும்போதுதான் உள்ளூர் தலைமைத்துவம் தலையெடுக்கும்.

உலகம் மாறுகின்றது- பங்காளத்துவத்திற்கு புதிய மாதிரிகள்

இவை மிகவும் கடினமான பிரச்சனைகள். கடந்த நூற்றாண்டுகளில் ஒட்டுமொத்த ஊழிய அமைப்புகளும் மக்களை ஒரு நாட்டிலிருந்து மற்றொன்றிற்கு நற்செய்தியின் செய்தியாளர்களாக, ஆபத்து நிறைந்த இடங்களுக்கு அனுப்புவதற்காகவே இருந்தன, பலர் தங்கள் உயிர்களை இழந்தனர், குறிப்பாக நோய்களினால் விரைவாக இறந்தனர். கிறிஸ்துவுக்காக உச்சகட்ட தியாகத்தை இந்த தைரியமான ஆண்களும் பெண்களும் செலுத்தினார்கள், அவர்களுடைய உழைப்பின் பயன் இன்று வளர்ந்துவரும் உலகம் முழுவதும் காணப்படுகின்றது - அவர்கள் கட்டிய மருத்துவமனைகள், அவர்கள் நிறுவிய பள்ளிகள், அவர்கள் தொடங்கிய இறையியல் கல்லூரிகள்- மேலும் அவர்கள் பயிற்றுவித்த ஒரு தலைமுறை திருச்சபை தலைவர்கள்.

மிகவும் சமீபத்தில், 20ல் இரண்டு ஏசியிடி நிகழ்ச்சிகள், பணக்கார நாட்டில் இருந்து ஏழை நாட்டிற்கு சென்று, அதை தன்னுடைய சொந்த நாடாக மாற்றிக்கொண்டு, தங்கள் வாழ்வு முழுவதையும் சபைகளை ஆதரிப்பதிலும், உயிர்களை காப்பதிலும், வியாதியுற்றவர்களை கவனிப்பதிலும் அர்ப்பணித்த ஒரு நபர் இல்லாமல் தொடங்கப்படுவதில்லை.

ஆனால் மூன்றாம் ஆயிரமாண்டில் ஊழியத்தின் ஒரு புதிய திசையை பார்க்கும்படி நம் அனைவருக்கும் சவால்விடுகிறேன். சூழ்நிலைகள் மாறுகின்றன, இந்த நாடுகளில் இருக்கும் சபைகள் 'அனுப்புகிற'நாடுகளில் இருக்கும் சபைகளைக் காட்டிலும் ஆரோக்கியமாகவும் வலிமையாகவும் இருக்கின்றன. பல்லாண்டுகளாக பல தலைமுறைகளுக்கு கொடுக்கப்பட இந்த கல்வி மிகவும் திறமைபெற்ற கிறிஸ்தவ பணியாளர்களை உருவாக்கியுள்ளது, இந்த 'பெற்றுக் கொண்ட' நாடுகள் இப்போது ஊழியக்காரர்களை மிகவும் மதசார்பற்ற நாடுகளாக மாறிவிட்ட இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு அனுப்புகிறார்கள்.

பணக்கார நாடுகளில் இருந்து சேவைத்திட்டங்களுக்கு தொடர்ச்சியான பயணங்கள்

ஒரு நாட்டின் குடிமக்களாக இல்லாமல், மற்ற நாடுகளிலும் கலாச்சாரங்களிலும் இருக்கும் மக்கள் தொடர்ச்சியான பயணிகளாக பிரச்சனைகளில் சிக்கிக்கொள்ளக்கூடும். அவர்கள் மிகவும் செல்வந்தர்களாக, அதிக செல்வாக்கு நிறைந்தவர்களாக, தானம் செய்கிறவர்களை அதிகம்

அணுகக்கூடியவர்களாக பார்க்கப்படுகிறார்கள். இவை அனைத்தும் உண்மைதான். உலகில் இருக்கும் பெரும்பாலான மக்களை காட்டிலும் தன்னுடைய சொந்த சொகுசு வாகனம் வைத்திருப்பவர் கோமகஸ்வரர்தான். தங்களுடைய பார்வையாளர்கள் மிகவும் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் அல்லது அடிக்கடி சந்திக்கிறார்கள் என்பதை சொல்ல பயப்படும்போது பார்வையாளர்களை சேவைத்திட்டத் தலைவர்கள் சந்திப்பதை ஒத்திவைக்கக்கூடும்.

அடிக்கடி சேவைத்திட்டத்தைப் பார்வையிடுவது மிகவும் தொல்லையாக இருக்கலாம் என்பதை நினைவில்கொள்ளுங்கள் - விமானநிலையத்தில் மக்களை சந்திப்பது, விருந்தோம்பல் செய்வது, அதிகாலை முதல் இரவுவரை அவர்களை பார்த்துக்கொள்வது, அவர்களை எங்கும் அழைத்துச்செல்வது (அவர்களோடு கடைகளில் சாமான்கள் வாங்குவதும், வங்கியில் பணம் எடுப்பதும் கூட), இடங்களைச் சென்று பார்வையிடுவது, குழுவை சந்திப்பது. பல நாட்களுக்கு சாதாரண சேவைத்திட்ட வேலைகள் ஒட்டுமொத்தமாக நின்றுவிடலாம். பல்வேறு மக்கள் ஒரு வருடத்துக்கு ஐந்து முதல் பத்துமுறை பார்வையிடவருவது ஒரு நிகழ்ச்சியை முடிவுக்கும் கொண்டு வரலாம்.

ஒவ்வொரு நபரும் அல்லது குழுவும் முந்தையை அல்லது அடுத்த வாரம் நடக்கப்போகிற விஜயங்களை அறியாமல் இருக்கலாம். விருந்தோம்பலின் ஒரு பகுதியாக, அவர்களை விசேஷமானவர்களாக உணரவைக்கும்படியாக சேவைத்திட்டத் தலைவர்கள் அவற்றை சொல்லாமல் இருக்கலாம். வேறு யாரிடமிருந்தெல்லாம அவர்களுக்கு ஆதரவு கிடைக்கிறது என்பதை தெரியப்படுத்தாமல் இருக்கவேண்டும் என்று அவர்கள் நினைப்பதற்கு சாத்தியம் இருக்கிறது.

சேவைத்திட்டத்தின் மீது வலிமையான உணர்வுபூர்வமான பந்தம் இருக்கிற பணக்கார தேசத்தில் இருந்து வரும் விருந்தாளிகள் அதைவிட்டு விட்டு உள்ளூர் தலைமைத்துவத்திடம் கொடுத்து செல்வதற்கு நான் பலநேரங்களில் உதவியிருக்கிறேன். அவர்கள் செலவளிக்கும் பணத்தில் ஒரு சிறு பகுதியை வைத்துக்கொண்டே, தங்களுடைய சொந்த நாட்டை சேர்ந்த, அதே மொழியையும் கலாச்சாரத்தையும் உடைய மக்களை கொண்டு அதேபோன்ற அல்லது மேன்மையான பயிற்சிகளை கொடுக்கும் அளவுக்கு தங்களுடைய திறமைகளை தெளிவாக வளர்த்துக்கொண்டாலும், பணக்கார நாட்டைச்சேர்ந்தவர்கள் மீண்டுமாக சென்று அவர்களுக்கு அதிக பயிற்சியும் திறமை வளர்க்கவும் மீண்டும் வந்துகொண்டே இருக்கிறார்கள். அவர்கள் உண்மையிலேயே சேவைத்திட்டத்துக்குப் பணிசெய்கிறார்களா அல்லது சேவைத்திட்டம் தேவைப்படும் தேவையை பூர்த்திசெய்கின்றதா? இந்த பிரச்சனைகள் மிகவும் வலியைக் கொடுக்கக்கூடியவை, இவற்றை சரிசெய்ய நீண்டகாலம் எடுத்துக் கொள்ளும்.

வேற்றுநாட்டு பயணிகள் இப்படிச்சொல்லலாம்: "ஆனால் நாட்டில்

இருக்கும் மற்ற அமைப்புகளின் பயிற்சிகளைக் காட்டிலும் என்னுடைய பயிற்சி முறைகள் மேன்மையானதாக இருக்கின்றன". நாம் நிச்சயமாகவே சொல்கிறோமா? நாம் விசேஷமான ஆவிக்குரிய பரிமாணத்தை கொண்டு வருவதாக நாம் நினைக்கலாம். இருக்கலாம், ஆனால் பலநேரங்களில் இது நேர் எதிர்மறையானது. மிகவும் பொருளாதாரமிகுந்த கலாச்சாரங்களில் பயணிகளின் பக்தியை அவர்களுடைய பக்தி மங்கிப்போகச்செய்யும்.

இறுதியாக மற்ற நாடுகளில் இருந்து வருகிறவர்கள் இப்படிச் சொல் லலாம்: "ஆனால் நான் உறவுக்காக, ஒரு நெருங்கிய தொடர்புக்காக, நட்புக்காக, குழுவை ஊக்கப்படுத்தவும் ஆதரிக்கவும் செல்கிறேன்" அது அற்புதமானது ! நான் சொல்வதெல்லாம் முதலில் நாம் யோசிக்கவேண்டும். நாம் விமானத்தில் குதிப்பதற்கு முன்பு நாம் ஜெபித்து தியானிக்க வேண்டும்- அன்பாகவும் உண்மையாகவும் அவர்கள் அழைத்து இருந்தாலும் - ஒவ் வொருநாளும் பிரயோஜனம் உள்ளதாக நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். நாம் அனைத்தையுமே நினைப்பதில் பாதிநேரத்திலேயே செய்து முடித் துவிடலாம்.

மக்கள் செல்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் சொல் லவில்லை. அவர்கள் கண்டிப்பாக செல்லவேண்டும், சிறிதுகாலம் தங்கியும் இருக்கவேண்டும், ஆனால் அவர்கள் உணர்வுள்ளவர்களாக கவனமாக இருக்க வேண்டும்.

எனவே, தங்களிடத்தில் ஏற்கனவே இருக்கும் நேரம் சக்தி மற்றும் ஆதாரங்களை உபயோகித்து, குழுக்களை உருவாக்கி, மற்றவர்களை ஊக்கப்படுத்தி, நன்கு ஒருங்கிணைத்தால் சேவைத்திட்டங்கள் எப்படி வளரும் என்பதை பார்த்துவிட்டோம்.

சமுதாய தொழிலதிபர்கள் எப்படி பெரிய அளவிலான மக்களை ஊக்கப்படுத்தி நேரத்தையும் பணத்தையும் கொடுக்கவைக்கமுடியும் என்பதை பார்த்தோம். திருச்சபையில் இருக்கும் மையப்படுத்தப்படாத சிறிய குழுக்கள் எப்படி ஒரு நாடு முழுவதையும் தொடமுடியும் என்பதை பார்த் தோம். நல்ல மாதிரிகள் எப்படி பெருகி, உலகம் முழுவதும் மக்கள் இயக் கமாகப் பரவமுடியும் என்பதை பார்த்தோம். நம்முடைய விசுவாசத்திற்கும், அழைப்பிற்கும், மதிப்பீடுகளுக்கும் உண்மையாய் இருப்பது எவ்வளவு முக்கியம் என்பதையும் பார்த்தோம்.

ஆனால் ஒரு பிரச்சனை இருக்கிறது. பல எச்ஐவி சேவைத் திட்டங்கள் நன்றாகத் தொடங்குகின்றன, பின்பு சிக்கலில் மாட்டிக் கொள்கின்றன. அவை வளரமுடியாததை கண்டுபிடிக்கின்றன. அவர்களிடம் சரியான திறமை இல்லாத பணியாளர்கள் இருக்கலாம் அல்லது நிதிபற்றாக்குறையாக இருக்கலாம். அவர்கள் முன்னேறிச் செல்ல வழியை கண்டுபிடிக்கமுடியாமல் இருக்கலாம். நம்முடைய அடுத்த அதிகாரம் இதற்கு சில பதில்களை கொடுக்கிறது, அது எப்படி நல்ல வலிமையான, சக்திவாய்ந்த எச்ஐவி நிகழ்ச்சிகளை ஏற்படுத்துவது என்பதை ஆராய்கின்றது.

அதிகாரம் 12

இரட்டிப்பான பயனளிப்பது எப்படி

பல கிறிஸ்தவ சேவைத்திட்டங்கள் திறமையற்றதாகவும் வீணான தாகவும் இருக்கின்றன. எளிமையான தீர்மானங்கள் எடுக்க அவர்கள் நீண்டகாலம் எடுத்துக்கொள்கிறார்கள். வேலையை செய்வதை விட்டுவிட்டு அவர்கள் மீண்டுமாக பழைய தீர்மானங்களுக்கே செல்கிறார்கள். ஒரு குழுவுக்குள் வேலைகளை பகிர்ந்துகொள்ளாமல் இருப்பதன் மூலமாக நேரத்தை வீணாக்குகிறார்கள். அவர்கள் நீண்டநேரத்தை கூடுகைகளில் செலவுசெய்கிறார்கள். சேவைத்திட்டத்தில் மற்றவர்கள் ஏற்கனவே செய்த வேலைகளையே மீண்டும் செய்வதிலும், வேறொரு சேவைத்திட்டத்தில் உள்ள பணியாளர்களின் வேலையை திரும்பச்செய்வதிலும், அவர்கள் முன்பே திட்டமிடாததினால் முன்னும் பின்னும் பயணம் செய்வதிலும் மக்கள் நேரத்தை வீணடிக்கிறார்கள். தங்களுக்கு கடினமாக தோன்றுகிற காரியங்களுக்கு உதவியை நாடாமல் பல தலைவர்கள் முயற்சிகளை வீணாக்குகிறார்கள். மற்றவர்களோடு ஒத்துழைத்து ஆதாரங்களை பகிர்ந்து கொள்ளாமல் தனிமையிலே வேலைசெய்கிறார்கள்.

இதை குறைந்த செலவில் தலைகீழாக மாறச்செய்து மேம்படுத்துவது சுலபம். ஒரு விபத்தின் காரணமாக உங்களுடைய வாகனம் ஒரு சேற்றுக்குள் விழுந்துவிட்டது, பின்பு ஒரு வாகனத்தை தொடர்புகொள்ள முடிந்தது என்று மற்ற சிலரை எச்சரிக்க ஒரே ஒரு SMS பயன்படுத்துவதனால் எவ்வளவு நேரம் சேமிக்கப்படுகிறது என்பதை பாருங்கள். ஆனால் அவர்களுடைய தொலைப்பேசி எண்கள் உங்களிடத்தில் இருக்கிறதா? உங்களுடைய தொலைப்பேசியை சார்ஜ் செய்ய மறந்துவிடவில்லையே? உங்களுடைய தொலைப்பேசி அட்டையில் போதுமான பணம் இருக்கிறதா?

டேவிட் கபிஸ்வா, உகாண்டா ஏசியிடியின் தலைவர் எனக்கு அடிக்கடி நினைவுபடுத்துவார்: 'வலிமையான அமைப்புகள், வலிமையான சேவைத் திட்டங்கள்'. பல எச்ஐவி சேவைத்திட்டங்கள் ஒரு குறிப்பிட்ட நிலையை அடைந்துவிட்டு, பின்பு மேலும் வளர தடுமாறுகிறார்கள். அவர்களுக்கு ஆதாரங்கள் பற்றாக்குறையாக இருப்பதால் சோர்வடைந்து களைத்துப் போய்விடுகிறார்கள்.

இந்த அதிகாரத்தில் எந்த ஒரு சேவைத்திட்டமும் வலிமையாகவும், அதிக

சக்தியோடும், அதிக நிலைத்தன்மையோடும் இருப்பதற்கான முக்கிய குறிப்புகள் இருக்கின்றன. இந்த குறிப்புகள் எந்த அமைப்புகளில் வேண்டுமானாலும் உபயோகப்படுத்தலாம்- எச்ஐவி சம்பந்தமானவை மாத்திரமல்ல.

ஆனால் நாம் தொடங்கும் முன்பாக, இதோ ஒரு கேள்வி. நீங்கள் ஒரு பெரிய அமைப்பாக இருக்கவேண்டும் என்று கடவுள் அழைத்திருக்கிறார் என்பதில் உறுதியாக இருக்கிறீர்களா? இங்கே கவனம் தேவை. கடவுள் உங்களுக்கு கொடுக்காத அழைப்பாகிய ஒரு பெரிய தரிசனத்தினால் செயல்படுவது மிகவும் சுலபம் உங்கள் சபையில் 30 தன்னார்வத் தொண்டர்களோடு ஒரு வீட்டு பராமரிப்பு குழுவை வைத்திருக்கிறீர்கள், நீங்கள் 100 ஆக அதை மாற்ற கடவுளுடைய அழைப்பை பெற்றிருக்கிறீர்கள் என்பதில் உறுதியாக இருக்கிறீர்களா? வருடத்துக்கு நீங்கள் 10,000 மாணவர்களை சந்தித்தால், 1,00,000 மாணவர்களை சந்திக்க நீங்கள் அழைக்கப்பட்டதில் உறுதியாக இருக்கிறீர்களா? ஒருவேளை மற்ற குழுக்கள் அல்லது சபைகள் வளர்ந்து அந்த காரியங்களை செய்யக்கூடும்.

எனினும், ஒரு காரியம் தெளிவாக இருக்கிறது. நம்முடைய சேவைத் திட்டம் சிறியதோ அல்லது பெரியதோ, நம்முடைய ஒழுக்கரீதியான கடமை நம்மிடத்தில் இருக்கும் ஆதாரங்களை வைத்துக்கொண்டு அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துவதுதான். எனவே நம்முடைய சேவைத்திட்டத்தை நாம் எப்படி அதிக பயனுள்ளதாக இயக்கமுடியும்? நாம் எப்படி அதிக திறனோடு, உயர்ந்த தரத்திலான வேலைகளை, அதிக தாக்கத்தோடு, அதிகமான உயிர்களை காப்பாற்றி, அதிகமான மக்களை சந்தித்து, அதிகமான ஆதாரங்களை கண்டுபிடிப்பதில் வெற்றிபெறமுடியும்? பணிக்கு தேவையான நிதி தொடர்ந்து கிடைப்பதையும், ஆதரவை அதிகரிப்பதையும் நாம் எப்படி உறுதிசெய்வது? நாம் எப்படி தலைவர்களை கண்டுபிடித்து வளர்க்கமுடியும்? கடவுளுடைய அழைப்புக்கு உண்மையாக இருப்பதை நாம் எப்படி உறுதிசெய்யமுடியும்?

சுருக்கமான, மேன்மையான கூடுகைகள் - மற்றும் உற்பத்தியை இரட்டிப்பது எப்படி?

திட்டமிடுங்கள், திட்டமிடுங்கள், திட்டமிடுங்கள். ஒருங்கிணையுங்கள், ஒருங்கிணையுங்கள், ஒருங்கிணையுங்கள். நீங்கள் சந்திக்கும்போது முக்கியமான குறிக்கோளில் தெளிவாக இருங்கள். நீங்கள் கலந்தாய்வு செய்யபோகிற காரியங்கள், இன்று நீங்கள் எடுக்கப்போகும் முடிவுகள், மற்றும் அவற்றின் வரிசை பட்டியலை தீர்மானம்செய்யுங்கள். நேரத்தில் முடித்துக்கொள்ளுங்கள், சத்தம் கேட்பதை உறுதிசெய்யுங்கள், தீர்மானங்களை குறிப்பு எடுத்துக் கொள்ளுங்கள், கூடுகை முடிந்ததும் அதில் பங்கெடுத்துக் கொண்ட ஒவ்வொரு நபரும் ஒரு நகலைப் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்யுங்கள். அவர்கள் தங்கள் வாக்குறுதிகளை கடைபிடிக்க

உறுதிசெய்யுங்கள். எப்போது என்ன செய்யப்பட வேண்டும் என்பதில் மிகவும் தெளிவாக இருங்கள். மக்களிடத்தில் முக்கியமான வேலைகளை கொடுங்கள். சரியாக தேவை என்ன என்பதை அவர்கள் புரிந்துகொண் டார்களா என்பதை பரிசோதித்து பாருங்கள். அவர்கள் செய்வதற்கு தேவையான அனைத்தும் அவர்களிடம் இருக்கிறதா என்று சரிபாருங்கள். முன்னேறிச்செல்லும்போது தொடர்ச்சியாக சரிபார்த்துக் கொள்ளுங்கள்- உங்களுடைய அடுத்த கூடுகையில் அனைத்து செயல்திட்டங்களையும் மறு ஆய்வுசெய்யுங்கள்.

உலகம் முழுவதும் பெரிய அமைப்புகளில் இருக்கும் மக்களிடத்தில் பெரிய செய்திகளை மிகவும் திறன்பட தொடர்புகொள்வதற்கான வழி மின்னஞ்சல்தான். காரியங்கள் நகர்ந்து கொண்டே இருப்பதற்கு தொடர்ச் சியாக மின்னஞ்சலை பார்த்துக்கொண்டு இருங்கள். மின்னஞ்சலை அணுகுவது, கைப்பேசி மற்றும் கணிப்பொறி இயக்குதல் ஆகியவற்றை உங்களுடைய நிதித்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

கிடைக்கும் நேரத்தை பூர்த்திசெய்ய வேலை எப்போதுமே விரிந்து கொள்ளும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஒரு அறிக் கையை செய்ய உங்களுக்கு மூன்று வாரங்கள் இருந்தால், அதற்கு மூன்றரை வாரங்கள் தேவைப்படும். உங்களிடத்தில் மூன்று நாட்கள் மாத்திரம் இருந்தால், அது ஒரு வாரத்திற்கு சற்று குறைவாக தேவைப்படும். நீங்கள் மக்களிடத்தில் காரியங்களை செய்யும்படி கேட்டுக்கொண்டால், அவர் களுக்கு முடிவுதேதியைக் கொடுங்கள், கொடுக்கப்பட்ட வேலை நீண்டநாட் களுக்கு செல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

80:20 சட்டம்

80:20 நிர்வாகச் சட்டத்தை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். வாழ்க் கையின் பெரும்பாலான காரியங்களுக்கு, 80 சதவிகிதம் தாக்கம் 20 சதவிகிதம் முயற்சியில் இருந்துதான் கிடைக்கிறது. உங்களுடைய தன் னார்வத்தொண்டர்கள் அனைவருமே நீங்கள் பணிசெய்கிற 5 சபைகளில் 1ல் இருந்து மட்டுமே வரக்கூடும். உங்களுடைய வருமானத்தில் 80 சதவிகிதம் 20 சதவிகிதம் நிதியுதவியாளர்களிடமிருந்தே வரக்கூடும். 80 சதவிகித பள்ளிகளுக்கு உங்களுடைய 20 சதவிகிதம் தன்னார்வத் தொண்டர்களே சென்று விடுவார்கள். எச்ஐவியோடு வாழ்கின்ற உங் களுடைய மக்கள் 20 சதவிகிதம் கிராமங்களிலேயே இருக்கக்கூடும். உங்களுடைய வாரத்தின் சில மணிநேரங்களிலேயே உங்களுடைய தாக் கத்தை ஏற்படுத்தும் தலைவர்கள் தோன்றுவார்கள். துல்லியமான எண் ணிக்கை நிச்சயமாக வேறுபடலாம்.

எனவே உங்கள் 80:20 என்ன? நீங்கள் ஒரு நாளிலோ அல்லது வாரத்திலோ செய்யக்கூடிய எது மற்ற எல்லாவற்றைகாட்டிலும் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

இயேசு இதே போன்ற ஒரு கருத்தை பின்பற்றி மிகவும் கவனமாக இருந்தார்: ஒரு ஊழியத்திற்கு அவர் 120 பேரை அனுப்பினார் ஆனால் 12 சீஷர்கள்மீது கவனமாக இருந்தார். 12 பேரில், அவர் அதிகமாக தன்னுடைய நேரத்தை மூன்றுபேருடன் செலவிட்டார்-பேதுரு, யாக்கோபு, யோவான். அவருடைய 33 வருட உலக வாழ்க்கையில் (பெரியவராகி 15 ஆண்டுகள்) 3 ஆண்டுகள் மற்றுமே வெளியரங்கமாக போதித்தார்.

நீங்கும் சில காரியங்களில் அதிக நேரம் எடுத்துக்கொண்டும் குறைந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றனவற்றை நீக்கிவிடுங்கள்-அல்லது மற்றவர் களிடம் கொடுத்துவிடுங்கள். மற்றவர்கள் செய்ய விருப்பமாக திறமை யோடு இருக்கிற காரியங்களை தலைவராக நீங்களே செய்வதற்கு வாழ்க்கை பெரியதாக இல்லை மிகவும் சிறியதாக இருக்கிறது - நீங்கள் செய்யும் அளவுக்கு அவர்கள் நன்றாக செய்யாமல் இருந்தாலும் தான்.

ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு மணிநேரத்தையும் பிரயோஜனப்படுத் துங்கள். வாரம் முழுவது நான் செய்கிற வேலைகளில் எது அடுத்த அரை மணிநேரத்தில் செய்தால் அதிக தாக்கத்தை கொடுக்கும்? இப்போது நான் யாரை அழைக்கவேண்டும்? அடுத்து நான் எந்த மின்னஞ்சலை எழுதவேண் டும்? எந்த அறிக்கையை நான் முடிக்கும் படியாக வற்புறுத்திக்கொள்ள வேண்டும்? எந்த கூடுகையை நான் ஒழுங்குபடுத்த வேண்டும்? எந்த குழு அங்கத்தினரோடு நான் என்னுடைய நேரத்தை செலவிடவேண்டும்? இவற்றைகுறித்து தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள்.

தாக்கத்தை அதிகரிப்பதற்கு முக்கியமானது இயேசு செய்ததை செய் வதுதான்: பிரதானமான பொறுப்புக்களை எடுத்துக்கொள்ள முக்கிய பணி யாளர்களை சீஷர்களாக்குங்கள். மிகவும் பயனுள்ள வாரத்தில் இரண்டு அல்லது மூன்று மணிநேரங்களாக அவை இருக்கும். ஆனால் நீங்கள் அதை செய்கிறீர்களா?

நீங்களும் உங்கள் குழுவும் அதிக கவனமாக இருக்கும்போது சம்பவிப்பது உங்களை ஆச்சரியப்படுத்தும்.

உங்களுடைய முக்கியத்துவத்தை கண்டுபிடியுங்கள்

ஒவ்வொரு அமைப்பும் தன்னுடைய முக்கியத்துவத்தில் தெளிவாக இருப்பது அவசியம், அப்போது சக்தி உண்மையான தேவைகளில் கவனமாக செலுத்தப்படும். ஏசியிடி குடும்பத்தின் உலகளாவிய தலைமைத் துவம் சமீபத்தில் சந்தித்துக்கொண்டது. இதோ அவர்கள் கொண்டுவந்த முக்கியத்துவங்கள்-எடுத்துக்காட்டுக்களாக. உங்களுடையது வித் தியாசமாக இருக்கலாம்.

- ❐ தற்போது இருக்கிற மற்றும் புதிய தேசிய நிகழ்ச்சிகளின் வளர்ச் சியிலும் முதிர்ச்சியிலும் உதவுதல்
- ❐ பரவலாக உபயோகப்படுத்தக்கூடிய உயர்ந்த தரம்வாய்ந்த ஆதாரங் களை உருவாக்குதல்.

- சேவைத்திட்டங்களின் திறனை அதிகரிப்பதற்கும் ஆதரவு கொடுப்பதற்கும் மாநில குழுக்களை பலப்படுத்துதல்.
- தேசிய அதிகாரிகளோடு இணைந்து சிறு மருத்துவ பராமரிப்பை தேசியமாக வளர்ப்பதை உறுதிசெய்வதன் மூலமாக அவர்களுடைய வேண்டுகோளின்படி முக்கியமான இடைவெளிகளை நிரப்புதல் : தன்னார்வ பரிசோதனை மற்றும் ஆலோசனை, ஆண்டிவைரஸ்களை கொடுப்பது மற்றும் மேற்பார்வையிடுதல், குழந்தைபேறுக்கு சற்று முன்பு கர்ப்பிணிப் பெண்களை குறிப்பாக கவனிப்பது.
- எச்ஐவி பிரச்சனை இப்போது அதிகமாக இருக்கும் தெற்கு ஆப்பிரிக்க நாடுகளின் மீது விசேஷமான கவனம் செலுத்துதல்.
- அயர்லாந்து மற்றும் இங்கிலாந்து போன்ற முக்கியமான நாடுகளில் இருக்கும் நிபுணர்களை உபயோகித்துமாநிலங்கள் வாரியாக இணைப்பு நிதி எலத்திட்டத்தை சர்வதேச நிதியுதவியாளர்களுக்கும்/ அரசாங்க நிறுவனங்களுக்கும் ஏற்படுத்துவது.
- இணைப்பு வழக்காடுதல் பிரச்சாரங்களை மாநிலங்களிலும் அதை தாண்டியும் இருக்கிற முக்கியமான பிரச்சனைகளுக்கு ஏற்படுத்துங்கள். மைகா நெட்வொர்க் மற்றும் எகுமெனிக்கல் அட்வோகெசி அலையன் ஆகியவை விசுவாச அடிப்படையிலான சர்வதேச வழக்காடும் நிறுவனங்களுக்கு சில எடுத்துக்காட்டுகள்.

(www.e-alliance.ch and www.micahchallenge.org/).

எச்ஐவி ப்ராஜெக்ட் திட்ட சுழற்சி

நிதியுதவியாளர்களின் எதிர்பார்ப்பை சந்திக்கவும் நல்ல தலைமைத்துவத்தை கொடுக்கவும் தெளிவான திட்ட சுழற்சியை உபயோகிப்பது மிகவும் முக்கியம் :

தரிசனம் ->திட்டம்->செயல்பாடு->மதிப்பீடு->தரிசனம்

ஒரு மாநாடு ஒழுங்குசெய்வதுபோல நேரத்தினால் கட்டுப்படுத்தப்பட்ட நிகழ்வில் வேலைசெய்தாலே தவிர, ஒரு சேவைத்திட்டத்தை வருடாந்தர கண்ணோட்டத்தோடு செய்வதற்கு குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் எடுத்துக்கொள்ளும். திட்டமிடுவதற்கான பொதுவான முறைமை "ப்ராஜெக்ட் சுழற்சி நிர்வாகம்" எனப்படும். ஒரு குழுவை எழுப்புவதற்கும், ஒரு நிகழ்ச்சியை உருவாக்கவும், முன்னேற்றத்தை துரிதப்படுத்தவும், நீங்கள் செல்லச்செல்ல முறைகளை மேம்படுத்தவும் நேரம் எடுத்துக்கொள்ளும். முதல் ஆண்டின் இறுதியில் அதிகமான மாற்றங்கள் இரண்டாவது ஆண்டில் செய்யப்படவேண்டுமா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.

நோக்கம் சார்ந்த நிர்வாகம்

ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறியீடுகளை வைத்து உங்களால் முடிந்தவரை உங்கள் நோக்கத்தை மதிப்பீடு செய்யுங்கள்.

50 ஆண்டுகளுக்கு முன்பு பீட்டர் ட்ரக்கரினால் நோக்கம் சார்ந்த நிர்வாகம்

(Management by objective (MBO)) உருவாக்கப்பட்டது. "ஒன்றை அளவிடமுடியவில்லை என்றால் அது நடப்பது எதிர்பார்க்கக்கூடியது அல்ல" என்றார் அவர்.

ஒவ்வொரு நோக்க குழுவுக்கும் முக்கியமான தொழிற்திறன் குறியீடுகள் இருக்கலாம்: என்ன சம்பவிக்கிறது என்பதை புரிந்துகொள்ள தேவையான ஒரு தகவல் துணுக்குதான் இந்த குறியீடுகள். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் இருக்கும் ஒரு வீட்டு பராமரிப்பு குழுவுக்கு, அது ஒவ்வொரு மாதமும் பார்க்கப்படுகிற புதிய வாடிக்கையாளர்களாக இருக்கலாம் (அது அவர்களுடைய வேலைச்சுமை, சேவைக்கான தேவை போன்றவற்றை கூறும் குறியீடு). பள்ளி நிகழ்ச்சிகளுக்கு, அது ஒவ்வொரு மாதமும் காணப் படுகிற மாணவர்களின் எண்ணிக்கை, எடுக்கப்பட்ட வகுப்புகளின் எண் ணிக்கை மற்றும் சென்றுவந்த பள்ளிகளின் எண்ணிக்கையாக இருக்கலாம்.

இந்த அணுகுமுறையை பல சர்வதேச வளர்ச்சி நிறுவனங்கள் விரும் புகின்றன. நோக்கத்திற்கு நேராக எடுக்கவேண்டிய நடவடிக் கைகள், நீங்கள் வெற்றி பெறுவது எப்படி, சவால்கள் என்னென்ன, நீங்கள் எப்படி சவால் களை சமாளிக்கலாம் போன்றவை இருப்பதை அவர்கள் விரும்புகிறார்கள்.

இந்த திட்டம் 'சிந்தனை கட்டமைப்பு' (Log Frame or Logical Framework) என்று பொதுவாக அழைக்கப்படுகின்றது. இப்போது பல நிதியுத வியாளர்களுக்கு அது தேவைப்படுகிறது. இதில் ஒன்றை பூர்த்தி செய்வது ஒரு ஒழுங்குமுறை, ஏனென்றால் நீங்கள் என்ன திட்டமிடுகிறீர்கள் என்பதை கடுமையாக யோசிக்க வைக்கிறது. உங்களுடைய சொந்த குறிக்கோள் களுக்கு எதிராக உங்கள் முன்னேற்றங்களை மதிப்பீடு செய்ய இது ஒரு அற்புதமான வழி. சிந்தனை கட்டமைப்புகள் நிதியுதவியாளர்கள் திட் டங்களை ஒப்பிட்டு பார்க்க உதவுகின்றது.

எனினும், சேவைத்திட்ட தலைவர்கள் சிந்தனை கட்டமைப்புகளை வெறுக்கிறார்கள். அவை சிக்கலானவையாக மாறினால், நாளுக்கு நாள் நிர் வாகம் செய்வதற்கு அவை உதவியாக இருக்காது. இவற்றை பூர்த்திசெய்ய நேரம் விரயமாகும். நிகழ்ச்சியை குறித்த சிந்தனையை முக்கிய அளவுகள்/ மாறிலிகள் ஆகியவற்றிற்குள் கட்டுப்படுத்திவிடும்.எனவே அதை எவ்வளவு எளிமையாக வைத்துக் கொள்ளமுடியுமோ அவ்வளவு எளிமையாக வைத்துக்கொள்ளுங்கள்.

பெரும்பாலான மிக முக்கியமான முடிவுகள் அளவிடுவதற்கு கடினமாக இருக்கும்-நாடுமுழுவதும் 100 தலைவர்களுக்கு பயிற்சியளிப்பதினால் உருவாகும் நீண்டகால தாக்கம் போன்றவற்றை அளவிடுவது கடினம். முழுமையான ஊழியம் சேதமடைய இதுவும் ஒரு காரணமாக அமையலாம். ஆனால் சிந்தனை கட்டமைப்புகள் இங்கே இருப்பது அவசியம். நிதியுத வியாளர்கள் உங்கள் சேவைத் திட்டத்திற்கு மாத்திரம் நிதிகொடுத்தால் போதாது என்பதை புரிந்துகொள்ளச் செய்யுங்கள். சிந்தனை கட்டமைப் புகள், அறிக்கை எழுதுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றிற்கு நிதியுதவி அளிப்பது அவசியம் என்பதை வலியுறுத்துங்கள்.

டியர்ஃபண்டில் இருந்து செயல்திட்ட சுழற்சி நிர்வாகம் குறித்த ரூட் 5, சிந்தனை கட்டமைப்புக்கு ஒரு அருமையான முன்னுரை ஆகும்.
http://tilz.tearfund.org/Publications/ROOTS/Project+cycle+management.htm

நீங்கள் எப்படி வித்தியாசத்தை ஏற்படுத்துகிறீர்கள் என்பதை காட்டுங்கள்

கிறிஸ்தவ எச்ஐவி செயல்திட்டங்களுக்கு ஒளிவீசும் பல எடுத்துக் காட்டுக்கள் இருக்கின்றன. எனினும், நீண்டகாலமாக நிதியுதவியாளர்களும் அரசாங்கங்களும் நல்மனதுடைய கிறிஸ்தவ நிகழ்ச்சிகளோடு இணைந்து செயல்பட்டார்கள். அவர்கள் தங்களால் இயன்றவற்றை சிறந்தமுறையில் செய்தார்கள் ஆனால் தொழில் திறமையில் குறைபாடு இருந்தது. ஒவ்வொரு பகுதியிலும் நாம் தகுதியை உயர்த்தவேண்டும். அது பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, பதிவுசெய்தல், நிதி கட்டுப்பாடு, பணியாளர் பயிற்சி மற்றும் வேறு எதுவாக இருந்தாலும் சரி.

சர்வதேச நிபுணர்கள் பரிந்துரைக்கும் முறைகளின்படி நம்முடைய நிகழ்ச்சிகள் பயனுள்ளதாக இருப்பதை காண்பிக்கவேண்டும். கடவுள் நமக்கு நேரத்தையும், சக்தியையும் மற்ற ஆதாரங்களையும் கொடுத் திருக்கிறார், அவற்றை ஞானமாக உபயோகிக்க நாம் பொறுப்புள்ளவர் களாக இருக்கிறோம். நாம் என்ன செய்கிறோம், அதை இன்னும் சிறப்பாக எப்படி செய்யலாம் என்று யோசிப்பதே அதன் பொருள்.

கண்காணித்தல் என்றால் குழு என்ன செய்கிறது என்பதை மதிப்பிடுவது. உபயோகமுள்ள தகவல்களை சேகரிப்பது எது சிறப்பாக செயல்படுகின்றது, எப்படி அதை மேன்மைப்படுத்தலாம் என்பதை உங்களுக்கு காண்பிக்கும். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை உங்கள் ஆதரவாளர்களிடம் காண்பிக்கலாம். திருச்சபை தலைவர்களின் ஆதரவை வெல்லலாம். அரசாங்கத்திடம் இருந்து நன்மைகளை பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சேவையின் மதிப்பை நிதியுதவியாளர்களுக்கு காண்பிக்கலாம். அவர்கள் புரிந்துகொள்ளும் வழியில் நீங்கள் எவ்வளவு சிக்கனமாக இருக்கிறீர்கள் என்பதை காண்பிக்கலாம்.

நிதியுதவியாளர்கள் அவர்கள் கொடுக்கிற பணத்தின் தாக்கத்தை காண்பிக்க வேண்டும், எனவே நாம் அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும். சமுதாயங் களை ஒருங்கிணைக்கும் சபைகளின் சக்தியை பார்த்து பல பெரிய நிதியுதவியாளர்கள் வியந்துபோய் இருக்கிறார்கள். பல நாடுகளில் இருக்கும் அதிகபட்சமான 'விசுவாசம் சார்ந்த' செயல்திட்டங்கள் கிறிஸ்தவர் களுடையதே என்பது அவர்களுக்கு தெரியும். ஆனால் மற்றவர்கள் எச்சரிக் கையாக இருக்கிறார்கள். உங்களுடைய நிகழ்ச்சிகள் அவர்களுடைய பலத்தை தெளிவாக காண்பிக்க வேண்டும்.

நன்கு எழுதப்பட்ட அறிக்கைக்களின் மூலமாக அவர்கள் நன்றாக பணிசெய்கிறார்கள் என்பதை காண்பிக்கும் நன்கு செயல்பட்டுக் கொண்டு இருக்கும் செயல்திட்டங்களுக்கு குறைபாடு ஏற்பட்டு உள்ளது. நீங்கள்

அவர்களுள் ஒருவராக இருந்தால், புதிய நிதி ஆதரவை பெற்றுக் கொள்வதற்கு ஒரு பெரிய அடி எடுத்துவைத்துவிட்டீர்கள். ஆனால் கதை சொன்னால் மாத்திரம் போதாது. தகவல், புள்ளிவரைபடங்கள், அட்டவணைகள், நில வரைபடங்கள், படங்கள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவை உங்களுக்கு தேவை. ஒரு நல்ல தரம்வாய்ந்த ஆர்வமூட்டுகிற படம், அட்டவணை, புள்ளிவரைபடங்கள் அல்லது நில வரைபடங்கள் ஆகியவை ஆயிரம் வார்த்தைகளுக்கு சமம். நிதியுதவியாளர்கள் மற்றும் முக்கியமான பார்வையாளர்களோடு சுருக்கமான, கவனம்செலுத்தப்பட்ட, வேகமாக நகரும் தகவல் தொடர்பு திரைக்காட்சிகளை உபயோகப் படுத்துங்கள்.

உங்களுடைய அவசர தேவை, நீங்கள் என்ன செய்கிறீர்கள் மற்றும் நீங்கள் ஏன் செய்கிறீர்கள் ஆகியவற்றை விவரிக்கும் தெளிவான விண்ணப்பங்களோடு நிதியுதவியாளர்களுக்கு உதவுங்கள். அது இச்சூழ்நிலையில் முக்கியமானதாகவும் தனித்தன்மை வாய்ந்ததாகவும் இருக்கும். மற்ற நிறுவனங்கள் செய்யும் வேலையோடு உங்களுடைய பணி எப்படி பொருந்தும் என்பதை விவரியுங்கள். அளவையும் தாக்கத்தையும் காண்பிக்க தகவல்களை உபயோகியுங்கள். விரிவான நிதிநிலை அறிக்கையை கொடுங்கள். அறிக்கைகள் சில பக்கங்களுக்கு மாத்திரமே இருக்கும்படியாக வைத்துக்கொள்ளுங்கள்.

செயல்திட்டங்கள் சேகரிக்கக்கூடிய தகவல்களின் சில எடுத்துக்காட்டுகள்

- ❐ உங்களுடைய திரைக்காட்சி தகவல்தொடர்புக்குப் பின்பு மாணவர்களுடைய மனப்பாங்கு மாறிவிட்டது என்பதை ஆதாரபூர்வமாக காட்டும் கணக்கெடுப்புகள்.
- ❐ எச்ஐவி உடையவர்களுடைய வீட்டை சென்று பார்வையிட்டதன் எண்ணிக்கையும், ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்கொண்ட நேரமும்.
- ❐ ஒவ்வொரு மாதமும் உங்கள் சிறு மருத்துவமனைக்கு வரும் எச்ஐவி உடைய புதிய மக்களின் எண்ணிக்கை : வயது,பாலினம், இனம் மற்றும் அவர்கள் வந்ததற்கான காரணம்.
- ❐ ஒவ்வொரு மாதமும் கொடுக்கப்பட்ட பள்ளி பாடங்கள்; பல்வேறு பள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் முழு வருகை; பயிற்றுவிக்கப்பட்ட புதிய பள்ளி கல்வியாளர்கள் மற்றும் செயலற்றுப்போகிறவர்களின் எண்ணிக்கை, மற்றும் செயல்பட்டுக்கொண்டு இருக்கும் கல்வியாளர்கள்.
- ❐ திருச்சபை தலைவர்களுக்கும், சமுதாய தலைவர்களுக்கும் நடத்தப்படுகிற நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை மற்றும் வருவோரின் எண்ணிக்கை.
- ❐ பயிற்சி பெற்று முதல் ஆண்டில் ஒவ்வொருவரும் சந்தித்த மக்கள் இனங்கள் மற்றும் குழுக்களின் எண்ணிக்கை.
- ❐ ஒவ்வொரு மாதமும் உணவு ஆதரவு/பள்ளி கட்டணத்திற்கு உதவி பெறும் அனாதைகளின் எண்ணிக்கை

❒ வானொலி/டிவி ஒலி/ஒளிபரப்புகள் மற்றும் கணக்கிடப்பட்ட மொத்த நேயர்கள்-ஒரு நாளின் ஒவ்வொரு மணிநேரத்துக்கும் எவ்வளவும் கணக்கிடப்பட்டுள்ளது என்பதை ஒலி/ஒளிபரப்பாளர் அறிவார்.

❒ செயல்திட்ட பணியாளர்களுக்கு கொடுக்கப்பட்ட டிவிடிக்கள்/ புத்தகங்கள்/பத்திரிக்கைகள்

❒ எச்ஐவிக்காக தன்னார்வமாக பரிசோதனையும் ஆலோசனையும் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை.

❒ நேர்மறையான முடிவுகளை தந்த பரிசோதனைகள். ஒவ்வொரு மாதமும் கண்டுபிடிக்கப்பட்ட கர்ப்பிணிப்பெண்கள், பராமரிப்புக்கும், இலவச ஆண்டிவைரல் சிகிச்சைக்கும் உள்ளூர் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை.

❒ மருந்துகளை உபயோகிக்க ஊக்கப்படுத்த பார்வையிடப்பட்ட ஆண்டிவைரல் சிகிச்சை முகாம்களின் எண்ணிக்கை.

மேலும் பல நிதியுதவியாளர்கள் வருட இறுதியில் பார்க்கவிரும்பும் புள்ளிவிவரங்களோடு நீங்கள் கருத்தொற்றுமை பெற்று இருங்கள். அவர்கள் கேட்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதையும் உறுதி செய்யுங்கள். கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டின் செலவுகளும் விண்ணப்பத்தில் சேர்க்கப்படவேண்டும்.

நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயல்பாடும் எண்ணிக்கையினால் அளவிடப்படக்கூடியவை. எனினும், மிகவும் முக்கியமான காரியங்களை அளவிடுவது மிகவும் கடினமானதாகும். எடுத்துக்காட்டாக மரித்துக் கொண்டு இருப்பவர் எவ்வளவு சௌகரியமாக உணர்கிறார் என்பதை அளவிடமுடியாது. ஆம், நீங்கள் ஒரு கருத்துக்கணிப்பு நடத்தலாம், ஆனால் அது ஏற்புடையதாக இருக்காது.

தாக்கத்தை நிரூபிக்க எந்த தகவல் மிகச் சிறந்தது அல்லது அதை நிரூபிக்க முடியுமா? இதில் எப்போதுமே வாக்குவாதம் இருந்துவருகிறது. இந்த தகவல்களை சேகரிப்பதற்கான முக்கியமான காரணம் உங்களுடைய நிதியுதவியாளர்களுக்கு காண்பிப்பது அல்ல. மாறாக, என்ன நடந்து கொண்டு இருக்கிறது என்பதை உடனடியாக பார்த்து, மாறும் சூழ் நிலையை நீங்கள் நிர்வாகிக்கவே இது பயன்படுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஒரு படமோ அல்லது புள்ளிவிவர படமோ ஆயிரம் வார்த்தைகளுக்குச்சமம்

நன்றாக இயங்கும் செயல்திட்டங்கள் அனைத்திற்குமே ஒன்று இரண்டு தாள்களில் அடிக்கடி தகவல் எழுதப்படுகிற ஒரு எளிய அறிக்கை இருக்கவேண்டும். நீங்கள் எதிர்பார்ப்பதையும் கிடைக்கப்பட்ட எண்ணிக்கையையும் மாத்திரம் காண்பிக்க கூடாது. ஆனால் அவை மாறியதன் காரணமும் காட்டப்படவேண்டும். குறியீடுகள் தெளிவாகவும், நம்

பகமானதாகவும், அன்றைய நாள்வரையிலும் இருப்பதை உறுதிசெய்யவேண்டும். எண்களின் பட்டியலை காட்டிலும் எளிய புள்ளிவிவர படங்கள் மிகவும் உதவியாக இருக்கும். எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு மாதமும் நீங்கள் சந்திக்கும் பள்ளிகளை காண்பிக்கும் ஒன்றை ஏற்படுத்தலாம். ஆனால் சென்ற ஆண்டுகளில் அதே தகவல்களை கொண்ட புள்ளிவிவர வரைபடங்களோடு வேறு நிறங்களை சேர்க்க மறக்காதீர்கள். இதன்மூலமாக காலத்தின் ஏற்ற இறக்கங்களை நீங்கள் ஒப்பிடலாம். உங்களிடத்தில் ஒரு பெரிய பிரச்சனை இருக்கிறது என்பதை ஒரு புள்ளிவிவர வரைபடம் இரண்டு விநாடிகளில் காட்டிவிடும்.

மற்றவற்றை காட்டிலும் ஒரே பார்வையில் அதிக தகவல்களை சொல்கின்ற முக்கிய குறியீடுகளை கவனியுங்கள். எடுத்துக்காட்டாக, ஹைதராபாதில் இருக்கும் நிரீக்ஷினா ஏசியிடி எச்ஐவி சிறு மருத்துவமனையில் இருந்து எனக்கு மாதாந்திர செய்திமடல் வரும். அது முழுவதுமாக புகைப்படங்கள், கதைகள் மற்றும் செய்திகளாக இருக்கும். ஆனால் நான் எப்போதுமே கடைசி பக்கத்திற்கு திருப்புவேன். அதில் சென்ற மாதத்தின் சில தகவல்கள் இருக்கும். அனைத்து எண்களை காட்டிலும், ஒரு எளிமையான எண் பராமரிப்பு பணி ஆரோக்கியமாக இருக்கிறதா ஆபத்தில் இருக்கிறதா என்பதை காட்டிவிடும். குழு ஊக்கமடைந்து இருக்கிறதா அல்லது சோர்வடைந்து இருக்கிறதா என்பதையும் அவர்கள் தாக்குப்பிடிக்கிறார்களா அல்லது தடுமாறுகிறார்களா என்பதையும் காட்டிவிடும்.

அது பார்க்கப்படுகிற புதிய நோயாளிகளின் எண்ணிக்கை- பொதுவாக அது ஏறத்தாழ 65 ஆக இருக்கும். இரண்டு மாதங்களுக்கு 30க்கு கீழ் அந்த எண் சென்றால், குழு என்ன சம்பவிக்கிறது என்று யோசிப்பார்கள் என்று எனக்கு தெரியும். எச்ஐவி உடைய மக்களின் தேவைகள் வேறு எங்காவது சிறப்பாக சந்திக்கப்படுகிறதா, அல்லது அந்த நோய்தாக்கம் வேகம் குறைந்துவருகிறதா, அல்லது செயல்திட்டத்தின் தரத்தில் எங்காவது தவறு நிகழ்ந்துவிட்டதா, அல்லது சேவையை அதிகமாக விளம்பரப்படுத்த வேண்டுமா என்று யோசிப்பார்கள். அந்த எண் 100க்கு மேல் எழுந்தால் அவர்கள் வேலைபழு நீட்டிக்கப்படுவதை உணர்வார்கள். அது இன்னும் அதிகரிக்குமா என்று யோசிப்பார்கள். அப்படியானால் அவசரமாக அவர்களுக்கு அதிகமான பணியாளர்கள் தேவைப்படுவார்கள்.

சவால்களை சமாளிப்பதன் மூலம் அழிவுகளை தடுக்க உதவுதல்

பல கிறிஸ்தவர்கள் ஆபத்துக்குள் நடந்துசெல்கிறார்கள். கடவுள் எப்படியாவது காரியங்களை சரிசெய்துவிடுவார் என்கிற நம்பிக் கையில் எதிர்காலத்தை குறித்து யோசிக்காமலே இருப்பார்கள். சிறிய காரியங்களிலும் பெரிய காரியங்களிலும் முன்னமே திட்டமிட்டு, சவால் களை சமாளிக்க வேண்டும்.

2 தெசலோனிக்கேயர் 3:10 "ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று "கூறுகின்றது. "சவாலை சமாளிக்காதவரிடம் செயல்திட்டமும் இருக்காது" என்றும் இது பொருட்படும். சவாலை சமாளிப்பதும் ஒருவகையான வேலைதான்.

அதிகமான நேரத்தையும் திறனையும் செலவிடாமல் வரக்கூடிய சவால்களை எப்படி குறைப்பது? பல செயல்திட்டங்கள் சவாலை சமாளிக்கத் தெரியாததினால் மூடப்படுகின்றன.

முதல் காரியம் ஒரு பட்டியலை தயாரிப்பதுதான். பின்பு ஒவ்வொரு காரியத்துக்கு எதிராகவும் அந்த சவாலை எப்படி சமாளிப்பது என்கிறதை நீங்களும் உங்கள் குழுவும் யோசிக்கலாம். அந்த சவால் எவ்வளவு கடினமானது என்பதை பொறுத்து நீங்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியின் அளவும் இருக்கும். இந்த காரியம் நடப்பதற்கான சாத்தியங்கள் என்ன? இதனால் ஏற்படக்கூடிய தாக்கம் என்ன? எடுத்துக்காட்டாக, உங்கள் செயல்திட்ட தலைவர் திடீரென ஒரு கடுமையான நோயினால் ஆபத்தினால் இறந்துபோகிறார். ஆனால் இதன் விளைவாக செயல்திட்டம் அழிந்துபோகக்கூடுமானால், நீங்கள் இதை எப்படி சமாளிப்பீர்கள் என்பதை திட்டமிடவேண்டும். உங்களுடைய கணிப்பொறி திருடப்படுகிறது, அதை மாற்ற அதிக செலவாகும். நீங்கள் விலையுயர்ந்த தகவல்களை இழந்துபோவீர்கள். காப்பீட்டை குறித்தும் தினமும் உங்கள் தகவல்களை பிற்பாதுகாப்பு செய்வது குறித்தும் யோசியுங்கள்.

உங்களுடைய சவால்களில் இவை அடங்கலாம் :

- ❒ செயல்திட்டத்தின் மரியாதையை கெடுக்கிற மோசமாக பயிற்றுவிக்கப்பட்ட தன்னார்வத்தொண்டர்.
- ❒ சாலையில் பெரிய விபத்து
- ❒ விசாவுக்கு மிகவும் தாமதமாக விண்ணப்பித்தல் - மிகவும் வழக்காமானது !
- ❒ உங்களுடைய செயல்திட்டத்தில் இருந்து யாரோ திருடுகிறார்கள்.
- ❒ பெரிய நிதியுதவிகள் தாமதமாக வருகின்றன.
- ❒ மோசமான திட்டம் மற்றும் நிதிநிலைமையில் ஒழுங்கின்மை காரணமாக வாடகை செலுத்தமுடியாமலும் சம்பளம் கொடுக்கமுடியாமலும் இருத்தல்.
- ❒ பணவீக்கம் அதிகமாக இருக்கும்போது விலையேற்றத்தை அனுமதிக்க மறந்துபோவது.
- ❒ ஒரே நபர் எல்லாவற்றையும் செய்வதில் சார்ந்திருப்பது- அவர் திடீரென வியாதிப்பட்டு நாட்டைவிட்டு செல்லவேண்டிய நிலைமை.

சவால் எடுத்துக்காட்டு : தகவல் இழப்பு உங்கள் செயல்திட்டத்தை அழிக்கக்கூடும்

செயல்திட்டத்தில் வழக்கமான பிரச்சனை கணிப்பொறி தகவலில் அதிகமான இழப்பு ஏற்படுவதினால் உண்டாகிறது. எல்லா கணிப்பொறிகளும் செயலிழக்கக்கூடியவை-புதியவையும் கூட. இந்த காரணங்கள் இயந்திரரீதியாக, மென்பொருள்ரீதியாக அல்லது வைரஸ் தாக்குதலினால் ஏற்படலாம். இப்போதே நீங்கள் செயல்படவில்லை என்றால் ஒரு நாள் நீங்கள் உங்கள் கோப்புகள், மின்னஞ்சல்கள் மற்றும் நிதி பதிவுகளை

இழக்கநேரிடும். சிறிய கணிப்பொறிகள் இன்னும் அதிகமாக பழுதடைகின்றன. உங்கள் பின் பாதுகாப்பு தகடுகள், நாடாக்கள், சிடிக்கள் மற்றும் USB குச்சிகளோடு கணிப்பொறிகளும் சுலபமாக திருடப்படுகின்றன.

எந்த நகலும் வைத்திருக்கப்படவில்லை என்றால் இந்த வகையான இழப்பை சரிசெய்வது முடியாத காரியமாக இருக்கலாம். தன்னார்வத்தொண்டர்களின் முகவரிப் புத்தகத்தை மாத்திரம் மீண்டும் ஏற்படுத்த பல வாரங்கள் ஆகலாம். மக்கள் ஒட்டுமொத்த புத்தக அடுக்குகளையும், ஒரு வருடகால வேதாகம குறிப்புகளையும், பத்தாண்டுகால செயல் திட்டபுகைப்படங்களையும், ஒட்டு மொத்த பயிற்சி நிகழ்ச்சிகளையும், பல மாதக் கணக்குகளையும், முக்கியமான நிதியுதவியாளர் பதிவுகளையும் அறிக்கைகளையும் இழந்து இருக்கிறார்கள். இழந்ததை மீட்க செலவிடப் பட்ட மாதங்கள் மக்களை பயிற்றுவிக்க செலவிடப்பட்டு இருக்கவேண்டும். வியாதியுள்ளவர்களை பராமரிக்கவும், புதிய செயல்திட்டங்களை திட்டமிடவும், நிதியுதவியாளர்களிடம் பேசவும் செலவிடப்பட்டிருக்க வேண்டும். செயல்திட்ட உற்பத்தியும் வருமானமும் வீழ்ச்சி அடைகிறது, விலை ஏற்றமடைகிறது. தகவல் இழப்பு ஒரு செயல்திட்டத்தை அழிக்கும் அளவுக்கு கடுமையானது.

ஒவ்வொரு நாளிலும், சிலநாட்களுக்கு ஒருமுறையும் மக்கள் தங்கள் தகவல்களை எப்படி பின் பாதுகாப்பு செய்கிறார்கள் என்பதை பார்த்து ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்து இருக்கிறேன். கணிப்பொறியை உபயோகிக்கிற ஒவ்வொரு தொழில்ரீதியான செயல் திட்டத்திற்கும் தகவலை பின் பாதுகாப்பு செய்வதுதான் முதல் முக்கியத்துவம் வாய்ந்த செயலாக இருக்க வேண்டும்.

இரண்டு பெரிய வெளிப்புற தகவல் சேமிப்பு தகடுகளை பெற்றுக்கொண்டு, தினந்தோறும் அல்லது இரண்டு நாட்களுக்கு ஒருமுறை எல்லா மாற்றங்களையும் பின்பாதுகாப்பு செய்யுங்கள். ஒவ்வொரு வாரமும் வெவ்வேறு தகவல் சேமிப்பு தகடுகளை உபயோகித்து, இரண்டாவது தகடை ஒட்டுமொத்தமாக வேறு இடத்திற்கு எடுத்துச்சென்றுவிடுங்கள் (அலுவலகத்திற்கு அல்ல). அலுவலகத்தில் இருப்பதை மிகவும் கவனமாக மறைத்துவையுங்கள் - இல்லையென்றால் திருடர்கள் கணிப்பொறி மற்றும் பின் பாதுகாப்பு இரண்டையுமே திருடிவிடுவார்கள்.

முறையான வழக்கத்தை ஏற்படுத்துங்கள். என்று யாரால் பின்பாதுகாப்பு செய்யப்பட்டது என்பதை சுவர் காகிதத்தில் எழுதிவையுங்கள். உங்களுடைய மிகவும் முக்கியமான கோப்புகளை வைத்துக்கொள்ள ஒரு சிறிய USBயில் அதிக பாதுகாப்பிற்காக வைத்திருங்கள். மின்னஞ்சலில் அதிக கவனம் செலுத்துங்கள். அவுட்லுக் போன்ற மென்பொருள்களை பின் பாதுகாப்பு செய்வது மிகவும் கடினம். அறிவுரைகளுக்கு கூகிளில் தேடுங்கள்.

எனவே, நாம் எப்படி காரியங்களை செயல்படுத்துவது, மக்கள் இயக்கங்களை தொடங்க உதவுவது, தன்னார்வத்தொண்டர்களை நல்ல சக்திவாய்ந்த தலைவர்களாக உபயோகிப்பது என்பனவற்றை பார்த்துவிட்டோம். இப்போது நாம் பல பெரிய எச்ஐவி செயல்திட்டங்களுக்கான தடைக்கல்லை பார்ப்போம்: செயல்திறன் குறைபாடு.

அதிகாரம் 13

கூடுதல் செயல்திட்ட திறனை வளர்த்தல்

திறனை வளர்ப்பது ஏன் மிக முக்கியமான காரியமாக இருக்கக்கூடும்?

வளர்வதற்கும் காரியங்களை செய்து முடிப்பதற்கும் பல கிறிஸ்தவ அமைப்புகளுக்கு மிகக்குறைவான திறனே இருக்கிறது. எல்லோருமே அதிகமான வேலைப் பளுவில் இருப்பதாக தெரிகிறது. பல தேவைகள் இருக்கின்றன.

சரியான நுட்பங்களை உடைய மக்கள் உங்களிடம் குறைவாக இருக்கலாம். பணியாளர்களுக்கு கூடுதல் பயிற்சி தேவைப்படலாம். தலைவர்களுக்கு திட்டமிடும் திறன் குறைவாக இருக்கலாம். நிதிநிலை அறிக்கைகளையும், அவர்கள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளின் பட்டியலையும் உருவாக்க அவர்கள் சிரமப்படலாம். முன்பே திட்டமிட்டு, ஆரம்பம் முதல் அதற்கு அடுத்த நிலை வரை அனைத்து படிகளையும் செயல்படுத்துவது மிக முக்கியமான தொழில்நுட்பம். அவர்களிடத்தில் நிதி குறைவாக இருக்கலாம். எப்படி நிதியுதவியாளர்களை ஈர்ப்பது என்று தெரியாமல் இருக்கலாம். சபை அங்கத்தினர்களிடம் இருந்து நிதி வசூலிப்பது எப்படி என்று புரியாமல் இருக்கலாம்.

இயேசுவும் ஆதித்திருச்சபையும் செய்ததை நாம் செய்யவேண்டும்: மற்றவர்களை பயிற்றுவித்து வழிநடத்தக்கூடிய முக்கியமான சிலரோடு நாம் நேரத்தை முதலீடுசெய்யவேண்டும். சபையில் ஆழமாக வேரூன்றி இருந்தால் உங்களால் சுலபமாக திறனை வளர்க்கமுடியும். சபையின் ஊழியத்தோடு தொடர்பில்லாமல், உங்களுடைய சொந்த காரியத்தை நீங்கள் செய்வதாக பார்க்கமாட்டார்கள். உங்களுடைய சொந்த திருச்சபை தரிசனத்தை உரிமையாக்கிக்கொண்டால், பல காரியங்கள் வேகமாக நடக்கலாம். சபையின் ஒரு இடத்தை நீங்கள் அலுவலகமாக உபயோகப் படுத்த அனுமதிக்கப்படலாம். தொலைபேசி இணைப்புகள், இணையம், கணிப்பொறிகள் மற்றும் நகல் எடுக்கும் இயந்திரங்கள் ஆகிய ஆதாரங்களை பகிர்ந்துகொள்ள அனுமதிக்கப்படலாம்.

திருச்சபைத்தலைவர்கள் சபையாரிடம் பணியை விளம்பரம் செய்யலாம். நிதியுதவி செய்யவும், மற்ற சபைகள் இதில் ஈடுபடவும், தேசிய திருச்சபைகள் மாநாட்டில் பேசுவதற்கு கதவுகளை திறக்கவும் பிரச்சாரம் செய்யலாம். குழு அங்கத்தினர்களாகவும் ஆலோசகர்களாகவும் அனுபவம்

வாய்ந்த மூத்த தலைவர்களை அவர்கள் கொடுக்கலாம். உங்களுடைய மிகவும் அர்ப்பணம் மிக்க தன்னார்வத்தொண்டர்கள் சபையில் இருந்து வருவதை நீங்கள் காணலாம்.

ஒரு 'பிரதான' சபை தனிப்பட்ட சட்டபூர்வமான அமைப்பாக செயல் பட்டு புதிய எச்ஐவி நிகழ்ச்சிகளை உருவாக்க முயற்சித்தால் காரியங்கள் சிறப்பாக செயல்படும். ஆனால் சபை அங்கத்தினர்கள்/தலைவர்கள் குழுவில் இடம்பெறவேண்டும். அவர்கள் தொடர்ந்து பெருமையாகவும், உரிமையுள் ளவர்களாகவும் விசேஷித்த வழியில் உணர்வார்கள்.

திறனை வளருங்கள்

தலைமைத்துவ நுட்பம், ஒருங்கிணைக்கும் வழிகள், கலாச்சார முறைகள் மற்றும் கட்டிடங்கள் போன்ற பொருட்செல்வங்கள் ஆகியவை ஒருசேரப்பெற்றதே திறன் ஆகும். உகாண்டாவில் நாங்கள் பலமுறை பார்த்ததுபோல, இந்த காரியங்கள் அமைப்புகள் பயனுள்ளதாக பதிலளிக்க உதவலாம் அல்லது பின்னுக்கு தள்ளலாம்.

கிறிஸ்துவின் கரிசனையை மையமாக வைத்துக்கொண்டு, சபை தான் சிறப்பாக செய்யும் வேலையை அங்கீகரிக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, வாலிபப் பணியாளர்களை பள்ளிகளுக்கு அனுப்புவதில் நீண்ட வரலாறு உங்களிடத்தில் இருக்கலாம். அவர்கள் செய்கின்ற பணியோடு எச்ஐவி பாடங்களை சேர்ப்பது சுலபம். உண்மையான தேவைகள் என்ன அதை எப்படி சந்திக்கலாம் என்று திட்டம்வகுப்பதே திறனை வளர்ப்பதாகும். நீங்கள் செய்யும் வித்தியாசத்தை அளவிடுவதும், உங்களுடைய தவறுகளில் இருந்தும் நன்றாக செயல்படும் காரியங்களில் இருந்தும் கற்றுக்கொள்வதும் திறனை வளர்ப்பதுதான்.

புதிய எச்ஐவி நிகழ்ச்சிகளை தொடங்குவதும் திறனை அதிகரிப்பதற்கு ஒரு வழியாகும். அல்லது நீங்கள் தற்போது இருக்கும் எச்ஐவி செயல் திட்டங்களை விரிவுபடுத்தலாம், அல்லது எச்ஐவி செயல்பாடுகளை மற்ற நிகழ்ச்சிகளில் இணைக்கலாம். மூன்றிலுமே உங்களுடைய குறைவான ஆதாரங்களை கவனமாக உபயோகிப்பது மிகவும் முக்கியம் : மக்கள், கட்டிடங்கள், நேரம், நிதி. மற்றவர்களோடு குறிப்பாக எச்ஐவியோடு வாழ்கின்ற மக்களின் ஒருங்கிணைப்புகளோடு இணைந்து வேலைசெய்ய முயற்சியுங்கள்.

ஒரு சபை அல்லது செயல்திட்டம் சரியாகவும் விரைவாகவும் உபயோகிக் கமுடியாத அளவுக்கு அதிகமான ஆதாரங்கள் கிடைக்கப் பெறும். எடுத்துக்காட்டாக, வேலை ஒரு ஆண்டிற்குள் இரட்டிப்பாக மாறுவதாக இருந் தால் மாத்திரம் ஒரு நிதியுதவியாளர் அதிகமான நிதியுதவியை கொடுக்க தயாராக இருக்கலாம். திறன்களுக்கு குறைபாடு இருந்தால்-தலைமைத் துவத்திலோ அல்லது சரியான நுட்பங்களை உடைய மக்களிடமோ-வாய்ப்புகளை எளிதாக இழக்கச்செய்யும். நிதியுதவி சீக்கிரத்தில் காணாமல்போய்விடும். மக்கள் மற்ற காரியங்களுக்கு நகர்ந்துவிடுவார்கள். கட்டிடங்களில் முக்கியத்துவம் குறைந்த பொருட்கள் நிரம்பிவிடும்.

வலிமையான அஸ்திவாரத்தில் சீக்கிரத்தில், நீண்டகாலம் நிலைத்து நிற்கக்கூடிய, பாதுகாப்பாக வளரக்கூடிய நிகழ்ச்சிகளை தலைவர்கள் உருவாக்க உதவுவதே திறனை வளர்த்தலின் குறிக்கோள்.

அதேபோன்ற பணியை செய்யும் வலிமையான அமைப்புகளை சென்று பார்த்து அவர்கள் எப்படி வேலைசெய்கிறார்கள் என்று பார்ப்பதே அதிக திறனை உருவாக்குவதற்கான முக்கியமான வழி. உங்களிடத்தில் இல்லாத திறமைகளை உடையவர்களை பணியமர்த்துங்கள், உங்களைவிடவும் திறமையான, வரம்பெற்ற, விசுவாசம் நிறைந்தவர்கள் என்று நினைக்கிறவர்களை பணியமர்த்துங்கள். இது உண்மையில் தைரியத்துக்கான பரிசோதனை. ஆனால் இதுவே வளர்வதற்கான வழி. உங்கள் சபையில் இருக்கும் தலைவர்களுடன் உங்கள் தேவைகளை பகிர்ந்துகொள்ளுங்கள்.

பால் கமுங்கா, ஆப்பிரிக்க மாநிலத்தின் ஏசிபிடியின் தலைவர் மற்றும் திறனை இயக்குநர், ஏசிபிடி உகாண்டா

பணி வளரும்போது, உங்கள் குழுவின் பிரதிநிதிகளை அதிகரித்து திறமைகளுக்கும் பின்னணிக்கும் சரியான சமன்பாடு இருக்கும்படி செய்புங்கள். ஒவ்வொரு பணிநியமனத்திலும் செயல்பாட்டு இயக்குநர் மகிழ்ச்சியாக இருப்பதை உறுதிசெய்யுங்கள்.

திறன்-வளர்க்கிறவர்களுக்கான பாடங்கள்

❒ **நீங்கள் வேறு அமைப்புகளில் திறனை வளர்க்கப் போகிறீர்கள்** என்றால் அங்கே நீங்கள் ஒருங்கிணைக்கிறவர்களுடன் தெளிவான ஒப்பந்தம்' ஒன்றை உருவாக்குங்கள். அவர்கள் விரும்பும் நோக்கங்கள், முறைமற்றும் கால அளவு ஆகியவற்றில் தெளிவாக இருங்கள். உங்களால் என்ன உதவிசெய்யமுடியும், அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதில் கருத்து ஒற்றுமை பெற்றிடுங்கள்.

❒ **நேரத்தை பயன்படுத்துவதில்** ஒழுங்குடன் இருங்கள். அவர்களுடைய பக்கத்தில் இருந்தும் உங்கள் பக்கத்தில் இருந்தும் யார் ஈடுபடுவார்கள் என்பதில் தெளிவாக இருங்கள்.

❒ **கல்வி, அனுபவம் மற்றும் நுட்பங்களில்** இருக்கும் மிக முக்கியமான இடைவெளிகளை கண்டுபிடியுங்கள்-வாழ்க்கை சிறியது, கவனமில்லாமல் இருக்கமுடியாது.

❒ **திட்டம்/செயல்திட்டம்/முறைமை ஆகியவற்றில்கவனம்** செலுத்துங்கள் - முக்கியமான கேள்விகளை கேட்டு, பதில் வரும்வரை நிலையாக இருங்கள். ஆனால் இரண்டு சந்திப்புகளிலேயே எல்லாம் நிகழ வேண்டும் என்றுஎதிர்பார்க்காதிருங்கள். மக்களுக்கு நேரம் தேவை. கருத்துப் பகிர்வு, வென் என்னும் படங்கள், மன வரைபடங்கள் மற்றும் கிளை வரைபடங்கள் (Brainstorming, Venn diagrams, mapping and tree diagrams) போன்ற பங்குகொள்ளக்கூடிய பயிற்சிகளை பயன்படுத்துங்கள். முக்கியமான பிரச்சனைகளை ஒன்றாக பார்க்கும்படி பெரிய காகிதங்களை உபயோகியுங்கள்.

❒ **மதிப்பீட்டிலும் கண்காணிப்பிலும் பயிற்சி அளியுங்கள்,**மக்கள் இதன்மூலமாக தங்கள் சொந்த தாக்கத்தை அறிந்து கொள்வார்கள். அவர்கள்

காலப்போக்கில் தங்களே சொந்தமாக சரிசெய்ய பழகிக் கொள்வார்கள். மற்ற செயல் திட்டங்களில் இருந்து எடுத்துக்காட்டுகளை உபயோகித்து, பார்வையாளர்களை ஊக்கப்படுத்துங்கள். நல்லநிர்வாகத்திற்கான கருத்துக்கள் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் பொருந்தும், எனவே மற்ற எச்ஐவி பணிகளை மாத்திரம் பார்வையிடுவதில் உங்களை கட்டுப்படுத்திக் கொள்ளாதீர்கள்.

தேசிய தலைமைத்துவத்தை வளர்த்தல்

கிட்டதட்ட எல்லா ஏசியிடி பணிகளும் அவர்கள் நாட்டை சேர்ந்தவர்களாலேயே வழிநடத்தப்படுகின்றது. எல்லா நிகழ்ச்சிகளும் தங்களுடைய சொந்த நாட்டின் குழுக்களுக்கு கணக்கு கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நாங்கள் எப்படி இந்த தரம் வாய்ந்த தலைவர்களை கண்டு பிடிக்கிறோம் என்று கேட்கிறார்கள். இது மிகவும் சுலபம். அந்த பணி வலிமையான உள்ளூர் சபையினால் உரிமையாக்கப்படுவதை உறுதிசெய்யுங்கள். முக்கிய தலைவர் பணக்கார நாடுகளில் இருந்தால், ஒரு செயல்திட்டத்தை முழுவதுமாக உரிமை எடுத்துக்கொள்ள வளரும் நாடுகளின் சபைத்தலைவர்கள் தயங்குவார்கள். கூடுதல் நிதியை கொடுக்கக்கூடிய சர்வதேச தொடர்புகளை அவர்கள் பொதுவாக மதிக்கிறார்கள். அதே சமயம் வேற்று நாட்டவரை நடத்தும் விதம் அவர்களுடைய நாட்டினருக்கு பிடிக்கவில்லை என்றால், அவர்கள் நிதியுதவியை நிறுத்திவிடுவார்கள் என்பதும் அவர்களுக்கு தெரியும்.

ஆனால் உள்ளூர் சபைகள் தங்களுடைய சிறந்த தலைவர்களையும், மூத்த குழுக்களின் அங்கத்தினர்களையும், கணக்கர்களையும், வழக்கறிஞர்களையும், வணிகர்களையும் எதற்காக அர்ப்பணம் செய்யவேண்டும்? அவர்கள் தங்கள் வேற்று நாட்டு தலைவர் போராடி தன்னுடைய தலைமைத்துவ குழுவை உருவாக்க அனுமதிக்கலாம். வேற்று நாட்டவர் தங்கள் சொந்த நாட்டில் இருந்தே அதிகமானோரை வரவழைக்கட்டும் என்று ஓய்வாக இருந்துவிடலாம். முற்றிலும் உள்ளூர் சபைகளுக்கு தங்கள் சொந்த ஊழியத்தின் ஒரு பகுதியாக, முழுவதும் தங்களுக்கே உரியதாக்கிய செயல்திட்டங்களை பார்த்தீர்களானால், அங்கே வலிமையான உள்நாட்டு தலைமைத்துவத்தை நீங்கள் பார்க்கமுடியும்.

மாற்றத்தை நிர்வாகிப்பது - எப்படி அதை செய்வது

நிலைத்தன்மை பெற்றுவிட்ட செயல்திட்டங்களில் மிகபெரும் சவால் மக்களை மாற்றுவதுதான்.

அதில் முதல் படி திருப்தியின்மையின் ஊக்கம் (ID-Inspirational Dissatisfaction). எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தால் அவர்கள் ஏன் மாறவேண்டும்? பிரச்சனையை விவரிப்பதன்மூலம் அவர்களிடம் திருப்தியின்மையை உருவாக்கவேண்டும். வாழ்க்கை இன்னும் எப்படி மேன்மையாக இருக்கும் என்கிற தெளிவான தரிசனத்தை கொடுங்கள்.

மற்ற பாதிக்கப்பட்டவர்களிடம் ஆலோசனை கேளுங்கள். இதனால் மக்கள் ஒன்றாக மாற்றத்தை உரிமையாக்கிக்கொள்வார்கள்.

உங்கள் மனதில் என்ன இருக்கிறது என்பதை விவரியுங்கள். அது எப்படி வேலைசெய்யும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள உதவுங்கள். அவர்களுடைய கவலைகளை கேளுங்கள் (பின்பு இன்னும் அதிகமாக கேளுங்கள்). பிரச்சனைகளை சுற்றி ஒரு வழியை ஒன்றிணைந்து ஏற்படுத்துங்கள். அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்கவேண்டும் என்பதில் கருத்து ஒற்றுமை ஏற்பட முயற்சிசெய்யுங்கள்.
பீட்டர் முகாவீட், மேப் இண்டர்நேஷனல்

சில சமயங்களில் உள்ளூர் தலைவர்கள் தயாராக இருக்கலாம். ஆனால் வேற்றுநாட்டு தலைவர் தன்னுடைய பொறுப்பை ஒப்படைக்க ஒருவரை தேடும்போது, அவர்கள் முன்னே வரமாட்டார்கள். வேற்றுநாட்டு தலைவருக்கு உள்ளூர் தலைவர்கள் அதிகமான விசுவாசத்தையும் அன்பையும் உணரலாம். வேற்றுநாட்டவர் நாட்டைவிட்டு வெளியே செல்வதில் ஆர்வமாக இருப்பதாக காட்டிக்கொண்டால் அவர் மனம் புண்படுவார் என்று அவர்கள் கவலைப்படலாம். அவர்கள் தாழ்மையாக இருந்து பணிவிடைசெய்யும் மனப்பாங்குடன் இருக்கவேண்டும் என்று உணரலாம். நிகழ்ச்சி முழுவதையும் வழிநடத்த ஆர்வமாக இருப்பதை காட்டிக்கொள்ள விரும்பாமல் இருக்கலாம்.

பணக்கார நாடுகளில் இருந்து வரும் சில தலைவர்கள் தங்கள் தலையை அசைத்து "அது அவ்வளவு சுலபம் அல்ல" என்று என்னிடம் கூறுகிறார்கள். ஆனால் நான் பலமுறை பார்த்ததுபோல, அவர்கள் முற்றிலுமாக சென்ற பின்புதான், உள்ளூர் திருச்சபை எழுகிறது. உள்ளூர் திருச்சபை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் சூழ்நிலை நிலைதடுமாறிப்போய், நின்றுவிடும் என்று உணர்கிறார்கள். அரசாங்கம் அனைத்து வேற்றுநாட்டு 'நற்செய்தி ஊழியர்களை' யும் வெளியேற்றியபோது, பெரிய அளவில் இது நிகழ்ந்தது. அப்படிப்பட்ட திடீர் மாற்றங்கள் பெரிய அளவில் வந்திருந்தாலும், உள்ளூர் விசுவாசிகள் சவால்களுக்கு எதிர்நின்று, பணி தொடர்ந்திருப்பதை வரலாறு கூறுகின்றது. மாதிரியானது அதிகமாக உள்ளூரில் நிலைத்திருக்கும்படி மாற்றம் பெற்றது.

தலைமைத்துவம் மாறும்போது, மற்ற பல காரியங்களும் மாறத்தான் செய்கின்றன. நாம் இதை வரவேற்கவேண்டும் : புதிய தரிசனமும், பாதையும் அமைப்பை புதிதாக வைத்துக்கொள்ள மிகவும் முக்கியம். தற்போது இருக்கும் தலைவர்கள் பணியை ஒப்படைக்கும் போது கடவுளை நம்ப வேண்டும்.

சில சமயங்களில் வேற்றுநாட்டு பணியாளர்கள் அதிர்ச்சிகரமான காரியங்களை இப்படிச் சொல்ல கேட்டிருக்கிறேன் : "இந்த பட்டணத்தில்/ நகரத்தில்/இடத்தில் நான் நம்புகிற எவருமே இல்லை என்று நான் நினைக்கிறேன்". அது உண்மையாக இருந்தால், அவர்கள் நேரடியாக தாய் நாட்டிற்கே சென்றுவிடலாம். இப்படிப்பட்ட மனநிலையை வைத்துக்கொண்டு அவர்கள் என்ன செய்யமுடியும்? வரச்சொல்லி யார் அவர்களை அழைத்தது? அவர்களை அழைத்த நபரை அவர்கள் நம்பவில்லை என்றால், செல்வதற்கே அவர்கள் முதலில் சம்மதித்து இருக்கக்கூடாது. அவர்கள் ஒட்டுமொத்த

கிறிஸ்தவ சமுதாயத்தின்மேலும் ஒரு கடுமையான பழியை சுமத்தி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கருத்துக்கள் அதிகமான ஆணவம், அறியாமை, இனவெறி மற்றும் முதலாளித்துவம் ஆகியவற்றை ஒன்றிணைத்ததாகும்.

சில எதிர்பாராத சம்பவங்கள் நிகழ்ந்திருக்கலாம். சில இடங்களில் லஞ்சம் ஒரு வாழ்க்கை முறையாக இருக்கலாம். உண்மையான தலைமைத்துவ குறைபாடு இருக்கலாம். ஆனால் இங்கிலாந்திலும் செயல்திட்டங்களில் இருந்து திருடுவது வழக்கமானது/ அமெரிக்க மனிதநேய அமைப்புகளிலும் தில்லு முல்லுகள் நடந்திருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது.

தலைமைத்துவ பற்றாக்குறைக்கு தீர்வு காண்பதற்கு மற்றுமொரு வழி, உள்நாட்டில் இருந்து வேறுநாடுகளுக்கு குறைந்த நாட்களாவது சென்றுவந்தவர்களை ஊக்குவிப்பது. இது காரியங்கள் துவங்க உதவியாக இருக்கும். இப்படித்தான் ஏசியிடி உகாண்டா தொடங்கியது. அது மிகவும் சக்திவாய்ந்ததாக இருக்கிறது. ஏனென்றால், தலைவர்களுக்கு தங்கள் நாட்டு சூழ்நிலைகள் மாத்திரமல்ல, நிதியுதவி செய்கின்ற நாடுகளைப் பற்றியும் அறிந்து இருக்கிறார்கள்.

எனவே, நம்மிடம் தெளிவான நோக்கம் இருக்கிறது, எய்ட்ஸ் நிகழ்ச்சி வளர்கிறது, குழு வளர்கிறது, தன்னார்வத்தொண்டர்கள் அர்ப்பணிப்போடு இருக்கிறார்கள், நம்மிடம் கூடுதல் திறன் இருக்கிறது-இப்போது என்ன? நாம் ஆதாரங்களை வளர்ப்பதைப் பற்றி பார்க்க வேண்டும்: பணிக்கு நிதியுதவி செய்யக்கூடிய நிதியுதவியாளர்களையும் ஆதரவாளர்களையும் நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

அரசாங்கத்தின் நோக்கத்தை செயல்படுத்துவதில் விசுவாசம் சார்ந்த அமைப்புகளின் பங்கு

நைஜீரியாவில் உள்ள ப்லாகாவின் அனுபவம்

2001ன் இறுதியில் ப்லேட்யூ ஸ்டேட்டில் எச்ஐவி தாக்கத்தின் அளவு 8.5 சதவிகிதமாக உயர்ந்து இருந்தது. 2002ல் மாநில அரசு ப்லேட்யூ எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனத்தை நிறுவியது (PLACA-Plateu AIDS Control Agency). நைஜீரியாவின் ப்லேட்யூவில் இருக்கும் மக்களுக்காக ப்லாகா பின் வருவனவற்றை கொடுக்க செயல்பட்டுவருகின்றது:

- ➔ *எச்ஐவி குறித்து எய்ட்ஸ் குறித்தும் சரியான தகவல்*
- ➔ *எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் குறித்த கல்வி, மற்றும் அதன் தாக்கத்தை குறைப்பதற்கான வழிமுறைகள்*
- ➔ *தங்களுடைய எச்ஐவி நிலையை அறிந்துகொள்ளவும், அதன் மூலமாக அபாயகரமான பாலியல் உறவுகள் மற்றும் சமுதாய நடத்தைகளை மாற்றிக்கொள்ள தீர்மானங்கள் எடுக்க உதவுதல்.*
- ➔ *சந்திக்கப்படாத மக்களுக்கு கற்பிப்பதில் பங்குபெறுதல்*
- ➔ *எச்ஐவி உடையவர்களுக்கும், அனாதைகளுக்கும், பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளுக்கும், பாலியல் பணியாளர்களுக்கும் பராமரிப்பும் ஆதரவும் கொடுத்தல்.*

பிரதான வெற்றி

ப்லாகாவின் காரணமாக, நைஜீரியாவில் எச்ஐவி/எய்ட்ஸுக்கு எதிரான பல அடுக்கு பதிலை முழுவீச்சில் உருவாக்கியதிலும், உலக தரம்வாய்ந்த மாநிலத்திற்கு சொந்தமான எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் ஆராய்ச்சி மையத்தை நிறுவியதிலும் முதல் மாநிலமாக ப்லேட்யூ ஸ்டேட் விளங்குகிறது. ஆராய்ச்சிக்கூடத்தின் பெயர் (ப்லேட்யூ ஸ்டேட் மனித வைரசுகள் குறித்த படிப்பு மையம்) "ப்லேட்யூ ஸ்டேட் ஹ்யூமன் வைராலஜி செண்டர்". ப்லேட்யூ ஸ்டேட்டில் இருக்கும் 32 லட்சம் மக்களில் 97.6 சதவிகிதம் மக்கள் சந்திக்கப்பட்டு எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை பெற்றுள்ளனர். அந்த மாநிலத்தின் மக்கள் தொகையின் 35 சதவிகிதம் பேர் எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் குறித்து கல்வியளிக்கப்பட்டு, அறிந்து கொண்டுள்ளனர். தாயிடமிருந்து குழந்தைக்கு பரவுவதில் இருந்து பாதுகாக்கும் சேவைகளை (PMTCT-Prevention from Mother to Child Transmission services) 31,280 கர்ப்பிணிப் பெண்கள் அணுகமுடிகிறது. மாநிலத்தில் 426 தன்னார்வ பரிசோதனை மற்றும் ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட்டு, எச்ஐவி ஆலோசனைக்கும் பரிசோதனைக்கும் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. 22,000க்கு மேற்பட்ட எச்ஐவி ஆலோசகர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு சமுதாயம் சார்ந்த எச்ஐவி ஆலோசனை மற்றும் பரிசோதனை சேவைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஏறத்தாழ பத்து லட்சம் பேருக்கு ஆலோசனை வழங்கப்பட்டு தங்களுடைய எச்ஐவி நிலையை அறிந்து கொண்டுள்ளனர். எச்ஐவி உடைய 19,933 பேர் இப்போது சிகிச்சை பெற்றுவருகின்றனர். எச்ஐவியோடு வாழ்ந்து வருகின்ற மக்களுக்காக 172 ஆதரவு குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சவால்களும் கற்றுக்கொண்ட பாடங்களும்

வெகுசில விசுவாசம் சார்ந்த அமைப்புகளே எச்ஐவி மற்றும் எய்ட்ஸுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கின்றன. இதன் விளைவாக, எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் தொடர்பான அவமானப்படுத்துதல் மற்றும் பிரிவினை உண்டாக்குதலை மாநிலம் சந்தித்து வருகின்றது. ஆனால் விசுவாசம் சார்ந்த சமுதாயம் எச்ஐவி மற்றும் எய்ட்ஸுக்கு எதிரான பதிலளிப்பதில் முன்னோடியாக இருந்தால், பலர் விரைவாகவும் சுலபமாகவும் சந்திக்கப்படலாம்.

பரிந்துரை

எச்ஐவி ஒரு மனித வைரஸ், மற்றும் எய்ட்ஸ் ஒரு மனித நோய். அவற்றை வெற்றிக்கொள்ள லூக்கா 4:18ல் கடவுள் திருச்சபை சமுதாயத்திற்கு கொடுத்த நற்செய்தியின் வல்லமை தேவை. இதை நிறைவேற்ற, மனிதகுலத்துக்கு எதிரான எய்ட்ஸின் சவாலுக்கு விசுவாசம் சார்ந்த சமுதாயம் ஒன்றுபட வேண்டும் என்பதே பரிந்துரைக்கப்படுகின்றது. எச்ஐவி மற்றும் எய்ட்ஸுக்கு எதிராக பதிலளிப்பதில் முன்னோடியாக இருக்க மத்தேயு 28:18-10ல் கடவுள் திருச்சபை சமுதாயத்திற்கு பெலன் கொடுத்து இருக்கிறார்.

டாக்டர் ஜான் கே.ஜினுங், செயல் இயக்குநர், ப்லாகா, நைஜீரியா, பெப்ருவரி 2009

அதிகாரம் 14

நிலைத்திருக்கக்கூடிய வழியில் பணிக்கு ஆதாரம் கொடுத்தல்

எனவே எச்ஐவி நிகழ்ச்சி தொடரவும், வளரவும் நாம் ஆதாரங்களை எப்படி கண்டுபிடிப்பது? மேலும் நம்மிடத்தில் இருக்கும் குறைவான ஆதாரங்களை நாம் எப்படி சிறப்பாக நிர்வாகிப்பது?

விசுவாசத்தோடு வாழ்வதா அல்லது நிதி வசூலிப்பதா ...கடவுள் நம்மை என்ன செய்ய அழைத்திருக்கிறார்? சீனாவில் ஹட்சன் டெய்லர் தன்னுடைய தேவைகளை பற்றி கூறியதே இல்லை. எனினும் பழைய ஏற்பாட்டில் நெகேமியா நேரடியாக அரசரிடம் சென்றதாக வாசிக்கிறோம். நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று கடவுள் அழைக்கிறார்? உங்களுடைய நிகழ்ச் சிக்குள் இந்த கருத்து ஒற்றுமை இருக்கிறதா?

தனிப்பட்டமுறையில் நீங்கள் விசுவாசத்தின்படி வாழ அல்லது 'அபாயகரமாக வாழ' அழைக்கப்பட்டிருப்பதாக உணர்ந்தால் (அதாவது எழுதுவதற்கே முட்டாள்தனமாக தெரியும் நிதி உத்தரவாதங்களை ஏற் படுத்தினால்), மற்றவர்கள் 'பொறுப்பாக' திட்டமிடவேண்டும், நிதி வசூலிக்க வேண்டும் என்று நினைப்பார்கள் என்பதை அங்கீகரிக்கவேண் டும். இப்படிப்பட்ட காரியங்கள் பேசப்பட்டு கருத்தொற்றுமைக்கு வரவேண்டும். குறிப்பாக நீங்கள் கணக்கு ஒப்புவிக்கவேண்டிய சபைத் தலைவர்கள் உங்களுடைய குழுவில் இருக்கும் போது கருத்தொற்றுமை தேவை. மற்ற மக்களுடைய மரியாதையை குறித்து கவனமாக இருங்கள். எடுத்துக்காட்டாக, உங்களுடைய அமைப்போடு தொடர்புடைய இரண்டு எச்ஐவி நிகழ்ச்சிகள் நிதி பற்றாக்குறையினால் மூடப்பட்டால், அது நிதியுதவியாளர்களின் நம்பிக்கையை சீர்குலைக்கும். மற்ற நிகழ்ச்சிகளும் 'மோசமாகவும் பொறுப்பற்ற முறையிலும் நிர்வாகிக்கப்பட்டுள்ளன' என்று அவர்கள் நினைக்கலாம்.

கிறிஸ்தவ செயல்திட்டங்களின் ஒவ்வொரு படியிலும், ஒவ்வொரு தீர்மானத்திலும், நாம் நிதிகொடுக்கும் ஒவ்வொரு பணியிலும், நாம் தொடங்கும் ஒவ்வொரு செயல்திட்டத்திலும் வலிமையான விசுவாசம் மிகவும் முக்கியம். விசுவாசத்திற்கும் திட்டத்திற்கும் இடையே சமன்பாடு இருக்கவேண்டும். எல்லாம் நம்மை சார்ந்து இருப்பதைப்போல நாம் வாழவேண்டும், எல்லாம் கடவுளைச் சார்ந்து இருப்பதைப் போல நாம் ஜெபிக்க வேண்டும்.

மேன்மையான நிதி கட்டுப்பாட்டினால் செயல்திட்டம் நிலைத்திருக்கும்

பெரிய செயல்திட்டங்கள் மூடப்படுவதற்கு மிகவும் பொதுவான காரணம் மோசமான நிதி கட்டுப்பாடுதான். சில செயல்திட்டங்கள் பங்காளர்கள் என்று சொல்லிக் கொள்ளும் அளவுக்கு நம்பகமானவர்கள் அல்ல என்று நிதியுதவியாளர்களும் அரசாங்கங்களும் யோசிப்பதற்கும் இதுவே காரணம். கடவுள் உங்கள் பிரார்த்தனைக்கு பதிலளிப்பார் என்கிற நம்பிக்கையில் ஜெபித்தால் மாத்திரம் போதாது. விவசாயிகள் செடிகளை பயிரிடவேண்டும். கட்டிடத்தொழிலாளர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். செயல்திட்ட தலைவர்கள் தங்கள் நிதியை நிர்வாகிக்கவும், தங்கள் கணக்கில் போதுமான பணம் இருப்பதையும் உறுதிசெய்யவேண்டும்.

நிதிநிலை எதிர்பார்ப்பு அறிக்கையை செயல்திட்டங்கள் செய்து ஓரிரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அதை பதிவுசெய்வது மிகவும் அவசியம். ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு வரிசையை உருவாக்குங்கள். நீங்கள் எதிர்பார்க்கும் அனைத்து வருமானத்தையும், திட்டமிடும் அனைத்து செலவுகளையும் பட்டியலிடுங்கள். அவற்றின் வித்தியாசத்தை கணக்கிடுங்கள். மாதத்தின் தொடக்கத்தில் வங்கி கணக்கு முடிவு எப்படி இருக்கிறது, முடிவில் எப்படி இருக்கவேண்டும் என்பதை காண்பியுங்கள். உங்களிடத்தில் 12 வரிசைகள் இருக்கும். ஒவ்வொரு மாதத்தின் கடைசியிலும் உங்களுடைய வங்கியில் பணம் இருக்குமா என்பது உங்களுக்கு தெரியும்.

நீங்கள் பெற்றுக்கொள்ளப்போகும் எல்லா நிதியும் உங்களுக்குத் தெரியாது, ஆனால் கடந்த ஆண்டுகளில் என்ன நடந்தது மற்றும் உங்களுக்கு தெரிந்த அனைத்தையும் வைத்து மதிப்பீடு செய்யலாம். உங்களுடைய மதிப்பீடு மிகவும் குழப்பமானதாக இருந்தால், நீங்கள் செலவுசெய்ய திட்டமிட்டிருக்கும் சிலவற்றை சூழ்நிலை சரியாகும் வரை ஒத்திவையுங்கள்.

நிதிநிலை எதிர்பார்ப்பு அறிக்கைகள் ஜெபத்தில் குறிப்பாக இருக்க உதவும்: எந்த தேதியில் உங்களுக்கு எவ்வளவு தேவை என்பதை சரியாக ஜெபிக்கமுடியும். அப்படிப்பட்ட அறிக்கைகள் மிகவும் அவசியம். தொழில் ரீதியாக மதிக்கப்படக்கூடிய நிகழ்ச்சியை உருவாக்குவதில் ஆர்வமாக இருந்தால், கிடைப்பதை வைத்துக் கொண்டு மாதத்திற்கு ஒருமுறை மாத்திரம் திட்டமிட்டால் போதாது. எடுத்துக்காட்டாக, ஒரு அலுவலகத்திற்காக நீங்கள் ஒப்பந்தம் கையெழுத்திட வேண்டியதாக இருக்கலாம், அல்லது தொடர்ச்சியாக சம்பளம் மற்றும் பல கட்டணங்கள் செலுத்தவேண்டியது இருக்கலாம். இவற்றையெல்லாம் முன்பே திட்டமிடாமல் நீங்கள் செய்யமுடியாது.

ஏற்ற இறக்கங்களை நிர்வாகிப்பது

உங்களுடைய வருமானமும் செலவும் ஒவ்வொரு ஆண்டும் சரிசமமாக இருந்தாலும் கவனமாக இருங்கள். வருடத்தின் தொடக்கத்தில் உங்களுக்கு பெரிய செலவுகள் இருக்கலாம், பெரிய நிதியுதவிகள் பொதுவாக வருடத்தில் மையப்பகுதியில் அல்லது இறுதியில் வரக்கூடும். நிதிநிலை எதிர்பார்ப்பு அறிக்கை இப்படிப்பட்ட காரியங்கள் உங்களால் சமாளிக்க முடியுமா என்பதை காண்பிக்கும். காலப் பிரச்சனைகளினால் நன்கு நிதியுதவிபெறும் செயல்திட்டங்கள் சுலபமாக பணமில்லாமல் போகலாம். இது பேரழிவை உண்டுபண்ணலாம். ஏனென்றால், தலைவர்கள் சிறந்ததை எதிர்பார்க்கிறார்கள், பின்பு திடீரென அவர்களால் கட்டணம் செலுத்தமுடியாமல் போகிறது. நிதி மிகவும் கவனமாக நிர்வகிக்கப்பட வேண்டும். இல்லையென்றால் உங்கள் செயல்திட்டத்தின் மரியாதையை நீங்கள் அழித்துவிடுவீர்கள்-செயல்திட்டத்தையே அழித்துவிடவும் வாய்ப்பு இருக்கிறது. யாரும் சரியாக முன்பே திட்டமிடவில்லை, அதனால் செயல்திட்டத்திற்கு போதுமான பணம் இல்லை என்கிறதை நிதியுதவியாளர்கள் கேட்க விரும்பமாட்டார்கள். எதிர்காலத்தில் அவர்கள் உங்களுக்கு நிதியுதவி செய்வது கடினமாகிவிடும்.

வைப்புநிதியைவளருங்கள்-செயல்திட்ட சுகந்திரத்திற்காகவும் பாதுகாப்புக்காகவும்

இதனால்தான் வைப்புநிதியை வளர்ப்பது மிகவும் முக்கியமானது. இது உங்கள் நிதியை நிர்வகிக்க உதவுகின்ற வருடக்கடைசியில் வங்கியில் இருக்கும் பணம். 100 டாலருக்கு எவ்வளவு உள்நாட்டு பணம் கிடைக்கும் என்கிற பணம்மாற்று விகிதமும், ஒரு வைப்புநிதி இல்லாதநிலையில் செயல்திட்டத்தை பேரழிவுக்கு கொண்டுசெல்லலாம். அதிகமான நிதி வங்கி கணக்குக்கு வருவதற்குள் 10 அல்லது 20 சதவிகிதம் எதிர்பார்த்ததைவிட முறைவாக வருவதை காணலாம்.

உங்கள் நிதிநிலையை திட்டமிடும்போது:-

★ ஒரு காலாண்டிற்கு ஒருமுறையாவது, தொடர்ந்து பணம்மாற்று விகிதத்தை சரிபாருங்கள்.

★ இப்படிப்பட்ட காரியங்களில் கண்ணோக்கமாக இருங்கள்.

★ பணம்மாற்று விகிதங்கள் தொடர்ந்து தவறான திசையில் சென்றால், வாக்குகொடுத்தபடி எல்லாவற்றையும் செய்து முடிக்கமுடியாது என்று நிதியுதவியாளர்களிடம் முன்னமே கூறிவிடுங்கள்.(நிச்சயமாக உங்களுக்கு இன்ப அதிர்ச்சியும் ஏற்படலாம்)

வைப்புநிதியை தடைசெய்யப்பட நிதியோடு குழப்பிக் கொள்ளாமல் இருங்கள். வருடத்தின் கடைசியில் 10,000 டாலர்கள் செலவிடப்படாமல் இருப்பதை நீங்கள் காணலாம். ஆனால் அவை அனைத்தும் சீக்கிரத்தில் தீர்ந்துவிடலாம், எடுத்துக்காட்டாக ஒரு வாகனம் வாங்கும்போது தீர்ந்து போகலாம். எனவே அதை சம்பளம் கொடுப்பது போன்ற வேறு எந்த

தேவைக்காகவும் பயன்படுத்த முடியாது. உங்களுடைய செயல்திட்டத்தின் 'பொதுவான கணக்கில்' பணம் தீர்ந்துபோனாலும், உங்களுடைய வாகன நிதியை சம்பளத்திற்காக செலவுசெய்தால், நீங்கள் பெரும்பிரச்சனையில் சிக்கிகொள்வீர்கள். ஏனென்றால் நிதியுதவியாளர் சீக்கிரத்தில் உங்களுடைய வாகனத்தின் புகைப்படத்தையும், அதன் செயல்பாட்டையும் பார்க்க விரும்புவார்.

வங்கியில் அதிகமான பணம் இருந்தும் கடுமையான பிரச்சனைகளில் இருக்கும் செயல்திட்டங்களை நான் பார்த்திருக்கிறேன். அந்த பணம் எதையுமே அவர்கள் தங்களுடைய முக்கியமான மாத செலவுகளுக்கு உபயோகிக்க முடியாது. எடுத்துக்காட்டாக, அலுவலகம், தொலைபேசி, இயக்குநரின் சம்பளம் போன்றவை. அதனால் தான் வைப்புநிதி பணியின் எந்த பகுதியிலும் உபயோகப்படுத்தக்கூடிய பொதுவான நிதியில் சேமிக்கப்பட வேண்டும். வைப்புநிதியை வளர்ப்பது மிகவும் கடினம். ஏனென்றால் பெரும்பாலான பெரும் நிதியுதவிகள் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் ஒரு டாலர் விடாமல் செலவுசெய்யப்பட்டு இருக்கவேண்டும். சபை நன்கொடைகள், தனிப்பட்ட பரிசுகள், சந்தா, பயிற்சி வகுப்புகளில் இருந்து கிடைக்கும் வருமானம், மற்ற அமைப்புகளுக்கு ஆலோசனை கொடுப்பதில் கிடைக்கும் வருமானம், கட்டுப்பாடில்லாத நிதி கொடுக்கும் அளவுக்கு உங்களை உண்மையாகவே நம்பக்கூடிய தொண்டுநிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து கிடைக்கும் பணம் ஆகியவற்றை வைத்து வைப்புநிதியை வளர்க்கலாம்.

இங்கிலாந்தில் தொண்டு நிறுவன கூட்டமைப்பு (கமிஷன்) குறைந்தபட்சம் மூன்றுமாதங்கள் சாதாரணமாக இயங்கத் தேவையான பெரும் நிதியை பொதுவான வைப்புநிதியாக வைத்துகொள்ள பரிந்துரைக்கிறது. என்? எடுத்துக்காட்டாக, ஒரு நிதி அர்ப்பணிப்புக்கும் அடுத்த நிதி அர்ப்பணத்திற்கும் நடுவே இருக்கிற இடைவெளியில் அமைப்புகள் மூடப்படவேண்டிய அவசியம் இருக்காது என்பதற்காகத்தான். நீங்கள் தொடங்கும் போது அப்படிப்பட்ட வைப்புநிதி சாத்தியமே இல்லாத அளவுக்கு அதிகமானதாக தெரியலாம். ஆனால் நீங்கள் ஜெபிக்கும்போது, கடவுள் அற்புதமான காரியங்களை செய்யக்கூடியவராக இருக்கிறார். உங்களுடைய பொதுவான நிதி வரத்தொடங்கியதும் உங்கள் நிகழ்ச்சியை விரிவாக்காமல் ஒழுங்குடன் செயல்பட்டால் மாத்திரம் போதுமானது.

உங்களுடைய கணக்குகள் பொதுவான நிதியையும், தடைசெய்யப்பட்ட நிதியையும் எப்போதுமே காண்பித்துக்கொண்டு இருக்கவேண்டும். தேவை என்ன, ஒவ்வொரு தனிப்பட்ட செயல்திட்டத்திற்கு அது எப்போது தேவை என்பதையும் காண்பிக்கவேண்டும். மேன்மையான, தொடர்ச்சியான நிதிநிலை அறிக்கைகளை அமைக்க இப்போது நேரத்தை செலவுசெய்யுங்கள். நீங்கள் புரிந்துகொண்டதை உறுதிபடுத்துங்கள். எதிர்காலத்தில் அதிர்ச்சியடையாமல் இருங்கள்.

மரியாதையை பாதுகாப்பதும், ஏமாற்றுத்தனத்தை தவிர்ப்பதும்

பணியாளர்கள் வித்தைகளையும் தந்திரங்களையும் (ஏமாற்றுத்தனம்) வைத்து பணத்தை சூரையாடுவதற்கு எல்லா நாடுகளிலும் உள்ள எல்லா செயல்திட்டங்களும் வாய்ப்புள்ளதாக இருக்கிறது. உங்களுடைய சொந்த பணியில் நீங்கள் ஒன்றையும் பார்க்கவில்லை என்றால், கூர்ந்து கவனியுங்கள் ! அப்படிப்பட்ட தாக்குதல்கள் மிகவும் தந்திரமானதாக இருக்கலாம். கண்டுபிடிக்க நீண்டகாலம் எடுத்துக்கொள்ளலாம். அதில் அதிகமான பணம் ஈடுபட்டு இருக்கலாம். நம்பிக்கையான பணியாளர்கள் அதில் ஈடுபட்டிருந்தால், அது மிகவும் அதிர்ச்சியூட்டுவதாகவும், மனக் கஷ்டத்தை கொடுப்பதாகவும், புண்படச்செய்வதாகவும் தோன் றலாம். அந்த நபர் அர்ப்பணிப்போடு இயேசுவை பின்பற்றுகிறவராக தோன்றினால் இன்னும் அதிகமாக வலியை ஏற்படுத்தும்.

உங்களுடைய கணக்கிடும் அமைப்புகள் மிகவும் வலிமையானதாக இருக்கவேண்டும், பின்வருவனவற்றுக்கு அது உதவியாக இருக்கும்.

- ❒ குற்றப்படுத்துதலில் இருந்து உங்கள் மரியாதையை காப்பாற்ற
- ❒ வாய்ப்புகளையும் சோதனைகளையும் குறைக்க
- ❒ பணியாளர்கள் மீது இருக்கும் அழுத்தத்தை குறைக்க, குடும்ப அங்கத்தினர்களின் உயிர் காக்கும் அறுவைசிகிச்சைகளுக்காக பணம் செலுத்தும்படி அந்த பணியாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கலாம் (சில கலாச்சாரங்களில் ஒரு நோக்கத்திற்காக கொடுக்கப்பட்ட பணம் வேறு நோக்கத்திற்கு செலவிடப்படக்கூடாது என்னும் சிறு புரிந்துகொள்ளுதல் இருக்கின்றது)
- ❒ நிதியுதவியாளர்களுக்கு உறுதி கொடுக்க முறையான அபாய மதிப்பீடு அடிக்கடி நீங்கள் செய்ய உதவி தேவைப்படலாம். உங்களுடைய தற்போதைய அமைப்புகளில் இருக்கும் குறைபாடுகள் என்னென்ன? உங்களுடைய முறைமைகளை நீங்கள் எப்படி கட்டுப்பாடாக வைத்திருக்க முடியும்? உங்களுடைய செயல் திட்டத்தில் இருந்து ஒருவர் நிதியை சூரையாடவேண்டும் என்றால் அவர் எப்படி செய்வார்? பெரிய அமைப்புகளில் இருந்து உதவியும் ஆலோசனையும் கேட்டு, எப்படி சிறப்பாக செய்யலாம் என்று அறிந்துகொள்ளுங்கள்.

ஒவ்வொரு செயல்திட்டத்திலும் ஏமாற்றுத்தனத்தை தடுக்க உதவும் பட்டியல்

- ❒ விரிவான தணிக்கை பதிவுகளை வைத்திருங்கள்- கட்டணச் சீட்டுகள், கையெழுத்திடப்பட்ட ஆவணங்கள், விரிவான பதிவேடுகள், அன்றைய நாள்வரை தகவல்கள்- முழுவதும் கணினி மயமாக்கப்பட்ட கணக்கு அமைப்புகளையும் வைத்திருங்கள்.

ஒவ்வொரு ஆண்டும் முழுமையான கணக்கு சரிபார்த்தல் செய்வதற்கு தனியார் தொழில்ரீதியான தணிக்கையாளரை வைத்திருங்கள் (Independent Professional Auditors). அவர்களுடைய கணக்கு சரிபார்த்தல் உங்களுடைய

அமைப்பை எப்படி மேன்மைப்படுத்துவது எப்படி என்பதுபோல இருக்கும். அதை நீங்கள் பின்பற்ற வேண்டும்.

முக்கியமான நிதியுதவியாளர்களிடமிருந்து குறுகிய கால அறிவிப்பில் பார்வையாளர்கள் வருவதை எதிர்பாருங்கள் (நீங்கள் பெரிய செயல் திட்டமாக இருந்தால்). உங்களுடைய பணியை மாத்திரமல்ல உங்களுடைய கணக்குகளையும் அவர்கள் பார்க்கக்கூடும்.

❑ சிறிய செலவுகள் தவிர அனைத்திற்கும் இரண்டு கையெழுத்துக்களை உபயோகியுங்கள்- குறைந்தபட்சம் அதில் ஒருவர் குழு உறுப்பினராக இருக்கவேண்டும். இருவரும் ஒரே குடும்பத்தை அல்லது வீட்டை சேர்ந்தவராக இருக்கக்கூடாது. இதன் மூலமாக பணியாளரையும், தன்னார்வத்தொண்டரையும், குடும்ப மரியாதையையும் தவறான குற்றச்சாட்டுகளில் இருந்து பாதுகாக்கலாம்.

❑ எல்லா வருமானங்களையும் அமைப்பின் அலுவல்ரீதியான வங்கி கணக்கில் செலுத்துங்கள்.

❑ குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வலிமையான காரணங்கள் இல்லாமல், வேறு வங்கி கணக்குகளை இயக்காதீர்கள் (அப்படிச் செய்வது கணக்குசரிபார்ப்பதை மிகவும் சிக்கலானதாக்கிவிடும்)

எல்லா செலவுகளும் ஒரே கணக்கின் மூலமாக செலுத்தப்பட வேண்டும்.

வேறு எந்த காரணத்திற்காகவும், முதலீட்டிற்காகவும் அமைப்பின் வங்கி கணக்கில் இருக்கும் பணத்தை உபயோகப்படுத்தாதீர்கள் (குறைந்த கால கடனாக இருந்தாலும்). குழுவினால் அங்கீகரிக்கப்பட்டால் மாத்திரம் அப்படிச் செய்யலாம், பல நாடுகளில் அப்படிப்பட்ட முதலீடு சட்டவிரோதமானது. அபாயம் பூஜ்யமாக இல்லை என்றால் மாத்திரம் அது அனுமதிக்கப்படும் (எ.கா ஒரு தேசிய வங்கியின் அதிக வட்டியுடைய சேமிப்பு கணக்கில் பணம்செலுத்துதல்)

❑ பணம்மாற்று விகிதங்கள் குறித்து மிகவும் கவனமாக இருங்கள். அடுத்து சந்தை நிலவரம் எப்படி இருக்கும் என்று யூகித்து செயல்திட்டத்தின் நிதியை சூதாடாதீர்கள். கோடிக்கணக்கான பணத்தை தினமும் வணிகம் செய்யும் தொழில் நிபுணர்களுடன் நீங்கள் நீண்டகாலம் வெற்றி பெறமுடியாது. உங்களுடைய சொந்த நாட்டு பணத்தில் நிதியை வைத்திருப்பது பொதுவாக பாதுகாப்பானது-நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்றாவது உங்களுக்கு தெரியும். பணமாற்றவிகிதங்கள் மாறுதல் அடைந்தால், மற்ற நாட்டு பணத்தில் வாக்குக்கொடுத்த நிதி எதிர்பார்த்ததைவிடவும் குறைவாக கிடைக்கும். எனவே நிதிநிலை அறிக்கையில் கவனமாக இருங்கள்.

❑ குழுவின் கணக்கரிடமும், பதிவு பராமரிப்பவரிடமும், இயக்குநரிடமும் ஒவ்வொரு மாதமும் வங்கி அறிக்கைகளின் நகல்களை கொடுங்கள்.

❑ குழுவின் கணக்கருக்கும் பதிவு பராமரிப்பவரும் நெருங்கிய உறவு இருக்கவேண்டும். பதிவு பராமரிப்பவருக்கு ஏதேனும் பிரச்சனை ஏற்படுவது தெரிந்தால் அமைதியாக கூறிவிடலாம். அப்போது கணக்கர் கணக்கிடும்

முறைமையை மேற்பார்வையிட உதவலாம். பதிவு பராமரிப்பவர் எப்போதும் சரியற்ற சூழ்நிலையை எச்சரிக்க பயப்படுவார் என்பதை அறிந்து இருங்கள். ஏனென்றால் அவருடைய வேலை பறிபோகலாம் அல்லது, இன்னும் மோசமாக ஏதேனும் நடக்கலாம்.

❒ காசோலை புத்தகத்தை உபயோகப்படுத்தாத போதெல்லாம் பூட்டி வையுங்கள்.

❒ பணத்தை உபயோகிப்பதை குறைத்துக்கொள்ளுங்கள்.

❒ தலைவர்களுடைய சொந்த பயன்களை அல்லது சம்பளங்களை குறித்த எல்லா தீர்மானங்களும் தனியார் குழுவினால் தீர்மானம் செய்யப்படுவதை உறுதிசெய்யுங்கள். அந்த தீர்மானங்களை எடுக்கிற எவருக்கும் நேரடியான நிதி விருப்பம் இருக்கக்கூடாது-அவர்களே அந்த நிறுவனத்தில் பணிசெய்யவோ அல்லது அந்த அமைப்பிடம் சம்பளம் வாங்குபவராகவோ அல்லது அவர்களுடைய குடும்ப அங்கத்தினராகவோ இருக்கக்கூடாது. இது உங்கள் கௌரவத்தை பாதுகாக்கும்.

ஆலோசனை கட்டணமும் மற்ற வருமானங்களும்

வைப்புநிதியை அதிகரிக்க ஆலோசனை கட்டணங்கள் ஒரு சிறந்த வழியாக இருக்கும். செயல்திட்டம் பெற்றுக்கொள்ளும் அந்த நிதி பொதுவான வருமானத்தில் சேரும். முழுநேர மூத்த அங்கத்தினர் பணியமர்த்தப்படும்போது, அந்த நபருடைய காலத்திற்கு மற்ற நிறுவனங்களினால் செலுத்தப்படுகிற ஆலோசனை கட்டணத்திற்கும் மற்ற கட்டணங்களுக்கும் என்னவாகும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

தனிநபர்களுக்கு இடையே ஒப்பந்தங்கள் செய்வதற்கு பதிலாக அமைப்புகளுக்கு இடையே ஒப்பந்தம் செய்வதுதான் பாதுகாப்பான வழி ஆகும். செயல்திட்ட வங்கி கணக்குக்கு கட்டணம் செலுத்தப் படவேண்டும். இதனால் கணக்கிலே இதை குழு பார்க்கமுடியும்.

அந்த நபருடைய சரியான வருடாந்தர வருமானத்தை கணக்கிடும்போது இந்த காரணங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு குழு செயல்படமுடியும். நீங்கள் இதைச் செய்யவில்லை என்றால், ஒரு செயல்திட்ட தலைவர் அதிகமதிகமாக மற்ற அமைப்புகளுக்காக பணிசெய்வதை நீங்கள் பார்க்கமுடியும். அதன்மூலமாக தங்களுடைய முழுநேர ஊதியத்தோடு, கூடுதலாக அதிகமான பணத்தை பெற்றுக்கொள்வார்.

பகுதிநேர பணியாளராக இருந்தால் காரியங்கள் இன்னும் சிக்கலாகிவிடும். எதிர்காலத்தில் அவர்கள் பணிசெய்யும் ஒழுங்குகள் குறித்து ஏற்றுக்கொண்ட அனைத்துமே கையெழுத்து மூலமாக உறுதிசெய்யப்படவேண்டும். குழுவின் ஒப்புதலின்பேரில் இது செய்யப்படவேண்டும்.

எல்லாவற்றிலும் வெளிப்படையாகவும், எளிமையாகவும், செயல்திறனுடன் இருக்க குறிக்கோள் வைத்துக்கொள்ளுங்கள்

❒ செயல்திறன்- நிதியுதவி செய்யும் அனைத்து நிறுவனங்களும்கீழ்க் காண்பனவற்றை ஏற்றுக்கொள்வதே இதன் பொருள் (இதற்கு சற்று முயற்சி தேவை):

❐ பொதுவான கணக்கிடும் தேவை - கணக்கிடுவதற்கு ஒரே வருடாந்தர கணக்கிடும் நாளை வைத்துக்கொள்ள ஒப்பந்தம் இணைத்தல். அது நிதியின் ஆண்டு விழாவையோ அல்லது நிதியுதவி யாளரின் சொந்த ஆண்டின் முடிவையோ ஒத்துப்போகவில்லை என்றாலும் பரவாயில்லை. அது அதிகமான நேரத்தையும் பணத்தையும் சேமிக்கும்.

❐ கணக்குகளை குறித்த பொதுவான கருத்து -எடுத்துக் காட்டாக, டியர்ஃபண்டும் கிறிஸ்தவ எய்டும் தங்களுடைய சொந்த தனியார் கணக்குசரிபார்க்கிறவர்களை ஒரே வாரத்திற்குள் ஒரே செயல்திட்டத்திற்கு அனுப்புவதில் பயனே இல்லை.இது முற்றிலும் தேவையற்ற முயற்சி.

இவை அனைத்தும் தவறாகிவிட்டால்:

❐ உங்களுடைய தனியார் குழுவை உடனே ஈடுபடுத்துங்கள். இன்றே குழுத்தலைவரை தொலைப்பேசியில் தொடர்பு கொள்ளுங்கள்

❐ உடனடியாக உங்கள் குழுத்தலைவரோடு இணைந்து சூழ்நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அல்லது பிரச்சனையை சமாளிக்க நடவடிக்கை எடுங்கள். சட்டங்கள் மீறப்பட்டு இருந்தால் காவல் துறையையும் ஈடுபடுத்துங்கள். சிலசெயல் திட்டங்கள் காவல் துறையை ஈடுபடுத்த பயப்படுகிறார்கள். ஆனால் நீங்கள் ஈடுபடுத்தவில்லை என்றால் அந்த நபர் வேறொரு வேலையில் சேர்ந்து மற்றொரு அமைப்பை சூறையாடுவார். அதற்கு நீங்களும் ஒரு காரணமாக இருப்பீர்கள். நீங்கள் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், மற்ற பணியாளர் களும் உங்களிடத்தில் திருடுவது மிகவும் பாதுகாப்பானது என்கிற செய்தியை ஏற்படுத்தும். அவர்கள் அதிகபட்சமாக வேலையை மாத்திரமே இழப்பார்கள்.

❐ உடனடியாக உங்களுடைய முக்கியமான நிதியுதவியாளர்களுக்கு என்ன நடந்தது என்பதையும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என் பதையும் அறிவியுங்கள். எப்படி இருந்தாலும் அவர்கள் கண்டுபிடித் துவிடுவார்கள், அவர்களிடம் பயனுள்ள ஆலோசனையும் இருக்கலாம்.

❐ அது எப்படி நடந்தது என்று விசாரனை நடத்துங்கள். அதே போன்ற காரியங்கள் மீண்டும் நடக்காமல் இருக்கிறதற்கு வழிகளை தேடுங்கள்.

இறுதியாக, ஒரு சமன்பாடான உணர்வோடு இருங்கள். சூழ்நிலையை முழுவதுமாக பார்த்து எந்த அளவுக்கு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை பாருங்கள். பெரிய, நன்கு நிதியுதவி பெற்றுக்கொண்டு இருந்த செயல்திட்டத்திற்கு சொந்தமான வீட்டிலே சமையல்காரனாக வேலைப் பார்த்த ஒருவர் எனக்கு நினைவுக்கு வருகிறார். அப்பெண் பல ஆண்டுகளாக தன்னுடைய பணியில் விசுவாசமாக இருந்தார். ஒரு நாள் அவர் ஒரு சிறு அரிசி மூட்டை திருடும்போது மாட்டிக்கொண்டார்.

அவர் மனமுடைந்து அழுதார். அவருடைய சகோதரி எச்ஐவியினால் மரித்துப்போனார், எனவே தன்னுடைய ஆறு குழந்தைகளோடு தன் சகோதரியின் ஐந்து சகோதரிகளை பார்த்துக்கொண்டு இருக்கிறார் என்பது தெரியவந்தது.அனைவரும் ஒரு சிறிய குடிசையிலே வாழ்ந்து வந்

திருக்கிறார்கள். செயல்திட்டம் அவருக்கு குறைவான வருமானம் கொடுத்து வந்து இருக்கிறது. அது அவர் உயிர்வாழ்வதற்கே போதுமானதாக இல்லை. அவருடைய குடும்பம் பட்டினியில் இருந்தது. அவர் மனவுழைச்சலில் இருந்தார். அவருடைய சூழ்நிலையில் நீங்கள் என்ன செய்து இருப்பீர்கள்? அவர் திருடியதை நான் நியாயப்படுத்தவில்லை. அவர் செய்தது தவறுதான். ஆனால் அவருக்கு ஏன் அவ்வளவு குறைவான வருமானம் கொடுக் கப்பட்டது? செயல்திட்டத்திற்கு ஏன் அவர்களுடைய வீட்டு சூழ்நிலை தெரியவில்லை? அவர்கள் ஏன் அவருக்கு உதவிசெய்ய முயற்சிக்கவில்லை?

கணக்குகொடுத்தல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

கணக்குகொடுத்தல் ஒரு வேதாகம கருத்து, ஆதிதிருச்சபையில் அது காணப்பட்டது. எந்த தலைவரிடமும் காணப்படவேண்டிய முதல் பண்பு அதுதான். அவர்கள் தவறை திருத்திக் கொள்ள திறந்த மனதாகவும் தாழ்மையுள்ளவர்களாகவும் இருக்கிறார்களா? செயல் திட்டத்தை குறித்து மற்றவர்களிடம் கணக்கு கொடுக்கிறவர்களாக இருக்கிறார்களா? தங் களுடைய சொந்த வாழ்வில் சபையின் தலைமைத்துவத்திற்கு கணக்குக் கொடுக்கிறவர்களாக இருக் கிறார்களா? நிலைத்திருப்பதில் முதலாவது பாடம் கணக்குகொடுத்தலே.

செயல்திட்டங்கள் தோல்வியடைவதற்கு பெலவீனமான நிர்வாகமும், கணக்கு ஒப்புவித்தலுமே மிகவும் பொதுவான காரணங்கள். குழுத் தலைவராக இருப்பது தனிமையானது. அப்போது நோக்கத்தை இழப்பது சுலபம். ஒவ்வொரு தலைவரிடமும் பெலமான பண்புகளும் பெலவீனமான பண்புகளும் இருக்கின்றன. ஆனால் அவர்களால் தங்களுடையவைகளை பார்த்துக்கொள்ள முடியாது.

குழுக்களுக்கான “சிறந்த செயல்பாடுகள்” என சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டவை.

அமைப்பை இயக்குவதும், அலுவலக அணியையும் அனுதின காரியங் கள் அனைத்தையும் நிர்வகிப்பதும் இயக்குநருடைய பணி. இந்தியா, இங்கிலாந்து அல்லது நைஜீரியா போன்ற நாடுகளில், இயக்குநர் குழுவின் தலைவரிடம் கணக்குகொடுப்பார். குழுத்தலைவர் நிதி சரியாக பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்வார். வேலை உயர்ந்த தரத்திலும், கிறிஸ்தவ மதிப்புகளுக்கும், அமைப்பின் நோக்கத்திற்கும் உண்மையாக இருப்பதையும் அவர் உறுதிசெய்வார். ஒரு செயல் திட்டத்தின் குழுத் தலைவருக்கும் இயக்குநருக்குமான உறவு மிகவும் முக்கியமானது. ஆலோசனைக்கும், ஊக்கத்திற்கும், மேற்பார்வைக்கும் அது முக்கியமானது. அடிக்கடி நேருக்கு நேர் கலந்துரையாடுவது மிகவும் முக்கியம். நல்ல குழுத்தலைவருக்கு மற்ற மூத்த அணி உறுப்பினர்களையும் தெரிந்திருக்கும். அவர்களோடு அவர் நேரம் செலவிடுவார்.

செயல்திட்ட இயக்குநரை பணிநியமனம் செய்வதற்கும் நீக்குவதற்கும், வருடாந்தர நிதி நிலையை அங்கீகரிப்பதற்கும் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

செயல்திட்டம் சரியாக இயங்க குழுவுக்கு சட்டபூர்வமான பொறுப்பு இருக்கிறது. ஆனால் மூத்த பணியாளர்களிடம் மோதல் ஏற்படுவதைப் போன்ற பெரிய சம்பவங்கள் இல்லை என்றால் குழு அனுதின பிரச்சனைகளில் தலையிடக்கூடாது.

சில நாடுகளில் வித்தியாசமான சட்ட தேவைகள் இருக்கின்றன, அமைப்புகள் அதற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, பசிபிடிக் குடியாக ஒரு இணையாக அங்கத்தினர் ஒருங்கிணைப்பு பயிற்சிபெற்ற ஒவ்வொரு பள்ளி பணியாளருக்கும் ஒரு வாக்குப்பதிவு உண்டு. அவர்கள் எளிதில் இயக்கக்கூடிய செயற்குழுவை தேர்ந்தெடுப்பார்கள். செயற்குழு தன்னுடைய சொந்த குழுத்தலைவரை தெரிந்தெடுக்கும். செயற்குழுவுக்கு இயக்குநர் பொறுப்பாக இருப்பார், அவர் நேரடியாக குழுத்தலைவரிடம் கணக்கு ஒப்புவிப்பார். ஆனால் கருத்துக்கள் மாறாமல் இருக்கின்றன.

குழுக்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சந்தித்துக்கொள்ள வேண்டும். சூழ்நிலை வேகமாக மாறினால் அல்லது பெரும்பிரச்சனைகள் இருந்தால் அடிக்கடி சந்தித்துக்கொள்ள வேண்டும். சில குழுக்கள் இரண்டு அல்லது மூன்று அங்கத்தினர்களை உடைய துணைக்குழுக்களுக்கு கூடுதல் நேரம் கொடுப்பார்கள். எடுத்துக் காட்டாக, முழுமையான செயற்குழு கூடுகையில் நிதிக்காக ஒரு துணைக்குழு செயல்படலாம். மற்ற மூத்த பணியாளர்கள் முழு கலந்தாய்வின்போதும் இடம்பெற்றால் மிகவும் உதவியாக இருக்கும். இது இயக்குநரின்மீதுள்ள அழுத்தத்தை குறைக்கும். மற்றவர்கள் அறிக்கைகள் ஏற்படுத்தவும், கேள்விகளுக்கு பதில்சொல்ல உதவவும் (குறிப்பாக நிதி சம்பந்தமாக இருந்தால்), பணியாளர் தலைமைத்துவத்தை உருவாக்கவும், நீங்கள் ஒரு அணி என்பதை காண்பிக்கவும், செயற்குழுவின் பிரச்சனைகளை தெரியப்படுத்தவும் இது அனுமதிக்கும்.

செயல்திட்டங்களின் பல்வேறுபகுதிகளான, தொடக்கம் முதல் முதிர்ச்சியடைதல் மற்றும் முடிதல்/புதுப்பித்தல் ஆகிய அனைத்திற்குமே வித்தியாசமான கணக்கு ஒப்புவிக்கும் அமைப்பு தேவை. அளவுக்கேற்றபடியும், நிதிக்கு ஏற்றபடியும், அமைப்புகள் மாறும் வேகத்துக்கு ஏற்றபடியும் மாறவேண்டிய ஒரு தேவை இருக்கிறது. சரியான கட்டுப்பாடுகளும், சரியான இடைவெளியிலும் கூடுகைகளும் இருக்கவேண்டும்.

பாடசுருக்கம்

தனியார் செயற்குழுக்கள் அத்தியாவசியமானவை. அப்படி ஒன்று உங்களிடத்தில் இல்லை என்றால் நீங்கள் அபாயத்தில் இருக்கிறீர்கள். அவை

❒ அமைப்புகள் சரியானபடி நடப்பதற்கு அரசாங்கத்திற்கான சட்டபூர்வமான பொறுப்பாக இருக்கின்றன.

❒ நிதி/ஒழுக்கம்/ஆவிக்குரிய ஒழுக்கம்/கண்காணிப்பு/ வழிநடத்துதல் கொடுக்கின்றன.

❒ சங்கடமான கேள்விகள், சவால்கள் மற்றும் பதில் தூண்டும் கேள்விகள் கேட்பதற்கான இடத்தை கொடுக்கின்றன.

❒ முக்கிய தலைவரை(வர்களை) வழிநடத்த/அறிவுறுத்த/பயிற்றுவிக்க அனுபவம் வாய்ந்த மக்களை கொடுக்கின்றன.

❒ அவசரமான அல்லது மோசமாக திட்டமிடப்பட்ட தீர்மானங்களுக்கு எதிரான காப்பீடு அளிக்கின்றன.

❒ அனுதின ஏற்றத்தாழ்வுகளை புரிந்துகொள்ளச் செய்கின்ற பரவலான நீண்டகால கண்ணோட்டத்தை கொடுக்கின்றன.

❒ முதன்மை செயல் அதிகாரிக்கும் பணியாளருக்கும் இடையே பிரச்சனைகள் இருந்தால் இறுதி நீதிபதி/நீதிமன்ற முறையீட்டை கொடுக்கிறார்கள்.

❒ தலைமைத்துவ மாற்றம்/பதவியேற்பு நிர்வகிப்பதில் நிலைத் தன்மையை கொடுக்கின்றன.

❒ தலைவருக்கு தனிப்பட்ட ஆதரவு, ஊக்கம் மற்றும் ஜெப உதவியை கொடுக்கிறார்கள்.

❒ முக்கிய தலைவர் பேசக்கூடிய, அதே சமயத்தில் சூழ்நிலைக்கு மிகவும் நெருக்கமான ஆனால் அதில் பங்குபெறாத செயற்குழு தலைவரை கொடுக்கின்றன (செயல்திட்ட தலைமை மிகவும் தனிமையான அனுபவமாக இருக்கலாம்)

தனிப்பட்ட முறையில் கணக்கு ஒப்புவிப்பது மிகவும் முக்கியம் - அது இருதயத்தின் மனப்பாங்கு, தனிப்பட்ட வாழ்க்கைமுறை, குடும்ப காரியங்கள் இவற்றோடு தொடர்புடையது. **கணக்கு கொடுத்தல் என்பது** :

❒ உள்ளூர் திருச்சபையிடம் இருக்கலாம் - தலைவர்கள் தரிசனத்தை பகிர்ந்துகொள்ளவில்லை என்றால் திருச்சபையிடம் கணக்கு கொடுத்தல் கடினமானதாக இருக்கலாம்.

❒ நிதியுதவியாளர்களிடம்- கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறை வேற்றுவதில் கணக்கு கொடுத்தல்

❒ அதே போன்ற செயல்திட்டங்கள் அல்லது ஒருங்கிணைப்புகளின் சமுதாயத்திடம் - எடுத்துக்காட்டாக, மற்ற நிகழ்ச்சிகளின் பணியையும் கௌரவத்தையும் கெடுக்கின்ற வகையில் பணிசெய்யாமல் இருப்பது.

❒ குடும்பத்தாரிடமும் சிறப்பான நண்பர்களிடமும் - முழுவதும் பயனுள்ளவராக இருக்க அவர்களுடைய முழு ஒத்துழைப்பு உங்களுக்கு தேவை. நீங்கள் எவ்வளவு கால இடைவெளியில் சர்வதேச பயணம் மேற்கொள்ளப் போகிறீர்கள் போன்ற முக்கியமான தீர்மானங்கள் அவர்களையும் கலந்துகொள்ளுங்கள். முழுமையான கண்ணோட்டத்தை அவர்கள் பகிர்ந்துகொள்ளவும் உங்களை பராமரிக்கவும் அவர்களை அனுமதியுங்கள். நீங்கள் திருமணமானவராக இருந்தால், உங்களுடைய லட்சியத்தின் பீடத்தின்மேல் உங்கள் துணைவரையும் குழந்தைகளையும் பலி கொடுத்துவிடாதீர்கள். உங்களுடைய ஊழியம் மற்றும் சாட்சியில் அவர்களும் ஒரு பகுதி. நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள் என்பதை உங்கள் பணியாளர்களும், தன்னார்வத்தொண்டர்களும் பிரதிபலிக்கக்கூடும்.

❒ கடவுளிடம்-எப்போதுமே !

உங்களுடைய ஞானமுள்ள நண்பர்களையும் சபையின் தலைவர் ஒருவரையும் அடிக்கடி நீங்கள் சந்திக்க விரும்பலாம். போதகர் ஆதரவும், தனிப்பட்ட கணக்குகொடுப்பதற்கும், ஜெபிப்பதற்கும் நீங்கள் விரும்பலாம். நீங்கள் திருமணமானவராக இருந்தால், நீங்கள் அங்கே தம்பதிகளாக பங்குகொள்வதை உறுதிசெய்வது உதவிகரமாக இருக்கலாம். இதன் மூலமாக நீங்கள் குடும்பமாக கவனித்துக் கொள்ளப்படுவீர்கள்.

உங்களுடைய பணிக்கு அதிக நிதிவசூலிப்பது எப்படி?

நீங்கள் ஒரு செயல்திட்டத்தை இயக்குகிறீர்கள். திறனுள்ளவராக இருக்க ஏற்கனவே நீங்கள் அதிகமான வழிகளை கண்டுபிடித்துவிட்டீர்கள். ஆனால் உங்களுக்கு கூடுதல் ஆதாரங்கள் தேவை என்று நினைக்கிறீர்கள். உங்களால் என்ன செய்ய முடியும்? முதலாவது மேலே கொடுக்கப்பட்டுள்ள எல்லா காரியங்களையும் கவனமாக பார்த்துக் கொள்வது அவசியம்.

"கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்" என்று இயேசு கூறியிருக்கிறார் (லூக்கா 16:10-11). "உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்" என்றும் அவர் நினைவுபடுத்தி இருக்கிறார் (மாற்கு 4:25). இது அநியாயமாக தோன்றுகிறது. ஆனால் உண்மை என்னவெனில், ஒரு செயல்திட்டம் வலுவாக இருந்தால் அதற்கு அதிகமான நிதியுதவி கிடைக்கும். நீங்கள் பெரிய அமைப்பாக இருந்தால், நீங்கள் (இன்னும்) அதிகமானதை பெற்றுக்கொள்வது அதிக நிச்சயம்-நீங்கள் கவனமுள்ள ஊழியர்களாக இருந்து, சமுதாயத்தில் உயர்ந்த தாக்கத்தை ஏற்படுத்தினால் இது உண்மையாக செயல்படும்.

ஆனால் வலிமையான செயல்திட்டங்களும் பெரிய வாய்ப்புகளை இழந்துபோகலாம். எடுத்துக்கொள்ளவேண்டிய முக்கியமான நடவடிக்கைகள் இதோ.

உங்கள் கதையைச் சொல்லுங்கள்

தங்களுடைய சாதனைகளை குறித்து 'பெருமை'யாக பேசிக்கொள்ள பல கிறிஸ்தவர்கள் வெட்கப்பட்டு, தங்கள் பணியை குறித்து மிகவும் தாழ்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களை பேசுகிறார்கள் : "நாங்கள் ஒரு சிறு திருச்சபை நிகழ்ச்சிதான்" அல்லது "நாங்கள் ஒன்றும் நீண்டகாலமாக பணிசெய்யவில்லை" அல்லது "எங்களால் இயன்றதை நாங்கள் செய்கிறோம், ஆனால் அது ஒன்றும் பெரியதாக தோன்றவில்லை" என்கிறார்கள்.

உங்கள் ஒளி பிரகாசிக்கட்டும்" என்று இயேசு கூறினார். ஏன்? மக்கள் பரலோகத்தில் இருக்கும் உங்கள் பரமபிதாவுக்கு மகிமை செலுத்துவார்கள். உங்களுடைய ஒளியை பிரகாசிக்கச் செய்வது என்றால், ஒவ்வொரு ஆண்டும் நீங்கள் எத்தனை பேருக்கு உதவுகிறீர்கள் என்று கூறுவதாகும். உங்களுடைய இடத்தில் இந்த அவசர தேவையான பணியை செய்கிறவர்கள் உங்கள் குழுவை சார்ந்தவர்கள் மட்டும்தான் (அப்படி இருந்தால்) என்று

கூறுங்கள். உதவி வேண்டி அதிகமான வேண்டுகோள்களினால் நீங்கள் திணறிப்போய் இருக்கிறீர்கள் என்று கூறுங்கள். நீங்கள் செய்வதை அரசாங்கம் விரும்புகிறதா என்பதை கூறுங்கள்.

தைரியமாக இருங்கள். வைராக்கியமாக இருங்கள். மக்கள் பார்க்கட்டும். அவர்கள் ஆச்சரியமடையட்டும். உங்களுடைய செயல்திட்டத்திற்கு அவர்களுடைய ஆதரவு ஏன் தேவைப்படுகிறது என்பதற்கான சரியான காரணங்களில் உறுதியாக இருங்கள். நீங்கள் செய்வதில் உங்களுடைய சிறப்பு அம்சம் என்ன? இந்த விளக்கம் உங்கள் "ஆதரவுக்கான காரணம்". கிடைக்கும் ஒவ்வொரு கருவியையும் பயன்படுத்துங்கள். தெளிவான படங்கள், புள்ளிவிவர வரைபடங்கள், நில வரைபடங்கள் மற்றும் அட்டவணைகள் அதோடு முக்கியமான வாசகங்களை மாத்திரம் உடைய பவர்பாய்ன்ட் உள்ளிட்டவற்றை உபயோகியுங்கள்.

சின்னம் இதில் முக்கிய பங்கு வகிக்கலாம். மக்கள் நம்பும் ஒரு கைப்பேசி சின்னம் நோக்கியா. கூகுள் மற்றும் மைக்ரோசா.'.ப்ட் ஆகியவை வலிமை யான சின்னங்கள். உங்கள் செயல்திட்டத்தின் பெயர் அல்லது சின்னம் மிகவும் முக்கியமானது. அது தரத்திற்கான முத்திரையையும் மக்களின் நம்பகத்தையும் கொடுக்கவேண்டும். அந்த பெயரை எங்கெல்லாம் அவர்கள் பார்க்கிறார்களோ, அவர்கள் சௌகரியமாக உணரவேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள், உங்களுடைய உயர்ந்த தகுதி, உங்கள் கிறிஸ்தவ அடித்தளங்கள், நீங்கள் எதற்காக எழும்பி இருக்கிறீர்கள் அனைத்தையும் அவர்கள் அறிவார்கள். அவர்களுக்கு உங்கள் வேலை பிடிக்கும். ஒரு நகரத்தில் உங்களுடைய வேலை அவர்களுக்கு தெரிந்தால், மற்றொரு நகரத்தில் அது கதவுகளை திறக்கும். அதே பெயர் ஒரு தேசத்தில் அவர்கள் அறிந்து இருந்தால், மற்றொரு தேசத்தில் அரசாங்க ஆதரவை அது பெற்றுத்தரும்.

வலிமையான சின்னமாக்குதல் - நாம் செய்வதை பிரசித்தப்படுத்துதல்

ஏசியிடி உக்கிரைனிற்கு ஆறு வயதுதான் ஆகிறது, ஆனால் பள்ளியிலும் மற்ற சூழ்நிலைகளிலும் பணிசெய்கிற 400 கல்வியாளர்கள் அதற்கு இருக்கிறார்கள். அவர்களிடம் வலிமையான சின்னம் இருக்கிறது. அவர்கள் எப்படி செய்தார்கள்? அவர்கள் நன்றாக செயல்பட்டு, மக்கள் தங்கள் பெயரை நினைவில் வைத்துக் கொள்ளும்படி செய்தார்கள். அவர்களுடைய பணியை குறித்து மிகவும் ஊக்கமூட்டும் 20 நிமிட திரைப்படத்தை வருடந்தோறும் வெளியிடுகிறார்கள். போதை, பாலியல் சுகாதாரம் மற்றும் எச்ஐவி உடையவர்களை பராமரிப்பது குறித்த அழகாக வடிவமைக்கப்பட்ட கைப்பிரதிகளையும், பத்திரிக்கைகளையும் வெளியிடுகிறார்கள். பூங் காக்களில் அல்லது வெளியரங்குகளில் பெரிய நிகழ்ச்சிகள் நடக்கும்போது வண்ணமயமான கொடிகளை அவர்கள் பறக்கவிடுகிறார்கள். அல்லது கூடுகைகளின்போது சுவர்களில் அவற்றை தொங்கவிடுகிறார்கள். அவர்கள் டி-சட்டைகள், வண்ணமயமான தொப்பிகள், பலூன்கள் மற்றும் பைகளை

அச்சிட்டு விற்பனை செய்கிறார்கள். எல்லா கல்வியாளர்களும் கையெழுத்திட்ட பாதுகாக்கப்பட்டு சுவற்றில் தொங்கவிடும் அளவுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும் சான்றிதழ்களை அவர்கள் கொடுக்கிறார்கள். அவர்கள் செய்யும் அனைத்துமே மக்களுடைய வாழ்வை அவர்கள் எப்படி மாற்றுகிறார்கள் என்பதை கூறுகின்றது.

வித்தியாசம் ஏற்படுத்துகிற, ஒன்றாக மகிழ்ச்சியை அனுபவிக்கிற பெரிய குழுவாக அவர்கள் மற்றவர்களுக்கு தோற்றமளிக்கிறார்கள். அவர்கள் மிகவும் தொழில்நுட்பமுடையவர்களாகவும், உயர்ந்த ஒழுங்குமுறையை உடையவர்களாகவும் காட்சியளிக்கிறார்கள். அவர்கள் வேகமாக வளர்வதற்கு இது ஒரு முக்கியமான காரணம். அவர்களோடு இணைந்து இந்த ஊக்கமூட்டும் பணியில் பங்குபெற மக்கள் விரும்புகிறார்கள். தங்களை வந்து சந்திக்கும்படி பள்ளிகள் கேட்டுக்கொள்கிறார்கள். அரசாங்க அதிகாரிகளுக்கு அவர்களை நன்கு தெரியும். நன்கொடையாளர்கள் உற்சாகமடைகிறார்கள். அவர்களை உரிமையாக்கிக்கொண்ட சபைத் தலைவர்கள் பெருமையாக இருக்கிறார்கள். அவர்களுடைய சின்னம், மாநிலத்தின் மற்ற பகுதிகளில் ஏசியிடியின் பணியை வலிமைபடுத்தியுள்ளது.

நீங்கள் எங்கே பணிசெய்கிறீர்கள் என்பதை வைத்து உங்களுடைய சின்னத்தில் கிறிஸ்தவ பகுதி எவ்வளவு வலிமையானதாக இருக்கிறது என்பதை முடிவுசெய்கிறது. உலகின் சில பகுதிகளில் கிறிஸ்தவ நிறுவனங்கள் பணிசெய்யவே அனுமதிக்கப்படுவதில்லை, அல்லது வாழ்க்கை கடினமானதாக இருக்கும். கிறிஸ்தவம் மேலோங்கி இருக்கும் நாடுகளைவிட, இப்படிப்பட்ட நாடுகள் பார்வையிலும், பேச்சிலும், உணர்விலும் மிகவும் வித்தியாசமாக இருக்கும். அடையாளங்கள், படங்கள், மொழி மற்றும் தொனி ஆகியவை மிகவும் வித்தியாசப்படும். நாம் செய்யும் அனைத்துமே உள்நாட்டு கலாச்சாரத்திற்கு ஏற்றதாக மாற்றப்படவேண்டும். ஒரு செல்வாக்கு மிகுந்த பெயர் ஒரு நாட்டில் கதவை திறக்கலாம், மற்றொன்றில் அதுவே கதவை மூடலாம்.

முக்கியமான நிதியுதவியாளர்களை குறிவையுங்கள்

முக்கியமான நிதியுதவியாளர்களை குறிவைப்பதில் கிறிஸ்தவர்கள் பலநேரங்களில் அளவுக்கு அதிகமாக நிதானமாக இருக்கிறார்கள். ஒவ்வொருவரையும் அவர்களுடைய வித்தியாசங்களையும் போதுமான அளவு ஆராய்ச்சிசெய்ய அவர்கள் பொருட்படுத்துவதே கிடையாது. அவர்களுடைய பணியின் பல்வேறு பகுதிகளுக்கு நிதியுதவி செய்ய விரும்பும் பல்வேறு அமைப்புகளைப் பற்றி அதிகமாக அவர்கள் யோசிப்பதே கிடையாது.

நிதியுதவிசெய்யும் நிறுவனங்கள், அரசாங்கம், தனிபர்கள் அனைவருக்குமே பல்வேறு சிறப்பான விருப்பங்கள் இருக்கின்றன - அவை பொதுவாக சிறு கூட்டம் மக்களின் தனிப்பட்ட கண்ணோட்டத்தினால் வழிநடத்தப்பட்டவை. பொதுவாக அவர்கள் சில நிதிகளின் அனுமதியை சில குறிப்பிட்ட நாட்களில் கொடுக்கவேண்டியிருக்கிறது. விளைவுகளை

உருவாக்க அவர்களே தங்களுடைய சொந்த அழுத்தங்களில் இருப்பார்கள். அவர்கள் வரி திரும்பசெலுத்தப்படுவதை இழந்து இருக்கலாம். போதிய வேகத்தில் அவர்கள் செலவுசெய்யவில்லை என்றால் சமுதாய செயல் திட்டங்களுக்கான அவர்களுடைய சொந்த நிதியை அவர்கள் இழக்கக்கூடும்.

நிதி பொறுப்பை கொண்டுவருகிறது. ஒரு உறவினர் மரித்துப் போகும் போது சிறிது பணத்தை உங்களுக்காக விட்டுச் செல்வதாக கற்பனை செய்துபாருங்கள். நீங்கள் அதில் அதிகமான பணத்தை கொடுத்துவிட விரும்புகிறீர்கள். நீங்கள் அதை எப்படி செய்யவேண்டும். அதிகமான தேவைகள் என்னென்ன? அவை மிகவும் அதிகமாக இருக்கின்றன, அவை குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. யாரிடம் நீங்கள் ஆலோசனை கேட்பீர்கள்?

தீர்மானம் எடுக்கவேண்டிய நிதியுதவியாளர்களும் இப்படித்தான் உணர்வார்கள். எனவே அவர்களுக்கு உதவுங்கள். அவர்களுடைய தேவையின் நேரத்தில் அவர்களுக்கு சேவை செய்யுங்கள். அவர்களோடு நெருங்கிச் சென்று அவர்கள் எப்படிப்பட்ட நிகழ்ச்சிகளினால் ஈர்க்கப்படுகிறார்கள் என்பதை கண்டுபிடியுங்கள். எப்படிப்பட்ட செயல் திட்டங்களுக்கு அவர்கள் கட்டுப்பட்டு இருக்கிறார்கள்? அவர்களுடைய தேவைக்குள் உங்களுடைய செயல்திட்டம் பொருந்தவில்லை என்றால் யாரிடம் உங்களுடைய செயல்திட்டம் நன்றாக பொருந்துமோ அவர்களிடம் சொல்லுங்கள். இதைக் குறித்து அதிகமாக தெரிந்துகொள்ளுங்கள்.

ஒரு நிதியுதவியாளருக்கு உங்களுடைய பணி பிடித்திருக்கலாம், ஆனால் முழுதிட்டத்தின் ஒரு சிறு பகுதிக்கு மாத்திரமே அவரால் நிதி கொடுக்க இயலலாம். அப்பகுதி செயல்திட்டத்திற்குள் செயல்திட்டமாக தன்னுடைய சொந்த வருமானம் மற்றும் செலவுகளாலும், குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் என பிரிக்கப்பட்டு இருந்தால் மாத்திரமே அவரால் உதவிசெய்ய முடியலாம். இவற்றை விவரிப்பது நிதி வசூலிப்பதில் மிக முக்கியமான பங்குகளில் ஒன்று.

எச்ஐவி ஊழியத்திற்கு சபையின் ஆதரவை உருவாக்குவது எப்படி

❒ உங்களுடைய சொந்த சபையிலும், சபைப் பிரிவிலும் தொடங்குங்கள்

❒ முக்கியமான சபைத் தலைவர்களோடு நட்பை ஏற்படுத்தி பெரிய கதவுகளை திறக்கச் செய்யுங்கள்.

❒ பெரிய கூடுகைகளிலும்/ மாநாடுகளிலும் பெரிய சபைகளிலும் பேசுவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் எடுத்துக் கொள்ளுங்கள்

❒ ஒவ்வொரு தன்னார்வத்தொண்டரையும் பணியாளர்களையும் அவர்களுடைய சொந்த சபையின், மற்ற சபையின்,ஒட்டுமொத்த பிரிவின் பிரதிநிதிகளாக்குங்கள்.

❒ ஜெப இணைப்புகளை ஊக்கப்படுத்துங்கள்-அவசர ஜெப தேவைகளை தொடர்புகொள்ள மின்னஞ்சல்/SMS உபயோகியுங்கள்.

❒ தொடர்ச்சியான சிறு நன்கொடைகள் ஏன் முக்கியம் என்பதை

விவரியுங்கள், எடுத்துக்காட்டாக. மாதம் 2 அமெரிக்க டாலர் என்பது 10 ஆண்டுகளில் 240 அமெரிக்க டாலர் மற்றும் மாதம்8 அமெரிக்க டாலர்கள் என்பது 10 ஆண்டுகளில் 1,000 அமெரிக்க டாலர்களாக மாறிவிடும் !

❒ திருச்சபை உபயோகத்திற்காக இலக்கியங்களை அச்சிடுங்கள், எடுத்துக்காட்டு உலக எய்ட்ஸ் தினம்-பிரசங்கத்திற்கான தகவல் பொட்டலம், சுவரொட்டிகள்.

❒ எல்லா பணியாளர்களும் தன்னார்வத்தொண்டர்களும் சபைகளில் தொடர்ந்து பேச ஊக்கப்படுத்துங்கள்.

❒ மின்னஞ்சல் மற்றும் SMS குறைந்த விலை வழிகளின் மூலமாக ஆதரவாளர்கள் தொடர்ந்து ஜெபிக்கவும்/ஈடுபடவும் உதவுங்கள்.

❒ தற்போது இருக்கும் ஆதரவாளர்களை வைத்து நண்பர்களை பணியமர்த்துங்கள்.

❒ மற்ற நாடுகளுடன் சபைக்கு இருக்கும் தொடர்பை உபயோகப் படுத்துங்கள் (உங்களுடைய கதையை வலிமையாக சொல்லுங்கள்)

வலிமையான நிகழ்ச்சிகளை ஒன்றாக சேருங்கள்

பெரும்பாலான கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் மிகவும் சிறியதாக இருப்பதால் பெரிய நிதியுதவியாளர்களுக்கும் அரசாங்க துரையினருக்கும் கண்ணுக்கு புலப்படாமல் இருக்கிறார்கள். ஐரோப்பிய ஐக்கியம் போன்ற பெரிய நிறுவனங்கள் பெரிய நிதியுதவிகளை மாத்திரமே கொடுக்கின்றன (5,00,00 அமெரிக்க டாலர்கள் அல்லது அதற்கு மேல்). சிறிய நிகழ்ச்சிகள் பயனடை வதற்கு ஒரே வழி பல செயல்திட்டங்களை ஒன்றாக சேர்த்து இணைப்பு விண்ணப்பங்களை கொடுப்பதுதான். நம்முடைய வித்தியாசங்களை நாம் புதைத்துவிட்டு ஒன்றிணைப்பது ஒரு வலிமையான கதையை உருவாக் கும்: "பத்து நிறுவங்களோடு எங்களுடைய ஒருங்கிணைப்பு 2,50,000 மாணவர்களை தாண்டி சென்றடைந்தது. மூன்று நகரங்களில் எச்ஐவி குறித்த உயிர் காக்கும் செய்திகளை கொண்டுசென்றது".

பெரிய நிதியுதவியாளர்களுக்கும் தரைமட்டத்தில் இருக்கும் செயல் திட்டங்களுக்கும் (மிகப்)பெரிய வளர்ச்சி நிறுவனங்கள் உலக 'திருமண தகவல் மையத்தில்' வரண்பார்க்கிறவர்களாக செயல்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக, ஏசியிடி ஸ்லோவாக்கியா அதிகமான சுவிசேஷ ஐக்கிய நிதிகளை பெற்றுக்கொண்டது, ஆனால் நான்கு நாடுகளில் வேலைசெய்யும் நான்கு நிறுவனங்களில் ஒன்றாகவே பெற்றுக்கொண்டது. ஏசியிடி உகாண்டா சமீபத்தில் PEPFAR (அமெரிக்க அரசாங்கம்) இடம் இருந்து நிதியை பெற்றுக்கொண்டது, ஆனால் கிறிஸ்டியன் எய்டின் மற்ற செயல் திட்டங்களோடு இணைந்துதான் பெற்றுக்கொண்டது. டியர்ஃபண்டுடைய மற்ற செயல்திட்டங்களோடு இணைக்கப்பட்டு ஏசியிடி அயர்லாந்து, ஐரிஸ் எய்டின் நிதியுதவியை பெற்றுக்கொண்டது. பெரிய நிறுவனக்களில் ஒன்றாக சேர்ப்பது முக்கியமான பங்கு.

எனவே கூட்டுறவாக இருங்கள், மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை தெரிந்துகொள்ளுங்கள், ஆதாரங்களை பகிர்ந்துகொள்ளுங்கள்.

கூட்டு திட்டங்களை உருவாக்கி ஐக்கிய கூட்டணியை பெரிய நிறுவனங் களுக்கு காட்டுங்கள். இந்த நிதியுதவி தீர்மானங்களில் பெரும்பாலானவை, தேசிய பிரதிநிதிகள் மூலமாக உள்நாட்டு அலுவலகங்களில் எடுக் கப்படுகின்றன என்பதை மறந்துவிடாதிருங்கள். முக்கியமான நபர்களிடம் நட்பையும், நம்பிக்கையையும் வளருங்கள். உங்களுடைய பயிற்சி நிகழ்ச்சிகளில் அவர்களை உபயோகியுங்கள். உங்களுடைய செயல் திட் டங்களை பார்வையிட அவர்களுக்கு அழைப்பு விடுங்கள். உங்களுடைய (அழகாகவும் அற்புதமாகவும் வடிவமைக்கப்பட்ட) பயிற்சி ஆதாரங்களின் எடுத்துக்காட்டுகளை அவர்களுக்கு அனுப்பி, ஒரு கூடுகையை அறிவுறுத் துங்கள். பொறுமையாக இருங்கள். விளைவுகளை பார்ப்பதற்கு முன்பு அமைதியான இரண்டு முதல் நான்கு ஆண்டுகள் எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் எப்படிப்பட்ட செயல்திட்டங்களை தேடுகிறார்கள் என்று கண்டுபிடியுங்கள். அவர்கள் அங்கீகரிக்க வாய்ப்பில்லாத விண்ணப் பங்களை அனுப்பி அவர்களுடைய நேரத்தை வீணடிக்காதீர்கள்.

நிதியுதவியாளர்-செயல்திட்ட உறவை நிர்வகிப்பது

நிதியுதவியாளர்-செயல்திட்ட உறவு அதிகமான மகிழ்ச்சியை அல்லது மனகஷ்டத்தை ஏற்படுத்தலாம். நல்ல சூழ்நிலைகளில் நாம் உண்மையான பங்காளத்துவத்தை பார்க்கமுடியும். நிதியுதவியாளருக்கு ஒரு பிரச்சனை : மாற்றத்தை உருவாக்க உதவிசெய்ய விரும்புகிறார்கள், பணிதளத்தில் அவர்களுக்காக வேலைசெய்ய பங்காளர்கள் தேவை. செயல்திட்டங்களுக்கு ஒரு பிரச்சனை : அவர்கள் அற்புதமான வேலை செய்கிறார்கள், பெரிய தேவைகளை அருமையாக சந்திக்கிறார்கள், ஆனால் மாதாந்திர செலவை சந்திக்க போராடுகிறார்கள்.

இது யாருக்கு லாபம் அளிப்பது?

நிதியுதவியாளர்கள் பங்காளத்துவத்தை குறித்து அடிக்கடி பேசுகிறார் கள், ஆனால் அதற்கான உண்மையான அர்த்தம் என்ன? பொறுப் பெடுப்பதும், கணக்கு கொடுப்பதுமே முக்கியமான பிரச்சனை. எல்லா காரியங்களையும் கேட்பதற்கு உரிமை இருக்கிறது என்று நிதியுதவியா ளர்கள் நினைக்கலாம். உங்களுடைய செயல்திட்டம் அவர்கள் இடையூறு செய்வதாகவும், நேரத்தை வீணாக்குவதாகவும் நினைக்கலாம். விரிவான அறிக்கையையும், கணக்குகளையும் கேட்பது நம்பிக்கை குறைவை வெளிப்படுத்துவதாக செயல்திட்ட தலைவர்கள் உணரலாம் : "நாங்கள் கடவுளின் ஊழியர்கள். எங்கள் மீது நம்பிக்கை வைத்து நாங்கள் செய்வதை விசுவாசித்தால் எங்களுடைய ஊழியத்தில் முதலீடு செய்யுங்கள். எல்லா வகையான அறிக்கைகளையும் நீங்கள் கேட்டால், நீங்கள் உண்மையில் எங்கள்மீது நம்பிக்கை வைக்கவில்லை என்று நாங்கள் அஞ்சுவோம்". உண்மையில் அப்படிப்பட்ட நிதியுதவியாளர்கள் சர்வதேச நிதியிதவி யாளருக்கான தகுதிகளை பின்பற்றுகிறார்கள். முன்பு நடந்த சர்ச்சைகளின் காரணமாகவும், இங்கிலாந்து சட்டமன்றத்தில் நடைபெற்ற ஏமாற்றுதல்

மற்றும் பணம் சூறையாடுதலின் காரணமாகவும் இச்சட்டம் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது.

ஏற்றுக்கொள்ளக்கூடிய நிதியுதவியாளர் வேண்டுகோள்கள் என்னென்ன?

ஒவ்வொரு செயல்திட்ட அனுமதியும் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தின்பேரில் ஏற்படுத்தப்பட்ட 'ஒப்பந்தம்; என்று கருதப்படவேண்டும். "அடுத்த மூன்று ஆண்டுகளில் உங்களுடைய திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளதைப் போல, X என்கிற இடத்தில் Yஐயும் Zஐயும் @ விலையில் செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்ய இந்த அனுமதி வழங்கப்படுகிறது". அப்படிப்பட்ட செயல்திட்டங்கள் அவர்கள் என்ன செய்வதாக கூறினார்களோ அதை சரியாக செய்ய முயற்சிப்பதும், கூடுமானால் அதற்கு மேலும் செய்வது சரிதான். உள்நாட்டு சூழ்நிலைகளும் தேவைகளும் மாறிவிட்டது என்றால் நிதியுதவியாளர்களிடம் செயல் திட்டங்கள் விரைவாக தகவல் கொடுப்பதும் சரிதான். நிதியுதவியாளர்கள் தாங்கள் ஒரு மோசமான நிதியுதவி தீர்மானத்தை எடுத்துவிட்டோம் என்று நினைப்பதற்கும், அதிர்ச்சியடைவதற்கும் முன்பு, திட்டத்தில் என்ன மாற்றங்களை கொண்டு வரலாம் என்று கருத்து ஒற்றுமை ஏற்படுத்தலாம்.

கிறிஸ்தவ ஊழியம் கறைபட்டுவிட்டது என்று யாரும் குற்றப் படுத்தாதவாறு, கௌரவத்தை காப்பாற்ற ஒப்பந்தங்கள், அறிக்கைகள், கணக்குகள் போன்றவை இருக்கின்றன. அவை அழுத்தத்தையும் சோதனையையும் குறைக்கின்றன. சிலர் தங்களுடைய உறவினர்களிடம் இப்படிச் சொல்லலாம் : "நானே விரும்பினாலும், எச்ஐவி அனாதைகளுக்கான செயல் திட்ட நிதியை மாமாவின் அறுவைசிகிச்சைக்காக செலவிடமுடியாது- அதனால் அவர் இறக்க நேரிட்டாலும். கணக்குகள் கடுமையாக தணிக்கை செய்யப்படுகின்றன. நிதியுதவியாளர்கள் அனைத்தையும் பார்க்கிறார்கள், அப்படிச் செய்தால் நானும் உடனடியாக வேலையை இழந்துவிடுவேன்"

வேறொரு பெயரில் முதலாளித்துவமா?.

காரணமற்ற நிதியுதவியாளர்களின் வேண்டுகோள்களுக்கும் செயல் திட்ட தலைவர்கள் எதிர்த்து நிற்கவேண்டும்-எடுத்துக்காட்டாக, அளவுக்கதிகமான விரிவான மற்றும் அடிக்கடி கேட்கப்படும் அறிக்கைகள். ஒரு யோசனையற்ற மேசை அதிகாரி எழுதிய ஒரு மின்னஞ்சல் 6000 மைல்களுக்கு அப்பால் இருந்த ஒரு பிரதான செயற்திட்ட அதிகாரியை திணரச் செய்தது. அது அவருக்கு வாரக்கணக்கில் தூக்கத்தை தொலைக்கும் கெட்ட கனவுகளை கொடுத்ததை நான் பார்த்தேன். மேசை அலுவலகர்களிடம் சமீபத்திய தேவைகளை சந்திக்கக்கூடிய மூத்த செயல்திட்ட தலைவர்களின் உண்மையான கால விலைமதிப்பு எவ்வளவு என்பதை தெரிவிப்பது அவசியம். பூர்த்திசெய்யப்பட்ட ஒரு படிவம் அல்லது அறிக்கையில் செலவிடப்படும் உண்மையான நேரம் எவ்வளவு என்பதை நாம் எழுதிவைக்கவேண்டும். மூத்த அதிகாரிகள் இப்படிப்பட்ட காரியங்களில் செலவுசெய்யும் நேரங்களை குறைப்பதற்கு நாம் அனைவரும் இணைந்து

செயல்படவேண்டும். நீண்ட அறிக்கைகள் வாசிக்கப்படாமலேயே மின்னஞ்சல் பெட்டிகளில் அல்லது பெட்டிகளிலேயே கிடக்கும் என்று நான் அடிக்கடி கவலைப்படுவது உண்டு.

செயல்திட்டங்கள் தங்கள் அனுபவங்களை பகிர்த்துகொள்வது உதவிகரமாக இருக்கும். தவறாக நடந்துகொள்ளும் நிதியுதவியாளர்களுக்கு ஒரு ஒழுக்கத்தை கொண்டுவர அவர்கள் அனைவரும் இணைந்து செயல் படவேண்டும். ஏசியிடி குடும்பம் உகாண்டாவில் 2005ல் சந்தித்துக் கொண்டபோது நடந்தது எனக்கு நினைவு இருக்கிறது. ஒரு சர்வதேச நிதியுதவியாளர் அமர்ந்திருக்க, 12 வித்தியாசமான செயல்திட்ட தலைவர் கள் அவருடைய மோசமான முறைமைகளை குறித்து கோபத்தில் கொந்தளித்தார்கள். காரியங்கள் வேகமாக மாற்றம்பெற்றன.

அரசாங்க பங்காளத்துவம்-அவர்கள் பணிசெய்யவைப்பது எப்படி?

சில நாடுகளில் கிறிஸ்தவ அமைப்புகளுடன் அரசாங்கம் இணைந்து பணிசெய்ய விரும்புவதை நீங்கள் பார்க்கலாம். அவர்களுடைய குறைந்த செலவில், அவர்கள் அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதை அங்கீகரிப்பதையும் பார்த்து இருக்கலாம். சில நாடுகளில் அரசாங்கத்திற்கு கிறிஸ்தவ அமைப் புகளை பிடிக்காமலும், சபைகளை சந்தேகத்துடன் பார்ப்பதையும் நீங்கள் அறிந்து இருக்கலாம்.

நட்பாக இருக்கும் அரசாங்கங்களிடமிருந்து வரும் அழுத்தங்களை நாம் முதலில் பார்ப்போம். அரசாங்க சேவைகளை செய்வதற்கு, கிறிஸ்தவ நிறுவனங்களோடுஅதிக எண்ணிக்கையிலான ஒப்பந்தங்களை கையெழுத்து இடுவதில் அலுவலாக இருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட செயல் திட்டங்கள் அரசாங்க துறைகளின் துணை ஒப்பந்தக்காரர்களாகும் அபாயம் இருக்கிறதா; அவர்களுடைய அழைப்பையும், மதிப்பையும், சுதந்திரத் தையும் இழந்துபோவார்களா?

எப்போதுமே இதில் அதிக ஆபத்துகள் இருக்கின்றது. வெற்றிகரமான கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் அரசாங்க அனுமதியை சார்ந்தவர்களாக மாறிவிடுவார்கள். அரசாங்கமும் அதிகம் அதிகமான சேவைகளை அவர்கள் செய்யும்படி ஒப்பந்தங்களை ஏற்படுத்துவார்கள். முதலில் இது உற் சாகமூட்டுவதாக இருக்கும். ஆனால் சபை தன்னார்வத்தொண்டர்கள் இலவசமாக தங்களுடைய நேரத்தை கொடுப்பது மாத்திரமே அதற்கான ஒரே காரணமாக இருக்கலாம். எனவே அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய எந்த ஒரு நிறுவனத்தைவிடவும் சேவைக்கான விலை குறைவாக இருக்கும்.

நெகேமியாவின் பாணியில் நன்மைகளை பெற்றுக்கொள்வது எப்படி?

இரு மதரீதியான செயல்திட்டத்திற்காக நெகேமியா அரசரை பார்க்கச் சென்றார் என்பதை நாம் நினைவுபடுத்தவேண்டும். நல்லமுறையில் அவர் அதைபெற்றுக்கொண்டார் (நெகேமியா 1-2). நெகேமியாவிடமிருந்தும்,சில சமீபத்திய கிறிஸ்தவ அணுகு முறைகளில் இருந்தும் சில பாடங்கள் இதோ :

- நாம் உயர்ந்த தொழில்திறனோடு இருக்கவேண்டும்.

- தனித்துவமான தரத்தையும், முழுமையான நம்பகத் தன்மையையும் நாம் காண்பிக்கவேண்டும்.
- அரசாங்கத்தை குறித்தும் அவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்கள் என்பது குறித்தும் ஆழமான அறிவை காண்பிக்கவேண்டும் (உங்களுடைய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுங்கள்)

மரியாதை செலுத்துங்கள்

முக்கியமான மக்களுடன் உறவுகளை வளர்த்துக்கொள்ளுங்கள்

உங்களுடைய பணியை குறித்த நற்சான்றை பெற்றுக்கொள்ளுங்கள், குறிப்பாக அரசாங்க துறைகளிடமிருந்து அல்லது நம்பிக்கையான அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.

அரசாங்கத்தின் அதிகமான கட்டுப்பாட்டில் இருந்து உங்களுடைய சொந்த கலாச்சாரத்தை பாதுகாத்துக்கொள்வது மிகவும் அவசியம். உங்களுக்கு மற்ற வருமான ஆதாரங்கள் இருக்கவேண்டும். இல் லையென்றால் அரசாங்கம் உங்களை சொந்தமாக வைத்திருப்பதாக உணர் வார்கள். பேரம் பேசுவதில் இருந்து எழுந்து செல்ல உங்களிடம் தைரியம் இருக்கவேண்டும். இல்லையென்றால் அரசாங்க பேரம் பேசுகிறவர்கள் உங்களிடம் பெலவீனம் இருப்பதை உணர்வார்கள்.

நம்பகத்தன்மைக்கும்/கௌரவத்திற்கும்சிறிய அரசாங்க நிதியுதவிகளும் கூட மிகவும் முக்கியமானவை என்பதை நினைவில் வைத்திருங்கள். அது நிதியுதவியாளர்களுக்கு அதிக நம்பிக்கையை கொடுக்கும். எனவே கூடுதல் முயற்சி எடுங்கள். சிறிய நிதியுதவிகள் பெரிய அரசாங்க ஒப்பந்தங்களுக்கு வழிவகுக்கலாம், ஆனால் அதற்கு பல ஆண்டுகள் ஆகலாம்.

கடினமான அரசியல் சூழ்நிலைகளில் பணிசெய்வது

மறுபுறம், பல எச்ஐவி செயல்திட்டங்கள் மிக கடினமான அரசியல் சூழ்நிலைகளில் பணிசெய்துகொண்டு இருக்கிறார்கள். அவ்விடங்களில் செயல்பாட்டில் அரசாங்கமே இல்லை. அரசியல் மற்றும் ராணுவ நிலையற் றதன்மை வாடிக்கையானவை. அவை எச்ஐவி பரவுவதிலும், செயல் திட்டங்கள் இயங்குவதற்கான ஆபத்துகளோடும் ஒன்றிணைந்து செல் கின்றன.

அது பாலியல் வன்முறையை குறிக்கும், குறிப்பாக பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை. அல்லது போக்குவரத்திலும், வங்கிகளின் செயல்பாட்டிலும், தகவல் தொடர்பிலும் குழப்பத்தை ஏற்படுத்தும். மற்ற நிறுவனங்கள் செல்ல பயப்படும், நிலையற்ற அபாயமான இடங்களுக்கு சென்று ஏசியிடி குழுக்கள் பணிசெய்கின்றன. என்னை பொறுத்தவரை கூடுதல் தூரம் செல்லக் கூடிய கிறிஸ்தவ கரிசனையின் அடையாளம். அந்த குழுக்கள் உள்ளூர் சமுதாயங்களிடமும் அரசாங்கத்திடமும் அதிகமான மரியாதையை பெற்றுள்ளன. வடக்கு உகாண்டா, டிஆர் காங்கோ அல்லது சிம்பாப்வே போன்ற எந்த நாடாக இருந்தாலும் சரி.

சிலசமயங்களில் முற்றிலும் பிரச்சனைக்குரிய சூழ்நிலையில், செயல் திட்ட தலைவர்கள் தேவைகள் இருக்கின்ற இடங்களுக்கு உணவையும் மற்ற

ஆதாராங்களையும் கொண்டுசெல்ல நிதியுத வியாளர்களோடு கடுமையாக பணிசெய்து வழியை கண்டுபிடிக்கவேண்டியதாக இருக்கும். எடுத் துக்காட்டாக, வங்கி அமைப்புகள் சீர்குலைந்து, மற்ற நிர்வாக அழிவுகள் ஏற்படும்போது- சிம்பாப்வேயில் 2009ல் பணவீக்கம் 10 கோடி சதவிகிதமாக இருந்தபோது, பல வளர்ச்சி நிறுவனங்களின்மீது தற்காலிக தடை விதிக் கப்பட்டு இருந்தது. அப்போது 3000 அனாதைகளுக்கு உணவு அளிக்க ஒரு குழு அர்ப்பணித்தது.

கிறிஸ்தவ அமைப்புகள் சந்தேகத்துடன் பார்க்கப்படலாம்

சில நாடுகளில் எல்லா கிறிஸ்தவ செயல்பாடுகளும் அதிக சந்தேகத்துடன் பார்க்கப்படுகின்றன.உங்களுடைய கிறிஸ்தவ சமுதாயத்தில் சாதாரணமாக, நேர்மறையாக ஒலிக்கக்கூடிய வார்த்தைகள், மற்ற மக்களால் மிகவும் தவறாக புரிந்துகொள்ளப்படலாம். உலகின் அப்படிப்பட்ட பகுதிகளில் உள்ளூர் செயல்திட்ட பணியாளர்களுக்கு பிரச்சனையை உருவாக்காமல் இருக்க கவனமாக இருங்கள். உணர்வற்ற அல்லது மோசமாக எழுதப்பட்ட அறிக்கைகள் அல்லது செய்திமடல்களுக்காக எச்சரிக்கையாய் இருங்கள்; தவறாக வழிநடத்தக்கூடிய, உணர்வற்ற அல்லது துல்லியமற்ற இணையதளங்கள்; தெளிவற்ற அல்லது குழப்பம் ஏற்படுத்துகிற SMS செய்திகள் அல்லது மின்னஞ்சல்கள். உங்களுடைய இணையதளத்தில் கூறப்பட்டுள்ள நாட்டை பற்றி உண்மைகள் சரியாக இருக்கலாம், ஆனால் அவை அந்த அரசாங்கத்திற்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தலாம். தேசிய கௌரவத்திற்கும், தலைவர்களை மதிப்பதற்கான சட்டங்களுக்கும் மரியாதை கொடுங்கள். சில காரியங்களை அறிக்கையிடாமல் இருப்பதே சிலநேரங்களில் புத்திசாலித்தனமாக இருக்கும். அல்லது அதை நண்பர் களிடம் தனிப்பட்ட முறையில் பேசிக்கொள்ளுங்கள், மின்னஞ்சல் மூலமாக ஒளிபரப்பாதிருங்கள்.

மற்ற அரசாங்கங்கள் கிறிஸ்தவத்தை தங்களுடைய நாட்டில் பரப் புவதற்காகவே கிறிஸ்தவ நிறுவனங்கள் இருக்கின்றன என்று கவலைப் படுகிறார்கள். மற்ற மதக்குழுக்களிடையே இது மிகவும் உணர்வுபூர்வமான, கோபமூட்டுகிற பிரச்சனையாக இருக்கலாம்.

உங்களுடைய நேர்மை, உண்மை, நற்பணி, அன்பான இதயம் மற்றும் உதவிகரமான நிகழ்ச்சிகளை பார்த்தும் கேட்டும் மற்றவர்கள் ஆச் சரியமடையுமாறு வாழுங்கள். சீக்கிரத்தில் அவர்கள் உங்களுடைய நோக் கத்தையும், வைராக்கியத்தையும், அவர்களுடைய சமுதாயத்திற்காக உங்களுடைய அன்பையும் அறிந்துகொள்வார்கள். அரசாங்கம் பல உயிர்களை காப்பதற்கும் உதவுவதையும், தேவையில் இருப்போரை பராமரிக்கவும் சுகாதாரமாக வாழ ஊக்கப்படுத்துவதையும் அவர்கள் புரிந்துகொள்வார்கள்.

அரசாங்கங்களின் நம்பிக்கையை வெல்வது எப்படி?

❐ உங்கள் பணியில் வெளிப்படையாகவும் திறந்தமனதுடனும் இருங்கள்.

❑ சேவைசெய்வதே உங்களுடைய நோக்கம் என்பதில் உறுதியாக இருங்கள் : கடினமான சமுதாய பிரச்சனைகளுக்கு தீர்வுகாண அரசாங்கத்திற்கு உதவுவது

❑ அரசாங்க துறைகளிடம் நெருக்கமாக பணிசெய்வதற்கான வாய்ப்புகளை தேடுங்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள் ஏன் செய்கிறீர்கள் என்று புரிந்துகொள்ள முயற்சிக்கும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுங்கள்.

❑ அதிகாரத்தில் இருக்கிறவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள். தலைவலியாக இருக்காதீர்கள்.

❑ எல்லா சட்டதிட்டங்களோடும், கணக்கீடுகளோடும் , வரி தேவைகளோடும் ஒத்துப்போக வகைதேடுங்கள்- ஒரு அமைப்பாக மாத்திரமல்ல தனிநபராகவும்-குறிப்பாக நிதி சம்பந்தமான பதிவுகளில் சரியாக இருங்கள்.

❑ நீங்கள் செய்வேன் என்று எதை வாக்குபண்ணினீர்களோ அதை சரியாகச் செய்வதில் நற்பெயரை வளர்த்துக்கொள்ளுங்கள்.

❑ உங்கள் நிகழ்ச்சியின் ஒவ்வொரு பகுதியும் உயர்ந்த தரத்தில், முக்கியமான தேவைகளை சந்திப்பதாக இருப்பதை உறுதிசெய்யுங்கள்.

❑ மக்களை மதம்மாற்றுவதற்கோ, சுவிசேஷம் அறிவிப்பதற்கோ, உங்கள் சபையில் ஆட்களை சேர்ப்பதற்கோ அரசாங்க நிதி, தொடர்புகள், பங்காளத்துவம் அல்லது ஒருங்கிணைப்புகளை உபயோகிக்காதீர்கள்.

❑ உங்களுடைய மின்னஞ்சலை என்கிரிப்ட் செய்யாதீர்கள் - அது நீங்கள் மறைப்பதற்கு ஒன்றும் இல்லாமல் இருந்தும் எதையோ மறைப்பதைப் போன்ற தோற்றத்தை கொடுக்கும்.

சில நாடுகளில் இருக்கும் செயல்திட்ட பணியாளர்கள் பாதுகாப்பு படையினர் அடிக்கடி கூர்ந்து கவனிப்பதை எதிர்பார்க்கவேண்டும், அப்படி நடந்தால் சந்தோஷப்படவேண்டும். எச்ஐவி பராமரிப்பில் அவர்கள் வெற்றிகரமாக இருப்பதால் கவனம் ஈர்க்கப் படலாம். அவர்கள் சமுதாயங்கள் எச்ஐவியை கடுமையானதாக எடுத்துக்கொள்ள ஒருங்கிணைத்து இருக்கலாம். பல இளைஞர்களுக்கு ஆரோக்கியமான வாழ்வை பற்றி கற்றுக்கொடுத்து இருக்கலாம் (அவர்கள் செல்வாக்கு மிகுந்தவர்களாகவும் பார்க்கப்படலாம்). அவர்கள் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரு பகுதியாவது நாட்டுக்கு வெளியே இருந்து நிதிபெற்றுக்கொண்டு இருக்கலாம்.

ஒரு செயல்திட்டம் தொடர்ச்சியாக கண்காணிக்கப் படவில்லை என்றால் அது விநோதமாக இருக்கும். செயல்திட்டத்திற்கு குறைந்த தாக்கமே இருக்கிறது, அல்லது அதிகாரிகள் தங்கள் வேலையை சரியாகச் செய்யவில்லை என்று அதற்கு அர்த்தம் இருக்கலாம். அவர்கள் எவ்வளவு கூர்ந்து கவனிக்கிறார்களோ அவ்வளவு அதிகமாக அவர்கள் உண்மையை அறிந்துகொள்வார்கள் : இங்கே நல்ல மனிதர்கள், நேர்மையானவர்கள், சட்டத்தை மதித்து வரிகளை செலுத்தும் குடிமக்கள், சட்டத்திற்கு

அடிபணிகிறவர்கள், மேன்மையான எதிர்காலத்திற்காக அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும் சேவைசெய்ய விரும்புகிறவர்கள் இருக்கிறார்கள் என்பதை கண்டுகொள்வார்கள். உங்கள் ஒளி பிரகாசிக்கட்டும், ஆனால் ஒளி எப்போதும் கவனத்தை ஈர்க்கும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

கிறிஸ்தவ நிறுவனத்தை பதிவுசெய்ய முடியாத நாடுகளிலும், ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவர் எச்ஐவி பணியை செய்யமுடியும். ஒரு பதிவுசெய்யப்பட்ட சபையின் ஊழியத்தின் ஒரு பகுதியாகவோ (அந்த செயல்பாடு அனுமதிக்கப்பட்டால்) அல்லது மதம்சாராத நிறுவனக்களுடனோ சேர்ந்து செயல்படலாம். அல்லது அவர்கள் மதம்சாராத ஒரு புதிய எச்ஐவி நிறுவனமாக பதிவுசெய்துகொள்ள அனுமதிக்கப்படலாம். அப்படிப்பட்ட புதிய செயல்திட்டங்களை தொடங்குகிற குழுவில் இருக்கும் அனைவருமே எச்ஐவி உடையவர்களை பராமரிப்பதற்கும் அவர்கள் உயிர்களைக் காப்பதற்கும் ஒரே கிறிஸ்தவ கரிசனையையும், அன்பையும், அர்ப்பணிப்பையும் உடையவர்களாக இருந்தாலும் மதசார்பற்ற நிறுவனமாக பதிவுசெய்துகொள்ளலாம்.

நீங்கள் எவ்வளவு நல்லவர்களாக, நேர்மையானவர்களாக அவர்களுடைய சமுதாயத்திற்கு உதவுகிறவர்களாக இருக்கிறீர்கள் என்பதை பார்த்து உள்ளூர் அதிகாரிகள் தங்கள் சட்டங்களை பயன்படுத்துவதில் எவ்வளவு நிதானமாக இருப்பதை நீங்கள் காணமுடியும். நீங்கள் எவ்வளவு உணர்வுள்ளவர்களாக, எளிமையாக இருந்துகொண்டு, உங்களுடைய வேலையை அமைதியாக செய்கிறீர்கள் என்பதையும் பார்பார்கள்.

உங்களுடைய பணி எவ்வளவு நிலைத்தன்மை உடையது?

செயல்திட்டத்தின் நிலைத்தன்மையை குறித்து பல முட்டாள்தனமான காரியங்கள் பேசப்படுகின்றன. சுற்றுப்புறத்தை, சமுதாய வளர்ச்சியை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையை குறித்து மட்டமாக பேசுவது ஒரு பிரபலமான விஷயம். நிலைக்கக்கூடியதற்கு மாத்திரமே நிதியுதவி அளிப்பதாக பல நிதியுதவியாளர்கள் கூறுகின்றார்கள். ஆனால் அவர்களிடம் துருவித்துருவி கேட்கும்போது அவர்களுக்கு வளர்ச்சியை குறித்த அடிப்படையே தெரியாது என்பது தெளிவாகிறது. அவர்களுக்கு கடுமையான பஞ்சத்தை குறித்த உண்மை நிலையும் தெரிவதில்லை.

சில தொண்டு நிறுவனங்கள் அதிகபட்சமாக மூன்று ஆண்டுகளுக்கு மாத்திரமே நிதியளிக்கிறார்கள். அதற்கு பிறகு புதிய செயல் திட்டம் முழுவதும் நிலைத் தன்மை பெற்றுவிடவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். மற்றவர்கள் மிகவும் ஏழ்மையான நாடுகளிலும் 12 மாதங்கள் போதுமானதாக இருக்கும் என்கின்றார்கள். ஆனால் பல இடங்களில் இது யோசனையற்ற, முட்டாள்தனமான, அவர்கள் உதவ நினைக்கும் சமுதாயங்களையே அழிக்கக்கூடிய அணுகு முறையாகவே இருக்கும்.

புருண்டியை எடுத்துக்கொள்ளுங்கள், ஒரு இன அழிவில் இருந்து மீண்டு வருகிறது, இன்னமும் நிலையற்று இருக்கிறது, இரவு நேரத்தில் தலைநகரில்

குண்டு வெடிப்பு சத்தம் கேட்டுக்கொண்டு இருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒட்டுமொத்த (உடைந்துபோன) தேசிய சுகாதார சேவையின் அதே நிதிநிலை அறிக்கையை மூன்று கிறிஸ்தவ மருத்துவமனைகளும் வைத்திருந்தன. குழப்பத்தின் நடுவில் பொருளாதாரம் போராடிக்கொண்டு இருக்கிறது.

இப்போது நீங்கள் புதிய எச்ஐவி செயல்திட்டத்தை தொடங்க வருடத்திற்கு 6000 அமெரிக்க டாலர்கள் கொடுத்துவிடுகிறீர்கள். நீங்கள் பணி வளர்ச்சிபெறவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். பின்பு உங்கள் நிதியுதவி அனைத்தையும் நிறுத்திக்கொள்வீர்களா?

1 ஆம் ஆண்டு பணி மாத்திரமே தொடங்கப்படுகிறது. ஆண்டு 2ல் அதிகமான மக்கள் சந்திககப்பட்டு நிகழ்ச்சி உண்மையில் வளர்கிறது. மற்ற நிதியுதவியாளர்களும் படிப்படியாக ஆதரவு கொடுக்க தொடங்குகிறார்கள் என்று நம்புவோம். 3 ஆம் ஆண்டு செயல்திட்டம் தன்னுடைய வருமானத்தை பெருக்கிக்கொண்டு, அதிகமான பணியாளர்களை பெற்றுக் கொண்டது. அதிகமான சுகாதார வளர்ச்சி பெறவும், உயிர்களை காக்கவும், எச்ஐவி உடைய மக்களை பராமரிக்கவும், சபைகளை ஒருங்கிணைக்கவும், ஒரு ஒளிக்கற்றையாக மாற்றம் அடைகிறது.

4 ஆம் ஆண்டில் என்ன நடக்கும்? செயல்திட்டம் மூடப்படுகிறது. முதல் நிதியுதவியாளர் நிதியுதவியை முற்றிலுமாக நிறுத்திக் கொள்கிறார், ஒரே இரவில் வருமானம் பாதியாக குறைகிறது. கொடுக்கப்பட ஆண்டுக்குள் ஒவ்வொரு டாலரும் செலவளிக்கப்பட்டு இருக்கவேண்டும் என்று நிதியுதவியாளர் கேட்டுக்கொண்டதாகி, வைப்புநிதி உருவாக்கப்பட வாய்ப்பு இல்லை. பணியாளர்களில் பாதிபேர் வேலை இழந்து நிலையற்ற எதிர்காலத்தை சந்திப்பார்கள். மனநிலை மோசமாக இருக்கும். பள்ளிகளும் சிறு மருத்துவமனைகளும் கைவிடப்பட்டதாக கருதுவார்கள். மரியாதை பாதிக்கப்படும். இந்த பிரச்சனையை நிர்வகிப்பதில் குழு அதிகமான நேரம் எடுத்துக் கொள்வதால் தற்போது இருக்கும் அல்லது புதிய நிதியுதவியாளர்களிடம் பேச சக்தி இருக்காது. மீதமிருக்கும் நிதியுதவியாளர்கள் இதை கேள்விப்பட்டு வருந்துவார்கள். வேலை சரிந்துவிடும். இந்த அனுபவத்தின் மூலமாக இயக்குநர் அழிந்துபோனதாக உணர்ந்து, தான்தோல்வியடைந்ததாக எண்ணுவார். வேடிக்கை. இதுவா நிலைத்தன்மை?

சற்று கொடூரம் குறைந்த அணுகு முறையினால் இது அதிக நிலைத்தன்மையை பெற்றிருக்கும். ஒருவேளை அடுத்த மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்கு, கொஞ்சம் நிதியுதவி தொடர்ந்து இருந்தால். அதற்குள் செயல்திட்டம் ஓரளவுக்கு வளர்ந்து இருக்கும், அந்த இழப்பை தாங்கிக்கொள்ளும் நிலைக்கு வந்திருக்கக்கூடும். ஆனால் அதுவரை மற்ற நிதியுதவியாளர்கள் தங்கள் மூன்று ஆண்டு கட்டுப்பாட்டை அவர்கள்மீது சுமத்தாமல் இருக்கவேண்டும்.

சில நிதியுதவியாளர்கள் வேறொரு அழுத்தத்தை கூட்டுகிறார்கள். அவர்களை பொறுத்தவரை நிலைத்தன்மை என்றால் மூன்று ஆண்டுகளில்

முழுமையான பொருளாதார சுதந்திரம் பெறுவது மாத்திரம் அல்ல. மாறாக அவர்களுடைய ஒவ்வொரு டாலரும் சொந்த நாட்டில் இருந்தே வரவேண்டும் என்பது அவர்களின் எண்ணம். இது முதல் தேவையை விடவும் மிகவும் காரணமற்றது. புருண்டி போன்ற நாடுகளில் இது சாத்தியமற்றது.

நாம் ஆவிக்குரிய நிலைத்தன்மையை குறித்தும் யோசிக்க வேண்டும். ஜெபத்திலும், மற்ற விசுவாசிகளோடு ஐக்கியத்திலும், சபை சந்திப்புகளில் பங்குபெறுவதிலும் நேரம் செலவிடமுடியாத அளவுக்கு நாம் மற்ற வேலைகளில் அலுவலாகிவிடுவது மிகவும் சுலபம். ஆனாலும், நம்முடைய வேலை இயேசுவின் போதனைகளை ஆழமாக தியானிக்க உதவலாம். சபையின் அழைப்பை குறித்த புதிய புரிந்துகொள்ளுதலை பெற்றுக்கொண்டு நாம் எப்படி வாழ்வேண்டும் என போதிக்கவும் காரணமாக அமையலாம்.

உண்மையான நிலைத்தன்மை

ஏற்றுக்கொள்ளக்கூடிய குறிக்கோள்கள் என்னென்ன? முதலாவதாக, எல்லோருமே நிலைத்திருக்ககூடிய வளர்ச்சிக்காக அர்ப்பணிப்போடு இருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் உண்மை நிலவரம் என்ன என்பதை நாம் தெளிவாக அறிந்துகொள்வோம். பின்வரும் அனைத்தின் ஒருங் கிணைப்பே அது (அதிகமானவை இருந்தால் சிறந்தது)

❑ உள்நாட்டு தலைமைத்துவம் - பணக்கார நாடுகளின் மக்களை சாராமல் இருப்பது

❑ வலிமையான உள்நாட்டு செயற்குழுவுக்கு கணக்கு கொடுப் பவர்களாக இருத்தல் - உள்நாட்டு மக்களால் 'உரிமை' ஆக்கப்பட்ட தனியார் சட்டபூர் வமான சொத்து, சர்வதேச நிறுவனத்தின் கிளை அல்ல.

❑ பல்வேறு ஆதாரங்களிடமிருந்து (பெரும்பாலான) சொந்த நிதி ஆதரவை பெற்றுக்கொள்ளுதல்.

❑ ஒரு தனிப்பட்ட நிதியுதவியாளரின் விருப்பத்தையே அதிகமாக சார்ந்து இருக்காமல் இருப்பது.

❑ சொந்தமான செயல்திட்ட விண்ணப்பங்களையும், அறிக்கைகளையும் எழுதுவது.

❑ புதிய நிதியுதவியாளர்களை கண்டுபிடித்து, நிதியுதவியாளர் உறவை காத்துக்கொள்ளுதல்.

❑ பாதுகாப்பாக வளர்வதற்கு புதிய தலைமைத்துவத்திற்கு பயிற்சி அளித்தல்

❑ வலிமையான செயல்திட்ட நிர்வாக அமைப்பை வைத்திருத்தல்

நாம் மேலும் இரண்டு குறிக்கோள்களை சேர்த்துக்கொள்ளலாம்-இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் வேகமாகவோ அல்லது மெதுவாகவோ நடந்தேறும்

❑ உள்நாட்டில் இருக்கும் ஆதாரங்களிடமிருந்து வேகமாக வளரக்கூடிய முழுமையான வருமானத்தை வசூலிப்பது - அரசாங்கத்திடமோ,

வணிகத்திலிருந்தோ, சபைகளிடமிருந்தோ, தனிநபர்களிடமிருந்தோ அல்லது வேறு உள்நாட்டு நிறுவனத்திடமிருந்தோ பெற்றுக்கொள்ளுதல்

❒ சொந்த நாட்டிலோ அல்லது வேறு நாடுகளிலோ அதே போன்ற அமைப்புகள் உருவாகுதல். பல நாடுகளில் இருந்து மக்கள் வந்து பார்வையிட்டு அதன் மாதிரியையும் அனுபவத்தையும் கற்றுக் கொள்ளும் அளவுக்கு சிறப்பான மையமாக மாறுவது.

அவர்கள் நிலைத்தன்மையை ஊக்கப்படுத்துவதாக நடிப்பதில் இருந்து நிதியுதவி செய்யும் நிறுவனங்களை தடுக்கவேண்டும். அவர்கள் செய்வதெல்லாம் ஒருவருக்கொருவர் மூன்று ஆண்டுகால நிதியுதவி அர்ப்பணிப்புகளை நிறைவுசெய்வதே. நிதியுதவியின் சுழற்சி முடிவுக்கு வரும்வரை முன்னும் பின்னுமாக செயல்படுகிறார்கள்.

இன்னுமொரு வேடிக்கையான விஷயம் என்னவென்றால், பல தொண்டு நிறுவனங்கள் புதிய பணிக்கு மாத்திரமே நிதியுதவி கொடுக்கிறார்கள். செயல்திட்டங்கள் பணிகளை மூன்று ஆண்டுகளுக்கு தொடங்குவதை நான் பார்த்து இருக்கிறேன். அவர்கள் தொடர்வதற்கான ஒரே வழி அவர்களுடைய துறையை மூடிவிட்டு, சிறிது மாற்றியமைத்து, புத்தம் புதிய துறையாக மீண்டும் தொடங்குவதுதான். அதே நிதியுதவியாளரால் நிதி கொடுக் கப்படுகிறது, அதே குழு அங்கத்தினர்களால் இயக்கப்படுகிறது, பெயரில் மாத்திரம் சிறிய மாற்றம் ஏற்படுத்தப்படுகிறது. தங்களுடைய சொந்த வேலை நிலைத்தன்மையை இழக்காமல் இந்த நிதியுதவியாளர்கள் ஒவ்வொரு ஆண்டும் எப்படி புதிய காரியங்களுக்கு நிதியுதவி செய் கிறார்கள் என்பது எனக்கு புரியவில்லை. இப்படிப்பட்ட கருத்துக்களில் "நிலையற்றதன்மை" முழுவதுமாக இடம்பெற்றிருக்கிறது.

முயற்சியே இல்லாமல் எப்படி உங்கள் நிதியுதவி அனைத் தையும் இழப்பது?

❒ உங்களுக்கு பணத்தேவை அதிகமாக இல்லாதபட்சத்தில் நிதியுத வியாளர்களை தொடர்புகொள்ளவே வேண்டாம்.

❒ நீங்கள் வாக்குகொடுத்ததைக் காட்டிலும் வித்தியாசமான காரியங்களை எப்போதுமே கொடுங்கள்-தாமதமாக

❒ ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் வேலையின் வளர்ச்சி அளவு ஆகியவற்றை சரிசெய்வதற்கான கலந்தாய்வுகளில் நிதியுதவியாளர் கள் கலந்துகொள்ளமுடியாத அளவுக்கு தாமதமாக பிரச்சனைகளை தெரியப்படுத்துங்கள்.

❒ துல்லியமற்ற, தெளிவற்ற, முழுமைபெறாத நிதிநிலை தகவலை கொடுங்கள். கொடுக்கப்பட்ட கெடு முடிந்து பல வேண்டுகோள்கள் கிடைத்த பிறகே கொடுங்கள்.

❒ ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையின்படி அறிக்கை சமர்பிக்கவேண்டும் என்கிற நிதியுதவியாளர்களின் வழிகாட்டுதல்களை எப்போதுமே அலட் சியப்படுத்துங்கள்.

❒ ஒரு தீர்மானத்தை எடுக்க ஒரு வாரத்துக்கு மேல் எடுத்துக் கொள்ளும்போது, கசப்புணர்வோடு புகார் செய்யுங்கள்.

❒ உங்கள் ஆதாரத்திற்கு அடிப்படையாக இருக்கும் உள்ளூர் திருச்சபை மற்றும் மக்களை உதாசினப்படுத்துங்கள்-செய்திமடல்கள், ஜெப விண்ணப்பங்கள் அல்லது வேறு எதையும் கொடுக்க முயற்சிக்க வேண்டாம். சபையில் பேச கிடைக்கும் வாய்ப்புகளை ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

❒ எப்போதும் நிதியுதவியாளரின் மின்னஞ்சலுக்கு பதில்சொல்ல இரண்டு அல்லது மூன்று வாரங்களாவது காத்திருங்கள்.

அதே நாட்டில் அதே போன்ற பணியை செய்யும் மற்ற நிறுவனங்களை சென்று பார்வையிட உங்களை சிரமப்படுத்திக்கொள்ளாதீர்கள்.

❒ உங்களுடைய எண்ணிக்கைகளை சரிபார்க்காமல் தகவல் தொடர்பு சாதனங்களிலும்/அறிக்கைகளிலும்/விண்ணப்பங்களிலும் சேர்த்துவிடுங்கள்.

❒ அபாயங்களை அலட்சியப்படுத்துங்கள் - பதிவுகளை பராமரிப்பவரை வைத்துக்கொண்டு சிரமப்படவேண்டாம்; வருடத்தின் இறுதிவரை கணக்கு எழுத கஷ்டப்படுத்திக்கொள்ள வேண்டாம்.

பதவியேற்பு திட்டம் - தலைமைத்துவத்தின் அடுத்த நிலை

இயேசு ஒரு பணிவிடைக்காரராக வந்தார் என்பதை எப்போதும் மறந்துவிடாதீர்கள். எனவே நீங்கள் மற்ற அமைப்புகளை கட்டுப்படுத்தி ஆதிக்கம் செலுத்தாமல் அவர்களுக்கு சேவை செய்யவேண்டும். தைரியமாக இருங்கள் : மோசே ஒரு அச்சமில்லாத தீர்க்கதரிசி. கவனமாக திட்டமிடுங்கள் : நெகேமியா கவனமான திட்டமிடுபவர். நீண்டகால அபிஷேகத்திற்கு/ ஊழியத்திற்கு ரகசியமாக இருப்பது குணநலனே- மகத்துவமான திறமை அல்ல (தீத்து 2:3-5).

முழு தலைமைத்துவ குழுவும் எவ்வளவு சக்திவாய்ந்ததாக இருக்கிறதோ அப்படிதான் நிகழ்ச்சியும் இருக்கும். எனவே உங்கள் பரவலான தலைமைத்துவத்தை அதிகரிக்க கூர்மையான கவனத்தை செலுத்துங்கள். பயிற்சியிலும் பொறுப்பிலும் அவர்களை ஊக்கப்படுத்துங்கள். ஒவ்வொரு வாரமும் முக்கியமான தலைவர்களுடன் சிறப்பாக நேரம் செலவிடுங்கள். இயேசுவை போல அவர்களை சீஷர்களாக்குங்கள்.

நம்முடைய தலைமையில் மற்றவர்களுக்கு நாம் சேவைசெய்ய வேண்டும். நம்முடைய பதவியை நாம் பிடித்துக்கொண்டே இருக்ககூடாது, அல்லது "நம் ஊழியத்தை" இறுகபிடித்துக்கொண்டே இருக்கக்கூடாது. எல்லா அழைப்புகளுக்கும் காலக்கட்டுப்பாடுகள் இருக்கின்றன. நம்முடைய சரீர வாழ்வு முடிந்தவுடன் நாம் நம்முடைய கடவுளோடு இருப்போம், நம்முடைய உலக வாழ்வு முடிந்துவிடும். ஆனால் பல அழைப்புகள் சரீர மரணத்திற்கு வெகுநாட்களுக்கு முன்பே முடிந்துவிடுகின்றன.

சில நேரங்களில் நாம் ஒதுங்கி வழிவிட்டுதான் ஆகவேண்டும் ! இப்போது நாம் செய்வதை எதிர்காலத்தில் வேறு யாரோ செய்வதற்கு அழைப்பை பெற்று

இருக்கலாம். மற்றவர்களை பெலப்படுத்தி, பயிற்றுவித்து, விட்டுவிட வகைதேடுங்கள். தாழ்மையாக மற்றவர்களை உங்களோடு மேன்மையானவர்களாக பாருங்கள்.

உங்கள் செயல்திட்டத்திற்கு (அதிகமான) நிதியை வசூலிப்பது எப்படி?

மக்கள் மக்களுக்கு கொடுக்கிறார்கள். எனவே உங்களால் இயன்றவகையில் உறவுகளை வளர்த்திடுங்கள்.

நீங்கள் ஏற்கனவே சாதித்தவற்றின் தாக்கத்தை அளந்திடுங்கள்.

எண்ணிக்கைகள் முக்கியம் என்பதை மறந்துவிடாதீர்கள், எ.கா. சந்திக்கப்பட்ட மாணவர்கள், வீட்டிலே நீங்கள் சென்றுபார்த்த மக்கள், வாரத்திற்கு எத்தனை பார்வைகள், கொடுக்கப்பட்ட கைப்பிரதிகள்.

எண்களை மொத்த செலவினால் வகுத்து ஒரு பயணத்திற்கு ஆகும் செலவு, ஒரு மாணவரை சந்திக்க ஆகும் செலவு என்பனவற்றை கணக்கிடுங்கள்.

(அவசர) தேவையை நிரூபித்து, உணர்வுபூர்வமான கதைகளை சொல்லி தாக்கத்தை ஏற்படுத்துங்கள்.

தேவைகளை சந்திக்க விரிவான திட்டத்தை காண்பியுங்கள் - கட்டமைப்பு, குறிக்கோள்கள், நோக்கங்கள், எதிர்பார்க்கின்ற அளவிடக்கூடிய விளைவுகள், செலவுகள்.

மதிப்பிற்குரிய தனிப்பட்ட அதிகாரிகளின் ஆதரவை காண்பியுங்கள், எ.கா. அரசாங்க துறைகள், உள்ளூர் சுகாதார அலுவலர்கள், மற்ற நிதியுதவியாளர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள்.

சரியான நிதியுதவியாளரை சரியான செயல்திட்டத்திற்கு குறிவையுங்கள்- பலருக்கு அவர்கள் எதற்கு நிதியுதவி செய்கிறார்கள் என்பதில் கட்டுப்பாடுகள் இருக்கின்றன...அப்படியானால் சரியான பொருத்தம் ஏற்பட்டால் அவர்கள் ஆர்வமாக இருப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

தனிப்பட்ட தொடர்பு/நட்பின் மூலமாக நிதியுதவியாளர்களிடம் அன்பு செலுத்துங்கள்.

பணியின் சில பகுதிகளில் அவர்கள் வலிமையான பங்காளர்களாக இருப்பதற்கு அவர்களுடைய சொந்த தேவைகளை கவனித்துக் கேளுங்கள். உங்கள் பணியின் சில பகுதிகளில் அவர்களுடைய தேவைக்கான பொருத்தத்தை கண்டுபிடிக்க யோசியுங்கள்.

நிதியுதவியாளர்களுக்கு அவர்களுடைய பிரச்சனைகளை தீக்க சிறப்பான விண்ணப்பங்களை உருவாக்குங்கள். எ.கா. ஃப்ரெஞ்சு பேசும் ஆப்பிரிக்காவில் எச்ஐவி உடைய கர்ப்பிணிப்பெண்கள் ஆண் டிவைரல்களை அதிகமாக அணுகவைப்பது எப்படி?

எல்லாவற்றையும் இரண்டே பத்திகளில் விண்ணப்பத்தின் முன்பகுதியில் சொல்லக்கூடிய சுருக்கமான, தெளிவான செயற்திட்ட கட்டுரையை உருவாக்குங்கள்.

யார் அவர்களுடைய தீர்மானங்களை எடுக்கிறார்கள், கெடு/செயல்

பாட்டுக்கான அவர்களுடைய கால அட்டவணை என்ன என்பனவற்றை உறுதியாக அறிந்துகொள்ளுங்கள்.

அவர்களால் செய்ய இயன்றது எது என்பதிலும், கடவுளுடைய அழைப்புக்கு உண்மையாய் இருப்பதற்காகவும் பின் தொடர்புசெய்து, கலந்தாய்வு செய்து, ஏற்றபடி காரியங்களை சரிசெய்துகொள்ளுங்கள்.

பீட்டர் ஃபேபியன், CEO, ஏசியிடி இங்கிலாந்து

மற்றவர்களை பயிற்றுவித்து பணியை முன்னோக்கி எடுத்துச் செல்ல நாம் முயற்சிக்கிறோமா என்பதுதான் தலைமைத்துவத்திற்கான முக்கியமான சோதனை. அவர்கள் உங்களைப்போல வழிநடத்தமாட்டார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். அவர்கள் உங்கள் மரபணு பிரதிகள் அல்ல. புதிய அணுகுமுறைகளை உடைய புதிய நாளாக அது விளங்கும்.

தலைவர்களின் பல்வேறு முறைகள், குணங்கள் மற்றும் திறமைகளை அமைப்புகளின் பல்வேறு நிலைகளுக்கு தேவைப்படும். சில தலைவர்கள் புதிய பணியை துவங்குவதில் அற்புதமானவர்கள். மற்றவர்கள் சிக்கலான நிலைபெற்ற அமைப்புகளை அருமையாக நிர்வாகிக்கக்கூடியவர்கள். மற்றவர்கள் மறுப்புதெரிவிப்பதில், முடிப்பதில், செலவுகளை குறைப்பதில் சிறந்தவர்களாக இருப்பார்கள்.

ஆதிதிருச்சபையில் அப்போஸ்தலர்களும், கண்காணிகளும் இருந்தார்கள். சபையின் தரிசனம், விசுவாசம் மற்றும் இறையியலுக்கு அப்போஸ்தலர்கள் பொறுப்பாக இருந்தார்கள். ஊழிய திட்டத்திற்கும் தலைமையை பணிநியமனம் செய்வதற்கும் அவர்கள் இருந்தார்கள். கண்காணிகள் சபை செயல்பாடுகளும், வேலைகளும் நன்றாக நடப்பதை கவனித்துக்கொள்ளும் செயல்திட்ட தலைமை பதவிகளில் இருந்தார்கள். தரிசனமுள்ளவர்களால் (சமுதாய தொழிலதிபர்களால்) தொடங்கப்படும் அமைப்புகளுக்கு இது உபயோகமான கருத்து. அவர்கள் தொடங்கி இருந்தாலும் நிர்வாகிக்க கண்காணிகளைப் போன்ற செயல்பாட்டை உடைய ஒருங்கிணைப்பாளர்கள்/தாளாளர்கள் தேவை. ஆனால் வாய்ப்பு இருக்கும்போதெல்லாம் உங்கள் பணியின் நிறுவனருடைய தரிசனத்தோடும், வைராக்கியத்தோடும் நெருங்கி பணிசெய்வது மிகவும் முக்கியம். மிகவும் செயலாற்றல் உடைய அமைப்புகளில் நிறுவனரின் தனிப்பட்ட கதை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

உங்களுக்கு அடுத்த தலைவர் அமைதியாக காத்திருக்கலாம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அந்த நபருக்கு நல்ல மனப்பாங்கு இருந்ததென்றால், அவர்கள் அந்த பதவிக்காக சண்டைபோடாமல், தொடர்ந்து உங்களை தலைவராக வைத்து சேவைசெய்வார். ஆனால் அந்த 'ஊழியக்கார மனப்பாங்கு' அவர்கள் தயாராகிவிட்டார்கள் என்பதை நீங்கள் உணரவில்லை என்பதையே பொருட்படுத்தும்.

நாம் அடுத்து தலைமை ஏற்கப்போகிறவரை வரிசையில் நிறுத்தும்போது, நாம் அவர்களை பெலப்படுத்தி, விடுவிக்கவேண்டும். அவர்கள்

வித்தியாசமான முறைகளையும், வரங்களையும் கொண்டுவர அனுமதிக்க வேண்டும். தலைமைத்துவத்தில் இடைவெளி சிலநேரங் களில் அருமையான மாறுபாட்டிற்கு பதிலாக வித்தியாசத்தை அனுமதிப்பதாக இருக்கவேண்டும். இறுதியில் என்ன நடக்கப் போகிறது என்பதைப் போலவே நாம் உபயோகப்படுத்தும் முறைமைகளும் முக்கியமானவை : நேரத்தின்படி செயல்படுதல், ஆலோசனை, ஐக்கியம், தொடர்பு, ஜெபம், ஒப்படைப்பு, ஆதரவு. மாற்றத்தின் உணர்வுக்கு நாம் உணர்வுள்ளவர்களாக இருக் கவேண்டும் - அது நிம்மதி முதல் சோகம் வரை வித்தியாசமான உணர் வுகளை கொடுக்கலாம், அல்லது இரண்டையுமே கொடுக்கலாம்.

இறுதியாக : தனிப்பட்ட வாழ்க்கை

தலைவர்களை எச்ஐவி ஊழியம் பாதிக்கப்படக் கூடியவர்களாக மாற் றலாம். அளவுக்கு அதிகமான தேவை, ஆதாரங்களின் பற்றாக்குறை, வேகமாக வளர்ச்சிக்கான அழுத்தம், ஒவ்வொரு நிறுத்தத்திலும் நிதியுதவி, பாலுறவை குறித்த அதிகமான பேச்சு (விநோதமான நடத்தை மற்றும் சோதனையை அதிகரிக்கும்), போதைக்கு அடிமையாவதையும் உடைந்துபோவதையும் அதிகமாக பார்த்தல் இவை அனைத்தும் கலந்த சூழ்நிலை. நண்பர்கள், உறவினர்கள், அயலகத்தார், சபை அங்கதினர்கள் மற்றும் உடன் வேலையாட்களின் மரணத்தினாலும், துக்கத்தினாலும், வலியினாலும், இழப்பினாலும் ஆழ்ந்த துக்கமடைந்தவர்களை பார்ப்பதும் அதோடு சேரும்.

என்ன நடக்கவேண்டும் என்பது குறித்து ஒவ்வொரு செயல்திட்ட பணியாளர், தன்னார்வத்தொண்டர் மற்றும் ஆதரவாளர் என்ன நடக் கவேண்டும் என்கிற கருத்தை வைத்திருப்பார்கள். அது மிகவும் தனிமை யான, அழுத்தம் மிகுந்த மற்றும் மனவுழைச்சலை உண்டுபண்ணுகிறதாக இருக்கிறது.

தலைவர்களுக்கு உதவி கிடைப்பது மிகவும் கடினமானதாக எண் ணுகிறார்கள். தனிப்பட்ட பெலவீனத்தின் காரணமாக அவர்கள் குற் றவுணர்வை அடையலாம். பணியாளர்களின் மரியாதையை இழக்கக்கூடும் என்றும் சபையில் இருந்து ஒதுக்கிவைக்கப்படுவோம் என்றும் அவர்கள் அஞ்சலாம். நிதியுதவியாளர்களின் நம்பிக்கையையும், தங்களுடைய சொந்த வருமானத்திற்கான ஒரே வழியை/வேலையை இழக்கநேரிடும் என்றும் பயப்படலாம்.

தலைவர்களுக்கு "ஓய்வுநாள்" மிகவும் முக்கியமானது. அது ஞாயிற் றுக்கிழமையில் இருக்கவேண்டிய அவசியம் இல்லை (போதகர்களாகவும் இருந்துகொண்டே செயல்திட்ட தலைவர்களாக இருப்பவர்களுக்கு மிகவும் அலுவலான நாளாக அது இருக்கும்). ஓய்வு கிடைப்பதே அரியதாகிவிடும். வீட்டில் இருந்து வேலை செய்வது வேலையையும் குடும்ப வாழ்க் கையையும் மங்கச்செய்துவிடும். நோக்கத்தையும் தரிசனத்தையும் இழக்கச்செய்துவிடும். எப்போதுமே அவசர மின்னஞ்சல்களும் பிரச் சனைகளும் இருந்துகொண்டே இருக்கும். ஆனால் ஜெபிப்பதற்கும் ஓய்வெடுப்பதற்கும் இயேசு நேரம் எடுத்துக்கொண்டார். நாம் அனைவருமே புத்துணர்ச்சி அடையும்போது அதிக தாக்கமுடையவர்களாக இருப்போம்.

நீங்கள் அதிகமான அழுத்தத்தில் இருப்பதாக எண்ணினால், நீங்கள் செய்யவேண்டிய அனைத்தையும் பட்டியலிட்டு அதை குறித்து ஜெபம் பண்ணுங்கள். குறைந்த நேரத்தில் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய செயல்கள் எவை என்று காண்பிக்கும்படி கடவுளிடம் கேட்டு, முதலில் அவற்றை செய்யுங்கள். சிலநேரங்களில் நாம் நிறுத்தி, தியானிக்க நேரம் எடுத்துக்கொண்டு, கடவுளுடைய நோக்கத்தையும் சமாதானத்தையும் மீண்டும் பெற்றிடவேண்டும். உங்களுக்கு தெரிந்த நீங்கள் மதிக் கிறவர்களிடம் பேசுங்கள்-ஒருவேளை அவர்கள் உங்கள் செயற்குழுவின் ஒரு அங்கத்தினராகவோ அல்லது சபையில் இருக்கும் ஒரு தலைவராகவோ இருக்கலாம்.

சில நிதியுதவியாளர்களுக்கு செயல்திட்ட தலைவர்களை குறித்த ஆழமான போதக பாரம் இருக்கலாம். அவர்கள் ஆதரவு கொடுக்கவும் முயற்சிக்கலாம். இந்த அமைப்புகளில் இருக்கும் சில குழு அங்கத்தினர்கள் மிகவும் கரிசனையுள்ளவர்களும், அனுபவம் வாய்ந்தவர்களும், சக்திவாய்ந் தவர்களும், உதவுகிறவர்களுமாக இருக்கிறார்கள். ஆனால் கருத் துவேறுபாடுகள் இருக்கலாம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். நிதியுதவியாளரின் பிரதிநிதி எவ்வளவு கரிசனையுள்ளவராக இருந்தாலும், எதிர்கால நிதியுதவியை அவர்கள் தீர்மானிக்க உதவுகிறவர்களாக இருந் தால், சில காரியங்களை அவர்களோடு பகிர்ந்துகொள்வதை செயல்திட்ட தலைவர் கடினமானதாக எண்ணலாம்.

வேலையில் கருகிப்போவதை தடுப்பதற்கான முக்கிய வழி

எதிர்பாராத காரியங்கள் சம்பவிப்பதை எதிர்பார்க்கும் நாட்களில் இரண்டு மடங்கு அதிகமாக உங்கள் குறிப்பேட்டில் பதிவுசெய்துகொள்ள வேண்டும். குறைந்த காலத்திற்கு விடுப்பு எடுத்துக் எகாண்டாலும் உறவினர்களோடும், சிறந்த நண்பர்களோடும் செலவு செய்ய தனிப்பட்ட நேரம் கிடைக்கும். சில தலைவர்கள் நேரத்தை பாதுகாப்பதே கிடையாது. வாழ்க்கை சுமையானதாக அவர்கள் உணர்வார்கள்.

உங்களுக்கு திருமணமாகி இருந்தால், உங்கள் துணைவர் மிகவும் முக்கியமானவர், அவருக்கு போதிய நேரம் கொடுப்பது அவசியம். நீங்கள் இருவரும் ஒரு குழு, எனவே உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தில் நேரத்தை முதலீடு செய்யுங்கள். வேலை முழுவதும் பெலனடையும். எச்ஐவி பணி என்பது உறவுகள், உண்மைத்தன்மை மற்றும் விசுவாசமாக இருப்பதை குறித்தது. நாம் கொடுக்கும் செய்தியை நடைமுறைபடுத்துவது மிகவும் முக்கியம். நம்முடைய திருமணம் வலிமையானது, நாம் உள்ளூர் சபையிலே வேரூன்றி இருக்கிறோம், நம்முடைய குழந்தைகள் அன்பையும் பாராட்டுதலையும் உணர்கிறார்கள், நம்முடைய மதிப்புகளின் தீர்க்கதரிசன வெளிப்பாடுகளாக நம்முடைய வாழ்க்கை இருக்கிறது என்பனவற்றை வாழ்ந்து காட்டவேண்டும். எனவே உங்கள் உறவுகளை பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுடைய ஊழியத்திலும் தனிப்பட்ட சாட்சியிலும் அவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

உங்களுடைய எடுத்துக்காட்டை அறியாமலேயே உங்கள் தன்னார்வத்

கொண்டர்கள் பின்பற்றக்கூடும். எனவே அவர்கள் பின்பற்றுவது பயனுள்ளதாக இருப்பதை உறுதிசெய்யுங்கள். எடுத்துக்காட்டாக, நேரம் எடுத்துக் கொள்ளுங்கள் என்கிற உங்கள் ஆலோசனையை நீங்களே பின்பற்றி காண்பியுங்கள், சரியான நேரத்துக்கு வீட்டுக்கு திரும்புங்கள்.

நீங்கள் திருமணமாகாதவராக இருந்தால், உங்களுக்கு அறிமுகமான, அன்பாக இருக்கிற, நம்பிக்கையான யாருடனாவது போதுமான நேரத்தை செலவிடுங்கள். உங்கள் குடும்பத்தில் அங்கமாக இருக்கிறவர்களுடன் நேரத்தை முதலீடு செய்யுங்கள். பாலியல் உறவுகளில் குதிக்காமலும், போதைக்கும் மதுவுக்கும் அடிமையாகமலும் இருப்பதே திருமணமாகாதவராய் நிறைவாக இருப்பதற்கான வலிமையான தீர்க்கதரிசன வெளிப்பாடாக இருப்பீர்கள். ஆளில்லாத வீட்டிலே, பகிர்ந்துகொள்ள யாரும் இல்லாமல் வீட்டிற்கு திரும்பி வருவது ஒரு செயல்திட்ட தலைவராக இது மிகவும் கடினமான, தனிமையான, அழுத்தம் நிறைந்த அனுபவமாக இருக்கும். இப்பயணத்தில் உங்களை ஊக்கப்படுத்துகிற சிறந்த மக்களை கண்டுபிடியுங்கள். உங்களிடத்தில் தனிப்பட்ட முறையிலும், உங்கள் தரிசனத்திற்கும் முழுமையாக அர்ப்பணம் உள்ளவர்களை கண்டுபிடியுங்கள். பிரச்சனை வரும்போதெல்லாம் திரும்பி பார்க்கக் கூடிய மக்கள்.

உங்களுடைய தனிப்பட்ட சூழ்நிலை எதுவாக இருந்தாலும், வீட்டிற்கு வெளியே அடிக்கடி செல்வது உங்களை பெலவீனப்படுத்தலாம் என்பதை அங்கீகரியுங்கள். உங்களை பாதிக்கப்படக்கூடியவராக, சோதனையில் உட்படுத்துவதாக, உங்களுக்கு ஆதரவாக இருக்கும் உறவுகளை திருடிக் கொள்வதாக அவை அமையும். பயணங்கள் நேரத்தையும் பணத்தையும் செலவிடச் செய்யும். பயணங்கள் உங்களை சோர்வடையச் செய்யும், எனவே நீங்கள் வீட்டிற்கு வந்ததும் வாழ்வது சுலபமற்றதாக மாறிவிடும். எனவே கவனமாக இருங்கள், பொறுப்பாக திட்டமிடுங்கள். நீங்கள் பிரயாணம் செய்யும்போது மக்கள் உங்களுக்காக ஜெபம் செய்வதை உறுதிபடுத்துங்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நீங்களும் உங்கள் குடும்பமும் சந்திக்கிற அழுத்தங்களையும் அவர்கள் அறிந்திருக்கிறார்களா என்பதை உறுதிசெய்யுங்கள்.

உங்கள் பிரயாணங்கள் குறித்த தீர்மானங்களை உங்களை விட நோக்கம் சார்ந்து இருக்கிற உறவினர்களிடமும், மற்ற ஞானவான்களிடமும் ஒப்படைத்துவிடுங்கள். வேறு பட்டணத்திற்கோ அல்லது நாட்டிற்கோ செல்லும்படி அழைப்பது மிகவும் ஆசையூட்டுவதாக இருக்கும். நீங்கள் உறுதியில்லாமல் இருக்கும் தீர்மானங்களை தாமதம் செய்யுங்கள். மற்ற அழைப்புகளும் வரலாம் அவற்றை சமன்பாடு செய்யவேண்டும். திட்டத்தோடும், நோக்கத்தோடும், ஜெபத்தோடும் இருங்கள். ஒரு நாளை வீணாக்கும் அளவுக்கு வாழ்க்கை பெரிதானதல்ல.

எல்லாவற்றிலும் நம்முடைய ஜெபம் : "உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக. உம்முடைய பெயர் அறியப் படுவதாக, உம்முடைய மகிமை பிரகாசிப்பதாக" என்று இருக்கட்டும்.

எய்ட்ஸ் ஆக்ஷனுக்கான நேரம்

இப்படிப்பட்ட புத்தகத்தை வாசித்துவிட்டு, நீங்கள் அதற்கு தகுதி யானவர்கள் அல்ல, உங்களால் செய்யக்கூடிய எதுவும் இல்லை என்று உணர்வது மிகவும் சுலபம்.

சபை தலைவர்களின் மாநாடுகளில் பங்குபெற்று, ஊக்கமான பேச் சாளர்கள் பேசுவதை கேட்டுவிட்டு, இறுதியில் ஒரு தீர்மானத்தில் கையெழுத்து இடுவதற்கு வாழ்க்கை ஒன்றும் பெரியதல்ல. எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் குறித்த மாநாடுகளிலும், கூட்டங்களிலும், கூடுகைகளிலும், ஆலோசனை கூட்டங்களிலும் பத்தாயிரத்துக்கும் மேலான சபைத் தலைவர் கள் கடந்த பத்து ஆண்டுகளில் நூறு பக்கங்களுக்கு மேல் இருக்கும் நல்ல அறிக்கைகளில் கையெழுத்து போட்டிருக்கிறார்கள்.

ஒரு காகிதத்தில் கையெழுத்து போடுவது உலகத்தை மாற்றிவிடாது. நல்ல நோக்கங்கள், நல்ல யோசனைகள் மற்றும் நம்பிக்கைகள் உலகத்தை மாற்றிவிடாது. ஆண்களும் பெண்களும் வித்தியாசமான காரியங்களை செய்தால் மாத்திரமே நம்முடைய உலகம் மாற்றமடையும்; தலைவர்கள் தெளிவான குறிக்கோள்களோடு, அதிகமான சக்தியோடு குழுக்களை ஒருங்கிணைக்கும்போது மாற்றமடையும்.

இதன் விளைவாக எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்றால் இப் படிப்பட்ட புத்தகங்களை வாசித்து நேரத்தை வீணாக்க வாழ்க்கை மிகவும் குறுகியது. அடுத்த இரண்டு பக்கங்களில் நீங்கள் என்ன காரியங்களை செய்கிறேன் என்று உங்களுக்கே வாக்குசெய்வீர்கள், எப்போது செய்வீர்கள் என்றும் அவற்றின் முன்னேற்றம் என்ன என்பவற்றையும் பூர்த்தி செய் வதற்கான இடம் இருக்கின்றது. நீங்கள் ஏன் ஒரு எழுதுகோலை எடுத் துக்கொண்டு ஜெபத்தோடு அதில் ஏதாகிலும் எழுதக்கூடாது? இந்த புத் தகத்தை யாரிடமாவது இரவல் கொடுக்க விரும்பினால் அந்த பக்கங்களை கிழித்து எடுத்துக் கொள்ளலாம்.

நீங்கள் அர்ப்பணித்தவற்றை செய்கிறீர்களா என்று பின்தொடர்ந்து கணக்குகேட்கக்கூடிய, நீங்கள் மதிக்கிற யாரிடமாவது இந்த பட்டியலை கொடுங்கள். இதே பயணத்தை பிரயாணிக்க விரும்பும் மற்றவர்களிடமும் இந்த பட்டியலை பகிர்ந்துகொள்ளுங்கள் - முதலில் இந்த புத்தகத்தை அவர்களுக்கு இரவல்கொடுங்கள். அதன்மூலமாக கடவுள் அவர்களிடம் என்ன கூறுகிறார் என்பதை உணர்ந்து அவர்கள் பதிலளிக்க முடியும்.

ஏதாகிலும் செய்வதே மிகவும் முக்கியமான காரியம்

பராமரிக்க விலை ஏதும் இல்லை. தேவையுள்ள உங்கள் அயலகத்தாரை

சென்று சந்திக்க எந்த ஒருங்கிணைப்பும் தேவையில்லை. உங்கள் உறவினர்களிடம் எச்ஐவி குறித்து பேசவும், இப்புத்தகத்தை யாரிடமாவது இரவல் கொடுக்கவும், ஒரு உற்சாகமூட்டும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவும் விலை ஏதும் இல்லை.

மகத்துவமான நிகழ்ச்சிகளினால் எச்ஐவிக்கு எதிரான போராட்டத்தில் வெற்றி காண முடியாது. ஒவ்வொரு நாட்டிலும் கோடிக்கணக்கான சாதாரண ஆண்களும், பெண்களும் ஒரு மக்கள் இயக்கமாக எழும்பி, எச்ஐவி பிரச்சனையை கடுமையானதாக எடுத்துக்கொண்டு, வித்தியாசத்தை ஏற்படுத்த வைராக்கியம் கொள்வதன் மூலமாக வெற்றி காணமுடியும். கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்களுக்கு பெலத்தையும் நம்பிக்கையையும், அதோடு ஆரோக்கியத்தையும் முழுமையையும் கொடுக்கிற ஒரு செய்தி நம்மிடம் இருக்கிறது.

உங்களால் உலகம் முழுவதையும் மாற்றமுடியாது, ஆனால் இன்று எங்காவது யாருடைய உலகத்தையாவது மாற்றமுடியும்.

பயனுள்ள அமைப்புகளுக்கும், இணையதள தொடர்புகளுக்கும், மற்ற ஆதாரங்களுக்கும் ஏசியிடி சர்வதேச ஒருங்கிணைப்பின் இணையதளத்தை பாருங்கள் : www.acet-international.org

	நான் எடுக்கப்போகும் நடவடிக்கை	எப்போது	நிறைவு செய்யப்பட்ட நாள்	விளைவு
1				
2				
3				
4				
5				
6				
7				
8				
9				
10				

	நான் எடுக்கப்போகும் நடவடிக்கை	எப்போது	நிறைவு செய்யப்பட்ட நாள்	விளைவு
11				
12				
13				
14				
15				
16				
17				
18				
19				
20				

ஏசியிடி சர்வதேச ஒருங்கிணைப்பு

20 நாடுகளில் வளர்ந்துவரும் தனியார் எச்ஐவி நிகழ்ச்சிகளின் சமுதாயமே ஏசியிடி சர்வதேச ஒருங்கிணைப்பு. அது 1988 ஆம் ஆண்டு முதல் முதலில் இங்கிலாந்தில் தொடங்கப்பட்டது. ஏசியிடி என்பது, எய்ட்ஸ் பராமரிப்பு, கல்வி மற்றும் பயிற்சியை குறிக்கிறது (AIDS care, Education and Training). இதை நிறுவியவர் டாக்டர் பேட்ரிக் டிக்சன். ஒருங்கிணைப்பின் அங்கத்தினர்கள் அனைவரும் எச்ஐவிக்கான கிறிஸ்தவ பதிலை கொடுக்கும் ஒரே நோக்கத்தில் இணைந்து இருக்கிறார்கள் :

- ❒ எச்ஐவியால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிபந்தனையற்ற, கரிசனையுள்ள பராமரிப்பை கொடுக்கவேண்டும்
- ❒ சபையின் வரலாற்றுப் போதனைகளை மதித்து, கடைபிடித்து, உயிர்காக்கும் பாதுகாப்பை கொடுத்தல்
- ❒ தனிப்பட்ட மற்றும் சமுதாய வளர்ச்சிக்கான முழுமையான அணுகுமுறையை உடைய பயனுள்ள பயிற்சி அளித்தல்.

சக்திவாய்ந்த எச்ஐவி பராமரிப்பு மற்றும் பாதுகாப்பில் விசுவாசம் சார்ந்த அமைப்புகளையும், சபைகளையும் ஒருங்கிணைப்பது ஏசியிடி பணியின் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஒருங்கிணைப்பு என்பது நிதியுதவி செய்யும் அமைப்புகளாக இல்லாமல், தொடர்ச்சியாக கூட்டுறவில் ஈடுபட முயற்சிக்கும் அமைப்புகளின் கூட்டமைப்பு ஆகும். இதற்கு ஒரு பெரிய மத்திய நிர்வாகம் கிடையாது, இது மத்திய நிதியுதவி அனுமதிகளையும் வழங்காது.

இந்தியா, உருசியா, உகாண்டா, தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, அயர்லாந்து, மற்றும் காங்கோவின் ஜனநாயக குடியரசில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினால் வழிநடத்தப்படுகின்றது.

ஏசியிடியை தொடர்புகொள்வதன் மூலம் இப்புத்தகத்தின் இலவச நகல்களை பல்வேறு மொழிகளில் பெற்றுக்கொள்ளலாம் :
www.acet-international.org
email: sheila.dixon@acet-international.org

ஆபரேஷன் மொபலைசேஷன்

இப்பதிப்பை வழங்குவதிலும், உடன் வெளியீடு செய்வதிலும் ஆபரேஷன் மொபலைசேஷன் மகிழ்ச்சி அடைகிறது. எய்ட்ஸ் மற்றும் எச்ஐவியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கரிசனையோடும், பராமரிப்போடும், நடைமுறை பதிலை கொடுக்குமாறும், உயிர்களை காப்பாற்றுமாறும் எங்கு இருக்கும் திருச்சபைகள் பதிலளிப்பதைக் காணவும் ஆபரேஷன் மொபலைசேஷன் முழுமையாக தன்னை அர்ப்பணித்து உள்ளது.

ஜார்ஜ் வெர்வரினால் ஓஎம் (OM) தொடங்கப்பட்டது. இன்று ஓஎம் 80 நாடுகளில் 3000 முழுநேர பணியாளர்களை கொண்ட ஒரு உலகளாவிய ஊழியமாக செயல்திறனோடு காணப்படுகிறது. உலக ஊழியத்தின் நோக்கத்திற்காக சபைகளோடும் மற்ற கிறிஸ்தவ அமைப்புகளோடும் இணைந்து செயல்பட அது தன்னை அர்ப்பணித்து இருக்கிறது. ஓஎம்-இன் பல்வேறு ஊழியங்கள் சபைகளுக்கும், மாநாடுகளுக்கும், பயிற்சி வகுப்புகளுக்கும் பேச்சாளர்களை வழங்கிவருகிறது. அதோடு எல்லா வகையான சுவிசேஷம், தலைமைத் துவம், போதக பராமரிப்பு மற்றும் அதிகமான ஆதாரங்களையும் கொடுத்துவருகின்றது. அதில் வீடியோக்கள், புத்தகங்கள், தகவல் தொடர்பு சாதங்கள் மற்றும் ஜெப அட்டைகளும் அடக்கம்.
www.om.org
www.ombooks.org

இப்புத்தகத்தை பற்றிய கருத்துக்கள்

எய்ட்ஸ் ஆக்ஷனின் முந்தையை பதிப்பை (எய்ட்ஸும் நீங்களும்) 20 மொழிகளில், 3,30,000 பிரதிகளுக்குமேல் கொடுக்க உதவிய நன்கொடையாளர்களுக்கும் அமைப்புகளுக்கும் நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். அவர்கள் ஏன் அதை செய்தார்கள்? அந்த புத்தகங்களை படித்தவர்கள் கொடுத்த கருத்துக்களே அதற்கு காரணம்.

உங்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவ எங்களுக்கு தயவாக உதவிசெய்யுங்கள். உங்களுடைய கருத்துக்கள், அறிவுரைகள் மற்றும் சிந்தனைகளை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உங்களுக்கு அல்லது மற்றவர்களுக்கு இந்த புத்தகம் எப்படி உதவியாக இருந்தது? இதன் பிரதி வேறு யாருக்கு பயனுள்ளதாக இருக்கும்? பின்வரும் கேள்விகளுக்கான உங்கள் பதில்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புங்கள், அல்லது உங்கள் பதில்களை மின்னஞ்சல் செய்யவேண்டிய முகவரி : sheila.dixon@acet-international.org

UNAIDS

UNAIDS, எச்ஐவி மற்றும் எய்ட்சுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் இணைக்கப்பட்ட நிகழ்ச்சியாகும். இது ஐக்கிய நாடுகள் குடும்பத்தின் ஒரு புதுமையான இணை முயற்சியாகும் இது. எச்ஐவி நோய்பாதிப்புகளையும் தடுக்கவும், எச்ஐவியோடு வாழ்கின்ற மக்களை பராமரிக்கவும், இந்த நோயின் தாக்கத்தை குறைக்கவும் 10 ஐக்கிய நாடுகளின் முறைமை அமைப்புகளின் ஆதாரங்களையும் முயற்சிகளையும் இது ஒன்றுதிரட்டி கொண்டுவருகின்றது.

ஸ்விட்சர்லாந்திலுள்ள ஜெனிவாவில் தலைமை அலுவலகத்தை கொண்டிருக்கிறது UNAIDS. உலக அளவில் 80க்கும் மேலான நாடுகளில் அடிமட்ட நிலையில் UNAIDS செயலகம் பணிபுரிகிறது. எச்ஐவிக்கு எதிரான ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒன்றுபட்ட செயல்பாடு, ஐக்கிய நாடுகளின் கருத்துக் குழுக்களின் மூலமாகவும், எச்ஐவிக்கு எதிராக இணைக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் மூலமாகவும் பல நாடுகளில் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

உடன் வழங்குவோர் UNHCR, UNICEF, WFP, UNDP, UNFPA, UNODC, ILO, UNESCO, WHO மற்றும் உலக வங்கி.

எய்ட்ஸுக்கு எதிரான ஒரு விரிவான பதிலை ஏற்படுத்தவும் ஆதரிக்கவும் UNAIDS உதவுகிறது- அரசாங்கத்திடமிருந்தும், சமுதாய அமைப்பிடமிருந்தும் வருகிற பங்காளர்களையும் துறைகளையும் நிர்வகிக்கின்ற ஒன்றாக செயல்படுகின்றது.

எச்ஐவி மற்றும் எய்ட்ஸுக்கு எதிரான சமுதாயம் சார்ந்த பதிலில் விசுவாசம் சார்ந்த அமைப்புகளுக்கு இருக்கும் முக்கியத்துவத்தை UNAIDS அங்கீகரிக்கிறது.

www.UNAIDS.org

விசுவாசம் சார்ந்த அமைப்புகளோடு இணைந்து செயல்படுவது - UNAIDSதிட்ட கட்டமைப்பு

எய்ட்ஸ் ஆக்ஷனின் ஆசிரியர் டாக்டர் பேட்ரிக் டிக்சனின் குறிப்பு

ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களுக்கும், அரசாங்கங்களுக்கும், விசுவாசம் சார்ந்த அமைப்புகளுக்கும் ஒன்றாக பணிசெய்ய முயற்சிக்கிற சமயத்திலே. இவற்றிற்கு வழிகாட்டியாக திகழ்கின்ற ஒரு முக்கியமான UNAIDS வெளியீட்டில் இருந்து எடுக்கப்பட்ட செய்திகளை இந்த புத்தகத்தில் சேர்ப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த UNAIDSன் திட்டத்திற்கும், பங்காளர்களாக பணிசெய்வதற்கு விசுவாசம் சார்ந்த அமைப்புகள் எவ்வளவு

முக்கியமானவை என்பதை இப்பதிவு காண்பிக்கிறது. இவர்கள் இணைந்து வேலை செய்வதற்காக வாய்ப்புகளையும் தெரியப்படுத்துகிறது. இதை உருவாக்கியவர் UNAIDSன் பங்காளத்துவ ஆலோசகர் சேலி ஸ்மித். பல அமைப்புகளில் இருந்து வரவழைக்கப்பட்ட குழுவில் பணிசெய்கிறவர் இவர்.

2.குறிக்கோள், நோக்கம் மற்றும் வழிகாட்டும் கருத்துக்கள்

2.1 குறிக்கோள்

❐ எச்ஐவி நோய்தடுப்புக்கும், சிகிச்சைக்கும், பராமரிப்பும் மற்றும் ஆதரவுக்கும் UNAIDS மற்றும் (விசுவாசம் சார்ந்த அமைப்புகள் - FBO) FBO, வலிமையான பங்காளத்துவத்தோடு செயல்பட ஊக்கப் படுத்துவதே UNAIDS-FBO திட்ட கட்டமைப்பின் குறிக்கோள் ஆகும். இதில் FBOக்களை விரிவான தேசிய எய்ட்ஸ் பதில்களில் இணைப்பதும் அடங்கும்.

2.2 நோக்கங்கள்

UNAIDS-FBO திட்ட கட்டமைப்பின் நோக்கங்கள் :

❐ எய்ட்ஸுக்கு எதிரான பதிலில் ஆதரவான வெளிப்படையான நடவடிக்கையை தேசிய மற்றும் சர்வதேச மதத்தலைவர்கள் எடுக்கும்படி ஊக்கப்படுத்துதல்.

❐ எச்ஐவிக்கு எதிராக பணிசெய்யும் UNAIDS மற்றும் நிலைத்தன்மைபெற்ற விசுவாசம் சார்ந்த அமைப்புகளுக்கும் இடையே வலிமையான பங்காளத்துவத்தை உருவாக்குவது.

❐ பெலப்படுத்தப்பட்ட இணைப்புகளை விளம்பரம்செய்யுங்கள். நாடுதழுவிய விசுவாசம் சார்ந்தஅமைப்புகளுடன் ஒத்துழைப்பு மற்றும் சுகந்திரத்தை கொடுப்பதன் மூலமாக விரிவான தேசிய எய்ட்ஸ் பதிலின் ஒரு பகுதியாக சரியான தொடர்பை ஏற்படுத்துதல்.

❐ எச்ஐவி பிரச்சனைகளில் பணிசெய்ய விசுவாசம் சார்ந்த அமைப்புகளின் திறனை அதிகரித்தல், மற்றும் UNAIDS பணியாளர்கள் விசுவாசம் சார்ந்த அமைப்புகளோடு பணிசெய்ய அவர்களுடைய திறனையும் அதிகரித்தல்.

❐ எச்ஐவி பணியில் இதுவரை ஈடுபடாத விசுவாசம் சார்ந்த அமைப்புகளை குறிவைத்து, அவர்களுடைய பணியில்எச்ஐவி சம்பந்தமான வேலைகளை இணைப்பது.

❐ உள்நாட்டு விசுவாச சமுதாயங்கள் உள்நாட்டு எய்ட்ஸுக்கு எதிரான பதிலில் கலந்துகொள்ள ஒருங்கிணைத்தல்.

❐ விசுவாசம் சார்ந்த அமைப்புகளின் நல்ல நடைமுறைகளின் எடுத்துக்காட்டுக்களை கண்டுபிடித்து பதிவுசெய்யுங்கள்.

2.3 வழிகாட்டும் கருத்துக்கள்

எய்ட்ஸுக்கு எதிரான சர்வதேச பதிலின் வழிகாட்டும் கருத்துக்கள் 60/262 பொதுக்குழு கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் காணப்படுகின்றது. இது எச்ஐவி/ எய்ட்ஸ் குறித்த அரசியல் அறிவிப்பு.

அதோடு UNAIDS பங்காளத்துவங்கள் பின்வரும் வழிகாட்டும் கருத்துக்களை சார்ந்து இருக்கின்றன:

❒ தங்களுடைய வாழ்க்கையை பாதிக்கக்கூடிய எல்லா நிகழ்ச்சிகளையும் தீர்மானங்களையும் வடிவமைதிலும், நிகழ்த்துவதிலும், செயல்படுத்துவதிலும், ஆராய்ச்சிசெய்வதிலும், கண்காணித்தலிலும், மதிப்பீடு செய்தலிலும் எச்ஐவியோடு வாழ்கின்ற மக்கள் தலைவர்களாக இருக்கவேண்டும்.

❒ மனித உரிமை சார்ந்த அணுகுமுறைகள், பாலின சமவுரிமை மற்றும் எச்ஐவி உடைய மக்களின் அதிகமான ஈடுபாடு ஆகியவையே UNAIDS பங்காளத்துவம் செயல்படுவதற்கான அடித்தளங்களாக இருக்கின்றன.

❒ எச்ஐவியால் பாதிக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கையை குறைக்க அவர்கள் எவ்வளவு முயற்சி எடுக்கிறார்கள் என்பதை வைத்துதான் பங்காளத்துவத்தை மதிப்பீடு செய்யவேண்டும். எச்ஐவியோடு வாழ்கின்றவர்கள் அல்லது எச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்கள் மீதான தாக்கத்தை குறைக்க எடுக்கப்படும் முயற்சியை வைத்தும் மதிப்பிடலாம்.

❒ தேசிய உரிமைத்துவம், மற்றும் தேசம் வழிநடத்தும் அணுகுமுறைகள் மற்றும் கணக்கு ஒப்புவித்தல்கள் ஆகியவற்றை ஆதரிப்பது பங்காளத்துவத்தின் நோக்கமாக இருக்கவேண்டும்.

❒ தேசிய முக்கியத்துவங்களை ஆதரிப்பதற்காக ஆதாரங்கள் முதலீடு செய்யப்பட்டு ஒருங்கிணைக்கப்படுகின்றன. எச்ஐவியோடு வாழ்கின்ற அல்லது பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக, நோய் தடுப்பு, பராமரிப்பு மற்றும் ஆதரவு,சிகிச்சை மற்றும் தாக்கத்தை குறைத்தல் ஆகிய பகுதிகளிலும்ஆதாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

❒ பங்காளத்துவம் நிறுவனம் சார்ந்ததாகவும், அமைப்புகளை பெலப்படுத்துகிறதாகவும் இருக்கவேண்டும் (உலக அளவில் அணுகக் கூடிய குறிக்கோள்களை அடைவதற்கான தலைமைத்துவத்தையும், ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வதற்காக தேசிய நிறுவனங்களை பெலப்படுத்துவதற்கு அர்ப்பணிப்பு வேண்டும்) கிடைக்கப்பெற்ற சிறந்த விஞ்ஞான ஆதாரங்களும்,தொழில்நுட்ப அறிவும் பங்காளத்துவத்தின் பணியை அறிவிக்கவேண்டும்.

5. பங்குகளும் பொறுப்புக்களும்

5.1 விசுவாசம் சார்ந்த அமைப்புகளின் பங்குகள்

UNAIDSவுடன் எச்ஐவி தொடர்பான பங்காளர்களாக இருக்கும் விசுவாசம் சார்ந்த அமைப்புகளின் பங்கு

❒ சிறுமைப்படுத்துவதையும், எச்ஐவி தொடர்பாக அவமானப்படுத்துவதையும், பிரிவினை உண்டாக்குவதையும் நிறுத்துவதற்காக உழைத்தல்.

❒ நிகழ்ச்சிகளை வடிவமைத்தல், நிகழச்செய்தல், செயல்படுத்துதல், ஆராய்ச்சி செய்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதலிலும், தீர்மானங்கள் எடுப்பதிலும் எச்ஐவியோடு வாழ்கின்ற மக்களை சேர்த்துக்கொள்ளுதல்.

எச்ஐவி நோய்தடுப்பு, சிகிச்சை, பராமரிப்பு மற்றும் ஆதரவு சேவை ஆகிய அன்னத்தும் உலக அளவில் அணுகக்கூடியதாக இருப்பதற்காக வழக்காடுதல்.

❒ எல்லா மனிதர்களும் சுகாதாரம், மரியாதை மற்றும் பராமரிப்பை

பெறத் தகுதியுள்ளவர்களாக சமமாக மதிக்க வேண்டும். அவர்கள் எந்த நம்பிக்கை, மதிப்புகள் மற்றும் வாழ்க்கைமுறையை தெரிந் துகொண்டவர்கள் என்கிறதைப் பற்றி கவலைப்படாமல் மதிக்கவேண்டும்.

❐ நிதியை கையாளுவதிலும், சமுதாயத்திற்கு சேவை செய்வதிலும், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்வதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமைகளை பின்பற்றி, திறந்த,வெளிப்படையான சேவையை கொடுக்கவேண்டும்.

❐ விசுவாசம் சார்ந்த அமைப்புகளின் சொந்த நம்பிக்கை மற்றும் மதிப்புகளோடு இசைவாக செயல்படுகின்ற அறியப்பட்ட- ஆதாரங்களின் அடிப்படையிலான சேவைகளை கொடுக்கவேண்டும்.

❐ எய்ட்ஸுக்கு எதிராக பதிலளிக்கும் மற்ற பணியாளர்களின் அறியப்பட்ட-ஆதாரம் சார்ந்த செயல்பாடுகளை மட்டப்படுத்த அல்லது இழிவுபடுத்த முயற்சிகள் எதுவும் செய்யாமல் இருக்கவேண்டும்.

5.2 UNAIDS இன் பங்குகள்

விசுவாசம் சார்ந்த அமைப்புகளோடு UNAIDSன் எச்ஐவி தொடர்பான பங்காளத்துவத்தின் பங்குகள்

❐ எய்ட்ஸுக்கு எதிரான பதிலில் அவமானப்படுத்துதல், குற்றப் படுத்துதல் மற்றும் பிரிவினைகள் ஆகியவற்றை முடிவுக்கு கொண்டு வர உழைத்தல். அதில் விசுவாசம் சார்ந்தஅமைப்புகளையும் இணைத் துக்கொள்ள மறுப்பதையும் முடிவுக்கு கொண்டுவருதல்.

❐ திட்டம் மற்றும் சட்டவழிகாட்டிகளை உருவாக்குவதில் விசுவாசம் சார்ந்த அமைப்புகளையும் சேர்த்துக்கொள்ளுதல்.

❐ முக்கியமான தீர்மானம் எடுக்கும் முறைமைகளிலும், தொடர்பு குழுக்களிலும் பல்வேறு விசுவாசம் சார்ந்த அமைப்புகளை இணைத்துக் கொள்ளுதல்.

❐ தேசிய எய்ட்ஸ் பதிலளிப்பதில் விசுவாசம் சார்ந்த அமைப் புகளையும் சேர்த்துக்கொள்ள வழக்காடுவது.

❐ வெளியிடப்பட்ட வரைமுறைகளின்படி திட்டமிடுதல், செயல் படுத்துதல், நிதிநிலை தீர்மானங்கள் எடுத்தல் அனைத்துமே திறந்த, வெளிப் படையான வழியில் செய்யப்படவேண்டும் என்று நிதியுதவியாளர் களிடமும், அரசாங்கத்திடமும் வழக்காடுதல்.

❐ தேசிய எய்ட்ஸ் திட்டத்தின் வளர்ச்சியை ஆதரிக்கவும், செயல் படுத்தவும், கண்காணிக்கவும், மதிப்பீடு செய்யவும் தங்கள் திறனுக்கேற்ற பாத்திரத்தை வகிக்க, விசுவாசம் சார்ந்த அமைப்புகளுக்கும் மற்ற அமைப்புகளுக்கும் சரியான நிதியுதவி செய்யவேண்டும் என்று வழக் காடுதல்.

❐ திறந்த வெளிப்படையான வழியில் விசுவாசம் சார்ந்த அமைப் புகளோடு பங்காளர்களாக வேண்டும். அவர்களுடைய விசுவாசத்தை அவர்களுடைய மதிப்புகள் மற்றும் செயல்பாடுகளின் அடிப்படையாக கருதி மதிக்கவேண்டும்.

❐ முன்பே ஏற்றுக்கொண்ட வரைமுறையின்படி சமுதாய அமைப்பு

திட்டத்தினை கண்காணித்து மதிப்பீடு செய்தல். விசுவாசம் சார்ந்த அமைப்புகளின் அறிவியல் ஆதாரங்களையும், நம்பிக்கைகளையும் மதித்தல்.

❒ எய்ட்ஸ் தொடர்பான பாதுகாப்பு, சிகிச்சையை அணுகக்கூடிய தன்மை, பராமரிப்பு மற்றும் ஆதரவு முயற்சிகளை உள்ளூர் சமுதாயம் உரிமையெடுத்துக் கொள்ள விளம்பரம் செய்தல்.

❒ நல்ல நாடுகள் அமைப்பின் புதுமைப்படுத்துதலின் அடிப்படையில் ஒத்த செயல்திட்டங்களோடு பங்காளத்துவத்தை ஏற்படுத்த அழுத்தம் கொடுத்தல்

❒ ஒரு நம்பிக்கைகளை இழிவுபடுத்தும் அல்லது மட்டப்படுத்துகின்ற முயற்சிகளில் இருந்து பின்வாங்குதல்.

5.2 UNAIDS மற்றும் விசுவாசம் சார்ந்த அமைப்புகளின் பொறுப்புகள்

UNAIDS மற்றும் விசுவாசம் சார்ந்த அமைப்புகளின் பொறுப்புகள்

❒ பங்காளத்துவத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கங்களை விளக்குதல்.

❒ ஒன்றிணைந்து பணிசெய்வதற்கான முறைமைகள் மற்றும் கருத்துக்களை ஏற்படுத்தி ஏற்றுக்கொள்ளுதல் (பகுதி 2.3ஐபார்க்க). அதில் பின்வருவன அடங்கும்:

- நடைமுறையில் இருக்கும் தகவல் பரிமாற்றம்
- தீர்மானம் எடுப்பதில் பங்காளர்களை சேர்த்துக்கொள்ளுதல்
- செயல்களை கண்டுபிடித்து செயல்படுத்துதல்
- அடிமட்ட தகவல்களை சேகரிப்பது முதல் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடுதலை செய்தல்.
- செயல்பாடுகளின் விளைவுகளை வெளியிடுதல்
- சரியான சமயத்தில், பங்காளத்துவத்தை முடித்துக்கொள்வதற்கான திட்டத்தை தெளிவாக ஏற்படுத்துதல்

❒ பங்காளத்துவத்தின் மதிப்பை மற்றவர்களிடம் விளம்பரம் செய்தல்

முழுமையான கட்டுரை கிடைக்கும் இணையத்தளம் : http://data.unaids.org/pub/BaseDocument/2009/jc1786partnershipwithfaithbasedorganizations_en.pdf

எய்ட்ஸ் ஆக்ஷன் - உங்கள் கருத்துப் படிவம்

எய்ட்ஸ் ஆக்ஷன் பிரதியை நீங்கள் எப்படி பெற்றுக்கொண்டீர்கள்?

இப்புத்தகம் உங்களுக்கு எப்படி உதவியாக இருந்தது?

மிகவும் உதவியாக அவ்வளவு உதவியாக இல்லை

சற்று உதவியாக எனக்கு உதவவில்லை

மற்றவர்கள் இப்புத்தகத்தை வாசிக்க நீங்கள் ஊக்கப்படுத்தினீர்களா?

ஆம் இல்லை யாரை?

எச்ஐவி மற்றும் எய்ட்ஸ், மற்றும் அவற்றால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை பற்றிய உங்கள் மனப்பாங்கை இப்புத்தகம் மாற்றியிருக்கிறதா?

ஆம்-அதிகமாக ஆம்-சிறிதளவு இல்லை

இப்புத்தகத்தை வாசித்ததன் விளைவாக நீங்கள் புதிய செயல்களை திட்டமிட்டு இருக்கிறீர்களா?

ஆம் இல்லை

அவை என்னென்ன?

வேறு ஏதாகிலும் கருத்துக்கள்?

உங்களுக்கு மேலும் பிரதிகள் வேண்டுமா?

ஆம் இல்லை

எந்த மொழியில்?

எத்தனை (கூடுமானால்)

யாரிடம் இந்த பிரதிகள் கொடுக்கப்படும்?

பெயர்

பதவி

நிறுவனம்

முகவரி

மின்னஞ்சல் முகவரி (கூடுமானால் மிகவும் முக்கியமானது)

George Verwer C/o. OM Books, P.O. Box 2190, Secunderabad - 500003
George.Verwer@om.org

எய்ட்ஸ் ஆக்ஷன்

எதிரான பெரும் முயற்சிகளையும் கடந்து, எச்ஐவியானது ஒரு ஆண்டிற்கு 1 கோடியே 50 இலட்சம் எயிட்ஸ் அனாதைப் பிள்ளைகளையும், 2 கோடியே 70 இலட்சம் இறப்புகளையும், 3 கோடியே 50 இலட்சம் நோயாளிகளையும் கடந்து பரவிக்கொண்டுதான் இருக்கிறது. துன்பநிலை, துயரநிகழ்வுகள், மனவேதனை, சஞ்சலத்திற்கு எயிட்ஸ் காரணமாகிறது; குடும்பங்களை அழித்து, சமுதாயத்தைத் துண்டாடி, பொருளாதாரத்தை சீர்குலைத்துப்போடுகிறது. இன்னும், பெரும்பாலான நோய்த்தொற்று தவிர்க்கக்கூடியதாகவும், சிகிச்சையும் மேம்பட்டதாகவே இருக்கிறது. 22 ஆண்டுகளாக உலகின் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆற்றல்மிக்க 'எய்ட்ஸ் ஆக்ஷன்'களின் அடிப்படையில், நீங்கள் இப்போது எப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப் பற்றி இதில் அறிந்துகொள்ளலாம்.

டாக். பேட்ரிக் டிக்ஸன், தான் மருத்துவராக பணியாற்றியபோது, அனைத்துலகக் கிறிஸ்தவர்கள் பார்வையில் எயிட்ஸ் மீதான கண்ணோட்டத்தை வலியுறுத்தி, 1988ல் ACETஐ துவக்கினார். தற்போது இவர், 20க்கும் மேலான நாடுகளில், 50 இலட்சத்திற்கும் மேலான மக்களை சந்தித்திருக்கும் எயிட்ஸ் திட்டங்களைக் கொண்டத் தொகுப்பு அமைப்பான ACETஇன் அனைத்துலக முனையத்தின் தலைவராக உள்ளார். மேலும் இவர், Global Change நிறுவனத்தின் தலைவராகவும், Signs of Revival, Futurewise உட்பட 14 புத்தகங்களின் ஆசிரியராகவும் உள்ளார்.

'எயிட்ஸும் நீங்களும்' என்ற பெயரில் வெளிவந்த இதே புத்தகத்தின் 3,30,000 பிரதிகள், உலகின் ஏழைநாடுகளின் (22 மொழிகளில்) அடிமட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன. ACET ஆனது, Operation Mobilisation உடனும், இன்னும் பல சமூகமேம்பாட்டு அமைப்புகளுடனும் இணைந்து வருமான நோக்கின்றி இதைச் செய்தது.

எயிட்ஸ் ஆக்ஷன்,
இந்த 10 ஐ செய்திட உதவிடும்:

- குறைந்த செலவில் எண்ணற்ற உயிர்களை துரிதமாகக் காப்பாற்ற
- கைமீறிப்போகும் முன்னே நோய் முற்றிய நிலையிலுள்ளோரை சென்றடைய
- பயம், அறியாமை, மனக்கசப்பு, புறக்கணிப்பை எதிர்த்துப்போரிட
- தப்பெண்ணங்களை எதிர்கொள்ளவும், இரக்கத்தை அதிகரிக்கவும்
- எச்ஐவி நோயுற்றோருக்கு போதக வழிநடத்துதலை அளித்து, துணைநிற்க
- எச்ஐவி பரவல் வேகத்தைத் தணித்து, வாழ்வின் காலத்தை நீட்டிக்க முயற்சிக்க
- மேலும் சபைகளையும், விசுவாசத்தின் வழியிலான அமைப்புகளை ஏற்படுத்த
- கிராமங்களையும், ஊர்களையும், நகரங்களையும், தேசங்களையும் மாற்ற
- பெரும் பலனளிக்கும் எயிட்ஸ் திட்டங்களை துவக்கி, வளர்த்து, நிர்வகிக்க
- திறன்மிக்கத் திட்டங்களில் வழங்குதல் மற்றும் பங்கேற்றல் மூலமாக முதலீடு செய்ய

Authentic SPM ACET
ISBN:978-93-82603-08-5
9 789382 603085
Aids Action (Tamil)